www.padippakam.com

# நிறப்பிரிகை

பின் நவீனத்துவம் — தர்க்கத்தின் வன்முறையிலிருந்தும்
பகுத்தறிவின் பயங்கரவாதத்திலிருந்தும் தப்பித்தல் — அ. மார்க்ஸ்
''வெள்ளைத்தனத்துக்கு துரோகம் மனித குலத்துக்கு
விசுவாசம்'' நோயல் இக்னேஷியேவுடன் ஒரு நேர்காணல்
ஆசியாவில் மனித உரிமைகள் நிலை — செங்கல்பட்டு அரி
தாராளமயமாக்கல் ஏழைகளுக்கு உதவாது — நோம் சோம்ஸ்கி
தேசியம் ஒரு கற்பிதம் — சில விமர்சனக் குறிப்புரைகள்
— கோ கேசவன்
மந்திர மார்க்சியக் குகைகள் —வர்க்கவான் —பட்டாக்கத்தி பைரவன் —
கோ. கேசவனின் ''சமூக விடுதலையும் தாழ்த்தப்பட்டோரும்''
— வளர்மதி
கோமகனும் குடிமகனும் : சிவில் உரிமை இயக்கத்தின் கடமைகள்
— எஸ். வி. ராஜதுரை
தமிழ் சொல்லாடலும் மானிடவியல் விவாதங்களும்
— ச. பிலவேந்திரன்
''நான் அலறுகிறேன் அதனால் நான் இருக்கிறேன்''
— கண்ணன் எம்.
மாற்றுக் கலாச்சாரம் கூட்டுக் கட்டுரை — 7
சாதி ஒரு கருத்தாக — ரொனால்ட் இன்டென்
கம்யூன்கள் — ரெய்முட் ரெய்ஹ்
உலக முதலாளிய அமைப்பும் இந்தியப் பொருளாதாரச்
சீர்திருத்தங்களும் — அ. மார்க்ஸ்
வளர்ச்சியும் மானிட உரிமைகளும் —பிதலை ஒரு
அடித்தட்டு நோக்கு — அ. மார்க்ஸ்
இழப்புகள் — அ. மார்க்ஸ்
பதிவுகள் — அ. மார்க்ஸ்
செய்திகள் — சிந்தனைகள் — சிதறல்கள் — பொ. வேல்சாமி

நிறப்பிரிகை 8 மே 1996

படிப்பகம்

www.padippakam.com

செயல் அதுவே சிறந்த சொல்

நிறப்பிரிகை 8 மே 1996

ஒன்றரை ஆண்டுகளுக்குப் பின்பு மீண்டும் சந்திக்கிறோம். இடையில் பல சிக்கல்கள். மீண்டும் தொடர்ச்சியாக இதழ்களைக் கொண்டு வரும் முனைப்புடன் இதோ நிறப்பிரிகை எட்டு. ஜூனில் இலக்கிய இணைப்பு மூன்று.

ரசிய, சீன, கிழக்கு அய்ரோப்பிய நாடுகளில் உண்டான நிகழ்வுகள் தமிழகத்து இடதுசாரிகள் குறிப்பாக மா.லெ. தோழர்கள் மத்தியில் பல கேள்விகளை எழுப்பியிருந்த சூழல். தேசிய இன இயக்கங்கள் இடதுசாரிப் பார்வையை அனுசரணையாகப் பார்த்து தோழமை பாராட்டிய காலம். பெண்ணியம், அமைப்பியல், பின்நவீனத்துவம் போன்ற சிந்தனைகளுக்கு கல்வித்துறை உள்ளிட்ட சகல மட்டங்களிலும் முற்றிலும் அங்கீகாரமற்ற தன்மை... கடந்த அய்ந்தாண்டுகளுக்கு முன்பாக நிறப்பிரிகை தோன்றிய காலப் பின்னணியின் முக்கிய கூறுகள் இவை. இந்த அடிப்படையில் பல வகைப்பட்ட பார்வையுடையவர்களுடனும் இணைந்து நிறப்பிரிகை தனது சுவடுகளைப் பதிக்கத் தொடங்கியது சுமார் நான்காண்டுகளுக்கு முன்பு திருச்சியில் நடைபெற்ற நி-பி. விமர்சனக் கூட்டமொன்றில் ''பல கருத்துக்கள் மோதுகிற ஒரு அகன்ற மேடையாக நிறப்பிரிகை உருவாகியுள்ளது'' என ஒரு நண்பர் தனது மகிழ்ச்சியையும் நம்பிக்கையையும் வெளிப்படுத்தியது நினைவுக்கு வருகிறது இன்றும் நிறப்பிரிகையில் எழுதிக் கொண்டிருப்பவர்கள் தவிர **நாகார்ஜுனன், ராஜன்குறை. சாருநிவேதிதா, பிரேம், கிராமியன், சுந்தர், அருண்சிவா, செந்தில்நாதன், கோச்சடை** உஞ்சை ராசன் எனப் பல பார்வையுடையவர்களும் இணைந்து எழுதியநாட்கள் அவை எழுத்து ரீதியாகப் பங்களிப்பு செய்த இதர நண்பர்களின் பட்டியல் இது. இதிலும் கூட சில பெயர்கள் விடு பட்டிருக்கலாம் எழுத்துக்கு அப்பால் நிறப்பிரிகை உருவாக்கத்திலும் வினியோகத்திலும் பங்களித்தவர்களின் பட்டியல் இன்னும் பெரிது. இன்று இந்த இணைப்பு சில அம்சங்களில் தகர்ந்திருக்கிறது. வருத்தமளிக்கும் இந்த எதார்த்தத்தைப் பற்றி விரிவாக ஆராய இது தருணமன்று. சற்று முன் குறிப்பிட்ட பின்னணியில் இன்று ஏற்பட்டுள்ள மாற்றங்கள தவிர கீழ்க்கண்ட மூன்று காரணங்களும் இத்துடன் இணைத்து யோசித்துப் பார்க்கத் தக்கவையாக உள்ளன.

1) நிறப்பிரிகை ஆசிரியர் குழுவினர் தலித் அரசியல்/இலக்கிய களத்தில தீவிரமாகச் செயற்படத் தொடங்கியது. மாறி வந்த சூழலின் அத்தியாவசியப் பணியாக இதனை நாங்கள் இன்றும் கருதுகின்றோம்.

2) தமிழ் அறிவுச்சூழலில் கொடி கட்டிப் பறக்கும் 'நான்' என்னும் அகம்பாவம் யாரெல்லாம் நானைக் களையவேண்டும் என்கிறார்களோ அவர்களிடமே இந்த அகம்பாவம் கூடுதலாய்த் தெறிப்பதைக் கண்டறிய பெரிய கட்டவிழ்ப்பெல்லாம் தேவையில்லை.

3) எல்லா நிறுவனங்களையும் போலவே நிறப்பிரிகையும் அறிந்தும் அறியாமலும் கட்டமைத்துக் கொண்ட அதிகாரம்.

இந்தப் பிரச்சினைகள் குறித்து நாங்கள் மனம் திறந்து சிந்திப்பதைப் போலவே மற்றவர்களும் சிந்திக்க வேண்டும் என அன்புடன் அழைக்கின்றோம். நமக்குள் பல நுண்மையான வேறுபாடுகள் இருந்த போதிலும் பழைய சட்டகங்கள் (Premises)கேள்விக்குள்ளாக்கப்பட வேண்டும் என்பதில் நாம் உடன்படுகின்றோம் இந்தக் கேள்விகளை எழுப்பியதாலேயே நாம் தமிழ்ச் சூழலில் கடுமையாகத் தாக்கப்படுகிறோம். சனாதனிகள் ஒரு பக்கமாக Polarise ஆகக் கூடிய நிலை ஏற்பட்டுள்ளது. 'காலச்சுவடு' போன்ற இதழ்கள் அதற்குக் களம் அமைத்துக் கொடுக்கின்றன. பழைய சட்டகங்களை நாம் கேள்விக்குள்ளாக்குவதால்

படிப்பகம்

www.padippakam.com

# பின் நவீனத்துவம் - தர்க்கத்தின் வன்முறையிலிருந்தும் பகுத்தறிவின் பயங்கரவாதத்திலிருந்தும் தப்பித்தல்

—அ. மார்க்ஸ்

''தீ சுடும்'' என்றால் அது உரைநடை. ''தீ இனிது'' என்றால் கவிதை என்றார் ந. பிச்சமூர்த்தி முன்னது தர்க்க வகைப் பட்ட ஒரு 'உண்மை'. பின்னது தர்க்கத் திற்கு கட்டுப்படாத ஒரு 'பொய்' கூற்று. ஆனால் இது கவிதை. கவிதையாயிருப்பத னாலேயே இந்த அதர்க்கம் அனுமதிக்கப்படு கிறது. காத்திரமான விசயங்களைப் பேசுகிற பகுத்தறிவு சார்ந்த எழுத்துமுறைக்கு இந்த அதர்க்கம் ஒவ்வாது புற உலகை அறியும் நடைமுறை இத்தகைய அதர்க்க வகைப்பட்டதாக இருக்க முடியாது எனக் காலங்காலமாக அறிதல் பற்றிச் சொல்லி வந்த கருத்துகளைப் பின் நவீனத்துவம் மறுக்கிறது. கவிதை மட்டுமல்ல நமது அறிதல் முறையே அழகியல் வகைப்பட்ட தாக, அதர்க்க அடிப்படையானதாக இருக்க வேண்டும் என்கிற ஒரு அதிரடிக் கருத்தை அது முன் மொழிகிறது இதென்ன நியாயம்? இதெப்படிச் சாத்தியம் என்ற கேள்விகள் எழுகின்றன. இதற்குப் பின் நவீனத்துவம் சொல்கிற பதிலை அறியுமுன் ஒன்றை நினை வில் பதித்துக் கொள்வது அவசியம்.

யானையைப் பார்த்தகுருடர்கள் மாதிரி இன்று பின் நவீனத்துவத்தைக் கேலி செய் யும் தமிழ்நாட்டுச் சனாதனிகள் நினைத்துக் கொண்டிருப்பது போல அது ஒரு வெறும் கதை சொல்லும் உத்தியல்ல. அதையும் தாண்டி அறிவொளிக் காலம் முதல் (Enligh-tenment) மேலைச் சிந்தனை மரபில் கோலோச்சியிருந்த அறிதல் முறையைக் கேள்விக்குள்ளாக்கிய ஒரு அறிவுத்துறைச் செயற்பாடு. மேலைத் தத்துவ வரலாற்றைக் கீழ்க்கண்டவாறு காலப் பாகுபாடு செய் வார்கள்.

(அ) புராதன கிரேக்க-ரோம தத்துவம்

(ஆ) மத்திய காலத் தத்துவம்

(இ) நவீனத் தத்துவம்.

நவீனத் தத்துவத்தை (அ) மறுமலர்ச்சித் தத்துவம் (ஆ) அறிவொளிக் காலம் (இ) பத்தொன்பதாம் நூற்றாண்டு (ஈ) இருப தாம் நூற்றாண்டு எனப் பிரிப்பது வழக்கம். இந்த வரிசையில் எல்லாவற்றிற்கும் இறுதி யாக வந்து நிற்பது பின் நவீனத்துவம். நவீனத்துவம் முன் வைத்த கார்ட்டீசிய அறிதல் முறை எனப்படுவது இம்மானுவல் கான்ட் (1724—1804) தொடங்கி ஹுசரல், ஹெய்டெகர், நீட்ஷே, விட்கென்ஸ்டெய்ன் எனப் பலராலும் விமர்சனத்திற்குள்ளாக்கப் பட்டு வந்தது. அதன் உச்ச கட்டமாக இன்று உருப்பெற்றிருப்பது பின் நவீனத்துவம்.

மேலைத் தத்துவ மரபில் கலந்து போயுள்ள இயங்காவியற் கூறுகளைச் (Metaphysical Components) சுட்டிக்காட்டிய தெரிதா, அறிவொளிக்கால அறிதல் முறை யைக் கேள்விக்குள்ளாக்கிய கான்ட், ஃபூக்கோ ஆகியோரின் சிந்தனைகளை உள்வாங்கிக் கொண்டு அவற்றின் நீட்சியாய் வந்துள்ள பின் நவீனத்துவத்தின் தத்துவார்த்தப் பின் புலத்தைப் புரிந்து கொள்ள நவீனத் தத்து வத்தில் கார்ட்டீசிய அறிதல் முறையின் பங்கையும் அதன் மீதான விமர்சனங்களை யும் மிகமிகச் சுருக்கமாகவேனும் காண்பது அவசியம்.

* * *

மனிதன் தோன்றிய காலத்திலிருந்தே பிரபஞ்சத்தை முழுமையாகத் தெரிந்து கொள்ளும் முயற்சியும் தொடங்குகிறது. மனித இருப்பு, இயற்கை, சமூகம் ஆகிய வற்றுக்கிடையே பொது விதிகளை கண்டு பிடிக்கும் முயற்சியாகவும், மனிதனின் அற வியற் பொறுப்புகளையும் சமூகக் கடமை களையும் வரையறுக்கும் முயற்சியாகவும், மனிதப் பிரக்ஞைக்கும் இருப்பிற்கும், புற உலகிற்கும் சிந்தனைக்கும் இடையே உள்ள உறவைக் கண்டறியும் பணியாகவும்,



படிப்பகம்

www.padippakam.com

உண்மை, அழகு. நன்மை ஆகியவற்றைப் பரிசீலிக்கும் பணியாகவும், அறிவுத் தோற்றம் பற்றிய ஆய்வாகவும் தத்துவச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. அரசியல் வரலாறு போலவே தத்துவ வரலாறும் பல்வேறு போக்குகளுக்கிடையேயான முரண்களாகவும் போராட்டங்களாகவுமே இருந்து வந்துள்ளன. கருத்து முதலியருக்கும் பொருள முதலியருக்குமிடையேயான போராட்டங்களும், அறிவுவாதிகளுக்கும் அனுபவ வாதிகளுக்குமிடையேயான முரண்களும், பயனீட்டாளர்களுக்கும் (Utili tarians) அறக்கோட்பாட்டாளர்களுக்கிடையேயான வேறுபாடுகளும் பலராலும் குறிப்பிட ப்பட்டுள்ளவை:

அறிவியல் கண்டுபிடிப்புகள் புதிது புதிதாக முன் வைக்கப்படும்போது பழைய பிரபஞ்சக் கண்ணோட்ட ங்கள் ஆட்டம் காண்கின்றன புதிய கண்டுபிடிப்புகளையும் தொகுத்துக் கொண்டு மீண்டும் மொத்த உலகு பற்றிய கண்ணோட்டங்கள் உருவாக்கப்பட வேண்டியுள்ளன. இந்த வகையில் தத்துவம் என்பது ஒரு வகை தொகுப்புப் பணியாக (Speculative) அமைகிறது. தத்துவப் போக்குகளிலும் பிரச்சினைக் குவியங்களிலும் மாற்றங்களும் உருவாகின்றன.

கி மு 7ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 6ஆம் நூற்றாணடுவரை கிரேக்க,ரோமானிய அடிமைச் சமூகங்களில் உருவான தத்துவச் செயற்பாடுகளைத் **தொன்மைத் தத்துவம்** என்பர். பிரபஞ்ச இயக்கம் குறிதத மத ரீதியான அம்சங்கள், வாய்ப்புகள் தொன்ம அடிப்படையிலான விளக்கங்கள் முதலியன கிரேக்க நகர வாழ்வு மறறும் **தேல்ஸ், பித்தகோரஸ்** போன்றோரின் கணிதக் கணடுபிடிப்புகள் ஆகியவற்றை ஒட்டி கொஞ்சம் கொஞ்சமாக முக்கியத்துவத்தை இழக்கத் தொடங்கின. இந்த இடத்தில் சமூக ஆருப்பு பற்றிய கேள்விகள் இடம் பிடித்துக் கொண்டன. சட்டம், மரபு, குடிமை மதிப்புகள் ஆகியவை பிரச்சினைக் குவியங்கள் ஆயின. பிரபஞ்ச உருவாக்கக் கோட்பாடுகளுக்குப் பதிலாக அறவியல் மற்றும் அரசியல் கோட்பாடுகள் முக்கியத்துவம் பெறலாயின. **தேல்ஸ், அனாக்சிமாந்தர், அனாக்சிமீன்ஸ், ஹெராக்லிடஸ், எபிகூரஸ், டெமாக்ரிடஸ்** ஆகியோரின் பொருள் முதன்மைச் சிந்தனைகளுக்கும் **சாக்ரட்ஸ், பிளேட்டோ** முதலியோரின் கருத்து முதன்மைக் கூறுகளுடன் கூடிய கருத்துகள் பற்றிய கோட்பாடும் (Theory of Ideas) குறிப்பிடத்தக்கவை.

கிறிஸ்தவத்தின் எழுச்சி தத்துவத்தை முற்றிலும் மதவியலோடு இணைத்து **மத்திய காலத் தத்துவத்திற்கு** வித்திட்டது. ரோமப் பேரரசின் வீழ்ச்சியை ஒட்டி (கி.பி. 5ஆம் நூற்றாண்டுத்) தோற்றம் பெற்று முதலாளியச்சமூக அமைப்பின் தோற்றம் வரை (கி.பி 14 15 ஆம் நூ.) இந்தக் காலகட்டத்தை வரையறை செய்யலாம். **புனித அகஸ்டின், ஒரிகன், நெமசியஸ், கிரிகோரி** போன்ற கிறிஸ்தவப் பாதிரிமார்கள் இத்தகைய தத்துவ உருவாக்கத்தில் முதன்மைப் பங்காற்றினர் படைப்பு, விசுவாசம், உண்மை ஆகிய கரிசனங்களை முதன்மையாகக் கொண்ட மத்திய காலத் தத்துவம் மதவியலிலிருந்து பிரிக்க இயலாததாக அமைந்தது. தொன்மைத் தத்துவத்தின் கருத்து முதன்மை கூறுகள் உள்வாங்கப்பட்டு பொருள் முதன்மைக் கூறுகள் பின்னுக்குத் தள்ளப்பட்டன. **தாமஸ் அக்கினோஸின்** தத்துவத்தைக் தனது அதிகாரப்பூர்வமான தத்துவப் பார்வையாக கிறிஸ்தவம் அறிவித்தது. கருத்து முதன்மைக் கூறுகளுக்கும் பொருள் முதன்மைக் கூறுகளுக்கும் இடைப்பட்ட நிலை எடுத்த தொன்மைத் தத்துவவியலாளர்களில் ஒருவரான **அரிஸ்டாட்டிலின்** கருத்துகள் திருத்தப்பட்டன. ''**மதவியலின் வேலைக்காரி**''யாக மத்திய காலத் தத்துவம் செயல்பட்டது என வரலாற்றாசிரியர் அனைவரும் குறிப்பிடுவது கவனிக்கத்தக்கது. உண்மை மற்றும் வாழ்வியல் மர்மங்கள் விசுவாசத்தின் (Faith) வெளிச்சத்தில் விளக்கப்பட்டன. பகுத்தறிவு (Reason) விசுவாசத்திற்குக் கீழ் கொணடு வரப்பட்டது.

பதினைந்தாம் நூற்றாண்டுக்குப் பிந்திய காலகட்டத் தத்துவத்தை நவீனத்துவம் (Modern philosophy) என்பர். பிரபுத்துவத்தின வீழ்ச்சி முதலாளியத்தின் தோறறம் ஆகியவற்றோடு நவீன காலம் தொடங்குகிறது. ரோமன் கத்தோலிக்க கிறிஸ்தவத்தின் எதேச்சதிகாரம் புராட்டஸ்டன்ட் மதத்தால் கேள்விக்குள்ளாக்கப்பட்ட சூழலில் பிரபஞ்ச முழுமைக்கான சிந்தனைகள் என்பதற்குப் பதில் தேசிய அளவில் சிந்தனைகள் முன் வைக்கப்பட்டிருந்த பின்னணியில் மதவியலிலிருந்து மேலைத் தத்துவம் தன்னை விடுவித்துக் கொண்டது விசுவாசத்தின் பிடியிலிருந்து தன்னை விலக்கிக் கொண்டு பகுத்தறிவு கோலோச்சிய காலகட்டமாகவும் இதனைச்சொல்லலாம்.இயற்பியல், கணிதம், வானவியல், உடற்கூற்றியல் முதலிய துறைகளில் மிக முக்கியமான அறிவியற் கண்டுபிடிப்புகள் 16, 17ஆம் நூற்றாண்டுகளில்





படிப்பகம்

www.padippakam.com

தோன்றியதை நாம் அறிவோம். நியூட்டன், தெகார்தே, கெப்ளர், வெசாலியஸ் போன்றோர் இந்தத் துறைகளில் குறிப்பிடத்தக்க கருத்துருவாக்கங்களுக்கு காரணமாயிருந்தனர். துப்பாக்கி மருந்து, அச்சுத் தொழில் நுட்பம், திசைகாட்டி ஆகிய கருவிகளின் தோற்றத்தோடு நவீன தத்துவத்தை இணைத்துரைப்பது மேலைத் தத்துவ வரலாற்றை எழுதுபவர்களின் வழக்கம். பிரபுத்துவக் கோட்டைகளின் தகர்விற்கும், கருத்து பரவல் விகசிப்பிற்கும் அதிகாரச் செயற்பாடுகளுக்குப் புதிய புவியியற் புலங்களைக் காணும் பராக்கிரமச் செயல்பாடுகளுக்கும் இவை வழிவகுத்தன. அறிவு, இயந்திரங்கள் ஆகியவற்றின் துணைகொண்டு இயற்கையை, புற உலகை அறிந்து, வென்று அதிகாரத்திற்கு ஆட்படுத்த முடியும் என்கிற இறுமாப்பை மேலை மனிதனுக்கு இவை ஈட்டித் தந்தன.

மறுமலர்ச்சித் தத்துவ (Renaissance Philosophy) அரசியல் தத்துவ வாதிகளாகிய மாக்கியவெல்லி, தாமஸ் ஹோப்ஸ், ழீன் போடின் ஆகியோரால் உருவாக்கப்பட்ட அரசியல் கோட்பாடுகள் எதேச்சதிகார அரசுகளின் அதிகாரத்துவத்திற்கு நியாயம் வழங்கின அரசுக்கான தர்க்கங்களை அறிவியலுக்கும் மேலாக வைத்தன. அரசியல் அவசியங்களுக்கும் அறவியல் கட்டுப்பாடுகளுக்கு மிடையேயான உறவை இவை அலசின மறுமலர்ச்சிக்கால மனிதாயம் (Humanism), பிரபஞ்சத்தின் மையமாக மனிதனைக் கண்டது எல்லாவற்றைக் காட்டிலும் மனிதனின் முக்கியத்துவம் பிரதானமாக்கப்பட்டது மனித கண்ணியம் போற்றப்பட்டது இயற்கை மீதான மனிதச் செயற்பாடுகள் விதந்தோதப்பட்டன. சோதனைகள் மூலம் அனுபவபூர்வமாக உண்மைகளைக் கண்டறிதல் கருவிகள் மற்றும் எந்திரங்களைப் பயன்படுத்துதல், கணித அடிப்படையில் விளக்கங்களை முன் வைத்தல் ஆகியவை பிரதான அறிவியற் செயற்பாடுகளாகப் போற்றப்பட்டன. இவை அனுபவவாதம் (Empiricism), அறிவுவாதம் (Rationalism) ஆகிய இரு போக்குகளுக்குக் காரணமாயின. அறிவின் ஒரே ஆதாரமாகப் புலன் அனுபவம் மட்டுமே இருக்க முடியும். புற உலகே புலன்களின் மீதான தாக்கத்திற்குக் காரணமாகின்றன. புற உலகின் மீதான அறிவியற் சோதனைகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் பொதுமைப் படுத்தல்களின் மூலம் அறிவுருக்கம் ஏற்படுகிறது. கற்றலின் நோக்கம் இயற்கை மீதான மனிதனின் அதிகாரத்தை அதிகரிப்பதுதான் என்றார் பிரான்சிஸ் பேகன்.

தெகார்தே யால் உருவாக்கப்பட்ட அறிவுவாதம் பற்றிக்கொஞ்சம் விளக்கமாகப் பார்க்க வேண்டும். கடந்த இரண்டு நூற்றாண்டுகளுக்கும் மேலாக அவர் உருவாக்கிய கார்ட்டீசிய அறிதல் முறையே அனைத்து விதமான அறிவியல், அரசியல், அறவியல் செயற்பாடுகளுக்கு அடிப்படையாக விளங்கியுள்ளது — காரண காரிய விதிகளையும், பொதுமைப்படுத்தல்களையும் மேற்கொள்வதற்கு அனுபவங்கள் அடித்தளமாக இருக்க முடியாது என்கிறது அறிவுவாதம். தர்க்க பூர்வமான அறிவின் அடிப்படையிலேயே இவற்றை உருவாக்க முடியும். மனிதச் சிந்தனையே இதனைச் சாத்தியப்படுத்த வல்லது. உலகு இயக்கம் ஆகியவை குறித்த எந்திரவயப்பட்ட விளக்கத்தை அளித்த தெகார்தே இந்த இயக்கத்திற்கெல்லாம் ஆதார அடித்தளமாக இருப்பது கடவுள் என்றார் பேகனைப் போலவே இவரும் அறிதலின் இறுதிக் குறிக்கோள் இயற்கையின் மீதான அதிகாரமே என்றார். பல்வேறு விதமான அய்யங்களை உருவாக்கி எல்லாவற்றையும் பகுத்தறிவின் தர்க்கத்திற்கு ஆட்படுத்திச் சோதித்து வெற்றி பெறக் கூடியவற்றை மட்டுமே தேர்வு செய்தல், எந்தவிதமான முரண்களும் அற்ற, முற்றிலும் தூய்மையான, தெளிவான கருத்துகளை மட்டுமே ஏற்றுக்கொள்ளல், எல்லா அறிவையும் மனிதனின் சுயப் பிரக்ஞையில் உரைத்துத் தேர்வு செய்தல் ஆகியவற்றை அறிதலின் அடிப்படையாக தெகார்தே முன் வைத்தார். தெளிவு, முரணின்மை, தூய்மை என்பவற்றை அளவுகோலாக வைத்தல் என்பது அனுபவவாத நடைமுறைக்கு ஒவ்வக் கூடியது அல்ல என்பதை நாம் விளங்கிக் கொள்வது கடினமல்ல அய்யங்களுக்கு அப்பாற்பட்ட மனிதச் சுயத்தை (Human self) முதன்மைப் படுத்தியது கார்ட்டீசிய அறிதல் முறை (''நான் சிந்திக்கிறேன். எனவே நான் இருக்கிறேன்'').

நவீனத்துவ அறிதல் முறையின் அடித்தளமாக விளங்கியதும், மேலை மரபின் வன்முறைகளுக்கெல்லாம் காரணமானது எனவும் பின் நவீனத்துவவாதிகளால் கடும் கண்டனத்திற்குள்ளாக்கப்படும் கார்ட்டீசிய அறிதல் முறை ஆய்வு செய்கிற செயலூக்கமுள்ள தன்னிலை (Subject) எனவும் ஆய்வுக்குள்ளாக்கப்படும் செயலூக்கமற்ற புறப்பொருள் (Object) எனவும் பிரபஞ்சத்தை



படிப்பகம்

www.padippakam.com

இரண்டாகப் பிரித்தது. இதனை ஒட்டி மனம்/உடல்; ஆன்மா/பொருள்; அறிவு/உணர்வு; ஆண்மை/பெண்மை என ஏராளமான இருமைகளை உருவாக்கியது. புற உலகிலிருந்து தன்னை முற்றிலும் துண்டித்துக்கொண்ட தன்னிலை, செயலற்ற இயற்கை மீது நின்றுகொண்டு அதனைக் (கருவிகொண்டு) கண்காணித்து, மதிப்பிட்டு, தகவமைத்து தனது நலன் நோக்கில் தொகுத்துக் கொள்கிறது. இவ்வாறு எல்லா உறவுகளும் கருவி சார்ந்த உறவுகளாக (Imstrumental Relations), அறிகிற—அறியப்படுகிற உறவுகளாக மாறுகின்றன.

மறுமலர்ச்சிச் சிந்தனைப் போக்குகளின் வளர்ச்சியின் உச்சமாய் விளங்குவது அறிவொளிக் காலம் (En'ightenment). நியூட்டனையும் ஜான்லாக் கையும் அறிவொளியின் தந்தை என்பார்கள். வால்டேர், ரூசோ, மோன்டேஸ்க் எர்டர், லெஸ்ஸிங், ஷில்லர், கதே போன்றோர் அறிவொளிச் சிந்தனையாளர்களாகக் கருதப்படுவர் பிரபுத்துவ மற்றும் மதவியல் கருத்தியல்களிலிருந்து மேலைத் தத்துவம் தன்னை விடுவித்துக் கொண்டு மதம் சாராத் (Secular Phi osophy) தன்மையுடன் மேற்செல்ல இவர்களது தத்துவார்த்தச் செயற்பாடுகள் துணை புரிந்தன. பிரெஞ்சுப் புரட்சிக்கும் ருசிய நரோத்னிக்குகளுக்கும் அறிவொளிச் சிந்தனைகள் உந்து சக்தியாக விளங்கின என்பர். இயற்கை உலகை அறிவு ரீதியாக வெற்றி கொள்வதில் பகுத்தறிவு இறுதியில் வெற்றி பெற்றுவிட்டது என அறிவொளிக்காரர்கள் நம்பினர்.

கார்ல் மார்க்ஸ் பிறப்பதற்குப் பதினாறு ஆண்டுகளுக்கு முன் செத்துப்போன இம்மானுவல் காண்ட் (1724—1804) அறிவொளிக் காலத்தின் இறுதி உச்சத்தில் தோன்றியவர். அதி தீவிர அறிவு வாதத்திற்கும் (லீப்னிஸ்) அதி தீவிர அனுபவ வாதத்திற்கும் (ஹ்யூம்) இடைப்பட்ட ஒரு நிலையை எடுத்த காண்ட், தத்துவார்த்தச் செயற்பாடுகளின் அடிநாதமாக விளங்குவது பகுத்தறிவுதான் என நம்பியவர். எனினும் பகுத்தறிவை அவர் விமர்சனக் கண்ணோட்டத்துடன் அணுகினார். தத்துவத்தின் ஒரே பணி பகுத்தறிவின் சாத்தியத்தையும் சாத்தியமின்மையையும் கண்டறிவதே என்றார். தனது எல்லைகளை மறந்துவிடும் பகுத்தறிவின் பிரம்மைகளைத் தோலுரிப்பதே தத்துவ விமர்சனத்தின் பணி என்றார் எனினும் பகுத்தறிவை அவர் முற்றாக மறுக்கவிலலை. தத்துவம் என்பதைப் பகுத்தறிவின் உயர் விதிகளைக் கண்டறியும் அறிவியல் எனவே அவர் வரையறுத்தார்.

தனது நூல்களை விமர்சன நூல்கள் (எ.டு: (Critique of Practical Reason—Kant; Critique of Political-Economy - Marx) என அழைத்துக் கொள்வதில் மார்க்சுக்கு முன் மாதிரியாக இருந்த காண்ட் மனிதனின் அறியும் திறனின் எல்லைகளை விரிவாக ஆய்வுக்குட்படுத்தினார். புற உலக உண்மைகளை முற்றிலுமாக அறிவது சாத்தியமில்லை என்கிற அய்யவாதத்திற்குக் (Agnosticism) காரணமானார். பொருட்களை ஆய்வுக்கான பொருட்கள் எனவும் ''தன்னளவில் பொருட்களாக இருப்பவை'' (Things-In-Themselves) எனவும் பிரித்த காண்ட், தன்னளவுப் பொருட்கள் என்பன மனித அறிவின் பிடிக்கு வசப்படாதவை என்றார். நமது ஆய்வுக்கு வசப்படுபவை வெறும் ''நிகழ்வுகள்'' (Phenomena) தான் நமது அனுபவத்தில் பொருள்கள் தம்மை வெளிப்படுத்திக் கொள்வதையே 'நிகழ்வு'' என்றார் அவர். எனவே பொருளை இடைஊடகங்களின் துணையின்றி நேரடியாகப் பற்றிவிட முடியாது. எனவே கணிதம் தவிர மற்ற துறைகளில் கோட்பாட்டு ரீதியான உண்மை அறிவு சாத்தியமில்லை எனினும் உண்மை அறிவை நோக்கிய தணிக்கமுடியாத வேட்கை பகுத்தறிவிற்கு உண்டு இந்தத் தணியாத வேட்கையின் விளைவாகப் பகுத்தறிவு, தத்துவம் முன் வைக்கும் பல்வேறு விதமான பிரச்சினைப் பாடுகளுக்கும் உரிய விடைகளைச் சொல்லிவிட முயல்கிறது. ஆனால் பகுத்தறிவின் மூலம் ஒரே பிரச்சினைக்கு நேரெதிரெதிரான தீர்வுகளையும் நியாயப்படுத்திவிடமுடியும். உலகம் என்பது அறுதிக்குட்பட்டது (Finite)/ அறுதியற்றது (infinite); உலகு என்பது உடைக்க இயலாத அணுக்களால் ஆனது / அணுக்கள் இல்லை; எல்லா நிகழ்வுகளும் காரண—காரிய அடிப்படையிலேயே ஏற்படுகின்றன/ சுதந்திரமான நிகழ்வுகளும் உண்டு; முழுமுண்மையான சாராம்ச இருப்பு (Absolute Essential Being) அதாவது கடவுள் உண்டு/ இல்லை என எதிரெதிரான முடிவுகளை பகுத்தறிவின் தர்க்கம் கொண்டு நிறுவ முடியும் எனவே பகுத்தறிவு என்பது உண்மையில் முரண்களின் முடிச்சே. பொருட்களை நிகழ்வுகள் × தன்னளவுப் பொருட்கள் எனப் பிரித்து அணுகுவதன் மூலமே இந்த முரண்களிலிருந்து நாம் தப்பிக்க முடியும் நிகழ்வுகளின் ஓரங்கமாகப் பிரிக்க இயலாமல் உள்ள வகையில் சுதந்தரமற்றவனாக இருக்கும் மனிதன் அதே சமயத்



படிப்பகம்

www.padippakam.com

தில் புலனுணர்வை மீறியுள்ள உலகைக் கண்டறியும் தன்னிலை என்கிற வகையில் சுதந்திரமானவனாகவும் இருக்கிறான். கடவுளின் இருப்பை நிறுவி விடமுடியாது. விசுவாசத்தின் மூலமே கடவுளின் இருப்பை ஏற்கவேண்டும் இத்தகைய இருமை மற்றும் அய்யவாத அடிப்படையில் கான்ட்டின் அறிவியல் மற்றும் அழகியல் கருத்துகளும் உருவாயின. ஒரு குறிப்பிட்ட செயலின் அறிவியல் நியாயங்களுக்கு அப்பாற்பட்ட பொதுமையான விதிகளால் மனிதன் வழி நடத்தப்படவேண்டும் என்பது கான்ட்டின் கருத்து. இத்தகைய விதியை அவர் "விருப்புகளுக்கு அப்பாற்பட்ட முற்றுண்மை விதி" (Categorical imperative) என்றார். அழகு என்பதை அவர் அக ஒழுங்கமைவுக்கும் புற ஒழுங்கமைவுக்கும் இடையேயான ஒத்திசைவாகக் கண்டார் அதாவது புற நிகழ்வு ஒன்று நமது புலனுணர்வின் மூலமாகவோ அறிவின் மூலமாகவோ உள்வாங்கப்படும் போது அது நமது உள்ளார்ந்த அகமன ஒழுங்கமைவுடன் ஒத்திசைந்திருந்தால் அதனை நம் மனம் அழகாக ஏற்றுக் கொள்கிறது. அழகு பற்றிய அவரது கோட்பாட்டை Subline எனப்படும் அவரது கருத்தாக்கத்துடன் வேறுபடுத்தி விளக்கினார். எதார்த்தத்தை (Reality) ஒரு தூய கருத்தாக்கிக் கோட்பாடாகத் தொகுத்து மனிதப் புரிதலுக்குப் பயன்படுத்தும் சாத்தியமின்மையை இக் கருத்தாக்கம் விளக்கியது. ஒரே சமயத்தில் சுகத்தையும், வலியையும், இன்பத்தையும் துன்பத்தையும் ஏற்படுத்தும் உணர்வை அவர் SUPLINE என்றார். வேறு வார்த்தைகளில் சொல்வதானால் துன்பத்திலிருந்தே இன்பம் தருவிக்கப்படும் ஒரு நிலையை அது குறிக்கிறது எனலாம். Masochism, Neurosis போன்ற கருத்தாக்கங்களுடன் பொருத்திப் பார்க்கத் தக்கது இது. புற நிகழ்வொன்றை எதிர்கொள்ளும் தன்னிலை ஒன்று அதனைப் புரிந்து உள்வாங்கிக் கொண்ட போதிலும் கற்பனையில் வெளிப்படுத்த இயலாமற் போகும்போது ஏற்படும் உணர்வை Subline என்றும் கருத்தாக்கம் குறிக்கிறதெனலாம்.

பத்தொன்பதாம் நூற்றாண்டு தத்துவவியலாளர்களில் குறிப்பிடத் தக்கவர்கள் **ஹெகலும் மார்க்சும்**. ஹெகலின் இயங்கியலும் மார்க்சின் பொருள் முதன்மைக் கோட்பாடும் இவற்றினடியாக உருவாக்கப்பட்ட தத்துவமாகிய இயங்கியல் பொருள் முதல்வாதமும் இக்கட்டுரையைப் படிக்கிறவர்களுக்கு ஓரளவு பரிச்சயமிருக்கும் என்கிற நம்பிக்கையின் அடிப்படையிலும் இவை குறித்த நூல்கள் தமிழில் எளிதில் கிடைக்கும் என்பதாலும் விரிவஞ்சி இங்கே மார்க்ஸ், ஹெகல் ஆகியோரின் சிந்தனைகள் தவிர்க்கப்படுகின்றன. மார்க்சிய அறிவுத் தோற்றக் கோட்பாடாக இன்று முன் வைக்கப்படுவது எதிரொளிப்புக் கொள்கை (Theorv of Reflection).சூழலே அதாவது மனித இருப்பே பிரக்ஞையை உருவாக்குகிறது என்கிற மார்க்சியச் சிந்தனையின் அடிப்படையில் எதிரொளிப்புக் கொள்கை உருவாக்கப்பட்டுள்ளது புற உலகு மனித மனத்தில் எதிரொளிக்கப்படுகிறது. இந்த எதிரொளிப்பின் அடிப்படையில் புற உலகு பற்றிய அறிவுருவாக்கம் நடைபெறுகிறது. எனினும் வெறுமனே எதிரொளிக்கிற செயலூக்கமற்ற ஒன்றாக தன்னிலையை மார்க்சிய எதிரொளிப்புக் கொள்கை கருதுவதில்லை தன்னிலைக்கும் (Subject) பொருளுக்குமிடையேயான (Object) உறவு புறவயமானது (Objective) மட்டுமல்ல இயங்கியலடிப்படையிலானதுமாகும் அதாவது இரண்டும் ஒன்றை ஒன்று பாதிக்கவல்லது. புறவயத்தன்மைக்கு (Objectivity) முக்கியத்துவம் அளித்தல், அகம்/புறம் என்கிற இருமைகளை ஏற்றுக் கொள்ளுதல் என்கிறவகைகளில் கார்ட்டீசிய சிந்தனை மரபு மார்க்சிய அறிதல் கொள்கையில் ஊடாடுவது கவனிக்கத் தக்கது. ஹெகலிய இயங்கியல், கான்டின் அய்யவாதத்திற்கு எதிராக நின்றது. அய்யவாதம் சாத்தியமாக்கிய பன்மைத்தன்மையை மறுத்து சிந்தனைக்கும் இருப்புக்குமிடையேயான ஒருமைத்தன்மையை, ஒருங்கிணைவை வலியுறுத்தியது எல்லா இயக்கங்களையும் முற்றுண்மை (Absolute Idea)யை நோக்கிய முன்னோக்கிய வளர்ச்சியாகச் சித்தரித்தது. "உலகப் பகுத்தறிவு", "உலக ஆன்மா", "கடவுள்" என்றெல்லாம் இம் முற்றுண்மை விளக்கப்பட்டது இந்த வகையில் ஆய்வுப் பொருளுக்கு அப்பாற்பட்ட ஒரு அடித்தளத்தை (Foundation) அதாவது முற்றுண்மையை அடிப்படையாகக் கொண்டு இந்த அறிதலியல் இயங்கியதால் இதுவும் அடித்தளவாத (Foundationalism)ங்களில் ஒன்றாக அமைந்தது ஹெகலிய இயங்கியலை ஏற்றுக் கொண்ட வகையில் மார்க்சியமும் பாட்டாளி வர்க்கத்தின் தலைமையிலான இறுதி விடுதலையை நோக்கிய படிப்படியான முன்னோக்கிய இயக்கத்தை முன் மொழிந்தது. இந்த நோக்கில் மார்க்சியத்தையும் அடித்தளவாதத்திற்குள் அடக்க இடமுண்டு. பொருள்களுக்கு மாற்றமுடியாத உள்ளார்ந்த சாரம் (Essence) உண்டு என்கிற கருத்தாக்கத்தையும் ஹெகலியம் கொண்டிருந்தது. இந்த அடிப்படையில் மனிதசாரம்



படிப்பகம்

www.padippakam.com

(Human Essence) என்கிற கருத்தாக்கமும் உருவானது சமூக உறவின் மொத்தமே மனித சாரம் என மார்க்சியமும் சாராம்ச வாதத்தை ஏற்றுக் கொண்டது. சாராம்ச வாதம் மொத்தத்துவக் கோட்பாட்டிற்கு இட்டுச் செல்கிறது. அதாவது பகுதிகளின் முழுமையாகப் பொருட்கள் அமைகின்றன. ஒவ்வொரு பகுதியிலும் முழுமையின் சாராம்சம் வெளிப்படும் எடுத்துக்காட்டாக ஜெர்மன் தேசத்தின் சாராம்சம் ஜெர்மானிய சட்டத்தில் வெளிப்படும். மார்க்சியம் ஹெகலிய மொத்தத்துவ/சாராம்சக் கோட்பாட்டை வரித்துக் கொண்டு சாராம்ச முரண்பாடு (Essential Contradiction) என்கிற கருத்தாக்கத்தை உருவாக்கியது. எந்தச் சமூகத்திற்கும் சாராம்சமாக விளங்கும் அடிப்படை முரண்பாடு அச்சமூகத்தின் எல்லாத் துணுக்குகளிலும் வெளிப்படும் இலக்கியமாகட்டும் சட்டமாகட்டும், அறவியலாகட்டும் இவை அனைத்தும் சாராம்ச முரண்பாட்டின் வெளிப்பாடே. முரண்பாடுகளின் பன்மைத் தன்மை பின்னுக்குத் தள்ளப்படுவது இங்கே கவனிக்கத் தக்கது

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் கார்டீசிய அறிதல்முறையை மறுக்கிற அதர்க்கவியற் தத்துவங்கள் (Irrational philosophies) தோன்றத் தொடங்கின. நிகழ்வியல் (Phenomenology) இருத்தலியல் (Existentialism) முதலியன குறிப்பிடத் தக்கவை. இவ்வகையில் ஹூஸ்ஸரல், கீர்கேகாட், ஹெய்டெகர், மார்லோ போன்டி, சார்த்தர் போன்றோரும் வெவ்வேறு வகைகளில் தனித்துவமிக்க சிந்தனையாளர்களாக விளங்கிய விளங்கி வருகிற ஷோபன் ஹேர் நீட்ஷே ஃபூக்கோ தெரிதா விட்கென்ஸ்டெய்ன் போன்றோரும் குறிப்பிடத் தக்கவர்கள்.

தத்துவத்தை இறுக்கமான அறிவியற் துறையாக உருவாக்க முயன்ற எட்மன்ட் ஹூஸ்ஸரல் (1859—1938) உருவாக்கிய நிகழ்வியல் ஆய்வு செய்யும் தன்னிலை (Subject) யையும் ஆய்வு செய்யப்படும் பொருளையும் (Object) தனித்தனியாகப் பிரித்தலை மறுத்தது. "தன்னிலை இல்லாமல் பொருள் இல்லை" என்பது அதன் முழக்கமாக இருந்தது. பொருளை நோக்கிய தன்னிலையின் விருப்பச் செயல்பாடு (Intention) அறிதலைப் பாதிப்பதன் மீது நிகழ்வியல் கவனத்தை ஈர்த்தது. அறிதலுக்கான பொருள் என்பது தன்னிலையின் பிரக்ஞைக்கு அப்பால் இல்லை என்றார் ஹூஸ்ஸரல். நிகழ்வியலின் அடியாகத் தோன்றிய இருப்பியல் மனிதன் உட்பட்ட எல்லா புற உலகப் பொருட்களையும் வெறும் ஆய்வுப் பொருட்களாகவும், தகவமைக்கப்படக் கூடியதாகவும் கருதுகிற அறிவு வாதத்தைக் கண்டித்தது தன்னிலை சாராத (Impersonal) புறவயச் சிந்தனைகள் சாத்தியமில்லை என்றது. பொருட்களுக்கு மாறாத தன்மையுடைய உள்ளார்ந்த சாரம் (Essence) உள்ளது என்பதை மறுத்து புற உலகுடன் பரஸ்பர வினையாக்கத்திலுள்ள அவற்றின் இருப்பிற்கு (Existense) முக்கியத்துவம் அளித்தது இதுவரையிலான தத்துவங்கள் பொருட்களின் சாரத்திற்கும் நிகழ்வுகளின் காரணங்களுக்கும் முக்கியத்துவம் அளித்து, இருப்பையும் நிகழ்வையும் புறக்கணித்து வந்துள்ளன எனக் குற்றம் சாட்டியது மனிதன் தன் அறிவை, திறமையை பொருட்களின் வழியாகப் புறவயப்படுத்தலாம். ஆனால் இருப்பைப் புறவயப்படுத்த முடியாது, அறிதலுக்குட்படுத்த முடியாது. மனிதமனம் அல்லது சமூக உறவுகள் என்கிற அடிப்படைகளில் ஏதோ ஒரு வகையில் மனித சாரத்தை ஏற்றுக்கொண்ட அறிவு வாதம், மார்க்சியம் உள்ளிட்ட சாராம்ச வாதத் தத்துவங்களை இருப்பியல் கேள்விக்குள்ளாக்கியது இருப்பு என்பதை வற்புறுத்தியன் மூலம் அது தன்னிலைக்கும் பொருளுக்குமிடையேயான பிரிக்கமுடியாத ஒருமையை வலியுறுத்தியது. அன்றாட வாழ்க்கையில் மனிதன் தனது இருப்பைப் பற்றிய பிரக்ஞை கொண்டிருப்பதில்லை. புற உலகுடன் பரஸ்பர வினையாக்கத்தில் ஈடுபட்டுள்ள தனது இருப்பை உணரும் போது மனிதன் விடுதலையை அடைகிறான் ஏனெனில் அப்போதுதான் மாற்றவியலாத இயற்கை மற்றும் சமூக விதிகளின் அடிப்படையில் தனது வாழ்க்கை இயங்குகிறது என்கிற கருத்திலிருந்து விடுபட்டு தானே தனது வாழ்க்கையை நிர்ணயிக்கத் தக்கவன் என்கிற நம்பிக்கை அவனுக்கு வருகிறது எனவே சூழலுக்குப்பணிந்து போகிறவனாக இல்லாமல் சூழலை இயக்குபவனாக இருத்தலியல் மனிதனை நிறுத்துகிறது. எனவே வரலாற்றில அமைப்பின் பங்கைக் காட்டிலும் மனிதனின் பங்கை அது முதன்மைப் படுத்திய வகையில் அமைப்பியல் வாதத்திலிருந்து அது வேறுபட்டு நின்றது.

இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கவர்ச்சி மிகுந்த அறிவுப்புலமாகத் தோற்றம் கொண்ட அமைப்பியல் அறிதலில் மொழியின் பங்கின் மீது கவனத்தைக் குவித்தது. மொழி என்ற ஊடகத்தின் மூலமாகவே



படிப்பகம்

www.padippakam.com

மனிதன் பொருட்களைப் பற்றி சிந்திக்கின்றான். இந்த மொழி என்பது ஊடுருவத்தக்க நடுநிலையான ஊடகம் அல்ல. அதாவது இதுகாறும் நாம் நம்பி வந்ததுபோல மொழி சிந்தனையைச் சுமக்கவில்லை. உண்மையில் மொழி நமது சிந்தனையைக் கட்டுப்படுத்தவே செய்கிறது. இதனை விளங்கிக்கொள்ள மொழியின் இடுகுறித்தன்மையை விளங்கிக் கொள்ளவேண்டும். ஒரு கருத்தாக்கத்திற்கும் அதைக் குறிக்கப் பயன்படும் சொல்லுக்கும் இடையே எந்தவிதமான தர்க்கபூர்வமான உறவும் இல்லை. தன்னிச்சையாக ஒரு குழு அந்தச் சொல்லைத் தேர்வு செய்து கொள்கிறது. பிற சொற்களுடன் அச்சொல் கொண்டுள்ள வேறுபாட்டின் அடிப்படையிலேயே அச்சொல்லுக்கு அதன் அர்த்தம் உருவாகிறது எடுத்துக்காட்டாக 'நதி' என்ற சொல்லை எடுத்துக் கொள்வோம். 'நதி'க்குப் பதிலாக வேறு ஏதேனும் சொல்லைத் தேர்வு செய்திருந்தால் அதுவே நதியைக் குறிக்கப் பயன்பட்டு வந்திருக்கலாம். இன்னொரு மொழியில் இது வேறு ஒரு சொல்லாகக் குறிப்பிடப்படலாம் 'நதி' என்கிற சொல் எவ்வாறு பொருளைப் பெறுகிறது? சதி, பதி, கதி, மதி என்ற இதர சொற்களிலிருந்து அது கொண்டுள்ள வேறுபாட்டு உறவின் அடிப்படையிலேயே 'நதி' அதன் பொருளைப் பெறுகிறது. ''நதி'' என்கிற சொல்லைக் **குறிப்பான் (Signifier)** எனவும் அது சுட்டும் கருத்தாக்கத்தை **குறிப்பீடு (Signified),** இரண்டின் இணைவை **குறி (Sign)** எனவும் அமைப்பியல் வரையறுத்தது. இங்கொன்றை கவனிப்பது முக்கியம் ''குறிப்பீடு'' வேறு **பொருள் (Object** அல்லது **referent)** வேறு. குறிப்பீடு என்பது அந்தப் பொருள் பற்றிய கருத்தாக்கம் மட்டுமே. பொருளை அது கையகப்படுத்தி விடுவதில்லை இந்தக் குறிப்பீடு என்கிற கருத்தாக்கம் குழுவுக்கு குழு, பண்பாட்டுக்குப் பண்பாடு வேறுபடலாம். எடுத்துக்காட்டாக 'நதி' என்கிற கருத்தாக்கத்திற்கு ஒரு தமிழன் கொள்ளும் பொருளும் அய்ரோப்பியன் கொள்ளும் பொருளும் வேறு வேறாக இருக்கலாம். நதி என்று சொல்லும்போது ஆண்டு முழுவதும் நீர் ஓடக்கூடிய, ஆழமான, கப்பல்களைச் சுமக்கக் கூடிய நீரோட்டம் என்கிற பொருள் ஒரு அய்ரோப்பியனுக்குத் தோன்றலாம். ஒரு தமிழ்க் கவிதையில் ''காய்ந்த மலங்கள் கருத்துக் கிடக்கும் மணிமுத்தா நதி'' என்கிற வரிகள் மொழி பெயர்ப்பின் மூலமாகக்கூட அவனுக்குப் புரியாமற் போகலாம்.

இவ்வாறு சொல்/ பொருள் என்கிற இருமைக்குப் பதிலாக குறிப்பான் / குறிப்பீடு/ பொருள் என்கிற மும்மையை வைப்பதன் மூலமாகவும் இதன் உள்ளார்ந்து நிற்தும் இடுகுறித் தன்மையைச் சுட்டுவதன் மூலமாகவும் அமைப்பியல் பொருளைப் பற்றிய அறுதியான இறுதி உண்மையை வெளிப்படுத்தும் சாத்தியத்திலுள்ள இடர்ப்பாட்டின் மீது கவனத்தைக் குவித்தது சமகாலத்தில் விளங்கும் சகலவற்றுடனான வேறுபாட்டு உறவுகளின் அடிப்படையிலேயே ஒன்றை விளங்கிக் கொள்ளமுடியும் என்கிற வகையில் அதன் சாராம்சம், வரலாறு, தோற்றம் (Origin) குறித்த ஆய்வு ஆகியவற்றை அமைப்பியல் தேவையற்றதாக்கியது எனவே சொல், கருத்து, பிரதி ஆகியவற்றிற்கு அப்பால் நின்று அவற்றின் அர்த்தங்களை நிர்ணயிக்கத்தக்க ஆதாரங்களாகவும் அடித்தளங்களாகவும் இருக்க வல்ல பொருள், நூலாசிரியன் என்கிற கருத்தாக்கங்களை எல்லாம் கேள்விக்குள்ளாக்கிய அமைப்பியல் எல்லா மனித வெளிப்பாடுகளையும் **'பிரதி' (Text)** யாகப் பார்க்கும் சாத்தியத்தை வலியுறுத்தியது பிரதி என்பது பல்வேறு அர்த்தங்கள் வெளிப்படுகிற/மோதுகிற களமாக விளங்கும். மொழியின் இடுகுறித் தன்மை இதனைச் சாததியப்படுத்தும் அதன் இறுதி அர்த்தத்தை தீர்மானிக்கும் தகுதி, சுட்டும் பொருள் அல்லது ஆசிரியனுக்குக் (Referent or Author) கிடையாது இவ்வாறு ஆதாரங்களிலிருந்து அறுபட்டு மிதக்கும் குறிப்பான்களுக்கு குறிப்பீட்டைக் காட்டிலும் அதிக முக்கியத்துவத்தை வழங்கிய அமைப்பியல் மொழியின் மூலம் சுட்டும் பொருள் குறித்த 'இறுதி உண்மை'யைச் சொல்லிவிடமுடியும் என்பதைக்கேள்விக்குள்ளாக்கியது பிரக்ஞை என்பது மொழி வழியாகவே செயல்படுவதால் இதிலிருந்து தபபுவதற்கு மனிதனுக்கு வாய்ப்பே இல்லை. இவ்வாறு உண்மை, சாரம், வரலாறு, தோறறம், பிற ஆதாரம் ஆகியவற்றிற்கு மேலைச் சிந்தனைப் பாரம்பரியத்தில் கொடுக்கப்பட்டு வநத மிகையான முக்கியத்துவத்தை அமைபபியல் போட்டுடைத்தது.

இருபதாம் நூற்றாண்டின் முக்கியமான சிந்தனையாளர்களில் ஒருவரான **தெரிதா,** மேலைத் தத்துவப் பாரம்பரியத்தில் கலநது போன **''முன்னிற்றலின் இயங்காவியலை''** (Metaphysics of Presence)க் களைந்தெறிவதின் அவசியத்தை வலியுறுததினார். மேலைச் சிந்தனையில் **'எழுத்தைக்'** காட்டிலும் **'பேச்சிற்கு'** அளிக்கப்படும முக்கியத்துவத்தின் போலித்தனத்தையும ஆபத்தையும் களையும் வகையில் அவர் இந்தக் கருத்தாக்கத்தை முன் வைத்தார். எழுத்து என்



படிப்பகம்

www.padippakam.com

பது முதன்மையானது. பேச்சின் மூலமே உண்மையான அர்த்தத்தை நாம் உள்வாங்க முடியும். ஏனெனில் பேசுபவர் நம் முன் நிற்கிறார் நமது காதில் விழும் அவரது குரலொலி இடையில் குறிகளின் இடையீடு இல்லாமல் அவர் மனதில் நினைப்பதை அப்படியே வெளிப்படுத்திவிடும் என்கிற அசட்டுத்தனமான நம்பிக்கையை நமக்குத் தந்துவிடுகிறது. ஆனால் குரலொலியும் குறிகள் மூலமாகவே வெளிப்படுகின்றது அதாவது இடையில் மொழி வந்துவிடுகிறது. வேறு வார்த்தைகளில் சொல்வதானால் இடையில் (மொழி) ஊடகம் இல்லாமல் நமக்கு நாமே கூட முன் நிற்க (Present) முடியாது. தவிரவும் முன்நிற்றல் என்கிற கருத்தாக்கமே முன் நில்லாமை (absent) என்கிற கருத்தாக்கத்திலிருந்து வேறுபடுவதன் மூலமே அர்த்தம் பெறுகிறது. நிகழ்காலம் என்பது இறந்த/எதிர்காலங்களுடனான வேறுபாட்டின் அடிப்படையிலேயே பொருள் பெறுகிறது. இவ்வாறு இருப்பில் இன்மையின் எச்சமும் (Trace), நிகழ் காலத்தில், இறந்த காலத்தின் எச்சமும் பிரிக்க இயலாமல் படிந்தே கிடக்கின்றன. தவிரவும் எந்த ஒரு குறியையும் நாம் அர்த்தப்படுத்திக் கொள்ளும்போது வேறு ஒரு குறியின் மூலமாகவே அதனைச் செய்கிறோம். எடுத்துக் காட்டாக ''வீறிட்டான்'' என்பதை அர்த்தப்படுத்த முயல்கிறோம் என வைத்துக் கொள்வோம். ''பலமாகக் கத்தினான்'' என அர்த்தப்படுத்தும்போது 'பலம்', 'கத்துதல்' என்கிற வேறு குறிகளுக்கு அம்முயற்சி இட்டுச் செல்கிறது. இந்தக் குறிகள் இன்னும் வேறு குறிகளைச் சுட்டுகின்றன. இந்த முயற்சி இறுதியின்றித் தொடர்கிறது. அதாவது அர்த்தங்கள் முடிவே இல்லாமல் ஒத்திப் போடப்படுகின்றன இவ்வாறு **வித்தியாசம், ஒத்திப்போடுதல், முன்நிற்றலின் மாயையைத் தகர்த்தல், ஆதாரத்தின் அதிகாரத்தைக் கேள்விக்குள்ளாக்குதல்** ஆகியவை நவீன சிந்தனைக்குப் பின் அமைப்பியல் அளித்த கொடைகள்.

அறிவொளிக் காலத்தைக் கட்டுடைத்து அதன் வன்முறையையும் பகுத்தறிவின் பயங்கரவாதத்தையும் தோலுரித்த இன்னொரு முக்கிய சிந்தனையாளர் ஃபூக்கோ, சமூகத்தில் அதிகாரங்கள் செயல்படுவதையும் அதன் மூலமான வன்முறையையும் இவர் ஆய்வுக்கு உட்படுத்தினார். அறிவும் அதிகாரமும் இதன் வழியாக வன்முறையும் பிரிக்க இயலாமல் கிடப்பதை அவர் வெளிப்படுத்தினார். அறிவு தர்க்கம் ஆகியவற்றின் வழி நின்று அறிவொளி யுகத்தை ஒட்டி எவ்வாறு நோய், பைத்தியம், குற்றம், பாலியல் முதலியவை வரையறுக்கப்பட்டன என்பதை விளக்கிய ஃபூக்கோ இந்த அடிப்படையில் உருவாக்கப்பட்ட மருத்துவமனை, மனநோய்விடுதி, சிறைச்சாலைகள், திருமணம் / குடும்பம் போன்ற பாலியலை 'ஒழுங்குபடுத்தும்' நிறுவனங்கள் ஆகியவற்றின் கட்டமைப்பையும் அவற்றின் மூலம் மக்கள் மீது அவிழ்த்து விடப்பட்ட அதிகாரத்தையும் வன்முறையையும் கட்டவிழ்த்தார். மனிதர்களை வேறுபடுத்திப் பிரித்து (எடு: மனநோயாளி/ தெளிந்த அறிவுடையவன்) கண்காணித்து, அடைத்து வைத்து அதிகாரத்திற்குள்ளாக்குவதை விளக்கினார். சமூகம் முழுவதுமே சிறைச்சாலை வடிவிலான கண்காணிப்பு நிறுவனங்களாக மாற்றப்பட்டுள்ளதைச் சுட்டிக் காட்டினார். பாலியலுக்கும் அதிகாரத்திற்குமுள்ள உறவை விரிவாக ஆராய்ந்த ஃபூக்கோ, இந்த வகையில் சமூக முழுமையையும் மனநோய்வயப்பட்ட பெண் (hysterical women), சுய இன்பம் காணும் பிள்ளைகள், வக்கிரம் பிடித்த வாலிபன், மால்தூசிய கணவன்-மனைவி எனப் பிரித்துக் கண்காணிப்பிற்குள்ளாக்கப்படுவதையும் விளக்கினார் பகுத்தறிவை முன்னோக்கிய வளர்ச்சி, விடுதலை ஆகியவற்றுடன் இணைத்த அறிவொளி மரபிற்கு எதிராக இதுகாறும் ஒதுக்கப்பட்ட மனநோயாளிகள், கைதிகள், நோயாளிகள் ஆகியோரின் மீதும் பகுத்தறிவுக்கு மாற்றாக (other) விளங்கும் மனப்பிறழ்வு, உடல், ஆசை, ஆகியவற்றின் மீது கவனத்தை ஈர்த்தார். எல்லாவிதமான ஒழுங்கமைவுகளுக்கும் (order) பின்னாலுள்ள வன்முறையைத் தோலுரித்தது ஃபூக்கோவின் மிகப் பெரிய பங்களிப்பு. ஒழுங்கமைப்பை வலியுறுத்துவதிலும், நியாயப்படுத்துவதிலும் ஒழுங்கின்மை பற்றிய அச்சத்தைப் பல்வேறு தளங்களில் நம்மிடையே விதைப்பதிலும், குற்ற உணர்ச்சியை விதைத்து அதிகாரத்தின் கண்காணிப்பிற்கு நம்மை ஆட்படுத்திக் கொள்ளும் விருப்பை உருவாக்குவதிலும் பகுத்தறிவு வகித்துள்ள பங்கை நாம் ஃபூக்கோ வழி நின்று புரிந்து கொள்கிறோம்.

அதிகாரம் குறித்த சிந்தனைகளில் ஃபூக்கோவிற்கு முன்னோடியாக இருந்த சென்ற நூற்றாண்டின் இன்னொரு முக்கியமான சிந்தனையாளரான நீட்ஷே (1844-1900)யைப் பற்றிச் சொல்லாமல் இக்குறிப்புகள் முழுமை பெறாது. நவீன அதர்க்கவியலின் தந்தை என அழைக்கப்படும் நீட்ஷே இந்த நூற்றாண்டில் மிகவும் தவறாகப் புரிந்துகொள்ளப்பட்ட ஒரு தத்துவவியலாளர். அதுவரையிலான தத்துவங்களின்



படிப்பகம்

www.padippakam.com

பிரச்சினைக் குவியங்களிலிருந்து கவனத்தைத் திருப்பிய நீட்ஷே ''அதிகாரத்திற்கான விருப்புறுதி'' (will to power) என்கிற புதிய தத்துவார்த்தப் பிரச்சினைக் குவியத்தை முன் வைத்தார் இதுவரையிலான அறவியல், பண்பாட்டு மதிப்பீடுகள் எல்லாம் ''அடிமை அறவியலே'' (Slave morality). அதாவது அடிமைகளாக மக்களைக் கட்டமைக்கும் அறவியல் மற்றும் மதிப்பீடுகளே எனப் பிரகடனப்படுத்திய நீட்ஷே, இவை அனைத்தையும் தூக்கி எறிவது தவிர நமக்கு வேறு வழியில்லை என்றார். இவற்றுக்குப் பதிலாக புதிய அறவியல், புதிய மதிப்பீடுகள் புதிய, பண்பாடு உருவாக்கப்படவேண்டும். அடிமை மனநிலையிலிருந்து விடுதலையடைந்து அதிகார விருப்புறுதியை மனிதன் உருவாக்கிக் கொள்ள வேண்டும் இந்த நோக்கில் ஒரு புதிய''அதிகார அறவியல்'' (master morality) உருவாக்கப்படவேண்டும். எல்லா மனிதர்களும் அதிகாரமுடையவர்களாக, ஆற்றல் மிக்கவர்களாக அதிமனிதர்களாக (superman) ஆக வேண்டும் என விருப்பம் தெரிவித்த நீட்ஷே, இதற்குத் தடையாக உள்ள, அடிமை மனப்பானமையை மனிதரில் விதைக்கிற கிறிஸ்தவ மதத்தை மறுததார். மனிதனுக்குக் கற்பிதங்கள் தேவை என்ற நீட்ஷே கடவுளின் மரணத்தை அறிவித்தார். கடைசிக் கிறிஸ்தவன் சிலுவையில் மாண்டு போனான் என நகைத்தார். அறிவுத் தேட்டம் என்பது அதிகாரத்தை நோக்கிய ஒரு செயல்பாடுதான் என்பதை முதன் முதலில் சுட்டிக் காட்டியவரும் நீட்ஷேதான். எல்லாப் பழைய அடிமை மதிபபீடுகளையும் தூக்கி எறியச் சொல்லும் நீட்ஷேயசக் குரலை ''நிகிலிசம்'' என ஒதுக்குவதில் பொருளில்லை. ருசியப் புரட்சிகர சனநாயக வாதிகளை ''நிகிலிஸ்டுகள்'' என ருசியப் பிற்போக்குவாதிகள் அழைத்தபோது, பிற்போக்குத்தனமான சமூக ஒழுங்கமைவுககு எதரான இயலபான எதிர்மறைக் கணணோட்டமே நிகிலிசம் எனக் கூறிய **லெனின்,** அவர்களைப் புரட்சிகர நிகிலிஸ்டுகள என வரையறுத்தது குறிப்பிடத்தக்கது. (தொகுப்பு 4. பக்கம் 275). டாக்டர் **அம்பேத்கர்** அவர்கள் நீட்ஷே குறித்து உதிர்த்துள்ள விமர்சன பூர்வமான கருததுக்கள் (தொகுப்பு 6 பககம் 101-10э) முக்கியமானவை.

மிக மிகச் சுருக்கமாக மேலைத் தத்துவப் பாரம்பரியததில் அறிதல் குறித்த கண்ணோட்டங்கள் வளர்ச்சி பெறறு வந்தமை இங்கே தொட்டுக் காட்டபபட்டுள்ளது. எநதச் சிநதனையாளரின் கருத்தும் இங்கே முழுமையாகத் தொகுக்கப்படவில்லை. கோடிகாட்டப்பட்டுள்ளன என்று சொல்வதே பொருத்தம். **லாக், பெர்க்லி, ஹ்யூம்** போன்ற அனுபவவாதிகள், **ஸ்பினோஸா, லெய்ப்னிஸ்** போன்ற பகுத்தறிவுவாதிகள், **ஃபிக்டே, ஷெல்லிஸ்** போன்ற ஜெர்மன் கருத்து முதன்மையாளர்கள், **காம்டே**, மில் போன்ற நேர்காட்சி வாதிகள், **அல்துஸ்ஸர்** போன்ற மார்க்சியர்கள் ஆகியோரின் கருத்துக்கள் விரிவஞ்சி இங்கே விடப்பட்டுள்ளன.

ஃ ஃ ஃ

## ஒரு இடையீடு

நவீனத்துவத்தின் தொடர்ச்சியாகவும், உச்சமாகவும், அதன் ஒருசில கூறுகளின் நீட்சியாகவும், சிலவற்றின் மறுப்பாகவும் விகசித்துள்ள பின் நவீனத்துவததை அடையாளம் காணுமுன் இந்தியத் தத்துவம் குறித்த ஒரு ஒப்பு நோக்குக் குறிப்பை இங்கே முன் வைப்பது அவசியமாகிறது. மேலைத் தத்துவத்தைக் காட்டிலும் கீழைத் தத்துவம் உயர்ந்தது எனவும், எல்லாமே நமது வேதங்களில் உள்ளது எனவும் சனாதனக் குரல்கள் இங்கே அவ்வப்போது ஒலிப்பதன் விளைவாக இதைச் சொல்ல வேண்டி இருக்கிறது.

புராதன வடமொழி வேதங்களில் காணப்படும் தத்துவார்ததக் கூறுகளை கணக்கிலெடுத்துக கொணடு பார்த்தோமானால் இந்தியத் தத்துவததின் தோற்ற காலத்தை கி.மு. 10க்கு முன் சொலலலாம். புராதன கிரேக்க — ரோம தத்துவங்களுடன் எலலா வகைகளிலும் ஒப்பிடத் தக்க அளவிற்கு இந்தியத் தததுவம் இருந்தது என்பதில் அயயமில்லை. வேதங்களை ஆதாரமாகக் கொணட **சனாதனப் போக்கிற்கும்** வேதங்களின் ஆதாரங்களை மறுதத **பௌத்த ஜைன லோகாயதப்** போக்குகளுககும் இடையிலான வாத, எதிர்வாதக் களமாக இநதிய தத்துவம் அமைந்தது. இன்னொரு கோணத்தில் சொல்வதானால் கருத்து முதன்மைத் தத்துவப் போக்குகளுக்கும் பொருள் முதன்மைப் போககுகளுக்கிடையிலான போராட்டமாகவும் சொலல இடமுண்டு. **மீமாம்சம், சாங்க்யம், யோகம், நியாயம, வைசேடிகம்** போனறவை வேத ஆதாரங்களை ஏறறுக் கொணடவை. சாங்க்யம் போன்றவை வேத ஆதாரங்களை ஏற்றுக் கொண்டாலும் பொருள முதன்மைத் தனமையுடையனவாய் இருந்தும், புதத தத்துவத்திற்குள் கருத்து முதனமைப் போக்குகள்



படிப்பகம்

www.padippakam.com

இருந்தன என்பதும் இங்கே குறிப்பிடத்தக்கன. மொத்தத்தில் மேலைப் புராதனத் தத்துவங்களுக்கு இணையாக கீழைத் தத்துவங்களும் வளர்ந்திருந்தன. தமிழிலக்கியங்களின் வாயிலாக வெளிப்பட்ட தத்துவப் போக்குகளை **நா வானமாமலை** போன்றோர் விரிவாக ஆய்ந்துள்ளனர்.

கிறிஸ்தவ மதம் மற்றும் மடாலயங்களின் எழுச்சியோடு மேலைத் தத்துவம் மேலை இறையியலின் எடுபிடியாக மாறியதைக் கண்டோம். கி.பி எட்டாம் நூற்றாண்டுக்குப் பின்பு இங்கே உருவான வேதாந்தத்தை மத்திய கால மேலைதத்துவத்திற்கு இணையாகச் சொல்லலாம். பௌத்த, ஜைன வேத மறுப்பு மதங்களையும் லோகாயதத்தையும் சனாதனத் தத்துவத்திற்குள்ளேயே பொருள் முதன்மைக் கூறுகளுடன் வெளிப்பட்ட சாங்க்யம், நியாயம், வைசேடிகம் முதலியவற்றையும் வீழ்த்தி **வேதாந்தம்** எழுந்தது. வேதாந்தத்திறகும் **அத்வைதம்** (சங்கரர்), **துவைதம்** (மத்வர்), **விசிட்டாத்வைதம்** (ராமாநுஜர்) என மூன்று போக்குகள் இருந்ததெனினும் இவை அனைத்துமே கருத்து முதன்மைப் போக்குகளாகவே இநந்தன யாற்றுப் போக்குகள் முற்றிலுமாக ஒடுக்கப்பட்டன. சில நூற்றாண்டுகளுக்குப பின்பு தமிழகத்தில் உருவான **சைவ சித்தாந்தம்** மடங்களின் ஆதரவோடு நெடுநாள் கோலோச்சியது. வேதாந்த மரபிலிருந்து சைவ சித்தாந்தம் பெரிய அளவில் வேறுபட்டிருக்கவில்லை பொருள் முதலியம், அனுபவவாதம், அறிவின் மேன்மை முதலியவற்றை இவை எதுவும் ஏற்றுக் கொண்டதில்லை என்பதோடு கடுமையாக எதிர்க்கவும் செய்தன, சுருக்கமாகச் சொல்வதானால் மதவியலின் கொத்தடிமையாக இந்தியத் தத்துவம் ஆக்கப்பட்டு மாற்றுச் சிந்தனை மரபுகள் ஓரங்கட்டப்பட்டன.

மத்திய காலம் வரையிலும் மேலை மரபுக்கு இணையாக இந்திய மரபு விளங்கியதைக் கண்டோம். மத்திய காலத்திற்குப் பின்பு மேலைத் தத்துவம் மதவியலின் பிடியை நொறுக்கிக் கொண்டு விலகி வந்து மதம் சாராத் தன்மையுடன் கடந்தஅய் நூறு ஆண்டு காலமாக மிகப் பெரிய வளர்சசி அடைந்திருப்பதை நாமறிவோம். விசுவாசத்தை முதன்மைப்படுத்திய மத்திய காலத் தததுவம் தகர்ந்து பகுத்தறிவு கோலோச்சியதையும், சில நூற்றாண்டுகளுக்குப் பின்பு அந்தப் பகுத்தறிவுச் சிந்தனை மரபும் விமர்சனத்துள்ளாக்கப்பட்டு இணையான ஒரு அய்யவாத மரபு தோன்றியதையும் முற்பகுதியில் சுருக்கமாகப் பார்த்தோம் 15ஆம் நூற்றாண்டுக்குப் பின்பு மேலைச் சூழலில் பெருவளர்ச்சி அடைந்த அறிவியற் சாதனைகள் இதற்குப் பின்புலமாக அமைந்ததையும் அறிவோம்.

இங்கிருந்த வருணாசிரமம் அறிவியல் வளர்ச்சியை முடக்கிய கதையை நாம் அறிவோம். காலனிய நடவடிக்கைகள் இத்துடன் இணைந்தன இதன் விளைவாக மேலைமாயில் ஏற்பட்ட தத்துவ வளர்ச்சிக்கு இணையாக இங்கே தத்துவம் வளரவில்லை. மதவியலிலிருந்தும் விசுவாச நம்பிக்கைகளிலிருந்தும் மேலைத் தத்துவம் விடுபட்டது போல இந்தியத் தத்துவம் இன்றுவரை விடுபடவில்லை. மதம் சாராத் **தத்துவ மரபு இங்கே வளர்த்தெடுக்கப்படவில்லை.** மத நம்பிக்கைகள் தகர்க்கப்பட்டு. மர்ம வாதங்கள் நொறுக்கப்பட்டு பகுத்தறிவின் ஆதிக்கம் இங்கே தோன்றவே இல்லை மதம் சார்ந்த பிரபுத்துவ வன்முறையே இங்கே தொடர்ந்தது பகுத்தறிவு சார்ந்த மேலை மரபிலாவது சற்றே சனநாயகக் கூறுகளும், பகுததறிவை விமர்சனத்திற்குள்ளாக்கிய மரபும் கலந்திருந்தது. பகுத்தறிவின் வன்முறையினூடாக இவற்றையும் காண முடிந்தது. இநதிய மரபிலோ இததகைய விமர்சனப் போக்குகளுக்கெல்லாம் வாய்ப்பற்று மதம் சார் சனாதனப் போக்கின் வன்முறை தொடர்ந்தது; தொடர்கிறது இந்தப் போக்கின சில கூறுகளை விமர்சனத்திறகுள்ளாக்கிய சித்தர் மரபு ரொம்பவும் பலவீனமாக விளிபபில் நின்று பரிதாபமாக ஒலித்தது. விரிவான தத்துவப் போக்காக வளர்வதற்கு வாய்ப்பற்றுச் சுருங்கிப் போனது விரிவான தத்துவ வளாச்சிக்குரிய அறிவியல் வளர்ச்சி இங்கு இல்லாமற் போனதும் இதற்கொரு காரணமாக இருக்கலாம்.

முதன் முதலில் பகுத்தறிவின் துணை கொண்டு மதம் சார் நம்பிக்கைகளை இங்கே கேள்விக்குள்ளாக்கியது ஈ.வெ.ரா. **பெரியார்** தான் மதம்சார் தத்துவத்தினடியிலான வன்முறையின் சமூக விளைவுகளுக்கு எதிராகத் தீவிரமாக இயங்கிய அவரது செயற்பாடுகள் அரசியற் களத்திற்குள்ளேயே முடங்கின. தத்துவக் களத்தில் விரிவடையவில்லை.

* * *



படிப்பகம்

www.padippakam.com

இந்தியத் தத்துவம் குறித்த இந்த இடையீட்டிலிருந்து விலகி மேலைச் சூழலில் நவீனத்துவத்தின் உச்சமாகப் **பின் நவீனத்துவம்** வெளிப்பட்டதை அடையாளம் காண முயலலாம்.

பின் நவீனத்துவத்திற்குள் பல்வேறு விதமான போக்குகள் இருந்த போதிலும் இவை அனைத்திற்கும் பொதுவான கூறாக விளங்குவது தன்னிலையை முன்னிலைப் படுத்தும் பகுத்தறிவைக் கேள்விக்குள்ளாக்கும் பண்பே இந்த வகையில் மேலைத் தத்துவத்தில் பகுத்தறிவை விமர்சனக் கண் கொண்டு நோக்கிய **கான்ட், ஹெய்டெக்கர், நீட் ஷ, ஃபூக்கோ, தெரிதா** மற்றும் மேலைச் சிந்தனைப் போக்கின் இரண்ட மரபாகக் கருதப்பட்ட **டிசேட், பதேய்ல், ஆர்த்தோ** என்றொரு வம்சாவெளி வரிசையைத் தனக்குரியதாகப் பின் நவீனத்துவம் அடையாளம் கண்டது. அறிவு என்பது உண்மையைத் தேடும் முயற்சி என்பதை மறுத்த பின் நவீனத்துவம் அறிவை ஒரு உரையாடலாகவும் சமூக நடைமுறையாகவும் கண்டது. இவ்வாறு அறிவின் சர்வ வியாபகத் தன்மை (Universalism) நிரந்தரத் தன்மை என்பன கேள்விக்குள்ளாக்கப்பட்டன. எல்லாவிதமான கோட்பாட்டுருவாக்கத்தையும் சந்தேகங்கொண்டு பார்த்த பின் நவீனத்துவம் நடைமுறை அறிவுக்கு (Pragmatism) முக்கியத்துவம் அளித்தது. அறிதல் செயல் பாட்டில் தன்னிலையையும் பொருளையும் தனித்தனியே பிரித்து நிறுத்துவதை சாத்தியமில்லை எனக் கண்டு உலகில் மனிதன் சூழலுடன் பரஸ்பர வினையாக்கத்தில் உள்ளான் என்கிற **ஹெய்டெக்கரின்** கருத்தை ஏற்றுக் கொண்டது. எனவே எதையும் நாம் உள்ளிருந்தே பார்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம். வெளியிலிருந்து எட்டி பார்ப்பதற்கான இடம் ஏதும் இல்லை என்றது. எந்த ஒன்றையும் அதற்கு வெளியே உள்ள அடித்தளத்தின் மீது ஏறி நின்று பார்க்க முடியாது எடுத்துக்காட்டாக ஒரு பிரதியை மதிப்பிட அதன் ஆசிரியனது கருத்து அல்லது செயல்பாட்டை ஆதாரமாகக் கொண்டு விட முடியாது **ஆசிரியனைப் போலவே கடவுள், வரலாறு, பகுத்தறிவு போன்ற எல்லா அடித்தளங்களும் முக்கியத்துவமிழந்து போகின்றன.**

பொருட்களின் சாரம், மொத்தத்துவம் போன்ற கருத்தாக்கங்களைப் பின் நவீனத்துவம் மறுத்தது மொத்தத்துவம் என்பது எதேச்சாதிகாரத்திற்கே வழி வகுக்கும் என்பதால் **சிதறுண்டு போதலை** (Fragmentation) ஆதரித்தது. ஒருமைத் தன்மை, ஒன்றை நோக்கிய கருத்துக் குவிப்பு என்பதெல்லாம் வன்முறைக்கே இட்டுச் செல்லும் என்பதால் **விலகல், வேறுபாடு, பன்மைத் தன்மை, ஒருமையின்மை** (incoherance) **இரு பொருட் தன்மை** (ambiguity) ஆகியவற்றை வலியுறுத்தியது. மொத்தத்துவம், பொதுமைப் படுத்துதல், தரப்படுத்துதல் என்பதெல்லாம் தனித்துவமான அடையாளங்களை அழித்தொழிக்கும் வன்முறைகள் என்பதால் சிறு குழுக்கள், தனித்துவங்கள், தல அளவிலான செயற்பாடுகள் ஆகியவற்றை வரவேற்றது. பெருந்திட்டம் என்பதற்குப் பதிலாக சிறிய திட்டங்கள், பேரிலக்கியம் என்பதற்குப் பதிலாகசிறு கதையாடல்கள் என்பதாக இதனை பல துறைகளிலும் விரிவாக்கலாம்.

தர்க்க வகைப்பட்ட அறிதலை வன்முறைக்கு என ஒதுக்கிய பின் நவீனத்துவம் அதர்க்க வகைப்பட்ட அறிதலுக்கு எடுத்துக் காட்டாய் விளங்கும் **அழகியல் அணுகல் முறையை** (எ.டு: ''தீ கடும்'') **தனக்குரியதாக வரித்துக் கொண்டது** பகுத்தறிவுக்குப் பதிலாக பகுத்தறிவின் மாற்றாக விளங்கக் கூடிய **விருப்பு** (desire), **உடல்** (body), **பைத்திய நிலை, பன்மைத் தன்மை நுண் அரசியல்** ஆகியவற்றை முன் வைத்தது ''உடல் அரசியல்'', 'விருப்பின் அரசியல்'' போன்ற கருத்தாக்கங்களை உருவாக்கியது. இவ்வாறு அழகியல் என்பதை கலை இலக்கியம் என்கிற எல்லையைத் தாண்டி அறிதல், அரசியல், அறவியல், நடைமுறை என வேறு புலங்களுக்குள் அத்துமீறி நுழைய வைத்தது. கடவுள், பகுத்தறிவு போன்ற அடித்தளங்கள் தகர்ந்து போனதால் இனி அழகியல் ரீதியில் வடிவமைக்கப் பட்ட உடல் சார்ந்த விருப்புகளே முக்கியம் என அறிவித்தது.

* * *

இறுதியாக **எதார்த்தவாதம்** (Realism)' **புனைவியல்** (Romantism), **நவீனத்துவம்** (Modernism), **பின் நவீனத்துவம்** (Post-Modernism) ஆகியவற்றை வேறுபடுத்திப் புரிந்து கொள்ள முயல்வோம்.

தன்னிலையை முன்னிலைப்படுத்தி பகுத்தறிவை மையமாகக் கொண்டு இயங்கிய கார்டீசிய அறிதல் முறை எதார்த்தத்தை ஆய்வுக்குட்படுத்தப்பட வேண்டிய செயலூக்க மற்ற பொருளாய் அணுகியதைக் கண்டோம். கலை இலக்கியச் செயற்பாடு களில் இது எதார்த்தவாதமாய் வெளிப



படிப்பகம்

www.padippakam.com

பட்டது. எதார்த்தத்தை மனதில் எதிரொளித்து அப்படியே இலக்கியமாக வடித்தெடுத்துவிட முடியும் என்கிற அறிவொளி அகங்கார வெளிப்பாடாக எதார்த்த வாதத்தைக் காணலாம். எதார்த்தத்தைக் கையகப்படுத்திய இறுமாப்பை எழுத்தாளனுக்கும் எதார்த்தத்தைப் புரிந்து கொண்ட போலி மகிழ்ச்சியை வாசகனுக்கும் இது அளிக்கிறது.

அறிவொளி மரபை ஒட்டி எதிர் மரபு ஒன்றும் (Counter Enlightenment) மேலைத் தத்துவத்தில் இணையாகச் செயற்பட்டு வந்ததை அறிவோம். இதற்கிணையான இலக்கியச் செயற்பாடாக புனைவியலைச் சொல்லலாம். முதலாளிய வளர்ச்சியை ஒட்டிய தர்க்கங்களையும் பண்டமயமாதல்களையும் மனிதன் எதிர்கொள்ளும்போது ஏற்பட்ட சிக்கல்கள் புனைவியலாக வெளிப்பட்டது. ''கற்பனைச் சாகசம்'' என்கிற ஒரு புதிய அடித்தளத்தைப் பற்றிக் கொண்டு அவன் நிற்க முயற்சித்ததை இது எடுத்துக் காட்டியது. செர்வான்டிசின் நாயகர்களை நாம் இங்கே நினைவுகூரலாம்.

ஆனால் பரிச்சயமான பொருட்கள், சமூகப் பாத்திரங்கள், நிறுவனங்கள் ஆகியவற்றை ''எதார்த்த நீக்கம்'' (Derealize) செய்கிற ஆற்றலை முதலாளியம் பெற்றுள்ளது குறிப்பிடத் தக்கது. நம்முன் இருக்கிற எதார்த்தங்கள் எல்லாமே போலி எதார்த்தங்கள்தான் (Simulacrum). மாதிரிகளே நம்முன் எதார்த்தங்களாக (Hyper reality) க் காணக் கிடைக்கின்றன. எனவே இவற்றை அப்படியே இனி எதார்த்த வாதமாய் வெளிப்படுத்துவதென்பது வாசகன் முன் எதார்த்தத்தை எழுப்பி நிறுத்தி விடாது. வேண்டுமானால் அது ஓர் ஏக்க உணர்வாகவோ இல்லை கேலி உணர்வாகவோ வெளிப்படலாம். எனவே அது வாசகனுக்குத் திருப்தி அளிப்பதற்குப் பதிலாக சோகத்தையே அளிக்கிறது.

ஒற்றை அர்த்தம், ஒழுங்கு ஆகியவற்றின் மீதான பிரமை எதார்த்தவாதத்தின் மூலம் அதிகரிக்கிறது. எதார்த்தவாத நோக்கில் பயன்படுத்தப்படும் புகைப்படம், திரைப்படம் முதலியவை இதனை உறுதி செய்கின்றன. ஒரு பரிச்சயத் தன்மையையும் அதனடிப்படையிலான பாதுகாப்பு உணர்வையும் ஊட்டுவதன் மூலம் இருக்கிற எதார்த்தத்தையும் அதன் வன்முறையையும் கேள்வி முறையின்றி ஏற்றுக் கொள்ளும் மனநிலையை எதார்த்தவாதம் அளிக்கிறது. ப்ரெக்ட் எழுப்பிய கேள்வி நினைவிருக்கலாம். மரத்திலிருந்து விழும் பழத்தை இயல்பானது எதார்த்தமானது என்கிற நோக்கில் பரிச்சய உணர்வோடு அணுகினால் ஈர்ப்பு விதியை நாம் உணர முடியாது. ஈர்ப்பு விதியை உணராதவரை அதன் பிடியிலிருந்து தப்ப முடியாது. எனவே சுற்றியுள்ள வன்முறை மிக்க இந்தச் சூழலுக்குப் பாதுகாவலர்களாகவும் அதனை ஏற்றுக் கொள்பவர்களாகவும் இருக்கக் கூடாது என்கிற எண்ணம் நமக்கு இருக்குமேயானால் ''உள்ளதை உள்ளபடியே'' சித்திரிப்பதாக நாம் நினைத்துக் கொள்கிற எதார்த்த வாதத்தின் விதிகளை தகர்த்தெறிந்தாக வேண்டும். பரிச்சய உணர்வளிக்கும் பாதுகாப்பு என்பது அரசு, காவல் துறை முதலியவை அளிக்கும் பாதுகாப்பிற்குச் சமம். இதன் மறுபக்கம் வன்முறை எதார்த்த வாதம் என்பது ஏதோ வன்முறையை ஏற்றுக் கொள்கிற விசயம் மட்டுமல்ல; வன்முறையைப் பிரயோகிக்கிற விசயமும் கூட. சுருங்கச் சொல்வதானால் எதார்த்த வாதத்தின் ஒரே வரையறை, ''எதார்த்தம் குறித்த பிரச்சினைகளிலிருந்து நம் கவனத்தைத் திருப்புவது'' என்பதுதான்.

புனைவுகளினூடாகவே இவ்வுலக வாழ்க்கை இயங்குகிறது. கற்பிதங்களும் கட்டமைப்புகளும் அறிதலில் பிரிக்க இயலாத பங்கை வகிக்கின்றன. ஆண்மை, பெண்மை, தேசியம் போன்ற கட்டமைப்புகளை எடுத்துக்காட்டுகளாகச் சொல்லலாம். நமது அறிதலில், பிரக்ஞையில் கலந்து போயுள்ள இந்த புனைவுத்தன்மை பற்றிய உணர்வை நம்மிடமிருந்துவிரட்டி ஒரு வகை ''உண்மைத் தன்மையை''ப் (Truth Effect) பதிக்கிறது எதார்த்தவாதம். இருத்தலுக்கும் அறிதலுக்குமிடையிலான இடைவெளியைத் திரையிடுவதன் மூலமாக இந்த ''உண்மைத் தன்மை'' உருவாக்கப்படுகிறது. 'புனைவுத் தன்மை'' மறைக்கப்படுகிறது. ஒருமை, எளிமை, பரிச்சயத்தன்மை முதலியவைகளும் பழக்கப்பட்ட அழகியல் விதிகளுக்குக்கட்டுப்பட்டு இயங்கும் தன்மையும் இதற்குத்துணை புரிகின்றன. இவ்வாறு புனைவுகள் (Fiction) புனைவுத் தன்மை நீக்கப்பட்டு நம்மிடம் கையளிக்கப்படுகின்றன. பிராங்க்கெர்மோட் சொல்வது போல புனைவுகளிலுள்ள புனைவுத் தன்மை மறைக்கப்பட்டு உண்மை விளைவை அதன்மீது ஏற்றும்போது புனைவுகள் (Fictions) தொன்மங்களாக (Myths)ச்



படிப்பகம்

www.padippakam.com

சீரழிகின்றன. **கெர்மோட்** சொல்கிற ஒரு எடுத்துக்காட்டைப் பார்ப்போம். பாசிசம் முன் வைத்த ''யூத எதிர்ப்பு'' என்கிற புனைவு தொன்மமாக முன்வைக்கப்பட்டது. ஆனால் **ஷேக்ஸ்பியரின்** 'லியர் மன்னன்' நாடகம் புனைவாக நம் முன் நிற்கிறது. பல்வேறு வகையான அரசியல் சொல்லாடல்கள், சடங்குகள் (Rituals-எ.டு: மாநாடு, பேரணி, கொடி ஏற்றுதல், கொடும்பாவி எரித்தல் முதலியன) மூலம் பாசிசத்தின் புனைவுக் கூறுகள் நீக்கப்பட்டு உண்மைத் தன்மை உருவாக்கப்படுகிறது. இது இலட்சக் கணக்கில் யூதர்களைக் கொன்று குவிக்கும் வன்முறைக்குக் காரணமாகிறது. சாவைப் பற்றிய பிரச்சினைகளை முன் வைக்காமலேயே பாசிசத் தொன்மம் சாவை மற்றவர்கள் மீது திணிக்கின்றது தனது கற்பிதங்களை நிறுவும் சோதனைச் சாலையாக கொலைக்களங்களை உருவாக்குகிறது. இந்த வகையில் அறிவியலின் கற்பிதங்களுக்கும் (Hypothesis) தொன்மத்தின் கற்பிதத்திற்குமிடையே ஒரு ஒப்புமையைக் கூட நாம் காண முடியும். ஆனால் 'லியர் மன்னன்' நாடகமோ சாவைப் பற்றிய பிரச்சினை உருவாக்கம் ஒன்றைச் செய்து நம்மை நாமே விலகி நின்று எதிர்கொள்ளும் மனநிலையை உருவாக்குகிறது. தொன்மங்கள் முழுமையான ஏற்பை அதனை எதிர்கொண்டவர்கள் மீது திணிக்கிறது. புனைவுகளோ தற்காலிகமான நிபந்தனைக்குட்பட்ட இசைவையே கோருகிறது. தொன்மங்கள் நிலைத்தன்மையைக் கோருவதாகவும், இருக்கிற நிலையை ''தீமைகளைக் களைந்து'' தக்க வைப்பதாகவும் புனைவுகள் என்பன மாற்றத்திற்குரிய மனநிலையை உருவாக்குவதாகவும் உள்ளன. ஆனால்புனைவுகள் என்பன தனது புனைவுத் தன்மையை மறைத்துக் கொள்ளாத வரையிலேயே, உண்மை விளைவுக்கு ஆசைப்படாத நிலையிலேயே இத்தகைய வரவேற்கத்தக்க பணியை மேற்கொள்ள முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. ''சிந்திக்கக் கூடிய எதுவும் புனைவாகத்தான் இருக்க முடியும்'' என **நீட்ஷே** சொன்னதும் நமது ''இறுதி நம்பிக்கை புனைவில்தான் இருக்க வேண்டும்'' என **வாலஸ் ஸ்டீவன்ஸ்** குறிப்பிட்டதும் இங்கே நினைவு கூரத் தக்கன.

எனவே சூழலின் வன்முறை எதார்த்தத்தின் போலித் தன்மை ஆகியவை குறித்த பிரக்ஞை இருக்கும்போது எதார்த்தவாதத்தின் ஏற்றுக் கொள்ளப்பட்ட விதிகளிலிருந்து விலகுவது தவிர்க்க இயலாததாகிறது. உண்மைத் தன்மையைத் தோற்றுவிக்கும் ''சரியான விதிகள்'', ''சரியான கதை சொல்லல்'', ''சரியான வடிவம்'' போன்றவற்றை எல்லாம் போட்டுடைக்க வேண்டியதாகிறது. இந்த நிலையை ஏற்றுக்கொண்ட கலைஞர்கள் இந்நூற்றாண்டின் முற்பகுதியில் கலை இலக்கிய **நவீனத்துவத்திற்குக்** காரணமாயினர். எதார்த்தத்தை உள்வாங்கி (Conceive) வெளிப்படுத்துவதிலுள்ள பிரச்சினைகளின்பால் கவனத்தை ஈர்த்தனர். எனினும் எதார்த்தவாதத்திலிருந்து தப்புவதில் நவீனத்துவவாதிகளுக்கும் பின் நவீனத்துவவாதிகளுக்குமிடையே குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் உள்ளன. **காண்டின்** 'Subline' என்கிற ஒரே சமயத்தில் இன்பத்தையும் துன்பத்தையும் அளிக்கும் உணர்வு எனும் கருத்தாக்கத்தைப் பயன்படுத்தி **ல்யோதார்த்** இந்த வேறுபாட்டை வரையறுத்தார்.

எதிர்கொள்கிற எதார்த்தத்தைப் புரிந்து உள்வாங்கும் திறனுக்கும் அதனை வெளிப்படுத்தும் திறனுக்குமுள்ள மோதலின் விளைவாக ஒரு தன்னிலை இந்த உணர்வை அனுபவிக்கிறது. இந்த எதார்த்தம் பற்றிய ஒரு புரிதலை நாம் உருவாக்கிக் கொண்டபோதிலும் அதனை வெளிப்படுத்துவதற்கு நமது கற்பனை திறனற்றுப் போகும்போது இந்த உணர்வு ஏற்படுகின்றது. புரிந்து உள்வாங்குதலில் ஏற்பட்ட இன்பமும் வெளிப்படுத்த இயலாத துன்பமும் இணையும் நிலை அது. இந்த ஒருங்கின்மையின் விளைவாக அழகியல் உணர்வை நாம் அடையாததோடு எதார்த்தம் குறித்த அறிவை உருவாக்கும் சாத்தியத்தையும் அந்த வெளிப்பாடு இழந்து விடுகிறது. இந்த வெளிப்படுத்த இயலாத சாத்தியமின்மையையாவது வெளிப்படுத்த முடியுமா? முடியும் என்றார் **காண்ட்**. ''வடிவமற்ற'' (Formlessness) தன்மையின் மூலமே இது சாத்தியம்.

Subline என்பதற்கூடாக இருவிதமான உணர்வோட்டங்களைப் (mood) பிரித்துக் காட்டுகிறார் **ல்யோதார்த்**. 1. வெளிப்படுத்த இயலாத சாத்தியமின்மைக்கு அழுத்தம் கொடுக்கும் தன்மை ஒன்று முன்னிருப்பை (Present) வெளிப்படுத்த இயலாத ஏக்கத்தை (nostalgia) இது அளிக்கிறது. கலை இலக்கிய **நவீனத்துவப் போக்குகள்** இந்த உணர்வோட்டத்தை அடிப்படையாகக் கொண்டன. 2 புரிந்து உள்வாங்கும் திறனுக்கு அழுத்தம் கொடுக்கும் தன்மை மற்றது. வெளிப்படுத்த இயலாமை பற்றிய சோகத்தை மறந்து புரிந்து உள்வாங்கும் திறனை எண்ணி தன்னிலையை மகிழ்ச்சிக்



படிப்பகம்

www.padippakam.com

கடலில் ஆழ்த்துகிறது அது. வடிவமற்ற தன்மை இருண்மை போன்ற உத்திகள் மூலமாக எப்படியோ "ஆழத்தை" எட்டி எதார்த்தத்தைக் கையகப்படுத்தும் வெட்டி முயற்சிக்குப் பதிலாக முழுமை, சாரம் குறித்த பிரச்னைகளை எல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டு எல்லாவற்றையும் வேடிக்கையாய், விளையாட்டாய், முரண் நகையாய்ப் பார்க்கும் மன ஊக்கத்தை இது தன்னிலைக்கு அளிக்கிறது. இதுவே பின் நவீனத்துவ மன நிலை என்கிறார் லியோதார்த். எதார்த்தத்தை தட்டில் வைத்து வினியோகிப்பதல்ல — வெளிப்படுத்த இயலாததை குறித்த மறைகுறிப்புகளை (allusions) உருவாக்குவதே எழுத்தின் பணி என்று சொல்ல லியோதார்த் 'மொத்தத் துயரத்தின் வன்முறையை நாம் சகித்துக் கொண்டது போதும்; மொத்தத்துவத்திற்கு எதிரான யுத்தம் ஒன்றைத் தொடங்குவோம்; வெளிப்படுத்த இயலாமைக்குச் சாட்சியங்களாக அமைவோம்; வேறுபாடுகளை ஊக்குவோம்; தனித்துவங்களுக்கு மரியாதை செலுத்துவோம்' என்று முழங்கினார்.

நவீனத்துவத்தின் உச்சமாகவே பின் நவீனத்துவம் வெளிப்பட்டாலும் இந்த வேறுபாடு மிக முக்கியம். ஆழங்களை எப்படியாவது எட்டிவிட வேண்டும் என்கிற அவஸ்தையை நவீனத்துவம் கொண்டிருந்தது என்றால் மேற்பரப்பில் திளைக்கும் சுகத்தைப் பின் நவீனத்துவம் மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொண்டது. இரண்டாம் உலகப் போருக்கு முன்னும் பின்னுமிருந்த ஏக்கம், கவலை, முரண்நிலை ஆகிய உணர்வுப் பின்னணியில் தோற்றம் கொண்ட நவீனத்துவம் எப்படியாவது இந்த முரண்கள் தீரும், தீர்க்க வேண்டும் என நம்பியது. தூரப்படுத்துதல், பிரிந்து நிற்றல், ஆழம், சாரம், மனிதனை மையமாக வைத்துப் பார்த்தல், ஒப்புமை எனப் பல்வேறு உத்திகளை இதற்குக் களனாகக் கொண்டது. ஏதோ ஒரு வகையில் ஒத்திசைவு, உறுதித் தன்மை ஆகியவற்றின் மூலம் வரையறுக்கப்பட்ட ஒழுங்குத் தன்மையை நோக்கிய நகர்வாகவும் ஏக்கமாகவும் நவீனத்துவம் இருந்தது. ஆனால் பின் நவீனத்துவமோ நவீனத்துவவாதிகளின் உயர் முனைப்புகளை (High Seriousness) விட்டொழித்து விளையாட்டுத்தனத்தை வாடிக்கையாக்கிக் கொண்டது ஒழுங்குகளின் நிலைத்தன்மைக்குப் பதிலாக இயக்கத் தன்மைக்கு (Kinetic sense of orderliness".—Alan wilde; அழுத்தம் கொடுத்தது. ஆலன் வில்டு சொல்வது போல இழந்து போன சொர்க்கத்தைப்பற்றி நவீனத்துவம் கவலைப்பட்டது என்றால் அந்த இழந்து போன சொர்க்கத்தை பின் நவீனத்துவம் புறக்கணித் தொதுக்கியது. இந்தச் சூழலை ஏற்றுக் கொள்ளும் மனநிலையை பின் நவீனத்துவம் கொண்டிருந்தது. இதன் பொருள், அரசியல் ரீதியாக இதனைச் சகித்துக் கொள்வதல்ல. நமது அறிதல் முறையில் கலந்து போயுள்ள இயங்காவியற் கூறுகளையும் அசனடியான வன்முறைகளையும் களைந்தெறிந்துவிட்டு, பெருங்கதையாடல்களின் சிதைவை அங்கீகரித்த இழந்து போனதை நினைத்து ஏங்கிக் கொண்டிராமல் இருப்பை எதிர்கொள்வதைப் பற்றி பின் நவீனத்துவம் யோசிக்கிறது. இதுகாறுமான தர்க்கங்களெல்லாம் வன்முறைக்கே வித்திட்டதால் இந்த தர்க்கத்திற்கான மாற்றுகளின் மீது கவனத்தை ஈர்த்தது. இலக்கியச் செயல்பாடுகளில் உண்மைத் தன்மை, ஒழுங்குத்தன்மை ஆகியவற்றிற்குப் பதிலாக புனைவுத் தன்மையை பிரக்ஞை பூர்வமாக வெளிப்படுத்திக்கொண்டது நமது பழைய கதை சொல்லும் மரபிலுள்ள Magical தன்மைகளை உள்வாங்கிக் கொண்டது. இந்த வகையில் Metafiction, Magical Realism போன்ற உத்திகளை வரவேற்றது. மாற்றவற்றிற்கு இடமளித்தல், பன்மைத் தன்மையை சகித்துக் கொள்ளல், கருத்து விலகல்களுக்கு மதிப்பளித்தல், தல அளவில் செயல்படுதல் போன்ற அரசியல் செயற்பாடுகளைச் சுட்டிக் காட்டியது. தர்க்கத்திற்குப் பதிலாக அதர்க்கத்தையும் (Paralogy) அறிவுக்குப் பதிலாக உடலையும் "அதுவா இதுவா?" என்பதற்குப் பதிலாக, "இரண்டுமே" என்ற பதிலையும் எல்லாவிதமான பெருங்கதையாடல்களின் சிதைவையும் அது கட்டியம் கூறியது. எல்லா அடித்தளங்களையும் உடைத்தெறிந்த வகையில் "கற்பனாவாதம்" என்கிற புதிய அடித்தளமொன்றை முன் வைத்த புனைவியலில் இருந்தும் பின் நவீனத்துவம் தன்னை வேறுபடுத்திக் கொண்டது. □

**பின் குறிப்புகள் :**

1. பின் நவீனத்துவம் குறித்து நான் எழுதியுள்ள வேறு சில கட்டுரைகளையும் இத்துடன் இணைத்துப் படிக்க வேண்டுகிறேன். (பார்க்க : கோடாங்கி—2; களம் புதிது—3, நி.பி. இலக்கிய இணைப்பு—3)
2. Philosophical Classics for English Readers வரிசையிலுள்ள சில நூற்கள்,



படிப்பகம்

www.padippakam.com

Encyclopaedia களிலுள்ள தத்துவம் மற்றும் தத்துவார்த்திகள் பற்றிய கட்டுரைகள், முன்னேற்றப் பதிப்பகத்தாரின் Dictionary of Philosophy ஆகியவற்றிலிருந்து மேலைத் தத்துவ வரலாறு பற்றிய குறிப்புகள் தொகுக்கப்பட்டுள்ளன. கல்வி சார்ந்த தத்துவச் சொல்லாடல்களின் காலப் பாகுபாடு அப்படியே ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. வேறு வகைகளிலும் இதனை வாசித்து, எழுதிப் பார்க்கலாம். ல்யோதார்த்தின் Postmodern Condition, what 'is Post modernism என்கிற கட்டுரைகள் பாட்ரீஷியா வா தொகுத்துள்ள Post modernism—A Reader லுள்ள ஆலன் லைவல்ட் இரவிங் ஹோ சூசன் சோன்டாக் பிராங் கெர்மோட், இஹாப் ஹாசன், மீன் பாத்ரில்லா ஆகியோரின கட்டுரைகளிலிருந்தும் கருத்துகள் திருடப்பட்டுள்ளன.

3. நவீனத்துவத்தை முற்போக்கானதாகவும் பின் நவீனத்துவத்தைப் பிற்போக்கானதாகவும் விமர்சிக்கிற ஹேபர்மாசின் கருத்துகள் இந்தக் கட்டுரையில் தொகுக்கப்படவில்லை. ஹெகலிய முழுமையைச் சிலாகிக்கும் ஜெர்மானிய தத்துவப் பாரம்பரியம், லூகாச்சிய மார்க்சியப் பாரம்பரியம் ஆகியவற்றின் கடைசிக் கொழுந்தாகவும் இன்றைய உலகின் முக்கிய சிந்தனையாளர்களில் ஒருவராகவும் உள்ள ஹேபர்மாசின் கருத்துகளை பின் நவீனத்துவச் சிந்தனைகளை 'ஒரு வழி' செய்ய விழைவோர் தேடிப் பிடித்தும் படிக்கலாம்.

4. ஆனால் இங்கே பின் நவீனத்துவச் சிந்தனைகள் மீது காழ்ப்பைக் கக்குகிறவர்கள் எல்லாம் இத்தகைய காத்திரமான முயற்சிகளுக்குத் தயாராக இல்லாமல் வெறும் அவதூறுகள், அசட்டுக் கேலிகள், புரட்டலகள் ஆகியவற்றிலேயே தஞ்சமடைவது கவனிக்கத்தக்கது. வல்லிக்கண்ணன், சுஜாதா, வெங்கட்சாமி நாதன், மாலன், இந்திரா பார்த்தசாரதி மற்றும் பெருங்கதையாடல்களை முன வைதது பிழைபபை நடத்தும் கட்சிக்காரரகள் ஆகியோர் இந்த அடிப்படையில் ஒருங்கிணைந்து நிற்கின்றனர். பின் நவீனததுவததை ஒரு வெறும் அராஜகமான கதைசொல்லும் முறையாகவே புரிந்து கொண்டுள்ள இந்த ஆட்கள் இதன் தத்துவார்த்தப் பின் நிகழ்வுகளை அறிந்திருக்கவில்லை என்கிற அம்சத்தின் மீது தோழர்களின் கவனத்தை ஈர்ப்பதே இக்கட்டுரையின் முதன்மையான நோக்கம். தர்க்கம், ஒழுங்கு, தூய்மை, பெருங்கதையாடல்கள ஆகியவற்றின் தகர்வைப் பிரகடனப்படுத்துவதன் மூலம் இவர்களது அதிகாரத்திற்கு உண்மையான எதிராளிகளாக நாம் மட்டுமே இருக்கிறோம் என்பதை இந்தச் சனாதனிகள் புரிந்து கொண்டதன் விளைவே நம்மீது இவர்கள் கொண்டுள்ள காழ்ப்பு மேலைத் தத்துவத்திற்கு இணையாக இந்தியத் தத்துவத்தைச் சொல்வதையும் இந்தியத் தத்துவத்தில் எல்லாமே இருக்கிறது என அகமகிழ்வதையும் அறியாமை என்கிற சொல்லால் குறிப்பதைத் தவிர நமக்கு வேறு வழியில்லை பின் நவீனத்துவச் சிந்தனையாளர்கள் வெள்ளை இனம் தவிர்த்த ''மற்ற'' மரபுகளுக்கு உரிய இடமளித்தல் என்கிற அடிப்படையில் இங்குள்ள வேதங்களை மேற்கோள் காட்டுவதைப் 'பிடித்துக் கொண்டு பிரபுத்தவ — மதவியல் வன்முறையை கோடானு கோடி அடித்தட்டு மக்கள் மீது திணிதத வேத தத்துவ மரபைப் போற்றுவதை நாம் எளிதாக விட்டுவிட முடியாது. இந்திய தத்துவ மரபு என்றால் வேத மரபு மட்டும் தானா, லோகாயத மரபெல்லாம் இல்லையா எனச் சிலர் தந்திரமாகக் கேடகலாம். இந்திய மரபு எனச் சொல்வதன் மூலம் இங்கே வேத மரபே மனம் கொள்ளபபடுகிறது என்பதும் லோகாயத மரபை உயர்த்திப் பிடித்த சட்டோபாத்யாயா போன்றோரை இவர்கள் மதபபதில்லை என்பதும் கவனிக்கத்தக்கது. வேதத்தைத் தாண்டி பின் நவீனத்துவத்தில் ஒன்றுமில்லை எனச் சொன்னதைப் போலவே புனைவியல்தான் பின் நவீனத்துவம் எனச் சொல்வதும் அரைகுறைப் புரிதலின் விளைவுதான் (பாரககணையாழி நவம்பர் 95 இதழில வந்துள்ள இந்திரா பார்த்தசாரதியின கட்டுரை). இரணடிற்குமுள்ள தொடர்ச்சியும் தொடர்ச்சி இன்மையும் நமது கட்டுரைப் போக்கில் சுட்டிக காட்டப்பட்டுளளன. தவிரவும் பின் நவீனத்துவம் மேலைச் சரக்கு அதனை இங்கே இறககுமதி செய்ய வேண்டுமா? என்கிற கேளவியையும் இவர்கள் தந்திரமாக எழுப்புகின்றனர். இப்படிச் சொல்கிறவர்கள் எல்லாம் நாவல், சிறுகதை என்பன போன்ற மேலை இலக்கிய வடிவங்களைப் பயன்படுத்திக் கொண்டு இருப்பவர்கள்தான். மார்டனிசம், சர்ரியலிசம், இம்ப்ரஷனி



படிப்பகம்

சம்... என்றெல்லாம் கட்டுரைகள் எழுதிக்கொண்டிருந்தவர்கள்தான். இன்று பின் நவீனத்துவத்தை மட்டும் இவர்களால் எள்ளளவும் சகித்துக்கொண்டு போக இயலாத சூழல் எப்படி ஏற்பட்டது என்பதைத் தோழர்கள் சிநதிக்க வேண்டும். தலித்தியம், பெண்ணியம் போன்ற கருத்தாக்கங்கள் மற்றும் அரசியற் செயற்பாடுகளின் முக்கியத்துவத்தை பின் நவீனத்துவம் சுட்டிக்காட்டுவதுடன் இதனை இணைத்துப் பார்க்க வேண்டும்.

5. மதவியலிலிருந்து பிரிந்து பகுத்தறிவின் வன்முறையை வெளிப்படுத்தி, பின் அதனையும் விமர்சனத்துக்குள்ளாக்கிய எதிர் மரபையும் (Counter Enlightenment) தன்னுள்ளே கொண்டுளளது மேலைத் தத்துவம். இன்று அங்கே பகுத்தறிவு மறுக்கப்பட்டு அதற்குப் பதிலாக உடல் ஆசை, நுண் அரசியல், பன்மைத் தன்மை முதலியன வைக்கப்படுகிறது என்றோம் அதர்க்க நோக்கில் Magical தன்மைகளும் உள்வாங்கப்படுவதையும் பார்த்தோம். இன்று, இங்கே பின் நவீனத்துவ நோக்கில் சிந்திப்பவர்கள் பகுத்தறிவிற்குப் பதிலாக உடல், ஆசை, நுண் அரசியல், பன்மைத் தன்மை போன்றவற்றை முன் வைப்பதில் பிரச்சினையில்லை. பகுத்தறிவை மறுப்பது என்கிற பெயரில் Mysticism, இந்துத்துவம ஆகியவற்றில் விழுந்துவிடுவதில் எச்சரிககை தேவை. இங்கே மத விசுவாசம் மறுக்கப்படவேயில்லை, பகுத்தறிவின் ஆட்சி மேலைச் சூழலைப்போல இங்கே உருவாக்கப்படவே இல்லை எனபதைநாம் மறந்துவிடக்கூடாது. **புதுமைப்பித்தன்** போன்றோரை பின் நவீனததுவ வாதிகளாகக்காணுமபோது இநத எச்சரிக்கை தேவை. புதுமைப்பித்தன போன்றோரிடம் காணப்படும் பின் நவீனத்துக்கூறுகளைச் சுட்டிக் காட்டுவது என்பது வேறு அவரையே பின் நவீனத்துவ வாதியாகச் சொல்வதென்பது வேறு.

6. தமிழவன் மற்றும் அவரது குழுவினர்முன் வைக்கும் பின நவீனததுவக் கருத்தாக்கங்கள் கடும் விமர்சனத்துக்குள்ளாக்கப்படவேண்டியவை. பின் நவீனத்துவததிற்குள் பல போக்குகள் இருந்தாலும அவற்றுள் பெருங்கதையாடல்களின் சிதைவு, மொத்தத்துவத்தை மறுத்தல், பன்மைத் தன்மைகளை வலியுறுத்தல் போன்றவற்றை அவர்கள் வற்புறுத்துவதில்லை தன்னிலையை மையமாகக் கொண்ட அறிதல் முறையையும அவர்கள் கேளவிக்குள்ளாக்கியதாகத் தெரியவில்லை கல்வி சார்ந்த academic கூறுகள் மட்டுமே அவர்களிடம் மிகுந்து நிற்கின்றன **தமிழவன்** தொகுத்து வந்துள்ள ''நவீனத்தமிழும் பின் நவீனத்துவமும்'' (காவ்யா, 1994) என்னும் நூலிலுள்ள கட்டுரைகளை பின் நவீனத்துவத்திற்குள் அவர் எப்படி அடக்குகிறார் என்பது விளங்கவே இல்லை அதிலுள்ள கட்டுரையாசிரியர்கள் சிலர் பின் நவீனத்துவத்தையே ஏற்றுக் கொள்ளாதவர்கள். ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் அக்கட்டுரைகளில் அத்தகைய கூறுகள் உள்ளன என நம்புவதற்கும் சான்றுகளில்லை. எந்தக் காரணங்களுக்காக அவை பின் நவீனத்துவமாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன என்கிற யோக்கியமான முன்னுரையையும் தொகுப்பாசிரியர் எழுதவில்லை. இதனைப் புரியாமை என்று சொல்வதா இல்லை விற்பனைத்தந்திரம என்பதா. இல்லை பின் நவீனத்துவப் பாணியில் இரண்டுமே என்று சொல்வதா — தமிழவன்தான் விளக்க வேண்டும். வித்யாசம் 3/4 இதழில் **காம்யூ** பற்றிய தனது வாசிப்பை நியாயப்படுத்த ஆசிரியரின் கூற்றை **நாகார்ஜுனன்** அடித்தளமாகக் கொண்டுள்ளது எத்தகைய பின் நவீனத்துவப் புரிதலின் அடிப்படையில் என்பது நமக்கு விளங்கவில்லை. பன்முக வாசிப்பைச் சாடும் வன்முறை அக்கட்டுரையில் இழையோடுவதையும் குறிப்பாக இன்று பிரான்சில் ஒடுக்கப்படுகிற இனத்தவர்களுள் ஒருவராக உள்ள ஒரு அரேபியனுக்குச் சாதகமான வாசிப்பு மறுககப்படுவதையும் தோழர்கள் கவனிக்க வேண்டுகிறேன்.

7. பின் நவீனத்துவத்தையே ஒரு பெருங்கதையாடலாகத் தோழர்கள் கருதிவிடக்கூடாது என்பதை வலியுறுத்த விரும்புகிறேன் அத்தகைய தொனி இக்கட்டுரையில் எங்கேனும் வெளிப்பட்டிருந்தால் அதனை வாசிக்கும்போது கவனமாக நீக்கிவிட வேண்டுகிறேன. ஒரு குவியத்தை நோககிய தன்மையற்ற முறையில் இக்கடடுரையை எழுதி இருந்தால் இன்னும் நன்றாக இருககும் என்பதை உணர்கிறேன். □

www.padippakam.com

# "வெள்ளைத்தனத்துக்கு துரோகம் மனித குலத்துக்கு விசுவாசம்" நோயல் இக்னேஷியேவுடன் ஒரு நேர்காணல்

கேம்ப்ரிட்ஜிலிருந்து வெளிவரும் RACE TRAITOR என்ற பத்திரிக்கையின் ஆசிரியர்களில் ஒருவரான இக்னேஷியேவ் இன வெறியை எதிர்த்துப் போராடி வருபவர். ஏராளமான கட்டுரைகளையும், பிரசுரங்களையும் இவர் எழுதியுள்ளார். தற்போது போஸ்டனில் வசிக்கிறார். இந்த நேர்காணல் — அராஜகவாதிகளால் நடத்தப்படும் THE BLAST என்ற பத்திரிகையிலிருந்து எடுக்கப்பட்டு(ஜுன்/ஜுலை 1994 இதழ்) அமெரிக்காவிலிருந்து வெளியாகும் UTNE READER என்ற சஞ்சிகையில் பிரசுரிக்கப்பட்டது. (நவம்பர்/ டிசம்பர் 1994).

வெள்ளை இனத்துரோகியாக இருப்பதற்கு ஆறு வழிகளை இக்னேஷியேல் குறிப்பிடுகிறார்.

1. எப்போதும் இனரீதியாக ஒடுக்கப்பட்டவர்களோடு உங்களை அடையாளம் காணுங்கள். வெள்ளைத்தனத்தின் விதிகளைப் புறக்கணியுங்கள். அந்தப் புறக்கணிப்பு சமூகத்தில் தாக்கம் ஏற்படுத்தும்படிச் செய்யுங்கள்.

2. கறுப்பர்களை யாரேனும் இகழ்ந்து பேசினால், "நான் வெள்ளையரென்று நினைத்துக்கொண்டு அப்படிக் கூறுகிறீர்களா? நான் வெள்ளையாக இருப்பதைப் பார்த்துவிட்டு இப்படித்தான் எல்லோரும் தவறாக நினைத்து விடுகிறார்கள்" என்று கூறுங்கள் "கறுப்பர்கள் யாரும் உழைப்பது கிடையாது. அவர்கள் எப்போதும் வீட்டிலேயே இருக்கவேண்டும். பிள்ளை பெற்றுக்கொள்ள வேண்டும் இதுதான் அவர்களது விருப்பம்" என்று யாராவது கூறினால் "நானும் அப்படித்தான்" என்று கூறுங்கள்.

3. பள்ளிகளில் நிறபேதம் காட்டுவதை எதிர்த்துப் போராடுங்கள். வேலைகளில் வெள்ளையருக்கு சலுகை காட்டும் அனைத்து வடிவங்களையும் எதிர்த்துக் குரல் கொடுங்கள். கறுப்பர்களைக் கிரிமினல்கள் என முத்திரை குத்தும் போலீஸ், நீதித்துறை அனைத்தையும் எதிர்த்து நில்லுங்கள்.

4. வெறுமனே இவற்றை எதிர்ப்பதோடு நின்றுவிடாதீர்கள். அவற்றின் வழக்கமான செயல்பாட்டுக்கு ஊறு செய்யுங்கள்.

5. மக்களை நிறத்தின் அடிப்படையில் பிரித்தது யாரோ சில நிறவெறியர்களின் வேலையல்ல. அவர்களை மட்டுமே எதிரியாகக் கொள்ளாதீர்கள். இனவாதத்தை மறு உற்பத்தி செய்யும் சமூக நிறுவனங்களை எதிரியாகக் கொள்ளுங்கள்.

6. வெள்ளை இனத்தை அழிப்பதற்கான எந்தவொரு போராட்ட வடிவத்தையும் முன்கூட்டியே நிராகரித்து விடாதீர்கள். ஏனெனில் சமூக ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட போராட்ட வரம்புகளைத் தாண்டிச் செல்வதுதான் "நல்ல வெள்ளையர்களுக்கும்" இனத் துரோகிகளுக்கும் இடையிலான எல்லைக் கோட்டைத் தீர்மானிக்கிறது.



படிப்பகம்

www.padippakam.com

இவைதான் இக்னேஷியேவ் குறிப்பிடும் ஆறு வழிகள். இக்னேஷியேவ் விவாதிப்பவை நிறவெறி நிலவும் ஐரோப்பிய நாடுகளுக்கு மட்டுமே பொருந்தக் கூடியவை. நமக்கும் அவற்றுக்கும் தொடர்பில்லை என்று கூறிவிடமுடியாது. கறுப்பின மக்களுக்கு எதிரான இன வெறி நடவடிக்கைகளோடு இங்குள்ள சாதியக் கொடுமைகளை ஒப்பிட்டுப் பேசுவது அம்பேத்கர் காலந்தொட்டே இருந்து வருகிறது. நிறவெறிக் கொடுமைகளை விடவும் மோசமானவை தீண்டாமைக் கொடுமைகளென அம்பேத்கர் விவரித்துள்ளார்.

தலித் பிரச்சினை தீவிரம் பெற்றுள்ளதையடுத்து தமிழ்ச்சூழலில் எல்லோருமே தலித் ஆதரவாளர்களாகத் தங்களை அறிவித்துக் கொள்ள முந்துகின்றனர். இந்நிலையில் — தலித் ஆதரவாளர் என்பவர் யார்? அவர் ஆற்றவேண்டிய கடமைகள் எவை? தலித்துகள் அவர்களை எப்படி அணுகவேண்டும் போன்ற கேள்விகளுக்கான பதில்களை இந்த நேர்காணலிலிருந்து நாம் உருவாக்கிக் கொள்ள முடியும். தமது சொந்த சாதிக்குத் துரோகம் செய்பவர்கள் மட்டுமே தலித்களுக்கும் மனிதகுலத்துக்கும் உதவி செய்பவர்களாக இருக்கமுடியும் என்பதை இந்த நேர்காணல் தெளிவாக எடுத்துக் கூறுகிறது.

இதனை ஆங்கிலத்திலிருந்து தமிழில் மொழியாக்கம் செய்தவர்கள் :
**சம்புகன், வெ கோவிந்தசாமி, ரவிக்குமார்.**

□ □ □

○ இனத்துரோகி என்று யாரைக் குறிக்கலாம்?

வெள்ளையரென்று சாதாரணமாக வகைப் படுத்தப்படுகிற ஒருவர், வெள்ளைத்தனத்தின் சட்டதிட்டங்களை மீறுவதன்மூலம் வெள்ளையராயிருப்பதால் கிடைக்கும் சலுகைகளை ஒதுக்கித் தள்ளுவாரெனில் அவரை நாம் இனத்துரோகி என அழைக்கலாம்.

வரலாற்றில் 'இனம்' என்பது பல்வேறுவிதமாகப் பொருள் கொள்ளப் பட்டு வந்திருக்கிறது. ஒரு ஆதிக்கக் குழுவில் மிகக் கீழான நிலையில் வைக்கப்பட்டுள்ள ஒருவர் ஆதிக்கம் செய்யப்பட்டுள்ள குழுவின் எந்தவொரு உறுப்பினரையும்விட மேலானவராகக் கருதப்பட்டால் அதையே நாம் இனவாதம் எனக் குறிக்கிறோம். இத்தகைய ஒரு கருத்துருவாக்கம் 17ஆம் நூற்றாண்டில்தான் ஸ்தாபிக்கப்பட்டது. அப்போது அட்லாண்டிக் சமுத்திரப் பகுதி முழுவதும் ஒரு வியாபாரம் மும்முரமாக நடந்து வந்தது. ஐரோப்பாவையும், ஆப்ரிக்காவையும் சேர்ந்த வியாபாரிகள் தத்தமது நாட்டவரையே விற்று வந்தனர். அது அப்போது தண்டனைக்குரிய விஷயமாக இல்லை. ஏனென்றால் விற்கப் பட்டவர்களும், விற்பவர்களும் ஒரே இனத்தவர்களாகவே இருந்தனர். இந்த அடிமைத்தனமும் வணிகமும் பொருளாதாரம்சார்ந்த விஷயங்களாயிருந்தன. தொடர்ந்து தொழிலாளர்கள் கிடைப்பதை உறுதி செய்வதற்கான சிறந்த வழியாக அது இருந்தது.

தியோடர் ஆலென் (Theodore Allen) தனது "இன்வென்ஷன் ஆஃப் த ஒய்ட் ரேஸ்" (Invention of the white race) என்ற நூலில் குறிப்பிட்டுள்ளதுபோல வெள்ளை இனத்தவர் என்பதன் அர்த்தம் ஐரோப்பியர்களும், அமெரிக்கர்களும் அடிமைகள் அல்ல என்பது மட்டுமின்றி ஐரோப்பிய அமெரிக்கர்கள் அனைவரும் — தொழிலாளர்கள் உட்பட — அடிமைத்தனத்தைப் பிரயோகிப்பவர்கள் என்றும் ஆகிறது.

வர்ஜீனியா, மேரிலாண்ட் ஆகிய பகுதிகள் உள்ளிட்ட செஸாபீக்குடா காலனிப் பகுதியில் ஆப்ரிக்காவிலிருந்தும் ஐரோப்பாவிலிருந்து வந்தவர்களும் ஒன்றாகச் சேர்ந்து புகையிலைத் தோட்டங்களில் வேலைசெய்து வந்தனர் அவர்கள் தங்களுக்குள் பாலுறவு உட்பட அனைத்து உறவுகளையும் கொண்டிருந்தனர். ஒன்றாகவே போராடினர். ஒன்றாகவே தப்பித்து ஓடினர். ஆனால் 1600ன் இறுதிப் பகுதியில் இதில் மாற்றம் ஏற்பட்டது. அடிமைகளாக இல்லாத சுதந்திரமாயிருந்த சிலர் அவர்கள் கறுப்பினத்தைச் சேர்ந்தவர்களாயிருந்த காரணத்தினாலேயே சில உரிமைகளை இழக்க வேண்டியதா



படிப்பகம்

www.padippakam.com

பிற்று. அந்த உரிமைகளை வெள்ளையினத்தைச் சேர்ந்தவர்கள் என்கிற ஒரே காரணத்தினாலேயே மற்றவர்கள் அனுபவித்து வந்தனர். நாம் உபயோகிக்கும் அர்த்தத்தில் இனம் என்ற கருத்தாக்கம் உருவானது இப்படித்தான்.

**○ இனம் என்பது சமூக ரீதியில் கட்டமைக்கப்பட்ட ஒன்று என நீங்கள் கூறும்போது அதை எந்த அர்த்தத்தில் சொல்கிறீர்கள்?**

சமூகப் பாகுபாடுகளின் விளைவு என்ற விதத்திலேயே நாம் அதை அர்த்தப்படுத்துகிறோம். கறுப்பின மக்களில் பலரது மூதாதையர்கள் வெள்ளையர்கள். அதுபோலவே, வெள்ளையர்களில் பலரது மூதாதையர்கள் ஆப்ரிக்கர்களாகவோ, அமெரிக்கர்களாகவோ இருக்கின்றனர் எந்தவொரு உயிரியல் வல்லுனரும் இனம் என்பதற்கு திருப்திகரமான விளக்கமெதையும் தந்துவிடவில்லை—இத்தகைய முயற்சிகள் அபத்தமாகவே முடியும். ஒரு வெள்ளையினப் பெண் சறுப்புக் குழந்தையைப் பெற முடியும். ஆனால் கறுப்பினப்பெண் வெள்ளை நிறக்குழந்தையைப் பெற்றெடுக்க முடியாது என்பதைப் போன்ற அபத்தமான முடிவுகளுக்கே இந்த முயற்சிகள் வழி வகுக்கும். மக்கள் வெவ்வேறு இனங்களைச் சேர்ந்தவர்களாயிருப்பது அவர்கள் அப்படி ஆக்கப்பட்டிருப்பதால் மட்டும்தான் என்று சொல்வதே சரியான முடிவாயிருக்கும். தனி மனிதர்களுக்கிடையே வேறுபாடுகள் இருக்கலாம். ஆனால் குழுக்கள் பாகுபடுத்தப்படுவது அந்த வேறுபாடுகளின் அடிப்படையில் அல்ல அவை சமூகப் பாகுபாடுகளின் அடிப்படையிலேயே உருவாக்கப்படுகின்றன. ஆகவே இந்த ஒரு உருவாக்கம் இயற்கையானது அல்ல.

**○ திடீரென்று வெள்ளையர்களாகிவிட்ட மக்கள் என்பதற்கு உதாரணமெதுவும் நீங்கள் தர முடியுமா?**

இதற்கு ஐரிஷ்காரர்கள் நல்ல உதாரணம். அயர்லாந்தில், ப்ராட்டஸ்டன்ட் பிரிவு செல்வாக்கு பெற்றிருந்தபோது கத்தோலிக்கப் பிரிவைச் சேர்ந்த ஐரிஷ்காரர்கள் ஒதுக்கப்பட்டு கொடுமைக்குள்ளானார்கள். நாம் இனவாதம் என்று அமெரிக்காவில் குறிப்பிடுவது போலவே இருந்தது, அந்தப் போக்கு. இங்கிலாந்திலிருந்து கார்ல்மார்க்ஸ் எழுதுகையில், ''ஆங்கிலத் தொழிலாளர்கள் ஐரிஷ்காரர்களைக் கேவலமாகப் பார்க்கிறார்கள். இது தென் அமெரிக்காவில் ஆஃப்ரோ அமெரிக்கர்களை, ஏழை வெள்ளையர்களும்கூட கேவலமாகப் பார்ப்பது போல இருக்கிறது'' என்று குறிப்பிட்டார். கொஞ்ச காலத்தில், வாக்களிக்கும் உரிமை பெற்றதன் மூலம் கத்தோலிக்கப் பிரிவைச் சேர்ந்த ஐரிஷ்காரர்கள் ''வெள்ளையர்கள்'' ஆகிவிட்டனர். ஆனால் சுதந்திரமாகஇருந்த நீக்ரோக்களோ வாக்களிக்க உரிமையில்லாதவர்களாகிவிட்டனர். ஐரிஷ்காரர்களுக்கு எதிராக நிலவி வந்த காழ்ப்புணர்வு ஒழிக்கப்பட்டது. இதன் பொருள் ஐரிஷ்காரர்கள் வெள்ளையர்களுக்கான சலுகைகளைப்பெற அனுமதிக்கப்பட்டு விட்டார்கள் என்பது தான்.

**○ புதிய இன ஒழிப்புவாதம் (New Abo iti-onism) என்று நீங்கள் எதைக் கூறுகிறீர்கள்?**

வெள்ளை இனம் என ஒன்று இருக்கும்வரை 'இனவெறி'என்பதற்கு எதிரான அனைத்துப் போராட்டங்களும் தோற்றுத்தான் போகும். ஆகவே எங்களது நோக்கம் 'வெள்ளை இனம்' என்ற கருத்தாக்கத்தை முற்றிலும் ஒழிப்பதாக இருக்கிறது.

**○ வெள்ளை இனம், இனவாதம் பற்றிய உங்களது நிலைப்பாடு இனவெறிக்கு எதிராக எப்போதும் பேசப்படும் மற்ற அரசியல் போக்குகளிலிருந்து எவ்விதத்தில் வேறுபடுகிறது?**

இனவாதம் என்பது ஒரு குழப்பமான வார்த்தை ஒரு மக்கள் குழுவை அவர்களது தோலின் நிறத்தின் அடிப்படையில் வெறுத்து ஒதுக்குவது, என்பது மட்டுமல்ல இதன் பொருள். இனவாதத்தை எதிர்ப்பவர்களிலும் பெரும்பாலோர் — இனத்தின் அடிப்படையில் பாரபட்சம் காட்டுவதை அவர்கள் எதிர்த்தபோதிலும் — இனரீதியான வேறுபாடு என்பது நிலையானதென்றும், என்றும் அழியாமல் நீடித்திருப்பதென்றும் நம்பிக் கொண்டுள்ளனர். நாங்கள் 'இனம்' என்பதை கற்பிதம் செய்யப்பட்ட ஒன்றாகப் பார்க்கிறோம். எங்களைப் பொறுத்தவரை இனம் என்றால் அது மனித இனம் மட்டுமே.

**○ ஒருவர் தன்னை இனத் துரோகி என சமூகத்தின் முன் அறிவித்துக் கொண்டாலும்கூட அவர் வெள்ளையராக இருப்பதால் அதன் சலுகைகளைப்**



படிப்பகம்

www.padippakam.com

கள். அப்போதிருந்த எதிர்ப்பு வடிவங்களில் உதாரணங்களைத் தேடுகிறார்கள் அவற்றில் தமது போராட்டங்களுக்கு உத்வேகம் தரும் அடையாளத்தைக் கண்டுபிடிக்கிறார்கள். வெள்ளையரெனக் கூறப்படுபவர் தமது வெள்ளைத்தனத்தை நிராகரித்தபின் எதை நோக்கித் திரும்புவது? வெள்ளையினத்துக்கு முந்தைய கலாச்சாரங்களான ஜீடாயிஸம், ஸெல்டிக் அல்லது ஜெர்மானிய ஆதிக்குடிகளின் கலாச்சாரங்களை நோக்கித் திரும்புவதா? அல்லது தேசிய இன அடையாளங்களான ஐரிஷ் இத்தாலிய அமெரிக்க அடையாளங்கள் போன்றவற்றைத் தேடிச்செல்வதா? வெள்ளையினத்துக்குத் துரோகம் செய்யும்போது இப்படி இடைநிலையாக ஒரு அடையாளத்தை நாம் தேடித்தான் ஆக வேண்டுமா? அல்லது பிரபஞ்சம் தழுவிய மனிதநேயத்தையோ அதுபோன்ற வேறு ஒன்றையோ ஏற்பதற்காக நாம் அனைத்துவித அடையாளங்களையும் கைவிட்டு விட வேண்டுமா?

எனக்குத் தெரியவில்லை. என்னளவில் வெள்ளைத்தனத்துக்கு மாற்றாக மக்கள் ஆதிக்குடிகளின் கலாச்சாரங்களையோ, தேசிய இன அடையாளங்களையோ தேடிச் செல்வதில் தவறொன்றுமில்லை. இருந்தபோதிலும் இட்போதுள்ள நவீன அமெரிக்கர்களுக்கு அவை எவ்விதம் பொருந்திப் போகும் என்று எனக்கு ஐயமுள்ளது. கொஞ்சகாலத்துக்குமுன் சிலர் ஜெர்மானிய ஆதிவாசிகளின் தொல்கதை ஒன்றையொட்டி இயக்கமொன்றைக் கட்டமுற்பட்டு அது குழப்பத்தில் முடிந்தது. நாம் இப்படியான மாதிரிகளை உருவாக்க இன்னும் கடுமையாக உழைக்கவேண்டும். ஸெமினோல் இந்தியர்களை எடுத்துக் கொண்டால், நான் அறிந்தவரை பூர்வீகமாக வாழ்ந்திருந்த பல்வேறு குழுக்களின் மிச்ச சொச்சங்களும், தப்பியோடிய பல அடிமைகளும். ராணுவத்திலிருந்து தப்பியோடிய வீரர்கள் சிலரும் சேர்ந்து உருவான ஒரு குழு அது. அவர்கள் யாவரும் ஒரு குழுவாக ஒருங்கிணைந்து அமெரிக்க அரசுக்கு எதிராக மூன்று போர்களை நடத்தியுள்ளனர் உண்மையில் சொன்னால் அவர்களைத் தோற்கடிக்க முடியவில்லை அந்த ஸெமினோல் இந்தியக்குழு ஒரு வேளை மக்களுக்கு உத்வேகமூட்டும் ஒரு உதாரணமாக அமையக்கூடும் ஆனால் காலம்தான் இதற்கு பதில் சொல்லவேண்டும்.

○ ஒருவர் செய்யும் இனத்துரோகம் பற்றி அவர்யாரிடம் அறிவிப்பது? வெள்ளையரெனக் கூறப்படும் சக மனிதரிடமா? கறுப்பர் ஒருவரிடம்போய் நான் வெள்ளைத்தனத்தைக் கைவிட்டு விட்டேன் எனக்கூறுவது பொருத்தமாயிருக்குமா?

கறுப்பரிடம் சென்று கூற வேண்டுமென நான் சொல்லவில்லை. இங்கு விஷயத்தைப் பற்றி நான் ஆழ்ந்துசிந்திக்கிறேன் என்பதை மட்டும் இட்போது தெரிவித்துக்கொள்கிறேன்.

○ ஒருவர் இனத்துரோகியாக மாறும்போது கறுப்பினமக்களோடு அவருக்கு ஏற்படும் உறவு எத்தகையது? அந்த மக்களோடு அவர் எவ்விதமாக அரசியல் ரீதியான செயல்பாடுகளில் ஈடுபடுவது?

எந்த உறவும் ஒற்றுமையின் அடிப்படையில் அமைந்திருக்க வேண்டியது அவசியம். கறுப்பின மக்கள் வெள்ளையர்களின் மேலாதிக்கத்தை எதிர்த்துப் போராடி வளமான அனுபவங்களைப் பெற்றுள்ளனர் மற்றவர்கள் அதிலிருந்து ஏராளமாகக் கற்றுக் கொள்ளலாம் வெள்ளை மேலாதிக்கத்தை எதிர்த்த போராட்டமென்பது யாருக்கோ சலுகை காட்டுவதற்காக நடத்தப்படும் ஒன்றல்ல. சுதந்திரமாக இருக்க விரும்பும் அனைவருக்கும் இந்த வெள்ளை இன மேலாதிக்கத்தை தலைகீழாகக் கவிழ்க்க வேண்டிய கடமை இருக்கிறது. பழைய கோஷம் ஒன்று எனக்கு நினைவுக்கு வருகிறது.

"ஒருவருக்கு ஏற்படுகிற காயம் அனைவருக்கும் ஏற்படுகிற காயமாகும்" என்ற அந்த கோஷம் பல ஆண்டுகளாக சிதைக்கப்பட்டு அதன் அர்த்தமும் திரிந்துவிட்டது. ஒருவருக்கு அநீதி இழைக்கப்பட்டால் அதை நீங்கள் எதிர்க்கவேண்டும் அப்படிஎதிர்க்காவிட்டால் நாளை அது உங்களுக்கு வரும் என்பதுபோல அதன் பொருள் சிதைந்துவிட்டது. நாங்கள் அந்த முழக்கத்தின் உண்மையான அர்த்தத்தை நம்புகிறோம். பைபிளில் இதே மாதிரி ஒரு கட்டளை வருகிறது. "கட்டுண்டு கிடப்போரை நினைவு கூரும்போது அவர்களோடே பிணைக்கப்பட்டவர் போல உங்களை உணருங்கள்"

○ வெள்ளைத்தனத்தைக் கைவிட்ட தனிநபர்கள் பற்றிய விவரங்களைத்



படிப்பகம்

www.padippakam.com

தருவதன் மூலம் உங்கள் பத்திரிக்கை மாபெரும் பணியைச் செய்து வருகிறது. ஆனால் கூட்டாக எதிர்ப்பது என்ற போக்கு அதிகம் காணப்படவில்லை. இன ஒழிப்பின் அரசியலில் ஒன்றுபட்ட அரசியல் செயல் தந்திரம் எதுவாக இருக்கும்? நாம் கூட்டாகச் சேர்ந்து எப்படி வெள்ளை இனத்தை ஒழிப்பது?

வெள்ளை இனம் வலிமையோடிருக்க வேண்டுமென்றால் அது ஒற்றுமையோடிருக்க வேண்டியது அவசியம் போலீஸ்காரர்களும், நீதிமன்றங்களும் வெள்ளையர்கள் அனைவரும் விசுவாசமானவர்கள் தாம் என நம்பாதபட்சத்தில் வெள்ளை இனத்துக்கான சலுகைகளை வெள்ளையர் அனைவருக்கும் வழங்குவதில் என்ன பயன்? அப்படி அவர்கள் சலுகைகள் தருவதை நிறுத்திவிட்டால் வெள்ளை இனத்துக்கு என்ன ஆகுமென்று யோசித்துப் பாருங்கள்? வெள்ளையாக இருப்பவர்கள் யாவருமே வெள்ளை இனத்துக்கு விசுவாசமாக இருப்பார்கள், இன ஒடுக்குமுறையை ஆதரிப்பார்கள் என்ற நம்பிக்கையைத் தகர்க்கிற மாதிரி; வெள்ளை இன விதிமுறைகளை திடமான சித்தத்துடன் ஒதுக்கித்தள்ளுகிற ஒரு உறுதியான குழுவை உண்டாக்குவது தான் எங்களது திட்டம்.

ஒன்றுபட்ட கூட்டான எதிர்ப்புநடவடிக்கைகளுக்கு மேலும் நிறைய உதாரணங்களை உருவாக்கவேண்டுமென்று, நாங்கள் விரும்புகிறோம். லாஸ் ஏஞ்சல்ஸ் நகரிலும் வேறு பிற இடங்களிலும் கறுப்பர்கள் கலகம் செய்தபோது அவர்களோடு பல வெள்ளை இனத்தவரும் சேர்ந்து கொண்டார்களென்பது ஒரு நல்ல உதாரணம். அட்டிகா சிறையில் நடந்த கலகம் இன்னுமொரு உதாரணம். ''லவ் அண்ட் ரேஜ்'' (Love and rage) குழுவினரின் முன் முயற்சியில் புலம் பெயர்ந்தோருக்கெதிரான சட்டங்களுக்கும், வன்முறைகளுக்கும் எதிராக மேற்கொள்ளப்பட்ட கிளர்ச்சி ஒரு நல்லதிட்டம். ஆனால் எதிர்பாராதவிதமாக அது சரியாக நடக்கவில்லை; ஒன்றுபட்ட போராட்டம் முக்கியமானதுதான். ஆனால் அதேசமயத்தில் வெள்ளை இனத்தைச் சேர்ந்த ஒவ்வொரு தனிமனிதரும் வெள்ளையராக இருப்பதா அல்லது சுதந்திரத்துக்காகப் போராடுவதா இரண்டில் எதைச் செய்வது என்பதைத் தீர்மானித்துக் கொண்டாக வேண்டும்.

○ சில கட்டுரைகளில் உலகை நீங்கள் கறுப்பு வெள்ளை என இரண்டாகப் பிரித்துவிடுகிறீர்கள். கறுப்பரல்லாத பிற நிற மக்களின் போராட்டங்களையும், அவர்களது கண்ணோட்டங்களையும் நீங்கள் புறக்கணிப்பதாக குற்றச்சாட்டு எழுந்ததுண்டா? அப்படி எழுந்திருந்தால் அதற்கான உங்களது பதில் என்ன?

ஆமாம், நான் அப்படி எழுதியிருக்கிறேன். இந்த நாட்டில் வெள்ளையருக்கும், கறுப்பருக்கும் இடையில் போடப்பட்டுள்ள கோடு தான் இனம் என்பதைத் தீர்மானிக்கிறது. மற்ற எல்லா குழுக்களுமே அந்தக்கோட்டை வைத்துத்தான் அர்த்தப்படுத்தப்படுகிறது. நான் கறுப்பர், வெள்ளையர் என்று கூறும் போது அவற்றை கலாச்சார ரீதியில் வரையறுப்பதில்லை. அரசியல் ரீதியில்தான் வரையறுக்கிறேன். ஆப்ரிக்க வழிவராத பிற நிறத்தவரின் சுயேச்சையான கலாச்சாரங்களை, வரலாறுகளை நான் புறக்கணிக்கச் சொல்லவில்லை. ஆனால் சில சமயங்களில் பிற நிறத்தவர் பற்றிய பேச்சானது இன ஒடுக்குமுறையின் சாராம்சத்தை மறைத்து விடுகிறது. சீனர்கள் வெள்ளை இனத்தைச் சேராத பிற நிறத்து மக்கள்தான. கடந்த காலத்தில் அவர்கள் இந்த நாட்டில் கடுமையாக ஒடுக்கப்பட்டனர். இன்றும்கூட அதன் தாக்கத்தை குரோதத்தை அவர்கள் எதிர் கொண்டே வருகின்றனர். ஆனால் அமெரிக்காவிலுள்ள சீனர்கள் ஒரு ஒடுக்கப்பட்ட இனத்தவர் என இன்று யாராவது சொல்வார்களா? அவர்கள் ஒரு இனக்குழுவாக வரையறுக்கப்படுகின்றனர். சிறுபான்மை இன மக்களுக்கான மாதிரியாகக் கூட அவர்களைக் கூறலாம். அவர்களுக்கிடையில் நிலவும் மிக அதிக அளவிலான சமூக இயக்கமும், ஐரோப்பிய அமெரிக்கர்களுடன் அவர்கள் கொண்டுள்ள ஏராளமான திருமண உறவுகளும், இன்று அவர்களுக்கிடையே காணப்படும் குறிப்பிடத்தகுந்த எண்ணிக்கையிலான முதலாளிகளும் அவர்களை ஒடுக்கப்பட்ட இனம் என்று சொல்வதைத் தடுக்கின்றன. ஏனென்றால் இவை யாவுமே ஆஃப்ரோ அமெரிக்கர்களின் நிலைக்கு நேர்மாறானதாக உள்ளன. ஒரு வேளை அவர்கள் திரும்பவும் ஒடுக்கப்பட்ட ஒரு இனமாக மாறலாம் அல்லது தென்னாப்பிரிக்காவில் பிற நிறத்தவர் செய்ததுபோல வெள்ளை இன ஆதிக்கத்தை எதிர்த்த கறுப்பர்களின் போராட்டத்தில் அவர்களும் தங்களைக் கறுப்பர்களாக அடையாளம் காணலாம்.



படிப்பகம்

www.padippakam.com

உங்கள் பத்திரிக்கையிலிருந்தும், உங்கள் கருத்துக்களைப் பற்றி சிந்திப்பதி லிருந்தும், வெள்ளை இனத்தை அழிப்பதன் மூலம் சமூக வாழ்வின் பிற துறைகளிலும் தீவிரமான மாற்றங்கள் ஏற்படும் என எனக்குத் தோன்றுகிறது. இனத்துரோகம் என்பது வெள்ளை மேலாதிக்கத்தைமட்டுமின்றி முதலாளித்துவ வர்க்கத்தின் ஆதிக்கத்தையும் சேர்த்து ஒழிக்க அவசியமான ஒன்று இல்லையா?

மக்கள் தாங்கள் வெள்ளையரென்பதை மறந்து, தொழிலாளர்களாக, பெண்களாக அல்லது தங்களுக்கு உவப்பான ஏதோ ஒன்றாகத்தங்களை கருதிக்கொண்டால் அது நல்லதுதான். ஆனால் பிரச்சினை என்னவென்றால் அமெரிக்க சமூகம் இனத்தை மறந்துவிட யாரையும் அனுமதிக்காதது மட்டுமின்றி எந்தவொரு அரசியல் பிரச்சனைக்குள்ளும் இனவாதத்தைப் புகுத்தவும் செய்கிறது.

அதிகாரத்தில் இருப்பவர்களைப் பொறுத்தவரை வெள்ளையர்களுக்குத் தரப்படும் சலுகைகள் இந்த அநீதியான சமூக அமைப்பு நிலைத்திருக்க கொடுக்கப்படும் ஒரு சிறு விலை, அவ்வளவுதான். வெள்ளைத்தனத்தோடு எல்லாவிதமான சமூக அநீதிகளும் ஒழிந்துவிடப் போவதில்லை. வெள்ளை இன ஒற்றுமையைக் குலைப்பதென்பது சமூகத்தின் பிறபகுதிகளில் அடிப்படையான மாற்றங்கள் ஏற்படுவதற்கான வழிகளைத் திறந்து விடுகிறது. வெள்ளையரெனக் கூறிக்கொள்பவர்களைப் பொறுத்தமட்டில் வெள்ளை இனத்துக்குத்துரோகம் செய்வதே மிகப் பெரிய கலகச் செயலாக இருக்குமென்று நான் கருதுகிறேன். □

---

# ஆசியாவில் மனித உரிமைகள் நிலை

□□ **செங்கல்பட்டு அரி** □□

பிறக்கும் மனிதர் ஒவ்வொருவருக்கும், அவர்களிடமிருந்து பிரித்தெடுக்க முடியாத அடிப்படை உரிமைகள் உண்டு என்கின்ற தத்துவார்த்த அடிப்படையில்தான் மனித உரிமைகள் என்பதை நாம் ஆராய்ந்து பார்க்க வேண்டும். மனிதர்கள் எல்லோரும் சமம் என்பது அடைய வேண்டிய இலக்கே தவிர அடைந்துவிட்ட உண்மையல்ல சரித்திரப்பூர்வமாக மனிதனின் தோற்றத்தையும், வளர்ச்சியையும் ஆராய்ந்தால் வலிமையுடையதே எஞ்சும் என்ற கொள்கைதான் ஓங்கி நிற்பதை காண முடிகின்றது. மேதை காரல்மார்க்ஸ் சொன்னதுபோல 'மனித சரித்திரமே வர்க்கங்களின் போராட்ட வரலாறுதான்' என்பது புலனாகிறது.

எனவே சமத்துவ சமுதாயம் என்பது, மனித உரிமைகளை மதிக்கும் சமுதாயமென்பது 'உவப்போடு சிந்திப்போம் புதியதோர் உலகம் செய்வோம்' என்று பாரதிதாசன் கூறியதுபோல நாம் சமைக்க வேண்டிய ஒன்று. அத்தகைய விழுமிய நிலை அடைய தடைக் கற்களாக விளங்கும் தத்துவங்கள் எவை, அமைப்புக்கள் எவை என்பதை நாம் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும். கடவுள் உலகத்தை படைத்தார், மனிதனை படைத்தார், அவரின் பிரதிநிதியாக மன்னர்களையும் படைத்தார் என்று சொல்லுகிறது விவிலியம்.

சாதுர் வர்ண்யம் மயம் ஸ்ருஷ்டம்
குண கர்ம விபாகச

'அவரவர் குணங்களுக்கேற்றபடி நான்கு வருணங்களையும் நான்தான் படைத்தேன்' என்று கீதையில் முழங்குகிறான் கண்ணன். இப்படி வேற்றுமைகளையும், முரண்பாடுகளையும் தனக்குள் அடக்கி வைத்திருக்கும் எந்த மதமும் மனித அடிப்படை உரிமைகளுக்கு எதிரியாகத்தான் இருக்க முடியும். 'சங்கம் சரணம் கச்சாமி' என்று மக்களையெல்லாம் ஒன்றிணைத்த கொள்கைகள் மனித உரிமைகளுக்கு அடிப்படையாகத்தான் விளங்க முடியும். மானுடம் மேலோங்கி நிற்கும் மார்க்கிய தத்துவமும்



படிப்பகம்

www.padippakam.com

அத்தகையதே. தத்துவ அடிப்படையில்லாத மனித உரிமை முழக்கம் 'தகரக் குவளையில் கல் எழுப்பும் ஒலிபோல்' பொருளற்ற ஓசையாய்தான் முடியும்.

இந்திய நாட்டில் மட்டுமல்ல உலகெங்கிலும் குறிப்பாக ஆசிய நாடுகளில் மனித உரிமைகள் பொருளிழந்து வருகின்றன. மனித உரிமை மீறல் என்பது நோய்க்கான அறிகுறியே தவிர அதுவே நோயல்ல. முதலாளித்துவம் ஓங்கி வளர்ந்து ஏகாதிபத்தியமாக மாறி வருகின்ற இக்கால கட்டத்தில், சுரண்டல் சர்வ தேசியமயமாக்கப்படுகின்றது. சுரண்டல் எங்கெங்கெல்லாம் இருக்கின்றதோ அங்கெங்கெல்லாம் மனித உரிமைகளின் குரல்வளை நெரிக்கப்படும்.

தற்போது ஆசியாவில் மனித உரிமைகளின் செயல்பாட்டை அந்தந்த நாட்டின் அரசியல் பின்னணியில் அலசிப் பார்க்கும்போது இந்த உண்மை தெள்ளெனத் தெரியும். ஆசியாக் கண்டமென்பது விரிந்து பரந்த வெவ்வேறு நாடுகளை உள்ளடக்கியது. எனவே ஒவ்வொரு தனிநாட்டின் நிலைமையைப் பற்றியும் விரிவாகப் பேசுதல் இயலாது. மேலெழுந்தவாரியான ஒரு கண்ணோட்டத்தை மட்டுமே நம்மால் கொடுக்க இயலும்.

## இந்தோனேசியா

தற்போது அந்த நாட்டை ஆண்டுகொண்டிருக்கும் அரசு 1962ஆம் ஆண்டு ஜெனரல் சுஹார்ட்டோ தலைமையில் ராணுவப் புரட்சியின் மூலம் ஆட்சிக்கு வந்தது 1966ஆம் ஆண்டின் இறுதிக்குள் ஏறத்தாழ 750,000 இலட்சம் மக்கள் அந்த அரசால் கொடூரமாகக் கொல்லப்பட்டனர். தேசிய பாதுகாப்புக்காக என்று உருவாக்கப்பட்ட (Kopkamtib) கோப்காம்டிப் என்ற அமைப்பு இன்று வரையில் கலைக்கப்படாமல் அரசின் சட்டத்திற்கு மேலான அமைப்பாக செயல்பட்டு போலீஸ், அதிகார வர்க்கம், நாடாளுமன்றம் ஆகிய மூன்றையும் கட்டுப்படுத்தி செயல்பட்டு வருகிறது. எந்த தனிநபரையும் காரணமின்றி சிறை செய்யவும், தனிமனித அந்தரங்கத்துள் தலையிடவும், வெளியீடுகளை (நாடாளுமன்ற வெளியீடு உட்பட) தடை செய்யவும் அதற்கு அளவற்ற அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது.

பஞ்சசீலம் என்பது ஒரு அரசியல் தத்துவமாகு அதற்கு அனைவரும் அடிபணியும் அளவிற்கு உயர்த்தப்பட்டிருக்கிறது. மத அமைப்புக்கள்கூட இதற்கு கீழ்ப்பட்டவைதான். தொழிற் சங்கங்கள்கூட இதன்கீழ் செயல்பட முடியாது. சட்டசபை என்பது சட்டம் இயற்ற முடியாது. சட்டத்தை அங்கீகரிக்க மட்டுமேமுடியும். மூன்றேமூன்று அரசியல் கட்சிகள்தான் அனுமதிக்கப்பட்டிருக்கின்றன. அவைகளும் தேர்தலுக்கு 60 நாள்கள் முன்னர்தான் செயல்பட முடியும். இரண்டு தேர்தலுக்கிடையே, கட்சியின் பெயரால் கூட்டங்கள் நடைபெற முடியாது. மாணவர் சங்கம். தொழிற் சங்கம் உட்பட எந்தவித சங்கமும் செயல்படக் கூடாது. பத்திரிகை சுதந்திரமென்பதே அங்கு கிடையாது. நீதித் துறையும் இந்த இராணுவ அரசுக்கு கட்டுப்பட்டவை.

வல்லரசுகளின் பனிப்போரின் கம்யூனிசத்திற்கு எதிரான அரசு என்பதால், இந்த அரசுக்கு அமைதிக்காக ஆதரவு கொடுத்ததோடு அங்கு நிகழும் மனித உரிமை மீறல்களுக்கு கண்ணை மூடிக் கொண்டிருந்தது. இன்றும் திறக்கவேயில்லை. இதுபோல பல நாடுகளில் அமெரிக்கா கம்யூனிச எதிர்ப்பு என்ற பெயரில் அங்கு நடைபெறும் மனித உரிமை மீறல்களைப் பற்றி வாய் மூடிக் கிடந்தது.

இந்தோனேசியாப் போல் அல்லாமல் சில ஆசிய நாடுகளில் ஜனநாயக ரீதியாக, சர்வாதிகாரத்திற்கு எதிரான போராட்டங்கள் நிகழ்ந்திருக்கின்றன. பங்களாதேஷ், நேபாளம, தென் கொரியா, பாகிஸ்தான, பிலிபபைன்ஸ், தாயலாந்து ஆகய நாடுகளில் வேறுவேறு நிலைகளில இந்த மாறறங்கள் ஏறபட்டிருககின்றன.

## பிலிப்பைன்ஸ

இத்தகைய நாடுகளில் பிலிப்பைன்ஸ் ஒரு முன உதாரணமாக விளங்குகிறது. மாாகோசுக்கு எதிராக 1980இல நடந்த போராட்டம், மக்களின் சக்தியை, அதன சாதனையை உலகிறகு உணர்த்தியது. இருப்பினும சமூக, பொருளாதார மாறறஙகள் ஏறபடாத ஒரு வெறும் ஆட்சி மாறறம மட்டும்ம, பெரிதாக எதையும சாதிததிட முடியாது எனபதற்கு பிலிப்பைன்ஸ ஒரு படிபபினையாகும.

மார்க்கோசுக்குப் பிறகு ஆட்சிக்கு வந்த திருமதி. அக்கினோ, அவருக்குபபின் வநத திரு. ரெமோ இவர்களது ஆட்சியிலும,



படிப்பகம்

www.padippakam.com

மனித உரிமை மீறல் போராட்டம் தொடர்ந்து நடந்துக் கொண்டுதானிருக்கிறது. குறிப்பாக விவசாயிகளை அவர்களது குழந்தைகள், பெண்கள், முதியோர் ஆகியோர்களை, அந்நாட்டுப் பழங்குடியினரை அந்நாட்டு இராணுவம் துப்பாக்கிக் கொண்டு நசுக்கிக் கொண்டிருக்கிறது நிலச் சட்டங்கள் அங்கு சீர்திருத்தப்படவில்லை. மக்களாட்சி என்கிற பெயரில் அங்கு பொருளாதார ரீதியாக மேம்பட்டவர்களின் ஆட்சி தான் நடக்கிறது.

## தாய்லாந்து

தாய்லாந்து நாட்டின் அரசியல், மாறிமாறி எழுந்த இராணுவப் பிரச்சினையே உள்ளடக்கம். தேர்நதெடுக்கப்பட்ட நாடாளுமன்றம் இருந்தால்கூட, இராணுவம்தான் அங்கு பிரதம மந்திரிகளை நியமித்துக் கொண்டிருக்கிறது.

1992ஆம் ஆண்டு பேங்காக் வீதிகளில் நடந்த மக்கள் போராட்டம, இராணுவத்தால் பலம்கொண்டு நசுக்கப்பட்டது எழுபதுகளில் நடந்ததுபடி பரவலான மனித உரிமை மீறல்கள் தற்போது அங்கு நடைபெறவில்லை. இருப்பினும், நகர்ப்புற பணக்காரர்களுக்கும் கிராமப்புற ஏழைகளுக்குமிடையே மிகப் பெரிய வேற்றுமை நிலவுகிறது. அந்நாட்டின் ஏற்றுமதிக் கொள்கையின் காரணமாக, ஏழைகளுக்கு வாழ்வின் வள ஆதாரங்கள் கிட்டாமல் போய்விடுகின்றன. குழந்தைத் தொழிலாளர்கள், பெண்களை பாலியல் தொழிலகளுக்கு கட்டாயப்படுத்துதல், தொழிலாளர் நல உரிமைகள் போன்றவை இன்னும் இங்கே பிரதான உரிமை மீறல்களாக இருந்து கொண்டிருக்கின்றன. அங்கிருக்கும் மனித உரிமை இயக்கங்கள் இப்பிரச்சினைகளுக்கு அரசை பொறுப்பேற்க வைக்க முயற்சிக்கின்றன.

## பங்களாதேஷ், நேபாளம், பாகிஸ்தான்

ஃபிலிப்பைனைப் போலவே இந்த நாடுகளிலும் அதிகாரம் இராணுவத்தின் கையிலிருந்து மக்கள் மன்றத்திற்கு மாற்றப்பட்டிருக்கிறது. நேபாளததில் ஜனநாயகத்தை தக்க வைத்துக் கொள்வதென்பது, வறுமையை ஒழிப்பதில்தான் அடங்கியிருக்கிறது. அதனுடைய இயற்கை வளங்களையும் அதன எல்லைகளையும் கணக்கில் எடுத்துக் கொண்டு பார்க்கும்போது வெளிநாட்டு உதவியில்லாமல் அங்கு வளர்ச்சியைக் கொண்டு வருவதென்பது கடினமான விஷயம். பங்களாதேஷிலும், ஏழ்மைதான் பிரதானப் பிரச்சினை. மதவாத அடிப்படை சக்திகள் அங்கு ஜனநாயகத்திற்கு மற்றொரு எதிரியாக இருந்து பெண்கள், சிறுபான்மையினர் ஆகியோரின் மனித உரிமைகளை அச்சுறுத்துகின்றன.

பாகிஸ்தானும் இராணுவத்தின் பிடியிலிருந்து விலகியிருந்தாலும் இராணுவம், மதவாதம் ஆகியவற்றின் பக்கமே சார்ந்து நிற்கிறது. பாகிஸ்தானின் மனித உரிமைகள் ஆணையத்தின் 1993ஆம் ஆண்டின் அறிக்கையின்படி பாகிஸ்தானின் அரசியலமைப்பு சட்டம், சமூகததை மதச்சார்பின்மையாக ஆக்குதல், சிறுபான்மையினரின் பிரதிநிதித்துவம் ஆகியவற்றிற்கு எதிராக உள்ளது என்று சித்தரிக்கிறது. மேலும் பாமர ஜனங்களின் உரிமைகள் மீறப்படுவதைப் பற்றி அது அலட்சியம் காட்டுகிறது. தேசிய வாழ்வில் பெண்களின் பங்கு மிகமிகக் குறைவாக உள்ளது வேற்றுமைப்படுத்துகின்ற சட்டம் வழக்கம் இவற்றிற்கு இவர்கள் பலியாகியிருக்கிறார்கள்.

## இந்தியா

பல்வேறு சமூக, பொருளாதார, அரசியல் பிரச்சினைகள் இருப்பினும் ஜனநாயக அமைப்பு என்று ஒன்று நிலவும் ஒரே நாடாக இந்தியா திகழ்கிறது. சுதந்திரமான நீதித்துறை பத்திரிகை சுதந்திரம் ஆகியவை இங்கு இருப்பதாக இந்திய அரசு பெருமைப்பட்டுக் கொள்கிறது ஆனால் கடந்த 10 ஆண்டுகளாக லாக்கப் சித்திரவதைகளும், மரணங்களும் சர்வசாதாரண தினசரி நிகழ்ச்சிகளாகிவிட்டிருக்கின்றன. காஷ்மீர், பஞ்சாப், வடகிழக்கு மாகாணங்கள் ஆகிய இடங்களில் ஆயுதந்தாங்கிய போராட்டங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. இந்த இடங்களில் அடிப்படை மனித உரிமைகள் இராணுவத்தால் கீழ்த்தரமாக நசுக்கப்படுகிறது. எதேச்சதிகாரமாக கருப்புச் சட்டங்களில் முதன்மையானதாக 'தடா' திகழ்கிறது. இந்தச் சட்டத்தின் கீழ் ஒருவர் எந்த விதக் குற்றச்சாட்டுமின்றி ஓராண்டுக் காலம் சிறை வைக்கப்படலாம். மேலும் சிறைப்பட்டவரை குற்றவியல் நீதிபதி முன்பு ஆஜர் படுத்தத் தேவையிலலை. மாறாக அதிகார வர்க்கத்தின் கீழ் இடம் பெற்றுள்ள நிர்வாக நீதிபதி ஒருவர் முன்பு ஆஜர்படுத்தினால்



படிப்பகம்

www.padippakam.com

போதும். எல்லா விசாரணைகளும் இரகசிய மாகவே நடைபெறும். குற்றமற்ற தன்மை என்பது இங்கு தலைகீழாகிறது. அதாவது தான் குற்றவாளி இல்லை என்று நிரூபிக்கும் பொறுப்பு குற்றம் சாட்டப்பட்டவரைச் சார்ந்தது. சித்திரவதைக்குள்ளாக்கப்பட்ட போது ஒப்புக் கொண்ட வாக்குமூலத்தையும் இந் நீதிமன்றம் சாட்சியாக ஏற்றுக் கொள் கிறது. விசாரணை முடியும் வரையில் மேல் முறையீடு செய்ய அனுமதிக்கப்படுவதில்லை அப்படி இறுதியில் செய்தாலும், உச்சநீதி மன்றத்தின் முன்னரே செய்ய வேண்டும்.

இதில் கொடுமை என்னவென்றால் மிகச் சாதாரணக் குற்றங்களுக்குகூட ஒருவரை 'தடா' சட்டத்தின் கீழ் கைது செய்கிறார் கள் என்பதே சமீப காலம் வரையில் ஏறத் தாழ 65,0|0 பேர் இச்சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டிருந்தனர். தீவிரவாதம் என்ற பிரச்சினையே இல்லை என்ற மாநிலமான குஜராத்தில்தான் அதிகபட்சமாக 19 000 பேர் இச்சட்டத்தின் கீழ் சிறை வைக்கப்பட் டிருந்தனர். பெரும்பாலும் சிறுபான்மை யினர்கள், அந்தந்த மாநில அரசுகளை எதிர்க்கும் தொழிலாளர்கள்தான் பெரும் பாலும் இச்சட்டத்தின்கீழ் சிறைவைக்கப் பட்டனர்.

உலக வங்கி, சர்வதேச நிதி ஆணையம் ஆகியவற்றின் படைப்பான புதிய பொருளா தாரக் கொள்கையை 40 சதவீதத்திற்கும் மேலானோர் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் இந்திய நாட்டில் செயல்படுத்த முனைந்திருப்பது இவர்கள் வாழ்க்கையை நிச்சயமாக சூறையாடும் திட்டமாகும். இதன்மூலம் ஏற்கெனவே இங்கு நிலவும் சாதி/வர்க்க ரீதியான எதிர்முனைகள் இன்னும் வலுவடையும். அப்படிப்பட்ட நிலை எழும்போது இன்னும் கொடுமையான வக்கிரமான சட்டங்களை இந்த அரசு இயற்றி மக்களை நசுக்க வாய்ப்புள்ளது. அரசியல் சுதந்திரம் பெற்று 40 ஆண்டுகள் தாக்குப் பிடித்த இந்தியா ஜனநாயகம் அடுத்துவரும் பத்தாண்டுகளில் சிதறுண்டு போகுமோ என்று அஞ்ச வேண்டியிருக்கிறது அயோத்தி மசூதி அழிப்பிற்குப் பின்னர் எழுந்த மதக்கலவரம் சிறுபான்மையினரின் எதிர்காலம் ஒரு பெரிய கேள்விக்குறியாய் தெரிகிறது.

### ஸ்ரீலங்கா

1960-களிலும், 70-களிலும், இலங்கை ஒரு நிலைத்த ஜனநாயக அமைப்பையும், மக்கள் நலம் பேணும் அரசையும் கொண்டு விளங் கியது. தங்களுக்கு ஓட்டுக்கள் அதிகமாக கிடைக்க வேண்டிய காரணத்திற்காக, சிங்கள, பௌத்த விவசாயிகளை அந்நாட்டு அரசியல் தலைவர்கள் மிகவும் திருப்திப் படுத்த வேண்டியிருந்தது. அதற்காகவே சிறுபான்மையினராக தமிழர்களை, அரசி யல் ரீதியாக ஓரம்கட்ட ஆரம்பித்தனர் பொதுத்துறை, வேலை வாய்ப்பு, பல்கலைக் கழக கல்வி வாய்ப்பு முதலியவற்றில் இன அடிப்படையில் இடம் ஒதுக்க ஆரம்பித் தனர். இதன் விளைவாக இனக்கலவரம் வெடித்தது 1988 முதல் 1991 வரையில் சுமார் 60,000 பேர் காணாமல் போய்விட் டார்கள். கடந்த பத்து ஆண்டுகளில் பெரும் பாலும் அந்நாடு அவசர நிலையிலேயே இருந்திருக்கிறது. குமார்ரூப சிங்ஹே போன்ற அறிஞர்கள், இலங்கை அரசு மக்கள் நல்வாழ்வு பொருளாதார கொள்கையி லிருந்து, சந்தை போட்டி பொருளாதாரத் திற்கு மாறியதுதான் இத்தகைய இனக்கலவ ரத்திற்கு அடிப்படைக் காரணமாய் அமைந் தது என்று கருதுகின்றனர். தங்கள் இன உரிமைகளுக்காகப் போராடுவதற்காக எழுந்த புலிகளமைப்பே மனித உரிமைகளை மீறுகிறது என்பது வேறு விஷயம்.

### சந்தேகத்திற்குரிய ஜனநாயக நாடுகள்

மலேசியா, சிங்கப்பூர், ஆகிய இரண்டு நாடு களும் தேசப் பாதுகாப்பு என்ற சாக்கில் காரணமின்றி கைது செய்தல், குற்றச் சாட்டுக்களின்றி சிறை வைத்தல் போன்ற உரிமை மீறல்களை செய்து வருகின்றன. பேச்சுரிமை, சங்கம் கூட்டுவதற்கு உரிமை ஆகிய இரண்டையும் மிகவும் நசுக்கி வரு கின்றன இவைகளோடு தென்கொரியா, தாய்வான் இரண்டு நாடுகளுமே மனித உரிமைகளை கட்டுப்படுத்துவதில் முனைப் பாய் இருக்கின்றன எனவே இவற்றை ஜன நாயக நாடுகள் எனக் கொள்வது மிகவும் சிரமம்.

### மற்ற சூழ்நிலைகள்

### மயன்மார் (பர்மா)

இந்நாட்டிலும் மக்கள் அரசு இருந்தது. 1988-ஆம் வருடம் ஆகஸ்டு மாதம் போராளி கள் தெருவில் நின்று பல கூட்டு அரசியலை யும், ஜனநாயகத்தையும் முழங்கினார்கள். எனினும் செப்டம்பர் மாதத்திற்குள்ளாக இராணுவ மந்திரி சா.மௌங் ஆட்சியைக் கைப்பற்றினார். சட்டம் இயற்றுதல், நிர்வ



படிப்பகம்

www.padippakam.com

கித்தல், நீதித்துறை அனைத்து அதிகாரங்களையும் தனக்குள்ளே வைத்துக்கொண்ட ஒரு குழுவை ஏற்படுத்தினார். 1990 மே மாதம் 27-ஆம் தேதி சுமார் 73% வாக்காளர்கள் தேர்தலில் பங்கேற்று தேசிய ஜனநாயகக் குழுவுக்கு ஓட்டளித்து (313/485 இடங்கள்) அவுங் சான் சூ க்யூ அவர்களை நாட்டின் தலைவராக தேர்ந்தெடுத்தார்கள். உடனே இராணுவம் டல்டியடித்து அந்தத் தேர்தல் முடிவை ஏற்றுக் கொள்ளாமல் அவுங் சான் சூ க்யூ அவர்களையும் வீட்டுக்குள்ளேயே சிறை வைத்தது. உயர்ந்தபட்ச வாக்குகளை பெற்ற உயர்ந்த தலைவரை சிறை வைத்த ஒரே நாடு உலகிலேயே பர்மாவாகத்தான் இருக்க முடியும்.

### ஆப்கானிஸ்தான்

சோவியத் யூனியன் இந்த நாட்டை ஆக்கிரமித்திருந்தபோது அதை எதிர்த்துப் போராடிய போராளிகள் குழுக்களுக்கு எக்கச்சக்கமாக ஆயுத சப்ளை செய்தது அமெரிக்கா. இன்று சோவியத் யூனியன் அங்கிருந்து விலகி சோவியத் யூனியனே இல்வாறு போய்விட்ட பிறகுகூட அங்கு சமாதானம் கிட்டவில்லை. போராளிக் குழுக்கள் தங்களுக்குள்ளேயே போராடிக் கொண்டிருக்கின்றன. மனித உரிமைகள செழிக்க சமாதானம் என்கின்ற முன் நிபந்தனை வேண்டும் என்ற உண்மை இதன் மூலம் நிரூபணமாகிறது.

### கம்போடியா

பனிப்போரின் விளைவாக சிதைந்த நாடுகளில் கம்போடியாவும் ஒன்று. ஐ. நா. சபையின் தலையீட்டின் விளைவாக அங்கு தேர்தல் நடந்து மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு ஆட்சி நடத்தி வருகிறது இருப்பினும் அதை ஏற்காத 'க்மேர்ரூஷ்' அமைப்பு சேதம் விளைவித்து வருகிறது. அங்கு நீதிமன்றங்களோ, சட்டங்களோ கிடையாது. அந்த நாட்டில் ஜனநாயகம், நீதித்துறை, சட்டம், ஒழுங்கு இவற்றையெல்லாம் அமைப்பு ரீதியாக கட்டமைக்க வேண்டிய பரிதாப நிலை இன்று இருக்கிறது. அப்படிப்பட்ட அமைப்புகள் தோன்றிய பிறகுதான் அங்கு மனித உரிமைகளைப் பற்றியே பேச முடியும். ஜனநாயக அமைப்புகள் மனித உரிமைகளுக்கு முன் நிபந்தனை என்பதற்கு கம்போடியா ஒரு உதாரணம்.

### சீனா, வியட்நாம், வடகொரியா

இவை மூன்றும் கம்யூனிச ஒரு கட்சி ஆட்சியின் கீழ் அமைந்தவை. வடகொரியாவை பொறுத்தவரையில், மனித உரிமைப் பற்றிய தகவல்களை திரட்டுவதே கடினம் சீனாவில் தினன்மான் சதுக்கத்தில் நடந்த படுகொலைக்குப் பிறகு, அந்நாட்டில் மனித உரிமை என்பது பெரிய கேள்விக் குறியாக இருக்கிறது. சீனா, வியட்நாம் ஆகிய இரண்டு நாடுகளிலுமே மதத்தின் அடிப்படையில் துன்புறுத்துவது இன்றும் நடக்கிறது. சித்திரவதை சட்டத்திற்குப் புறம்பாக சிறை வைத்தல் போன்ற உரிமை மீறல்கள் அவ்வப்போது தெரிய வருகின்றன.

### பொருளாதாரக் கொள்கைகளும், மனித உரிமைகளும்

எல்லா ஆசிய நாடுகளும், தனக்கென தனி பொருளாதாரக் கொள்கையை வகுத்து வந்த சீனா, வியட்நாம், இந்தியா போன்ற நாடுகள் உட்பட உலக வங்கி, சர்வதேச நிதி ஆணையம் ஆகியவை பரிந்துரை செய்துள்ள புதிய பொருளாதாரக் கொள்கையை ஏற்று வழி நடத்துகின்றன. ஹாங்காங், தென் கொரியா, சிங்கப்பூர், தாய்வான் ஆகிய நாடுகள் மனித உரிமைகளைவிட பொருளாதார வளர்ச்சிக்கு முதலிடம் கொடுத்ததால் தான் வெற்றிகரமாக செயல்படுகின்றன என்றொரு வழக்கு உள்ளது. இதைப் பின்பற்றியே மற்ற ஆசிய நாடுகளும் மனித உரிமைகளின் தாழ்ச்சியில்தான் நாட்டின் வளர்ச்சியே இருக்கின்றது என்று வாதிட்டு தவறான வளர்ச்சிக்கு வித்திடுகின்றன.

### ஆசிய அரசாங்கங்களின் மனித உரிமைகள் பற்றிய கண்ணோட்டம்

மனித உரிமைகள் என்பது உலகத்துக்கே பொதுவானதாக இருந்தாலும் அந்தந்த நாடுகளின் சரித்திரக் கலாச்சார, மத அடிப்படையில்தான் அவைகளுக்கு முக்கியத்துவம் கிடைக்கும் என்பது போன்ற கண்ணோட்டம் காணப்படுகிறது அரசியல் ஸ்திரத்தன்மைக்கும், பொருளாதார வளர்ச்சிக்கும் இடையே மனித உரிமைகள் மாட்டிக் கொண்டு அல்லல்படுகின்றன.

மனிதனை மையப்படுத்தியுள்ள மேற்கத்திய கலாச்சாரம் ஆசிய நாடுகளுக்குப் பொருந்தாது. அவற்றின் கலாச்சார அடிப்படையிலான மனித உரிமை மீறல்களும் வளர்ச்சியடிப்படையிலான மீறல்களும் போலியானவை சந்தர்ப்ப வாதத்தை அடிப்படையாகக் கொண்டவை. அவைகளை இனங்கண்டு எதிர்ப்பது நமது கடமை. □



படிப்பகம்

www.padippakam.com

# தாராளமயமாக்கல் ஏழைகளுக்கு உதவாது

**நோம் சாம்ஸ்கி**

1928 இல் ஃபிலடெல்பியாவில் பிறந்த சாம்ஸ்கி Transformational Analysis என்ற தனது முக்கியமான ஆய்வுக்காக பென்சில்வேனியா பல்கலைக்கழகத்தில் 1975 இல் டாக்டர் பட்டம் பெற்றார் அவர் உருவாக்கிய Generative Grammar என்ற ஆய்வுக் கருத்தாக்கம் உலகெங்கும் மொழியியலில் பெரும் தாக்கத்தை உண்டாக்கியுள்ளது. 1976 முதல் கேம்ப்ரிட் ஜில், மஸாஷீட் இன்ஸ்டிட் யூட் ஆஃப் டெக்னாலஜியில் பேராசிரியராகப் பணியாற்றிவரும் சாம்ஸ்கி கணிதவியல், தத்துவம், அரசியல், மனோதத்துவம் எனப் பல்வேறு துறைகளிலும் பங்களிப்பு செய்து வருகிறார். வியட்நாம் யுத்தத்தின்போதும், வளைகுடா போரின்போதும் அமெரிக்காவின் நிலைப்பாட்டை எதிர்த்துக்கடுமையாகப் போராடிய சாம்ஸ்கி, மூன்றாம் உலக நாடுகளுக்கு ஆதரவான குரலைத்தொடர்ந்து எழுப்பி வருகிறார். இந்த நேர்காணல் மாளவிகா பட்டாச்சார்யாவால் எடுக்கப்பட்டதன் தமிழாக்கம் (The Hindu 22-1-96).

*தமிழில் :* **அருணன்**

**கேள்வி :** பொருளாதார தாராள மயமாக்கல், இந்தியாவின் அரசியல் அமைப்பில் எத்தகைய மாறுதல்களை உருவாக்கும்?

**பதில் :** இது ஒரு சுலபமான கேள்வியல்ல. இதிலே, மிகப் பல சிக்கலான அமைப்புகள் சம்பந்தப்பட்டுள்ளன. யாருமே இவைகளை புரிந்து கொள்வதில்லை. மக்கள் மேற்கொள்ளும் பொருளாதார முன் முயற்சிகள் அறியாமையையே அடிப்படை யாகக் கொண்டுள்ளன. பொருளாதார நிபுணர்களும், உலக வங்கியும் காட்டும் வழிகள் உங்களை வீழ்ச்சிகளுக்கே இட்டுச் செல்லும். ஆனால், இந்தியா பற்றி ஒன்றும் தெரியாது அதாவது. இந்தியாவைப் பற்றி விரிவாக ஆராயாமல்- நான் எதுவும் சொல்ல விரும்பவில்லை.

**கேள்வி :** உங்கள் இந்தியப் பயணங்களில் நீங்கள் பார்த்தவைகளிலிருந்து ஏதாவது கணிப்புகளை நீங்கள் சொல்ல முடியுமா?

**பதில் :** கணிப்புகளை நீங்கள் செய்ய முடியாது. ஆனால், வரலாற்று அனுபவங்களிலிருந்து சில யூகங்களை என்னால் செய்ய முடியும். இருப்பினும், வரலாற்று அனுபவத்திலிருந்து ஒரு கேள்விக்கு பதில் சொல்லி விட முடியாது. ஏனெனில், முன்பு இருந்த சூழ்நிலைகள் இப்பொழுது இல்லை ஆனாலும், இம்மாதிரியான வரலாற்று அனுபவங்களுக்கிடையே ஓர் ஒத்த தன்மை காணப்படுவதை உணர முடிகிறது. இந்தியா, தாராளமயமாக்கல் சோதனைகளுக்கு ஆளாவது இது முதல் முறையல்ல 18-ம் நூற்றாண்டிலும், பிரிட்டனின் காலனியாதிக்கத்தின் கீழ் இருந்த காலம் முழுவதும் தாராளமயமாக்கல் சோதனைகளுக்கு இந்தியா ஆட்பட்டுள்ளது அதன் விளைவு என்னவாக இருந்தது என்பது உங்களுக்குத் தெரியும்.

**கேள்வி :** இதைப்பற்றி விரிவாகச் சொல்லுங்களேன்.

**பதில் :** 18-ம் நூற்றாண்டில், இந்தியா ஏறக்குறைய இங்கிலாந்தைப் போலவே தொழிற்துறையிலும், தொழில் நுட்பத்திலும் வளர்ச்சியடைந்திருந்தது இத்தகைய வளர்ச்சிக்கான காரணங்களை யாரும் அறிந்திருக்கவில்லை பிரிட்டன் திட்டமிட்டு அழிக்க வேண்டிய அளவிற்கு இந்தியாவின் வளர்ச்சி இருந்தது ஆடம் ஸ்மித் போன்றவர்கள் இந்தியாவில் பிரிட்டன் நடந்து கொண்ட விதம் குறித்து கடுமையாக கண்டித்துள்ளனர். பிரிட்டனின் நடவடிக்கைகள் மேலும் மோசமடைந்ததன் காரண



படிப்பகம்

www.padippakam.com

மாக இந்தியா தொழில் நுட்ப வளர்ச்சியற்று, ஒரு மிக வறிய விவசாய நாடாக மாறிப்போனது. இதுதான் 300 வருடங்கள் புதிய தாராளமயமாக்கலின் விளைவு இந்தியா இதற்கு ஒரு செவ்வியல் உதாரணம்.

**கேள்வி :** பிரிட்டிஷ் காரர்கள் மட்டும்தான் இப்படி நடந்து கொண்டார்களா?

**பதில்** அமெரிக்காவும் இதையேதான் செய்தது. அதுபோலவேதான் ஃபிரான்ஸும் ஹாலண்டும். ஜப்பான் மட்டுமே புதிய தாராளமயமாக்கல் அனுபவங்களுக்குள்ளாகாமல் வளர்ந்து விட முடிந்தது போருக்குப் பிந்திய, காலனியாதிக்கத்தின்போது நாடுகள் பல்வேறு வழிகளில் சென்றன. ஜப்பான் தனது காலனிகளான கொரியா, தாய்வான், ஃபார்மோசா ஆகியவற்றை வித்தியாசமாக நடத்தியது. ஜப்பானை ஆண்ட கும்பல் படுபயங்கரமானதுதான்; ஆனால், மேற்கலகு தனது காலனிகளை கொள்ளை அடித்தபோது. ஜப்பான் தனக்கு கீழிருந்த நாடுகளை வளர்த்தது.

**கேள்வி :** எமது சமூகத்தின் பல்வேறு தளங்களிலுள்ள குளறுபடிகள், எந்தவொரு சோதனை முயற்சியையும் வீழ்த்தி விடும் இல்லையா?

**பதில் :** ஊழலாலும், லஞ்சத்தாலும் அலைக்கழிக்கப்பட்டுள்ள இந்தியாவால் அப்படிச் செய்யமுடியாது. இங்கே இருக்கும் மக்களுக்கு என்னைவிட அதிகமான விஷயங்கள் தெரிந்திருக்கும், என்பது வெளிப்படை. இந்தியப் பொருளாதாரத்தின் பெரும்பகுதி லஞ்சம், ஊழல், கொள்ளை ஆகியவற்றின அடிப்படையில் அமைந்துள்ள கறுப்பு பொருளாதாரமாகும் இதன்மேல், புதிய—தாராளமயமாக்கல் கொள்கையை திணித்தால், உலகின் பிற பகுதிகளில் நடந்ததைப் போல மோசமான விளைவுகளே ஏற்படும். இத்தகைய சீரமைத்தலுக்கு லத்தீன் அமெரிக்க நாடுகள் முழுவதும் உட்பட்டுள்ளன.

**கேள்வி:** சீரமைப்பின் விளைவுகள் குறித்த உங்களது ஆய்வு முடிவுகள் என்ன?

**பதில் :** பல பொருளாதார நிபுணர்களும், வியாபாரிகளும் இதன் விளைவுகள் மிகவும் வெற்றிகரமானவை எனச் சொல்கிறார்கள், அவர்கள் நிறைய பணம் சம்பாதிக்கிறார்கள். ஆனால், சமூகத்தை நீங்கள் பாருங்கள். அறுபதுகளிலும், எழுபதுகளிலும், எண்பதுகளிலும் பிரேஸில் மிகப் பெரிய பொருளாதார வளர்ச்சியினைக் கண்டுள்ளது. ஆனால் பத்து சதவீதமான பிரேஸில் மக்களே அத்தகைய வளர்ச்சியினை அடைந்துள்ளனர் மற்றவர்கள், மத்திய ஆப்பிரிக்காவில் வாழும் மக்களைப் போலவே வாழ்கின்றனர். பிரேஸில் மக்களில் பெரும்பாலோர் கிழக்கு ஐரோப்பாவை ஒரு சொர்க்கமாக பார்க்கின்றனர். அதுபோல. கிழக்கு ஆசியாவிலுள்ள அமெரிக்க காலனியான பிலிப்பைன்ஸைப் பாருங்கள். அது முழு வீழ்ச்சியடைந்துள்ளது.

**கேள்வி :** இத்தகைய சீரமைப்புகள் தொழில்வள நாடுகளில் எத்தகைய விளைவுகளை ஏற்படுத்தியுள்ளன?

**பதில்:** கடந்த 15. 20 வருடங்களாக அமெரிக்காவும். இங்கிலாந்தும் ஒரு வகையான சீரமைப்பை தங்களுக்குத் தாங்களே திணித்துக் கொண்டுள்ளன. அமெரிக்கா என்ற உலகிலேயே பணக்கார நாட்டைப் பாருங்கள். அதற்கு வேறு எந்த நாட்டுக்கும் இல்லாத அனுகூலங்கள் இருக்கின்றன அமெரிக்கா, விவரிக்கஇயலாத அளவு செல்வமுடையதாக இருக்கிறது. இருப்பினும், மற்றெந்த தொழில்வள நாட்டை விடவும் இருமடங்கு ஏழ்மை அங்கு காணப்படுகிறது. எங்களிடம் அவர்களை விடவும் அதிகமான குழந்தைகளிடம் சத்தின்மையும். முதியவர்களிடம் பசியும் காணப்படுகின்றன. இதனால். மிகச்சிறிய வளமுடைய பகுதி, பெரிய அளவிலான வளமிழந்த மக்கள் பகுதி என இருபெருங் கூறுகளாக அமெரிக்கச் சமூகம் பிரிந்து கிடக்கிறது அங்குள்ள ஏற்றத்தாழ்வு வேறெங்கையும் விட வெகு அதிகமானது. இதுதான் சீரமைப்பு. பல்வேறு பொருளாதார நிபுணர்கள் இது நல்லதென்றே நினைக்கிறார்கள். நோபெல் பரிசினை வென்ற ஒருவர் இது சிறந்தது எனச் சொன்னார். 1980லிருந்து அமெரிக்காவின் பெரும்பான்மை மக்கள் தங்கள் வருமானத்தை இழந்திருக்கிறார்கள் கண்முன்னே இது குறைந்து வந்திருக்கிறது இது ஒரு பணக்கார நாட்டில் நடப்பதென்பது பூதாகரமானது பொருளாதார நலனுக்காக இவர்கள் மேற்கொள்ளும் எந்த முயற்சியுமே அர்த்தமற்றதாக இருக்கிறது.

**கேள்வி :** இந்தியாவிற்கு இந்த வகையில் என்ன காத்திருக்கிறது?



**நிறப்பிரிகை**

படிப்பகம்

www.padippakam.com

**பதில்:** இந்தியாவிற்கு மிக நல்ல வாய்ப்புகள் இருக்கின்றன இத்திட்டங்களை செயல்படுத்தும் மனிதர்கள் எல்லாம் பணக்காரர்களாக ஆகிவிடுவார்கள் இது எப்பொழுதும் நடக்கிறது. மூன்றாம் உலகிலும் சரி, அமெரிக்காவிலும் சரி அவர்கள்தான் சீரமைப்பின் பயன்களைப் பெறுகிறார்கள்.

**கேள்வி:** இத்தகைய பொருளாதார தாராளமயமாக்களினால் என்ன மாறுதல்கள் நிகழக்கூடும் என நீங்கள் கணிக்கிறீர்கள்?

**பதில்:** நாட்டின் வளத்தில் தொழிலாளிகளுக்கான பங்கு குறைந்துவிடும். ஏற்றத்தாழ்வு அதிகரிக்கும். பட்டினி அதிகரிக்கும். சுற்றுச்சூழல் அழிவு அதிகரிக்கும். நல வாழ்வு சீர்குலையும். அப்புறம் உங்களது மக்களில் ஒரு பகுதியினர் மிகப் பெரும் செல்வந்தர்களாகி விடுவர். தொழில் துறையில் முதலீடு செய்பவர்கள் நன்றாக இருப்பார்கள். பணவீக்கம் குறையும் புள்ளி விவரங்கள் பார்ப்பதற்கு நன்றாக இருக்கும். இவையெல்லாம் தாராளமயமாக்கலின் பலன்கள்.

**கேள்வி:** இந்தியாவைப் பொறுத்த வரையில் மிகவும் தீவிரமாக பாதிப்படையக் கூடிய வேறு பகுதி உள்ளதா?

**பதில்:** இந்தியா எப்பொழுதுமே நன்கு வளர்ச்சியடைந்த விவசாய ஆராய்ச்சி திட்டங்களையும், செயல்பாடுகளையும் கொண்டிருக்கிறது. ஆனால், அவை இப்பொழுது அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. பன்னாட்டு நிறுவனங்களால் வாங்கப்படுகின்றன. இந்திய அறிவியலாளர்கள் மிகவும் நல்லவர்கள். அவர்கள் பன்னாட்டு நிறுவனங்களுக்காக உழைப்பதன் மூலம் ஐந்து மடங்கு அதிக ஊதியம் பெறுகின்றனர். இது ஒரு விவசாய நாடு. இதற்கு விவசாய ஆராய்ச்சி தேவை. மருத்துவத் துறையைப் பார்த்தால், இந்தியாவிடம் ஒரு செயலூக்கமுள்ள மருந்து உற்பத்தி தொழிற்துறை இருக்கிறது. இந்தியா மருந்துகளை தானே உற்பத்தி செய்வதால், பாகிஸ்தானை விட இந்தியாவில் மருந்துகள் மலிவாகக் கிடைக்கின்றன. இப்போது இது நிறுத்தப்பட்டாக வேண்டும். புதிய தாராளமயமாக்கல் என்றால் உங்களது மருந்துத் தொழிற்துறையினை நீங்களே அழிக்க வேண்டும். அமெரிக்காவுடனான சுதந்திர வியாபார ஒப்பந்தம் அமுலானவுடன் கனடாவிலும் இது நிகழ்ந்தது. கனடா ஒரு நன்கு வளர்ந்த நாடு. அந்நாட்டில் அமுலில் இருந்த ஒரு திட்டம்மூலம் மருந்துக்கம்பெனிகள் சில அடிப்படை மருந்துகளை உற்பத்தி செய்து வந்தன அவை, வியாபாரப் பெயர் கொண்ட மருந்துகளை விட விலை மலிவானவை இது சுதந்திர வணிகத்திற்கு தடையாக இருப்பதாக அமெரிக்கா சொன்னது.

**கேள்வி:** சமீபத்தில் நடந்து முடிந்த ரஷ்யத் தேர்தலில் கம்யூனிஸ்ட் கட்சி அடைந்த வெற்றிக்குப் பிறகு இடது ஆதரவாளர்கள் உற்சாகத்தில் இருக்கின்றனர். கட்சி மீண்டும் முதன்மையான இடத்தைப் பெற்றுவிடும் என நினைக்கிறார்கள் அவர்கள். உங்களது கருத்துக்கள்?

**பதில்:** இடது என்பது கேலியானதொரு பதம் கம்யூனிஸ்ட் கட்சிகள் இடதுசாரியாக இருப்பதாக நான் கருதவில்லை. எனது பார்வையில், கம்யூனிஸ்ட் கட்சிகள் தீவிர வலதுசாரியாக இருக்கின்றன. போல்ஷ்விக் புரட்சி, வரலாற்றில் சோஷலிஸத்திற்கு கிடைத்த மிகப்பெரும் அடியாகும். எனவே, கம்யூனிஸ்ட் கட்சிகள் மீண்டும் ஆட்சிக்கு வந்தால் அது இடதுக்கான வெற்றியாக இருக்காது. காலம் மாறியவுடன் இவர்கள் சிறப்பானவர்களாக தோன்றுவதாக மக்கள் சொல்லுகிறார்கள். ஆனால், அப்படி நடப்பதாக நான் நினைக்கவில்லை. கடந்த காலம் மாறவில்லை. பிரேஸில், மெக்ஸிகோ அனுபவங்கள் மீண்டும் வருகின்றன. ஆம், நான் சோவியத் அமைப்பை கொடூரமான ஒன்றாகப் பார்க்கிறேன் ஆனால், லத்தீன் அமெரிக்காவிலுள்ள அமெரிக்க அமைப்பு அதைவிட மோசமானதாக இருக்கிறது.



படிப்பகம்

www.padippakam.com

**கேள்வி:** இன்றைய ஒற்றைத்துருவ உலகில், அமெரிக்கா மேலாண்மை செலுத்துகிறது என்ற கருத்து உருவாகி வருகிறது.

**பதில்:** ஒற்றைத்துருவம் என்பதற்கு அதிக அர்த்தமில்லை. ஒன்று மட்டும் நிச்சயம். அமெரிக்கா ஒரு சமூகம் என்ற அளவில் சீரழிந்து வருகிறது. அமெரிக்க பன்னாட்டு நிறுவனங்கள் அதிகாரம் வளர்ந்துவருகிறது. நீங்கள் எந்த அமெரிக்காவைப் பற்றி பேசுகிறீர்கள் என்பதை சொல்ல வேண்டும் ஒரு சமூகம் என்ற அளவில் அமெரிக்கா சீர்குலைந்துள்ளது. ஆனால் அமெரிக்காவை அடிப்படையாகக் கொண்ட உலகளாவிய உற்பத்தி மற்றும் நிதி அமைப்பு சிறப்பாக செயல்படுகிறது. உலகின் முதன்மையான 100 பன்னாட்டு கம்பெனிகளை ஆய்வு செய்ததில் அவை எல்லாமே தங்கள் தங்கள் அரசாங்கங்களின் இடையீட்டுக் கொள்கையினால் குறிப்பிடத்தக்க வகையில் லாபமடைந்துள்ளன என்பது புலனாகிறது. அரசு காப்பாற்றவில்லையெனில் அவற்றில் இருபது நிறுவனங்கள் முற்றிலும் அழிந்து போயிருக்கக்கூடும். அது ஒரு வலிமையான நாடு. முதலாளித்துவ தொழில் உலகை அது தான் நடத்துகிறது. ஆனால் அமெரிக்கா முதலாளித்துவ உலகின் பல்வேறு ஆட்டக்காரர்களில் ஒன்றுதான். தன்னை ஒழுங்காக ஒருங்கமைத்துக் கொள்ளுமானால் ஐரோப்பிய கூட்டமைப்பு மிக வலிமையான சக்தியாகத் திகழக்கூடும். □

---

# தேசியம் ஒரு கற்பிதம் - சில விமர்சனக் குறிப்புரைகள்

**—கோ. கேசவன்**

□ □ □

1990களின் தொடக்கத்தில் நிறப்பிரிகை இதழில் வெளியான சில கட்டுரைகள், அவற்றின் மீதான கூட்டு விவாதம், அந்தக் கட்டுரைகள் தொடர்பான தலைப்புகளில் அயல் தேசத்தார் எழுதிய கட்டுரைகள் ஆகியன தொகுக்கப்பட்டு வந்துள்ளது. இவற்றில் கூட்டு விவாதம், மொழியாக்கக் கட்டுரைகள் ஆகியன தவிர்த்து தேசியம் பற்றிய புதிய புரிதலை முன்வைக்கும் கட்டுரைகளும் தமிழ்த் தேச உருவாக்கம் குறித்த கட்டுரைகளும் இங்கு விவாதிக்கப்படுகின்றன.

தோழர் அ மார்க்சின் மார்க்சியம் — தேசிய இனப் பிரச்சினை; இன்று கவனத்தில் எடுக்க வேண்டிய படிப்பினைகள் என்ற கட்டுரை நூலின் மையமாகவுள்ளது. இது குறித்து முதலில் காண்போம்.

**1. அ: தேசியம் ஒரு கற்பிதம்**

எதார்த்தப் படைப்பாக்கம் என்ற கோட்பாடும் இதன் அடிப்படையில் அமைந்த தேசியம் ஒரு கற்பிதம் என்ற புரிதலும் கட்டுரையின் இன்றியமையாத பகுதிகளாக உள்ளன.

எல்லா எதார்த்தங்களுமே கட்டமைக்கப் படுபவையாகவும் கண்டுபிடிக்கப்படுபவையாகவும் உள்ளன என்பதே நவீன சிந்தனை என அ மார்க்சு குறிப்பிடுகின்றார். எதார்த்தம் என்பது மனிதரின் அகவய விருப்பு வெறுப்புக்கு அப்பாற்பட்ட ஒரு புறநிலை மெய்மை இது நம் அறிவால் அறிந்து கொள்ளப்படுகிறது அவரவர் அறிவுக்குத் தக்கவும் அந்தந்தக் காலத்திய அறிவின் எல்லைக்குத் தக்கவும் எதார்த்தம் பற்றிய புரிதலின் அளவு மாறுபடும். இப்படி அறியப்பட்ட எதார்த்தத்துக்கும் புறநிலை மெய்மை எதார்த்தத்துக்கும் இடையில் வேறுபாடுகள் நிச்சயம் இருக்கும். வேறுபாடுகள் எவ்வளவு இருப்பினும் புறநிலை மெய்மை எதார்த்தத்தின் அடிப்படையிலேயே அறியப்பட்ட எதார்த்தம் — அதாவது எதார்த்தம் பற்றிய அறிவு பெறப்படு



படிப்பகம்

www.padippakam.com

கின்றது. எனவே எதார்த்தம் 'கண்டுபிடிக்கப்படுதலோ கட்டமைக்கப்படுதலோ' இல்லை அறியப்பட்ட எதார்த்தத்தை வைத்து எதார்த்தத்துடன் மீண்டும் வினைபுரிய வேண்டியுள்ளது.

எதார்த்தப் படைப்பாக்கம் என்ற கோட்பாட்டின் அடிப்படையில் தேசியம் ஒரு கற்பிதம் என்ற புரிதல் முன்வைக்கப்படுகிறது. தேசம் ஒரு கற்பிதம் செய்து கொள்ளப்பட்ட ஒரு சமூகம். தேசியப் போராட்டம்தான் தேசத்தை உருவாக்குகிறதே தவிர தேசியப் போராட்டத்தை தேசம் உருவாக்குவது இல்லை; (பக்.42,44) இந்தக் கருத்தின் அடிப்படையில், தேசியப் போராட்டமானது, தேசமரபு, மொழி, பண்பாடு, வரலாறு, இலக்கியப்பாரம்பரியம் என்பனவற்றையெல்லாம் 'கண்டுபிடித்து' தேசியத்தைக் கற்பிதம் செய்து கொள்கிறது (பக்.V) என அ. மார்க்சு குறிப்பிடுகின்றார்

எதார்த்தப் படைப்பாக்கத்தைக் கொண்டு தேசியம் ஒரு கற்பிதம் என அ. மார்க்சு விளக்கும்பொழுது புறநிலை மெய்மைக் கூறுகள் தேசியத்துக்கு அடிப்படையாக இருப்பதை அவர் ஒப்புக் கொள்கிறாரா இல்லையா என்பது தெளிவற்றதாகவே உள்ளது. தேசியம் ஒரு கற்பிதமெனினும் அது புறநிலை மெய்மையின் அடிப்படையிலானதா இல்லையா என்பதே கேள்வியாகும். ஆனால் அ. மார்க்சைப் பொறுத்து எதார்த்தமே கட்டமைக்கப்படும் பொழுது (பக் V) கட்டமைக்கப்பட்ட எதார்த்தத்தின் மீதான கற்பிதமாகவே தேசியத்தை அவர் காண்கிறார். ஆனால் மொழி, பண்பாடு, நிலப்பரப்பு, சமயம், வரலாற்று அனுபவம், பொதுவான பொருளாதாரம் ஆகிய தேசிய அடையாளத்தை உருவாக்கக் கூடிய மூலப் பொருள்கள் புறநிலைக் கூறுகளாக அமைந்து குறிப்பிட்ட சமூகப் பிரிவின் அகநிலை விருப்பத்துக்கு ஏற்ப அமையும் அரசியல் நடவடிக்கைகளின் மூலம் அவை தேசியத்தன்மை பெறுகின்றன (எஸ்.வி. இராசதுரை, இந்து இந்தி இந்தியா). எனவே தேசிய அடையாளங்களை அடிப்படையாகவும் அவற்றின் ஊடாகவும் செய்யப்படும் கற்பிதமாகவே தேசியத்தைக் காணலாம்.

'தூலமான வரலாற்றுப் பின்னணியில் வரையறுக்கப்பட்ட வர்க்கச் சேர்க்கையில் தேசியம் கட்டமைக்கப்படுகிறது' என அ. மார்க்சு குறிப்பிடுகின்றார் (பக்.60). ஆனால் எந்த வரலாற்றுப்பின்னணியில், எந்த வர்க்கச் சேர்க்கையில் இது நிகழ்கிறது என்பவை மிகவும் முக்கியமானவையாகும்.

**1. ஆ. தேசிய இயக்கம்— வளர் முதலாளிய காலத்திய தோற்றம்:**

தேசியத்தின் தோற்றத்தை வளர் முதலாளிய காலகட்டம், பொதுச்சந்தை ஆகியனவற்றோடு இணைத்துப் பேசும் மார்க்சிய அணுகுமுறை இப்போது பொருந்தாது என அ.மார்க்சு குறிப்பிடுகின்றார் (பக்.VI) தேச உருவாக்கம், தேசியம் ஆகியன வரலாற்றுப்பூர்வமான வகையினங்கள்; வளர் முதலாளியக் காலத்தில் தோற்றம் பெறலாகும் வகையினங்கள் என்ற மார்க்சிய வரையறையில் இரண்டாம் அம்சத்தை அ. மார்க்சு மறுக்கிறார். இதற்கு லெனின் கருத்துரையைச் சுட்டிக்காட்டி தேசிய இயக்கம், வளரும் முதலாளிய காலகட்டத்தோடு தொடர்புடையது என்ற கருத்திலிருந்து மார்க்சியத்தை லெனின் விடுதலை செய்தார் எனவும் அ. மார்க்சு குறிப்பிடுகின்றார் (பக். 27). இது குறித்துக் காணலாம்.

1912-இல் மார்க்சியமும் தேசிய இனச் சிக்கலும் என்ற நூலில ஸ்டாலின் முதலாளியம் வளர்ந்து கொண்டிருக்கும் பொழுது நடைபெறும் தேசியப் போராட்டம் முதலாளிகட்கு இடையில் நடைபெறுவதாகும் எனக் குறிப்பிட்டார் இதன்பின் உலகில் ஏற்பட்ட மாற்றங்களினால் அது வரை முதலாளிய சனநாயகப் புரட்சியின் ஒரு பிரிவாக இருந்த தேசிய இனச்சிக்கல் உலகபாட்டாளி வர்க்க சோசலிசப் புரட்சியின் ஒரு பகுதியாகமாறிவிட்டது அதாவது தேசியப் போராட்டம் முதலாளிகட்கு இடையிலானதாக மட்டும் அமையும் என்ற ஸ்டாலினிய வரையறை பொருந்தாததாகி விட்டது.

இதன்பின் லெனின், தேசிய இனச்சிக்கலைப் பொறுத்து மேற்கு அய்ரோப்பிய நாடுகள், கிழக்கு அய்ரோப்பிய நாடுகள், குடியேற்ற மற்றும் அரைக்குடியேற்ற நாடுகள் என மூன்று வகைகளாகப் பிரித்துக் காணகிறார். லெனினின் இந்தக் கருத்துரை, தேசிய இயக்கம் வளர் முதலாளியக் காலகட்டத்துக்கு மட்டுமே உரியது என்ற கருத்திலிருந்து மார்க்சியத்தை விடுதலை செய்தது என அ. மார்க்சு கருதுகின்றார். ஆனால் லெனினின் கருத்துரை, தேசிய இனச் சிக்கல் இதுவரை முதலாளிகட்கு இடையிலான



படிப்பகம்

www.padippakam.com

போராட்டமாக இருந்த நிகழ்வுப்போக்கு மாறியதையே குறிப்பிடுகிறது. லெனின் வகைப்படுத்திய மூன்று வகைப்பாடுகளிலும் தேசிய இயக்கம், தேசியப் போராட்டம் என்பவை அந்தந்த நாட்டின் வளர் முதலாளியத் தன்மைக்கு ஏற்பவே தோன்றின.

**1. இ. ஸ்டாலினின் வரையறையின் இன்றைய பொருத்தம் :**

தேசம், தேசிய இனம் ஆகியன குறித்த ஸ்டாலினிய வரையறையை (1912) லெனின் எங்கும் பயன்படுத்தியதாகத் தெரியவில்லை என்றும் அ. மார்க்ஸ் குறிப்பிடுகின்றார் (பக்.28) தேசிய இனம் குறித்த ஸ்டாலினிய வரையறை இன்று பொருந்தாது எனவும் அவர் குறிப்பிடுகின்றார் (பக்.47).

ஸ்டாலினின் 1912-ஆம் ஆண்டின் வரையறைக்குப்பின் பல மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன என்பது உண்மை. பொதுமொழி, பொதுவான தொடர்ச்சியான நிலப்பரப்பு, பொதுப் பொருளாதாரத் தொடர்பு ஆகியன இல்லாத தேசங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. பல தேசங்களைக்கொண்ட நாடுகள் கூட கட்டியமைக்கப்பட்டுள்ளன. இனக்குழு நிலைமையிலிருந்து தேசிய இனமாக வளர்ச்சி பெற்றுக்கொண்டு வரும் மக்கள் சமூகங்கள் தேசத்தன்னுரிமைப் போரில் இறங்கும் வாய்ப்பையும் வரலாறு நல்கியுள்ளது. ஆனால் பொது மொழி, தொடர்ச்சியான நிலப்பரப்பு, பொதுவான பொருளாதார அமைப்பு, பொதுவான பண்பாட்டு மரபு ஆகியவற்றைக்கொண்டு கட்டப்பட்ட தேசங்கள் இவையல்லாத தேசங்களைவிட உறுதியான அடிப்படையைக் கொண்டு நிலைபெற்றுள்ளன என்பதும் வரலாறு ஆகும். எனவே தேசம் குறித்த ஸ்டாலினிய வரையறையை செழுமைப் படுத்த வேண்டியுள்ளது.

எனினும் தேசிய இனம் குறித்த ஸ்டாலினிய வரையறை இன்றைக்கும் பொருத்தமாகவே உள்ளது. நாகர்களையும் காஷ்மீரிகளையும் கொண்டு ஸ்டாலினிய வரையறையை அ. மார்க்சு மறுக்க முயல்கிறார். நாகாலாந்தில், இனக்குழு நிலையிலிருந்து தேசிய இன சமூகமாக வளர்ச்சி பெற்றுக்கொண்டு வரும் நிலையைக் காணலாம். காச்மீரிலும் பஞ்சாபிலும் அருகருகே இரண்டு தேசிய இனத்தவர்களைக் காண்கிறோம். உலக முதலாளியத்தின் கொடூரச் சுரண்டலானது. வளர்ச்சியடைந்த தேசிய இனங்களை மட்டுமல்லாமல் அதற்கும் கீழ்நிலையில் உள்ள குறை வளர்ச்சி சமூகங்களையும் சுரண்டி முதலாளியக் கட்டமைப்புக்குள் அந்தச் சமூகங்களை ஈர்க்கும் பொழுது அதை எதிர் கொள்ள வேண்டிய அவசியத்தில் தேசத்தின் உருவாக்கம் நிகழும் வாய்ப்பு நேர்ந்து விடுகிறது.

ஸ்டாலினிய வரையறையை லெனின் எங்கும் பயன்படுத்தவில்லை என்று அ. மார்க்சு குறிப்பிடுதல் எவ்வளவு உண்மையோ லெனின் எங்கும் அதை மறுக்கவில்லை என்பதும் அந்த அளவுக்கு உண்மையாகும்.

**1. ஈ. தேசிய இனச் சிக்கலுக்கான தீர்வுகள் குறித்த வகைப்பாடு :**

இதுகுறித்து இந்திய மார்க்சியர்களை மூன்று விதங்களாக அ. மார்க்சு பிரிக்கிறார். தேசியத் தன்னுரிமையை (சுய நிர்ணய உரிமை) மறுக்கும் மைய நீரோட்டப் பொதுவுடைமைக் கட்சிகள், தேசியத் தன்னுரிமையை முன்வைக்கும் மார்க்சியலெனினியக் குழுக்கள், தன்னுரிமை முழக்கத்தை முன்வைத்துத் தமிழ்த்தேசிய இன எழுச்சி சக்திகளுடன் இணைந்து செயல்படும் தமிழ்த தேசப் பொதுவுடைமைக்கட்சி என மூன்று வகைகளைக் குறிப்பிடுகின்றார். இவை பற்றிய விமரிசனக் கருத்துகளை அ. மார்க்சு குறிப்பிட்டு தூலமான ஆய்வை மேற்கொள்ள வேண்டும் என்று கூறி அவர் விலகி விடுகின்றார். தேசிய இனங்களுக்குக் கூடுதல் அதிகாரம், தேசியத் தன்னுரிமை (அதாவது பிரிந்து போகும் உரிமைகள் கூடிய), தேசிய இனங்களின் விடுதலை என்ற மூன்று தீர்வுகளில் அ மார்க்சு எத்தகைய தீர்வைத் தம் புதிய புரிதல்கள் மூலம் முன்வைக்கிறார் என்று நூலில் விளக்கப்பட்டு இருந்தால் பொருத்தமாக இருக்கும். நிலைபாடு எடுத்தல் மிகவும் இன்றியமையாதது ஆகும்.

**1. உ. தேசியப்போராட்டத்தில் எதிரி இலக்குகள்:**

தேசிய இன வரையறைக்குள் தரகுத்தன்மை மிகுந்த பெரு முதலாளிகளையும் இந்துப் பெருமதவாத சக்திகளையும் நீக்கவேண்டும் என அ. மார்க்சு குறிப்பிடுகின்றார். (பக். 61). தேசியப் போராட்டத்தில் இவர்கள் நீக்கப்பட வேண்டிய சக்திகள் மட்டுமல்ல. நமது எதிரி இலக்குகள் ஆவர். இங்கு முதன்மையான விடுபடல், பெரு நிலப்பிரபுத்துவ சக்திகள் ஆவர். தேசியப் போராட்டத்தி



படிப்பகம்

www.padippakam.com

லும் தேச உருவாக்கத்திலும் பெருந் தடைகளாகவுள்ள பெருநிலப் பிரபுத்துவ சக்திகளை எதிரி இலக்காகக் கொள்ளாமல் தேசியப் போராட்டத்தில் ஈடுபடல் இயலாது. இந்துப் பெருமத வாத சக்திகள் என்பதில் இவர்களை அடக்க அ. மார்க்சு கருதினாலும் அவர்கள் அதற்குள் மட்டும் அடங்கி விடுவது இல்லை. பெரு நிலப்பிரபுக்கள் தரகு முதலாளிகட்கு இணையான எதிரி இலக்குகளே.

**1. ஊ. அனைத்து இந்தியத் தேசியம்—இன்னொரு பரிமாணம்:**

இதை ஒரு பரிமாணத்தில் வைத்து அ. மார்க்சு அம்பலப்படுத்துதல் பொருத்தமாகவுள்ளது. இது தரகு முதலாளிகள் மற்றும் இந்துப் பெருமதவாத சக்திகளின் கட்டமைப்பு என்றும் அ. மார்க்சு கணித்தல் பொருத்தமே (பக்.51) இந்தியத் தேசியத்தின் இத்தகைய கட்டமைப்புகளை மறுத்தல் சரியானதெனினும், இந்தியத் தேசியத்தை மறுத்தல் சரியாகாது.

அடிப்படை வர்க்கம்/ சாதிகள் கண்ணோட்டத்தில் தேசியத்தைக் கட்டமைக்கவேண்டும் என்ற அ. மார்க்சின் சரியான முடிவின் அடிப்படையில் தமிழ்த் தேசியம், அனைத்து இந்தியத் தேசியம் ஆகியனவற்றைக் கட்டமைக்க முடியும். தமிழ்த் தேசியக் கட்டமைப்பை பிரிவினைவாதம் என அடையாளமிடும் மைய நீரோட்டப் பொதுவுடைமைக் கட்சிகள், தேசிய இனங்களுக்கு இடையிலான அய்க்கியத்தை வலியுறுத்துகின்றனவே தவிர, அவற்றுக்கு இடையிலான சமத்துவத்தை வலியுறுத்துவதில்லை அத்தகைய சமதத்துவத்தின் மீதே அய்க்கியம் கட்ட இயலும் என்பதைப் புறக்கணித்து தேசிய இனச் சிக்கலுக்குரிய எந்தவொரு தீர்வையும் பயங்கரவாதமாகவும் பிரிவினையாகவும் கண்டறிந்து ஆளும் வர்க்கத்தின் ஆறாவது விரலாக அமைந்துள்ளன

அனைத்து இந்தியத் தேசியக் கட்டமைப்பின் தரகுத் தன்மையை மட்டுமே கொண்டு அதை ஏகாதிபத்தியபொருளாதார வாதம்எனக் கூறும் மார்க்சிய லெனினிய அமைப்புகளும், பல தேசிய இன அரசுகளின் வரலாற்று மெய்ம்மையை மறுக்கின்றன. இது இந்தியத் தேசியத்தின் தொடக்கப் பரிமாணமாக விளங்கிய தரகுத் தன்மையை முற்றான பரிமாணமாக எல்லா நிலைகளிலும் காண்கிறது.

இந்தியப் பிரதேசத்தின் பல்வேறு பகுதிகளில் வாழும் பாட்டாளி வர்க்கம், விவசாயிகள், தாழ்த்தப்பட்டோர், பிற்பட்டோர் ஆகியோரின் நலன்களின் அடிப்படையில் இந்தியத் தேசியத்தைக் கற்பிதம் செய்யவும் அதற்கான இந்தியக் கூட்டரசுக்கான போராட்டத்தில் ஈடுபடுதலுக்கும் உரிய புற நிலை நியாயங்கள் இன்றளவும் அரசியல் ரீதியில் காலாவதியாகிப் போகவில்லை.

அடிப்படை வர்க்க/ சாதிகளின் நிலைபாட்டில், பிரிந்து போகும் உரிமையுடன் கூடிய தேசியத் தன்னுரிமைக்கான போராட்டத்தை நடத்தும் பொழுதே எல்லாத் தேசிய இனங்கட்கும் சனநாயகத்தையும் சமத்துவத்தையும் வழங்கக்கூடிய அனைத்து இநதியத் தேசியத்தைக் கட்டமைக்கும் அரசியல் பணியை இன்றைய வரலாறு புறக்கணிக்க வில்லை தாழ்த்தப்பட்டோரின் தற்காப்புக்காக இந்திய அளவில் செயல்படும் முயற்சிகளும், மண்டல் குழுவின் பரிந்துரை அமுலாக்க முயற்சிகளும் காட் எதிர்ப்புப் போராட்டங்களும் தேசிய இன எல்லைகளையும் தாண்டி உள்ளன என்பது இங்கு கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டியவை ஆகும்.

**1. எ கணக்கில் எடுக்க வேண்டிய மார்க்சிய—லெனினிய பங்களிப்புகள் :**

கட்டுரையின் தலைப்பு மார்க்சியம்—தேசிய இனப் பிரச்சினை என மார்க்சியத்தையும் தேசிய இனச்சிக்கல் என இரண்டையும் இணைத்து இருப்பதால், தேசிய இனச்சிக்கல் குறிதது இதுவரை மார்க்சிய லெனினியம் எடுத்த நிலைபாடுகளைக் கருத்திற்கொள்ளலும் கருத்துரைத்தலும் மிகவும் இன்றியமையாதது ஆகும். கட்டுரை அவ்வாறு இல்லை. கணக்கில் கொள்ள வேண்டிய பங்களிப்புகள் பின் வருமாறு :

1. தேசிய இனச்சிக்கல், முற்றாகவும் முழுமையாகவும் அரசியல் சனநாயகம் என்ற களத்தைச சார்ந்திருத்தல்.

2. 1920களில் உலகளாவிய மாற்றங்கட்குப் பின் தேசிய இனச்சிக்கல் உலக சோசலிசப் புரட்சியின் ஒரு பகுதியாக மாறுதல்.

3. பல தேசிய இன நாடுகளில், பிரிந்து போகும் உரிமையுடன் கூடிய தேசியத் தன்னுரிமை முழக்கததை முன் வைததல்.



படிப்பகம்

www.padippakam.com

4. குடியேற்ற/அரைக்குடியேற்ற நாடுகளில் தேசிய இனச் சிக்கலின் சாராம்சம் விவசாய சிக்கல் என்ற கொள்கையை முன் வைத்தல்.

5. பல தேசிய இன நாட்டுக் கட்டமைப்பில் ஒரு தேசிய இனம் பிரிந்து போகும் உரிமையைப் பயன்படுத்தும் தருணம் குறித்து பாட்டாளி வர்க்கக் கட்சி சுயேச்சையாக மதிப்பிடல்.

இந்தியா போன்ற பல தேசிய இன அரைக் குடியேற்ற நாடுகளில் தேசிய இனச்சிக்கலுக் குரிய தீர்வுகளைக் கண்டடைவதில் சில பொதுத்தன்மை கொண்ட வழிகாட்டும் நெறிமுறைகளை இவை வழங்குகின்றன. புதிய புரிதல்களை முன் வைக்கும் பொழுது அ மார்க்சு இத்தகைய பழைய புரிதல்களின் அடிப்படையிலான தீர்வுகளை முற்றாகக் கணக்கிலெடுத்தல் அவசியம் ஆகும்.

**1. ஏ தேசியமும் பாசிசமும் :**

தேசிய விடுதலைக்குப் பிந்தைய சமூகங்கள் பாசிச அமைப்பாய் மாறியுள்ளன என்றும் அதிகாரம் எப்படியாவது கிடைத்தால் போதுமானது என்ற எண்ணம் தவறானது என்றும் அ மார்க்சு குறிப்பிடும் எச்சரிக்கை மிகச் சரியானதாகும் தேச விடுதலையின் சாராம்சமே சனநாயகமும் சமத்துவமும் ஆகும். இவற்றை இழந்துவிட்டு தேச விடுதலை சாத்தியமே இல்லை. அதிகாரத் தைக் கைப்பற்றுதலுக்கான போராட்டக் காலத்திலேயே அதிகாரப் பரவலுக்கான நடைமுறைகளும் தேவைப்படுகின்றன. இது குறித்து மாற்று நடவடிக்கைகள் குறித்து இன்னமும் போதுமான விளக்கங்கள் இல்லை எனினும் இங்கு **மக்கள் திரளிட மிருந்து கட்சிக்கு** என்பதையும் **சனநாயக மத்தியத்துவம்** என்பதையும் பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டு இவற்றைக் குறிப்பிட்ட மார்க்சிய இயக்கம் எப்படி வழி விலகியது என்பதை நேர்மையுடன் விமர்சனத்துக்கு உட்படுத்தலாம். அதிகாரப் பரவலும் ஒரு போராட்டத்தில் மட்டுமே சாத்தியம் ஆகும்.

**1. ஐ. மார்க்சிய லெனினியர்களின் தனிமைப்படல்:**

அடிப்படை வர்க்கம் / சாதியக் கண் ணோட்டத்தில் தேசியத்தைக் கட்டமைக்க வேண்டிய தேவையுள்ளது என்ற அ. மார்க் சின் நிலைபாடு ஏற்கத்தக்கது. இதைப் புதிய புரிதல் எதுவுமின்றி மார்க்சிய லெனி னியத்தின் மூலமே கண்டறிய இயலும். ஆனால் சிக்கல் என்னவெனில், பாட்டாளி வர்க்கக் கருத்துருவத்துக்குள் தேசிய இன சனநாயகக் கருத்துருவத்தை எவ்வாறு இணைக்க இயலாமற் போய்க் கொண்டு இருக்கிறது என்பதாகும். தேசிய இன விடு தலையை ஆதரிக்காததாலோ தேசிய இன உணர்வு சக்திளைப் பிரித்து ஒதுக்குவதாலோ மார்க்சிய லெனினியர்கள் தனிமைப்பட்டுள் ளனர் என அ மார்க்சு கருதுகின்றார். மார்க்சிய லெனினிய அமைப்புகளின் தனி மைப்படலுக்கு இதைக் காரணமாக்க இய லாது இப்போது தேசிய இன விடுதலையை முன்வைக்கும் அமைப்புகள், ஒரு தேசிய இனத்துக்கு ஓர் அரசு என்பதை முன்வைத்து ஒரு தேசிய இன வரையறைக்குள் மட்டுமே இயங்கும் அமைப்புகள் என்றெல்லாம் மார்க் சிய லெனினியத்துக்குள் வந்துவிட்டன. எல் லாக் குழுக்களையும்போலவே இவையும் குன் றிய வளர்நிலையுடன் உள்ளன என்பதே அரசியல் யதார்த்தம் மா-லெ. அமைப்பு களின் தனிமைப் படலையும் பின்னடைவு களையும் உணர்வதோடு அவற்றுக்கான உரிய காரணங்களைக்கண்டடையவேண்டும்.

**2.** அடுத்து இந்நூல் தமிழ்த் தேசிய உருவாக்கம்: கவனத்தில் கொள்ள வேண்டிய ஒரு பிரச்சனை என்ற பொதுத் தலைப்பில் அ. மார்க்சும் இராஜ் கௌதமனும் எழுதிய இரு கட்டுரைகள் உள்ளன. இவற்றைக் காணலாம்

**2 அ. யார் தமிழர்? எத்தகைய விடுதலை?**

தமிழ் மக்களின் விடுதலை என்பது உயர் ஆதிக்க சக்திகளுக்கான அரசை உருவாக்குவ தாக இல்லாமல் அடித்தட்டு மக்களின் விடுதலையாக அமைவதற்கும் பாசிசக் கூறு களைத் தவிர்ப்பதற்கும் இந்த இரண்டு கேள்விகட்கும் சரியான பதிலைப் பெற்றாக வேண்டும் என அ. மார்க்சு குறிப்பிடுதலை முழு அளவில் ஏற்றுக்கொள்ள வேண்டும். கேள்விகள், காலப் பொருத்தம் உடையவை ஆனால் விடுதலையை நோக்கிய செயறபாடு களில் இதற்குரிய விவாதங்கள் மேற்கொள் ளப்படவேண்டும் என்ற அ மார்க்சின் நிலை பாடு பொருத்தமாக இல்லை. ஒரு விடு தலைப் போராட்டத்தில் நமது சக்திகள், நட்பு சக்திகள், எதிரி இலக்குகள், எத்தகைய இலக்கு என்பவை திச்சயிக்கப் பெறறி



படிப்பகம்

www.padippakam.com

ருக்க வேண்டும். அந்த விதத்தில் இந்தக் கேள்விகட்கான பதில்களும் நமக்குத் தேவை.

இக்கட்டுரையில் யார் தமிழர் என்பது குறித்து இதுவரை நடந்த விவாதங்களைத் தொகுத்துரைக்கும் அ. மார்க்சு தம்கருத்தைக் கூறாமல் மௌனம் சாதிக்கிறார். ஆனால் இராஜ்கௌதமன் தன் கட்டுரையில் ஆந்திர வேளாளர்களைத் தமிழர்கள் என ஒப்புக் கொண்டுள்ளார் (பக் 160). இது குறித்த விவாதங்கள் தேவைப்படுகின்றன.

**2 ஆ தமிழ்த் தேசிய உணர்வின் தோற்றம்**

அ மார்க்சின் கட்டுரையின் இந்தப் பகுதி குறிப்பிடத்தக்கது ஆகும். பார்ப்பனர்-வேளாளர் இணைவுக் கருத்துருவம், பார்ப்பனர் எதிர்ப்பு வேளாளர் கருத்துருவம் என்பன பற்றியும் தமிழ் மீட்புவாதம் சைவ சித்தாந்தம் ஆகியன இவற்றுக்குப் பயன்பட்டமை பற்றியும் உள்ள பகுதிகள் பயனுடையவையாக உள்ளன இவற்றை எதிர்த்து தாழ்த்தப்பட்டோரின் எதிர்வினையில் உள்ள சாதக பாதக அம்சங்களைப் பற்றிய அவரது மதிப்பீடுகள் வரலாற்று நேர்மையோடு உள்ளன. (பக். 150—152).

**2 இ. வரலாற்றுவாத மறுப்பு:**

இராஜ்கௌதமன் கட்டுரை தமிழ்நாட்டின் வரலாற்றில் பார்ப்பனரும் வேளாளரும் அதிகாரத்திலும் அறிவுத்துறையிலும் பங்கு பெற்ற விதத்தை விரிவாக விளக்குகிறது. இவற்றை இன்றைய தமிழ்த் தேச உருவாக்கத்தில் அடிப்படை சக்திகளின் கண்ணோட்டத்தில் மறு விளக்கம் கொடுத்தல் சரியான அரசியல் ஆகும். ஆனால் இதைக் கவனமாகவும் கையாள வேண்டியுள்ளது. பழமைக்கு விளக்கம் கொடுக்கும்பொழுது இரண்டைக் கவனம் கொள்தல் நலம்.

1. பண்டைய கால சமூக முரண்பாடுகளில் ஓர் அம்சம் அந்தக் காலத்திய சமூகத்தை முன்னெடுத்துச் செல்வதில் என்ன பங்கு வகித்தது என்பதையும் அது முற்போக்கா பிற்போக்கா என்பதையும் அந்தக் கால வரலாற்றுச் சூழலில் முடிவு எடுத்தல்.

2) ஒரு குறிப்பிட்ட காலத்தில் முற்போக்கு / பிற்போக்குப் பங்கை ஆற்றியிருப்பினும் இன்றைய கால வரலாற்றில் உள்ள சமூக முரணபாடுகளில் வரலாற்றை முன்னெடுத்துச் செல்வதில் அதற்குரிய பங்கை மதிப்பிடல்.

நாம் அடிப்படை வர்க்க/சாதி அணுகுமுறையைக் கையாள்வதோடு வரலாற்று வாதத்துக்கும் உட்பட வேண்டியுள்ளது

தமிழ் நாட்டு வரலாற்றில் பார்ப்பனர்/வேளாளரின் பங்களிப்புகளை முற்றாக எதிர்மறையாகக் காணும் அம்சமே உள்ளார்ந்து இராஜ்கௌதமன் கட்டுரையில் இயங்குவதாகத் தெரிகிறது. இன்றைய தமிழ்த்தேசியக் கட்டமைப்பின் உயர் சாதிய நோக்கைக் கடுமையாக எதிர்க்க வேண்டியுள்ளது உண்மை எனினும் தமிழர் சமூக வரலாற்றில் பார்ப்பனர்— வேளாளர் ஆகியோரின் எல்லாச் செயல்களையும் கால/களத்தன்மை எதையும் கருத்திற்கொள்ளாமல் நிராகரிக்க இயலாது பார்ப்பனர்—வேளாளர் ஆகியோரின் இணைவு, எதிர்வு ஆகியனவற்றின் ஊடாகவும் தமிழர் சமூக வரலாறு முன்னேறி உள்ளது என்பதே உண்மையாகும்.

நம் கண்ணோட்டம் அடிப்படை வர்க்க/சாதிகளின் நலக் கண்ணோட்டம் என்ற விதத்தில் அது எல்லா சாதிகளைச் சேர்ந்த அடிப்படை வர்க்கங்களின் கண்ணோட்டமாகவும் அமையவேண்டியுள்ளது. இந்த விதத்தில் தேசிய இனச் சிக்கல் என்பது சனநாயகத் தன்மைகொண்டதால் எல்லா சாதிகளையும் திரட்டுதலுக்கு உகந்த அரசியல் செயல்பாடுகள் தேவை

3. தேசிய இனச்சிக்கல் குறித்த கோட்பாடு, தமிழ்த் தேசிய உருவாக்கத்தில் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படவேண்டிய பிரச்சினைகள் ஆகிய பெருந்தலைப்புகளில் உள்ள மேற்குறித்த கட்டுரைகள் இன்றைய சூழலில் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவேண்டியவை. மார்க்சியம் எதிர்கொள்ள வேண்டிய பல கோட்பாட்டுச் சிக்கல்களையும் நடைமுறை அனுபவங்களின் மீதான படிப்பினைகளையும் மீளாய்வு செய்யவேண்டிய தருணத்தில், சாதி, வர்க்கம், தேசிய இனம் ஆகியவற்றுக்குஇடையிலான உறவுநிலையை இதைத் தொடக்கமாகக் கொண்டு விவாதிக்கலாம். அருவருக்கத்தக்க மௌனங்களைவிட அதிர்வூட்டக்கூடிய உரத்த குரல்கள் மேலானவை ஆனால் புதிய புரிதல்களுக்கு வரும்பொழுது பழைய புரிதல்களை அறிவியல் பூர்வமாகக் கணக்கெடுத்தல் தேவை.

(19-3-95 அன்று திருத்துறைப்பூண்டியில் 'கிழக்கு' இதழின் சார்பில் நடந்த கூட்டத்தில்படித்த கட்டுரையின் சுருக்கம் ஆகும்).



படிப்பகம்

www.padippakam.com

நூல் விமர்சனம்:

# மந்திர மார்க்சியக் குகைகள் வர்க்க வாள் பட்டாக்கத்தி பைரவன்

## கோ. கேசவனின் "சமூக விடுதலையும் தாழ்த்தப்பட்டோரும்"

—வளர்மதி

எந்தச் சிமிழுக்குள்ளும் அடங்கிவிட மாட்டேன் என்று அறிவித்துக் கொள்கிற ரகமில்லை. திரு. கேசவன் என்பது ஊரறிந்த விஷயம். ஆனால் அவரது இந்த நூல் எந்த 'இயலு'க்குள்ளும் அடங்க மறுக்கிறது. அத்தோடு, சம்பந்தா சம்பந்தமில்லாத இந்த ஏழு கட்டுரைகளையும் சேர்த்து வைத்து படிப்பது எப்படி என்பதும் பிடிபடவில்லை. ஆனால், மரபான மார்க்சிய வட்டாரங்களில் தாழ்த்தப்பட்டோர் விடுதலை பற்றிய கேள்வியை, பொதுவில் சாதிச் சிக்கலை கறாரான மார்க்சியப் பார்வையில் அணுகியிருப்பதாக அங்கீகாரம் பெற்றிருக்கிறது நூல்.

தாழ்த்தப்பட்டோர் விடுதலைக்கு வழி என்ன? வர்க்கப் போராட்டமா சாதியப் போராட்டமா? என்று கேள்வி எழுப்பி ஒற்றை வரியில் தீர்க்கமான பதிலைக் கேட்பவர்களுக்கு 'நடுநிலையான' பதில் சொல்லப்பட்டிருப்பதாக புரட்சிகர வட்டாரங்களில் கிசுகிசு. மன்னிக்க, உரத்த குரலில் பேசிக் கொள்கிறார்கள்.

தாழ்த்தப்பட்டோரின் சாதிய / வர்க்க சிக்கல்களை மட்டுமல்லாமல் எல்லா சாதிகளிலும் உள்ள ஒடுக்கப்பட்டோரின் வர்க்க சிக்கல்களையும் கணக்கில் எடுத்துக்கொள்ளும் அரசியலும் நடைமுறையும தேவை (பக்-264) என்ற தீர்ப்பைப் படிக்கும்போது இடது, வலது திரிபுகளை உதறிவிட்ட நடுநிலையான (Centrist) மார்க்சிய நிலைப்பாடு என்பதாகச் சொல்லத் தோன்றும்.

ஆனால் பழக்கப்பட்ட கண்களுக்கு இதில் புதிதாக எதுவும் இல்லை என்பது மேலோட்டமான முதல் பார்வையிலேயே தெரிந்து விடுகிறது. மரபான மார்க்சிய வட்டாரங்களில் பலகாலமாக பல்வேறு விதங்களில் பேசப்பட்டு வந்திருக்கிற விஷயங்களை நிறைய தகவல்களைத் திரட்டி ஆதாரங்களோடு ஆணித்தரமாக தலையில் அடிக்கிறார் (ஐயோ!) என்று வேண்டுமானால் சொல்லலாம்.

அப்புறம் இதில் மார்க்சியம் கொஞ்சங்கூட இல்லை என்றும் துணிந்து சொல்லலாம் தற்போது பரவலாக விமர்சிக்கப்படுகிற "பொருளாதார" சகதியில் நூல் முழுக்க முழுக்க சிக்கிச் சீரழிந்திருக்கிறது என்று முத்திரையும் (கேசவனுடைய பாணியில்) குத்தலாம்.

ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை, அவதூறுகளை அள்ளி வீசுவதாக யாரும் சொல்லிவிடக்கூடாது என்பதற்காக என் தரப்பு நியாயங்களை கொஞ்சம் விரித்துச் சொல்ல வேண்டிய கட்டப்பாடு உடையவனாகிறேன். இதன் பொருட்டு என் விருப்பத்தையும் மீறி மேற்கோள்கள் காட்டவேண்டிய நிர்ப்பந்தம். மேற்கோள் மார்க்சியத்தையும் எல்லாவிதமான மேற்கோள்களையும் எதிர்ப்பவர்கள் மன்னிக்க.

I

நூல் முழுக்கவும் வர்க்கம், வர்க்க உணர்வு, வாக்கப் போராட்டம் இவற்றுக்கு தரப்பட்டிருக்கும் அழுத்தம் படிப்பவர்களை புரட்சிகர உணர்வில புல்லரிக்கச் செய்துவிடுகிறது. அரிப்பு அடங்கி கொஞ்சம் நிதானத்



படிப்பகம்

www.padippakam.com

துக்கு வருபவர்களுக்கு இவை வெற்றுச் சொற்களாக உதிர்ந்து கிடப்பது ஒருவேளை புலப்படக்கூடும் காணக் கிடைக்காதவர் களின் பொருட்டு சிரமம் எடுத்து கிடைக்கச் செய்வது கடமையாகிவிடுகிறது.

வர்க்கப் போராட்டம் என்ற கருத்தாக்கம் மார்க்சியத்தின் அடிப்படையான கருத்தாக்கங்களில் ஒன்று என்பதால் அதிலிருந்தே தொடங்குவோம்.

மார்க்சைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு அரசியல் போராட்டமும் வர்க்கப் போராட்டமே. இதை லெனின் இன்னும் கொஞ்சம் விரிவாகவே விளக்குகிறார். "வெறுமனே அரசியலைத் தழுவியதாக இருக்கிறது என்பதனால் அல்ல. மாறாக அரசியலின் மிகவும் குறிப்பிடத்தகுந்த அம்சத்தை —அரசு அதிகாரத்தைக் கைப்பற்றுவதை நோக்கியதாக இருப்பதால் மட்டுமே ஒரு வர்க்கப் போராட்டத்தை முழு வளர்ச்சி பெற்றதாக "தேசம் தழுவியதாக" மார்க்சியம் அங்கீகரிக்கிறது"* என்கிறார்.

வர்க்கப் போராட்டத்தின் இலக்கணத்தை கேசவன் நூலில் எங்கும் விவாதிக்கவில்லை என்றாலும்கூட, மேலே உள்ள பொருளில் அதை ஒரு இடத்தில்கூட பயன்படுத்தவில்லை என்று தைரியமாகச் சொல்லலாம்.

இதற்குப் பதிலாக நூலில் வர்க்கச் சிக்கல்கள் × சாதியச் சிக்கல்கள் என்பதான ஒரு முரணை நிறுவியிருக்கிறார். இணையாக, பொருளாதார சமத்துவம் × சாதி சமத்துவம், பொருளாதாரப் போராட்டங்கள் × பண்பாட்டுப் போராட்டங்கள் என்ற முரண்களும் வருகின்றன. ஆக, **வர்க்கப் போராட்டங்கள் = பொருளாதாரப் போராட்டங்கள்**, சாதியப் போராட்டங்கள் = பண்பாட்டுப் போராட்டங்கள் என்பதாகவே கேசவன் பொருள்படுத்தி இருக்கிறார் என்பதை விளங்கிக் கொள்ள அதீத அறிவு உயிரியாக இருக்கவேண்டும் என்று கட்டாயமில்லை.

அடுத்ததாக வர்க்கம். பக்கம் 30-31இல் வர்க்கம் பற்றிய வரையறையை தந்திருக்கிறார். இந்த வரையறுப்பில் வர்க்கம் ஒரு பொருளாதார வகையினமாக கிடக்கிறது. ஆனால் மார்க்சின் கருத்தில் வர்க்கங்கள் பொருளாதார உறவுகளுடன் கூடவே

* லெனின் தொகுப்பு நூல்கள், தொகுதி 9, பக்: 121-22

வரலாற்று ரீதியிலான பண்பாட்டு, அரசியல் அதிகார உறவுகளில், உற்பத்தி உறவுகளில் தோன்றுபவை.

ஆனால் கேசவன் வர்க்கத்தை பொருளாதார வகையினமாக, வர்க்கப் போராட்டத்தை பொருளாதாரப் போராட்டமாக அர்த்தப்படுத்திக் கொண்டு இருக்கிறார். இதிலிருந்து தொடங்கி தொழிலாளர்களும் தலித்துகளும் பிற விவசாய வர்க்கங்களும் (பகுதி ஆதிக்க பிற்படுத்தப்பட்ட சாதியினர்?) 'வர்க்க' உணர்வு பெறவும், 'வர்க்கமாகத்' திரளவும் தடையாக இருப்பது என்னவென்று தேடுகிறார். சாதிய 'பண்பாட்டு' மதிப்புகள் என்று கண்டுபிடிக்கிறார். இந்தச் சாதிய பண்பாட்டு மதிப்புகள் நிலவுடைமை உற்பத்தி முறையின் விளைவாகத்தோன்றியவை. ஆனால் முதலாளிய முறையிலான மாற்றங்களுக்குப் பிறகு, அவை சாதிகளில் உள்ள தனிப்பட்ட நபர்களைப் பாதித்து எல்லா சாதிகளிலும் தாழ்த்தப்பட்டவர்களுக்கு ஊடாகவும் கூட வர்க்கங்களை தோற்றுவித்துவிட்டதாக சொல்கிறார்.

ஆகக் கடைசியாக வர்க்கப் போராட்டத்தை 'அடிப்படையானதாகவும் சாராம்சமானதாகவும்' வைத்துக் கொண்டு சாதிய பண்பாட்டு மதிப்புகளுக்கு எதிரான போராட்டங்களைச் சேர்த்து நடத்தினால் போதும் என்றாகிறது.

சாதியம் நமக்கு மட்டுமே வாய்த்துவிட்ட தொல்லை என்பதால் இப்படி எல்லாம் காரணம் காட்டி தப்பித்துக் கொள்வது எளிதாகி விடுகிறது. கேசவன் சொல்கிறபடிக்குச் சாதியம் வர்க்க ஒற்றுமைக்குத் தடையாக இருக்கும் நிலப்பிரபுத்துவ பண்பாட்டு மதிப்பு என்பதாகவே இருக்கட்டும். உடனே அடுத்த கேள்வி எழுகிறது. சாதிய பண்பாட்டு மதிப்புகளை நிலப்பிரபுத்துவ பண்பாட்டின் ஒரு குறிப்பான வடிவம் மட்டுமே என்பதாக ஒப்புக்கொண்டால் ஐரோப்பிய நாடுகளில் தொழிலாளி வர்க்கங்கள் நிலப்பிரபுத்துவ பண்பாட்டு மதிப்புகளை மீறி ஒரு வர்க்கமாகத் திரளவும் வர்க்க உணர்வு பெறவும் முடிந்தபோது இங்கு மட்டும் அப்படி முடியாமல் போனது ஏன்?



படிப்பகம்

www.padippakam.com

இதற்கான பதில் இந்த பாட்டாளி வர்க்கங்கள் எதிர்கொண்ட முதலாளிய உற்பத்தி முறையில், **உற்பத்தி உறவுகளில்** கிடைக்கிறது *

முதலாளிய உற்பத்தி முறையை மற்ற உற்பத்தி முறைகளில் இருந்து பிரித்துக் காட்டுவது அதில் மனித உழைப்பு—உழைப்புச் சக்தி ஒரு பண்டமாக இருக்கும் பண்புதான் என்பது இன்று 'பொது அறிவா'கிவிட்ட ஒன்று இங்கு கவனத்தில் கொண்டு வரப்பட வேண்டியது. மார்க்சின் கருத்தில் உழைப்பு சக்தி பண்டமாக மாறுவதற்கு அதன் சொந்தக்காரனான உழைப்பாளி சுதந்திரமான தொழிலாளியாக இருக்க வேண்டும் என்பதே இதை அவர் முன் நிபந்தனையாகவே வைக்கிறார் இந்த சுதந்திரமான தொழிலாளி ''சட்டத்தின் முன் அனைவரும் சமம்'', ''சம (சட்ட) உரிமைகள்'', ''சட்ட ஒப்பந்த உறவு'' (Legal Contract), ''குடிமகன்'' என்ற கருத்தாக்கம், ''தனி மனிதவாதம்' போன்ற முதலாளிய பண்பாட்டு மதிப்புகளில் வார்த்தெடுக்கப்பட்டவன் என்பதை மனதில் வைத்தே பேசுகிறார் *1

சொல்லப்போனால் இந்த முதலாளிய பண்பாட்டு மதிப்புகள் முதலாளிய உற்பத்தி உறவுகளுக்குள்ளாகவே உறைந்திருக்கின்றன. முதலாளிய உற்பத்தியில் தொழிற்சாலைக்குள் 'தொழில் ஒழுங்கு விதிகள்'' (industria discipline) உற்பத்தியை ஒழுங்கமைப்பதில் முக்கிய இடம் வகிப்பவை. இது குறித்து விவாதிக்கும்போது மார்க்சு, இதை இரண்டு பகுதிகளாகப் பிரித்துக் கொள்கிறார், முதலாவது, தொழில் நுட்ப ரீதியில் உழைப்புக் கருவிகளின் சீரான இயக்கத்துக்கு ஏற்ற வகையில் தொழிலாளி தன்னை—தன் உடல் இயக்கத்தை கீழ்ப்படுத்திக் கொள்வது. இரண்டாவது முதலாளிய உற்பத்தி முறையின் தனிச்சிறப்பான அம்சமான 'மேற்பார்வையிடுதல்'.

தொழிற்சாலைக்குள் மூலதனத்தின் விதிகள் தொழிலாளர்கள் மீது மேற்பார்வையாளர் (Foreman அல்லது Supervisor) செலுத்தும் **அதிகாரத்தின்** வழியாக செயல்படுகின்றன. இந்த அதிகாரத்தின் தனிச்சிறப்பு முதலாளிய உற்பத்தி முறையில் சுரண்டல் முற்றிலும் பொருளாதார வகைப்பட்டதாக இருப்பதைப் போலவே இதன் வழியாக கிடைக்கும் தண்டனைகளும் கூலியிலிருந்து கழித்துக் கொள்வது, அபராதம் விதிப்பது போன்ற முற்றிலும் பொருளாதார முறைகளினாலேயே நிறைவேற்றப்படுகின்றன *2 என்பதே. இந்த முறைகளுக்குள் மேலே குறிப்பிட்ட முதலாளிய சட்ட உறவுகள், மதிப்புகள் உள்ளுறைந்து கிடப்பது தெரியும்.

ஆக, ஒரு குறிப்பிட்ட வகையிலான அதிகாரம் அதற்கு இசைவான பண்பாட்டால் அரண் செய்யப்படுகிறது அதிகாரமும் தன் பங்குக்கு தனக்கு இசைவான பண்பாட்டை உற்பத்தி செய்து கொள்கிறது.

ஐரோப்பிய, குறிப்பாக இங்கிலாந்து பாட்டாளி வர்க்கம் விடுதலை பெற்றதாக அதே நேரத்தில் முதலாளிய பண்பாட்டு மேலாண்மையின் கீழ் முதலாளிய உற்பத்தி

---

* இனி இது தொடர்பாக வரும் கருத்துகள் Dipesh Chakrabarthy-யின் Rethinking Working-Class History (Bengal 1890 1940) என்ற நூலில்சொல்லப்பட்டு இருக்கிற கருத்துகளின் அடிப்படையில் அமைந்தவை. இந்த நூலில் இவர் வர்க்கம், வர்க்க உணர்வு இவை பற்றிய விளக்கங்களில் உள்ள பொருளாதார வாதத்தை மறுத்து இவற்றின் உருவாக்கத்தல் பண்பாட்டின் பங்கை வலியுறுத்துகிறார். இன்னும் ஆழமான தத்துவார்த்த கேள்விகளையும் விவாதிக்கிறார். இங்கு அவற்றை தொடாமல் விட்டிருக்கிறேன்.

திபேஷ் சக்ரவர்த்தியை பின்பற்றி உற்பத்தி உறவுகள் என்கிற பதத்தை அதன் அரசியல் அம்சத்துக்கு அழுத்தம் தந்து பயன்படுத்தி இருக்கிறேன் மேசவன் தமது நூலில் இதை பொருளாதார அர்த்தத்துல கையாண்டிருக்கிறார் என்பது இங்கு குறித்துக்கொள்ள வேண்டியது.

*1 மார்க்சின் கருத்துகளுக்குப் பார்க்க: மூலதனம் தொகுதி I, பக்: 167-69.

*2 முதலாளியத்திற்கு முற்பட்ட உற்பத்தி உறவுகளில் இந்த அதிகாரம் பொருளாதாரத்திற்கு அப்பாற்பட்ட முறைகளில் உச்ச வெளிப்பாடாக உழைப்பாளிகளின் உடல் மீதான வன்முறையாகச் செயல்படுகிறது. நமது சூழலில் சாதியத்தை இப்படிப் பார்க்கலாம்.



படிப்பகம்

www.padippakam.com

உறவுகளை அதன் தூய வடிவில் எதிர்கொண்டதால் ஒரு வர்க்கமாக தன்னை உணர்ந்து கொள்ளவும் அதாவது வர்க்க உணர்வு பெறவும்தன்னை ஒருங்கிணைத்துக் கொள்வதும் அதற்கு எளிதாக இருந்தது. அதனுடைய எதிர்ப்புகளும் கூட முதலாளிய வரம்புகளுக்கு உட்பட்ட, தொழிற்சங்கங்கள் வாயிலான எதிர்ப்புகளாகவும் பின்னர் பல்வேறு அரசியல் போராட்டங்களாகவும் இருந்தது.

நமது தமிழக/இந்தியச் சூழலுக்கு வருவோமானால் முதலாளியம் மேலிருந்து திணிக்கப்பட்டது ஒரு தனிக்கதை. அது பற்றி நிறையவே பேசப்பட்டு விட்டது. இப்போது கவனத்தில் கொண்டுவரப்பட வேண்டியது நமது சூழலில் உருவான/உருவாக்கப்பட்ட முதலாளியத்தின் உற்பத்தி உறவுகள் என்னவாக இருந்தன என்பதே.

முதலாவதாக இங்கு சுதந்திரமான உழைப்பாளிகள் கிடைக்கவில்லை. முதலாளிய பண்பாட்டு மதிப்புகளில் வார்த்தெடுக்கப்பட்ட உழைப்பாளிகள் முதலாளிய உற்பத்தி முறைக்குள் நுழையத் தயாராக காத்துக்கிடக்கவில்லை. மாறாக நிலப்பிரபுத்துவ சிதைவுகளினால் கிராமங்களில் இருந்து பெயர்ந்த ஆனால் கிராமங்களோடு வைத்திருந்த தொடர்பை, ஆதிக்க/அடிமை உறவுகளை முற்றிலும் துண்டித்துக் கொண்டுவிடாத உழைப்பாளிகள் சாதிய, மத, பிற பண்பாட்டு மதிபபுகளோடேயே முதலாளிய உற்பத்திக்குள் நுழைந்தனர்*1

இரண்டாவது, இங்கு திணிக்கப்பட்ட முதலாளியம் தனக்கே உரிய உற்பத்தி உறவுகளைக் கொண்டதாக அமையாமல் நிலப்பிரபுத்துவ ஆதிக்க உறவுகளுக்கு இயைந்த மாதிரியில் தகவமைத்துக் கொண்டது. ஒரு தொழிற் சாலைக்குள்ளாகவும் கூட அதிகாரம் சாதிய ஆதிக்க வழிப்பட்டதாகவே இருந்தது.*2

இந்த முதலாளியத்திற்கு அப்பாற்பட்ட சாதிய ஆதிக்க வழிப்பட்ட அதிகாரத்தை 'தொழிலாளர்கள்' தமது சாதிய, மத, பண்பாட்டு மதிப்புகளின் அடிப்படையிலேயே எதிர்கொண்டனர். அதனாலேயே அவர்களது எதிர்ப்புகளும்கூட சாதிய மத வடிவிலான எதிர்ப்புகளாகவே அமைந்தன. அவர்கள் சாதிய மத உணர்வுகளின் அடிப்படையிலேயே ஒன்று சேர முடிந்தது. 'வர்க்கமாக' இணைவது அநேக நேரங்களில் சாத்தியப்படவில்லை. தூய வர்க்க உணர்வை சாத்தியப்படுத்தும் நிலைமைகள் கேசவனின் வார்த்தைகளில் சொல்வதென்றால் 'பொருண்மை அடிப்படை' இங்கு இல்லை.

வர்க்கம், வர்க்கப் போராட்டம் இவையெல்லாம் எல்லா சமுதாயங்களுக்கும் பொதுவானவைதான். நிலப்பிரபுததுவம், முதலாளியம் இவையும் கூட எல்லா சமுதாயங்களும் எதிர்கொண்ட /எதிர்கொள்கிற பொதுவான சுரண்டல் முறைகள்தாம். என்றாலும் குறிப்பிட்ட சமுதாயங்களின் வரலாற்று வளர்ச்சியில் இவை குறிப்பான மாறுபட்ட வடிவங்களைக் கொள்கின்றன என்பதை மனங்கொள்ளாமல் பேசுவது மார்க்சியம் அல்ல. இநத கருத்தாக்கங்களின உருவாக்கத்தில், செயல்பாடடில் வரலாற்று ரீதியான குறிப்பான பண்பாடுகளும் உறபத்தி உறவுகளும் தீர்மானமான வினையாற்றுகின்றன என்பதையும் காண மறுக்கக் கூடாது.

ஆனால் நம்மவருக்கு இந்த வகையினங்கள் பொருளாதார வரையறைக்குள் இருக்கின்றன. அவருக்கு பொருளாதாரம = 'விஞ்ஞானம்' என்பதால் கால, தேச, வர்த்த

---

*1. முதன் முதலாக தொடங்கப்பட்ட தொழிற்சாலைகளில் வேலை செய்ய வநத 'தொழிலாளர்கள்' அநேகமாக குறிப்பிட்ட கிராமங்கள், சாதிகளைச் சேர்ந்தவர்களாக இருந்தது, இதையொட்டி எழுந்த சிககல்கள இவறறை திபேஷ் சக்ரவர்த்தி விரிவாக விவாதிக்கிறார்.

*2. முதல் தொழிற்சாலைகள் தொடங்கி ஏறத்தாழ ஒரு நூற்றாண்டு கழிந்து விட்ட பிறகு, இனறும கூட அப்படியே இருக்கிறது என்று சொல்வதில் நியாயம் இல்லை. தற்காலத்திய நிலைமைகளை அறிய ஆய்வுகள் தேவை. ஆனால் சில தொழிலகளில் குறிப்பிட்ட சாதிகளே இருப்பது (குறிப்பாக தோல் தொடர்பான தொழில்கள போன்றவை), நிர்வாகத் துறையில் தலித்துகள நுழைய முடியாமல உடல் உழைபபு வேலைகளிலேயே இருப்பது, பெருமபான்மையான தலித்துகள தொழில்துறைக்கு வெளியே 'தளளி' வைக்கபபட்டு இருபபது இவையெலலாம் அதிகாரம சாதிய வழிபபட்டதாகவே இருபபதை உறுதிசெயகின்றன.



படிப்பகம்

www.padippakam.com

மானங்களை மீறி எல்லாவற்றுக்கும் பொருந்தும். இந்த 'விஞ்ஞானப்பூர்வமான' சட்டகத்துக்குள் வைத்தே சாதிச் சிக்கலை, தலித் விடுதலை குறித்த கேள்வியை அணுகியிருக்கிறார். இந்த அணுகுமுறை தலித்துகள் எதிர்கொண்டிருக்கிற சிக்கல்களின் அரசியல் பரிமாணங்களை அவர் பார்வையிலிருந்து மறைத்துவிடுகிறது. அவர் தலித்துகளின் சிக்கல்களை வெறுமனே பண்பாட்டு சிக்கல்களாக 'சமத்துவ மறுப்பு, பொது உரிமை மறுப்பு, மனிதப் பண்பு மறுப்பு' பிரச்சினைகளாக சுருக்கிவிடுகிறார். (அவருக்கு 'வர்க்கச்' சிக்கல்களுக்குள் பொருளாதார சிக்கல்கள் அடங்கிவிடும்).

மிக எளிமையான தீர்வுகளையும் தாராளமாக வைக்கிறார். இந்த உரிமைகளைப் பெறுவதற்கான போராட்டங்களை நடத்தினால் போதும்; பொதுவில் சாதியப் பண்பாட்டு மதிப்புகள் நம்பிக்கைகள் இவற்றுக்கு எதிரான போராட்டங்களையும் கொஞ்சம் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

தானாக சாதிய முரண்பாடுகள் பின்னுக்குப் போய் 'வர்க்க' முரண்பாடுகள் முன்னுக்கு வந்துவிடும். இதன் போக்கில் தலித்துகள் தம்மீதான ஒடுக்குமுறைகளில் இருந்து விடுதலை பெற்றுவிட முடியும். அப்புறம் வர்க்கப் போராட்டத்தை ஜமாய்த்துவிடலாம்.

கேசவன் முன்மொழியும் கருத்துக்களின் தொடர்ச்சியாக நாம் இப்படியெல்லாம் வசதியான முடிவுகளுக்கு வந்து சேரலாம்.

அவர் சொல்கிறபடியே இருந்துவிட்டால் மகிழ்ச்சிதான். மயிரைப் பிடுங்கிக் கொள்கிற சிக்கல்கள் இல்லாமல் நிம்மதியாக வர்க்கப் போராட்டத்தை நடத்திடலாம்தான். ஆனால் நம் முன் இருக்கிற யதார்த்தம் சொல்லும் கதை வேறு. தலித்துகளின் சிக்கல்கள் வெறுமனே பண்பாட்டு மதிப்புகள், மனிதப் பண்பு மறுப்பு குறித்தவை அல்ல. அது அரசியல் சிக்கல். அதிகாரம் குறித்த சிக்கல்.

சாதியம் வெறுமனே பண்பாட்டு 'எச்ச சொச்சமாக' இருக்கவில்லை அது நுண் அளவில் உற்பத்தியை ஒழுங்கமைக்கும் அதிகாரமாக இருக்கிறது. பரந்த அளவில் சாதியப் படிநிலை வழியமைந்த நிறுவனமயப்பட்ட அரசு அதிகாரமாக அமைந்திருக்கிறது.

சாதிய நிலவுடைமை சமூகத்தின் உற்பத்தி உறவுகள் தலித்துகள் மீதும் மற்ற ஒடுக்கப்பட்ட சாதிகள் மீதும் **அதிகாரம்** செலுத்துவதாக இருக்கிறது. இந்த அதிகாரம் உற்பத்தியை ஒழுங்கமைக்கிறது. தலித்துகள் இதை மீறும்போது அவர்களின் உடல் மீதான வன்முறையாக செயல்படுகிறது. சாதியத்தை கருத்துருவமாக 'வளப்படுத்தியும்' பார்ப்பனிய மதமாக நிறுவனப்படுத்தியும், மரபு என்றும் இன்னும் பலவாறாக இந்த அதிகாரம் செயல்படுகிறது.

அதனால் சாதியை ஒழிப்பது என்பது இந்த அதிகாரத்தை ஒழிப்பதுதான். சாதிய அதிகாரத்தை எதிர்த்த போராட்டம் கேசவன் சொல்லும்பொருளிலான 'வர்க்கப்' போராட்டமல்ல. நேரடியான சாதிய ஆதிக்க எதிர்ப்புப் போராட்டம்தான் இந்த அதிகாரம் தாழ்த்தப்பட்டோரை ஒடுக்கி வைத்திருப்பதில் மையம் கொண்டிருப்பதால் இயல்பாகவே இந்த அதிகாரத்துக்கு எதிரான போராட்டத்தை தாழ்த்தப்பட்டோரே முன்னெடுக்க முடியும். கேசவன் சொல்கிற பிற சாதிகளில் உள்ள சனநாயக சக்திகள் தாமாக முன்வந்து இவர்களுக்குக் கீழ்ப்பட்டு இணைந்து கொள்ள வேண்டும். இதற்கு மாறாக 'வர்க்க' ரீதியில் இணைந்து 'வர்க்கப்' போராட்டம் நடாத்த வேண்டும் என்று சொல்வதெல்லாம் சுத்தப் பேத்தல். உண்மையில் இது வர்க்க (இந்திய/தமிழகப் பொருளில்) சமரசக் கொள்கையே.

அதோடு முன்பு காட்டியதுபோல தமிழக/இந்திய முதலாளியத்திலும்கூட அதிகாரம் சாதிய வழிப்பட்டதாகவே இருக்கிறது. நவீன அரசு அதிகாரக் கட்டமைப்பும் கூட சாதியத்தை உள்வாங்கியதாகவே இருக்கிறது. அரசுக் கட்டமைப்பில் அதிகாரத்தின் உச்சங்கள் பார்ப்பனர்கள் கையிலும் அடுத்தடுத்த படிநிலைகளில் பிற உள் சாதியினரும் இருப்பது எல்லோரும் அறிந்ததே இங்கும் கூட தாழ்த்தப்பட்டோரில் ஆகப் பெரும்பான்மையினர் அதிகாரத்திற்கு வெளியே ஒடுக்கப்பட்டவர்களாகவே நிறுத்தப்பட்டு இருக்கின்றனர் என்பதும் எல்லோரும் அறிந்ததே.

'எல்லோருக்கும்' தெரிந்த இந்த அப்பட்டமான உண்மைகள் சாதிய ஒழிப்பு போராட்டமே இங்கு சாத்தியம் என்பதையும் அதை தாழ்த்தப்பட்டோரே முன்னெடுக்க முடியும் என்பதையும் திரும்பத் திரும்பச் சொல்கின்றன. 'எல்லோருக்கும்,



படிப்பகம்

www.padippakam.com

தெரிகிற இந்த யதார்த்தம் கேசவனுக்கு மட்டும் (இன்னும் பல 'புர்ர்ர்ரட்சிகர' மா-லெ கட்சிகளுக்கும், கட்சியினருக்கும்) பார்வையில் படாமல் போனது எப்படி என்று கேட்கத் தோன்றுகிறது. காரணம் இருக்கிறது. அவருக்கு லகான் மாட்டி இருக்கிறது. அது 'விஞ்ஞானப்பூர்வமான' லகான் 'வர்க்கம்' = 'பொருளாதாரவாத' லகான்.

## II

இங்கே இதுவரைக்கும் திரு. கேசவனின் ஆய்வுச் சட்டகத்தை மறுக்க முயற்சி செய்திருக்கிறேன். அதோடுகூட தலித் அரசியலை அவர் அரசியலற்ற முறையில் அணுகியிருப்பதையும் காட்ட முயற்சி செய்திருக்கிறேன். சனிக் கட்டுரைகளில் சொல்லப்பட்டு இருக்கிற செய்திகளை தொடக்கூட இல்லை. அப்படிச் செய்வதைவிட இந்தக் கட்டுரைகளில் வெளிப்பட்டிருக்கிற அவருடைய 'பார்வைகளை' மட்டும் போகிற போக்கிலாவது பார்ப்பது அவசியமாகப்படுகிறது.*

தாழ்த்தப்பட்டோர் இயக்கங்கள் என்ற கட்டுரையில் தலித் இயக்கங்களை அமைப்பாக்கப்பட்ட அரசியல்-அமைப்புகள் என்பதற்குள்ளாக சுருக்கிவிடுகிறார். இவற்றுக்கு அப்பாற்பட்ட அவர்களது இயக்கங்களை 'மோதல்கள்' பற்றிய தலைப்பில் எடுத்துக் கொண்டு விவாதிக்கிறார்.

அதோடு, இந்த இயக்கங்கள் தோற்றம் பெற்றதற்கான காரணமாக உற்பத்தி முறையில் (பொருளாதாரத்தில்) நிகழ்ந்த மாற்றங்கள் என்பதாக மட்டுமே குறிப்பிடுகிறார். காலனிய அரசு நிர்வாக இயந்திரத்தின் குறுக்கீடு, காலனிய அரசின் அரசியல் சொல்லாடல், ஐரோப்பிய நாடுகளிலிருந்து அறியப்பட்ட அரசியல் கருத்துக்கள், நமது மண்ணுக்கே உரிய தனித்துவமான அரசியல் பண்பாடு, சித்தாந்தங்கள் (அவை பிற்போக்கானவையாக, பார்ப்பனீய மயமானவையாகவே இருக்கட்டும்) இவை இந்த இயக்கங்களின் உருவாக்கத்தில் எந்த அளவுக்கு செல்வாக்கு செலுத்தின என்பது குறித்த தேடல் இல்லை.

---

* இனிவரும் கருத்துக்கள் தற்போது பரவலாக அறியப்பட்டுவிட்ட Sub-altern Studies குழுவினரின் கருத்துக்களின் செல்வாக்கில் அமைந்தவை என்பதை குறிப்பிட்டாக வேண்டும்.

அவருடைய பார்வையில் சமூகத்தில்மாற்றங்களை நிகழ்த்துவது பொருளாதாரம். இந்த மாற்றங்களால் ஏதோ வகையில் பாதிக்கப்படுகிற உண்மையில் இந்த மாற்றங்களையே நிகழ்த்துகிற மானுடர்கள் வெறுமனே பொருளாதாரம் ஆட்டுவிக்கிற ஜடங்கள். இந்தப் பொருளாதாரவாத பார்வைக்கு மாறாக இயக்கங்களின் தோற்றம் செயல்பாடுகளை இவற்றை தோற்றுவித்த நபர்களின் சமூகப் புரிதல்கள், இவற்றில் ஈர்க்கப்பட்ட அல்லது வெளியில் நிறுத்தப்பட்ட மக்கள் (தலித்துகள்) இவற்றை எப்படி புரிந்துகொண்டார்கள்— இவை குறித்த தேடல்களும் தேவை.

சாதிய 'மோதல்கள்' பற்றிய கட்டுரையிலும் கூட இந்த 'மோதல்கள்' பொருளாதார மாற்றங்களால் உந்தப்பட்டவை என்பதாகவே விளக்குகிறார். இவை ஒடுக்கப்பட்ட சாதிகளில் புதிதாகத் தோன்றிய பொருளாதார ரீதியில் முன்னேறிய பிரிவினரின் நலன்கள் தொட்டு நிகழ்ந்தவை என்பதாகக் கூறுகிறார். இதனால் இவற்றில் பங்கு பெற்ற பொருளாதார ரீதியில் பின்தங்கிய பிரிவினர் முன்னேறியபிரிவினரின் நலன்களைப் புரிந்துகொள்ளாமல் ஏமாந்துபோன கேணைகள் என்றாகிறது ஆனால் ஒடுக்கப்படும் சாதிகளில் உள்ள இந்த இரு பிரிவினரும் பிற உயர் சாதியினரின் ஆதிக்கத்தை எதிர்த்து நிகழ்த்திய இந்த 'மோதல்கள்' வெறுமனே பொருளாதார நலன்களை மட்டுமே முன்னிறுத்தி நடந்தவை அல்ல. அடிப்படையில் இந்த 'மோதல்கள்' சாதிய அதிகாரப் படிநிலை வரிசையை எதிர்த்த கலகங்கள். இவற்றில் பங்குபெற்ற தலித்துகளின் இரு பிரிவினரும் ஒரே தளத்திலான புரிதல்களோடும், நோக்கங்களோடும் இயங்கவில்லை; தெளிவாக வேறுபடுத்திவிட முடிகிற மாறுபட்ட நோக்கங்களோடும் புரிதல்களோடும் பலன்களையும் எதிர்பார்த்தே இணைகின்றனர், இயங்குகின்றனர். இது இவர்களுடைய சிந்தனைகளைப் பற்றிய ஆய்வில் தெரியவரும்.

மத அமைப்புகளும் தாழ்த்தப்பட்டோரும் என்ற கட்டுரையில் மதம் என்பது தலித்துகளை 'உள் இழுப்பது, வெளித தள்ளுவது' என்று தன் விருபபத்துக்கு ஆட்டிப் படைக்கும் ஆளும் வர்க்கத்தின் கருவி என்பதாக விளக்கியிருக்கிறார் இங்கும்கூட தலித்துகள் ஆதிக்க சாதியினரை எப்படி எதிர்கொண்டார்கள் என்பது பற்றிய தேடல் இல்லை. அவர்கள் 'ஆட்டுவிக்கப்படுபவர்களாகவே' இருக்கிறார்கள்.



படிப்பகம்

www.padippakam.com

ஆனால் கேசவன் சொல்வதற்கு நேர்மாறாக தலித்துகள் உயிரோட்டமான, வாழ்கிற மனிதர்களாக சமூக நிகழ்வுகளில் பங்கு பெற்றார்கள். அவர்களது சிந்தனை அல்லது ''பொது அறிவு'' சமய, சாதிய வழிப்பட்டதாகவே இருந்தது. இதனால் அவர்களது எதிர்ப்புகளும் கூட சமய, சாதிய வழிப்பட்டவையாகவே அமைந்தன. ஆளும் சாதிகளின் சமயம் சாதியப் படிநிலை வரிசையில் ஆதிக்க சாதியை தெய்வமாகஏற்றி உச்சியில் வைத்ததென்றால், இவர்களை எதிர்த்த தலித்துகளின் கலகங்களில் இந்தப் படிநிலை வரிசை தகர்க்கப்பட்டது; தலைகீழாக்கப்பட்டது. இது நடைமுறையில் சாத்தியமானதோ இல்லையோ முதலில்சிந்தனையில் சாத்தியமானது. கலகங்கள் ஒடுக்கப்பட்ட பின்னரும் நீண்ட காலத்துக்கு இப்படியே இருந்தது. மறைமுகமாகவும் நுட்பமாகவும் வெளிப்பட்டது.

''இறையியலைப் பற்றிய விமர்சனம் அரசியல் விமர்சனம் ஆகும்'' என்று மார்க்சின் எழுத்துக்களை கொட்டை கொட்டையாக மேற்கோள் காட்டத் தெரிகிற கேசவனுக்கு அதைச் செய்ய மட்டும் முடிவதில்லை. (இது மேற்கோள் மார்க்சியத்தை எதிர்ப்பவர்களின் விசேஷ கவனத்திற்கு).

மற்ற கட்டுரைகளில் காலனிய காலத்திய மாற்றங்களில் இருந்து தொடங்குபவர் இதில் திடுதிப்பென்று தேவாரத்தையும் திவ்வியப் பிரபந்தத்தையும் 'கட்டுடைக்கத்' தொடங்கிவிடுகிறார். ரொம்பவும் சிரமப்பட்டு இந்திய அளவிலான ஆரிய சமாஜத்தையும் அப்புறம் தமிழகத்திற்கு வந்து 19-ஆம் நூற்றாண்டு வள்ளலாரையும் 20-ஆம் நூற்றாண்டு சந்திரசேகரேந்திர சரசுவதியாரையும் காட்ட முடிகிறது.

ஆனால் 19-ம் 20-ம் நூற்றாண்டுகள் முழுக்க தலித் மக்களின் கலகங்கள் சாதிய மற்றும் சமய வடிவில் நிகழ்ந்து கொண்டு தான் இருக்கின்றன. 1982-ல் நிகழ்ந்த மண்டைக்காடு 'கலவரம்' வரைக்கும்கூட மத அடிப்படையில் எழுச்சிகள் நிகழ்ந்தன. மதம் என்பதை ஆளும் வர்க்கத்தின் கருவி என்ற சூத்திரமாக மட்டுமே பார்க்கும் கேசவனுக்கு இவையெல்லாம் இந்த தலைப்புக்குள் வர மறுத்துவிடுகின்றன. சாதிய மோதல்கள் என்ற தலைப்பில் இந்தப் போராட்டங்கள் சமய 'வரம்புக்குள்' இருந்ததாக போகிற போக்கில் சொல்லிப் போகிறார்.

எங்கெல்ஸ் தமது ''ஜெர்மனியில் விவசாயிகள் போர்'' நூலில் 'மத அடிப்படையில் நிகழ்ந்த விவசாயிகளின் போராட்டத்தை வர்க்கப் போராட்டமாக, அரசியல் போராட்டமாக அலசுகிறார். கிறிஸ்துவை மீட்பது, கிறித்துவத்தை தூய்மைப்படுத்துவது போன்ற கொள்கைகளுக்காக நிகழ்ந்த இந்தப் போராட்டங்களில் சோஷலிச (கற்பனாவாத) கொள்கைகளை கண்டு கொள்கிறார். பொருளாதார காரணிகள் பற்றிய ஆய்வோடு நிறுத்திக்கொள்ளவில்லை. இவற்றில் பங்குபெற்ற வர்க்கங்களின் பிரதிநிதிகள் சிந்தனையையும் பரிசீலித்திருக்கிறார் (அநாமதேயமானவர்களை. இங்கே குறித்துக் காட்டப்பட்டிருக்கிற மார்க்சியர் என்று தம்மை அறிவித்துக் கொள்ளாத அறிவாளிகளை கேசவனைப் போன்ற உறுதியான மார்க்சியர்கள் எளிதில் புறக்கணித்துவிடக் கூடிய வாய்ப்பு கருதி எங்கெல்ஸைப் பற்றிய இந்தக் குறிப்பைச் சேர்ப்பது தவிர்க்க இயலாததாகிவிட்டது). மார்க்சியத்துக்காக உயிரையே விடத் தயாராக இருக்கிற திரு கேசவன் ''இறையியல் அமானுடமானது பிரசஞ்சத்துக்கு அப்பாற்பட்டது மானுடத்துவ இறையியல் முயற்கொம்பு,'' என்றெல்லாம் பட்டாக்கத்தி வீசுவதை கொஞ்சம் நிறுத்திவிட்டு இதை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளவேண்டும். அப்படிச் செய்வார் என்று நம்புவோமாக. கடைசியாக ஒன்று. 'விமர்சனத்தின் அவசியமான தொனி வெறுப்பு அதன் அவசியமான செயல்பாடு மறுப்பு' என்பதாக மார்க்ஸ் ஒரு இடத்தில் சொன்னார். மார்க்சியத்தையே 'திரித்து புரட்டுவதாக' குற்றச்சாட்டுகள் வந்தாலும் பரவாயில்லை என்று துணிந்து இதைக் கொஞ்சம் மாற்றிச் சொல்ல விரும்புகிறேன்.

இனி கொஞ்ச காலத்திற்கு, இப்படியெல்லாம் விஷயமே இல்லாமல் புத்தகங்கள் எழுதிக் குவிக்கப்படுகிற வரைக்கும் விமர்சனத்தின் தொனி மறுப்பாகவும் அதன் செயல்பாடு வெறுப்பைக் கக்குவதாகவும் இருக்கட்டும். □



படிப்பகம்

www.padippakam.com

# கோமகனும் குடிமகனும்: சிவில் உரிமை இயக்கத்தின் கடமைகள்

—எஸ். வி. ராஜதுரை

Hold your hand, my lord :
I have serv'd you ever since I was a child;
But better service have I never done you
Than now bid you hold
—from 'King Lear' (Shakespeare).

எங்கெல்லாம் மக்கள் இயக்கங்கள் அரசாங்கத்தின் ஒடுக்குமுறைக்கு இலக்கா கின்றனவோ அங்கு சிவில்/மனித உரிமை இயக்கங்கள் தோன்றுகின்றன. 1920களில் அமெரிக்க அரசாங்கம், கம்யூனிசக் கருத்து களைப் பின்பற்றுபவர்கள்மீது கடுமையான ஒடுக்குமுறையைப் பிரயோகித்தது. அவர் களைத் தேசவிரோதிகளாகச் சித்தரித்துச் சிறையில் அடைத்தது. அந்த வரைமுறை யற்ற ஒடுக்குமுறையை எதிர்க்க உருவாக்கப் பட்டதுதான் அமெரிக்க சிவில் உரிமைச் சங்கம் (American civil Liberties Union) 1930 களில் பிரிட்டனிலுள்ள தொழிலாளர் கள் வேலையில்லாத் திண்டாட்டத்திற்கு எதிராகக் கிளர்ந்தெழுந்தபோது பிரிட்டிஷ் அரசாங்கம் அவர்களை மிருகத்தனமாக ஒடுக்கியது. அப்போது அத்தொழிலாளர் களின் ஜனநாயக, சிவில் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக அந்த நாட்டில் தேசிய சிவில் உரிமைச் சங்கம் (National Civil Liberties Union) தோன்றியது. 1920களின் இறுதியில் சீனாவில் 'ஷாங்காய் கிளர்ச்சி'க் குப் பிறகு பல்லாயிரக் கணக்கான கம்யூ னிஸ்ட்டுகளையும் அவர்களது ஆதரவாளர் களையும் ஷியாங்கேஷேக் கொன்று குவித்த போது, திருமதி ஸன்யாட்ஸென் அவர்களின் தலைமையில் சீன சிவில் உரிமைக் கழகம் (China League for Civil Liberties) தோற்று விக்கப்பட்டது. இந்தியாவில் காலனியாட்சி யாளர்களுக்கு எதிரான போராட்டத்தின் போது பிரிட்டிஷார் கொண்டுவந்த கொடுமையான ஒடுக்குமுறைச் சட்டங்களை எதிர்த்து சிவில் / மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்காக 1936 இல் இந்தியாவின் முதல் சிவில் உரிமை அமைப்பு—இந்திய சிவில் உரிமைச் சங்கம் (Indian Civil Liberties Council) அமைக்கப்பட்டது. முதலாளித்துவ நாடுகளிலும் காலனி நாடுகளிலும்கூட இதே போன்ற போக்குகளைக் காணலாம். அந்த நாடுகளின் ஆட்சியாளர்களுடனோ அல்லது ஆளும் கட்சியின் கருத்துகளுடனோ ஒத்துப் போக மறுக்கப்பட்டு, ஆளும் கட்சி, அரசாங் கம் ஆகியவற்றின் விமர்சகர்களும் எதிர்ப் பாளர்களும் ஒடுக்கப்பட்டபோது செக் கோஸ்லோவேகியா போன்ற கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் வலுவான சிவில்/ மனித உரிமை அமைப்புகள் தோன்றின. மிக அண்மைக் காலத்தில் சீனாவில் மனித உரிமை இயக்கங்கள் தோன்றியுள்ளன. 1936 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 24இல் பம்பாய் நகரில் ICLU வைத் துவங்கிவைத்துப் பேசுகை யில் நேரு கூறியதுபோல "ஒரு நாட்டின் குடிமக்கள் அரசாங்கத்தின் ஆணைகளுக்குக் கீழ்ப்படிந்து அவற்றை நடைமுறைப்படுத் தும்போது சிவில் உரிமைகள் என்ற பிரச் சனையே எழுவதில்லை மக்களுக்கும் ஆட்சி யதிகாரத்துக்குமிடையே முரண்பாடு ஏற் படும்போதுதான் அப்பிரச்சனை தோன்று கிறது. அரசாங்கத்தை எதிர்க்கும் உரிமை யைப் பெற்றிருத்தல் என்பதுதான் சிவில் உரிமைகள் என்ற கருத்தாகும்"[1].

இந்தியாவின் மிக அண்மைக்கால வர லாற்றைப் பார்த்தோமேயானால், இன்று செயல்பட்டுவரும் எல்லா சிவில் / மனித உரிமை அமைப்புகளும் 1960ஆம் ஆண்டு களின் பிற்பகுதியிலிருந்துதான் உருவாகத் தொடங்கின என்பது தெரியவரும்.

1968ஆம் ஆண்டிற்குப் பிறகு இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் வளரத் தொடங்கிய புரட்சிகரக் கம்யூனிஸ்ட் இயக்கத்தின்மீது அரசாங்கம் கொண்டுவந்த ஒடுக்குமுறை களை எதிர்த்து மேற்குவங்கத்தில் APDR (Association for the Protection of Democra-



படிப்பகம்

www.padippakam.com

lic Rights), ஆந்திரப் பிரதேசத்தில் APCLC (Association for the Protection of Civil Liberties), OPDR (Organisation for the Protection of Democratic Rights) ஆகிய இரு அமைப்புகள், மராத்தியத்தில் பம்பாய், நாக்பூர், சந்திராபூர் ஆகிய இடங்களில் CPDR (Committe for the protection of Democratic Rights) என்ற ஒரே பெயரில் இயங்கும் மூன்று தனித்தனி அமைப்புகள், லோக்ஷாஹி ஹக் சங்காதன் என்ற மற்றொரு அமைப்பு, பஞ்சாபில் AFDR (Association for the Protection of Democratic Rights), தமிழ் நாட்டில் TNCLU (Tamilnadu Civil Liberties union), OCDR (Organisation for the protection of Democratic Rights—மக்கள் உரிமைக் கழகம்), PDRA (People's Democratic Rights Association-மக்கள் ஜனநாயக உரிமைக்கழகம்) ஆகியன தோன்றின.

1970-இல் இந்தியாவில் 'முழுப்புரட்சி' நடத்துமாறு ஜெயப்பிரகாஷ் நாராயணன் விடுத்த அறைகூவலை ஏற்று மாணவர்களும் இளைஞர்களும் வடமாநிலங்களில் பல்லாயிரக் கணக்கில் இயக்கங்களில் பங்கேற்ற போது அரசாங்கம் கொடுத்த அடக்குமுறைகளை எதிர்க்க PUCLDR (People's union for Civil Liberties and Democrafic Rights) தோன்றியது வடகிழக்கு மாநிலங்களை எடுத்துக்கொண்டால் நாகா மக்கள் மனித உரிமை இயக்கம் (Naga People's movement for Human Rights), பஞ்சாபில் பஞ்சாப் மனித உரிமை ஆணையம் (Punjab Human rights commission), அஸ்ஸாமில் MASS என்ற அமைப்பு போன்றவை தோன்றியுள்ளன அதே போல காஷ்மீரிலும் சில மனித உரிமை அமைப்புகள் அமைக்கப்பட்டுள்ளன இந்த மாநிலங்களில் தன்னுரிமைக்காகப் போராடும் தேசிய இனங்கள் மீதும் அவர்களது அமைப்புகள் மீதும் அரசாங்கம் தொடுத்துள்ள ஒடுக்குமுறைகளை எதிர்க்கும் அமைப்புகளே இவை.

பொதுவாகச் சொல்லப்போனால் மேற்சொன்ன குறிப்பிட்ட வரலாற்றுச் சூழ்நிலைமைகளில் குறிப்பிட்ட நோக்கங்களுக்காக உருவாக்கப்பட்ட இந்த அமைப்புகளின் சிந்தனை, செயல்பாடு ஆகியவற்றின் எல்லைகள் அந்தக் குறிப்பிட்ட நோக்கங்களாலேயே தொடர்ந்து வடிவமைக்கப்பட்டு வருவதைக் காணலாம். ஒரு குறிப்பிட்ட வரலாற்றுக் கடமை மறைந்தவுடன், அக்கட்டத்தில் உருவாக்கப்பட்ட ஒரு குறிப்பிட்ட சிவில் உரிமை அமைப்புகளுக்கு இனி தேவையில்லை, அல்லது அது தன் செயல்பாடுகளை மட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும் என்கிற கருத்தும் அந்த அமைப்பிலுள்ள சிலரால் எழுப்பப்படுவதுண்டு. இதற்கு அண்மைக்கால உதாரணமாக PUCLDR இல் எழுந்த பிரச்சினைகளைக் கூறலாம். உள்நாட்டு நெருக்கடி நிலைமை இரத்து செய்யப்பட்டதாக இந்திராகாந்தி அறிவிப்பு செய்தபிறகு நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் ஜனதாக் கட்சி ஆட்சிக்கு வந்தது. ஜனதாக்கட்சித் தலைவர்கள், ஊழியர்கள் பலர் நெருக்கடி நிலைக் காலத்தில் ஒடுக்குமுறையை அனுபவித்தவர்கள். PUCLDR அமைப்பில் அவர்களில் சிலர் செயல்பட்டு வந்தனர். அவர்களும் அந்த அமைப்பிலிருந்த பல வழக்கறிஞர்களும் அறிவாளிகளும் ஜனதாக்கட்சி, காங்கிரஸ் கட்சியிலிருந்து மாறுபட்டமுறையில் நடந்து கொள்ளும், அரசாங்கத்தை விமர்சிப்பவர்களிடம் 'உரையாடலில்' ஈடுபடும்; நெருக்கடிக்கால ஒடுக்குமுறைகளுக்குப் பரிகாரமாக சில ஜனநாயக நடவடிக்கைகளை மேற்கொள்ளும்; நீதி விசாரணை ஆணையங்களை அமைக்கும் என்று கருதினர். இக்காரணத்தால் ஏறத்தாழ மூன்றாண்டுகள் PUCLDR-இன் செயல்பாடுகள் மிகவும் மட்டுப்பட்ட நிலையிலேயே இருந்தன. இதற்கிடையே அந்த அமைப்பின் சிந்தனைகள்செயல்பாடுகள் ஆகியனபற்றிய விவாதங்களும் விமர்சனங்களும் அந்த அமைப்பிற்கு உள்ளிருந்தும் வெளியிலிருந்தும் வந்தன. அவற்றின் விளைவாக 1980-இல் அந்த அமைப்பு இரண்டாகப் பிரிந்தது— இந்திய அளவிலான PUCL, டெல்லியில் மட்டுமே இயங்கும் PUDR என இரு அமைப்புகள் உருவாயின.

* * *

ஒடுக்கப்படும் மக்களை ஒழுங்கமைத்து நடத்திச் செல்லும் எந்தவொரு மக்கள் இயக்கமும் / கட்சியும் அந்தந்தப் பகுதிகளிலுள்ள மத்தியதரவர்க்க அறிவாளிகளின் அனுதாபத்தைத் ஓரளவேனும் பெறுவது இயல்பானதுதான். இத்தகைய அனுதாபம் தெரிவிப்பவர்களில் பலர், அந்த இயக்கத்தின்/கட்சியின் அரசியலுடன் முழுமையாக ஒத்துப் போகிறவர்கள் அல்லர் என்ற போதிலும் அந்த இயக்கம்/கட்சி எழுப்பும்கேள்விகள், பிரச்சனைகள், கோரிக்கைகள் ஆகியவற்றிலுள்ள நியாயங்களை அங்கீகரிக்கவே செய்கின்றனர் அந்தஇயக்கம் கட்சிமீது அரசாங்கம் சட்டவிரோதமான ஒடுக்குமுறைகளை ஏவும்போதும், நீதி



படிப்பகம்

www.padippakam.com

மன்றத்தின் எல்லைகளுக்குட்படாத சட்டங்களை இயற்றும்போதும் ஒடுக்குமுறைகளுக்கு சட்டரீதியான வடிவத்தைக் கொடுக்க முயற்சி செய்யும்போதும், அந்த இயக்கத்தை/கட்சியை அரசியல் இயக்கமாக-கட்சியாக அங்கீகரிக்க மறுத்து அவற்றை 'பிரிவினை வாதம்', 'பயங்கரவாதம்', 'தீவிர வாதம்'என்று குற்றம் சாட்டி தனது கொடிய அடக்குமுறைகளை நியாயப்படுத்தும் போதும், மேற்சொன்ன மத்தியதரவர்க்க அறிவாளிகள் இத்தகைய சட்டவிரோதமான நியாயமற்ற ஒடுக்குமுறைகளை எதிர்க்க முன்வருகின்றனர்; அரசாங்கம் சட்டத்திற்குட்பட்டு நடக்கவேண்டும் என்றும் அந்த சட்டம் இயற்கை நீதிக்கு (natural justice) உட்பட்டதாக இருக்கவேண்டும் என்றும் வற்புறுத்துகின்றனர்.

சிவில்/ மனித உரிமை இயக்கங்கள் வெகுமக்கள் இயக்கங்கள் அல்ல. ஆனால் மக்கள் இயக்கங்கள் உருவாகி வளர்ச்சியடைவதற்குத் தேவையான ஜனநாயகச சூழலைப் பாதுகாப்பது அவற்றின் கடமைகளிலொன்றாகும். சிவில் உரிமைகள் பற்றிய ஒரு நகல் சுற்றறிக்கையில் (ஏப்ரல் 1936) ஜவகர்லால் நேரு கூறியதுபோல்' சிவில் உரிமைகள் இருப்பது எல்லாவகையான தேசிய செயல்பாடுகளின் அரசியல் பண்பாட்டு, சமுதாய, பொருளாதார செயல்பாடுகளின்—வளர்ச்சிக்கு இன்றியமையாதது என்று பொதுவாகக் கருதப்படுகிறது அவற்றை ஒடுக்குவதால் இந்தச் செயல்பாடுகள் அனைத்தும் பாதிக்கப்படுகின்றன.''

மக்கள் பல்வேறு இயக்கங்களின் மூலமாகவே தமது உரிமைகளைப் பெறுகின்றனர். ஆனால் அந்த இயக்கங்கள் அனைத்துமே ஒழுங்கமைக்கப்பட்ட அரசியல் இயக்கங்களாக இருப்பதில்லை என்பதை வரலாறு நமக்குச் சொல்கிறது. ஒரு குறிப்பிட்ட 'உரிமை' பற்றிய கருத்தாக்கம் முதலில் சிலரது சிந்தனையில் உதித்துப் பிறகு சமூக உணர்விற்குள் பிரவேசிக்கிறது. பிறகு அரசியல் நடைமுறையில், மக்கள் இயக்கங்களில் அந்த உரிமை அங்கீகரிக்கப்படுகிறது ஒரு குறிப்பிட்ட கட்டத்தில் அது தன் வெற்றியை பதிவு செய்கிறது. அதாவது சட்டம், மரபு, பண்பாடு முதலியன அதனை ஏதோ ஒரு வடிவத்தில் நிறுவனப்படுத்துகின்றன. இவ்வாறு நிறுவனப்படுத்தப்படும்போது அந்த உரிமை பல்வேறு வரம்புகளுக்குள்ளாகலாம். அது நடைமுறைப்படுத்தப்படும்போது அதிலுள்ள ஓட்டைகள் வெளித்தெரியத் தொடங்குகின்றன. ஆட்சியதிகாரத்திலிருப்போர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட உரிமை அவர்களாலேயே காலில் போட்டு மிதிக்கப்படுவதும் நேர்கிறது. சமுதாயத்தில் நெருக்கடிகள் முற்ற முற்ற அந்த உரிமையை ஒரேயடியாக ஒழித்துக்கட்டவும் ஆட்சியாளர்களால் முயற்சி செய்யப்படுகிறது சிவில்/ மனித உரிமை அடிப்படைகளின் உடனடிக் கடமை அந்த உரிமையை—அது எந்தக் குறைபாட்டுடன் இருந்தபோதிலும்— பாதுகாப்பதும், பின்னர் அந்த உரிமையை நிறுவனப்படுத்துதலிலும் உள்ள குறைபாடுகளைப் போக்கப் பாடுபடுவதும் ஆகும் இந்த உரிமையைப் பெறுவதற்காக மக்களும் அவர்களது இயக்கங்களும் பல்வேறு காலகட்டங்களில் பல்வேறு இடங்களில் நடத்திய போராட்டங்களை இடைவிடாது நினைவூட்டி வருவது சிவில் உரிமைஅமைப்புகளின் பணிகளிலொன்றாகும். மக்கள் தொடர்ந்து பெறவேண்டிய உரிமைகளைப்பற்றிய பிரச்சாரம் செய்வது மற்றொரு பணியாகும் இவ்வகையில் அவ்வமைப்புகள் மக்கள் இயக்கங்களின் பின்னணிப படையாக (rear guard) செயலாறறுகின்றன என்று கூறலாம். ஆனால் அவை எநதவொரு இயக்கத்தின் / கடசியின் பின்னிணைப்பாகி (appendage) விடக்கூடாது!

சிவில் உரிமை அமைப்புகள் வெகுமக்கள் அமைப்புகளாக / இயக்கங்களாக மாற முடியுமா என்ற கேள்வி அடிக்கடி எழுகின்றது. பெரிதும் மத்திய தர வர்க்கத்தைச்சேர்நதவர்களையே கொண்டுள்ள இநத அமைபபுகள் வெகு மக்கள் அமைபபுகளாக மாறமுடியும் என்பது ஐயத்துக்குரியது ஏனெனில உடனடியாக பொருளாதார, சமூக, அரசியல் குறிக்கோள்களைக் கொணராத எந்தவொரு அமைப்பும் / இயக்கமும் பரந்த அடிப்படையுள்ள மக்கள் இயக்கமாக மாற முடியாது. உழவர்கள், தொழிலாளர்கள், பெணகள, தலித்துகள, இதர ஒடுக்கப்பட்ட மக்கள் தத்தம பொருளாதார, அரசியல, சமூகப போராட்டங்களின் ஒரு பகுதியாக சிவல் உரிமைக் கோரிக்கைகளையும முன்வைப்பதைப் பார்க்கின்றோம். ஆனால சிவில உரிமைக்காக மட்டும் அவாகள் தங்களது அமைப்புகளில் தஙகளை ஒழுங்கமைத்துக் கொளவதில்லை. மற்றோர்புறம் உடனடியான பொருளாதார, அரசியல், சமூகக் குறிக்கோள்களில் இல்லாததும் சிவில் உரிமைக்காக மட்டுமே நடததப்படுகிறதுமான ஒரு இயக்கத்தில் / அமைப்பில் பரநது பட்ட மககள சேர்வது சாததியமிலலை. (அது சாத்தியமாகுவது மகிழசசிககுரியது தான்.) எனவே, மததிய தர வாகக அறிவாளி



படிப்பகம்

www.padippakam.com

கள் மட்டுமே—அதிலும் மிகச் சிறிய எண்ணிக்கையிலானவர்கள் மட்டுமே — சிவில் உரிமை இயக்கத்தில் சேர்கின்றனர். அதன் செயல்பாடுகள் உடனடியான விளைவுகளை பலன்களைக் கொண்டுவரக்கூடியவை அல்லவாதலால் (அரசும், அரசாங்கமும் இருக்கும் வரை ஒடுக்குமுறை ஏதோ ஒரு வடிவத்தில் இருந்துகொண்டே வருமாதலால் சிவில்/மனித உரிமைப் பிரச்சினைகள் நீடிக்கவே செய்யும்), அதில் 'கவர்ச்சி' ஏதும் இருப்பதில்லை. எனவே தொடர்ந்து அதில் செயல்படுபவர்களின் எண்ணிக்கை மேலும் குறைவானதாக அமைகின்றது. மக்கள் இயக்கங்களின் மீது அரசாங்கத்தின் ஒடுக்குமுறை கடுமையானதாகும்போது சிவில் உரிமை இயக்கங்களும் பாதிக்கப்படுகின்றன. APCLC யைச் சேர்ந்த டாக்டர் ராமநாதம், காஷ்மீரைச் சேர்ந்த வாஞ்சூ முதலியோர் கொல்லப்பட்டனர், பஞ்சாபைச் சேர்ந்த முன்னாள் உயர்நீதிமன்ற நீதிபதியும் மனித உரிமை இயக்கத் தலைவருமான அஜித்சிங் பெய்ன்ஸ், APCLC யைச் சேர்ந்த டாக்டர் பாலகோபால் போன்றோர் 'தடா'விலும் பிற கொடூரச் சட்டங்களின் கீழும் கைது செய்யப்பட்டனர். தமிழ்நாட்டிலும் சிவில்/மனித உரிமை இயக்கத்தினர் மீது பல ஒடுக்குமுறைகள் நடந்துள்ளன. 1983 அக்டோபரில் மதுரையில் வி. எம். தார்க்குண்டே, கே.ஜி. கண்ணபிரான் முதலியோர் போலீசாரின் தடியடிக்குள்ளாகினர்.

இவை தவிர பல்வேறு வகையான உளவியல் நிர்ப்பந்தங்களும் கூடச் செயல்படுகின்றன. அரசாங்கமும் நிலவுகிற அரசியல்-சமூக-பொருளாதார அமைப்பைக் கட்டிக்காக்கும் பத்திரிகைகள் முதலியனவும் சிவில் உரிமை இயக்கங்களுக்கு எதிராக நடத்தும் விஷமப் பிரசாரம் மக்கள் மீது ஏற்படுத்தும் தாக்கம், மத்திய தரவர்க்கத்திடம் மட்டுமல்லாது பொதுவாக மக்களிடையே நிலவும் கலாசார நிலைபாடு ('எதற்கு வீண் வம்பு'', ''அரசாங்கம் இருக்கும் வரை அடக்குமுறை இருக்கத்தான் செய்யும்'', 'நாம் என்ன சாதிக்கப் போகிறோம்'') மக்கள் இயக்கங்களை/கட்சிகளைச் சேர்ந்தவர்கள் சிவில் உரிமை அமைப்புகளில் உள்ளவர்களைக் கறிவேப்பிலைபோல பயன்படுத்திப் பின்னர் தூக்கியெறிந்துவிடுவது— இவை விரக்தியையும் சோர்வுமனப்பான்மையையும் உருவாக்குகின்றன; மத்திய தரவர்க்க அறிவாளிகளைப் பாதிக்கின்றன. மற்றொரு விஷயம் என்னவெனில், சிவில் உரிமை அமைப்பில் சேர்கின்ற பலர் —குறிப்பாக ஏதாவொரு மக்கள் இயக்கத்தை/கட்சியைச் சேர்ந்தவர்கள்— சிவில் உரிமை இயக்கம் தங்களது அரசியல் இயக்கத்திற்கு, கட்சிக்கு உறுதுணையாக இருக்கின்ற காரணத்தால், அதனை ஒரு முன்னணி அமைப்பாகவோ, பின்னிணைப்பாகவோ பார்ப்பதும் அது சுயேச்சையான ஒரு செயல்திட்டத்துடன் செயல்பட வேண்டும் என்று கருதாததும் ஆகும். எந்தவொரு இயக்கமும் திறம்படவும் விரைவாகவும் செயல்பட வேண்டுமாயின் அது தனக்குள்ள முக்கியத்துவம் குறித்து சுயநம்பிக்கை கொண்டிருக்க வேண்டும். அதன் செயலார்வலர்கள் அதற்கென தமது நேரம், ஆற்றல், சிந்தனை, பொருள் ஆகியவற்றைச் செலவிட வேண்டும். ஆனால், மக்களின் ''உண்மையான போராட்டத்தை நடத்துவது நமது இயக்கம்தான்/கட்சிதான்; சிவில் உரிமை இயக்கமோ ஒரு உறுதுணை அமைப்புதான்'' என்று கருதுபவர்கள் சிவில் உரிமை இயக்கத்தில் முழுமனத்துடன் செயல்பட முடியும் என்பது ஐயத்திற்குரியது. இத்தகையவர்களால் ஒரு சிவில் உரிமை அமைப்பு வழிநடத்தப்படுமேயானால் அந்த அமைப்பால சமநிலைக் கண்ணோட்டத்துடன் பிரச்சினைகளை அணுகவோ, அல்லது எல்லாப் பிரச்சனைகளையும் ஒரே அளவிலான உணர்ச்சியோடும் உணர்வோடும் அணுகவோ இயலாது. தமது சொந்தக் கட்சிகள்/இயக்கங்கள் மேற்கொள்ளும் நடவடிக்கைகளின் காரணமாக உருவாகும் பிரச்சினைகளுக்கு மட்டுமே அல்லது அக்கட்சிகள்/இயக்கங்கள் முக்கியமானதாகக் கருதப்படும் பிரச்சினைகளுக்கு மட்டுமே உற்சாகமான கவனத்தை அது நல்கும். அந்தக் குறிப்பிட்ட கட்சி/இயக்கத்தைச் சேராத பிறர் சிவில் உரிமை அமைப்பிற்குள் வரும் வாய்ப்பு மிகவும் குறையும்; அல்லது அறவே இல்லாமல் போகும்.

எனவே ஒரு சிவில் உரிமை இயக்கம்/அமைப்பு சுயேச்சையான செயல்திட்டத்தை கொண்டிருக்க வேண்டும். இதன் பொருள் —குறிப்பாக நமது நாட்டுச்சூழலில்— இன்று நிலவும் அரசியல் – சமூக— பொருளாதார அமைப்பையும் அதற்கெதிராகக் கிளர்ந்தெழுபவர்களையும் சரிசமமாகப் பார்ப்பதல்ல. மாறாக, அந்த அமைப்பை விமர்சிக்கிற, எதிர்க்கிற மாற்றியமைக்க விரும்புகிற இயக்கங்கள் உருவாவது தவிர்க்கமுடியாதது என்பதை அங்கீகரிப்பதும் அத்தகைய இயக்கங்களுக்கு அரசு விதிக்கும் எல்லைகளுக்குள் மட்டுமல்லாது, அவற்றைக் கடந்தும் தமது மாற்று அரசியலை முன்வைக்கும் உரிமை உண்டு என்பதை வலியுறுத்துவதும் சிவில் உரிமை இயக்கத்தின் செயல்திட்டத்தின



படிப்பகம்

www.padippakam.com

பகுதியாகும். அரசு விதிக்கும் எல்லைகளைத் தாண்டி, தமது மாற்று அரசியலை முன் வைக்கும் அரசியலை வெறும் 'பயங்கரவாத மாக', 'பிரிவினைவாதமாக', குறுக்குவதை எதிர்ப்பதும், நாம் அந்த அரசியலை விரும்பி னாலும் விரும்பாவிட்டாலும் அது தனக்கே யுரிய நியாயங்களைக் கொண்ட ஒரு மாற்று அரசியல் என்ற வகையில் அரசியல் ரீதியாக மட்டுமே அது விவாதிக்கப்படவும் எதிர் கொள்ளப்படவும் வேண்டும் என்பதை சிவில் உரிமைஇயக்கம் வற்புறுத்தவேண்டும். இப்படிச் செய்வதற்காக அது தரவேண்டிய விலை மிக அதிகமானது. அதாவது, மேற் குறிப்பிட்ட 'பயங்கரவாதம்', 'தீவிரவாதம்' 'பிரிவினைவாதம்' ஆகியனவும் ஒரு(மாற்று) அரசியல்தான், அந்த அரசியலைச் சேர்ந்த வர்களுக்கும் சிவில்/ஜனநாயக/மனித/சட்ட உரிமைகள் உண்டு என்று சிவில் உரிமை அமைப்புகள் வலியுறுத்தும்போது, இந்த அமைப்புகள் 'பயங்கரவாத' 'பிரிவினை வாத', 'தீவிரவாத' அமைப்புகளாக அரசாங் கத்தால் பிரச்சாரம் செய்யப்படுவதும் அப் பிரச்சாரத்தை பொது மக்கள் நம்பிவிடுவது தான் அது.

மேலும், ஜனநாயகம், ஜனநாயக உரிமை கள் / மதிப்பீடுகள், நடவடிக்கைகள் / நிறுவ னங்கள் என்பன சுயேச்சையான மதிப்பீடு கள் கொண்டவை, அவை தம்மளவிலேயே முக்கியமானவை என்ற வகையில் அவற்றின் மீது விருப்பம் கொள்ளும் அளவிற்கு நமது சமூக உணர்வில் போதுமான அரசியல் முதிர்ச்சி ஏற்படவில்லை. கல்கத்தாவில் 7.11.36 அன்று ICLU கிளையைத் துவக்கி வைத்துப் பேசுகையில் நேரு கூறியவை இன்றும் கூட பொருத்தப்பாடு உடையன வாக உள்ளன. "இந்தியாவில் உள்ள நிலைமை என்னவென்றால் சிவில் உரிமை கள் ஒடுக்கப்படுவதற்கு நாம் பழக்கப்படுத் திக் கொண்டோம். சில சமயங்களில் கோபத் தைக் காட்டுகிறோம். ஆனால் உண்மை என்னவென்றால் சிறிது காலத்திற்குப் பிறகு நாம் அதற்குப் பழக்கப்பட்டு விடுகிறோம். அதை நாம் ஒரு பெரிய விஷயமாக எடுத்துக் கொள்வதில்லை." சென்னையில் ICLU வின் கிளை 8.10.1936 அன்று தொடங்கப்பட்ட போது (தொடக்க விழாக் கூட்டத்தில் கூச்சலும் குழப்பமும் நிலவியதாகச் சொல் லப்படுகிறது.) நேரு கூறிய கருத்துகளும் இன்றும் மிகவும் பொருள் வாய்ந்தவையாக உள்ளன. "சிவில் உரிமைகள் பற்றி நமக்கு உணர்ச்சிகரமான, செயலூக்கமுள்ள புரிதல் உள்ளதாஎன்ற சந்தேகம் எனக்கு சிலசமயம் ஏற்படுவதுண்டு... சிவில் உரிமைகள் என்ற சொற்றொடரில் உள்ளடக்கப்பட்டுள்ள பல் வேறுவகையான தனிமனித சுதந்திரங்களில் உங்களுக்கு உண்மையிலேயே நம்பிக்கை யிருந்தால், உங்கள் எதிரிக்குக்கூட அந்த சுதந்திரத்தை வழங்க நீங்கள் விரும்புவீர்கள் என்று பொருள் கொளளலாம் அச்சுதந் திரம் அரசுக்கு எதிரானதாக இருந்தபோதி லும் அது நாட்டில் பரவலாக நிலவுவதையே நீங்கள் விரும்புவீர்கள் என்று பொருள் கொள்ளலாம். சிவில் உரிமைகளை நேரடி யாக நசுக்குதல் என்பதைவிட மோசமான விஷயம் ஒரு பீதிநிறைந்த சூழல் உருவாக்கப் படுவதுதான்... எங்கெல்லாம் அச்சம் நிறைந்துள்ளதோ அங்கு மானுட ஆன்மா வின் வளர்ச்சிக்கு இடம் இருக்காது." இத் தகைய கருத்துகள், பிரிட்டிஷ் அரசாங் கத்தை மட்டும் மனத்தில் கொண்டு கூறப் பட்டவையல்ல. அரசாங்கம், அரசு என்பன உள்ளவரை சிவில் உரிமைப் பிரச்சினைகள் இருந்து கொண்டே வரும் என்று நேரு கருதினார். 1936 மே மாதம் தேஜ்பகதூர் சாப்ருவுக்கு எழுதிய கடிதத்தில் நேரு குறிப் பிட்டார்: "ஒவ்வொரு அரசாங்கமும் வலு வான விமர்சனத்தையும் எதிர்ப்பையும் கண்டு சிற்றமடையத்தான் செய்யும். பொது மக்கள் அபிப்பிராயம் அரசாங்கத்தை இடை விடாது கண்டித்து, அரசாங்கம் மிகவும் எதேச்சாதிகாரமானதாக மாறிவிடாதபடி தடுத்துக் கொண்டிருந்தால் மட்டுமே ஜன நாயகம் செயல்பட முடியும்."

ரௌலட் சட்டம், தடுப்புக் காவல் சட்டம், ராஜதுரோகச் சட்டம் போன்ற மிகக் கொடூரமான சட்டங்களைக் கொண்டுவந்த காலனியாட்சியாளர்களைப் பற்றிக் குறிப் பாகவும் அரசாங்க ஒடுக்குமுறைகளைப் பற்றிப் பொதுவாகவும் நேரு கூறியதை இன்று சிவில் உரிமை அமைப்புகள் திரும்பச் சொல்ல வேண்டியதும் இன்றுள்ள ஆட்சி யாளர்களுக்கு அதை நினைவூட்டுவதும் அவசியமாகும். 'ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட அரசாங்கம் வெறி கொண்ட கும்பலைப் போல நடந்து கொள்ளத் தொடங்குவது பயங்கரமான விஷயம். அதாவது மிருகத் தனமாகவும் பழிவாங்கும் நோக்கத்துடனும் அநாகரிகமான முறையிலும் நடந்து கொள் வதுமட்டுமே அரசாங்கத்தின் இயல்பான மனப்பாங்காகி விடுவது ஒரு பயங்கரமான விஷயம் "

ஜனநாயக உரிமைகள், ஜனநாயக மதிப்பீடு கள் / நிறுவனங்கள் பற்றிய முழுமையான அக்கறை நமது சமூக உணர்வில் வளர்ச்சி யடையாததறகு நம் நாட்டில் உள்ள பார்ப்ப



படிப்பகம்

www.padippakam.com

னியமும் சாதியமும் நிலப்பிரபுத்துவ பண பாடும் முக்கிய காரணங்களாக உள்ளன. பிற சமுதாயங்கள் பெரும்பாலானவற்றில் மேலோங்கியுள்ள ஆணாதிக்க மனப் பான்மை இங்கும் வலுவாக உள்ளது. எனவே சாதிப்படியமைப்பில் மேலே உள்ள சாதியினர் கீழே உள்ள சாதியினருக்கும் சமுதாயத்தில் உள்ள ஆண்கள் பெண்களுக் கும் சம உரிமை வழங்குவதை எதிர்க்கின் றனர். அதேபோல இந்துத்துவச் சக்திகள் சிறுபான்மை மதத்தினருக்கு — குறிப்பாக முஸ்லீம்களுக்கு சம உரிமை கொடுப்பதை எதிர்க்கின்றனர். மற்றோர் புறம், இந்துத் துவச் சக்திகளுக்கு ஜனநாயக உரிமை மறுக் கப்பட வேண்டும் என்று சில இடதுசாரிகள் கூறுகின்றனர். ஜனநாயக உரிமைகள் என்பன பூர்ஷ்வா உரிமைகள் தானே என்று ஏளனப்படுத்தப்படுவதையும் நாம் காண கிறோம். அல்லது மக்கள் இயக்கங்களை, இடதுசாரி இயக்கங்களை முன்னெடுத்துச் செல்வதற்காக ஒரு நடைமுறை உத்தியாக (Tactice) மட்டுமே (பூர்ஷ்வா) ஜனநாயக உரிமைகள் பார்க்கப்படுகின்றன. ஜன நாயகம் என்பது ஒரு சுயேச்சையான, தன்ன ளவில் மதிப்பும் முக்கியத்துவமுடைய ஒரு விழுமியம் என்பதை அரசாங்கமும் மக்களும் ஏற்றுக் கொள்ளுமாறு செய்வதுதான் சிவில் உரிமை இயக்கத்தின் முன் உள்ள மிகப் பெரும் சவால் என்று கருதலாம்.

''பூர்ஷ்வா /தாராளவாத/ஜனநாயக உரிமை கள்'' என்பன நம் நாட்டிலும் உலகின் பிற பகுதிகளிலும் வரலாற்றின் பல்வேறு கால கட்டங்களில் மக்கள் நடத்திய போராட்டங் களின் விளைவாகத் தோன்றியவையாகும். (''சட்டத்திற்கு முன் அனைவரும் சமம்''; ''சட்டத்தின் பாதுகாப்பு அனைவருக்கும் சரிசமமாகத் தரப்பட வேண்டும்'' — இவை போன்ற பல உரிமைகள்) எனினும் இவற்றை நிறுவனமயமாக்கிய பூர்ஷ்வா வர்க்கம் அவற்றைத் தனது கண்ணோட்டத்திற்கும் நலன்களுக்குமேற்ப வரம்புக்குட்படுத்தியது. ''சட்டத்திறகு முன் அனைவரும் சமம்'' என்பது பொருளாதார சமத்துவம் இருக் கும்போது தான் முழுமையான பலனைத் தரும். அரசியலமைப்புச் சட்டத்திற்கு இறுதி வடிவம் கொடுக்கப்பட்டு (1949 நவம்பரில் அது அரசியலமைப்பு அவையில் (Constituent Assembly) படிக்கப்பட்டபோது உரை யாற்றிய டாக்டர் அம்பேத்கர் கூறினார்:

''பொருளாதாரம் என்பதை எடுத்துக் கொண்டால் பெரும் சொத்துகளை உடைய சிலரையும் மிகக் கொடிய வறுமையில் வாழ்ந்து கொண்டிருக்கும் ஏராளமானே ரையும் கொண்டுள்ள சமுதாயம் நம்மிடம் உள்ளது. 1950 ஜனவரி 26இல் நாம், முரண் பாடுகள் நிறைந்த வாழ்க்கையில் நுழையப் போகிறோம். அரசியலில் நமக்கு சமத்துவ மும் சமுதாய, பொருளாதார வாழ்வில் நமக்கு ஏற்றத் தாழ்வும் இருக்கும். அரசிய லில் ''ஒரு மனிதன் ஒரு வாக்கு'' மற்றும் ''ஒரு வாக்கு — ஒரு மதிப்பு'' என்ற நெறி களை நாம் அங்கீகரிக்கப் போகிறோம். நமது சமுதாய, பொருளாதாரக் கட்டமைப் பின் காரணமாக ''ஒருமனிதன்-ஒருமதிப்பு'' என்ற நெறியை நாம் தொடர்ந்து மறுத்து வருகிறோம். முரண்பாடுகளுள்ள இந்த வாழ்க்கையை நாம் எத்தனை நாளைக் குத்தான் தொடர்ந்து வாழ்வது? எத்தனைக் காலம்தான் நம்மால் சமத்துவத்தைத் தொடர்ந்து மறுத்துக் கொண்டு வர முடியும்? நீண்ட காலம் நாம் அதை மறுத் துக்கொண்டே வருவோமேயானால் நமது அரசியல் ஜனநாயகத்தை அபாயத்திற்குத் தான் உள்ளாக்குவோம். கூடிய விரைவில் நாம் இந்த முரண்பாட்டை அகற்றவேண் டும். இல்லாவிட்டால் ஏற்றத் தாழ்வினால் அவதிப்பட்டுக் கொண்டிருப்பவர்கள் இந்த அரசியலமைப்பு அவை கடுமையாக உழைத்துக் கட்டியெழுப்பியுள்ள அரசியல் ஜனநாயகம் என்ற கட்டமைப்பையே வெடி வைத்துத் தகர்த்து விடுவர்.''[2]

தீர்க்க தரிசனமிக்க வார்த்தைகள்! அவர் சுட்டிக் காட்டிய முரண்பாடு பல ஆண்டு களுக்கு முன்பே முற்றி வெடித்து 'தீவிர வாதம்', 'பயங்கரவாதம்', 'பிரிவினை வாதம்' என்ற வடிவங்களை எடுத்துள்ளன. இவற்றுடன் தொடர்புபடுத்தித்தான் நாம் சிவில்/ மனித/ ஜனநாயக உரிமைகள் என்ற பிரச்சினையைக் காண வேண்டும். மனித உரிமை/ சிவில் 'உரிமை' என்பதை அருவ மாக' பார்க்க முடியாது. இன்றுள்ள சட் டங்களைக் கொண்டே இந்த முரண்பாடு களைத் தீர்த்துவிடுவதும் சாத்தியமுமல்ல.

இதன் பொருள் ஜனநாயகம், சமத் துவம் என்ற கருத்தாக்கங்கள் விமர்சனத்துக் குட்படுத்தப்பட்டு செழுமைப்படுத்தப்பட வேண்டியவையாகின்றன என்பதுதான். சமத்துவம் என்பது ஜனநாயகத்தின் மையக் கூறு. பூர்ஷ்வா தாராளவாத மரபிலுங்கூட அரசியலில் சமத்துவம், சட்டத்திற்குமுன் அனைவரும் சமம் என்பன அங்கீகரிக்கப்பட் டுள்ளன. அம்மரபு மார்க்சியத்தால் மட்டு மல்லாது, பெண்ணிய, சூழலியல் சிந்தனை யாளர்களாலும் விமர்சிக்கப்பட்டுள்ளது.



படிப்பகம்

www.padippakam.com

இந்தியாவில்| தமிழகத்தில் அம்பேத்கரிய, பெரியாரியக் கண்ணோட்டத்திலிருந்தும் தாராளவாத ஜனநாயக மரபு மட்டுமின்றி மார்க்சிய மரபும் விமர்சிக்கப்பட்டுள்ளன. இவை யாவும் சேர்ந்து ஜனநாயகம், சமத்துவம் என்ற கருத்தாக்கங்களைச் செழுமைப் படுத்த உதவுகின்றன. சம தகுதி சம வாய்ப்பு, சம உரிமை, சுயமரியாதை, பாலின சமத்துவம், இயற்கையின் பாதுகாப்பு என அக்கருத்தாக்கங்கள் விரிவடைகின்றன. ஜனநாயகம், சமத்துவம் ஆகியனவற்றின் இக் கூறுகள் தனித்தனியாகப் பிரிக்க முடியா தவையாக்கப்பட்டுள்ளன. சமத்துவத்தின் இந்தப் பன்முகத் தன்மையும்கூட காலப் போக்கில் மேலும் செழுமையடையும்.

இவ்வாறு கூறுவது நாம் சட்டங்களை முற்றாகப் புறக்கணிக்கின்றோம், சட்டங்கள் நமக்குத் தேவையில்லை என்பதல்ல. தான் வாழ்ந்தகாலத்தில் பிரஷ்ய அரசாங்கச் சட்டம் பற்றி மார்க்ஸ் கூறியதைப் போல ''சட்டம் என்பது ஏதும் இல்லாதிருப்பதை விட ஏதேனும் ஒரு சட்டம் இருப்பது நல்லது''. அத்தகைய சட்டம் 'இயற்கை நீதி'க்கு ஏற்றவாறு இரு க வேண்டும் என்று வற்புறுத்திப் போராடுவதும் அதில் வெற்றி கொள்வதும்தான் இன்றைய சிவில் உரிமை இயக்கத்தின் உடனடிக் கடமையாகும். ஏனெனில் 'சட்டத்திற்குமுன் அனைவரும் சமம்' என்ற உலகு தழுவிய (Universal) ஜனநாயக உரிமையை மறுப்பதுதான் எல்லா வகையான சர்வாதிபத்திய அரசாங்கங்களும் (Totalitarian Governments) செய்யும் முக்கிய காரியங்களிலொன்று என்பதை வரலாறு நமக்குச் சுட்டுகிறது. இந்தியாவில் TADA போன்ற சட்டங்கள் இருக்கும்போது மேற்சொன்ன உரிமையை வற்புறுத்துவதன் முக்கியத்துவம் பளிச்செனப் புலப்படுகிறது. இந்தச் சட்டத்தின் கொடூரத்தன்மை பற்றிய விமர்சனங்களையெல்லாம் பெர்டோல்ட் பிரெஷ்ட்டின் கவிதையொன்றிலுள்ள நான்கு வரிகளில் அடக்கிவிடலாம்.

ஒருவரின் குற்றத்தைத் தெட்டத் தெளிவாக
நிருபிக்கும் ஆவணங்கள் தேவை எனக் கேட்பது
பொருளற்ற செயலாகும்
ஏனெனும் அத்தகைய ஆவணங்கள்
இருக்கவேண்டுப் என்ற அவசியம் இல்லை
தாங்கள் குற்றமற்றவர்கள் என்பதற்கான
சான்றுகள் குற்றவாளிகளிடம் இருக்கும்
நிரபராதிகளுக்கோ பல சமயங்களில்
சான்றுகள் ஏதும் இருக்காது.

□□

ஷேக்ஸ்பியரின் மகத்தான நாடகங்களிலொன்று 'லியர் அரசன்' (King Lear). தனது இராச்சியத்தை மூன்று மகள்களிடம் பிரித்துக் கொடுத்துவிட்டு அரசுப் பொறுப்புகளிலிருந்து ஒய்வெடுத்துக்கொள்ள விரும்பும் லியர் அரசன், தன் மூன்று மகள்களில் தன்னை மிக அதிக நேசிப்பவள் யார் என்பதை அவன் அவர்களிடம் வினவுவதிலிருந்து நாடகம் தொடங்குகிறது. முதலிரண்டு மகள்களும் நேர்மையில்லாதவர்கள். தங்களுக்குக் கிடைக்கும் ஆதாயத்திற்காகப் பொய் வார்த்தைகள் சொல்பவர்கள். அவர்களது போலி வார்த்தைகளில் மயங்குகிறான் லியர்.

கடைசி மகள் கோர்டேலியா (லியருக்கு மிகப் பிரியமானவள்) தனது அன்பை மிகைப்படுத்திக் கூறுவதில்லை; லியருக்கு முகஸ்துதி செய்வதில்லை. ''ஒரு மகள் தன் தந்தையை எந்த அளவுக்கு நேசிப்பாளோ அந்த அளவுக்கே தானும் லியர் அரசனை நேசிப்பதாகக்'' கூறுகிறாள். லியருக்கோ கோபம் பொத்துக் கொண்டு வருகிறது. கோர்டெலியாவை நாட்டைவிட்டு வெளியேறுமாறு கூறுகிறான். முதலிரண்டு மகள்களுக்கு நாட்டைப் பிரித்துக் கொடுக்கிறான். மிக விரைவில் அவர்களும் அவர்களது கணவர்களும் சேர்ந்து கொண்டு லியரின் கௌரவத்தைறம் அவனுக்கு இன்னும் இருக்கின்ற அந்தஸ்தையும் பிய்த்தெறிந்துவிடத் தொடங்குகின்றனர். இதற்கிடையே கோர்டேலியா திருமணம் செய்து கொண்டு வெளிநாட்டுக்குச் சென்று விடுகிறாள், அவளை இனி யாரும் பார்க்க முடியாது. நாட்டிற்குத் திருப்பியழைக்க முடியாது என்று தோன்றுகிறது.



படிப்பகம்

www.padippakam.com

நாடகத்தின் முதற்பகுதி முதலிரண்டு மகள்களும் அவர்களது கணவர்களும் ஈவிரக்கமோ, கருணையோ, மானுட நாகரிகமோ சிறிதுமின்றிச் செயல்படுவதையும் தங்களது அதிகாரத்தில் யாரும் குறுக்கிடுவதைச் சகித்துக் கொள்ளாமலிருப்பதையும் சொல்கிறது. பிறகு தொடங்குகின்றன மிகக் கொடூரமான நிகழ்ச்சிகள் கிளெவ்சஸ்டர் கோமகன் லியர் அரசனுக்கு உதவ முயற்சி செய்வதை மூத்த மகள் ரேகனும் அவளது கணவன் கார்ன்வால் கோமகனும் பார்த்து விடுகின்றனர். கிளெவ்சஸ்டர் கோமகனைப் பழிவாங்க அவனது கண்களிரண்டையும் பிடுங்கிவிட முடிவு செய்கின்றனர். முதலில் ஒரு கண் பிடுங்கப்படுகிறது. வலியால் அலறித் துடிக்கும் கிளெவ்செஸ்டர் தன்னைக் காப்பாற்றும்படி சுற்றிலுமிருப்பவர்களைப் பார்த்துக் கதறுகிறான். ஆனால் அங்கு வேறு யாரும் இல்லை. கார்ன்வாவேலுக்கு உதவியாக நிற்கும் மூன்று பணியாட்களைத் தவிர.

பிறகு கார்ன்வால் கிளெவ்சஸ்டரின் மற்றொரு கண்ணையும் பிடுங்கச் செல்லும் போது திடீரென்று அந்தப் பணியாட்களில் ஒருவன், குறுக்கிட்டுப் பேசுகிறான்: ''கையை ஓங்காதீர்கள் என் பிரபுவே; என் குழந்தைப் பருவத்திலிருந்து உங்களுக்கு நான் பணிவிடை செய்துள்ளேன் ஆயினும் இப்போது உங்கள் கையை ஓங்காமலிருக்கும்படி கூறுவதைவிடச் சிறந்த சேவையை நான் தங்களுக்கு ஒரு போதும் செய்ததில்லை.'' ரேகனும் கார்ன்வாலும் ஆத்திரமடைகின்றனர். கார்ன்வாலுக்கும் அந்தப் பணியாளுக்கு மிடையே நடக்கும் சண்டையில் கார்ன்வால் படுகாயமடைகிறான். சினமிகுந்த ரேகன் மற்றொரு வாளை எடுத்து ''ஒரு குடியானவனுக்கு இத்தனை திமிரா'' என்ற வசைமொழியுடன் அந்தப் பணியாளனின் பின்புறமாக வந்து அவனைக் குத்திக் கொன்று விடுகிறாள்.

முதலிரண்டு மகள்கள், அவர்களது கணவர்கள் ஆகிய நால்வர் கும்பலில் மிகக் கொடியவன் கார்ன்வால். வாட்போரில் காயமடைந்த அவன் பின்னர் அந்தக் காயத்தாலே சாகிறான். இது இரு சகோதரிகளின் உறவிலுள்ள சமநிலையைக் குலைக்கிறது மற்றொரு சகோதரியின் கணவன் அல்பேனி கோமகன் படிப்படியாகக் 'கட்சி மாறுகிறான். இந்த நிகழ்ச்சிகள் யாவும் லியர் அரசனும் கோர்டேலியாவும் இறுதியில் மரணமடைவதைத் தடுத்து நிறுத்தி விடுவதில்லை. எனினும் அந்தப் பணியாளனின் செயல் தீய சக்திகள் முழுமையான வெற்றியடைவதைத் தடுத்து விடுகிறது. மிக இருண்ட சூழலிலும்கூட, மனித உரிமையை, மானுட நாகரிகத்தைக் காப்பாற்றுவதற்கு ஒரு சாமான்ய மனிதனாலும் முயற்சி செய்ய முடியும் என்பது ஷேக்ஸ்பியரின் நாடகம் தெரிவிக்கும் ஒரு மகத்தான செய்தி.

சிவில் உரிமைச் செயலாளர்கள் வகிக்கும் பாத்திரம் ஏறத்தாழ இந்தப் பணியாள் வகித்த பாத்திரம் போன்றதுதான். ○

## குறிப்புகள்

(தனது அனுபவத்தையும் அவ் அனுபவத்திலிருந்து பெற்றடைந்த முடிவுகளையும் பகிர்ந்து கொண்ட டாக்டர் கே. பாலகோபால் அவர்களுக்கு மிகவும் கடமைப்பட்டுள்ளேன். அவரது ஆழமான, தந்த கருத்துக்கள் இக்கட்டுரையில் இடம் பெற்றுள்ளன — எஸ்.வி.ஆர்.

1. நேருவின் இக்கூற்றும் இக்கட்டுரையில் இடம் பெற்றுள்ள அவரது பிற கூற்றுகளும் கீழ்க்காணும் நூலிலிருந்து பெறப்பட்டவையாகும்: (Smitu Kothari and Harsh Sethi (Ed) RETHINKING HUMAN RIGHTS : CHALLENGES F( R THEORY AND ACTON, New Horizon Press New Yark, 1989 (பக்கம் 37—41) 1947 ஆம் ஆண்டிற்குப் பிறகு நேரு, சிவில் உரிமைகள் பற்றிய தனது கருத்துகளையும் சிந்தனைகளையும் கைவிட்டு விட்டார். 1948இல் ICLUவின் பம்பாய்க் கிளையில் நிர்வாகக் குழுக் கூட்டத்தில் படிக்கப்பட்ட கடிதமொன்றை வி எம். தார்க்குண்டே நினைவுகூர்கிறார். அன்று ICLUவில் செயலார்வமிக்கவராக இருந்த வாஸெ (Waze) என்பவருக்கு எழுதப்பட்ட அக்கடிதத்தில் நேரு கூறியிருந்ததாவது: ''இந்தியா இப்போது சுதந்திர மடைந்துவிட்டதால் CLUவுக்கு இனி தேவை இல்லை' பம்பாய் CLU நிர்வாகக் குழு நேருவின் கருத்தை நிராகரித்து தொடர்ந்து செயல்பட முடிவு செய்தது. (மேற்சொன்ன நூல், பக்கம்



படிப்பகம்

www.padippakam.com

137) 1935ஆம் ஆண்டு இந்திய அரசாங்கச்சட்டப்படி நடந்த தேர்தலில் வெற்றி பெற்று ஐந்து மாநிலங்களில் இரண்டாண்டுகள் ஆட்சிபுரிந்த காங்கிரசார், பிரிட்டிஷாரின் கொடிய சட்டங்கள் பலவற்றைப் பயன்படுத்தினர் தமிழகத்தில் 1937-39 இல் நடந்த இந்தி எதிர்ப்புப் போராட்டத்தை ஒழிக்க இந்தியத் தண்டனைச் சட்டப் பிரிவுகள் 124 ஏ (அரச துரோகச் சட்டம்) முதலியன சி. ராஜகோபாலாச்சாரியார் அரசாங்கத்தால் பயன்படுத்தப்பட்டன. பம்பாய் மாநிலத்தில், தொழிலாளர்கள் உரிமையை நசுக்கும் தொழிலுறவுச் சட்டத் திருத்தம் நிறைவேற்றப் பட்டது. தெலுங்கானா போராட்டத்தைக் கொடூரமாக ஒடுக்கியது நேரு அரசாங்கம்தான். இவ்வாறு நேருவின்/காங்கிரசின் நடைமுறை எத்தகையதாக இருப்பினும் சிவில் உரிமைகள் பற்றிய அவரது கருத்துக்கள் பல இன்றும் பொருத்தப் பாடுடையவையாக உள்ளன.

''சுதந்திர இந்தியாவில் சிவில் உரிமை அமைப்புக்குத் தேவையில்லை'' என்ற நேருவின் கருத்தை மறுத்து, சிவில் உரிமைகள் என்ற பிரச்சினையைப் பொறுத்தவரை எந்தச் சூழலிலும் சமரசம் செய்து கொள்ளக் கூடாது என்ற கொள்கையில் உறுதியுடன் இருந்த சில அரசியல் தலைவர்களையும் நாம் நினைவு கூரவேண்டும். இவர்களில் குறிப்பிடத் தக்கவர் சோசலிஸ்ட் தலைவர் டாக்டர் ராம் மனோகர் லோகியா. 1950களில் அன்றைய திருவாங்கூர் — கொச்சி மாநிலத்தில் பிரஜா சோசலிஸ்ட் கட்சித் தலைவர் பட்டம்தாணுப்பிள்ளை முதலமைச்சராக இருந்தார். அவரது ஆட்சிக் காலத்தில் கம்யூனிஸ்ட் தொழிற்சங்கத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள் மீது நடத்தப் பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தைக் கண்டித்து அறிக்கை விடுத்த டாக்டர் லோகியா, அந்த அமைச்சரவை உடனடியாகப் பதவி விலகவேண்டும் என்று வற்புறுத்தினார் சோசலிஸ்ட் இயக்கத்தில் ஏற்பட்ட பிளவுக்கு லோகியாவின் இந்த அறிக்கையும் ஒரு முக்கிய காரணமாக அமைந்தது.

2. டாக்டர் அம்பேத்கரின் இக்கூற்று இடம் பெற்றுள்ள நூல்: Thomas Mathew, AMBEDKAR: REFORM OR REVOLUTION Segmant Books, New Delhi, 1992 P.108. □

---

# தமிழ் சொல்லாடலும் மானிடவியல் விவாதங்களும்

— ச. பிலவேந்திரன்

## I

சாதியப் படிநிலை கொண்ட இந்தியச் சமூக அமைப்புக்குள் தீண்டத்தகாதார்களின் (தலித்துகள்) நிலை பற்றி ''An Untouchable Community in South India: Structure and Consensus'' என்றொரு நூலை மிஷல் மொஃபாத் என்பவர் எழுதி ஏறத்தாழ 20 ஆண்டுகள் ஆகிவிட்டன. இநத நூல் இந்தியவியல், இந்திய மானுடவியல், சமூகவியல் வட்டாரங்களில் குறிப்பிடத்தக்க அதிர்வலைகளை ஏற்படுத்தியிருக்கிறது; மேலும் இது இந்திய தலிதுகள் பற்றிய ஆய்வில் முதன்மைத்துவம் வாய்ந்ததாகவும் கருதப்படுகிறது. தனக்கு முன்பாக இந்தியச் சாதி அமைப்பை ஆய்வு செய்த லூயி துய்மோனை அடியொற்றியே மொஃபாத்தின் ஆய்வும் அமைகின்றது. லூயி துய்மோன் (1972) எழுதிய Homo Hierarchicus'' என்னும் நூல் 'இந்தியச் சாதிய அமைப்பு என்பது அரசியல், பொருளாதாரம் ஆகியவற்றின் அடிப்படையில் அமையவில்லை; மாறாக அது சடங்கியல் தளத்தில் சமூகங்களின் தூய்மை — தீட்டு என்னும் முரணை அடிப்படையாகக் கொண்டு இயங்குகிறது' என்னும் கோட்பாட்டை முன்வைத்தது. துய்மோன் அமைப்பு என்பது முரணகளின் (Opposi-tions) அடிப்படையில் மூன்று வகையான பணபுகளைக் கொண்டதாக இருக்கிறது



படிப்பகம்

www.padippakam.com

என்கிறார்; அவை: 1. ஓர் அமைப்பின் கூறுகளுக்கிடையிலான உறவுகள்; 2. அக் கூறுகளுக்கும் அமைப்பின் முழுமைக்கும் இடையிலான உறவுகள்; 3. இவ்வுறவுகள் மேல்-கீழ் என்னும் படிநிலையில் அமைந்துள்ளன என்பனவாம். ஓர் அமைப்பானது அதன் கூறுகளை நோக்கியிராமல் அதன் முழுமையை நோக்கியே இருக்கின்றது; மேலும் அம்முழுமையே அதனைக் கட்டமைக்கும் கூறுகளைக் கட்டுப்படுத்துகிறது. அமைப்பு முழுமை மேல் கீழ் — என்னும் படிநிலையை அடிப்படையாகக் கொண்டது எனினும் அதற்கும் கீழாகத் தூய்மை—தீட்டு, மேல்—கீழ் என்னும் கூறுகளும் ஒன்றையொன்று சார்ந்திருப்பினும், கூறுகளை முழுமையே எப்போதும் கட்டுப்படுத்துகிறது (துய்மோன், 1972 :77-78).

சாதிய அமைப்புப் பற்றிய துய்மோனின் கோட்பாட்டை தென்னிந்தியத் தலித்துகளின் சமூக, சாதி அமைப்புடன் ஒப்பிட்டுப் பார்ப்பதாக மொஃபாத் தனது ஆய்வைத் தொடங்குகிறார். மொஃபாத் செங்கல்பட்டு மாவட்டத்தின் தென் பகுதியில் உள்ள எண்டாவூர் (பெயர் கற்பனையானது) என்னும் சிற்றூரைத் தமது ஆய்வுக்கான களமாகத் தேர்ந்தெடுத்து இருக்கிறார். எண்டாவூர் என்னும் சிற்றூர் மக்களின் நிலைமை என்ன என்பதைவிட, அச்சிற்றூரின் தலித்துச் சமூகம் பற்றியே இவ்வாய்வு கவனம் செலுத்துகிறது.

தலித்துகள் தங்களுக்கான தனித்ததொரு பண்பாட்டினைக் கொண்டுள்ளனரா? அல்லது, அதற்கு மாறாகத் தம்மைச் சுற்றியுள்ள தலித் அல்லாத பெரும்பான்மை இந்திய மக்களின் பண்பாட்டை, விழுமியங்களைத் தமக்கான ஆனவொன்றாகக் கொண்டுள்ளனரா?' என்பதே மொஃபாத் ஆய்வின் கருதுகோள் சுருக்கம்.

இதற்கான பதிலை மொஃபாத் நூலின் தொடக்கத்திலேயே தந்து விடுகிறார். ''அவர்கள் தங்களுக்கென தனித்ததொரு துணைப் பண்பாட்டினைக் கொண்டிருக்கவில்லை. இந்தியத் தேசிய சமூகத்தின் ஒட்டுமொத்த அமைப்பிலிருந்து (Global Indian Village Culture) அவர்கள் விலக்கப்பட்டோ அந்நியப்படுத்தப்பட்டோ இருக்கவில்லை. தலித்துகள் மிகவும் சிக்கலான பின்னலமைப்பைக் கொண்ட பண்பாட்டினைக் கொண்டிருக்கின்றனர்; அதன் மதிப்பீடுகளும், வரையறைகளும் ஒட்டுமொத்த இந்தியச் சிற்றூர்ப் பண்பாட்டின் மதிப்பீடுகளையும் வரையறைகளையும் ஒத்திருக்கின்றன... இந்திய தலித்துகளின் பண்பாட்டு அமைப்பானது இந்தியாவின் ஆதிக்கப் பண்பாட்டின் சமூக ஒழுங்கமைப்பினைக் கேள்விக்குள்ளாக்குவதும் மறுமதிப்பீடு செய்வதும் இல்லை. மாறாக அது அவ்வாதிக்கப் பண்பாட்டினைப் போன்றதொரு அமைப்பொழுங்கைத் தனது பண்பாட்டிற்குள்ளும் தொடர்ந்து மறுபடைப்புச் செய்து கொண்டிருக்கிறது'' (மொஃபாத் 1979:3)

இதனையொட்டி இந்திய தலித் பண்பாட்டில் (1) மறுபடைப்பாக்கம் செய்தல் (Rep'ication) (2) ஒத்திசைவு கொள்ளுதல் (Consensus) என்னும் இரு பண்பாட்டுக் கருத்தமைவுகள் இயங்குவதாக மொஃபாத் கருதுகிறார். இந்திய தேசியச் சமூகமானது அதன் வாழ்தளத்திலிருந்து தலித்துகளை முழுவதுமாக விலக்கி வைப்பதுமில்லை. அதே சமயத்தில் முழுவதுமாக தனது வாழ்தளத்திற்குள் இணைத்துக் கொள்வதுமில்லை தலித்துகள் ஆதிக்கச் சமூகத்தின் வட்டத்துக்குள் இணைத்துக் கொள்ளப்படுகிறபோது, அவர்கள் தங்கள் தங்கள் சாதிகளுக்குப் பணிக்கப்பட்ட கீழ்நிலைப் பணிகளை நிறைவேற்றுவதன் மூலம் ஆதிக்கச் சமூகத்தின் இருப்பை நிறைவு செய்கின்றார்கள்; விலக்கி வைக்கப்படுகிற போது, தலித்துக்கள் தங்கள் சாதிகளுக்குள்ளேயும், வேறொரு சூழலில் கிளைச் சாதி அமைப்புகளுக்குள்ளேயும் இந்திய தேசியச் சமூகத்தின் மதிப்பீடுகளையும், நிறுவனங்களையும், படிநிலையின் வேலைப் பிரிவினை அமைப்புகளையும் மறுபடைப்புச் செய்து கொள்கின்றனர். தலித்துகள் இந்திய தேசியச் சமூகத் தளத்துக்குள் தங்களின் அடிமட்ட நிலையினையும், அது தொடர்பாக விதிக்கப்பட்ட பணிகளை நிறைவேற்றும் கடமையையும் ஏற்றுக் கொள்வது என்பதே ஒரு பரந்த அளவிலான பண்பாட்டு ஒத்திசைவை காட்டுகிறது. இதன் மூலம் தெய்வம்—மனிதன் என்னும் ஆதிக்கச்சமூக ஒழுங்கும் நிலைப்படுத்தப்படுகின்றது. அதே வேளையில், தலித்துகள் இந்தியத் தேசிய சமூக வாழ்வுத்தளத்திலிருந்து விலக்கி வைக்கப்படுகின்றனர் எனில் அவர்கள் கெட்ட ஆவிகள் துடியான தெய்வங்கள் போன்றவற்றோடு கொள்ளும் நெருங்கிய தொடர்பும், பணி நிமித்தம் தொடர்புகொள்ளும் அழுக்கும், அதனால் பெறும் சமூகத்தீட்டும் காரணங்களாகின்றன. இந்த விலக்கப்பட்ட சூழலில் அவர்கள் தமக்குள்ளேயே ஒருவித தேசியச்



படிப்பகம்

www.padippakam.com

சமூக அமைப்பை மறுபதிப்புச் செய்து கொள்கின்றனர்.

இவ்வாறு எந்த ஒரு ஆதிக்க அமைப்புத் தங்களைப் புறந்தள்ளுகிறதோ அதேஅமைப்பின் நிறுவனங்களைத் தமக்கான ஒன்றாக மறுபதிப்புச் செய்து கொள்வதே அந்த ஆதிக்க அமைப்பினை முழுமையும் ஒத்துக் கொள்வது தானேயொழிய வேறொன்றுமில்லை என்று மொஃபாத் வாதிடுகிறார். மேலும்மொஃபாத் ''தலித்துகள் தங்களுக்கான அமைப்பை ஆதிக்கச் சமூகத்திலிருந்து மறுபதிப்புச்செய்துகொள்ளத் தேவையான சாத்தியக்கூறுகளான தேவையான மக்கள் தொகை, பண்பாட்டுச் சூழல் போன்றவை இருந்தும் ஒரு தலித் சமூகம் மறுபடைப்புச் செய்யவில்லையெனில் அச்சமூகத்தின் பண்பாட்டின் அடிமட்ட அமைப்பிலேயே ஓர் உடைசல் இருக்கவேண்டும் என்கிறார் (1979: 298). இத்தகைய உடைசலை எண்டாவூரில் தாம் காணவில்லை என்றும் மொஃபாத் குறிப்பிடுகின்றார்.

எண்டாவூர் தலித் சமுதாயத்தில் மறுபடைப்பாக்கம மூன்று தளங்களில் மிகத் தெளிவாக நடைபெறுகிறது என்று கூறும் மொஃபாத் பல எடுத்துக்காட்டுகளையும் தருகின்றார்.

அ) தங்களுக்குள்ளேயான் சாதிய அமைப்பைப் படிநிலை கொண்ட சாதிகளாகப் பிரித்தல்;

ஆ) எண்டாவூர் பறையர் சாதியினர் (எண்டாவூர் சிற்றூரின் தலித்சமுதாயத்தில் பறையர் சாதியே பெரும்பான்மை எண்ணிக்கையையும், சேரியின் ஆதாரங்களையும் கொண்டுள்ளனர்) தமக்குள்ளேயே படிநிலை கொண்ட துணைச் சாதியமைப்பைக் கொண்டுள்ளனர்;

இ) சிற்றூர்த் தேவதை (நாட்டுப்புறச் சமயம்) வழிபாட்டில் இந்து சமயத்தை மறுபிரதி செய்கின்றனர்.

தலித் சமூகம், ஆதிக்க இந்து சமூகத்தின் முப்படைப் படிநிலைச் சாதிய அமைப்பைப் பின்பற்றி தங்களுக்குள்ளும், தங்களின் கிளைச் சாதிகளுக்குள்ளும் பிரிவினை ஏற்படுத்தியிருப்பதை சுதாகர் ராவ் (1991: 135) தரும் வரைபடம் விளக்கும்.

**எண்டாவூர் சாதி, துணைச் சாதிப் பாகுபாடுகள்**






படிப்பகம்

www.padippakam.com

பல்வேறு சாதிப்பிரிவுகளாகக் காணப்படும் எண்டாவூர் தலித்துகளும், தங்களுக்குள்ளாக மேல்-கீழ் படிநிலை அமைப்பு உறவுகளைக் கொண்டுள்ளனர். எண்டாவூரைப் பொறுத்தவரை தலித்துகளுக்குள் வள்ளுவர் பண்டாரம், பறையர், வண்ணார், சக்கிலியர், குருவிக்காரர் என்னும் ஐந்து வித சாதிகளை மொஃபாத் அடையாளப் படுத்துகிறார்.

இவர்களுக்குள் வள்ளுவர் பண்டாரத்தினர் மிக உயர்ந்த நிலையில் இருக்கின்றனர். இவர்கள் அனைத்துத் தலித் சாதிகளுக்கும் வாழ்க்கைவட்டச் சடங்குகளில் சடங்குகளை நடத்திவைக்கும் பூசாரி வேலை செய்கின்றனர். இவர்கள் 'தலித்துகளின் பிராமணர்' எனக் குறிப்பிடப் படுகின்றனர். இவர்கள் மாட்டிறைச்சியைத் தவிர்க்கின்றனர்; வருடத்தில் நான்கு மாதங்கள் மரக்கறி உணவையே உண்கின்றனர். இவர்கள் தங்களை மற்ற தலித்துகளிலும் தூய்மையானவர்கள் என்றும், தனித்தன்மை வாய்ந்தவர்கள் என்றும் கூறிக் கொள்கிறார்கள்.

இவர்களுக்கு அடுத்த நிலையில் பறையர்கள் இருக்கின்றனர். எண்டாவூரின் தலித்துகளில பெரும் எண்ணிக்கையைப் பறையர்கள் கொண்டிருக்கிறார்கள். இவர்களே சேரியின் பெரும்பான்மை ஆதாரங்களைத் தம்மகத்தே கொண்டுள்ளனர்.

வண்ணார் சாதியினர் தலித்தல்லாத மேல் சாதிகளுக்கு மட்டுமே பணிபுரிந்து தலித்துகளுக்குப் பணிபுரிய மறுக்கவே, பறையச் சாதியினர், தங்களுக்குள்ளே ஒரு பிரிவினரைத் தங்களுக்குச் சேவை செய்ய ஒதுக்கியுள்ளனர். இவர்களே அரிசன வண்ணார் எனப்படுகின்றனர். இவர்கள் மிகவும் தீட்டானவர்கள்; பறையர் தெருவுக்குள் நுழைய முடியாது. பறையர் சாதியினரின் முதல் மாதவிலக்கு உடைகளைத் தூய்மைப்படுத்துவது, திருமண நாட்களில் பந்தல் அலங்கரிப்பது, ஈமச் சடங்குகளில் முடிதிருத்துவது, போன்ற பணிகள் செய்வது இவர்களது கடமையாகும் இவர்கள அகமண முறையைப் பின்பற்றுகின்றனர்.

தமிழகத்தின் சிற்றூர்களில் சக்கிலியர் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையில் இருந்தாலும், எண்டாவூரில் மூன்று குடும்பங்கள் உள்ளன என மொஃபாத் குறிப்பிடுகிறார்.

இவர்கள், செத்துப்போன கால்நடைகளையும் தோல் பொருட்களையும் தின்றுவதால் தாழ்ந்தவராக எண்ணப்படுகின்றனர். இவர்களது தெருவுக்குள் நுழைவது கூடத் தம்மைத் தீட்டுப்படுத்தும் எனப் பறையர் எண்ணுவதாக மொஃபாத் குறிப்பிடுகிறார்.

குருவிக்காரர்கள் சாதி அமைப்பில் கடை நிலையில் உள்ளவர்கள். இவர்கள் காகங்களை உண்பதால் மிகவும் தாழ்ந்தோராகக் கருதப்படுகின்றனர். இவர்கள் பிச்சை எடுத்தும், பிற சாதியினருக்குச் சோதிடம் சொல்லியும், தங்கள் பிழைப்பை நடத்துகின்றனர்.

இவ்வாறு பெரிய அளவில் தங்களுக்குள் படிநிலை அமைப்பைச் செயல்படுத்தி வரும் தலித்துகள், தங்கள் சாதியின் உள் அமைப்புக்குள்ளும் அதைப் பின்பற்றுகின்றனர்.

II. எண்டாவூரின் 110 தலித் குடும்பங்களில்98 குடும்பங்கள் பறையர் சாதியைச் சார்ந்தவை. இவர்கள் 'சங்குப் பறையர்' எனத்தம்மைக் கூறிக்கொள்கின்றனர். இவர்களிடம் அகமணமுறை காணப்படுகிறது. இச்சாதிப் பிரிவு மேலும் 1) தலையாரி, 2) பண்ணைக்கார், 3) வெட்டியான் என்னும் மூன்று 'வகையறா'க்களாகப் பிரிந்திருக்கிறது. இம்மூன்று வகையறாக்களில் 'தலையாரி' பிரிவு மிக உயர்ந்ததாகக் கருதப்படுகிறது. இவர்களில் சிலர் சிற்றூர் நிர்வாக அலுவலருக்கு (Village munsif) உதவியாளராகப் பணி செய்கின்றனர். இவர்களுக்கு அடுத்தநிலையில் உள்ள பண்ணைக்கார் எண்ணிக்கையில் மிகுந்து உள்ளனர். இவர்கள் தமக்கு அடுத்த நிலையிலுள்ள வெட்டியான் பிரிவினருடன் தொடர்பு கொள்வதைத் தவிர்க்கின்றனர். பண்ணைக்கார் பிரிவினரில் ஒருவர் மட்டும் இழவுச் செய்தி சொல்பவராக (வரையன்) செயல்படுகிறார். இதனாலேயே இவரது நிலை இழிவானது என்று கருதப்படுகிறது. பண்ணைக்கார் பிரிவிலும் தூய்மை—தீட்டுப் பிரிவு இருக்கிறது என்றும் நம்புகின்றனர். பறையரில கடைநிலையாக வெட்டியான் பிரிவினர் உள்ளனர். இவர்கள் தோட்டி எனப்படுகின்றனர். இவர்கள் இறந்து போன விலங்குகளை ஊரிலிருந்து அகற்றுவது, கல்லறை தோண்டுதல், சுடுகாடு காத்தல் முதலிய பணிகளைச் செய்கின்றனர். இவர்களே 'பறை' என்னும் இசைக்கருவி



படிப்பகம்

www.padippakam.com

யைக் கையாண்டு செய்தியறிவித்தல் பணியைச் செய்கின்றனர். இவர்களது பறை திருமணம் முதலிய நற்செயல்களின் போது பயன்படுத்தப்படுவதில்லை.

தலித்துகளுக்குள் காணப்படும் இத்தகைய பிரிவுகளும், பிரிவுகளுக்குள்ளான பிரிவுகளும், அகவய அமைப்பிலும்கூட படிநிலை அமைப்பைக் கொண்டிருத்தல் அவர்களின் ஒத்திசைவுப் பண்பைத் தெளிவாக உறுதிப்படுத்துகிறது என மொஃபாத் (1979 : 215) முடிவு செய்கிறார். அத்தோடு நில்லாமல் 'தலித்துகளின் அனைத்துப் பிரிவினருமே ஓர் அமைப்பு முழுமைக்குள் தங்களின் கீழ் நிலையையும், தங்களுக்குள்ளான படிநிலையையும் வரையறுக்கும் அடிப்படை விதி (Criteria) களை ஒத்துக் கொள்வதையே காட்டுகிறது' என மொஃபாத் (1979 : 217) மேலும் முடிவு செய்கிறார்.

iii. தலித்துகளின் சமயம் பற்றி விளக்குவதற்கு இறுதி அத்தியாயத்தையே மொஃபாத் ஒதுக்கியுள்ளார். சமயம் என்னும் தளத்திலும் கூட தலித்துகள் ஆதிக்கச் சமூகத்தின் சமய அமைப்பை ஒன்று மறு படைப்புச் செய்து கொள்கின்றனர் அல்லது அதனோடு ஒத்திசைவு கொள்கின்றனர். மொஃபாத்தைப் பொறுத்தவரை எண்டாவூர்ச் சிற்றூரின் சமயம் மனிதர்களுக்கிடையிலும் படிநிலை அமைப்பையே பிரதிபலிக்கிறது. தெய்வங்களுக்கிடையிலும் ஒரு படிநிலை அமைப்பு இயங்குகிறது மனிதப் படிநிலைக்கும் தெய்வப் படிநிலைக்கும் இடையே ஓர் அமைப்பொற்றுமை (Homology) இருப்பதாக மொஃபாத் விளக்குகிறார். இந்தத் தெய்வப் படிநிலை அமைப்பும் கூடத் தூய்மை—தீட்டு, அதிகாரம்—பணிவு என்ற அடிப்படையிலேயே இயங்குகின்றது இருந்தாலும் தலித்துகள் மனிதப் படிநிலையில் கீழ் நிலையில் இருப்பது போலவே இவர்களது சமய வாழ்வில் வழிபடும் தெய்வங்களும், சடங்குகளும் கீழ்நிலையினவாக இருக்க வேண்டும் என்பதில்லை. பிராமணர்களது சமஸ்கிருத மந்திரம், முடிதிருத்துவோரின் மங்கள இசை ஆகியவை தவிர ஆதிக்கச் சமூகத்தின் இந்து சமய வழிபாட்டில் காணப்படும் அனைத்துக் கூறுகளும் தலித்துகளிடமும் இருப்பதைக் காண முடிகிறது. தலித்துகள் இந்து சமயத்தில் பங்கு பெற்றாலும் அல்லது வெளியிலேயே தங்களுக்கானதொரு சமமான இந்து அமைப்பை படைத்துக் கொண்டாலும், தலித்துகளும் மற்றெல்லோரையும் போன்றே இந்துக்கள்தான் என்பதில் ஐயமில்லை என்கிறார் மொஃபாத் தெய்வங்களின் படிநிலையில் 'குலதெய்வம்' என்பது தாழ்நிலையில் உள்ளது; இருப்பினும் அது தலித்துகளிடம் முதன்மையாக உள்ளது போலவே பிற ஆதிக்கச் சாதிகளிடமும் உள்ளது. அது போன்றே 'கர்மம்' பற்றிய நம்பிக்கையும் தலித்துகளிடம் உறுதியின்றிக் காணப்படுவது போலவே பிற ஆதிக்கச் சாதிகளிடம் காணப்படுகின்றது. இவ்வாறாகத் தலித்துகளின் சொல்லாடல் பற்றிய மொஃபாத் கட்டமைப்பைக் கூறலாம்.

## II

மொஃபாத்தின் ஆய்வை முழுமையான பரிசீலனைக்கு முதலில் ஆட்படுத்துபவர் ராபர்ட் டெலீஜ் என்பவர். இவர் மொஃபாத் தனது நூலை எழுதி வெளியிட்ட சில ஆண்டுகளில் இராமநாதபுர மாவட்டத்துத் தலித்துகள் பற்றிய ஆய்வை மேற்கொள்கிறார்,

மொஃபாத் கருதுவதுபோல 'ஒத்திசைவு', 'மறுபடைப்பாக்கம்' என்ற இரண்டுக்குமிடையே எந்தவித நெருங்கிய உறவும் இல்லை. மறுபடைப்பாக்கம் ஒத்திசைவை உள்ளடக்கியது அல்ல. மேலும் தலித்துகள் எப்போதும் ஆதிக்கச் சாதிகளின் சாதியச் சித்தாந்தங்களை அப்படியே ஏற்றுக் கொள்கின்றனர் என்றோ, அதற்கீடான சித்தாந்த அமைப்பை தமக்குள் மறுபதிப்புச் செய்து கொள்கின்றனர் என்றோ கூற முடியாது. எல்லாவற்றுக்கும் மேலாக தலித்துகள் தங்களுக்குக் கீழான சாதிகளின் தாழ்ந்த தன்மையை நியாயப்படுத்த ஆதிக்க தேசிய சாதிய அமைப்பில் உள்ள தங்களின் தாழ் நிலையை ஒத்துக் கொள்கின்றனர் என்பதனையும் ஏற்றுக் கொள்வதற்கில்லை; மாறாக சமீபத்திய ஆய்வுகள் தங்களின் தாழ்ந்த நிலைக்குத் தமது சாதியிலுள்ள அகவயம் சார்ந்த தீட்டுத் தன்மையே காரணம் என்பதை தலித்துகள் யாருமே ஏற்றுக் கொள்வதில்லை என்பதையே காட்டுகின்றன என்கிறார்.

மொஃபாத் தமது கருத்துகளைத் தலித்துகளின் சாதியப் பண்பாட்டின் மூன்று மட்டங்களில் வைத்து விளக்கியமை முன்பே சுட்டப்பட்டுள்ளது,





படிப்பகம்

www.padippakam.com

''மறுபடைப்பாக்கம் என்னும் கருத் தாக்கமே பொருள் மயக்கம் தரக்கூடியது; மறுபடைப்பாக்கம் என்பது தலித்துகளின் சாதிப் பிரிவினைகள் தங்களுக்குள்ளேயே ஒருவரை ஒருவர் அதிகம் சார்ந்திருக்கும் தன்மையுடன் கூடிய சமூகப் படிநிலை அமைப்பை மறுபடைப்புச் செய்து கொள்ள வழிகோலுகிறது என்று பொருள் படுத்த லாம்... எனினும் என்னுடைய கள ஆய்வுத் தரவுகள் தலித் சாதிகளுக்கிடையே வேறு பாடுகள் வலுத்துக் காணப்பட்டாலும் அவை ஒரு முழுமையான மேல்-கீழ் படி நிலை அமைப்போடு ஒத்திருக்கவில்லை என்பதையே காட்டுகின்றன'' என்கிறார் ராபர்ட் டெலிஜ் (1992: 161).

II

மேலோட்டமாகப் பார்க்கும்போது மொஃபாத் கூறும் சாதியப் படிநிலை அமைப்பும், மறுபடைப்பாக்கமும் உண்மை என்றே தோன்றுகிறது. இந்தியா முழுவது முள்ள தலித்துகள் பற்றிய தரவுகளைத் திரட்டிப் பார்க்கும் போது கூட இது உண்மை என்றே எண்ணத் தோன்றுகிறது என்று டெலிஜ் கூறினாலும், மொஃபாத் தாம் நிறுவ எடுத்துக் கொண்ட மூன்று தளங்களிலும் டெலிஜ் தனது பார்வையைச் செலுத்துகிறார்.

முதலாவதாக, தலித்துகள் தங்களுக்குள் பல்வேறு சாதியினராகப் பிரிந்து கிடக் கின்றனர். தமிழகத்தைப் பொறுத்தவரை பள்ளர், பறையர், சக்கிலியர் என்னும் இம்மூன்று சாதிகளே பெரும்பான்மையின ராக இருக்கின்றனர். இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள 'வாழ்கிற மாணிக்கம்' என்னும் சிற்றூரில் 'இந்துப் பள்ளர்', 'இந்துப் பறையர்','கத்தோலிக்கப் பறையர்' என்னும் மூன்று பிரிவே பெரும்பான்மை யினர் என்கிறார் டெலீஜ். இவர்களுக் கிடையே யார் உயர்ந்தவர் என்ற போட்டி நெடுங்காலமாக இருந்து வருகிறது. ஏறத் தாழ 1806 வாக்கிலேயே கூட இந்தப் போட்டி பற்றி துபுவா என்னும் பிரெஞ்சுப் பாதிரியார் குறிப்பிட்டுள்ளார். 'மாட்டி றைச்சி உண்பதில்லை என்பதால் நாங்களே பறையர்களைவிட உயர்ந்தவர்கள்' என்று பள்ளரும், 'நாங்கள் வலங்கைச் சாதிப் பிரிவினர் என்பதால் பள்ளர்களைவிட உயர்ந்தவர்கள்' எனப் பறையர்களும் கூறிக் கொண்டுள்ளனர். வள்ளுவர் எனப் படும் கிளைச் சாதியினர், 'பறையர் களின் பிராமணர்' எனக் கருதப்பட்டனர். இவர்கள் மற்ற தலித் சாதிகளை ஆட்சி செய்தனர் என்றும் கூட துபுவா குறிப்பிடு கிறார் (துபுவா 1906 (1806) : 60–61). வட இந்தியாவிலும் இது போன்று 'சாமர்' என்னும் சாதியினர் பல்வேறு கிளைச் சாதி களாகப் பிரிந்து கிடக்கின்றனர்; இக்கிளைச் சாதியினர் தங்களுக்குள் உணவுப் பரிமாற் றம் கூடச் செய்து கொள்வதில்லை என பிரிக்ஸ் குறிப்பிடுகிறார். சில வேளைகளில் ஒரு குறிப்பிட்ட கிளைச் சாதி நபர் இன் னொரு கீழ்நிலைச் சாதியால் தீட்டுப்பட்டு விட்டால் சாதியிலிருந்து விலக்கி வைத் தலும் நிகழ்கிறது (பிரிக்ஸ் 1920) ஆந்திர மாநிலத்தில் 'மாதிகா' என்னும் சாதி ஆறு கிளைச் சாதிகளாகப் பிரிந்து கிடக்கிறது இவர்களுக்கான சமூகக் கடமைகளும் தெளி வாக வரையறுக்கப்பட்டுள்ளன. இவர்களில் 'தக்கால்' எனப்படும் பிரிவினர் மிகவும் கீழ்நிலையில் இருந்தாலும் வேறு எந்தச் சாதியினரிடமிருந்தும் ஏன் ஒரு பிராமண ரிடமிருந்து கூட உணவு வாங்குவதில்லை என துபே (1955) குறிப்பிடுகிறார். மகாராஷ்டிர மாநிலத்துத் தலித்துகளி டையே ஆதிக்கச் சாதியின் மேல்—கீழ் படிநிலை அமைப்பையொத்த குறு அமைப்புக் காணப்படுவதாக முதன் முதலில் பட்வர்தன் (1973) குறிப்பிடுகிறார்.

மீண்டும் ராபர்ட் டெலிஜின் வாதத் திற்கு வரலாம். இந்துப் பள்ளர், இந்துப் பறையர், கத்தோலிக்கப் பறையர் என்ற மூன்று பிரிவினருள்ளும் பறையருக்கும் பள்ள ருக்குமிடையேதான் பலத்த வேறுபாடு காணப்படுகிறது. பள்ளர்களே பொதுவாக உயர்ந்தவர்கள் எனச் சொல்லப்பட்டாலும் வாழ்கிற மாணிக்கம் என்னும் சிற்றூரைப் பொறுத்தவரை பறையர்களே மேலோங்கி இருக்கின்றனர்.

''பள்ளர்களில் சிலர் தாங்கள் பறையரி டமிருந்து தண்ணீர் வாங்கிக் குடிப்பதில்லை என்று கூறினர்; இருப்பினும் பல பள்ளர்கள் பறையர் வீட்டில் தண்ணீர் வாங்கிக் குடிப் பதைப் பார்த்திருக்கிறேன். இது போன்றே உணவுக் கட்டுப்பாடும் இருக்கிறது. பள்ளர் குழந்தைகள் பறையர்களால் சமைக்கப்பட்ட உணவை உண்பது சிற்றூர் பால்வாடி களில் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. பறைய ரும் பள்ளரும் ஒரே கண்மாயில் குளிக்கின் றனர்; துணி துவைக்கின்றனர். இவ்விரு சாதிகளும் மிகத் தெளிவாக வேறுபடுத்தப் பட்டிருப்பினும் அவற்றிற்கிடையேயான ஏற்றத்தாழ்வுகள் மிகக்குறைந்தே காணப்படு கின்றன. இச்சூழலில் இச்சாதிகள் மேல்-கீழ்



படிப்பகம்

www.padippakam.com

படிநிலையில் இயங்குகின்றன என்று கூற முடியாது'' என்கிறார் ராபர்ட் டெலீஜ் (1992: 162). இந்துப் பறையர்களும், கத்தோலிக்கப் பறையர்களும் ஒருவரை யொருவர் சகோதரராகவே பாவித்துக் கொள்கின்றனர். தங்களுக்குள் உறவுமுறை கொண்டாடுகின்றனர். இப்பிரிவினரின் இளம் ஆண்களும் பெண்களும் காதலித்துக் கொள்வதும் உண்டு. இருபிரிவினருக்கிடையே தங்களுக்குள் உயர்ந்தவர் யார் என்று விவாதிப்பதுண்டு என்றாலும் ஒரு சில நிமிடங்களில் அது மறைந்து விடக்கூடும்.

சிற்றூரின் ஒட்டுமொத்த உற்பத்தியில் ஆதிக்கம் செலுத்தும் உயர்சாதியைப்போல் ஆதிக்கம் செலுத்த தலித்துகளில் எந்த ஒரு குறிப்பிட்ட சாதியும் இல்லை. மேலும் இவர்களுக்கிடையிலான பொருளாதார வேறுபாடுகளும் குறைவு இச்சாதிகள் தங்களுக்குள் பிரிந்து காணப்படுகின்றனவேயன்றி ஒரு படிநிலையமைப்பில் இயங்கவில்லை என்கிறார் டெலீஜ் இவரின் வாதங்களை இவ்விதமாகச் சுருக்கிக் கூறலாம்:

1. பிரிவு என்பது மேல்-கீழ் படிநிலைப் பொருண்மையதல்ல;

2. தகுதிக்கான உரிமை கேட்டல் என்பதும் எதார்த்த நடைமுறை என்பதும் வேறு வேறு. ஒரு பள்ளர் பறையரைவிட உயர்ந்தவர் என்று கூறிக் கொண்டாலும் நடைமுறையில் அது பற்றி அவ்வளவாகக் கண்டு கொள்வதில்லை;

3 கிளைச் சாதிகளுக்கிடையிலான உறவுகள் குறித்த கட்டுத்திட்டமான சட்ட திட்டங்கள் எதுவும் இல்லை பொதுவாகச் சொன்னால் தலித்துகள் தங்களுக்கிடையே சாதிப் பிரிவினையைக் கொண்டுள்ளனர் என்றாலும் மேல் சாதியின் படிநிலை மாதிரியைப் பின்பற்றுவதில்லை. ஏனெனில் இவர்களுக்கிடையே ஒருவரையொருவர் சார்ந்திருக்கும் நிலை குறைவாகவே இருக்கிறது.

இரண்டாவதாக படிநிலை அமைப்பு, தூய்மை-தீட்டு என்பவை தலித்துகளின் முதன்மையான பறையர் சாதியின் அகவயமான அமைப்பிலும் ஊடுருவியிருக்கிறது என்பதை மொஃபாத் உறுதிபடத் தெளிவுபடுத்தவில்லை என்று கூறும் ராபர்ட் டெலீஜ் தனது மறுப்புக்களை இவ்வாறு முன் வைக்கிறார். மொஃபாத் கூறும் பறையர்களின் 'வகையறா' என்னும் பிரிவு அகமணமுறையை அடிப்படையாகக் கொண்டதல்ல. மேலும் வகையறாக்களிடையேயான மணஉறவு உயர்வழியானதும் அல்ல. இந்தியச் சூழலில் பெண்களைக் கொள்வதும் கொடுப்பதும் சமத்துவத்தை மிகத் தெளிவாகக்குறிப்பதாகும். பண்ணைக்காரர் குடும்பத்தால் மணந்து கொள்ளப்பட்ட வெட்டியான் குடும்பத்துப் பெண், தனது பெற்றோரையும், உடன் பிறந்தாரையும் தாழ்ந்தோராகக் கருதமுடியாது. தந்தைவழி மற்றும் இருவழி முறைசார் மணமுறைகள் (Patrilateral and bilateral Cross cousin marriage) காணப்படுதலே இத்தகைய படிநிலை அமைப்பு இல்லாததை உறுதிப்படுத்துகிறது (டெலீஜ் 1987: 228). மொஃபாத்தின் தகவலாளிகளேகூட தங்களுக்குள்ளே உள்ளார்ந்த படிநிலை அமைப்பு இயங்குவதை ஒத்துக் கொள்வது இல்லை.

இந்தச் சாதியின் அகவயப் பிரிவைப் பொறுத்தவரை தலித்துச் சாதிகள் பிற பிராமணரல்லாத தமிழகச் சாதிகளின் உள்ளமைப்பை ஒத்தே இருக்கின்றன. மேலும் சாதிகளின் அகவயமான பிரிவுகள் இடம் சார்ந்ததேயொழிய படிநிலை சார்ந்ததல்ல. டேவிட் மோசே (1985) இராமநாதபுர மாவட்டத்து பறையரிடம் 'கிளை' என்னும் புறமண அமைப்புடைய பிரிவுகள் ஓரளவு படிநிலையுடன் இயங்குகின்றன என்றாலும் அது மிகத் தெளிவாக இல்லை என்கிறார். தென் ஆற்காடு மாவட்டத்தில் பறையரிடம் மொஃபாத் குறிப்பிடுவது போன்ற கிளைச் சாதி அமைப்புத் தென்பட்டாலும் அவை படிநிலை அமைப்புடன் இயங்கவில்லை என வின் வின்சென்ட்நாதன் (1987) குறிப்பிடுகிறார்.

பறையர் சாதியில் நெசவுக்காரப் பறையர், கனத்துப் பறையர், தோட்டிப் பறையர் போன்ற கிளைகளை டெலீஜ் அடையாளம் கண்டுள்ளார் அதுபோல பள்ளரிடத்து 'அம்மா', 'ஆத்தா', 'அக்கா' 'அப்பா', 'அய்யா' என்னும் ஐந்து வகைப் பள்ளர் கிளைகள் அடையாளம் காண முடிகிறது. இருந்தாலும் இவை, மக்களால் பெரிய வேறுபாடுடையனவாகவோ, படிநிலை அமைப்புடையனவாகவோ கொள்ளப்படவில்லை என்பதை டெலிஜ் உறுதிப்படுத்துகிறார். இவை புறமண முறையைக் கொண்டுள்ளன; மேலும் இடம் சார்ந்த பிரிவுகளாயும் உள்ளன. பலர் இப்பிரிவுகள்,



படிப்பகம்

www.padippakam.com

பங்காளிக் குழுக்கள் என்று கூறுவதாகவும் டெலீஜ் குறிப்பிடுகிறார். இலங்கை வாழ் பறையர்களிடம் இப்மாதிரியான அசவைய சாதிப் பிரிவுகள் படிநிலையுடன் இயங்கவில்லை என்பதை மெக்கில்ரே குறிப்பிடுகிறார். பெரும்பாலான தலித்துகள், தங்களுக்கிடையிலான பல பிரிவுகளையும் மீறித் தமக்குள்ளேயான சமத்துவம் பற்றியும் பேசுவதாக டெலீஜ் குறிப்பிடுகிறார். மேலும் தலித்துகளிடையேயான உட்சாதிப் பிரிவுகள், ஆதிக்கச் சாதி அமைப்போடு ஒத்திசைவும் கொள்ளவில்லை என டெலீஜ் உறுதியாகக் கூறுகிறார்.

மூன்றாவதாக சமயத் தளத்துக்குள் வரும்போது மொஃபாத்தை எந்தவிதத்திலும் டெலீஜ் மறுக்காது மறுபடைப்பாக்கம் எவ்வாறு ஒத்திசைவுக்கு இட்டுச் செல்கிறது என்ற வினாவை மீண்டும் எழுப்புவதோடு விட்டுவிடுகிறார்.

ஒத்திசைவு என்னும் கருத்தாக்கத்தைப் பொறுத்தவரை, இந்திய தலித்துகளுக்கென தனியான பண்பாடு இல்லை; எனவே அவர்கள் பாந்துபட்ட இந்திய தேசியப் பண்பாட்டோடு ஒத்தியைந்துவாழ்கின்றனர் என்பதே மொஃபாத்தின் நிலைப்பாடு.

தலித்துகளின் தோற்றம் பற்றிய புராணக்கதைகளின் அண்மைக் கால ஆய்வுகள் மொஃபாத்தின் நிலைப்பாட்டிற்கு எதிரான கருத்துகளைத் தருகின்றன; தலித்துகளுக்கான சமூகக் கீழ்மை என்பது தவறுதலாக, தந்திரமாக, சூழ்ச்சியாக, விபத்தாக, அவர்களின் ஒர்மையையும் மீறி அவர்கட்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. தலித்துகள் இதனை ஒரு வரலாற்றுப் புரட்டாகவும் மனிதனால் நிறுவப்பட்ட ஒழுங்கு தம்மேல் வலிந்து தரப்பட்டதாகவுமே எண்ணுகின்றனர் என்கிறார் டெலீஜ். மொஃபாத்தின் வாதங்களைப் பெரும்பாலும் ஏற்றுக் கொள்ளும் ரேண்டெரியா, 'தலித்துகளின் சொல்லாடல் மேல் சாதியினரின் சொல்லாடலோடு ஒத்திருப்பதில்லை என்கிறார். கப்பாடியா என்பவர் தலித்துகள் எப்போதுமே தங்களைப் பற்றி மேல் சாதியினர் கட்டமைத்து வைத்திருக்கும் கருத்துக்களை ஏற்றுக் கொள்வதில்லை என்கிறார். மோஸே (198[illegible])யும் வின்சென்ட் நாதனும் (1987) தலித்துகளின் இந்த நிலைக்கு அவர்கள்மீது வலிந்து திணிக்கப்பட்ட வறுமையும், வன்முறையான சேவகமும் தானேயொழிய சடங்கியல் ரீதியான தீட்டுத் தன்மை என்பதல்ல என்கின்றனர்.

தலித்துகளின் சித்தாந்த அமைப்புகள் மேல்சாதியினரின் சித்தாந்த அமைப்பை ஒத்திருப்பதில்லை. ஆதிக்கச் சமூகத்தின் பார்வையையே தாமும் கொண்டிருப்பதாகக் காட்டிக்கொள்ளும்போது மட்டுமே தலித்துகளுக்கு உரிய மரியாதையும் அங்கீகாரமும் கிடைக்கும் என்பதாலேயே அவர்கள் ஆதிக்கச் சாதிக் கட்டமைவுகளை ஒத்துக் கொள்கின்றனர் குறிப்பாக மாட்டிறைச்சி உண்பதில்லை என்னும்போது கிடைக்கும் அங்கீகாரத்தை இழக்க விரும்புவதில்லை. எனினும்வெளிப்படையாக இல்லையேனும், தங்களுக்குள்ளாக அவர்கள் மாட்டிறைச்சியைத் தவிர்ப்பதில்லை. எனவே மொஃபாத் விதியையும், நடத்தையையும் வேறுபடுத்திப் பார்க்கத் தவறிவிட்டதாக டெலீஜ் குற்றம் சாட்டுகிறார் அவர் தகவலாளிகள் தன்னிடம் என்ன சொன்னார்கள் என்பதை மட்டுமே காண்கிறார். அவர்கள் உண்மையிலேயே என்ன செய்கிறார்கள் என்பது பற்றிக் கவலை கொள்வதில்லை. மொஃபாத்தின் அமைப்பியல் அணுகுமுறை என்பது சொல்லுக்கும் செயலுக்கும் தொடர்பு இல்லாததைப் போன்றே இருக்கின்றது என மோஸே சாடுவதை டெலீஜும் ஒத்துக் கொள்கிறார்.

தங்களுக்குக் கிடைத்த மாதிரியை எதார்த்தத்தோடு குழப்பிக் கொள்ளும் செயலே ஆய்வாளர்களிடம் நிகழ்கிறது. தலித்துகள் தாங்கள் எந்த ஆதிக்கச் சமூகத் தளத்திலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளார்களோ அதே சமூக நிறுவனங்களைத் தமக்கானதாக மறுபடைப்புச் செய்து கொள்கிறார்கள் என்று மொஃபாத் மொட்டையாக அடித்துச் சொல்லும்போது மேற்சொன்ன குழப்பமே நிகழ்கிறது என்கிறார் டெலீஜ் மொஃபாத்தின் ஆலோசகரான துய்மோன் கூட வெகு எச்சரிக்கையுடன் இவ்வாறு எழுதுவதாக டெலீஜ் குறிப்பிடுகிறார் ' தூய்மை என்பதற்கும் தீட்டு என்பதற்குமான முரண்பாடு என்பது இச்சொற்களின் அறிவு சார்ந்த பொருளில் அல்லாது ஒரு சமூகததின் அடிப்படையாக இருக்கிறது என்று சொல்லமாட்டேன்; சாதிய சமூகம் என்பது அதில் வாழும் மாந்தருக்குப் பொருத்தமானதும் அறிவார்ந்ததும் ஆகும் என்பதையே இந்த முரண்பாடு சுட்டிக் காட்டுகிறது; என்னுடைய கருத்து என்னவெனில், உண்மை என்பது மையமானது, வேறு ஒன்றும் இல்லை'' (காண்க: Deliege 1992: 168-69). எனினும் 'ஒன்றும் இல்லை' என்று





படிப்பகம்

www.padippakam.com

தய்மோன் சொல்லுவது தூய்மை—தீட்டு என்பது எல்லாரையும் விளக்கக்கூடியது அல்ல; இது குறிப்பாகத் தலித்துகளைப் பொறுத்தவரை மெய்யாகும்'' என டெலிஜ் விளக்கம் தருகிறார். தய்மோனின் ஆய்வு ஒரே சித்தாந்தம் மட்டுமே இருக்க வேண்டுமென்பதில்லை என்பதையே காட்டுகிறது என வின்சென்ட் நாதன் குறிப்பிடுகிறார். ஓர் ஆதிக்கச் சித்தாந்தத்தின் இருத்தல் என்பது வேறெந்த சித்தாந்தத்தின் இருத்தலையும் மறுப்பதில்லை.

தலித்துகளின் தீண்டாமை என்பதனையும் தாண்டி, இன்று இந்தியப் பண்பாடு என்பதின் ஒருபடித்தான தன்மை (Homogeneity) கேள்விக்குள்ளாக்கப்படுகிறது ஃபுல்லர் தமது தொடர் கட்டுரைகளில் சமஸ்கிருத சமயத்திற்கும், சிற்றூர் சமயத்திற்கும் (Village religion) உள்ள வேறுபாடுகள் குறித்து எழுதுகிறார். ஒரு குறிப்பிட்ட சாதியின் அடிப்படை விழுமியங்கள் எல்லாச் சாதிகளாலும் பின்பற்றப்பட வேண்டும் என்பதில்லை. மீனவர்களுக்கு மரக்கறி உணவு உதவாது. மெளனி (1975) என்பவர் தலித்துகள் கொண்டிருக்கும் சமயக் கருத்தாக்கங்கள் பிற சாதியினருக்கும் பொருந்தவேண்டுமென்பதில்லை என்கிறார்.

இறுதியாக, மொஃபாத்தின் ஆய்வு வரலாற்று நிகழ்வுகளைக் கணக்கிலெடுத்துக் கொள்ளவில்லை என டெலிஜ் குறிப்பிடுகின்றார். எண்டாவூர் தலித்துகள் தற்காலச் சித்தாந்தங்களால் மாறவில்லை எனக் கருதுகிறார். தலித்துகள் முன்புபோல் அமைதியாகத் தங்களுக்கெதிரான செயல்பாடுகளைச் சகித்துக் கொள்வதில்லை என அவர் தரும் சான்றுகள் குறிப்பிடுகின்றன என்று கூறும் டெலிஜ் தமது கருத்துக்களைப் பின்வருமாறு முன் வைக்கிறார்.

தலித்துகளின் சடங்கியலான தீட்டுத் தன்மையே அவர்களின் உரிமைகள் மறுக்கப்பட்ட கீழ்மை நிலைக்குக் காரணம் என்று கூறிவிட முடியாது. ஒவ்வொரு சாதியும் மற்றையதோடு ஒப்பிடுகையில் ஏதாவதொரு வகையில் தீட்டுத் தன்மை வாய்ந்ததுதான். தலித்துகள் எதிர்கொள்ளும் சிக்கல் இதைவிடவும் ஆழமானது. தலித்துகளைப் போலவே இந்தியப் பெண்களும் ஒரே மாதிரியான சமூக அழுத்தத்தைப் பெற்றுள்ளனர் என்று கூறும் பொழுது தலித்துகளது சிக்கலை ஒரு சடங்கியலான தீட்டுத் தன்மை என்பதாக மட்டுமே குறைத்துவிட முடியாது. இது ஒரு சமூகப் புறக்கணிப்பும்கூடத்தான். தலித்துகளுக்குப் பண்பாடு வழிபாடு, உடல் ரீதியான மரியாதை, பொருளாதார மேம்பாடு போன்றவை மறுக்கப்பட்டுள்ளன.

தமிழ்ச் சிந்தனையில் மனிதர்கள் வாழும் புலத்துக்கும் (ஊர்), மனிதர் வாழாப் பகுதிக்கும் இடையில் அழுத்த முரண்பாடு உள்ளதைக் காண முடிகிறது என டேலியல் கூறுகிறார். இவையிரண்டும் வெவ்வேறான பண்பாட்டுக் கருத்தமைவுகள் கொண்ட மெய்ப்பாடுகள் ஆகும். ஊர் என்பதன் பண்பாட்டுக் கட்டமைவுடன் முரண்படும் எதுவும் ஊருக்கு வெளியில்தான் இருக்க வேண்டும். இந்தக் காடு சார்ந்த புறவெளி ஒவ்வாமை, ஒழுங்கின்மை, குழப்பங்கள், அச்சம் போன்றவற்றைப் பொருண்மைப் படுத்தும். மனிதர் வாழும் பகுதியே 'ஊர்' என்றும் 'சேரி' என்றும் பிரிந்து கிடப்பதை மொஃபாத் தெளிவாக விளக்கியுள்ளார் 'சேரி' என்பது ஊருக்குப் புறவெளியில், (காடு சார்ந்ததல்ல) தலித்துகள் அமர்த்தப் பட்டுள்ள பகுதி. அது அவர்கள் பண்பாட்டிலிருந்து விளிம்பு நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர் என்பதோடு, காடு சார்ந்த பண்பாட்டுக் கருத்தமைவுகளுடன் கூடியவர்கள் என்பதனையும் பொருண்மைப் படுத்துகிறது.

விளிம்பு நிலையில், ஒழுங்குகளற்ற, ஆதிநிலை ஆற்றல்களோடு (Primordial Powers) தொடர்பு கொள்ளும் தலித்துகள் மனிதருக்கும் புனிதத்துக்கும் இடையே இடையீட்டாளர்களாகச் செயல்படுவது இவ்வாறு புரிந்து கொள்ளப்படுகிறது. அதனாலேயே இவர்கள் பேய்களோடும், கெட்ட ஆவிகளுடனும், தொடர்பு படுத்தப்படுவதால், ஊர்க்காவல் காரராயும், சுடுகாடு காப்போராயும் உள்ளனர் என மொஃபாத் விளக்குவார்.

மேலும் தலித்துகளின் சமூக ஒதுக்கலுக்கு அவர்களது பொருளாதார நிலையும் அதனுடன் பிறரை எப்போதும் சார்ந்திருக்கும் நிலையும்கூட காரணம் எனலாம். எனினும் இறுதியாக டெலிஜ் சாதியப் படிநிலைக்குத் தலித்துகள் பலியாவது மட்டுமல்ல, அவர்களே அதனைத் தங்கள்மீது சுமத்தியும் கொள்கின்றனர்; அதாவது, ஒரே சமயத்தில் அவர்கள் இந்நிலையின் ஆதரவாளராயும், எதிர்ப்போராயும் செயல்படுகின்றனர் என்கிறார்.



படிப்பகம்

www.padippakam.com

ராபர்ட் டெலீஜ், மொஃபாத் முன்மொழியும், மறுபடைப் பாக்கத்தையும் அசன் வழியான இன்னொரு சாதியப் படிநிலை அமைப்பையும் மறுக்கத தீவிர முயற்சி எடுத்துள்ளது தெரிய வருகிறது. சாதியச் சொல்லாடலில் ரெலாற்றுத் தன்மை பற்றிய தீவிரத் தே ல் அவசியம் என்கிறார். மேலும் இந்தியத் தேசியப் பண்பாடு பற்றியும், இச்சொல்லாடல் தூய்மை—தீட்டு என்னும் ஒற்றை முரண்பாட்டினையே பற்றிக்கொண்டிருக்கும் நிலையையும் கேள்விக் குள்ளாக்குகிறார்.

## III

இதனைத் தொடர்ந்து டேவிட் மோசே என்பவர் 1983-84 வாக்கில் இராமநாதபுரம் மாவட்டத்தில் தமது ஆய்வை நடத்தியுள்ளார். தலித்திய சாதியப்படிநிலை என்னும் சொல்லாடலில் அமைந்தள்ள இரைது கருத்தினை இவ்வாறு சுருக்கமாகத் தரலாம். நன்கு வளர்ந்த தலித் சாதிகள் (சான்று : பள்ளர்) தமக்கான சமூக அந்தஸ்தையும், தனித்தியங்கும் தன்மையையும் பெற்றுவிட்ட சூழலில் தமது பழைய கீழ்நிலை அடையாளங்களைத் தமக்கடுத்த நிலையிலுள்ளவர்கள் மீது சுமத்தி விட்டுத் தமது மேளாண்மையை உயர்த்திக் கொள்வதோடு கீழ்நிலைச் சாதியினரிடமிருந்து தம்மை வெகுவாகவும் பிரித்துக் கொள்கின்றனர். இவ்வாறான வழிமுறைகள் தாழ்நிலைக்கான கருத்தமைவுகளை ஒதுக்குதல், சமூகசுதந்திரம், தற்சார்புத்தன்மை போன்றவையும் கூட தலித்துகளுக்குள் மீண்டும் ஒரு அதிசிக்கலான, அகவய ரீதியில் பாகுபடுத்தப்பட்ட, முந்தைய நிலையைக் காட்டிலும் விரியமான அமைப்புகளையே உற்பத்திச் செய்கின்றன

இந்தக் கருத்துரையைத் தொடர்ந்து ராபர்ட் டெ லீஜ், ''சமீபத்தில் சம்பாதித்துக் கொண்ட சொத்துகள் சில தலித்துகளை ஒரு தீவிர பழமைவாதத்திற்கே இட்டுச் சென்றிருக்கிறது என்பதை மோசேயுடன் சேர்ந்து நாலும் ஒத்துக்கொள்கிறேன். எனினும் சமீபத்திய மாற்றங்கள் சாதிய மதிப்பீடுகளை அவர்களுக்கு வலியுறுத்தவில்லை. பல இயக்கங்கள் (குழப்பங்களிலிருந்து விடுபடாத இவை) தலித்துகளிடம் வேறு பல மதிப்பீடுகள் இருப்பதைக் காட்டுகின்றன'' என்கிறார்.

## IV

நேபாள நாட்டில் நேவார் எனப்படும் தலித்திய சாதிகளிடையே ஆய்வு செய்த டேவிட் ஜெல்னர் என்பவர் மொ பாத், டெலீஜ், மோசே போன்றோர் முன்வைக்கும் கருத்துக்களோடு ஒத்த கருத்தினையே முன்வைக்கிறார். நேபாள நாட்டின் தாழ்த்தப்பட்ட சாதிகளிடையிலும் இத்தகையதொரு சொல்லாடல் நிகழ்வதாக ஜெல்னர் குறிப்பிடுகின்றார்.

## V

சுதாகர் ராவ் ஒரு தனிக்கட்டுரையில் மொஃபாத் தனது கோட்பாடுகளைத் தலித்துகளின் சமயச் செயல்பாடுகள் மூலம் விளக்குவதை முற்றிலும் மறுக்கிறார். மொஃபாத்தும், பிறரும் தலித்துகளும் இந்துக்களே, அவர்களது சமயம் இந்து சமயத்தைத் தவிர வேறொன்றுமில்லை என்கின்றனர் ஆனாலும் சுதாகர் ராவ் இதிலிருந்து வேறுபட்டு அவர்களது சமயம் நாட்டுப்புறச் சமயம் (Folk religion) என்றே குறிப்பிடுகிறார். வுவர் மொஃபாத் முன்வைக்கும் மனிதப்படிநிலை, தெய்வப் படிநிலை ஒப்புமையைக் கேள்விக்குள்ளாக்குகிறார். முன்னவர் தெய்வப்படிநிலையையும் தூய்மை—தீட்டு முரண்பாடே தீர்மானிப்பதாகக் கூறுகிறார். ஆனால் சுதாகர் ராவ் தெய்வத்தின் ஆற்றலே (Power) அதன் நிலையைத் தீர்மானிக்கிறது; மேல்நிலைக் கடவுள் அல்லது சிவன் பார்வதியைக் காட்டிலும் கீழ்நிலை மாரியம்மன் குல தெய்வங்களே அதிகம் வழிபடப்படுகின்றன. பல வாழ்க்கைச் சிக்கல்களில் இத்தெய்வங்களே மக்களால் வழிபடப்படுகின்றன என்கிறார் தலித்துகளின் சமயத்தில் ஆற்றல் தான் முதலிடத்தைப் பெறுகிறது. சாதியப் படிநிலையைக் கணக்கிலெடுக்காது தெய்வங்களின் அதிகாரம், ஆற்றலை மட்டுமே முன்னிறுத்தித் தலித்துகளின் நாட்டுப்புறச் சமயமும் வழிபாடும் வடிவமைக்கப்படுவதாக சுதாகர் ராவ் கட்டமைக்கிறார்.

நிறப்பிரிகை



படிப்பகம்

www.padippakam.com

துணை நின்றவை :

Deliege, Robert, 1992. "Replication and Consensus : Untouchability, Caste and Ideology in India". MAN 27:155—173.

1993. "The myths of Origin of the Indian Untouchables" MAN 28 : 533—549.

Gellner, David, 1995. "Structure and Consensus among 'Untouchables' in South Asia" THE JOURNAL OF THE ROYAL ANTHROPOLOGICAL INSTITUTE, 2 : 395—396.

Moffalt, Michael 1979. The Untouchable community in South India : Structure and concensus. Princeton: Princeton University Press.

Mosse, David 1994 a. "Indioms of Subordination and Styles of protest among Christian and Hindu Harijan castes in Tamil Nadu" CONTRIBUTIONS TO INDIAN SOCIOLOGY 28, 1 : 67—106.

1994. b "Replication and Consensus among Indian untouchable (Harijan) Castes." MAN 29, 2 :457—460.

Rao, Sudhakar 1991. "Religion of Endavur untouchables" THE EASTERN ANTHROPOLOGIST, 44, 2 : 125-144.

Vincentnathan, Lynn, 1993. "Untouchable Concepts of Person and Society". CONTRIBUTIONS TO INDIAN SOCIOLOGY, 27, 1 : 53—82.

* கட்டுரையாளர் புதுவையிலுள்ள, "புதுவை மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனத்தில்" ஆய்வாளராகப் பணிபுரிகிறார்.

# "நான் அலறுகிறேன் அதனால் நான் இருக்கிறேன்"

கண்ணன் —எம்.

**1970**

**ஆன்றி பெர்னார்தன் தெ சேன் பியேர்— Henry Bernardin de Saint—Pierre (1737 1814) 'La Chavmiere indienne'**

கடவுளும் இயற்கையும் மனிதனும் ஒத்திசைந்து வாழும் நிலை, கடவுளால் படைக்கப்பட்டு மனிதனுக்காக வாழும் இயற்கை. 'நீரலையின் வெண்மையான நுரை பாறையின் கருமையான' நிறத்திற்கு மாறுபட்டிருப்பது கப்பலோட்டிகளுக்குத் தொலைவிலிருந்தே அறிவிப்பதற்காகவே, இன்சுவையுள்ள வெள்ளரிப்பழத்திற்குப் புடை பெயர்ந்த கீற்றுகள் இருப்பது அப்பழத்தைக் குடும்பத்திலுள்ளார் அனைவரும் கலந்து உண்பதற்காகவே[1]. எப்பொழுதும், என்றும் நன்மை பயக்கும் கடவுள், இயற்கையின் அனைத்து வடிவங்களிலும் கடவுள்-சுயநலமும்,பேராசையும் தந்திரமும் அநீதியும் தீமையும், இழிவும் நிறைந்து கிடக்கும் சமூகம், சமூகத்திற்கு உள்ளும் அப்பாலும் தூய்மையான உள்ளத்தின் துன்பத்தில் கண்டுணரப்படும் உண்மை, இயல்பான, தூய உள்ளத்துடன் மனிதன் இயற்கையில் கடவுளை நினைந்து உண்மையில், ஆனந்தத்தில் வாழும் ஓர் உலகம்— இவ்வாறான கருத்துக்களை, ஒரு லட்சிய உலகத்தை, கிறிஸ்துவத்தின் அடிப்படைகளை கிறிஸ்துவத்திற்கு வெளியிலும் கண்டறியும் முயற்சியை, தன் எழுத்துக்களில் போதிக்கும் முறையில் வெளிப்படுத்திய,



படிப்பகம்

www.padippakam.com

இந்தியாவுக்கு வந்திராத, மொரிஷியஸ் தீவுக்கு வந்திருந்து அங்கு ஏழ்மையில், துன்பத்தில் வாழ்ந்திருந்த (இந்திய?) மக்களை இரக்கத்துடன் தூரத்திலிருந்து கவனித்த ஆன்றி பெர்னார்தன் தெ சேன் பியேர் (தற்கால பிரஞ்சு சமூகத்தில் வெகு சிலரால் மட்டுமே அறியவும் வாசிக்கவும் பட்டிருக்கும், நூலகங்களில் மட்டுமே தென்படும் ஓர் எழுத்தாளர். இவருடைய நூல்களில் மிகவும் பிரபலமானது போலும் விர்ழினியும் —Paul et virginic என்ற தலைப்பில் 1787 இல் இவர் எழுதிய நவீனம் மட்டுமே) 1790 ஆம் ஆண்டில் 'La Ceavmiere indienne என்ற தலைப்பில் எழுதிய ஒரு சிறு நூல் (தத்துவமும் நீதியும் உரைக்கும் சிறியகதை?)

## 1968

### இந்தியக் குடிசை[2]

1968 டிசம்பர் மாதத்தில் கீழ்வெண்மணியில் மனிதர்களும் குழந்தைகளும் மிருகங்களால் உயிருடன் எரிக்கப்படுவதற்கு 7 மாதங்களுக்கு முன்பாக (மே, 1968) பாண்டிச்சேரியைச் சேர்ந்த திரு. இரா. தேசிகப்பிள்ளை[3] என்பவரால் பிரெஞ்சிலிருந்து நேரடியாக 'தமிழாக்கம்' செய்யப்பட்டு இந்தியக் குடிசை (குறுநாவல்) என்ற தலைப்பில் வெளியிடப்பட்டது.

இரா. தேசிகப்பிள்ளை இந்நூலில் எழுதியிருக்கும் ஒரு சிறு முன்னுரை பின் வருமாறு:

''இந்தியக் குடிசை'' என்னும் இந்நூல் பிரான்ஸ் தேசத்தின் பெயர் பெற்ற எழுத்தாளராகிய பெர்னார்தன் தெ சேன் பியேர் என்பவரால் இயற்றப்பட்டு கி.பி. 1790-ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டதாகும்.

பெர்னார்தன் தெ சேன் பியேர், இளமையிலேயே அறிவும் ஆற்றலும் உடையவராயிருந்தார். அவர் தாம் பார்த்து வந்த அலுவல்களின் நிமித்தம் பல நாடுகளுக்குச் செல்ல நேர்ந்தபோது அந்நாடுகளின் நிலைமையை நன்கு ஆராய்ந்து அறியலானார்; தம் அனுபவத்தில் கண்டவற்றைக் கொண்டு அவர் பல நூல்கள் எழுதியுள்ளார். அவற்றுள் ஒன்றுதான் இந்த இந்தியக் குடிசை.

இஃது புனைந்து கூறும் ஒரு கதையாயினும், இதனுள் அடிப்படையான சில உண்மைகள் பொதிந்து கிடப்பதாலும் சமூகச் சீர்திருத்தத்திற்கும் நம் நாட்டின் முன்னேற்றத்திற்கும் அவை பயன்படக் கூடுமாதலாலும் இதனைப் பிரஞ்சு மூலத்தினின்று தமிழில் மொழி பெயர்த்துத் தந்துள்ளேன் இத் தமிழ் மொழி பெயர்ப்பு தமிழர்களால் வரவேற்கப்படுமென்று நம்புகிறேன்.

இந்நூலில் 'கதையும் கருத்தும்' என்ற தலைப்பில் விரிவாக தரப்பட்டிருக்கும் பதிப்பகத்தார் உரையிலிருந்து ஒரு பகுதி பின் வருமாறு:

'...விடுதலை பெற்றுள்ள இன்றைய இந்தியாவுக்கு அன்று போல் இன்றும் நாளையும் இக்கதையின் கருப்பொருளான பகுத்தறிவு வழி செல்வது தேவைப்படும். மூட நம்பிக்கை ஒழிந்த பகுத்தறிவையே இக்கதையின் பொருள் பற்றி நிற்கிறது. அறிவுதான் மனிதனுக்கு வழிகாட்டி. அறிவை வளர்த்துக் கொள்வதன் மூலமே மிகவும் வலிவும் பொலிவும் பெற்றுள்ளவராக முடியும் என்பது கதை உணர்த்தும் பாடம். ஊரையும் பெயரையும் இடத்தையும் மாற்றிப்பார்த்தால் அனைத்துலக நாடுகளுக்கும் பொருந்தும் விதத்தில் இது உலகப் பொதுமையுடையதாக உள்ளது தெளிவாம். தவறான நம்பிக்கை எவ்வளவுதான் மேன்மைப்படுத்தப்பட்டு இருந்த போதிலும் மன்பதை அதன்மூலம் செழுமையாக வளர்வதில்லை. தைரியமாக இடையறாது செயல்படுவதன் மூலமே மன்பதை செழுமையுறும் என்பது இக்கதையின் அடிக் கருத்தாகும். அதனால் இது உலக மக்கள் அனைவருக்கும் பொதுவானது. குறிப்பாக இது நமது சிந்தனைப்போக்கில் அசைவை உண்டாக்க வல்லது. நமது நாட்டு மக்களின் மூடத்தனத்தையும், குருட்டு நம்பிக்கைகளையும் கண்மூடிப் பழக்கங்களையும், கையூட்டுக்குப் பலியாவதையும், ஒற்றுமைக் குறைவையும், அடிமைத்தனத்தையும் தீண்டாமையின் கேட்டையும் தெளிவாகவும், நுணுக்கமாகவும் இந்நூலாசிரியர் நயமாக விளக்கிக் காட்டியிருப்பதுடன், நமது அறியாமை மூடத்தனத்தைக் கிண்டலும் செய்கிறார்! நாம் திரும்பத் திரும்பப் படிப்பினைகள் பெறவும் பெற்ற படிப்பினைகள் மூலம் நம்மைச் சரியான வழியில் திருத்திக் கொண்டு நடக்கவும் முற்படுவோமானால் அதுவே இந்நூலாசிரியருக்கு நாம் செய்யும் சிறந்த கைம்மாறாக இருக்க முடியும். இந்நூலின் அளவு சிறியதாயினும்



படிப்பகம்

www.padippakam.com

கருத்துப் பெரிது. கடுகு சிறுத்திருததாலும் காரம் போகாதன்றோ?'

பதிப்பகத்தார் உரை, முன்னுரை தவிர ஆன்றி பெர்னார்தன் தெ சேன் பியேர் பற்றிய சுருக்கமான குறிப்பொன்றும் இந்தத் தமிழ் மொழி பெயர்ப்பில் தரப் பட்டிருக்கிறது [4]

தவிர்க்க முடியாத வகையில், 'இந்தியக் குடிசை' என்ற 'நீதிக்கதையின் சுருக்கம் பின்வருமாறு:

'நானிலமெங்கும் சிதறிக்கிடக்கின்ற உண்மைகளை ஒருங்குசேரச் செய்வதற்கும் ''விவிலிய'' நூலின் மிகப் பழைய படி களையும் பல திறப்பட்ட அரிய கையேடு களையும் வாங்கவும் பிரதியெடுக்கவும் 'இலண்டன் மாநகரிலிருந்து' 'இலண்டன் மாநகரத்து அரச கழகத்தால்' 'மூவாயிரத்து ஐந்நூறு கேள்விகளுடன் அனுப்பப்பட்டு, பல தேசங்களுக்கும் சென்று இறுதியில் இந்தியாவை இந்தியாவில் காசியை வந்த டையும் ஒரு ஆங்கிலஅறிஞர் (''பண்டிதர்'') கேள்விகள ஒவ்வொன்றுக்கும் முறையே 'ஐந்து விடைகள்' என்ற கணக்கில 'மூவா யிரத்து ஐந்நூறு' கேள்விகளுக்கும் கிடைத்த 'விடைகள' மொத்தம் 'பதினேழாயிரத்து ஐந்நூறு' (இந்த மூவாயிரத்து ஐநநூறு கேளவிகளுள் 'ஆறுமாதம் கிழக்கு நோக்கி யும், ஆறுமாதம மேற்கு நோக்கியும் ஓடு கின்ற இநது மகா சமுத்திர நீரோட்டத்தை' குறித்த கேள்வியும் அடக்கம்) பதினேழா யிரத்து ஐந்நூறு விடைகளால்' ஏற்படும் சிக்கல்களின் விளைவாக அறிஞரின் மனதில் எழும் எண்ணம்: ''நான் என்னுடைய தொண்ணூறு மூட்டைகளில் உண்மைக்குப் பதிலாக ஐயத்துக்கும் சச்சரவுக்கும் உரிய ஏதுக்களைக்கொண்டு போவேனாயின் என் நாட்டாரின் ஓய்வு என்னாகும்?'' இந்த எண்ணத்தின் தூண்டுதலில் 'காசி அந்தணர் களின்' பரிந்துரையின் படி 'ஓரிசாக்கரையில் கடலோரததில் கங்கையாறறின் கிளை யொன்று கடலில் கலக்கும் இடத்துக்கு அண்மையில் அமைந்துள்ள ஜெகநநாதம் என்னும் சிறந்த கோவிலின் தலைமை அந்தணரை' சந்திக்கச் செல்லும் ஆங்கில அறிஞரின் மனத்தல் உருவாகும் மூன்று கேளவிகள்: 'எவ்வழியாக உண்மையை அறியலாம்?' 'உணமையை எங்குத் தேட வேண்டும்?' 'மனிதரிடத்தில் உணமையைக் கூறவேண்டுமா?' 'ஜெகந்நாதம் கோவிலில வெளிநாட்டவர் எனற அடிப்படையில் 'அந்தணர்களால்' அவமதிக்கப்பட்டு பிறகு அக்கோவிலின் 'தலைமை அந்தணரை' அவருடைய சபையில் சந்தித்து 'இந்திய மொழியில்' ஆங்கில அறிஞர் கேட்ட மேற் குறிப்பிட்ட மூன்று கேளவிகளுக்கு 'அந்த முதிய அந்தணத்தலைவர்' தந்த மூன்று விடைகள்: ''அந்தணர்கள் வழியாகத்தான் உண்மை அறியப்படும்'' ''இலட்சத்து இருபதாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வட மொழியில் எழுதப்பட்ட நான்கு வேதங் களிலே எல்லா உண்மைகளும் அடங்கிக் கிடக்கின்றன. அவைகளின் நுட்பம் அந்தணர்களுக்குத்தான்தெரியும்'' ''எல்லோ ருக்கும் அதை (உண்மையை) மறைப்பது பெரும்பாலும் நன்று. ஆனால், அதை அந்தணர்களுக்கு வெளியிடுவது ஒரு கடமை யாகும்'' இப்பதில்கள் அந்தணத் தலை வருடன் விவாதிக்கும் வாய்ப்பு மறுக்கப் பட்டு 'அந்தணத்தலைவரின்' பதில்களி லிருந்து வெளிப்படும் அகங்காரத்தினால் மன முடைந்து, ''உண்மையில் அந்தணர்கள் நேர்மையற்றவர்களே என்ற முடிவுக்கு வந்து அங்கிருநது வெளியேறும் ஆங்கில அறிஞரின் மனதில் எழும் எண்ணம்: ''இநதிய முதுமொழி முற்றும் உண்மை தான்; இயதியாவுக்கு வரும் ஐரோப்பியன் எவனும பொறுமை இல்லாதவனாயின் அதனை அங்குப் பெற்றுக் கொள்கிறான். பொறுமை உடையவனாயின் அதனை அங்கு இழந்து விடுகிறான். என்னைப் பொறுத்தமட்டில் என் பொறுமையை யான் இழந்து விட்டேன்...... அந்தணர்களைக் கேட்டுத் தெளிய இந்தியாவுக்கு வந்ததன் பயன் இது தானோ?'' அங்கிருந்து செலலும் போது வழியில் சூறைககாற்றாலும் கடும் மழையாலும் அலைக்கழிக்கப்பட்டு 'பழங் காட்டின்' ஒரு பகுதியினுள் வயது முதிர்ந்த, இறந்த கணவனுடன் சிதையில் எரிய வேண்டிய நிலையிலிருந்து தப்பித்த 'ஏழைப் பார்ப்பனப் பெண்ணான' தன் மனைவி யுடன், தன் குழந்தையுடன், தன்நண்பனான நாயுடன், ஒரு குடிசையினுள் வாழ்ந்து வரும் ஒரு 'பறையனை' சநதிதது அவனுடைய விருந்தோமபலை ஏற்று அவன் குடிசையில் தங்கும் ஆங்கில அறிஞர், (ஆங்கில அறிஞ ருக்கு துணையாக வநத பிற இந்திய பணி யாடகளும் வீரர்களும் பறையனின் குடிசையைக் கண்ட மாத்திரத்தில் கூறியது: 'குடிசையின் அருகே செலலாதீர்கள் அதில் பறையன் ஒருவன் இருக்கிறான்!''... பறை யன் ''நமபிககையும்சட்டமும இல்லாதவன்'' ''பறையனென்பவன் மிக இழிவான குலத் தைச் சேர்ந்த இந்தியன். அவனால் தீணடப் பட்ட மாததிரததிலேயே அவனைக்கொன்று விடுவதற்கு அனுமதியுணடு...'' ''நாங்கள

நி—9



படிப்பகம்

www.padippakam.com

ஒரு பறையன் வீட்டில் நுழைய மாட்டோம்'') பறையன்' வாழும் முறையினாலும், அவனுடைய பேச்சினாலும் ஈர்க்கப்பட்ட ஆங்கில அறிஞர் படிக்கவும் எழுதவும் தெரியாத அந்தப் பறையனிடம் தன்னுடைய மூன்று கேள்விகளை கேட்க, அவன் அளித்த பதில்கள்: ''இயல்பான உள்ளத்தைக் கொண்டுதான் உண்மையைத் தேட வேண்டும்''. ''உண்மையை மனிதர்களித்தில் தேடவே கூடாது; இயற்கையிலே தான் அதனைக் காணவேண்டும்'', ''இயல்பான உள்ளத்தையுடைய மக்களுக்குத்தான் உண்மையைச் சொல்ல வேண்டும், அதாவது உண்மையைத் தேடும் நன் மக்களுக்கன்றி அதனை வெறுத்துத்தள்ளும் தீயோர்க்கன்று'' சமூகத்தினால் ஒதுக்கப்பட்டு, சமூகத்திலிருந்து ஒதுங்கி சமூகத்தில் தான் இழிவு படுத்தபபடுவதற்கு, கடவுளை காரணமாகக் கருதாமல், காட்டினுள் இயற்கையில் கடவுளைகண்டு உண்மையைத் தேடி, இயற்கையோடு இயைந்து வாழும் பறையனிடத்தில் அந்தப் பறையனுடைய குடிசையில் உண்மையையும் இன்பத்தையும் கண்டவராக திரும்பிச்செல்கிறார் ஆங்கில அறிஞர்.

இந்தியச் சமூகத்தைக் குறிக்கும் ஐரோப்பிய பிரதிகளைப் பார்க்கும் பொழுது, பழங்காலத்திலிருந்தே ஐரோப்பியரை வசீகரிக்கும் இருவேறு முனைகளாக பிராமணர்களும்[5] பறையர்களும் (தீண்டத்தகாதவர்கள் என்ற பொதுவான அர்த்தத்தில்) இருந்து வந்திருக்கிறார்கள் என்பதை அறிய முடிகிறது கீழக்கத்திய தேசங்களை ஓர் ஆடியாகக் கொண்டு அதில் தன்னைத் தானே பிரதிபலித்துக் கொண்ட, விமர்சித்துக் கொண்ட, அதன் மூலமாக தன்னுடைய லட்சிய உலகத்தை உருவாக்கிக் கொள்ள முற்பட்ட, 18-ஆம் நூற்றாண்டு ஐரோப்பிய அறிஞர் சமூகத்தைச் சார்ந்த பிரதிகளின் பின்னணியில்,[6] அவற்றின் வரிசையில் வெளிப்படுவதுதான் ஆன்றி பெர்னார்தன் தெசேன் பியேரின் 'இந்தியக் குடிசை' என்ற இந்தச் சிறு நூல்.

இந்தச் சிறு நூலில், பெர்னார்தன் தெசேன் பியேர், தான் உருவாக்கிய ஓர் ஆங்கில அறிஞரின் மூலமாக, ஓர் 'இந்தியக் குடிசையில்' கண்டறிவது 'பறையனின்' ஞானத்தை.[7] பெர்னார்தன் தெசேன் பியேர் தன்னுடைய சமூக, மத மரபின் பின்னணியில், உருவாக்கிய கொள்கைகளின், லட்சிய உலகத்தின் மறு உருவமாக அமைகிறது 'பறையனின்' ஞானம். ('பறையன்' தன்னுடைய குடிசைக்குப் பாதுகாப்பாக மேலே விரிந்திருக்கும் ஆலமரத்தைப் பற்றிக் கூறியது:... 'பிரமன் ஒருநாள் இம்மரத்தின் கீழ்த் தங்கியது காரணமாக இதன்மீது இடி விழுவதில்லை என்று என் மனைவி நினைக்கிறாள் பெருங்காற்றுக்குப் பாதுகாப்பிடமாக மக்கள் தங்குவதற்கெனவே, தடித்த இலைகளையும் விழுதுகளையும் ஆலமரத்திற் கடவுள் ஏற்படுத்தியிருப்பதால் இத்தகைய காற்றடிக்கும் பருவங்களில் அம்மக்கள் இடியினால் தாக்கப்படக் கூடாதென்பது அவர் விருப்பம் என்று நான் கருதுகிறேன்.') பெர்னார்தன் தெசேன் பியேர் தன்னுடைய பல நூல்கள் மூலமாக உருவகித்த லட்சிய உலகத்தைச் சார்ந்த, உண்மையான, இயல்பான 'இயற்கை மனிதனின்' உருவமாக 'இந்தியக் குடிசையில்' வாழ்கிறான், அந்தப் 'பறையன்', பெர்னார்தன் தெசேன் பியேர் என்ற பிரஞ்சு அறிஞரின், எழுத்தாளரின் கொள்கைகளை லட்சிய உலகை, நிறைத்து நிரூபிக்கும் பொருள்களாக, மட்டும் அமையும் இந்தியச சமூகம், அந்த 'இந்தியக் குடிசை, அதில் வாழும் பறையன்'. 18-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பெர்னார்தன் தெசேன் பியேர் என்ற ஐரோப்பிய பிரஞ்சு அறிஞரின், எழுத்தாளரின் லட்சிய உலகின் தொலைவு நிறைந்த, துல்லியமான பார்வையில், சமூகத்தினால் இழிவு படுத்தப்பட்டு ஒதுக்கப்பட்டு, சமூகத்திலிருந்து ஒதுங்கி காட்டினுள் இயற்கையில் கடவுளைக்காண்பவனாக, இயற்கையோடு இயைந்தவனாக 'தனக்குத்தானே நண்பனாகவாழ்பவனாக, துன்பத்தில் உண்மையை கண்டறிபவனாக, தன் குடிசையில் உண்மையையும் இன்பத்தையும் கொண்டவனாக, தீண்டத்தகாத நிலையில், தீண்ட முடியாத நிலையில் தீண்டப்பட, முடியாத நிலையில் அந்தப் பறையன்.

18-ஆம் நூற்றாண்டு பிரஞ்சு சமூகத்தில் நிலவிய உலகளாவியதாக தன்னைக்காட்டிக் கொண்ட கத்தோலிக்க மதத்தின் மேலாதிக்கத்திற்கு எதிராக, பிற வாழ்க்கை முறைகளை சுட்டிக்காட்டி பழமையையும், இயற்கையையும் மனிதத்துவத்தையும் முன் வைத்து எழுந்த சிந்தனைப் போக்கின் கற்பனையின் ஒரு பகுதியாக ஆன்றி பெர்னார்தன் தெசேன் பியேரின் 'இந்தியக் குடிசையை'குறிப்பிட முடியும்.

சமூக நடப்புகளிலிருந்து விலகி, பழமையும் ஆசாரமும் கொண்டதாக, சுற்றி வளைத்து வரும் வாக்கிய அமைப்புகளில்



படிப்பகம்

www.padippakam.com

இயங்கும் ஒரு வகையான பதப்படுத்தப் பட்ட எழுத்துத் தமிழில் திரு. தேசிகன் பிள்ளையால் மொழி பெயர்க்கப்பட்டிருக் கிறது. ஆன்றி பெர்னார்தன் தெ சேன் பியேரின் 'இந்தியக் குடிசை'. (தற்கால பிரஞ்சு வாசகரின் வா.சிப்பில் பெர்னார் தன் தெ சேன் பியேரின் பிரஞ்சு மொழி நடை பழமை நிறைந்ததாகவும். ஈர்க்கும் தன்மையறறதாகவும் தான் உணரப்படு கிறது என்பது இங்குக் குறிப்பிடப்பட வேண்டிய ஒன்று.)

**1994**

**'ஒரு குடிசையிலிருந்து...! இராவணன் ('மூலம் என்றி பெர்னார்டின் செயின்ட் பியர்)'[8]**

'டாக்டர் ச. இராமதாஸ், எம்.பி. பி.எஸ்., ('நிறுவனர், பாட்டாளி மக்கள் கட்சி ) இந்நூலுக்கு வழங்கியிருக்கும் அணிந்துரையிலிருந்து:

'பிரஞ்சுப் புரட்சியின் நாயகனான உருசோவின் மாணவனாகிய என்றி பெர் னார்டின் செயின்ட் பியர் என்பார் கதை வடிவில் எழுதிய நூலின் தமிழ் வடிவமே இந்நூல். இந்நூலினைப் படிப்போர் எவரும் ஒரு மொழி பெயர்ப்பு நூல் எனும் உணர்வு ஒரு துளியும் இன்றித் தனித்தமிழ் இன்பத்தில் ஆழும வகையில் ஆழமான சிந்தனைகளோடு அழகிய மொழி நடையோடு நூலை வடிவமைத்த அன்பிற்குரிய வடிவேல் இரா வணன் மிகமிகப் பாராட்டுக்குரியவர்.

செலவு: பயணம், கைத்துமுக்கி: கைத் துப்பாக்கி, தீக்குழி: சிதை, குமுகம்: சமு தாயம், முளறி: ரோசா, செதிற்பழம்: சித்தாப்பழம் போன்ற அழகு தமிழ்ச் சொற்கள் நூல் எங்கிலும் நிறைந்து கிடப் பது நூலாசிரியரின் தமிழ்ப் புலமைக்குத் தக்க சான்றாக விளங்குகிறது!

'அருள் தந்தை டாக்டர் பே. அந்தோணி ராஜ், எஸ்.ஜே.,எம்.ஏ ,பி.எச்டி (நிறுவனர் தலித் கிறிஸ்தவர் விடுதலை இயக்கம்)' இந்நூலுக்கு வழங்கியிருக்கும் ஆய்வுரையி லிருந்து.

'தம்பி வடிவேல் இராவணன் இந்த நூலை அழகிய தமிழில் தனக்கே உரிய மொழித் திறனோடு படைத்துள்ளார் பிற மொழிகளில் எத்தனையோ கதைகள் இருக்க 'குடிசையிலிருந்து' என்ற கதையை தலித் மக்களின்விடுதலைக்காக அறிமுகம் செய்வதி லிருந்து அவர் எங்கிருக்கிறார், எதை நோக்கிச் செல்லுகின்றார் என்பது தெளி வாகிறது இது போன்ற பல இலக்கியப் படைப்புகளை உருவாக்கி தலித்விடுதலைக்கு சீரிய பணியாற்ற வேண்டுகிறேன்!

'பேராசிரியர் டாக்டர் கோ தங்கவேலு எம் ஏ பி., எல்., பி எச்டி, (நிறுவனர், கோபால் நாராயண கல்வி அறக்கட்டளை, சென்னை உயர் நீதி மன்ற வழக்கறிஞர், மேனாள் வரலாற்றுத் துறைத் தலைவர், மதுரைப் பல்கலைக்கழகம்) இந்நூலுக்கு வழங்கியிருக்கும் பாராட்டுரையிலிருந்து:

'இந்நூல் ஒரு தமிழ்ப்பெயர்ப்பு. ஒன்றை அப்படியே பெயர்த்தெடுத்து மற்றோரிடத் தில் வைப்பதுதான் பெயர்ப்பு. ஆனால் தம்பி இராவணன் இதனை மூலநூலே என மயங்கும்படிச் செய்து விட்டார். பல்வேறு இடங்களின் பெயர்கள் பொருள்களின் பெயர்கள் இவற்றைத் தனித்தமிழில் குறிப் பிட்டுள்ளார். எளிமையும் இனிமையும் திகழ்கின்றன

இராவணன் இந்நூலில் எழுதியிருக்கும் முன்னுரையிலிருந்து:

''ஒரு குடிசையிலிருந்து...''

இந்தியாவின் முதல் 'தலித் இலக்கியம்' ஒடுக்கப்பட்ட மக்களின் இயல்பை வெளிப்படுத்திய உயர் தனி இலக்கியம்!

...இவ்விருபதாம் நூற்றாண்டின் ஒடுக்கப் பட்ட மக்களின் உள்ளத்திலே அறிவெழுச் சியை ஏற்படுத்தி வாழ்க்கையின் பல்வேறு தளத்திலும் போராட்டக்களத்திலும் அவர் களின் தேர்ந்த போராயுதமாய் அறிவாயு தத்தை வடித்துக்கொடுத்தவர் நம் பேரா சான் அம்பேத்கர்! ...ஆனால் அண்ணல் பிறப்பதற்கு முந்தி ஒரு நூறு ஆண்டுகளுக்கு முன்பே ஒடுக்கப்பட்ட மக்களின் உயிர்ப் பாற்றல் மிக்க வாழ்க்கைச் சீர்மையினையும் அது வீரழிந்த வகையினையும் ஓரளவு உணர்ந்து உருவாக்கப்பட்டதே'' ஒரு குடிசையிலிருந்து...!'' (La chaumiere indienne) என்னும் குறும்புதினம்.

இக்குறும்புதினத்தைப் பிரஞ்சு மொழி யில் உணர்ந்து எழுதியவன் ''என்றி பெர் னார்தின் செயின்ட் பியர்'' (Hendry Bernar-din da saint pierre) என்பான்,



படிப்பகம்

www.padippakam.com

இவன் பிரெஞ்சுப் புரட்சியின் ஆசான் உருசோவின் மாணவன்; பிரெஞ்சு நாட்டின் புகழ்பெற்ற எழுத்தாளன்: பொறியியல் வல்லுநன்; இயற்கை அறிவியலறிஞன்; பகுத்தறிவாளன்; பல்கலை நூலாசிரியன்; முற்போக்கு சிந்தனையாளன்; முதுபெருங் கணக்காயன்.

பிரெஞ்சு நாட்டின் இலே ஆவர் நகரில் கி.பி. 17'3 இல் பிறந்த இவன் தனது 53 ஆம் அகவையில் (வயதில்) கி.பி. 1790 இல் இப் புதினத்தைப் படைத்தான்.

எங்கோ இருந்து கொண்டு இந்தியக் குமுகத்தைப் பற்றி இருநூறு ஆண்டுகளுக்கு முன்னே இவனைப்போல் தெளிவாக அறிந்து வெளிப்படுத்தியோர் எவருமிலர்.

...முந்திய காலத்திலேயே இந்தியாவின் மக்களினம் பற்றியும் இங்கு நிலவியிருந்த சாதிகளைப் பற்றியும் சாதியமைப்பையே கருவாகக் கொண்டு இயங்கி வரும் இந்து மதம் பற்றியும் இந்து மதத்தின் உயிர் மூலமாய் விளங்கும் சமற்கிருத மொழிச் சாத்திரங்கள் (வேதங்கள், பிராமணங்கள், ஆரண்யகங்கள் உபநிடதங்கள், தர்ம சூத்திரங்கள், இதிகாசங்கள் சிமிருதிகள், புராணங்கள், பற்றியும் தெளிவாகத் தெரிந்து வைத்திருந்தான் செயிண்ட் பியர் என்பதே வியப்புக்குரிய செய்தியாகும். தான் விளங்கிக்கொண்ட இந்தியக் குமுகத்தை மேலையருக்கு உணர்த்திய வகையிலே இப் புதினம் 'உலகத்தின் முதல் தலித் இலக்கியம்' என்னும் சிறப்பையும் பெறுகிறது.

1994- தலித் படைப்புக்கள், தலித் இலக்கியம் தலித் அரசியல் முதலியவை தீவிரமாக விவாதிக்கப்பட்டுக் கொண்டிருந்த தமிழ்ச் சூழலில் மீண்டும் ஆன்றி பெர்னார்தன் தெசேன் பியேரின் 'La Chavmiere indienne எம்முறை 'ஒரு குடிசையிலிருந்து என்ற தலைப்பில், திரு வடிவேல் இராவணன் அவர்களின் மொழி பெயர்ப்பின் கீழ், 'இந்தியாவின் முதல் தலித் இலக்கியமாக உலகத்தின் முதல் தலித் இலக்கியமாக' அறிமுகப்படுத்தப் படுகிறது.

'ஒரு குடிசையிலிருந்து...!' நூலில், 1968 இல் இரா தேசிகபிள்ளை மொழி பெயர்த்த சிந்தனைப்பதிப்பகம் (சென்னை) மூலமாக வெளியிடப்பட்ட 'இந்தியக் குடிசை' நூலைப்பற்றி எந்தவிதக் குறிப்பும் இல்லை 'La Chavmiere indienne' என்ற பிரஞ்சு மூல நூலின் பதிப்பு விவரங்களும் 'ஒரு குடிசையிலிருந்து நூலில் இல்லை. (இரா. தேசிகப்பிள்ளையின் இந்தியக் குடிசை நூலிலும் பிரஞ்சு மூல நூல் குறித்த பதிப்பு விவரங்கள் இல்லை) இராவணன் எந்த மொழியிலிருந்து இந்த நூலை தமிழில் மொழி பெயர்த்தார் என்பது குறித்த தகவலும் இந்நூலில் தெளிவாக இல்லை. இராவணன் அவர்களுக்குப் பிரஞ்சு மொழி தெரியும் என்பதற்கான தடயங்களும் இந்த நூலில் இல்லை, (பிரஞ்சு மொழி தெரியும் என்ற நிலையில், உதாரணமாக, La Chavmiere Indienne என்ற தலைப்பை ஒரு குடிசையிலிருந்து...?' என்று மொழி பெயர்க்க முடியாது) இந்நிலையில் 1968 இல் இரா. தேசிகன்பிள்ளை மொழி பெயர்த்த 'இந்தியக்குடிசை' என்ற பிரதிக்கும், 1994இல் இராவணன் மொழி பெயர்த்ததாக வெளிவந்திருக்கும் 'ஒரு குடிசையிலிருந்து...! என்ற நூலுக்கும் உள்ள தொடர்பு எப்படிப் பட்டது? இரு பிரதிகளையும் ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது 'ஒருகுடிசையிலிருந்து...' தேசிகன் பிள்ளையின் 'இந்தியக் குடிசை' என்ற மொழி பெயர்ப்பின், முழுமையற்ற' குழப்பமான தனித்தமிழ் வடிவம் (வார்த்தைகளளவில்) என்ற முடிவுக்கு வரத்தோன்றுகிறது (இராவணன் ஆங்கிலம் மூலமாக 'La Chavmiere Indienne' நூலை தமிழில் மொழி பெயர்த்திருக்கலாம். ஆனால் ஆங்கில மொழி பெயர்ப்பின் பதிப்பு விவரங்களும் இந்நூலில் இல்லை). இப்போது தமிழில் இரு வடிவங்களில் ஆன்றி பெர்னார்தன் தெசேன் பியேர்! 1968இல் தேசிகன் பிள்ளையின் ஆசாரமும் பழமையும் நிறைந்த பதப் படுத்தப்பட்ட தமிழில்! 1994இல் இராவணனின் 'தனித் தமிழ்ப் பழமை' நிறைந்த தமிழில்! (1980 களில் 'ஒரு குடிசையிலிருந்து. நூல் ஏற்கெனவே ஒருமுறை வெளிவந்ததாக ஒரு தகவல்—இத் தகவல் உண்மையாக இருப்பின் 'தலித் இலக்கியம்' என்ற அடையாளம் அப்பதிப்பில் இருக்கிறதா என்று பார்ப்பது முக்கியமானதாக அமையும்).

18ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பிரஞ்சுச் சிந்தனை மற்றும் கற்பனை மூலமாக எழுந்த ஓர் லட்சிய உலகை நிருபிக்க இந்தியாவையும் .இந்தியக்குடிசையையும் அதில் வாழும் 'பறையனை'யும் பயன் படுத்தும் ஒரு நீதிக்கதையை அதனுடைய மொழி பெயர்ப்பின் 'தனித் தமிழ் வடிவத்தை' 'இந்தியாவின் முதல் தலித் இலக்கியமாக' 'உலகத்தின் முதல் தலித்



படிப்பகம்

www.padippakam.com

இலக்கியமாக' அறிமுகப்படுத்தும் தமிழ்ச் சூழலில் மட்டும் தான் சாத்தியம்?

1995

VIRAMMA

Josiane Et Jean—Luc Racine (வீரம்மா ஜோஸியான் ரசின், ழான் லுய்க் ரசின்)

Une vie paria (ஒரு பறைய வாழ்க்கை)

Le Rire Des Asservis (அடிமையின் சிரிப்பு)

Inde du sud (தென் இந்தியா)[9]

''இந்த மாவட்டத்தில் இன்னும் எத்தனை கிராமங்களில் டீக் கடைகளில் எங்களுக்குத் 'தனி டம்ளர்கள்' போடப் பட்டுள்ளன என்று உங்களுக்குத்தெரியாதா? ஊர்வலங்கள் என்று நீங்கள் கூப்பிட்ட போதெல்லாம் வண்டிகளிலும் லாரிகளிலும் நாங்கள்தானே ஏறி வந்தோம்! இந்திரா காந்தியும் ராஜீவ் காந்தியும் எம் ஜி ஆரும் இறந்த போது நாங்கள்தானே மொட்டை போட்டோம். இன்று நாங்கள் செத்துக் கிடக்கிறோமே— நீங்கள் யாரும் வர வில்லையே...!''

—தென் மாவட்டங்களில் நடந்து கொண்டிருக்கும் ஜாதிக் கலவரத்தை யொட்டிக் கூட்டப்பட்ட சர்வகட்சிக் கூட்டத்தில் 'ஒரு தலித் இளைஞன்' பேசியது.[10]

'நான் அலறுகிறேன். அதனால் நான் இருக்கிறேன்'

—ரெய்னால்டோ அரெனாஸ்[11]

''அவள் பாடுகிறாள், அலற விரும்பாத அவள் பாடுகிறாள். பெருமையில் மிதந்து அவள் பாடுகிறாள்'...

—ஆன்றி மிஷோ[12]

பாண்டிச்சேரிக்கு அருகில் இருக்கும் ஒரு சிறு கிராமத்தின் சேரியில் வசிக்கும் 'பறை யர்' ஜாதியைச் சேர்ந்த 'வீரம்மா' (நிஜப் பெயரல்ல) என்ற முதிய பெண்மணியின் வாழ்க்கை, பிரான்ஸில் பிரஞ்சு மொழியில் ஒரு நூலாக வெளியாகியிருக்கிறது. (மொத்தம் 625 பக்கங்கள், அதில 268 பக்கங்களில் வீரம்மாவின் வாழ்க்கை. வீரம்மாவே கூறுவதாக 75 பக்கங்களில் ஆய்வை உள்ளடக்கிய, 'ஒரு நீண்ட அறி முகம். ஜோசியான் மற்றும் ழான்-லுய்க் ரசினால் எழுதப்பட்டதாக, பிற பக்கங்களில் 123 படங்கள், 5 நிலவரைபடங்கள், குறிப் புக்கள், பயன்படுத்தப் பட்டிருக்கும் தமிழ்ச் சொற்களின் அர்த்தங்கள் சொற்பட்டியல் கள்) இந்நூலை உருவாக்கியவர்களாக குறிப்பிடப்பட்டிருப்பவர்கள்: 'வீரம்மா' ஜோசியான் ரசின்மற்றும் ழான்-லுய்க்ரசின் ஜோசியான் ரசின்: பாண்டிச் சேரியைச் சேர்ந்த தமிழ்ப்பெண்மணி. பிரஞ்சுக் குடி யுரிமை பெற்றவர், தமிழ் நாட்டுப்புறப் பாடல்களை சேகரித்துக் கொண்டிருப்பவர், ஆராய்ந்து கொண்டிருப்பவர். ழான்-லுய்க் ரசினின் மனைவி. ழான்-லுய்க் ரசின்: பிரான்ஸில் CNRS-இல் (centre National Recherche scientifiqhe, National centre for scientific Research) ஆராய்ச்சி இயக்குனு ராகப் பணிபுரிபவர் பாண்டிச்சேரி பிரஞ்சு ஆய்வு நிறுவனத்தில் (French Institute of pondicherry) பணியாற்றியவர், சமூக, கலாச்சார, மனித புவியியல் அடிப்படையில் தற்கால இந்தியச் சமூகம் மற்றும் நகரங்கள் (குறிப்பாக கல்கத்தா) குறித்த ஆராய்ச்சியை மேற்கொண்டிருப்பவர். பல புத்தகங் களையும் ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் வெளியிட்டிருப்பவர். பிரஞ்சுக்காரர்[13] 'வீரம்மா': பாண்டிச்சேரிக்கு அருகில், பாண்டிச்சேரி யூனியன் பிரதேசத்தின் நிர் வாகத்தின் கீழ் வரும் ஒரு சிறு கிராமத்து சேரியில் வாழும். 'பறைய' ஜாதியைச் சேர்ந்த முதிய பெண்மணி, வாழ்நாள் முழுக்க, கூலிக்கு அடிமையாக உழைத்து தற்போது ஓய்ந்திருப்பவர். நாட்டுப் புறப் பாடல்கள பாடுவதில தேர்ந்தவர்.[14]

நாட்டுப்புறப்பாடல்களைச் சேகரிக்க ஜோசியான் ரசின 'வீரம்மா'வின் சேரிக்குச் சென்றபோது 'வீரம்மா'வுடன் கொண்ட 'நட்பின்' (தொடர்ந்த பண உதவியுடன் கூடிய நட்பு) விளைவாக, பத்து, பன்னி ரண்டு வருடங்களில் விட்டு விட்டு ஒலி நாடாவில் பதிவு செய்யப்பட்ட 'வீரம்மா' வின் பேச்சுக்களின், பாடல்களின் மூலமாக, பிரஞ்சு மொழியில் எழுதப்பட்டிருக்கிறது இந்நூல்.

பிரான்ஸின் பிரபல பதிப்பகம் ஒன்று, (PLON Unesco ஒத்துழைப்புடன் ழான் மலோரி (Jean Malaurie) என்பவரின் ஆசிரியப் பொறுப்பின் கீழ் ஐரோப்பிய மனித சமூக அறிவியல் துறைகளைச் சார்ந்த வல்லுநர்களையும், நுண்ணுணர்வுகொண்ட பொதுவான 'அறிவுஜீவி' வாசகர்களையும் ஒருங்கே அடையும் விதத்தில் உலகத்தின்



படிப்பகம்

www.padippakam.com

பிற மனிதர்களையும் கலாச்சாரங்களையும் விரிவாக அறிமுகப்படுத்தும் நோக்கத்தில் Terre humaine (மனித உலகம்? மனித பூமி?) என்ற தலைப்பில். 1955 லிருந்து தொடர்ந்து வெளியிட்டு வரும் வெளியீட்டு வரிசை ஒன்றில் பதிப்பிக்கப்பட்டிருக்கிறது இந்நூல். (லெவி-ஸ்ட்ராஸின் Tristes Tropiques, இவ் வெளியீட்டு வரிசையில்தான் வெளிவந்தது Clande Levi-Stravss-Tristes Tropiques 1955) பிரான்ஸின பிரபலபத்திரிகைகள் இந்நூலை வரவேற்று பாராட்டியிருக்கின்றன. பாண்டிச்சேரியிலிருந்து வெளிவரும் Le Trait—D' union என்ற பிரஞ்சு சிறு பத்திரிகையும் இந்நூலைப் பாராட்டி ஒரு கட்டுரை வெளியிட்டிருக்கிறது (புத்தக விமர்சனமாக)[15]

கிராமத்தில் ஒரு ரெட்டியார் குடும்பத்தின் கீழ் பிணைக்கப்பட்டிருந்த 'வீரம்மா'வின் வாழ்க்கையை, குழந்தைப் பருவம் முதல் தற்போது ஓய்ந்து உட்கார்ந்து விட்டது வரையிலான அவருடைய வாழ்க்கையை 26 தலைப்புகளில் 26 அத்தியாயங்களில் 'வீரம்மா'வின் மொழி பெயர்க்கப்பட்ட பேச்சாக முன் வைக்கிறது இந்நூல். (தலைப்புகள் 'வீரம்மா'வின் தமிழ்ப் பேச்சிலிருந்து எடுக்கப்பட்டவை— தமிழில் சாதாரணமானவையாக தொனிக்கும் தன்மையுடைய இந்தத் தலைப்புகள் பிரஞ்சு மொழியில் நளினமும் இலக்கியக் கவர்ச்சியும் ஜனரஞ்சகமும் உடையவையாக மொழி பெயர்க்கப்பட்டிருக்கின்றன.'

368 பக்கங்களில், 'வீரம்மா'வின் மொழி பெயர்க்கப்பட்ட பேச்சில், பாடல்களில் பரந்து விரியும் வாழ்க்கை வெளியை அதில் அடர்ந்து கிடக்கும் உணர்வுகளை, உணர்ச்சிகளை, தகவல்களை பார்க்கும் பொழுது தமிழில் இதுவரை வெளிவந்திருக்கும் தலித் படைப்புக்களின் குறுகிய பரப்பையும் மேலோட்டமான தன்மையையும் பொதுவாக அவற்றின் போதாமையையும் எண்ணி வருத்தம் கொள்ளத் தோன்றுகிறது (அதே சமயம் செயற்கையான முறையில் தெளிவற்ற விதத்தில் பதினோரு பக்கங்களுக்குள் ஒரு வாழ்க்கையைச் சுருக்கி, தன் திறந்த மனப்பான்மையை தம்பட்டம் அடித்துக் கொள்ளும், 'காலச்சுவட்டின்' அறியாமையையும் அகங்காரத்தையும் எண்ணிச் சிரிக்கத் தோன்றுகிறது)[16]

தான் பேசுவது தன்னிலும் வயது குறைந்த நகரத்தைச் சார்ந்த மற்றொரு பெண்ணிடம்தான் என்ற நிலையில் ('வீரம்மா' ஜோஸியானை 'சின்னம்மா' என்று கூப்பிடுகிறார்) 'வீரம்மா'வால் எந்த விதக் கட்டுப்பாடுகளும் தடைகளும் இன்றி நேரடியாக சுலபமாகப் பேச முடிகிறது. குறிப்பாக பாலியல் உறவைப் பற்றி மிகத் தெளிவாக, நேரடியாக பேச முடிகிறது. தொடர்ந்து ஆங்காங்கு 'வீரம்மா' வழங்கும் பாலியல் உறவு விவரிப்புக்களும் கெட்ட வார்த்தைகள் என அழைக்கப்படும்வார்த்தைகளும் பிரஞ்சு மொழியில், மிகுந்த நளினத்துடன் கிளுகிளுப்பையும் பரபரப்பையும் ஏற்படுத்தும் விதத்தில் மொழி பெயர்க்கப்பட்டிருக்கின்றன. கிளுகிளுப்பையும் பரபரப்பையும் அளிக்கும் விதத்தில் அமையும் இந்த விவரிப்புக்கள் சமூகத்தின் அடிமட்டத்தில் வாழ்பவர்கள் கொண்டிருக்கும் வேறான மாறுபட்ட சுதந்திரம் என்ற வழக்கமான, பழக்கமான, தவறான அடிப்படையில் நியாயப்படுத்தவும் பட்டிருக்கின்றன. 'வீரப்மாவின்' மொழி பெயர்க்கப்பட்ட பேச்சிலிருந்து முதிய வயது தரும் சாதகமான நிலையில் அனுபவங்களின் பின்னணியில் எந்த ஒன்றையும் மிகச்சுலபமாக ஈர்க்கும் தன்மையுடன் ஒரு கதையாக மாற்றிச் சொல்லும் திறமை கொண்ட (அ?) சாதாரணமான பெண்மணி அவர் என்பதைப் புரிந்து கொள்ள முடிகிறது.

எழுதப்படிக்கத் தெரியாத 'வீரம்மா' பல வருடங்களில் பேசியது இந்நூலில் ஜோஸியான் மற்றும் ழான்-லுய்க்ரசினால் மொழி பெயர்க்கப்பட்டு, ஒரு வாழ்க்கை வரலாறாக ஒழுங்குபடுத்தப்பட்டு தொகுக்கப்பட்டிருக்கிறது என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும் (தான்பேசியது இப்படிப் பட்ட ஒரு புத்தகமாக வரப்போகிறது என்பது புத்தகத்தை தன் கையில் பெறும் கணம் வரை, வீரம்மாவுக்குத் தெரியாது)

1957 இல் பிரஞ்சில் வெளிவந்த லூயி துய்மோவின் பிரமலைக்கள்ளர் குறித்த ஆய்வு நூலுக்குப்[17] பிறகு ஒரு குறிப்பிட்ட தமிழ்ச்சாதி மக்களைக் குறித்த ஏராளமான தகவல்களை ஒரே இடத்தில். வல்லுனர்கள் தவிர்த்த பிறரும் எளிதாக அறியும் விதத்தில் வேறொரு மொழியில், நேரடியாக எளிமையாக முன்வைக்கும் ஒரே நூல் இந்நூல்தான் என்று உறுதியாகக் கூற முடியும் (தன்னுடைய நூலில் லூயி துய்மோ மேற்கொள்ளும் பாரபட்சமற்ற, உணர்ச்சி வசப்படாத, இறுக்கமான ஆய்வுமுறை இந்நூலில் சிறிதும் இல்லை என்பது மற்றொரு விஷயம்).



படிப்பகம்

www.padippakam.com

குறுகிய நெடுஞ்சாலையின் வலதுபுறத்தி லிருந்து பிரிந்து கிராமம் நோக்கி உள்ளே செலலும் தார்ப்பாதையில் நடந்து மீண்டும் வலது புறம் திரும்பி 'ஊ'நக்கு முன்பாக வெளியே தள்ளி இருக்கும் சேரியை அடைந் தால், தன்னுடைய குடிசையின் பக்க வாட்டுச் சுவரில் சாய்ந்து ஒய்ந்து உட்கார்ந் திருக்கும், 'வீரம்மா'. கனவுகளற்ற நிலையில் ஆர்வத்துடன் வெறிக்கும் அவர் கண்கள்... பக்கத்தில், கேள்விகளுடன் அலையும் அவரு டைய மகனின் கண்கள்...

சேரியில் வசிக்கும் மனிதர்கள். பயத்தில், மரியாதையில், அறியாமையில், இந்துமத மரபும், நாட்டுப்புற நம்பிக்கைகளும், வழி பாடும், ஜனரஞ்சகமான தமிழ்க் கலாச் சாரமும், அரசியலும் தரும் மயக்கத்தில், விதி யாக, கலங்கிய சேறாக, தொடரும் துன்பத் தில் வேதனையில் தீண்டப்படாததாக, தொட முடியாத நிலையில், தீண்டப்பட முடியாததாக, சொல்லப்பட முடியாததாக, குரல் கொடுக்கும் திறனற்றதாக, ஆழத்தல் அவர்கள் வாழ்க்கை...

இவ்வாழ்க்கையை ஊடுருவி, அதன் மேலும் கீழும் படர்ந்திருக்கும், பரவி யிருக்கும், எதையும் ஒப்புதலும் சுகமும் இன்பமும் தரும் தன்னையும் பிறரையும் விலகி நின்று கவனிக்கும் சுவாரஸ்யமான கதையாக, கதை சொல்லும் பாடலாக மாற் றும், பொதுவான ஜனரஞ்சகமான தமிழ்ப் பண்பாடும் மொழியும்... பதிவு செய்யப்படும் 'வீரம்மா'வின் ஒலிகள் மேற்குறிப்பிட்ட வாழ்க்கையின் தொட முடியாத வேதனையி லிருந்து எழுவதில்லை. அதன் மேலும் கீழு ம பரவியிருக்கும், எதையும், விலகி நின்று கவனிக்கும், சுகமாக கதை கூறும் தன்னிலை களாக மாற்றும் ஜனரஞ்சகமான பொது வான தமிழ்ப் பண்பாட்டிலிருந்து மொழியி லிருந்து எழுகின்றன.

ஒய்ந்து 'உட்கார்ந்திருக்கும்' எழுத, படிக்கத் தெரியாத (தன் வாழ்க்கை வரலாறு 'எழுதப்பட்டிருப்பது' 'கூறப்பட்டிருப்பது' பிரெஞ்சு மொழியில் என்பதுகூட 'வீரம்மா வுக்குத் தெரியாது) 'வீரம்மா'வின் உதடுகள் அசைகின்றன. பின்னணியிலிருந்து, பிரஞ்சு மொழியில், வெளிப்படுகிறது ''வீரம்மா' வின் குரல். பிரஞ்சு மொழியில் எழும் 'வீரம்மா'வின் குரலின், பின்னணியில் தற்கால பிரஞ்சு சமூகத்தைச் சார்ந்த இரு உருவங்கள்: ஜோஸியான்ரசின், மூான்- லுய்க் ரசின்.

எதையும் கதையாக மாற்றும் தமிழ்ப் பண்பாட்டிலிருந்து மொழியிலிருந்து எழும், பதிவு செய்யப்படும் ஒலிகளை கவனிக் கின்றன மூன்று 'பார்வை'கள்: அவற்றில் முதல் 'பார்வை' ஜோஸியான் ரசினுடையது பாண்டிச்சேரியைச் சேர்ந்தவர் என்ற நெருக்கத்தில் மற்றொரு பெண் என்ற நெருக்கத்தில், 'வீரம்மா'வின் பேச்சுத் தமிழைப் புரிந்துகொள்ள முடியும் என்ற நெருக்கத்தில் 'வீரம்மா'வின் ஒலிகளை கவனித்து தமிழ் மொழிக்கு மிகவும் நெருக்க மான நிலையில் ஒரு அடிப்படையான அளவில் பிரெஞ்சு மொழிக்கு மாற்றும் பார்வை இரண்டாவது பார்வை மூான்- லுய்க் ரசினுடையது: ஓர் அடிப்படையான அளவில் பிரெஞ்சு மொழிக்கு மாற்றப்படும் வீரம்மாவின் ஒலிகளை கவனித்து அவற்றை ஒழுங்குபடுத்தி, அவற்றை நளினமான இலக்கியக் கவர்ச்சி நிறைந்த பிரஞ்சு மொழி நடைக்கு மாற்றி, அவற்றிற்கு ஒரு சமூக வியல் ஆய்வுப் பின்னணியைத் தரும் பார்வை. மூன்றாவது பார்வை மூான் மலோரியுடையது: சமூகவியல் ஆய்வுப் பின்னணியுடன் நளினமும் இலக்கியக் கவர்ச்சியும் மிக்கதாக, பிரஞ்சு மொழிக்கு மாற்றப்பட்ட 'வீரம்மாவின' ஒலிகளை கவனித்து தன்னுடைய வெளியீட்டு வரிசை யின் தேவைகளுக்குத் தக்கபடி கட்டமைக்கும் பார்வை இம்மூன்று பார்வைகளாலும் கவனிக்கப்பட்டு, நெய்யப்பட்டு, பின்னப் பட்டு, வல்லுனர்களையும் பிற நுண்ணு ணர்வு கொண்ட பொது 'வாசகர்களையும்' நேரடியாகச் சென்றடையும் நோக்கத்தில், இலக்கியத்தன்மையும் மிகுந்த ஒரு மானிட வியல் (Literary Anthropology?) அடிப் படையில் பதிப்பிக்கப்படும் ஒரு வெளியீட்டு வரிசையில், பிரஞ்சு மொழியில கட்டமைக்கப் படும், பொறிக்கப்படும் 'வீரம்மா'வின் குரல். 'வீரம்மா' என்ற குரல்.

மூன்று பார்வைகளால் பின்னலுக் குள்ளாகி எழும் 'வீரம்மா'வின் பிரஞ்சு மொழிக் குரலில் விரியும் தன்னிலையும், உலகமும், இந்துமத மரபும் கருத்துக்களும் நாட்டுப்புற வழிபாடும் நம்பிக்கைகளும் கலந்த ஜனரஞ்சகமான, கவர்ச்சியான, வரையறுக்கப்பட்ட எல்லைகளைக்கொண்ட ஒரு குறுகலான கலவையில் மூழ்கியிருக் கின்றன. மேற்குறிப்பிட்ட குறுகலான கலவையில் முழுமையான அளவில மூழ்கி யிருக்கும் நிலையில், எதையும் சுவாரஸ்ய மான கதையாக மாற்றும், பொதுவான தமிழ்ப் பண்பாட்டில முழுமையாக பங்கேற் கும் நிலையில். இத்தன்னிலையால் 'தர்மம்,



படிப்பகம்

www.padippakam.com

கர்மம், பாவம், புண்ணியம், என்பவற்றின் அடிப்படையில் தன்னுடைய அடிமைத் தனத்தை, வாழ்க்கையாகத் தொடரும் வேதனையை முழுமையாக ஒப்புக்கொள்ள முடிகிறது தான் மூழ்கியிருக்கும் வரை யறுக்கப்பட்ட கலவையின் உள்ளிருந்தவாறு பிணைக்கப்பட்டு கிடக்கும் அடிமைத் தனத்தின் உள்ளிருந்தவாறு, உயிர்ப்புடன் சிரிக்க முடிகிறது. தற்கால ஐரோப்பிய நகர்ப்புறச் சமூகத்தைச் சேர்ந்த வசதியான மூன்று 'பார்வை'களின் அனைத்துப் பரிமாணங்களிலும் தங்களை, அரசியல் ரீதியாக சரியாக, பாதுகாப்பாக வைத்துக் கொள்ளும் நோக்கில் (Political correctness) அவற்றின் 'குற்ற உணர்வை' திருப்திப் படுத்தும் விதத்தில் தன்னை, தன் தன்னிலையை, தன் வாழ்க்கையை ஒரு சுவாரஸ்யமான கதையாக மாற்றி அனைத்தையும் ஒப்புக்கொண்டு உயிர்ப்புடன் சிரிக்கும் இந்து மதம் சார்ந்த தனக்குள்ளாகவே முடிந்து போகும், ஒரு சிறு 'பறைய' தமிழ்ப் பிரபஞ்சமாக, பிரஞ்சு மொழியில் 'வீரம்மா'. (இந்நூலில் எழுதப்பட்டிருக்கும் நீண்ட அறிமுகம் 'வீரம்மா'வின் பேச்சை தற்காலத்தில் தமிழில் வெளிவந்திருக்கும் பிற பெண் தலித் படைப்பாளிகளின்-பாமா, பத்மினி, விடிவெள்ளி, சிவகாமி—பிரதிகளின்[18] பின்னணியில் வைத்துப் பார்க்க முயல்வதில்லை. இந்த அறிமுகத்தில் தமிழ் தலித இலக்கியம் குறித்து இறுதியில் வரும் சிறு பகுதியிலும் தவறுகள்: கிளுகிளுப்பும் பரபரப்பும் ஏற்படுத்தும் நோக்கில 'பலி'[19] என்ற போலி தலித் சிறுகதையை எழுதிய தேவி பாரதி பெண்ணாக மாற்றப் பட்டிருக்கிறார். ராஜ் கௌதமன் ஒரு கவிஞராக குறிப்பிடப்படுகிறார்! பூமணியின் 'பிறகு'[20] அறிவழகனின் 'கழிசடை'[21] ஆகியவை குறித்து அல்லது பாமா, பத்மினி, விடிவெள்ளி, சிவகாமி ஆகியவர்களின் பிரதிகள் குறித்து எந்தவொரு தகவலும் இந்த நீண்ட அறிமுகத்தில் இல்லை)

'நீங்க பேசினது புஸ்தகமா வந்திருக் கிறத பார்த்ததும் என்ன நெனச்சீங்க?'

'என்ன' நெனக்கறது?'[22]

'வீரம்மா' தந்த பதில் இதுவரை வந்த வார்த்தைகளுக்குள் அலைநதுகொண்டிருக் கிறது. 18 ஆம் நூற்றாண்டில். ஆன்றி பெர்னார்தன் தெ சேன் பியேரின் லட்சிய உலகின் பார்வையில் உருவாகி இயல்பான உள்ளத்துடன், துன்பத்தில், இயற்கையில், உண்மையைக் கண்டு, சமூகத்திலிருந்து ஒதுங்கி, இயற்கையோடு இயைந்து காட்டிற்குள் வாழும் 'பறையன்'. 205 ஆண்டுகளுக்குப் பிறகு தற்கால பிரஞ்சுச் சமூகத்தின் ஒரு தளத்திலிருந்து எழும், அரசியல் அடிப்படையில், ''மிகச் சரியானதாக'' பாதுகாப்பானதாக அமையும் மூன்று பார்வைகளின் ஒருங்கிணைந்த நோக்கில் யதார்த்தத்திலிருந்து கட்டமைக்கப்பட்டு, அனைத்தையும் ஒப்புக்கொண்டு. சமூகத்தினுள் சேரியினுள் வாழும் உயிர்ப்பு நிறைந்த 'அடிமையின் சிரிப்பாக', 'பறைய' ஜாதியைச் சேர்ந்த 'வீரம்மா'. ('வீரம்மா' உயிர்ப்பு நிறைந்த அடிமையின் சிரிப்பாக மாற்றப்படுவதில் எதையும், எவரையும், சுகமாக கவனிக்கும் கதையாக மாற்றும் தமிழ்க் கலாச்சாரத்திற்கு இருக்கும் பங்கு மறுக்கமுடியாத ஒன்று).

1790-இல், பிரஞ்சு மொழியில் உண்மையையும் இன்பத்தையும் உடையவனாக ஒரு 'பறையன்'. 1995-இல் பிரஞ்சு மொழியில் அனைத்தையும் ஒப்புக்கொண்டு. மகிழ்ச்சியில், உயிர்ப்புடன் மலரும் அடிமையின் சிரிப்பாக. 'ஒரு விசித்திரமான உயிரியாக, பறையர் ஜாதியைச் சேர்ந்த 'வீரம்மா'.[23] தான் தன் சுகமென வாழும் ஐரோப்பிய சமூகத்தின் பார்வை என்றும் மாறப் போவதில்லை என்று தோன்றுகிறது.

ஆன்றி பெர்னார்தன் தெ செயின்ட் பியேரின் 'பறையனுக்கும்' ஜோஸியான் மற்றும் ழான்-லுய்க் ரசினின் 'வீரம்மா'வுக்கும், உயர் ஜாதியினருக்கு மரியாதையை மட்டும் தந்து, கட்சி அரசியலில் ஈடுபட்டிருக்கும் 'வீரம்மா'வின் மகனுக்கும், விலகி நின்று, அனைத்தையும் கவனிக்கும் மரபில், மத்திய தர வர்க்க தமிழ் எழுத்தாளர்களைப் பின் தொடரும் தமிழ் தலித் எழுத்தாளர்களின் பிரதிகளுக்கும் அப்பால், ஆழத்தில்

'தொட முடியாததாக', 'தீண்ட முடியாததாக' தொடப்படாத நிலையில் தலித வாழ்க்கையின், தலித் தன்னிலையின் அலறல்?

''சாம்பலைப் பூசிக்கொண்டு, என்முடியை வேரோடு பிடுங்கியெறிந்து, என் உடைகளைக் கிழித்தெறிநது, என் துன்பம் வெளியேற என் இறுதி மூச்சுவரை அலற விரும்புகிறேன நான்... கொந்தளிக்கும் சீற்றத்தை அடக்கிக் கொள்வதிலும், வலியைத் தாங்கிக் கொள்வதிலும் தேர்நதவள் நான், அலறுவதற்கு குரல் இல்லை என்னிடம்...''[24] □



படிப்பகம்

www.padippakam.com

## குறிப்புகள்

இக்கட்டுரையில் மேற்கோள் குறிகளுக்குள் தரப்பட்டிருக்கும் 'பறையன்' 'பறைய' ஆகிய வார்த்தைகள் குறிப்பிடப்பட்ட நூல்களிலிருந்து எடுக்கப்பட்டு பயன்படுத்தப்படுபவையாக கருதப்பட வேண்டும்.

1790.

1. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நூலிலிருந்து. 1963.

   கட்டுரையின் இப்பகுதியில், தரப்பட்டிருக்கும் கதைச் சுருக்கத்தில் மேற்கோள் குறிகளுக்குள் எழுதப்பட்டிருக்கும் வார்த்தைகள் வாக்கியங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள நூலிலிருந்து எடுக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டவை.

2 இந்தியக் குடிசை (குறுநாவல்), பிரஞ்சு மூலம்: பெர்னார்தன் தெ சேன் பியேர். தமிழாக்கம்: திரு இரா. தேசிகப் பிள்ளை, பி.ஏ., பி எல்., சிந்தனைப் பதிப்பகம், எழும்பூர், சென்னை, முதற் பதிப்பு: மே, 1968.

3. திரு. இரா. தேசிகப்பிள்ளை (23- -1893 —26-4-1975) பாண்டிச்சேரியில் வாழ்ந்தவர், சட்டப்படிப்பு படித்தவர், தமிழ், பிரெஞ்சு, ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் புலமை உடையவர். புதுவை நீதிமன்றத்தில் மொழி பெயர்ப்பாளராக பணியாற்றியவர். பாண்டிச்சேரி பிரஞ்சு ஆய்வு நிறுவனத்தில் (French Institute of Pondicherry) பணியாற்றியவர். புதுவை கல்விக் கழகத்தை நிறுவியவர். இவர் எழுதிய, மொழி பெயர்த்த நூலகள் குறிதத விவரங்களுக்கு காண்க: மொழியாக்கச்செல்வர் திரு இரா. தேசிகப்பிள்ளை மணிவிழா சிறப்பு மலர், 27-12-1970, புதுவை. (பாண்டிச்சேரி பிரெஞ்சு ஆய்வு நிறுவனத்தில் இந்தியவியல் துறை நூலகத்தில் நூல் எண: Eo TA, REC 12), ''மொழியாக்கச் செல்வர்'' அமரர் ரா. தேசிகப் பிள்ளை, நினைவு அஞ்சலி 11-7-1976 வெளியீடு: கல்விக் கழகம், புதுவை.

4. குறிப்பு எண்: 2-இல் குறிப்பிடப்பட்டிருக்கும் நூலிலிருந்து: ஆன்றி பெர்னார் தன் தெ சேன் பியேர் (Henry Bernardin de saint —Pierre)

நி—10

இந்நூலாசிரியரின் முழுப்பெயர் ஆன்றி பெர்னார்தன் தெ சேன் பியர் ஆகும். அவர் பிரெஞ்சு நாட்டின் பேர் பெற்ற நூலாசிரியர்;பேரறிஞர் உருசோவின் மாணவர்; முற்போக்கான சிந்தனைப்போக்குடையவர் அவர் 1737-ஆம் ஆண்டில் லெ ஆவர் என்னும் நகரத்தில் பிறந்தார். தொடக்கத்தில் அவர் இராணுவத்தில் சேர்ந்து பணியாற்றினார். இராணுவத் தொண்டு அவர் இயல்புக்கு ஒத்து வரவில்லை. வாழ்க்கையைச் சிறப்பிக்கவுமில்லை. அதனால், அத்தொழில் விடுத்து ஏற்புடையதொழிலொன்றைத் தேடி அலைந்து, உருசியா, போலந்து, செருமனி முதலிய நாடுகளுக்குச் சென்றார். 1767ஆம ஆண்டில் பொறியியல் வல்லுநராகப் பிரெஞ்சுத் தீவாக விளங்கிய மோரிசுக்குச் சென்றார் தான் எண்ணியிருந்ததற்கு மாறாக அத்தீவு அன்று அவருக்குக் காட்சியளித்தது. அங்கு இரண்டாண்டுகள் பணி செய்த பிறகு பாரிசுக்குத் திரும்பி வந்தார். ஆயினும் அத்தீவில் காணப்பட்ட அயல்நாட்டு அழகமைப்புகள் அவர் மனதைக் கவர்ந்திருந்தன அவர் 1773-ஆம் ஆண்டில் 'பிரஞ்சுத் தீவுப் பயணம்' என்னும் நூலை இயற்றினார். அதற்கு ஆலோசனை கூறியவர் பிரஞ்சுப் புரட்சிக்குக் காரணமாகயிருந்த ழான்-ழாக்-ருசோ ஆவர். முதல் நூலையடுத்து 1784 ஆம் ஆண்டில் 'இயற்கை ஆராய்ச்சி' என்னும் நூலை எழுதி வெளியிட்டார் இந்நூலில் தம் ஆசிரியரது உணர்ச்சித் தத்துவங்களை நன்கு விளக்கியுள்ளார். அதன்பின் 1787-ஆம்ஆண்டில் ''போலும் விர்ழினியும்' (Pawl et virginie) என்னும் நவீனத்தை இயற்றினார். இஃது அவர் மேதைமையை உலகிற்கு எடுத்துக் காட்டியது அதனோடு அவரது தொடர்ந்து 1790-ஆம் ஆண்டில் ''இந்தியக் குடிசை (La chavmiere indienne) என்னும் குறுநாவலொன்றை எழுதினார். 1795ஆம் ஆண்டில் உயர்கலவிச் சாலையின் அறநூல் ஆசிரியராக அமர்ந்தார். அரசாங்கத்தாரால் நன்மதிப்பும் பெற்றார். 1815-ஆம் ஆண்டில் ''இயற்கையின் இயைபு'' என்ற நூல் வெளி வந்தது) அவருடைய பணி இன்பமாகவும் எதையும் நன்முறையில் காண்பதாகவும் விளங்கிற்று



படிப்பகம்

www.padippakam.com

இறைவன் மனிதனுக்காக உலகைப் படைத்தான் என்பது பெர்னார்தனின் கொள்கை. நீரலையின் வெண்மையான நுரை பாறையின் கருமையான நிறத்திற்கு மாறுபட்டிருப்பது கப்பலோட்டிகளுக்குத் தொலைவிலிருந்து அறிவிப்பதற்காகவே என்பதும், இன்சுவையுள்ள வெள்ளரிப்பழத்திற்குப் புடை பெயர்ந்து கீற்றுகள் இருப்பது அப்பழத்தைக் குடும்பத்துள்ளார் அனைவரும் கலந்து உண்பதற்காகவே என்பதும் அவருடைய கருத்து கலைக் களஞ்சிய ஆசிரியர்கள் புய்ப்போன் (Buffon) முதலியோர் காலத்தவராகிய 'பெர்னார்தன்' ஞாயிறு பூவுலகத்தைச் சுற்றுகிறது என்றார் சமரேகையில் பூமண்டலம் கனத்திருக்கிறதென்ற கொள்கையை மறுத்தார் கடலின் ஏற்றம் வற்றம் முதலியவற்றிற்குக் காரணம் பூமண்டலத் துருவங்களில் பனிப்பாறைகள் உருகுவதும் இறுகுவதுமேயாகும் என்றார். அவருடைய சமூகக் கொள்கைகள் 'உருஸ்சா'' (Rovsseav)வின் கொள்கைகளைக் கண்ணீர் விடும் அளவிற்கு எளிதாகச் செய்வனவாகும். மனித சமுதாயத்தின் வீடு பேறு குறித்துப் பேசுங்கால் அறத்தையும் இன்பத்தையும் அச்சமுதாயத்தின் புறத்திலேயே காண்கிறார்.

ஆயினும், தம் கொள்கையை ஒரு நவீனத்தின் மூலம் விளக்குங்கால், அவர் ஓர் அருமையான படைப்பை அளிக்கிறார். ''போலும் விர்ழினியும்'' என்னும் நூலில் சூழ்ச்சி ஓரளவு சுவை குன்றியிருப்பினும அவர் காலத்தவர் கேந சூழ்தலில் முனைந்திருந்தனராயினும் அவருடைய தன்னேரிலலா விளக்கமும் இயற்கை வருணனையும் அவர்களுக்கு இன்பமூட்டின. அவருடைய இயறகை வருணனை ழான்-ழாக்-ரூசோ வருணனைகளை விட ஓரளவு உணர்ச்சி குறைந்ததாயிருப்பினும், சரியானதாய், உருவகம் நிறைந்ததாய், பொருத்தமானதாயிருக்கிறது. நாட்டு நிலையை முன்கூட்டி உணர்த்துவார்போல் இவர் 'ஷத்தோ பிரியா''னின் ''அமெரிக்க நாட்டுப் பயணம்'' ''கிறிஸ்துவத்தின் மேன்மை'' முதலிய நூல்களை மக்களுக்கு அறிமுகப்படுத்துகிறார் எனலாம்.

இந்நிலவுலகில் எழுபத்தேழு ஆண்டுக் காலம் வாழ்ந்து முடிவில் ஓரஞ்ஜி-சுய்ர்-உவாஜ் என்னும பாரில் 1814 ஆம் ஆண்டில் இப்பூவுலகை நீத்தார்.

5. Paalidius. Life of the Brahmtans (Paalldins was a bishop in Bithynia and Galatia at the start at the 5 th century' Life of the Brahmans 'His accounts took the form of a letter addressed to a high dignitary of the Roman Empire', காண்க: Claire MUCKENSTURM-POULLE, PALLADIUS' BRAHMANS PAGE No: 157-166 in ATHENS, ADEN, ARIKAMEDU, Essays on the interrelations between India, Arabia and the Eastern Mediterrancan, Edited by Marie-Franfois Boussac Jean Francois Selles Manonar, Centre de Sciences Humanines New Delhi 1995 (Reprinted from Topai, Vol 3/2 1993, P.387-623, LyON, FRANCE)

6. MONTESQUJEU PERSIAN LETTERS, Translated wlthanintroductionandNotesby C.I. Betts. Penguin Classics, Penguin Books, London, 1973. (பிரஞ்சில் முதற் பதிப்பு 1729.)

7. ஆன்றி பெர்னார்தன் தெசேன் பியேருக்கு ஆங்கிலம் தெரிந்திருந்தது. இந்தியாவுக்கு வந்து சென்ற பாதிரியார்கள். பிற பயணிகள், இந்தியாவைப் பற்றி எழுதிய பிரதிகளிலிருந்து அவர் இந்தியாவைப் பற்றி அறிந்திருக்கலாம். திருக்குறள் குறித்தும், திருக்குறளை எழுதியவர் ஒரு பறையர் எனக்கூறப்படுவது குறித்தும் பலவிதமான செய்திகள் 18-ஆம் நூற்றாண்டு ஐரோப்பாவில் உலவின. இச்செய்திகள், ஆன்றிபெர்னார்தன் தெ சேன் பியேர் அறிந்திருக்க வாய்ப்பிருக்கிறது. பிரெஞ்சு மொழியில் Paria என்ற சொல் 1693-லிருந்து வழக்கில் இருக்கிறது. மற்றொரு வடிவமான pareaz (பன்மை வடிவம்) 1575-லிருந்து வழக்கில் இருக்கிறது (இந்த பனமை வடிவம் தமிழிலிருந்து போர்த்துகீஸ் மூலமாக பிரெஞ்சு மொழிக்குச் சென்றிருக்கிறது) இவ்வார்த்தைகள்: தொடக்கூடாத, தீட்டுடைய, தாழ்நதசாதியைச் சேர்ந்தவர்' என்ற அர்த்தததில் பயன் படுததப்பட்டிருக்கின்றன.-Petit Robert, 1, Paris 1990.

1994.

8. ஒரு குடிசையிலிருந்து...! இராவணன் (மூலம்: என்றி பெர்னார்டின்செயின்ட் பியர்) (குறும்புதினம்), ''ஆதித்தமிழர்.

www.padippakam.com

கோட்டூர்-626569 மதுரை மாவட்டம், 14-4-94.

1995

9. Une vie Paria Le rire des asservis pays tamoul, Inde sud, Par viramma, Josiane et Jean-Luc Racine. Terre Humaine, Collection D'Etutes Et De Temoignages Fondeoe Et Dirigee par Jean Ma'aurie, Plon Editions Unesco, Librairie Lion, Paris, 1995.

10 ரத்த வாடை வீசும் தென் மாவட்டங்கள்' தென்காசி தொகுதி எம் எல் ஏ பீட்டர் அல்போன்ஸின் கட்டுரையிலிருந்து, ஜீனியர்விகடன், சென்னை, 14-3, 10-1-1996, பக்கங்கள்: 20,21.

11 Reinaldo Arenas (1943-1990) Before Night Falls, a memoir, Translated from Spanish by Dolores M Koch, Penguin Books, Newyork 1994 (ஆங்கிலத்தில் முதற்பதிப்பு: ViKing Pengvin 1993, ஸ்பானிய மொழியில் முதற் பதிப்பு: 1992) பக்கம்: 301.

12. Henri Michaux, Meidosems, Poems and Litho Graphs, Translation from French by ElizaBeth R Jackson, Moving Parts Press, santa Cruz, California, 1992. (பிரஞ்சில் முதற்பதிப்பு: Editions Gallimard, 1948 1949 and 1972) பக்கம்:24.

13. ழான்-லுய்க் ரசினின் (Jean-Luc-Racine) ஆராய்ச்சி மற்றும் நூல்கள் குறித்த விவரங்களுக்கு பாண்டிச்சேரி பிரெஞ்சு ஆய்வு நிறுவனத்தின் (French-Institute of Pondicherry) சமூகவியல் துறை நூலகத்தை அணுகவும்.

14 'வீரம்மா' நிஜப்பெயரல்ல, பிரஞ்சு நூலில் 'வீரம்மா' வசிக்கும் கிராமத்தின் பெயரும் மாற்றப்பட்டே தரப்பட்டிருக்கிறது. பிரஞ்சு நூலில் 'வீரம்மா' வசிக்கும் கிராமத்தின் சேரியின் அமைப்பை சித்தரிக்கும் வரைபடங்கள் தரப்பட்டிருக்கின்றன. இக்கட்டுரையின் பொருட்டு, 'வீரம்மா'வை, இக் கட்டுரையை எழுதியவரும், அவருடைய நண்பர்களும் சந்தித்து பேசியிருக்கும் போதிலும், முறைப்படி, 'வீரம்மா'வின் நிஜப்பெயரும், 'வீரம்மா' வசிக்கும் கிராமத்தின் பெயரும் இந்தக் கட்டுரையில் தரப்படவில்லை.

15. La Voix Les Intouchblee by Andre velter, Friday literery suppliment of Lemonde Paris, June 19, 1995, Page: VIII.

Un Lrvre Prenant: Viramma, by G. David, Le Trait-A' Union, Monthly Pondicherry, Vol. LI. XI, October 1995 pages: 7-8.

16, முத்தம்மாவின் கதை, கண்டு உரையாடியவர் க லல்லி (25 8 94), காலச்சுவடு, இதழ் 12, டிசம்பர் 1995, நாகர் கோவில், பக்கங்கள் : 8-18

17. Louis Dumont, A South Indian Subcaste, Social organizarion and Religion of Pramalai Kallar Oxford University Press, Delhi, 1986 (பிரஞ்சில் முதற்பதிப்பு : 1957)

18. பாமா, கருக்கு, சமூக சிந்தனை செயல் ஆய்வு மையம், (IDEAS) மதுரை ஆகஸ்ட் 1992.

பாமா, சங்கதி, சமூக சிந்தனை செயல் ஆய்வு மையம் (IDEAS) மதுரை, ஜூலை 1994.

பத்மினி, அண்ணாமலைநகர் பத்மினியின் வாக்குமூலம், மக்கள் உரிமைக் கூட்டமைப்பு, புதுவை, ஆகஸ்ட் 1992.

விடிவெள்ளி, கலக்கல், சமுதாய சிந்தனை செயல் ஆய்வு மையம் (IDEAS) மதுரை ஏப்ரல் 1994.

சிவகாமி, பழையன கழிதலும், அன்னம் சிவகங்கை, 1991 சிவகாமி, ஆனந்தாயி, தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, நவம்பர் 1992. சிவகாமி, நாளும்



படிப்பகம்

www.padippakam.com

தொடரும், தமிழ்ப்புத்த காலயம் சென்னை. 1993.

19. தேவிபாரதி, பலி, காலம் பதிப்பகம், ஈரோடு, மார்ச், 1993.

20. பூமணி, பிறகு, அன்னம், சிவகங்கை, ஜுன் 1979.

21. அறிவழகன், அறிவழகனின் கழிசடை அறிவகம், சென்னை, டிசம்பர் 1992.

22. 'வீரம்மா' கட்டுரையை எழுதியவரிடம் நேரிப் பேச்சில் கூறியது.

23. 'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணலாம்'.

24. Isabel Allende — PAULA — Translated From the Spanish Margaret Sagers Peden, Flemingo, London 1995 Page: 323-324.

**நன்றி**

வீரம்மா குறித்த நூலை எனக்கு அறிமுகப்படுத்தி அந்த நூலை நான் படிக்கக் காரணமாக இருந்தவரும் பெர்னார்தன் தெசேன்பியரின் படைப்புகள் குறித்த தகவல்களைத் தன் கருத்துக்களை என்னுடன் பகிர்ந்து கொண்டவரும் இக்கட்டுரை முழுவதையும் விவாதித்து ஆலோசனைகள் தந்தவருமான என் பேராசிரியருக்கு.

□

---

# மாற்றுக் கலாச்சாரம்

## கூட்டுக்கட்டுரை-7

**விவாத விவரம்:**

பார்க்க நிறப்பிரிகை—7, பக்.120.

**நாள்:**

13 11.94 காலை 11 மணிமுதல் மாலை 6மணி வரை.

**இடம்:**

எஸ் ஆர்.எஸ். திருமண மண்டபம், சூலூர் (கோவை)

**பங்கு பெற்றோர் :**

வழக்கமான நமது கூட்டு விவாதங்களைப் போல பரவலான பங்கேற்புடன் இந்த விவாதம் நடைபெறவில்லை அறிவிக்கப்பட்ட தேதியில் விவாதத்தை நடத்தாததும் பலமுறை விவாதம் தள்ளிவைக்கப்பட்டதும் இதற்கான காரணங்களில் ஒன்று. நிறப்பிரிகை ஆசிரியர் குழுவிலேயே இருவர் கலந்து கொள்ள இயலவில்லை. சுமார் இருபது பேர்கள் மட்டுமே பங்கு பெற்ற இவ்விவாதத்தில் பெரும்பாலோர் கோவைப் பகுதியைச் சேர்ந்தவர்கள். பங்கு பெற்றவர்களில் ஒருவர் மட்டுமே பெண். வழக்கமான நமது கூட்டு விவாதங்களைப் போல பல கருத்துக்கள் மோதும் களமாக அமையாதது வருந்தத் தக்கது. மீண்டும் ஒரு முறை இதே தலைப்பில் விவாதிக்க வேண்டிய அவசிய முள்ளது.

நிறப்பிரிகையின் கருத்துக்களை அ. மார்க்ஸ் முன் வைத்தார்.

**நிறப்பிரிகை :** நிறப்பிரிகை தொடங்கிய நாளிலிருந்தே மாற்றுக்களைப் பற்றிப் பேசுவதும், விவாதங்களைத் தூண்டுவதும் அதன் முதன்மையான கரிசனங்களில் ஒன்றாய் இருந்திருப்பதை அறிவீர்கள். மருத்துவம், கல்வி, நீதி, கலாச்சாரம்... எனப் பல துறைகளிலும் நாம் மாற்றுகள் பற்றிப் பேசி வந்துள்ளோம்.

எந்த ஒரு இனம் அல்லது மக்கள் குழுமத்திற்கும் கலாச்சாரம், பாரம்பரியம் (Traditions), இலக்கிய மரபு (Literary canons) என்பனவெல்லாம் குழுமத்தின் சாராம்ச



படிப்பகம்

www.padippakam.com

வெளிப்பாடாக, இயற்கையாய்த் தோன்றியவை என்கிற கருத்தை நாம் ஏற்க முடியாது. மாறாக இவையாவும் கட்டமைக்கப் பட்டவையே; கற்பிதம் செய்யப் பட்டவையே.

ஒரு குறிப்பிட்ட எல்லைக்குட்பட்ட மக்கட் பிரிவுகளை ஒற்றைச் சமூகமாக வரையறுக்க வேண்டிய அரசியல் தேவை வரும் போது இத்தகைய பணிகள் திட்டமிட்டு நிறைவேற்றப் படுகின்றன. தமிழக வரலாற்றில் இத்தகைய தருணங்கள் பலவற்றை நாம் எடுத்துக்காட்டுகளாய்ச் சொல்ல முடியும். கி.பி. ஆறு—ஏழாம் நூற்றாண்டுகளில் பல்லவ-பாண்டிய ஒருங்கிணைப்பின் போது சங்க இலக்கியங்கள் தொகுக்கப் பட்டது ஒரு எடுத்துக் காட்டு. வேங்கடம் முதல் குமரி வரையிலான புவியியல் எல்லைக்குள் இருந்த எண்ணற்ற வழக்குகள், வழிபடு கடவுளர்கள், வாய்மொழி மரபுகள், பழக்க வழக்கங்களில் வேறுபடுகிற மக்கட் தொகுதிகளிடம் நடைமுறையிலிருந்தமொழி வழிச் செயற்பாடுகள் ஆகியவற்றில் சிலவற்றைத் தேர்வு செய்து நானூறு நானூறாகவோ, நூறு நூறாகவோ தொகுத்து பெயரிடப்பட்டு செவ்வியல் இலக்கியத் தொகுதிகளாகட் (Canons) பிரகடனப் படுத்தப்பட்ட வரலாறு நமக்குத் தெரியும்.

உலகின் பிற பகுதிகளில் முதலாளியச்சமூகம் உருப்பெறும்போது தேசிய இனக் கட்டமைப்பு இறுக்கமடைந்த நிலையில் கலாச்சாரம், பாரம்பரியம், இலக்கிய மரபு முதலியவை இவ்வாறே கட்டமைக்கப்பட்டன.

இத்தகைய சட்டமைப்புகளில் நாம் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டிய அம்சங்கள் இரண்டு.

முதலாவது : இந்தக் கட்டமைப்பின் பின்புலமாக ஒரு அரசியல் இருக்கிறது அதிகாரம் செலுத்துகிற ஒரு குழுவின் நலன் அடங்கியிருக்கிறது எனவே கலாச்சாரம் என்பது அழகியல் துறைகளில் முதன்மையாகவெளிப்பட்ட போதிலும் அது ஒரு அரசியல் செயல்பாடு.

இரண்டாவது : அதிகாரம் செலுத்தும் குழுமம் இவ்வாறு கலாச்சாரம், பாரம்பரியம், இலக்கியத் தொகுப்பு ஆகியவற்றைக் கட்டமைக்கும் போது இவற்றை அது பிளவுகளும் சிதறல்களும் அற்ற முழுமையாய், ஒருமைத் தன்மையும் ஒற்றைப் பரிமாணமும் உடையதாய், எல்லோர்க்கும் பொதுவானதாய் உருப்பெற்று மூடிந்து நிரந்தரத்தன்மை பெற்றுவிட்ட இறுக்கமான ஒன்றாய் வரையறுக்கும். ஆனால் உண்மை அதுவல்ல. கலாச்சாரத்தின் கூறுகளாக நாம் கருதுகிற எதுவும் (எ.டு. உடை அல்லது மொழி) தொடர்ந்து மாறிக் கொண்டிருக்கும் ஒன்றே. மிகவும் தற்காலிகமானவைகளே. எல்லாத் தருணங்களிலும் உறுப்பெற்றுக் கொண்டிருக்கும் நிலையில் உள்ளவையே. இது ஒற்றைப் பரிமாணமானதோ ஒருமைத் தன்மை உடையதோ அல்ல. முழுமையானதும் அல்ல. பல்வேறு மக்கட் பிரிவுகளிடமும் பல்வேறு தன்மைகளோடு சிதறுண்டு கிடப்பது இது. எ.டு. : வழிபடுகடவுளர்கள்; பழகும் இலக்கியங்கள், அதிகாரக் குழுமம் இவற்றை இறுக்கமாக வரையறுக்க முயலும்போது இவற்றுக்கெதிரான செயற்பாடுகள் சமூகத்திற்குள் உருவாகின்றன. மாற்று மரபுகள், இலக்கியச் செயற்பாடுகள் என எல்லாத் தருணங்களிலும் மோதல்கள் நிகழ்ந்து கொண்டே இருக்கின்றன இத்தகைய மோதல்கள் நடைபெறும் களமாகவே கலாச்சாரம், மரபு, இலக்கியத் தொகுப்பு முதலியவை இருந்து வருகின்றன.

இதில் நாம் யார் பக்கம் நிற்கப்போகிறோம் என்பதே நிறப்பிரிகை தொடர்ந்து கேட்டு வரும் கேள்வி.

இத்தகைய கலாச்சாரக் கட்டமைப்பின் அரசியலை விளங்கிக் கொள்ள கிராம்சி, அல்துஸ்ஸர் போன்ற மார்ச்சியர்களின் பார்வை நமக்கு உதவும். கட்டமைப்பின் நோக்கங்களாக இரண்டைக் குறிப்பிடலாம்.

ஒன்று : அதிகாரக்குழுமம் தனது மேலாண்மையை (Hegemonv) நிறுவிக் கொள்வது. நேரடியான வன்முறைகளில்லாமல் அதிகாரக் குழுமத்தின் ஆளுகையை கீழே இருப்பவர்கள் ஓரளவுக்கு விருப்பபூர்வமாகவே ஏற்றுக் கொள்ளுதலை கிராம்சி 'மேலாண்மை' என்கிற கருத்தாக்கத்தின் மூலம் விளக்கியதை நாம் அறிவோம் அரசியல்/பொருளாதார மேலாண்மைகளை நிறுவ கலாச்சாரம் முதலிய துறைகளில் மேலாண்மையை நிறுவுதல் அவசியமாகிறது. ஒன்றோடொன்று இணைந்த செயற்பாடுகளாக இவை மேற்கொள்ளப்படும்.

இரண்டு : மேலாண்மையை ஏற்றுக் கொள்பவர்களாக தன்னிலைகளைக்கட்டமைப்பது (Subject formation), கலாச்சார மற்றும் குறியியற் செயற்பாடுகளின் விளிப்பிற்குத்



படிப்பகம்

www.padippakam.com

தன்னை ஆட்படுத்திக் கொள்ளும் மனித உயிர் அதிகாரத்திற்குரிய அதாவது அதிகாரத்தை ஏற்றுக் கொண்ட தன்னிலையாக உருப்பெறுகிறது.

எனவே இந்த அதிகார நுகத்தடியிலிருந்து நாம் மீள வேண்டுமானால் இத்தகைய கட்டமைப்புகளின் விளிப்பகளுக்கு ஆட்படாதவர்களாக நம்மை ஆக்கிக் கொள்வது அவசியமாகிறது எனவே மாற்றுக்களைத் தேடுவது தவிர்க்க இயலாததாகிறது.

கலாச்சாரச் செயற்பாடுகளில் அறிவுஜீவிகள் கல்வி நிறுவனங்கள், மதம், தொடர்புச் சாதனங்கள் ஆகியவற்றின் பங்கு முக்கியமானது. அறிவு ஜீவிகளை மரபு அறிவுஜீவிகள், உயிர்ப்புமிக்க அறிவுஜீவிகள் என்றெல்லாம் கிராம்சியின் வழிநின்று பிரித்தாலும் மரபு அறிவுஜீவிகள் சகலவிதமான கலாச்சார நிறுவனங்களிலும் அமர்ந்து கொண்டு கலாச்சாரக் கட்டமைப்புப் பணிகளை மேற்கொள்கின்றனர். நம்மைப் போன்றவர்கள் எண்ணிக்கையில் மட்டுமல்ல வலுவான இடங்களில் (Strategic positions) அமர்வதற்குச் சாத்தியமற்றவர்களாகவும் உள்ளோம் எழுத்தாளர்கள், பத்திரிகாசிரியர்கள், இயக்குநர்கள், கல்வியாளர்கள் என்கிற நிலையில் இருந்து செயல்படும் இவர்களின் முதன்மையான பணி மையங்களை அதாவது அதிகார மையங்களை வலுப்படுத்துவதே மையங்களோடு மக்கள் திரளை இறுக்கிப் பிணைப்பதே எனினும் அடித்தட்டு மக்கள் அவ்வளவு எளிதில் இத்தகைய முயற்சிகளுக்கு முழுமையாகப் பலியாவதில்லை. மையப்படுத்தும் முயற்சிகளுக்கெதிராக தப்பித்தோடும் (Nomadic) பண்புடையவர்களாகவே அவர்கள் திகழ்கின்றனர் இதன் விளைவாகவே அவர்களிடம் எஞ்சியிருக்கும் கலகக் கூறுகள் மற்றும் மாற்றுக் கலாச்சாரக் கூறுகளை நாம் காண வேண்டும். எனவே விளிம்பு நிலையில் உள்ள மக்களிடம் படிந்துள்ள இத்தகைய நாடோடி-Nomadic கூறுகளைத் தேடிப் பிடிப்பது அடித்தட்டு நோக்கில் சிந்திப்பவர்களின் தலையாய பணியாகிறது.

மத்திய தர வர்க்கம் என்பது எப்போதும் தன்னை மையத்தை நோக்கிப் பிணைத்துக் கொள்ளும் முயற்சிக்கு எளிதில் பணிந்து போகும் தன்மையுடையதாக இருப்பது கவனிக்கத் தக்கது சுஜாதா, பத்திரிகையாளர் ஞாநி, எழுத்தாளர் பாலகுமாரன், இயக்குனர் பாலச்சந்தர்/மணிரத்னம் போன்றோர் மேற்கொள்ளும் மைய நோக்குப் பணிகள் கவனிக்கத் தக்கன.

மைய நோக்குப் பணிகளின் அடிநாதமாக இருப்பது ஒழுங்கின்மை பற்றிய அச்சத்தை விதைப்பதே Status quo-வைத் தக்க வைப்பதற்கு இவர்கள் பயன்படுத்தும் முதற்பெரும் ஆயுதம் Fear of Anarchy தான். எல்லாம் ஒழுங்காக இருப்பதால்தான் இந்த உலகம் இயங்குகிறது மாற்றுச்சிந்தனைகள், கலகம், பாராளுமன்ற அரசியலைப் புறக்கணித்தல் போன்ற வடிவங்களில் ஒழுங்கின்மையை அனுமதித்தால் எல்லாம் சிதைந்து போகும். எனவே நாம் இவற்றை எக்காரணம் கொண்டும் அனுமதிக்கக் கூடாது இவர்களின் கருத்துகளுக்கு மைய நீரோட்டத்தில் எத்தகைய வாய்ப்பும் அளிக்கக் கூடாது வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் இவர்களைத் தாக்கி அழித்தொழித்தாக வேண்டும் என்கிற நிலைபாடை இவர்கள் மேற்கொண்டு செயல்படுத்துவதை சற்றே ஊகித்தால் விளங்கிக் கொள்ள முடியும். குடும்ப அமைப்பு பற்றிய கேள்விகளை எழுப்பும் பெண்ணியச் சிந்தனையாளர்களை வாசந்தி, ராஜம் கிருஷ்ணன் போன்றோர் அவ்வப்போது காய்ந்து வருவதும் இன்னும் சிலர் வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் தெரிதா, ஃபூக்கோ போன்றோரின் சிந்தனைகளை அறிமுகப்படுத்துவதைக் கடிந்து வருவதும் சிந்திக்கத் தக்கன, தவிரவும் அரசியல் ரீதியாய் மைய நீரோட்டத்திலிருந்து விலகி நிற்கும் சிலர் முற்றிலும் ஒழுக்க வாதிகளாய் இருந்து மாற்றுச் சிந்தனைகளை எதிர்த்து வருவதும் காணக்கூடிய ஒன்றே.

வரலாறு பூராவிலும் எவ்வாறு மைய நோக்குப் பணிகளும் இதற்கு எதிராக விளிம்புகளின் மைய விலக்கச் செயற்பாடுகளும் இருந்து வந்தன என்பதை பர்ட்டன் ஸ்டெயின் முதல் இன்றைய 'சபால்டர்ன்' ஆய்வாளர்கள் வரை பலரும் பேசி வந்துள்ளனர். விளிம்புகளை மையங்களோடு இணைக்கும் பணியில் பார்ப்பனீய மதத்தின் பங்கைக் கோசாம்பி போன்ற மார்க்சியர்களும் விளக்கியுள்ளனர் ராணுவ மற்றும் அரசியல் நடவடிக்கைகளோடு அவற்றிற்கு இணையாக இத்தகைய கலாச்சார நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

இன்றளவும் வேதாகமக் கல்லூரிகள் மூலம் பார்ப்பனரல்லாதவர்களின் வழிபாட்டு முறைகளை வேதாகமச் சட்டகத்திற்குள்



படிப்பகம்

www.padippakam.com

கொண்டு வந்து மையத்தோடு இணைக்கும் முயற்சி நடைபெறுவது இங்கே குறிப்பிடத்தக்கது.

இத்தகைய கலாச்சாரச் செயற்பாடுகளில் ஏகாதிபத்தியம் அரசு, மதம், மடாலயங்கள், தொடர்புச் சாதனங்கள் முதலிய பேருரு நிறுவனங்களின் பங்கு வெளிப்படையாகத் தெரிகிறது. ஆனால் கல்வி, மருத்துவம், ஒழுக்க மதிப்பீடுகள், குடும்பம்போன்ற நுண் நிறுவனங்களின் பங்கு வெளிப்படையாகத் தெரிவதில்லை. எனவே ரொம்பவும் 'முற்போக்கு'ச் சிந்தனையாளர்களாகத் தங்களைக் காட்டிக் கொள்பவர்களும் கூட இவற்றைக் கண்டுகொள்வதில்லை உதாரணமாக மருத்துவத்தை எடுத்துக் கொள்வோமே. மருத்துவத்தின் மூலம் அதிகாரங்கள் கட்டமைக்கப்படுவது, மையங்கள் வலுவூட்டப்படுவது பற்றியெல்லாம் நாம் இதுவரை சிந்தித்திருக்கிறோமா? குடும்பம் என்பது சிறிய வடிவிலான அரசாக இருந்து அதிகாரங்களுக்குப் பணிந்து போவதற்குப் பயிற்சி அளிக்கிறது என்கிற கருத்தை பிளக்கனோவ் போன்ற மார்க்சியர்களே வலியுறுத்தியுள்ளனர். ஆனால் இவற்றை நாம் விவாதத்திற்கு எடுத்துக் கொண்டிருக்கிறோமா? ஒழுக்க மதிப்பீடுகள், மொழி வழிச் செயற்பாடுகள், உடல் அரசியல் பற்றியெல்லாம் நவீன சிந்தனையாளர்களின் கருத்துக்களையெல்லாம் முன் வைக்கும் போது எத்தனை எதிர்ப்புக்களை நாம் சந்தித்தாக வேண்டியிருக்கிறது! சாதீய மற்றும் ஆணாதிக்கச் செயற்பாடுகளுக்குரிய தன்நிலைகளாக மனித உயிர்களைக் கட்டமைப்பதில் குடும்ப நிறுவனத்தின் பங்கை நாம் கடும் விமர்சனப் பார்வைகளுக்குட்படுத்த வேண்டியிருக்கிறது.

இந்தியத் துணைக் கண்டத்திற்குள் ஆதிக்கக் கலாச்சாரக் செயற்பாட்டு மையங்களை அடையாளம் காட்டும்போது முதன்மையாக நமக்குப்படுவது பார்ப்பனீயம்.

நவீனத்துவம் என்பது மேலைச் சூழலில் உருவானதைப் போல மதநீக்கத்துடன் இணைந்து இங்கே உருவாகவில்லை. காலனியம் மூலமாகவே இங்கு நவீனத்துவம் அறிமுகமானது. அறிவியல், தொழில் நுட்பம் முதலியவற்றில் மட்டுமின்றி கல்வி, இலக்கிய/இலக்கண/சட்டத் தொகுப்புகள், எதார்த்தவாத இலக்கிய உருவாக்கங்கள், மதச் சீர்திருத்தங்கள் என்பனவாகப் பல துறைகளிலும் நவீனத்துவம் (Modernity) இங்கே புகுத்தப்பட்டது காலனியத்திற்கு எதிராக உருவான தேசீயம் இதனை உள்வாங்கிக்கொண்டது. மக்கள்பிரிவுகளிடையே நடைமுறையிலுள்ள பன்மைக்கூறுகளை அழித்தொழித்து அவற்றை ஒழுங்குபடுத்தி, ஒருமைத் தன்மையுடையதாயும், பிளவுகளற்ற முழுமையான்தாகவும் தர்க்கபூர்வமானதாகவும் ஆக்க வேண்டும் என்கிற கருத்தில் காலனியத்திற்கும் அதற்கு எதிராக உருவான தேசியத்திற்கும் வேறுபாடு இருக்கவில்லை. இன்றைய ''இழிவுகளை'' அங்கீகரிப்பதிலுங்கூட இரண்டும் ஒன்றுபட்டே இருந்தன. தீர்வுகளில்தான் இரண்டும் சற்று வேறுபட்டன. குடியேற்ற ஆட்சியை காலனியம் நியாயப்படுத்தியதென்றால் சுயாட்சி மூலமாகப் பார்ப்பனீயப்பொற்காலத்தை நிறுவுவதை தேசியம் நியாயப்படுத்தியது. இந்த நோக்கில் இங்கே பார்ப்பனீய மதம், பார்ப்பனீய வேதங்கள் முதலியவை புத்துயிர்க்கப்பட்டன. இந்தியச் சமூகம் முழுமையையும் பிளவுகளற்ற முழுமையாய்க் கட்டமைக்கும் நோக்கில் விளிம்புகளின் மொழிகள், இலக்கியச் செயற்பாடுகள், பாடபேதங்கள், வழிபடு முறைகள் எல்லாம் இரக்கமற்று அழித்தொழிக்கப்பட்டு எல்லாவற்றிலும் authentic text கள்—அதிகாரபூர்வப் பிரதிகள் உருவாக்கப்பட்டன. விலகல்கள் ஒழுங்கின்மையாகச் சித்தரிக்கப்பட்டு கடுமையாகக் கண்டிக்கப்பட்டன.

பார்ப்பனீயச் செயற்பாடு என்பதை ஏதோ பூணூல் போடுவது அல்லது மாமிசத்தை விலக்குவது என்பதாக எளிமைப்படுத்திப் புரிந்து கொள்ளக் கூடாது. தீட்டு/ஒதுக்கம் என்கிற அடிப்படையிலேயே பார்ப்பனீயம் தனது விஷவலையை விரிக்கிறது, தீட்டு/ஒதுக்கம் ஆகியவற்றை வெளிப்படையாகச் சொல்ல இயலாத அரசியல் சூழலில் அதற்குப் பதிலாக தூய்மை / தரம் ஆகிய கருத்தாக்கங்களை முன் வைத்து அது இயங்குகிறது. தூய்மை/மேன்மை/தரம் ஆகியவற்றைக் காப்பாற்றுவதே கலாச்சாரத்தின் பணி என்று சொல்லி அது செயல்படுகிறது. இதன் மறுதலையாக அது தூய்மையற்றவை/தரமற்றவை என்று சிலவற்றை வரையறுத்து அவற்றை அழித்தொழிக்க வேண்டிய OTHER ஆகக் கட்டமைத்துத் தாக்குகிறது. இந்த வகையில் அது மக்கள் சார்ந்த விசயங்கள் அனைத்தையும் ஒழுக்கமற்றதாக / தூய்மையற்றதாக / தரமற்றதாக வரையறுத்து அவர்கள் மீது குற்ற உணர்வைச் சுமத்துகிறது. அவர்களது பழக்க வழக்கங்கள், உணவு, மொழி, இலக்



படிப்பகம்

www.padippakam.com

கியம் எல்லாவற்றையும் அது தூய்மையற்றதாயும் தரமற்றதாயும் வரையறுத்து ஒதுக்குகிறது தூய்மை என்பதில் மதத்தூய்மையும் —அதாவது இசுலாமியத்தை தூய்மையைக் கெடுக்க வந்த கலப்படமாகப் பார்த்தல்— தரம் என்பதில் மண்டல் எதிர்ப்பும் அடங்கியிருப்பது வெளிப்படை இதே கருத்தாக்கங்கள் இலக்கியக் களத்திலும் பார்ப்பனீய சக்திகளால் மேற்கொள்ளப்படுவது கவனிக்கத் தக்கது.

பார்ப்பனீயத்திற்கு அடுத்தபடியாக நாம் கவனம் குவிக்க வேண்டிய மையம் தந்தை வழிச் சமூக ஆணாதிக்கம், அப்புறம் ஏகாதிபத்தியம், வெள்ளை இனமேன்மை, மூன்றாம் உலக மற்றும் கறுப்பின/இசுலாமிய பண்பாட்டுக் கூறுகளை இழிவாகக் கருதும் போக்கு அந்த அடிப்படையிலான பாசிச உருவாக்கம் ஆகியவற்றில் நாம் கவனம் குவித்தாக வேண்டும். ஆனால் இங்கே ஏகாதிபத்தியக் கலாச்சாரத்தை எதிர்ப்பதாகச் சொல்பவர்கள் இந்த அம்சங்களைக் காட்டிலும் ஏகாதிபத்தியக் கலாச்சாரம் என்றால் ஆபாசம் என்கிற கருத்தாக்கத்தையே முதன்மைப்படுத்தி வருகின்றனர். நிலப்பிரபுத்துவ கலாச்சாரம் என்றால் மதம் ஏகாதிபத்தியம் என்றால் ஆபாசம் என்பதே அவர்களின் வாய்ப்பாடாக உள்ளது. இது இவர்களுள் ஆதிக்கம் செலுத்தும் ஒழுக்கவாதத்தின் விளைவேயாகும். இதன் மறுதலையாக ஏகாதிபத்தியக் கலாச்சாரத்திற்கு மாற்றாக மரபு, பாரம்பரியம் என்கிற பெயரில் பார்ப்பனீயத்தை உயர்த்திப்பிடிப்பவர்களாகவும் இவர்கள் வெளிப்படுகின்றனர். எனவே ஆபாசங்களை எதிர்த்தல், M.T V. -யை எதிர்த்தல் போன்றவையே நமது முதன்மையான ஏகாதிபத்திய எதிர்ப்புப் பணி என நாங்கள் கருதவில்லை.

ஏகாதிபத்தியத்திற்கெதிரானவை என்ற ஒரே அளவுகோலை மட்டுமே வைத்துக் கொண்டு மூன்றாம் உலகக் கலாச்சாரக் கட்டமைப்புகள் எல்லாவற்றையும் நாம் நியாயப்படுததி விடவும் முடியாது. ஏகாதிபத்தியத்திற்கெதிரான வலுவான எதிர்ப்பு என்கிற வகையில் நாம் இசுலாமியக் கலாச்சாரததின் தந்தை வழி மதிப்பீடுகளையும் குர்திஸ்தான் முதலிய சிறுபான்மையினரின் மீதான வன்முறையையும் நியாயப்படுத்தி விட முடியாது. அதே போல ஒரு காலத்தில் பார்ப்பன எதிர்ப்பின் அடையாளமாக இருநத பவுத்தம் இன்று இலங்கையில் தமிழருக்கெதிரான வன்முறைகளை நியாயப்படுத்தும் கருவியாக மாறியுள்ளதை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது. பார்ப்பனீயம் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. எண்ணற்ற விளிம்புக் கலாச்சாரங்களை அழித்தொழித்து வளர்ந்தது அது. இங்கே கடந்த இரு நூற்றாண்டுகளில் இறுக்கமாகக் கட்டமைத்து முன் வைக்கப்பட்ட தமிழ்—வேளாள மரபு என்பது எந்த வகையிலும் பார்ப்பனீய மரபிற்குக் குறையாத ஒன்றாகவே இருந்து வருகிறது. இது குறித்து வேறு பல சந்தர்ப்பங்களில் நாம் விளக்கியுள்ளோம்.

கடைசியாக ஒரு சில விசயங்கள்: மாற்றுக் கலாச்சாரம் என்பதைக் காட்டிலும் மாற்றுக் கலாச்சாரங்கள் என்றே நாங்கள் சொல்ல விரும்புகின்றோம். சமூகத்தில் உள்ள பன்மைத் தன்மைகளை இது அங்கீகரிக்கிறது. ஏதொன்றின் இடத்திலும் மற்றொன்றை அப்படியே வைத்துவிடுவதால் பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வு கிடைக்காது. உள்ளுறையை மாற்றினால் மட்டும் போதாது வடிவத்தைத் தகர்க்க வேண்டும். அந்த வகையில் பல்வேறு விதமான மாற்றுக்களின் சாத்தியங்களை நாம் அங்கீகரிக்க வேண்டும். நிலவும் மேலாண்மைச் சட்டகங்களைத் தொடர்ந்து கேள்விக்குள்ளாக்குவதே நமது நிரந்தர அளவுகோலாக இருக்க முடியும். எனவே ஓரிடத்தில் கலகமாக இருப்பது இன்னோரிடத்தில் கலகமாக இல்லாமலிருக்கவும் ஒரு காலத்தில் மாற்றாக இருப்பது இன்னொரு காலத்தில் அதிகாரமாக மாறவும் இடமுண்டு. எடுத்துக் காட்டாக மலேசியாவில் உள்ள தமிழர்கள் மலேசியா தொலைக் காட்சியில் பரதநாட்டியத்திற்கு நேரம் ஒதுக்க வேண்டுமெனப் போராடுகின்றனர். இது அங்கே ஒரு கலகச் செயற்பாடு. இங்கே நாம் பரத நாட்டியத்தினிடத்தில் நாட்டுப்புறக் கலைகளை வைக்க வேண்டுமெனப் போராடுவதே கலகமாக இருக்க முடியும். புலம் பெயர்ந்த தமிழர்கள் மத்தியில் இத்தகைய கலாச்சாரப் பிரச்சினைகள் உருவாவதை மேலோட்டமாகவன்றி சறறு ஆழமாகப் பரிசீலிக்க வேண்டும். அய்ரோப்பாவில் புலம் பெயர்ந்து வாழும் ஈழத் தமிழர்கள் தமது கலாச்சாரத்தைப பேணும் முயறசியில் கோயில்கள் கட்டுவது, சைவ சித்தாந்தப் பயிற்சி அளிப்பது போன்றவறறை மேற்கொள்கின்றனர். இதனைச் சற்று அனுதாபத்துடன் நாம் அணுக வேண்டியதுதான் எனினும் அதறகாக புலம் பெயர்ந்து வாழும்போதும் சாதிய நெறி





படிப்பகம்

www.padippakam.com

களையும் ஒழுக்கத்தையும் கடைப்பிடிப்பதை நாம் எள்ளளவும் ஏற்றுக் கொள்ள இயலாத நிலையிலேயே உள்ளோம். புலம் பெயர்ந்து வாழுகிற ஈழத் தமிழர்களிடையே இந்த விவாதங்கள் நடைபெறுகிறது. தமது கலாச்சார அடையாளங்களைப் பேணுவது என்கிற வகையில் அய்யர் வைத்து வேதம் ஓதி திருமணம் செய்தல், பூப்புச் சடங்குகளைக் கொண்டாடுதல் முதலியவற்றை அவர்கள் மேற்கொள்கின்றனர். மாற்றுச் சிந்தனைகளையுடைய நமது தோழர்கள் இவற்றில் பங்கு பெறுவதில் சிக்கல் ஏற்படுகிறது பங்கு பெறாதபோது தனிமைப்படும் நிலை ஏற்படுகிறது. பாசிசச் சூழலில் தம் அடையாளத்தைப் பேணும் முயற்சியில் இத்தகைய சிக்கல் நமது தோழர்கள் இவற்றிற்கு மாற்றாக கலாச்சார விழாக்களை நடத்துதல், நாடக/கலை விழாக்களை நடத்துதல், இதர மூன்றாம் உலகப் புலம் பெயர்ந்தாருடன் இணைந்து நிற்றல் முதலியவற்றிற்கு முதன்மை அளித்தாக வேண்டியுள்ளது.

மொத்தத்தில் எல்லா இடங்களுக்கும் எல்லாச் சூழலுக்குமான ஒற்றை மாற்று சாதியமில்லை பெரியார் சொன்னது போல அஸ்திவாரத்தையே மாற்ற முனைந்த நாம், எல்லோரும் உண்டு என்றால் நாம் இல்லை என்றும் எல்லாம் இல்லை என்றால் நாம் உண்டு என்றும் எல்லாம் உயர்ந்தது என்றால் நாம் தாழ்ந்தது என்றும் எல்லோரும் காப்பாற்ற வேண்டும் என்பதை நாம் உடைக்க வேண்டும் என்றும் எல்லோரும் உடைக்க வேண்டும் என்பதை நாம் காப்பாற்ற வேண்டும் எனவும் சொல்ல வேண்டி இருக்கிறது.

மையம்—விளிம்பு என்பது கூட நிரந்தரமான பிரிவு இல்லை ஒரு காலத்தில் மையமாக இருந்தது இன்னொரு காலத்தில் விளிம்பாகவும் ஒரு காலத்தில் விளிம்பாக இருந்தது மற்றொரு காலத்தில் மையமாகவும் மாறுவது சாத்தியம்தான். நமது நோக்கம் மையத்தை விளிம்பாகவும், விளிம்பை மையமாகவும் மாற்றுவதல்ல மையம் — விளிம்பு என்கிற உறவு முறையையே தகர்ப்பதுதான். இன்றைய அறிவியல் தொழில்நுட்பங்களிலிருந்து ஒதுங்குவதல்ல. இவற்றையே இந்த நோக்கில் மாற்றியமைப்பதுதான். மறுபுறம் நாம் வற்புறுத்திச் சொல்வதென்பது தூய்மைக்குப் பதில் கலப்படத்தையும் ஒருமைக்குப் பதில் பன்மையையும் வலியுறுத்துவதே.

உச்சபட்சமான விளிம்பு என்றால் என்ன என்கிற கேள்வி என்றும் தொகுப்பில் உள்ளது. இன்றைய சூழலில் தலித் பண்பாட்டை உச்சபட்சமான விளிம்புப் பண்பாடு எனக் கொள்ள முடியும். அதையும் கூட தலித் பண்பாடு என்று சொல்வதைக் காட்டிலும் தலித் பண்பாடுகள் எனச் சொல்வது பொருத்தமாக இருக்கும். ஏனெனில் தலித்களுக்குள்ளும் பல்வேறு பண்பாடுகள் உண்டு. மாட்டுக்கறி உண்பவர்களும் தலித்களில் உண்டு. அதனை இழிவாகக் கருதுபவர்களும் உண்டு. எனவே அதன் பன்மைத் தன்மைகளையும் நாம் அங்கீகரித்தாக வேண்டும் மாற்று எனப் பேசும்போது உச்சபட்சம் நாம் பார்ப்பதைக் காட்டிலும் ஒப்பீட்டு ரீதியாய்ப் பார்ப்பது மேலும் பொருத்தமாய் இருக்கும். பார்ப்பனியக் கூறுகளுக்கெதிராக பிற்படுத்தப்பட்ட மக்களின் கூறுகளை சில நேரங்களில் உயர்த்திப் பிடித்தல் அவசியமாய் இருக்கும். பிற்படுத்தப்பட்ட மக்களின் கூறுகள் தலித் மக்களுக்கெதிராக உள்ளபோது அதனைத் தூக்கி எறிவதும் மீறுவதும் கலகமாக இருக்கும்.

தொடர்ச்சியாகச் சட்டகங்களைக் கேள்விக்குள்ளாக்குவதே நமது பணியாக இருக்க முடியும். நாம் உருவாக்குகிற சட்டகங்களும் இதற்கு விதிவிலக்கல்ல. அத்தகைய கேள்விகளுக்கு இடமளிக்கும் வகையிலேயே நமது சட்டகங்கள் உருவாக்கப்பட வேண்டும். OTHERக்கான SPACE என்பது நமது சட்டகங்களில் இருந்தேயாக வேண்டும்.

மொத்தத்தில் மாற்றுக் கலாச்சாரக் கூறுகளாக கீழ்க்கண்டவற்றை உங்கள் முன் வைக்கிறோம்.

(i) **சட்டகங்களைக் கேள்விக்குள்ளாக்குதல்,**

(ii) **ஒழுங்கின்மை பற்றிய அச்சத்தை உடைத்தல்,**

(iii) **ஒடுக்கப்பட்டோர் / சிறுபான்மையினரின் கலாச்சார சுதந்திரங்களை வற்புறுத்தல்,**

நி—11



படிப்பகம்

www.padippakam.com

(iv) பன்மைத் தன்மைகளை வலியிறுத்தல்

(v) தூய்மை / இயற்கை / தரம் என்கிற கருத்தாக்கங்களை மறுத்தல்,

(vi) அத்துக்களை மீறுதல், கலகம் செய்தல். கலப்பு என்கிற சிந்தனையை வலியுறுத்தல்.

(vii) கம்யூன்களைப் போன்ற மாற்று வாழி டங்களை உருவாக்குதல்

**கவிஞர் அக்னிபுத்திரன்** : இது வரைக்கும் நாம இந்த சிறுபத்திரிகைகளின் செயல் பாட்டை ஒரு எதிர்மரபுப் பண்பாடாத் தான் புரிஞ்சுகிட்டு வந்திருக்கோம். ஆனா இது பற்றிய தெளிவு இயக்கங்கள் மத்தியில் கூட இப்பதான் வந்துகிட்டு இருக்கு. பெண் ணியம், தலித்தியம், தமிழியம் ஆகிய மூன்று விதமான சிந்தனைகள் ஒருமுனைப்பட்டு உரையாடலுக்கு வழி வகுத்திருக்கு கலாச் சாரத்தின் அரசியல் பற்றி ஒரு தெளிவு கிடைச்சிருக்கு. பொருளியக் கட்டமைப்பு தான் கலாச்சாரக் கட்டமைப்பை உருவாக்கு வது என்கிற பழைய புரிதலுக்குப் பதிலாக கலாச்சாரக் கட்டமைப்புங்கிறது பொருளி யல் கட்டமைப்புக்கு உறுதுணையா இந்த நாட்டில் இருக்கிறதைப் புரிஞ்சுகிறதுக்கு உதவியா அ.மார்க்சின் முன்னுரை அமைந் தது. அவர் சொன்ன மாதிரி மூன்றாம் உலகப் பண்பாடுகள் எல்லாத்தையும் ஏகாதி பத்திய எதிர்ப்புப் பண்பாடுன்னு எடுத்துக்க முடியாது. அதுக்குள்ளேயும் ஆதிக்கப் பண்பாடுகளை வரையறை பண்ணிப் பிரிச்சுப் பார்க்கணும்கிற எண்ணத்தை இந்த முன்னுரை எனக்குக் கொடுத்திருக்கு. இந்தி யாவைப் பொறுத்தமட்டில பார்ப்பனீயச் செயல்பாடுங்கிறது மிகப் பெரிய ஆதிக்கச் செயல்பாடாகவும் மேலாண்மைக் கட்ட மைப்பாகவும் இருந்து வந்திருக்கு இயல்பு, தூய்மை, தரம் ஆகிய கருத்தாக்கங்களை இதுவரை சரியா உணராமலேயே நாம நமது விமர்சனங்களையெல்லாம் எழுதி விட்டு வந்திருக்கோம். நாமளும் தூய்மையை வற்புறுத்திருக்கிறோம் தரம வேணும்னிருக் கிறோம் கலை கலைக்காகவேன்னு சொல்லி ருக்கிறோம். மார்க்ஸ் கடைசியாய்ச் சொன்ன சட்டகங்களைக் கேள்விக்குள்ளாக் குதல், ஒழுங்கின்மை பற்றிய அச்சத்தை உடைத்தல் இதையெல்லாம் பெரியார் திராவிட இயக்கத்து மூலமா செஞ்சார் இன்னைக்கு அதுபோல ஒரு பெரிய இயக்க பலம் நமக்கு இல்லாத சூழலிலே இந்த தரம், தூய்மை போன்ற விஷயங்களுக்கு எதிரான செயற்பாடுகளை முன்னாடி எடுத்துட்டுப்க போகலாம். இலக்கியத் துறையில் முதலில் தொடங்கினா இது மற்ற துறைகளுக்குப் பரவும். எடுத்தவுடனே அத்துமீறுதல், கலகம் செய்தல் ஆகியவற்றுக்குப் போக முடியாத ஒரு கட்டத்திலே நாம இதற்கு முன்னுரிமை கொடுக்கலாம். சிறுபத்திரிகை வட்டாரத் திலே இதுநாள் வரைக்கும் கேள்விக்குட் படுத்தப்படாத இந்த இயல்பு, தரம், தூய்மை அப்புறம் மறைமுகமாய்ச் செயல்படுகிற தீட்டு இந்த விசயங்களை நாம் வெளிப் படுத்தியாகணும். ஏன்னா சிறு பத்திரிகை களுக்குள்ள பார்ப்பனீயச் செயற்பாடு ரொம்ப ஆழமாயிருக்கு எழுத்து, கசடதபற சலனம், ழ...வழியாகவும் பார்ப்பனீயச் செயல்பாடு தொடர்ந்தது. ஆனா அறிவு ஜீவிகள் மத்தியிலே இந்த மாதிரியான சிறு பத்திரிகைச் செயல்பாடுதான் எதிர்ச் செயல் பாடா கொள்ளப்பட்டது. வ ரா தொடங் கின மணிக்கொடியிலேயே இது தொடங் கிட்டு, ஆனா அப்ப புதுமைப்பித்தன் இருந் தாரு புதுமைப்பித்தனுக்குள்ளும் இந்தப் பார்ப்பனீயச் செயற்பாடு வந்துடுது. எனவே சிறுபத்திரிகை வட்டாரத்திற்குள் இந்தப் பார்ப்பனீயச் செயற்பாட்டைத் தோற்றுவித்து விவாதங்களை நடத்துவதன் மூலம் தான் இன்று தளம் மாறிப் போய்க் கொண்டிருக்கிற பல எழுத்தாளர்களையும் அறிவுஜீவிகளையும் காப்பாற்ற முடியும்.

**வசந்தகுமார்:** நீங்க இன்னைக்கு தொகுத்துக் கொடுத்ததிலே எனக்கு முழுமையாக உடன் பாடு இருக்கு. சில விசயங்களில் மட்டும் கேள்விகள் இருக்கு. கலாச்சாரம் மேலாண் மையை நோக்கிக் கட்டமைக்கப்படுகிறதுங் கிறதும் அதுக்குப் பின்னாலே ஒரு அரசியல் இருக்குங்கிறதும் சரிதான். ஆனால் இன்னும் கூடவே என்னன்னா அரசியலுடன் சேர்ந்த ஒரு பொருளாதாரமும் இருக்குது. அரசியல் தனியா Hegemony வகிக்கிறதில்லை. பொரு ளாதார நலனை ஒட்டித்தான் செயல்படுது. அதைக் காப்பத்தத்தான் அரசியலே வருது. கட்டமைக்கிறதுலே அறிவுஜீவிகளின் பங்கு ஒண்ணு இருக்குது. ஆனா அறிவுஜீவிகளின் பங்கு மட்டும் மாற்றுக் கலாச்சாரததை உரு வாக்கிட முடியுமா? மாற்றுக் கலாச்சாரம் அதாவது மக்களுக்கான கலாச்சாரம் இருக் கத்தான் செய்யுது. ஆதிக்கத்தில் இல்லைங் கிறதுதான். மக்களிடமுள்ள அந்தக் கூறு களை நாம வளர்த்தெடுக்கணும். அறிவு ஜீவிகள் மட்டும் அதைச் செய்ய முடியாது. மக்கள்தான் அதைப் படைக்கணும் அறிவு ஜீவிகளின் பங்கு ஓரளவுதான். இது ஒரு கருத்து. அடுத்து ஏகாதிபத்தியக் கலாச் சாரத்திலே பிரதான அம்சமா ஆபாசத்தைப்



படிப்பகம்

www.padippakam.com

பார்க்க வேண்டியதில்லை என மார்க்ஸ் குறிப்பிட்டாரு, நிலப்பிரபுத்துவத்திலயும் ஆபாசம் இருக்கு, பிரதானமாய்ப் பார்க்கலன்னாலும் அது ஒரு கூறா இருக்கத்தான் செய்யுது அப்புறம் தீட்டு, தூய்மை, தரம் அப்பிடிங்கிறதெல்லாம் சரிதான், ஆனா பெரும்பான்மையான மக்களுக்கு அது தேவையில்லையா? அப்படி வந்தாலே மேலாதிக்கம் வந்திருமா அப்படீன்னு ஒரு கேள்வி இருக்கு. தூய்மை/தரம் ங்கிறதிலேயும் எந்த மக்களுக்கான தூய்மை, தரமனு பார்க்கணும்னு நினைக்கிறேன். அவர்களுடைய அளவுகோலை நாம எடுத்துக்க வேணாம். ஆனா நமக்குன்னு ஒரு அளவுகோல் வேணாமா?

குறிஞ்சி: சீனத்தில் கலாச்சாரப் புரட்சியின் போது இது மாதிரி மதிப்பீடுகளை உடைத்தல், கலகம் அப்படீங்கிறதெல்லாம் பெரிய அளவிலே வைக்கப்பட்டது. ஆனா அது ஏதோ ஒரு கட்டத்திலே நின்னுபோனது மாதிரி ஆச்சு மார்க்ஸ் குறிப்பிட்டதுபோல கலாச்சார தளத்திலே வேலைங்கிறது தொடர்ச்சியா இருக்கணும். தமிழகத்தைப் பொறுத்த மட்டில தலித் கலாச்சாரம், அரசியல் எல்லாம் உயர்த்திப் பிடிக்கப்படும் போதுதான் மாற்றுக் கலாச்சாரம்ங்கிற குரலும் வருது. வசந்தகுமார் சொன்னது மாதிரி மக்கள் கலாச்சாரம் என்று இருந்தாலும் தலித் அரசியலோட Bi-Product ஆகத்தான் மாற்றுக் கலாச்சாரம் வந்திருக்கு அப்படீங்கலாம். இது ஒரு சாதீயச் சமூகம் இங்கே இருக்கிறதும் ஒரு சாதீயக் காலாச்சாரம்தான். இரண்டாயிரம் ஆண்டு காலமா இது நமக்குள்ள திணிக்கப்பட்டு பல பிம்பங்களாக உருவாக்கியிருக்கு. ஒரு உதாரணம் சொல்றேன் தலித் விஷயங்களிலேயும் மார்க்சியத்திலேயும் அக்கறையுள்ள ஒரு முற்போக்கான எழுத்தாளர் வேறு யாருமில்ல நம்ம தேவிபாரதிதான் அன்னைக்கு அலுவலகத்தைப்பத்தி பேசிக்கிட்டிருக்கும் போது 'என்ன இருந்தாலும் பார்ப்பான் இருந்தாத்தான் சரியா இருக்குங்க' அப்படீன்னார். அதிர்ச்சியா இருந்துச்சு எனக்கு. இதை எல்லாம் உடைக்கிறது நண்பர் சொன்ன மாதிரி ஒரு குழு ரீதியான செயல்பாடால முடியாது Mass Activity யா மாத்தணும். மார்க்ஸ் விரிவாய்ச் சொன்னாரு. நுண் தளத்தில் வேலை செய்வது அவசியம் தான். ஆனால் அது போதாது. நுண் தளத்திலேயிருந்து வேறொரு தளத்திற்குக் கொண்டு போகணும். சாதீயச் சங்கங்களைப் பொறுத்த மட்டில் ஆதிக்க சங்கங்களில் நாம் இருக்க முடியாது. ஆனா அழுத்தப்பட்ட சாதிகளின் சங்கத்தில் நாம் Cell and Fraction என்கிற வடிவில் இருந்து செயல்படணும். கொங்கு வேளாளர் சங்கத்திலே சில ஆண்டுகளுக்கு முன்னாலே விதவைகளுக்கு வெள்ளைச் சேலை ஒழிப்புத் திட்டம் ஒண்ணு கொண்டு வந்தாங்க. இந்த நல்ல திட்டம் இரண்டே ஆண்டுகளில் அழிஞ்சு போச்சு. சாதி இங்கே வலுவா இருக்கிறதுக்குக் காரணம் அது குடுக்கிற பாதுகாப்புத்தான். அந்த அளவுக்குப் பாதுகாப்புக் கொடுக்கிற நிறுவனம் வேறு எதுவுமே இல்லை. சாதியைத் தகர்க்கணும்னா பாதுகாப்பு அளிக்கக்கூடிய Parallal Institutionகளை நாம் உருவாக்கணும். வன்னியர் மக்கள் மத்தியிலே இருக்கிற அறுத்துக் கட்டுற பழக்கத்தை எல்லாம் நாம் ஊக்குவிக்கணும். மாற்றங்களை மார்க்ஸ் சொன்ன மாதிரி குடும்பத்திலேருந்து தொடங்கணும். குடும்பத்துக்குள்ளதான் இந்தப் படிநிலை உருவாக்கம் தொடங்குது. சாதீயப் பழக்க வழக்கங்களும் குடும்பத்திலேருந்துதான் தொடங்குது. எங்க அப்பா செத்தபோது நான் மொட்டை அடிக்க முடியாதுன்னு சொன்னதினாலே பெரிய பிரச்சினை ஆகிப்போச்சு. கடைசியா மீசையை மட்டும் எடுத்தேன். கலப்புத் திருமணங்களை ஊக்குவிக்கிற வகையில் நாம மாநாடுகளை எல்லாம் நடத்தணும். புலம் பெயர்ந்த தமிழர் மாநாடு மாதிரி இப்படி ஒரு மாநாட்டை நடத்த நிறப்பிரிகை முன்வரணும் பாதுகாப்பு ஏற்படுத்தணும். இல்லாவிட்டால் அவுங்க மீண்டும் சாதிச் சங்கத்திலே போய் விழுகிற ஆபத்து இருக்கு. எனக்குத் தெரிஞ்சு அப்படி கலப்புத் திருமணம் செஞ்சுகிட்ட ஒருத்தர் இப்ப தேவர் சங்கத்திலே தீவிரமா இருக்கார். அப்புறம் விழாக்கள். அதிலேயும் பேருரு அளவில் மாற்றங்கள் ஏற்படுத்தணும். விநாயகர் சதுர்த்தியை திலகர் தொடங்கி ஆர். எஸ். எஸ் வரை பெரிய Mass Rally ஆக நடத்துறாங்க. நாம தீபாவளிக்குப் பதிலா பொங்கலை இப்படிக் கொண்டாடணும். ஹோலி, ரக்ஷாபந்தன் போன்ற விழாக்களை எல்லாம் தமிழ நாட்டிலே அதிகாரிகளையும் அரசியல்வாதிகளையும் வைச்சு கொண்டாடுறாங்க இது தமிழின அடையாளத்தை அழிப்பது. இதற்கு எதிரா கருத்துப் பிரச்சாரம் நாம செய்யணும். அதே போல சிறு தெய்வ வழிபாட்டை நாம உயர்த்திப் பிடிக்கலாம். பார்ப்பனீயத்திற்கெதிரா, அதையும் பார்ப்பனீயத்திற்குள் இழுக்கிற முயற்சி பற்றிச் சொன்னாரு. எனவே ரொம்பக் கவனமா அதைக் கையாளணும் அதே போல இந்த கிரிக்கெட்



படிப்பகம்

www.padippakam.com

விளையாட்டு. மிகப் பெரிய கலாச்சாரத் தாக்குதலா அது நம்ம மேலே பிரயோகிக்கப் படுகிறது. இதை எதிர்கொள்ள மாலே டேபிள் டென்னிஸ் விளையாட்டை ஊக்கு விச்சார். நாம கபடி, சிலம்பம் போன்ற தமிழர் விளையாட்டுகளை கராத்தேக்குப் பதிலாக ஊக்குவிக்கணும். இதே போல மே தினம், நவம்பர் புரட்சி எல்லாத்தையும் மக்கள் திருவிழாக்களா கொண்டாடலாம். சினிமா, டி.விக்கு எதிரா மாற்று திரைப் படக் கழகங்களை உருவாக்கலாம். ஜான் ஆபிரகாம் போன்றவர்கள் செய்த மாதிரி மக்கள் மத்தியிலே கொண்டு போய் இதை எல்லாம் செய்யணும். சிறு பத்திரிகைகளின் பங்களிப்பு எல்லாம் எப்படி மாற்றப்பட வேண்டும் என்பதுபற்றி அக்னி ஏற்கெனவே குறிப்பிட்டார். அப்புறம் பொழுது போக்கு அம்சங்கள், மாற்றுக் கலாச்சாரத்திலே குழந்தை இலக்கியங்கள், குழந்தைத் திரைப் படங்கள் இதற்கெல்லாம் மிகப் பெரிய பங்கு இருக்கணும்னு நினைக்கிறேன். இப்படி சகல துறைகளிலும் மாற்று வடிவங்களை நாம யோசிக்கணும்.

**ஞானி :** மாற்றுக் கலாச்சாரம் பத்தி கடந்த பத்தாண்டுகளாக அதிகம் பேசி வருகிறோம். குறிப்பாக நிறப்பிரிகை தோன்றிய காலத்திலிருந்து இந்தப் பிரச்சினையைத் தீவிரப் படுத்தி முன்னிலைக்குக் கொண்டு வந்திருக்காங்க சில முக்கியமான புள்ளிகளுக்கு கூடுதலான அழுத்தம் கொடுத்து வந்திருக்கிறார்கள். அதனுடைய தொடர்ச்சியா இப்ப இந்த விவாதத்தில ஈடுபட்டிருக்கிறோம். சிற்றிதழ்களெல்லாம் அதிக அளவில் இதோடு சம்பந்தமுடையவை அல்லது இன்னும் அதிக அளவு சம்பந்தப் படுத்திக் கொள்ள வேண்டும் என்பதெல்லாம் நம்முடைய பொதுக் கருத்தாக இருக்கிறது. கலாச்சாரம் என்பதில் நாம இது வரை சாதி, மதம், பார்ப்பனீயம், சடங்கு முறைகள், விளையாட்டுகள், பொழுது போக்குகள் இந்த மாதிரி சில விசயங்களைப் பற்றி பேசி இருக்கிறோம். கூடுதலா ஒழுங்கு முறை, ஒழுங்கை மீறுதல் இதை எல்லாம் பேசி இருக்கிறோம். கிராம்சி போன்றவர்கள் இந்தப் பரப்பை இன்னும் கொஞ்சம் விரிவாக்கியிருக்கிறாங்கங்கிறது நமக்குத் தெரியும். என்னைப் பொறுத்தமட்டில் இந்தக் கலாச்சாரம்கிற விசயத்தை இன்னும் பெரிய தளத்திலிருந்து விவாதிக்க வேணடுமென்றே எனக்குப் படுகிறது. கலாச்சாரம் கிறதை மார்க்சிய நோக்கில் அடித்தளம்—மேற்கட்டுமானம் எனப் பிரித்து மேற்கட்டுமானத்தில் வைத்துப் பார்க்க வேண்டும் என்கிற பொதுவான புரிதல்தான் நமக்கு இருந்து வந்திருக்கிறது. ஆனா இன்னும் விரிவான தளத்தில் வச்சுப் பார்க்கணும். எப்படீன்னா இன்றைக்கு ஏகாதிபத்தியம்னு சொல்றோம். அது உலக அளவில் தனது கலாச்சாரத்தை செயல்படுத்த விரும்புகிறது. அதுக்குன்னு ஒரு பொருளாதாரம் இருக்கு. அரசியல் இருக்கு. அதற்குத் தகுந்த வகையில் உலக நாடுகளை எல்லாம் எப்படி மாற்றி அமைக்கணும்னு விரிவான அளவில் பிரச்சாரம் செய்யுது. ஒருலகம், பன்னாட்டு நிறுவனம், மூலதனத் திரட்டல் என்றெல்லாம் பேசுகிறது. இந்தக் கலாச்சாரத்திற்குள் அதனுடைய அரசியல் பொருளாதாரம் எல்லாம் அடங்கிவிடுகிறது. முதலாளியம் ஒரு கலாச்சாரத்தை சில நூற்றாண்டுகளாக நமக்கு முன் வைக்கிறது மக்களை முதலாளி தொழிலாளி எனப் பிரித்து முதலாளிகளுக்கே அதிக உரிமை எனப் பேசுகிறது. நுகர் பொருளை உற்பத்தி செய்கிறது. சந்தையை விரிவாக்குது. விளம்பரத்தைப் பெரிய அளவில் பயன்படுத்திக் கொள்கிறது. சனநாயகம் பாராளுமன்றம் என்கிறது. அதனுடைய அரசியல் கலாச்சாரம். அரசு பற்றி விரிவான கொள்கையை அது வச்சிருக்கு மத்திய அரசுக்கு அதிகாரம் வேணும். கூட்டாட்சி இந்தியாவுக்கு சாத்தியமில்லை. தன்னுரிமை அவசியமில்லை. அரசு வலிமையா இருக்கணும். விஞ்ஞானம் தொழில் நுட்பம் வேணும். ராணுவம் பலமா இருக்கணும். பாரம்பரியத் தொழில்களை மாத்தியமைக்கணும். அழிச்சாலும் பரவாயில்லை. இயற்கையைப் பயன்படுத்தணும். இயற்கை அசுத்தமாகத் தான் செய்யும். அழியத்தான் செய்யும் நுகர்வியம் என்கிற பண்பாட்டை அது பெரிய அளவில் ஊக்குவிக்கிறது. நிலப்பிரபுத்துவம் சில பண்பாடுகளை வரையறுத்து இருக்கிறது. குடும்பத்திற்குள் ஆண் - பெண் உறவு- கிராமத்தில் உறவு முறைகள், மடம், கோயில்களுக்கு சொத்து அவசியம், தேர் - திருவிழாக்களை பெரிதாக நடத்தணும் என்றெல்லாம் மதத்தோடு சம்பந்தப்பட்ட பலவிதமான நடவடிக்கைகளை மக்களிடம் பரப்பி இருக்கிறது. பெருந்தெய்வ வழிபாடு சரியானது. சிறுதெய்வ வழிபாடு மோசமானது. கீழேயுள்ள மக்கள் மேலே வரணும்னா பெருந்தெய்வ வழிபாட்டை ஏத்துக்கணும். இவற்றோடு முதலாளியமும் அரசும் ஒத்துப்போகிறது. கல்வி மருத்துவம் இதையெல்லாம் அதிக விலையுள்ளதாக்கி பொழுது போக்கு கிரிக்



படிப்பகம்

www.padippakam.com

கெட் முதலியவற்றை அதிகப்படுத்தி இருக்கிறது. பல்வேறு வகையான போதை மருந்து வணிகங்கள் தாராளமாக நடைபெறுகின்றன கல்வி என்ற பெயரில் ஏகப்பட்ட பாடங்களைத் திணித்து இளைஞர்கள் அரசியல் மற்றும் நாட்டு நடப்புகளில் அக்கறையற்றுப் போய்விடுகிறார்கள். நவீன விஞ்ஞானம் என்ற பெயரில் மேல்நாட்டை நோக்கித் திருப்பப்படுகிறார்கள். ஏகாதிபத்தியம், முதலாளியம், நிலப்பிரபுத்துவம், அரசதிகாரம் எனப் பலவாறாகப் பார்க்க வேண்டும். அரசியல் கட்சிகளெல்லாம் ஆளுக்கொரு அரசியல் கலாச்சாரத்தோடு இயங்குகின்றன. உண்ணாவிரதம். சிறை அப்புறம் விடுதலை செய்கிறது. தமிழ் அரசியல்வாதிகள் இந்திக்கு எதிராக தார்ப் பூசுறது மாதிரி போராட்டங்களையே முதன்மைப்படுத்துதல் மொழி அழிந்தால் இனம் அழியும் என்கிற மாதிரியெல்லாம் பேசி மக்களைத் திரட்டுகிறது. இது மாதிரி பல தளங்களில் கலாச்சாரம் இயங்குகிறது. பொருளியல், அரசியல், மதம், சாதி, மருத்துவம் என எல்லாவற்றையும் உட்படுத்தி கலாச்சாரத்தைப் பேச வேண்டி இருக்கிறது இப்படி விரிவாய் பேசணும். ஏகாதிபத்தியம், அரசதிகாரம், முதலாளித்துவம், நிலப்பிரபுத்துவம் இதெல்லாம் சேர்ந்து கொண்டு ஆதிக்கக் கலாச்சாரத்தை நடைமுறைப் படுத்துகின்றன. ஆதிக்கக் கலாச்சாரத்தைத் தகர்க்கும் வகையில் செயல்படுவதை மாற்றுக் கலாச்சாரம்னு வச்சுக்கலாம். மாற்றுக் கலாச்சாரங்கள் என்று சொல்வது பொருத்தந்தான். பலவற்றை இதறகுள் அடக்க வேண்டியிருக்கிறது பெரியாரியம், மார்க்சியம், அம்பேத்கரியம் எல்லாவறறையும் எப்படிப் புதுப்பிப்பது என்று பேச வேண்டும். தமிழியம் என்றால் தமிழ்ப் பெருமை பேசுவதோடு நின்றுவிடுகிறதா? இந்த மாதிரி எல்லாம் பேச வேண்டும் தமிழ்க் கலாச்சாரம் என்கிறோம். தலித் பண்பாடு என்கிறோம். இன்னும் பலவகையான பண்பாடுகளைப் பேசுகிறோம். பேச முடியும் மாற்றுக் கல்வி முறை, நுகர்வியத்திற்கு எதிராக நிற்றல் எனப் பல துறைகளில் பேசமுடியும். உணவு, உடை, கைத்தறி, சிறுதொழில்கள் எனப் பலவற்றையும் பேச வேண்டும். பெரிய அணைக்கட்டு தேவையா, அணு மின்சாரம் தேவையா? பெரிய நகரங்கள் அவசியமா? இறால் பண்ணைகள் எல்லாம் எநத அளவு மக்களை அழிககப் போகின்றன? பாரம்பரிய விவசாயத்தைப் புதுப்பிக்கணும். கலவி என்றால் பெரிய அளவில் வேண்டும். அஞ்சாம் வகுப்பெல்லாம் போதாது. அறிவொளி இயக்கம் என்பதெல்லாம் பெரிய மோசடியாய்த் தெரியுது. இதையெல்லாம் செய்ய நம்மிடையே ஆரோக்கியமான ஒருங்கிணைப்பு வேணும். உதாரணமாக பார்ப்பனீயம் என்று பேசுகிறபோது பார்த்தீங்கன்னா அ. மார்க்சாகட்டும் அக்னியாகட்டும் தூய்மை, தரம், இயல்பு என்று சொன்னாங்க. பார்ப்பனீயம் என்கிற சொல்லைப் பயன்படுத்தாமலேயே இதை என்னுடைய பாணியில் விளக்கிட முடியும். தூய்மையா இருக்கிறவன் புனிதமானவன் மேட்டிமைக்குரியவன் என நம்ம சமூகத்தில் இருக்கிறது. அடப்பாவி நீ தூய்மையா இருக்கணும்னா பல பேரை நீ அசுத்தப் படுத்த வேண்டியிருக்கே. உதாரணமா சுந்தர ராமசாமி. ங்க் ஊத்தறப்போ ஒரு சொட்டுக்கூட கீழே ஊத்தக் கூடாது தரை துணி அழுக்காகிடக்கூடாது என்கிறார். அட இங்க் ஊத்தறதுல்லே ஒரு சொட்டுச் சிந்துனா என்னய்யா கெட்டுப் போச்சு இப்போ? அதே மாதிரிதான் தரப்படுத்துதலும் அதிகத் தரமான மாணவனா மாத்துற முயற்சியில் இந்தக் கல்விமுறை அவனை சமூக அக்கறை இல்லாதவனாக்குவது. அதே மாதிரிதான் இயல்பு படுத்துதல் என்கிற பெயரில் அடக்குமுறையைத் திணிக்கிறோம் சுய சிந்தனையைக் கெடுக்கிறோம். இதற்கெல்லாம் ஒட்டு மொத்தமா பார்ப்பனீயம் என்கிற ஒரு சொல போதாது என்பது என்னுடைய கருத்து. மூன்றாம் உலகத்திற்கெதிராக மூன்றாம் உலகப்போர் என்று சொல்லத் தக்க அளவிற்குப் பெரிய அளவில் இன்று தாககுதல் தொடுக்கப்பட்டிருக்கிறது. இதை நாம புரிஞ்சுக்கணும். வெறும் ஒற்றை முனையில மட்டும நம்முடைய கருத்துக்களையெல்லாம் குவிக்க முடியாது பார்ப்பனீயம் என்றோ அல்லது வேறு ஏதாச்சும் ஒரு முனையில் மட்டும் நம்முடைய கருத்துக்களை ஒருமைப்படுததிவிட முடியாது நுகர்வியம், முதலாளியம் தனியுடைமை, அரசதிகாரம், ராணுவம, டங்கல் திட்டம், நகர வாழக்கை பசுமைப்புரட்சி, நவீன மருத்துவம போன்றவற்றிற்கு எதிராகப் பல முனைகளில் நாம் பேசியாகணும். இரண்டு முனைகள் எனககு முக்கியமாகப் படுகிறது. தலித் பண்பாடு பற்றி கொஞ்ச நாளா பேசுறோம். தமிழ்ப் பண்பாடு பற்றி பேசுறோம். தமிழ்ப பண்பாடுங்கிறது ஒரு பத்து இருபது வருசத்திறகு முன்னாடி நிச்சயமா உயர்சாதியுடைய பண்பாடாகத்தான் இருநதது. தி.மு.க.வைப் பொறுத்தமட்டில் பழமை சார்நது, மன்னர்கள் சார்நது ஒரு போக்கை ஏறபடுத்தினார்கள். இதனடியாக



படிப்பகம்

www.padippakam.com

மலர்க்கிரீடம், வீரவாள் பரிசளிப்பு, எழுநிலை மாடங்கள் அமைத்தல், இராசராசனுக்குச் சிலை என்கிற கலாச்சாரங்கள் வைக்கப்பட்டன. இன்றைக்குத் தமிழ்க் கலாச்சாரம் என்றால் அதைக் கீழே கொண்டு வந்து, சித்தர் மரபு சார்ந்து, திருக்குறள் மாதிரி அறநூல்களுக்கெல்லாம் புது விளக்கங்கள் கொடுத்து, வள்ளலார், பெரியார் இந்த மாதிரி அம்சங்களுக்கெல்லாம் கொஞ்சம் அழுத்தம் கொடுத்து சமூகத்தில் ஏற்படுத்தப்பட்ட மக்களின் பண்பாடு என்கிற அளவில் அதைக்கீழே கொண்டு வர முடியும் உழவர்கள், கைவினைஞர்கள், தமிழ் மொழி ஆகியவற்றை முக்கியப்படுத்த முடியும். நிலத்தைத் தூய்மையா வைக்கணும். அன்னியனுக்கு அடகு வைக்கக் கூடாது. எல்லா அரசியல் கட்சிகளும் தமிழனுக்கு விரோதி என்று பேசியாகணும். வெறும் தனித்தமிழ் அப்படி இப்படி எல்லாம் பட்டிமன்றப் பாணியில் பேசுறதெல்லாம் தமிழினத்துக்கு விரோதின்னு சொல்லியாகணும். தலித் பண்பாடுங்கிறதுக்கும் நான் சொல்லுற தமிழ்ப் பண்பாடுங்கிறதுக்கும் கொஞ்சம் வேறுபாடு இருக்கு தலித் பண்பாடு என்பது தலித் மக்களுடைய பண்பாடு என்று வைத்துக் கொண்டால் நான் சொல்லுகிற தமிழ்ப்பண்பாடு என்பது மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுடைய பண்பாடு, உழவர்களுடைய பண்பாடு, நிலப்பிரபுக்களுடைய பண்பாடு அல்ல, கைவினைஞர்களுடைய பண்பாடைத்தான் சொல்றேன். தமிழ்நாட்டுக்குள்ள வந்து முன்னூறு நானூறு ஆண்டுகளாக தமிழ் மக்கள் மத்தியில் ஏழைகளாக சுரண்டப்படும் மக்களாக இருக்கக்கூடிய மலையாளிகள், தெலுங்கர்கள் எல்லாரும் தமிழர்கள்தான். முதலாளிகளிடம் நமக்கெப்போதுமே பிரச்சினை உண்டு. அவர்கள் எவ்வளவுதான் தனித் தமிழ் இயக்கம் நடத்துனாலும் சரி தமிழ்ப் பற்றுடையவர்களாகக் காட்டிக் கொண்டாலும் தமிழ் மக்களுக்கு எதிரின்னு நாம சொல்லித்தான ஆகணும இப்படிப பல விளக்கங்களெல்லாம கொடுத்து தமிழ்க் கலாச்சாரம்னா பிற்படுத்தப்பட்ட மக்களுடைய கலாச்சாரம்னு கொண்டுவரமுடியும் என்கிறது எனது நம்பிக்கை, பிறபடுத்தப்பட்டவர்களும தலித்களும் கை கோர்த்துக் கொள்ளுதல என்கிறவகையில் இரண்டையும் ரொம்ப பக்கமாக கொண்டு வரணும். சில தீராத விரிசல்கள் இருந்தாலும் அதைப் பெரிதுபடுத்தி எதிர் நிலைக்குக் கொண்டு போவது சரியில்லை. நமம கொஞ்சபேர்தான் இருக்கிறோம். ஆரோக்கியமான விவாதத்திற்கு நம்மிடையே இடமிருக்கு. பகைக்கு இடமில்லை. ஒற்றுமைக்கு எதிரா இருக்கறவங்கள் எல்லாம் தமிழ் மக்களின் விடுதலைக்கு எதிரி புரிந்துகொள்ள முடியாத அறிவற்ற எதிரிகள் என்றுதான் சொல்வேன்.

**ஓடை துரை அரசன் :** பண்பாடு பற்றிய மார்க்சியப் பார்வைங்கிறது இதுவரைக்கும் இங்கே சரியா வைக்கப்படலை. நிறப்பிரிகையுடைய வருகைக்குப் பிறகுதான் கிராம்சியுடைய Hegemony, சிவில் சமூகம் போன்ற பார்வைகளெல்லாம் வைக்கப்படுகிறது என்கிறது ஒரு மறுக்க முடியாத உண்மை. பரிமாணத்தில் சில கட்டுரைகள் வந்த போதிலும் இந்த அளவுக்கு அதைத் தமிழ்ச் சமூகத்துக்குப் பொருத்திப் பேசி அழுத்தம் கொடுத்ததெல்லாம் நிறப்பிரிகை குழுதான். சட்டகத்தை உடைப்பது பற்றி மார்க்சியவாதிகள் இதுவரை பேசினாலும் பொருளாதார ரீதியாகச் சட்டகத்தை உடைப்பது பற்றித்தான் பேசினார்களேயொழிய பண்பாடு ரீதியா உடைப்பதன் அவசியத்தை வைக்கலே. இதுவரையிலான தமிழ்க் கலாச்சாரக் கட்டமைப்பெல்லாம் ஆளும வர்க்கத்தால்தான் மேற்கொள்ளப் பட்டிருக்கு சங்க இலக்கியத் தொகுப்பிலிருந்து இன்றைய நடவடிக்கை வரை நிலவும் அமைப்பைக் கட்டிக் காக்கும் நோக்கில்தான் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மாற்றுப் பண்பாடுங்கிறது ஆதி காலத்திலிருந்து இருந்து வந்திருக்கு. மாற்றுப்பண்பாட்டை நிறுவும் போது அந்த வரலாற்றை நாம் தொகுத்துக் கொள்ள வேண்டும். இறுகிக் கட்டமைக்கப்பட்டுள்ள தமிழர் பண்பாட்டை உடைக்கிறதுக்கு இது மிக அவசியம். சட்டோபாத்யா நமது தத்துவ மரபில் உலகாயத எதிர்ப்புக் கூறுகளைத் தொகுத்தது போல நாம மையப் பண்பாட்டினூடாக இருந்துவந்த இத்தகைய எதிர்ப்புக் கூறுகளைத் தொகுக்கணும். அப்பதான் தமிழர் பண்பாடுன்னு இதுவரைக்கும் கட்டமைக்கப்பட்டிருப்பதெல்லாம் உண்மையான தமிழர் பண்பாடு அல்லங்கிறது தெளிவாகும். மறைக்கப்பட்ட மாற்றுப் பண்பாட்டை வெளிக் கொணரணும் அப்புறம் கல்வி முறை குடும்ப அமைப்புங்கிறதெல்லாம் மாற்றுக் கலாச்சாரத்திற்குப் பெரிய தடை. உதாரணமாக அப்பாவுக்கும் ஆசிரியருக்கும் கேள்வி முறையில்லாமல் கீழ்ப்படியணும்கிற கருத்தை மார்க்சியவாதிகள் கூட இன்னும் வைத்திருக்கிறார்கள். அந்த வகையில் பாவ்லோ பிரேயர் போன்றவர்களுடைய கருத்துக்கள் எல்லாம் ரொம்ப முக்கியம் மாற்றுச் சிந்தனைகள், மாற்று



படிப்பகம்

www.padippakam.com

இதழ்கள் எல்லாத்தையும் எல்லாருக்கும் கிடைக்கிறமாதிரி கீழே கொண்டுபோகணும். சமூக மாற்றத்திலே நம்பிக்கை உள்ளவங்களுக்கு பெண்ணியம், தலித்தியம் இதிலெல்லாம் வேறு கருத்துக்கள் இருக்க முடியாது. இருந்தாலும் செயல்படுற தளத்தில் எல்லாம் பிரிந்து நிற்கிறாங்க. அதுக்கு அரசியல் காரணங்கள் எல்லாம் இருக்கு. இருந்தாலும் அது தவிர்க்கப்படணும். நம்ம வீடுகளில் நல்லது கெட்டது நடக்கிறப்போ அந்தந்த சாதிக்காரங்க, குடும்ப அமைப்போட ஒருங்கிணைஞ்சவங்க தான் இருக்கிறாங்க. மாற்றுக் கலாச்சாரததை வலியுறுத்துறவுங்க தனிமைப்பட்டு நிக்கத்தான் வேண்டியிருக்கு. நாம கருத்து மாறுபாடுகளை மறந்து இணைஞ்சு நின்னோம்னா அந்தத் தனிமை உணர்வு நிச்சயமா வராது கலப்புத் திருமணத்துக்கெல்லாம் நாம அப்படி ஆதரவு கொடுத்தாத்தான் சாதிப்பக்கம் அவங்க போகாம இருப்பாங்க வேறுபடுகிற அரசியல் புள்ளிகளை மறந்துவிட்டு பிரதான எதிரியை நினைச்சு நாம எல்லாம் பொதுப் புள்ளிகளில் ஒன்றுபடணும் சிறு தெய்வ வழிபாட்டை ஊக்குவிக்கணும்னு குறிஞ்சி சொன்னாரு. அதைஎல்லாம் நாம செய்யாததாலே இன்னைக்கு சிறு தெய்வக் கோயில்களிலெல்லாம் அய்யர் வச்சு வழிபாடு நடக்குது. சாராயம், பண்ணிக்கறி எல்லாம் எடுத்துட்டு வேதம் ஓதத் தொடங்கிடறாங்க நாம எச்சரிக்கையாக இல்லைன்னா நமது எதிரி இதை எல்லாம் கைப்பற்றிடுவான் என்பதை உணர்ந்து செயல்படணும்.

**குன்றம் ராமரத்நம் :** இருக்கிற கலாச்சாரத்தைக் கட்டிக்காப்பதில் ஏகாதிபத்தியம், முதலாளியம், அரசதிகாரம் ஆகியவற்றின் பங்கை ஞானி அவர்கள் பேசியதைக் கேட்டபோது எல்லாருக்கும் ஒரு பயமே வந்துட்டுது. அதாவது எதிர்க்கலாச்சாரத்தை நாம தூக்கி நிறுத்தமுடியுமான்னு, ஆனா குறிஞ்சி பேசும்போது மாற்றுக்கலாச்சாரம்னு எப்ப வந்துட்டமோ அப்புறம் எவன் எதிரே நின்னு என்ன ஆட்டம் போட்டாலும் நாமளே அதை சின்ன அளவிலாவது கலை, சினிமா போன்ற எல்லாத் துறைகளிலும் ஒரு முயற்சியைப் பண்ணிப் பாக்கணும்னு சொன்னாங்க. நிறப்பிரிகை, நிகழ் போன்ற பத்திரிகைகள் அளவுக்குக் கூட இல்லாம பெரும்பத்திரிகைகளின், நகல்கள் மினிகளாக வந்துகொண்டு இருக்கக்கூடிய சிறு பத்திரிகைகளில் வரும் கவிதைகளை எல்லாம் பார்த்தீங்கண்ணா கூட அதிலே இந்த நசிவுக் கலாச்சாரத்திற்கு ஒரு எதிர்ப்புணர்வு வெளிப்படுவதுதெரியும். கோயில் திருவிழாக்களுக்குப் பெரிய அளவில் கூட்டம் கூடுது. சும்மா இதெல்லாம் வேடிக்கை பார்க்கப்போகுதுண்ணு சொல்ல முடியாது. அப்புறம் என்ன அர்த்தம் இதுக்கு. இறுகிப் போன மதச் சடங்குகளை அவுங்க தொடர்ந்து செய்யத் தயாரா இருககிறாங்கங்கிறதுதான் ஆனா இந்த சாதி, மத கலாச்சாரங்களை டி.வி. முதலியவற்றால் தூக்கிப் பிடித்துக் கொண்டிருந்தாலும் அதை எல்லாம் வேடிக்கை பார்த்துகிட்டு தன் போக்கில் போகிற நிலை ஒண்ணும் இருக்கு. உதாரணமா இன்னைக்கு எந்த அக்கிரகாரத்திற்குள்ள போனாலும் அங்கே மொட்டை அடிச்சி வெள்ளை நார்ப்பட்டு கட்டின பாப்பாத்திகளைப் பார்க்க முடியாது. நம்ம வீடுகள்ல கூட சின்ன வயசில விதவை ஆயிட்டா வெள்ளைச் சேலை கட்டுறதில்லே. கலப்புத் திருமணம்கூட இப்ப பெரிய அளவுல எதிர்க்கப்படுறதில்லை. எல்லாம் கட்டுடைஞ்சு நிக்கிது. அதனால திட்டமிட்டு சப்போர்ட்டுக்கான அமைப்புகளை குறிஞ்சி சொன்ன மாதிரி உருவாக்கினா இந்தக் காரியங்களை நாம மேலெடுத்துச் செல்ல முடியும் சில விஷயங்களை நாம தப்புன்னு தெரிஞ்சாலும் செய்ய வேண்டியிருக்கு. External force ஒண்ணு செயல்படுறதாலெ அதைத்தான் நாம ஒடைக்கணும். துரையரசன் சொன்னாங்க எதிர்ப்புக்களுக்கான பழைய சரித்திரத்தை எழுதணும்னு. என்னைப் பொறுத்த மட்டிலே பழைய சாரித்திரம் முக்கியமில்லே. இன்னைக்கு உள்ள சமுதாயத்தை ஆய்வு செய்யணும். குடும்பத்தை உடைக்கிறது என்கிற சமாச்சாரத்தை எல்லாம் மக்கள் ஏத்துகக தயாரா இல்லை மக்கள எதெல்லாம் நல்லதுன்னு நினைக்கிறாங்களோ அதெ இலலேங்கிறோம். தூய்மைன்னு நினைக்கிறது இல்லேன்னுட்டு தூய்மை இல்லாததைத் தூக்கி வைக்கிறோம். அதை நாம ரொம்ப யோசிச்சுச் செய்யணும்கிறேன். நியாயமா கேள்வி கேட்கிறதை வாத்தியார் எதிர்க்கிறதுஇல்லை. பாராட்டத்தான் செய்வாரு. எல்லாரும் மனைவியைக் கட்டும்போதும் குழந்தையைப் பெறும்போதும் நலலா வச்சுக்கணும்னு கனவுகளோடுதான் செய்றான். எல்லாத்தையும் வுட்டுப் போட்டு தண்ணி அடிக்கிறான்னா சமூகத்திலே இநத மாதிரி கலாச்சாரம் இருக்கிறதாலதான். ஆனா எதிர்க்கலாச்சாரமனு சொல்றபோது மக்கள் ஏற்றுக் கொள்ளாத சாதாரண



படிப்பகம்

www.padippakam.com

மக்களால் ஏற்றுக் கொள்ள முடியாத— குடும்பம் வேணாம், திருமணம் வேணாம்— என்பதுபோன்ற பர்டன்களை (சுமைகளை) ஏத்தக்கூடாது. திருமணமே வேணாம்னு சொல்லிட்டா அப்புறம் என்னா கலப்புத் திருமணம்? அதனால எல்லாத்தையும் தூக்கிப்போட்டு ஒழிச்சுட்டு எதிர்க்கலாச்சாரம்னு அவ்வளவு தீவிரமாப் போறது மக்களால் ஏத்துக்க முடியாது. நம்ம எல்லாத்துக்கும் தொந்தரவுதான் வரும். ஒரு எட்டு வச்சா ரெண்டு குட்டு வரும். சித்தர்கள் பத்தி நம்மகிட்ட ஒரு பெரிய இமேஜ் இருக்கு சித்துகள், சக்திகள் உடையவங்கனு. அந்த மதிப்போடதான் அவுங்க மாற்றுக் கருத்துக்களை முன்வைச்சு திரிஞ்சாங்க. நமக்கும் அந்த மாதிரி தகுதி வேணும். மதிக்கத்தக்க அந்தஸ்து வேணும். ஆனா நாம் ஒருத்தருக் கொருத்தரே அந்த மாதிரி மரியாதை கொடுக்கிறதில்லே. ஒருத்தரை ஒருத்தர் இழிவு படுத்திக்கிறோம். மார்க்சைப் பத்தி ஒருத்தர் இழிவாகப் பேசுறது. என்னைப் பத்தி குறிஞ்சி பேசுறது. குறிஞ்சியைப் பத்தி வசந்தகுமார் பேசுறது... இப்படி, நமக்குள்ள இருக்கிற பிரச்சினைகளை இந்தமாதிரி கூட்டங்களில் தீத்துக்கணுமே யொழிய எழுத்துக்களிலே அசிங்கமான வார்த்தைகளிலே புண்படுத்த வேணாம்னு கேட்டுக்கறேன்.

**கு. பழனிசாமி :** மேலாண்மையத் தகர்க்கிறதுன்னா ஒரு மேலாண்மையை எடுத்துட்டு அந்த இடத்தில் இன்னொரு மேலாண்மையை வைப்பதல்ல. மாற்றுக் கலாச்சாரத்தை அறிவுஜீவிகள் உருவாக்குவாங்கன்னு சொல்றது Nonsense. புதிய கலாச்சாரம்னு வசந்தகுமார் சொன்னாரு. இடதுசாரிகள் அதை முன் வைச்சிருக்காங்க. ஆதிக்கக் கலாச்சாரத்திலேருந்து அது ஒண்ணும் பெரிய அளவில் வேறுபட்டது இல்லே. புதிய கலாச்சாரங்கள் என்றுதான் பேசணும். ஆபாசத்துக்கு எதிரா இங்கே பேசப்பட்டது. அது சரிதான். ஆனா ஆபாசத்துக்கெதிரான பேச்சுல ஒரு சனாதனக் குரல் இருப்பத நாம மறக்க முடியாது. இப்போதும் அதுதான் பெருமளவில் இருப்பதா நான் கருதுறேன். அப்புறம் தீட்டு/ தூய்மை / தரம் ங்கிறதுக்கு பதிலா நமமுடைய தரம்/தூய்மை இதை வைக்கணும்கிறதை நான் மறுக்கிறேன். அப்புறம் குறிஞ்சி நிறைய தீர்வுகள் சொன்னாரு, ஆனா மீண்டும் நாம சட்டகங்களுக்குள்ளே போய் சிக்கிக்கக் கூடாதுங்கிற எச்சரிக்கை அவசியம். அப்புறம் சிறு பத்திரிகைகள் பத்தி சொன்னாங்க. சிறு பத்திரிகைகள் என்னைக்கும் மாற்றுக் கலாச்சாரம் பத்தி பேசியதில்லை வணிகப் போக்கை எதிர்ப்பதுங்கிறதைத் தவிர மெயின்ஸ்ட்ரீமிலிருந்து அவை அதிகம் வேறுபட்டதில்லே. ஞானி பேசும்போது கல்வி அதிக மக்களுக்குத் தரப்படவில்லை என்றார். இன்னைக்குள்ள கல்வி அதிக மக்களுக்குத் தரப்படவில்லைங்கிறதுக்காக நாம மகிழ்ச்சி அடையலாமே தவிர அதுக்காக வருத்தப்பட முடியாது. ஏன்னா இன்றைய கல்வி Status quo வை தக்க வைப்பதற்கான கல்விதான். அதே போல நிலப்பிரபுத்துவம் முதலாளியப் பண்பாட்டுக் கெல்லாம் எதிராப் பேசும்போது பார்ப்பனியக் கலாச்சாரம் குறித்துப் பேசாமல் இதை எல்லாம் பேச முடியும்னு நான் நினைக்கலே. சாதி ஆதிக்கத்தை எல்லாம் பேசும்போது பார்ப்பனீயம் ங்கிற வார்த்தையைத் தவிர்த்துவிட்டுப் பேச முடியும்னு நான் நினைக்கலே நல்ல இலக்கியம் நல்ல கலை என்றெல்லாம் பேசுவது மீண்டும் மேலாண்மையை நிறுவுவதில்தான் போய் முடியும். மரபிலிருந்து எதிர்மரபை எல்லாம் கொஞ்சம் எடுக்க முடியும்னாலும் அதை எல்லாம் நாம பெரிசாப் பேசிக்கிட்டிருக்க முடியாது, மரபை disown பண்றதைப் பத்தித்தான் பேசணும். குன்றம் அய்யா பேசும் போது அப்பா—மகன், ஆசிரியர்—மாணவர் உறவு பற்றிப் பேசினார். அந்த உறவில் இருக்கிற ஆதிக்கத் தன்மையைத்தான் நாம கவனிக்கணும்.

**ஆறுமுகம் :** கட்டுடைத்தல் என்பதில் கருத்து மாறுபாடு இல்லை. ஆனால் தமிழ் மரபுலே எதைக் கட்டுடைக்கணும்ங்கிறதுதான். வானம்பாடியிலேருந்து இயக்கமாகும் போது அது சிதறிப் போசசு. அதற்குப் பிறகு இலக்கு இயங்கியது. அதுக்குப் பிறகு எதுவும் தமிழ் நாட்டுல இயக்கமாக இல்லை. அதை இயக்கமாக்குவதற்கு என்ன செய்ய வேண்டும் என நாம் யோசிக்கணும். மூன்றாம் உலகம் சார்ந்த அரசியல பேசுகிற சிறு பத்திரிகைகள் யாவற்றையும் நாம் இணைக்க வேண்டும். சிறு பத்திரிகைகளில்தான் மார்க்சியம், பெண்ணியம், தலித்தியம் சார்ந்த கருத்துக்கள் வருகின்றன. எனவே அவைகளை நாம் இணைக்க வேண்நிம். ஆங்கிலத்தின் ஆதிக்கத்தால் நம்மொழி செத்துக் கொண்டிருக்கிறது. அதை நாம் எதிர்த்தாக வேண்டும். உலகத் தமிழ் மாநாடு நடக்கப் போகிறது. சிறு பததிரிகைகள், தன்னார்வக் குழுக்கள், மூன்றாம் உலகச் சிந்தனையாளர்கள் எல்லாரையும் இணைத்து எதிராக



படிப்பகம்

www.padippakam.com

ஒரு உலகத் தமிழ் மாநாட்டை நாம் நடத்தினால் சிறு குழுக்கள் எல்லாம் இணைந்து இயக்கமாக முடியும். சுமார் 150 குழுக்கள் இருக்கும் என நினைக்கிறேன். அவற்றை எப்படியாவது இணைக்க வேண்டும்.

**முருகேசன் ;** குடும்பம் என்பது ஒரு அடிப்படையான சாதனம், இதைச் சுத்தி குலம், கோத்திரம் இருக்குது. சாதி, மதம் மேற்கட்டுமானமா இருக்குது. இனம் இயற்கையானது. கிராமப் பொருளாதாரம் இன்னைக்கு சாதீயப் பொருளாதாரமா மாறியிருக்கு. சாதிக்கு ஒரு மாற்று அமைப்பு இல்லை. குடும்பத்தை ஒழிச்சுற முடியாது. அது ஒரு அடிப்படையான ஸ்தாபனம். அதை ஒழிச்சா மோசமான விளைவுதான் உருவாகும். கலாச்சார சீரழிவு மாதிரி கடவுள் எதிர்ப்பு என்பது கூட இன்னைய சூழல்லே ஒரு எதிர்மறை விளைவைத்தான் ஏற்படுத்துது. அதனாலே சாதியை எதிர்க்கக்கூடிய போராட்டத்தைத்தான் நாம முதல்லே கொண்டு போகணும். பொருளாதாரக் கட்டுமானத்தைத் தகர்க்காமல் மாற்றுக் கலாச்சாரம் சாத்தியமில்லே.

**தன்மானன் :** உழைக்கும் பண்பாடைத்தான் நாம சொல்ல முடியுமே தவிர தலித்துக்கு ஒரு பண்பாடு பெண்ணியத்துக்கு ஒரு பண்பாடு என்றெல்லாம் தனித்தனியா சொல்ல முடியாது பெண்ணியம்னா ஆண்கள் பல பெண்களோடு உறவு வச்சுக்கிற மாதிரி நாங்களும் வைச்சிக்கணும்னு சொல்றது இல்லே. குடுப்பம் நம்ம குமுகாயத்திற்குத் தேவையில்லேன்னா அதைக் காலம் தீர்மானிக்கட்டும் இன்னைக்கு உள்ள சூழல்லே அடுத்த கட்டத்திற்கு என்ன மாற்று வழி அதைத்தான் திட்டமிடணும். தனித் தமிழ் என்பது ஒரு தேசிய இன விடுதலைக் கூறு. அதை நடைமுறைப்படுத்துவது விடுதலைச் செயல்பாடு. எனவே அதைக் கேலி செய்யக் கூடாது. பழமை எனப் புறக்கணிக்கக் கூடாது.

உணவு இடைவேளைக்குப் பிறகு மீண்டும் மாலை 3 மணி அளவில் விவாதம் தொடர்ந்தது. அ. மார்க்ஸ் சுருக்கமாக அதுவரை நடந்த விவாதங்களின் மையப் புள்ளிகளைத் தொகுத்துரைத்தார்.

**அ மார்க்ஸ் :** விவாதம் ஒரு சுற்று முடிந்திருக்கிறது. கலாச்சாரம் தொடர்பாகவும் மாற்றுக்களின் அவசியம் குறித்தும் நிறப்பிரிகை சார்பாக முன் வைக்கப்பட்ட கருத்துக்களுடன் பெரும்பாலும் எல்லோரும் உடன்பட்டே பேசியிருக்கிறார்கள். அழுத்தம் கொடுக்கும் புள்ளிகளில் மட்டும் சில கருத்து வேறுபாடுகள் நம்மிடையே இருந்தது ஆரோக்கியமான ஒன்றே. தொடர்ந்த உரையாடலுக்கு இத்தகைய மாறுபடும் புள்ளிகள் அவசியம்தான் அக்னி, ஓடை துரையரசன், பழனிசாமி ஆகியோர் முழுமையாக நிறப்பிரிகையின் கருத்துக்களோடு இணைந்து நின்று பேசினார்கள். சிறு பத்திரிகைகளின் பார்ப்பனீயக் கூறுகளின் மீது அக்னியும் எதிர் மரபுகளைத் தொகுக்க வேண்டியதன் அவசியம் குறித்து துரையரசனும் பேசினர். கலாச்சாரத்தின் அரசியலை மட்டும் பேசினால் போதாது. பின்னாலுள்ள பொருளாதாரம் பற்றியும் பேச வேண்டும் என்றார் வசந்தகுமார். மாற்றுக் கலாச்சாரத்தை அறிவுஜீவிகள் மட்டும் உருவாக்கிவிட முடியாது என்றும் சொன்னார். நிறப்பிரிகையும் அப்படிக் கருதவில்லை. குறிஞ்சி மாற்று வடிவங்கள பற்றி விரிவாகப் பேசினார். மாற்று முயற்சிகளை ஊக்குவிக்கும் வகையில், ஈடுபடுவோர்க்குப் பாதுகாப்பு உணர்வு கிடைக்கும் வகையில் நமது செயற்பாடுகள் ஒருங்கிணைக்கப்பட வேண்டியதன் அவசியத்தையும் அவர் வற்புறுத்தினார். பெரியவர் குன்றம், முருகேசன், தன்மானன் ஆகியோர் குடும்பத்தை உடைப்பது நமது முதற்பணியாக இருக்க முடியாது என்றனர். நிறப்பிரிகையும் அப்படித்தான் கருதுகிறது மற்றெல்லா பணிகளையும் விட்டு விட்டு குடும்பத்தை உடைப்பதே முதற் பணி எனவோ குடும்பத்தை உடைத்தால் எல்லாம் சரியாகிவிடும் என்றோ நாங்கள் சொல்லவில்லை ஆனால் இப்படிப் பேசுவதன் மூலம் குடும்பம் என்கிற அதிகார நிறுவனம் தன்னிலை மற்றும் சாதீய உணர்வு ஆகியவற்றின் உருவாக்கத்திலும் ஆணாதிக்கச் செயல்பாட்டிலும் வகிக்கும் பங்கைப பற்றிய விவாதத்தைப் பின்னுக்குத் தள்ளிவிடக் கூடாது. குடும்பம் என்கிற நிறுவனம் அரசு, தனிச் சொத்து போல வரலாற்றின் இடைக்காலத்தில் உருவாகிய ஒன்று. என்மறென்றைக்குமான நிறுவனமாகப் பார்க்கத் தேவையில்லை என்பதைய நாங்கள் வற்புறுத்தி வந்துள்ளோம். குன்றம்

நி—12



படிப்பகம்

www.padippakam.com

அவர்கள் பேசும்போது மாற்றுக் கலாச்சாரம் இன்றைய நிலையில் சாத்தியமே இல்லையோ என்கிற எண்ணத்தை ஏற்படுத்துமாறு ஞானியின் பேச்சு அமைந்தது எனக் குறிப்பிட்டார்.

(இந்த இடத்தில் ஞானி கோபமாக இடைமறித்து இந்தக் கூற்றைக் கடுமையாக மறுத்தார். மற்றவர்களிடமிருந்து தன்னைத் தனிமைப்படுத்த வேண்டாம் என்றார். இந்த விவாதத்திற்குத் தாம் வரத் தயங்கியதாகவும் நண்பர்களின் வேண்டுகோளுக்காகத்தான் வந்ததாகவும் குறிப்பிட்டார். அ. மா. அந்தப் பிரச்சினையை விட்டு விட்டு அடுத்த அம்சத்திற்குச் சென்றார் )

**அ மார்க்ஸ் :** மேலாண்மை உருவாக்கத்தில் ஏகாதிபத்தியத்தின் பங்கை மறந்து விடக் கூடாது என்கிற அம்சத்திற்கு ஞானி அழுத்தம் கொடுத்தார். அதில் நமக்குக் கருத்து மாறுபாடு இல்லை. ஆனால் மீண்டும் இது கலாச்சாரப் புலத்தையும் பொருளாதாரப் புலத்தையும் முற்றிலும் ஒன்றாகப் பார்க்கிற தவறிற்கு இட்டுச் சென்று விடக் கூடாது. ரசியாவில் சோசலிசத்தை நோக்கிய பொருளாதார மாற்றங்களைச் செஞ்சுப் கூட பண்பாடு மற்றும் அரசியல் பொருளாதார நிர்வாக வடிவங்களை அப்படியே வச்சுக்கிட்டதாலே ஏற்பட்ட விளைவுகளை நாம் மறந்துவிடக் கூடாது. தவிரவும் பார்ப்பனீயம் என்கிற சொல்லைப் பயன்படுத்தத் தேவையில்லை எனவும் ஞானி பேசினார்.

(மீண்டும் ஞானி கடுமையாக மறுத்தார். பார்ப்பனீயம் என்ற கருத்தாக்கம் போதாது என்று மட்டுமே தான் சொன்னதாகச் சொன்னார்).

**அ. மார்க்ஸ் :** பார்ப்பனீயம் என்கிற கருத்தாக்கம் போதாது என்று சொல்லும் போது பிற அம்சங்களைச் சேர்த்துக் கொள்ள வேண்டும்-ஏகாதிபத்தியம் போன்றவற்றை-என்பதுதான் இதன் பொருளேயொழிய பார்ப்பனீயம் என்கிற கருத்தாக்கம் தேவையில்லை எனச் சொல்வது எப்படிச் சரியாக இருக்கும்? ஞானியின் பேச்சை உற்றுக் கவனித்தீர்களானால் மற்ற அம்சங்களுக்குக் கூடுதல் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்கிற பெயரில் பார்ப்பனீயப் ஒரு கூறாகவே இல்லை என்கிற கருத்தை அவர் வலியுறுத்துவது தெரியும்; இந்தியச் சூழலில் அப்படிப் 'பார்ப்பனீயம்' என்கிற கருத்தாக்கதைப் புறக்கணித்துவிட முடியாது என நாங்கள் கருதுகிறோம். இது தொடர்பாக மற்ற நண்பர்களும் கருத்துச் சொல்ல வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

**அக்னிபுத்திரன் :** பார்ப்பனீயம்ங்கிறது வரலாறு வடித்துக் கொடுத்த ஒரு வார்த்தை, பார்ப்பனீயத்துடைய ஆதிக்கத்துக்குள்ள தான் இந்தியக் கட்டமைப்பு. சாதியக் கட்டமைப்பு, பண்பாட்டுக் கட்டமைப்பு எல்லாம் இருக்கு. எடுத்துக்காட்டு தான் மண்டல். ஒரு அரசியல் கட்சி இரண்டாப் பிளக்கிறதுல கூட பார்ப்பனீயத்துடைய செல்வாக்கு இருக்கு. அரசியல், பொருளாதாரம், கலாச்சாரம் எல்லாத்துலயும் இந்தப் பார்ப்பனீயம் இருந்து செயல்பட்டு வந்ததால்தான் ஏகாதிபத்தியமும் பெரிய எதிர்ப்பு இல்லாம பார்ப்பனீய ஏஜண்டு மூலமா இந்த நாட்டுக்குள்ள நுழைய முடியுது. சிறு பத்திரிகைகள் இந்த அம்சத்திற்கு அழுத்தம் கொடுத்துப் பேசணும். இல்லாவிட்டால் மறுபடியும் இலக்கியம், கலாச்சாரம் எல்லாத்துக்குள்ளயும் பார்ப்பனீயம் புகுந்துடும் பார்ப்பனீய எழுத்தாளர்களுடைய எழுத்துக்களை எல்லாம் மறு வாசிப்பிற்குள்ளாக்கி கட்டுடைக்கும் போதுதான் பார்ப்பனீயச் செல்வாக்குங்கிறது நமது இலக்கிய உலகத்துல விமர்சன உலகத்துல எவ்வளவு பாததூரமான பாதிப்பை உண்டாக்கியிருக்குங்கிறதை உணர முடியும். இந்தியா டுடேயிலே வந்திருக்கிற திலீப்குமார் கதையைப் படிச்சீங்கன்னா இந்தி எதிர்ப்புப் போராட்டத்தைக் கொச்சைப் படுத்துகிற கதையை அந்த ஆளு எழுதியிருக்கிறார். நமக்கு எதிரான விசயம் எல்லாம் 'இந்தியா டுடே' மாதிரி பார்ப்பனீயப் பத்திரிகையில பிரமாதமா வருது. அந்த மாதிரி உச்சமான செயல்பாடுகள் நடந்துகிட்டு இருக்கும்போது இன்னைக்கி பார்ப்பனீயம்ங்கிற சொல்லாட்சியை இல்லாம பண்ணம்னா வரலாற்றுக்குப் பெரிய துரோகிகளா மாறுவோம் நாம. அம்பேத்கர், பெரியார் மாதிரி பெரிய சமூக ஞானிகளெல்லாம் உருவாக்கிக் கொடுத்திருக்கிற வார்த்தையைப் போயி நாம தூர வீசிப் போட்டு எதை வச்சு நாம எதிரிகளோட போராட முடியும்? நாம களத்துல இறங்கியிருக்கிறது போராட. விளையாட இல்ல. அதுக்கு சில சொற்கள் அவசியம் பார்ப்பனீயம் நாம விருப்பத்திற்கு உருவாக்கியிருக்கிற சொல்லா? கலையிலையும், இலக்கியத்



படிப்பகம்

www.padippakam.com

திலயும், அரசியலிலையும், அழகியல்லையும் அத்தனை விசயத்திலயும் நம்மேலே களங்கமா படிஞ்சிருக்கு, காலங்காலமா கறையா சுமத்தப்பட்டிருக்கு, அதைத் துடைத்தெறியாம நீங்க ஒரு தேசிய இனத்தைக் கட்டமைக்க முடியாது பெண்ணியத்தைப் பேச முடியாது. தலித் விடுதலைக்கு நிக்க முடியாது. தீட்டு, தீண்டாமைங்கிறதெல்லாம் ஆழமா வேரோடியிருக்கு. மிகப் பெரிய ரத்த சுத்திகரிப்பு நிலையமா நாம செயல்பட்டாக வேண்டியிருக்கு.

**குன்றம் :** மாற்றுக்கலாச்சாரம்ன்னு பேசும்போது இந்தித் திணிப்பைக் கேலி செய்றது இதை எல்லாம் ஏன் கொண்டுவந்து இணைக்கிறீங்க? ஒரு மொழியை வேணாம்னு சொல்றது இதெல்லாம் எதிர் கலாச்சாரத்தைக் கட்டுறதுன்னு நினைக்கிறீங்களா?

**பழனிசாமி :** மொழி இம்லாம எப்படி கலாச்சாரத்தைப் பாப்பீங்க? வன்முறையா இந்தியை நப்மீது திணிக்கும்போது நாம் தமிழைத் தூக்கிப் பிடிக்கிறது எதிர் நடவடிக்கையில்லையா?

**வசந்தகுமார் :** கலாச்சாரத்தை வெறும் பொருளாதாரமா குறுக்கிவிடக்கூடாதுன்னு மார்க்ஸ் சொன்னார் அதிலே எனக்கு மாறுபட்ட கருத்து கிடையாது. கலாச்சாரம் எல்லாத்தையும் விடப் பலம் வாய்ந்தது. ரசியாவில சரியாகவே சோசலிசப் பொருளாதாரம் கட்டமைக்கப்பட்டது ஆனால் கலாச்சார அம்சங்களுக்கு உரிய முக்கியத்துவம் கொடுக்கலைன்னு மார்க்ஸ் குறிப்பிட்டார் பொருளாதார மாற்றங்களே அங்கே சரியா நிறைவேற்றப்படலே. கலாச்சாரப் புரட்சியை நிறைவேற்றுறதுக்கு முன்னாடியே அங்கே திரிபுவாதம் வந்துடுச்சு கலாச்சாரப் புரட்சியை நடத்தாம அரசியலலேயோ பொருளாதாரத்திலோ மாற்றங்களைச் செய்ய முடியாது. எல்லாத்தையும் இணைச்சுத்தான் பார்க்கணும்னு நான் கருதறேன் அப்புறம் குடும்பங்கிறது ஒரு லட்சிய நிலையில அழிஞ்சு போகும் இடையில்வந்த நிறுவனம் தான் அது. தனிச் சொத்து இல்லாத நிலையில் குடும்பம் போயிடும்னுதான் (கார்ல்) மார்க்சும் சொல்றாரு. ஆனா இன்னைக்கி குடும்பத்தை உடைக்க முடியுமான்னா முடியாது. விரும்புனாக்கூட முடியாது குடும்பம் என்கிறது புனிதமானது அல்ல. அது உடையக் கூடியதுதான். அதிகார நிறுவனம் அதுன்னு உணர்வு பூர்வமா போராட்டம் நடத்த வேண்டியதுதான் ஆனா இன்னைக்கே உடைச்சுறணும்னு நினைச்சா சாத்தியமில்லை. ஆபாசம்கிறது சனாதனப் பார்வைன்னு பழனிசாமி சொன்னாரு. பெண்களை வியாபாரப் பொருளாக்கிறதை எதிர்ப்பது எப்படி சனாதனமாகும்?

**குறிஞ்சி :** நிறப்பிரிகை கருத்துக்களில் கோட்பாட்டு ரீதியா வித்தியாசம் இல்லைன்னாலும் ஒரு கருத்தைப் பேசியாகணும். மாற்றுக் கலாச்சாரம் பேசக்கூடிய நண்பர்கள் தலித் பண்பாடு என்கிற கருத்தை சற்று உயர்வாகப் பேசுறாங்க. இதனுடைய அடிநாதமா தமிழ்ப்பண்பாட்டை மறுப்பது என்பது போன்ற ஒரு தொனி- தொனிதான் உண்டாகுது. தலித் பண்பாடு போதும். மரபுலேருந்து ஒண்ணும் எடுத்துக்க வேண்டியதில்லைங்கிற தொனி தமிழ்நாடு என்பது இந்தியத் துணைக்கண்டத்துக்குள்ள இருக்கிற ஒரு நாடாகத்தான் நாம பார்க்கிறோம். இந்திய அரசுங்கிறது பார்ப்பனீயத்தை உயர்த்திப் பிடிக்கிற ஒரு அரசாகத்தான் நாம் பார்க்கிறோம். தேசிய இனப் பண்பாடு என்கிறபோது பார்ப்பனீயத்தை எதிர்த்துத்தான் ஆகணும் அதே சமயத்துலே அது தலித் பண்பாட்டுக்கு எதிரானதும் இல்லை. தலித் பற்றிய வரையறையை நாம யோசிக்கணும். தாழ்த்தப்பட்ட சக்கிலியர், பறையர், பள்ளர்ங்கிறது மட்டும் சரியா? தலித் அரசியலெ அப்படித்தான் பேசப்பட்டிருக்கு. ஆனால் தலித் சிறுத்தைகள் அறிக்கையில சகல ஒடுக்கப்பட்ட பிரிவினரையும் தலித்னு சொல்லணும்னு இருக்கு எனவே தலித், தமிழ்னு பிரிக்க முடியாது இதுல ரொப்ப கவனமா இருக்கணும்.

**அ மார்க்ஸ் :** தலித் அரசியல் அறிக்கையில் குறைந்தபட்சமாய் தீண்டாமைக்குள்ளாக்கப் படுகிறவர்களை தலித்னு சொல்லணும்னு சொல்லியிருக்குன்னு நினைக்கிறேன். அந்த அளவுகோல் கூட இல்லாம நாம எல்லாருமே தலித்கள்தான்னு சொல்லி அந்த Space-ஐயும் பற்றிக்கொள்வது சரியா? விடுதலைச் சிறுத்தைகள் அறிக்கை பற்றிச் சொன்னீங்க. சரியா என்ன சொல்லப்பட்டிருக்கிறதுன்னு தெரியலை தலித் தலைமைங்கிறதைப்பற்றி அந்த அறித்கை என்ன சொல்லியிருக்கு? எந்தச் சாதியா இருந்தாலும் ஒடுக்கப்பட்டவங்களா இருந்தா தலித்ங்கிற அடிப்



படிப்பகம்

www.padippakam.com

படையில தலைமைக்குத் தகுதின்னு சொல்றாங்களா?

**குறிஞ்சி :** இல்லை. என்ன மாதிரி சொல்லாடல் இங்க நடக்குதுன்னு சொல்ல வர்றேன். எதுக்காகன்னா ரொம்ப நயமா ரெண்டையும் பிரிக்கக் கூடிய ஒரு செயல்பாடு இங்கே நடந்துகிட்டு இருக்கு. ரெண்டோட ஒற்றுமையையும் சிதைக்கணும்னு. இந்தியக்கலாச்சாரம்னுசொல்லக் கூடாது. மார்க்ஸ் பேசும்போது நான் ரொம்பக் கூர்மையா கவனிச்சிக்கிட்டு இருந்தேன். இந்தியக் கலாச்சாரம்னே சொல்றாரு. தமிழ்க் கலாச்சாரம்னு வரவே மாட்டேங்குது. அதை அவர் விளக்கணும். சீனக் கலாச்சாரப்புரட்சி, நிறுவனங்களை எதிர்க்கிற போராட்டமாகவும் விழுமியங்களைக் கேள்விக்குள்ளாக்கிறதாகவும் இருந்துச்சு. கன்பூசியஸ் கேள்விக்குள்ளாக்கப்பட்டார். பன்மையை அதிகமா மார்க்ஸ் வலியுறுத்திகிட்டு இருந்தாரு. அதுவும் அங்கே ஏற்கெனவே வந்தாச்சு. ஆயிரம் பூக்கள் மலரட்டும்கிறது உலக அளவிலான ஒடுக்கப்பட்ட மக்களுக்கு சனநாயகம் வழங்கக்கூடிய ஒரு மகத்தான பொன்மொழி மார்க்ஸ் தொகுத்துத் தந்த சாராம்சமெல்லாம் கலாச்சாரப் புரட்சியில் இருக்கு. ஆனா அதோட நிறுத்த முடியாது. அதைத் தொடர்ந்து கொண்டு செல்லணும். முக்கியமா இது சாதியச் சமுதாயம். பார்ப்பனீயத்துடைய செயல்பாட்டை நாம எந்தக் காரணத்தைக் கொண்டும் மறுக்க முடியாது, ஞானி போதாமைன்னு குறிப்பிட்டாலும்கூட நிச்சயமா இங்கே பார்ப்பனீயத்தைச் சுட்டாம நாம இருக்க முடியாது. சுட்டாமல் எதிரியை அடையாளப் படுத்துவது சாத்தியமில்லைங்கிறதை நான் சொல்ல விரும்புறேன் எதிர் மரபைத் தொகுக்கணும். திருக்குறள், சித்தர், பௌத்த இலக்கியங்கள் இதை எல்லாம் தமிழ்ப் பண்பாடா தலித் உள்ளடக்கத்தோடு கட்டியமைக்க முடியும்னு நினைக்கிறேன் பெரியார் திருக்குறளை ரொம்ப உயர்த்திப் பிடிச்சாரு தமிழர்களுக்கான மெய்யியலைக் கட்டும்போது இதை ல்லாம் பார்க்க வேண்டும் அந்த வகையில் ஒரு சிறு முயற்சியாகத்தான் மார்க்ஸ் உடைய கட்டுரை—தமிழ் இலக்கியத்தில் சாதி எதிர்ப்புக்குரல் –நிறப்பிரிகையில வந்ததைப் பார்க்கிறேன். பழமொழியிலயும் இது மாதிரி நிறைய சாதி வேறுபாடு இருக்கு 'இருளனுக்கு ராசா வழி வருமா?' 'பள்ளியையும் பனங்காயையும் பதம் பார்த்து அடிக்கணும்', 'அம்பட்டன் பல்லக்கு ஏறினாப் போல' இதையெல்லாம்தொகுத்து அம்பலப் படுத்தணும். பழைய இலக்கியங்களைக் கூட நிபந்தனை இல்லாம ஏற்றுக் கொள்ள வேண்டியதில்லை. சகலமட்டத்திலயும் அம்பலப்படுத்தணும்கிறதே மாற்றுக் கலாச்சாரப் பணி என நான் கருதுகிறேன்.

**விஜி :** நிலவுகிற எல்லாக் கலாச்சாரங்களும் ஆணாதிக்கக் கலாச்சாரங்கள்தான். மாற்றுக் கலாச்சாரங்கிறது பெண்ணிய விடுதலையின் கூறாக மட்டுமே இருக்க முடியும். மாற்றுக் கலாச்சாரத்தைத் தீர்மானிக்கிறதுக்கு ஒரே அளவுகோல் அது தான். மையம் × விளிம்பு அப்படீங்கற முரணைப் பத்தி மார்க்ஸ் சொன்னாரு பெண்களைப் பொறுத்த மட்டில ஆணைச் சார்ந்தவள் × ஆணைச்சாராதவள் அதாவது சுதந்திரமா உள்ளவள்ன்னு இந்த முரண் வெளிப்படுது. இந்த ஆணாதிக்க உலகில் குடும்பத்துக்குள்ள இருக்கிறபெண் அதாவது மையத்திற்குள் வந்தவள் குடும்பப் பெண் மற்றவர்கள் எல்லாம் தாசிகள்தான். குடும்பத்தை விட்டு தற்காலிகமா கடைக்குப் போக தெருவில இறங்கும்போதோ இல்லை ஆபீசுக்குப் போகும்போதே அவள் தாசியாத்தான் கருதப்படுறா. பஸ்சுக்குள்ள எல்லாப் பெண்களும் தாசிகளாகத்தான் கருதப்படுறாங்க. அவளை யார் வேண்டுமானாலும் இடிக்கலாம். கிள்ளலாம். வெளியில இப்படீன்னா குடும்பத்துக்குள்ளே கேக்க வேண்டியதில்லை. எந்தப் பெண்ணும் குடும்பத்துக்குள்ள சந்தோஷமா இல்லே. குடும்பங்கிறது பெண்கள் மீதுதான் பெரிய அடக்குமுறை நிறுவனமா நின்னுக்கிட்டிருக்கு. அப்புறம் குழந்தைகள் மீது. வேறெந்த நாட்டைக் காட்டிலும் இங்கே பெண்கள் அதிகமா இழிவா கருதப்படுறதுக்கு பார்ப்பனீயம் பெரிய காரணமா இருக்கு. ஆணாதிக்கத்தோட இங்க பார்ப்பனீயமும் சேந்துக்குது. தீட்டு, தூய்மைங்கிற கருத்தாக்கத்தால அதிகமா துன்புறுகிறவங்க இங்கே நாங்களும் தீண்டத்தகாதவர்களும்தான். அந்த வகையில தீண்டாமைக்கும் பெண்ணடிமைத்தனத்துக்கும் ஒரு ஒற்றுமை இருக்கு இதுக்குப் பின்புலமா இருக்கிறது பார்ப்பனீயம்தான். இதைச் சொல்லத் தேவையில்லைன்னு ஞானி எப்படிச் சொல்றாருன்னு எனக்குப் புரியவே இல்லை.

**துரையரசன் :** கோட்பாட்டு ரீதியில் நிறப்பிரிகையோடு உடன்படுகிறேன். பொருளியல் மாறுபாடு இருந்தால் கலாச்சார விடு



படிப்பகம்

www.padippakam.com

தலை சாத்தியம் என்றுதான் நம்பப்பட்டது. ஆனா நடைமுறை அப்படியாக இல்லை' எதிரியை அடையாளப்படுத்தித் தாக்கணும். அதுக்குப் பார்ப்பனீயம்கிற கருத்தாக்கம் மிகவும் அவசியம். அதை விட முடியாது.

ஞானி : ரசியாவில பொருளாதாரம் சோசலிசத்தை நோக்கி நகர்ந்ததுங்கிறதுக்கு ஆதாரமில்லை. மாற்றுச் சிந்தனைகள் பொருளாதாரத்திலேயோ வேறு எதிலையுமோ அங்கே சாத்தியமா இல்லை. (அங்கே முதலாளிய பாணியில் தொழில்கள், ராணுவம் முதலியவை வளர்க்கப்பட்டது. இயற்கை அழிக்கப்பட்டது போன்ற விவரங்களை ஞானி விரிவாய்ச் சொன்னார்). அந்தச் சூழலில்தான் லெனின் 'புராலிட் கல்ட்' பத்தி எல்லாம் பேசறார். ரொம்ப ஆரோக்கியமாப் பேசுறார். பழைய மரபுகளிலேருந்து துண்டிச்சுக்க முடியாதுங்கிறார். அப்படி துண்டிச்சுக்கிறது எங்கேயுமே சாத்தியமில்லை. அது ரொம்ப ரொம்பக் கற்பனையானது. அந்த விஷயம் நமக்கு முன்னுதாரணமாயிருக்கு. பழைய மரபுகளை முற்றா நாம ஒதுக்கிட முடியாது. சக்தியுள்ள விசயங்களை எடுத்துக்கணும். நான் மார்க்சியத்தை நம்புறேன் இதுல பெரியாரியத்தை, அம்பேத்கரியத்தை, பெண்ணீயத்தை எல்லாம் உள்வாங்கிற முடியும். சுரண்டலை நாம எதிர்க்கிறோம்னா அதை யார் செஞ்சாலும் பாப்பான் செஞ்சாலும் வேற யார் செஞ்சாலும் எதிர்க்கணும். அதே மாதிரி ஆணாதிக்கம்னு சொன்னா அதை முற்றிலும் பார்ப்பனீயம்னு சமப்படுத்த முடியாது. அது உலகம் பூரா இருக்கும். தொழில்முறை, அரசாதிக்கம் இதோட சம்பந்தப்பட்டது அது. இப்படி விசயங்களைப் பரவலாக்கிப் பேசணுமேயொழிய அதை இரண்டொரு விசயத்தில சுருக்கி அதைக் கோட்பாடுன்னு சொன்னா அது உண்மையில்லை (ஏகாதிபத்தியம், முதலாளியம், அரசதிகாரம் என முன்பு சொன்ன விசயங்களை மீண்டும் ஞானி விரிவாய்ப் பேசுகிறார்). லோகாயதம் அறிவு எல்கிற எல்லைகளுள் மட்டும் செயல்படலை. வாழ்வியலிலும் அது பெரிய அளவில் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கு. அதையெல்லாம் நாம தொகுத்து எடுத்துக்கணும் ஆரிய நாகரிகத்திற்கு எதிரான கூறுகளை நாம் பார்க்க வேண்டும். அப்புறம் இந்த ஆசிய உற்பத்தி முறையை நாம கவனமாக ஆய்வு செய்யணும். கருத்தில் கொள்ளணும். ஆசிய உற்பத்தி முறையில சாதி சரியாப் பொருந்தியுள்ளது. இந்தப் பொருத்தத்தில நாம கவனம் செலுத்தணும். அதை விட்டுவிட்டு சாதியத்தைப் பார்ப்பனீயம்தான் உருவாக்கியதுன்னு சொன்னா அது உண்மையில்லை. சாதியம் பார்ப்பனீயம் இரண்டும் சமம் என்பது எப்படி என்று எனக்குப் புரியவில்லை. பார்ப்பனீயக்கையும் சிறு பத்திரிகைகளையும் மார்க்ஸ் இணைத்துப் பேசுறதையும் விளக்கியாகணும். பார்ப்பனியம் முக்கியமான கருத்தியல்தான். இன்று இந்துத்துவ சக்திகள் அத்தனை பேரும் கைகோர்த்துக் கொண்டு செயல்படுகின்றன. இதற்குத்தான் பார்ப்பனீயம் என்றால் எனக்கு அந்தப் பெயரைப் பயன்படுத்துவதில் கருத்து மாறுபாடு இல்லை.

பழனிசாமி : மாற்றுக் கலாச்சாரங்கிறது தோழர் ஜி அவர்கள் சரியாய்ச் சொன்ன மாதிரி பெண்ணியவாதத்தின் தொடர்ச்சிதான். ஆனா அந்த மாதிரிக் கருத்துக்கள் இன்று விரிவாய் விவாதிக்கப்பட வில்லை. குடும்பம் தானா உடையும்னு நான் நம்பலை. அதுக்கான தத்துவார்த்த ரீதியான போராட்டத்தை நாம தொடர்ந்து முன்னெடுக்கணும் தலித்கள்ல ஒடுக்கப்பட்ட மக்கள் எல்லாரையும் சேர்த்துக் கொள்ளலாம்கிறது ஓரளவு சரிதான். என்றாலும் இப்ப இருக்கிற நடைமுறையில அது சாத்தியமில்லை. இந்தியக் கலாச்சாரம்னு மார்க்ஸ் பேசியதா குறிஞ்சி சொன்னாரு. நிச்சயமா அதை எதிர்மறையாத்தான் அவர் சொல்லியிருப்பார் என நான் நம்புறேன். கற்பு பத்தியும் யாரோ பேசினாங்க. அதைப் பத்தி பெரியார்தான் சரியாய்ப் பார்த்திருக்கார். ''இருபாலர்க்கும் பொதுவில் வைப்போம்''ங்கிற பாரதியார் கருத்துல எனக்கு நம்பிக்கையில்லை. பார்ப்பனீயம்ங்கிற பிரயோகம் தேவையில்லைங்கிற ஞானியின் கருத்தை நான் முற்றா மறுக்கிறேன்.

**ஆறுமுகம் :** சிறு பத்திரிகைகளில் கட்டுடைக்கிறமாதிரி நல்ல கதை எல்லாம் வந்திருக்கு. நடராசன்கிறவர் கதையை சொல்லலாம். நிசழ்லகூட அவர் கதை வந்திருக்கு. தேவிபாரதி இந்த அம்சத்தில முக்கியமா நிக்கிறார். திலீப்குமாரைப் பத்தி காலையில குறிப்பிட்டாங்க. ஆனா அவரோட ''மூங்கில் குருத்து''ங்கிறது தமிழ்ல குறிப்பிடத்தக்க ஒரு தொகுப்பு அதுல 'தீர்ப்பு'ன்னு ஒரு கதை போலீஸ் அதிகாரி எப்படி சித்திரவதை செய்யுறான்னு. முழுசாவே பார்ப்பன எழுத்தாளர்கள்னு நாம ஒதுக்கிட்டா அப்புறம் தமிழ்ல நாம எங்க நிக்க முடியும்? பார்ப்பனீயத்தை ஆதரிக்கிற சிற்றிதழ்கள்ல



படிப்பகம்

www.padippakam.com

தான் பெண்ணியம், தமிழ் விடுதலை எல்லாத்தையும் அதுக்குள்ளதான் கண்டுபிடிச்சாகணும். தயவு கூர்ந்து சிறு பத்திரிகைகள் எல்லாம் இணைஞ்சு இலக்கு போன்ற இயக்கமா கட்டமைச்சு இளைஞர்களை ஆயிரம் பத்தாயிரம்னு திரட்டணும்னு நான் கேட்டுக்கிறேன்.

**அக்னி :** 'காலம்'கிற சிறு பத்திரிகையில எழுதுன திலீப்குமார் வேற. 'இந்தியா டுடே' யில எழுதின பார்ப்பன திலீப்குமார் வேற. ஒருத்தருக் ,ள்ளேயே இருக்கிற இந்த இரண்டு உருவங்களையும் நாம வேறுபடுத்திப் பார்க்கணும். வாழ்க்கையில ஏற்படுகிற வளர்ச்சியோட ஒருத்தன் பார்ப்பனீயத்துடனும் இந்துத்துவத்துடனும் இணைஞ்சுநிக்கத் தொடங்குறதை நாம கவனிக்கணும்.

**தன்மானன் :** பார்ப்பனீயத்தை நாம புறக்கணிக்க முடியாது. அதே சமயத்துல மற்ற சாதி ஆதிக்கங்களையும் நாம பரர்க்காம இருக்கக்கூடாது. இதை ஏன் நாம கற்றுக் கொள்வதில்லை?

## முடிவுரை

**அ. மார்க்ஸ் :** கலாச்சாரம், மாற்றுக் கலாச்சாரம் முதலிய விசயங்கள் ரொம்ப விரிவானவை. ஆழமானவை ஒரு சில முக்கிய புள்ளிகளைத் தொகுத்து கவனத்தை ஈர்த்திருந்தோம். அவற்றையும் நாம் இன்று முழுமையாக விவாதிக்க முடியவில்லை. மாற்று வாழ்க்கை முறைகள் சாத்தியக்கூறுகள் இதைப் பற்றி எல்லாம் நாம் பேசவேயில்லை. மாறாக பார்ப்பனீயம் குடும்பம், சிறு பத்திரிகைகள், சோசலிசக் கட்டுமானம், ஏகாதிபத்தியம் என்பதாகச் சில புள்ளிகளிலேயே நமது விவாதம் சுற்றிச் சுற்றித் தேங்கிவிட்டது. எனவே மீண்டும் ஒருமுறை இது குறித்து நாம் பேசித் தொகுத்துக் கொள்வதே சரியாக இருக்கும் என்ற போதிலும் இங்கே எழுபபப்பட்ட சில கேள்விகளுக்கு எங்களின் கருத்தை முன் வைப்பது அவசியமாகிறது பார்ப்பனீயம் என்கிற கருத்தாக்கத்தை மையமாகக் கொண்டு நமது விவாதம் சுழன்றது தவிர்க்க இயலாததுதான். நமது சாதீயச் சூழலில் பார்ப்பனீயத்தை எப்படித் தவிர்த்துப் பேச முடியும்? சாதிக்குட பார்ப்பனீயமா காரணம் என ஞானி கேட்டார். சாதியின் தோறறம் குறித்து ஒருமித்த முடிவு எதுவும் இந்தியவியல் ஆய்வாளர்களிடையே கிடையாது, எல்லாமே ஊகங்கள்தான். ஆரியர்கள் வருணப் பிரிவு இவைதான் சாதியின் மூலம் எனச் சொல்பவர்கள் உண்டு, திராவிடர்களே சாதிப் பிரிவினருக்குக் காரணம் எனச் சொல்பவர்களும் உண்டு டாக்டர் அம்பேத்கர் அவர்கள் கூட சாதியின் தோற்றத்திற்கு ஆரியர்கள் காரணம் எனச் சொல்வதை ஏற்றுக் கொள்வதில்லை இருந்தாலும் பார்ப்பனீயம் என்கிற கருத்தை முன் வைத்து கடுமையாக அதனை விமர்சனத்திற்குள்ளாக்கியவர்களில் புத்தர், பெரியார் போலவே அம்பேத்கரும் முதன்மையாக நிற்கிறார். இதனை எதற்குக் குறிப்பிடுகிறேன் என்றால் சாதியின் தோற்றத்திற்கு இம் மண்ணுக்குரியவர்கள்தான் காரணம் என நம்புபவர்களும்கூட சாதியின் இறுக்கத்திற்கும் அதனை தீட்டு / அகமணமுறை / பிறப்பு அடிப்படை என்கிற அம்சங்களின் மீது கோட்பாடாக உருவாக்கியதற்கும் பார்ப்பனீயமே காரணம் என்பதை வலியுறுத்தியுள்ளார்கள் என்பதைச் சுட்டிக்காட்டத்தான் அம்பேத்கரின் பார்ப்பனீயத்தின் வெற்றி' என்னும் மதவழி வரலாற்று நூல் குறிப்பிடத்தக்க ஒன்று எப்படி கி பி. 150இல் சுங்க வமிச ஆட்சியில் பார்ப்பனீயம் வலுப்பெற்றது என்பதை அம்பேத்கர் ஆணித்தரமாக நிறுவுகிறார். தொடர்ந்து குப்தர் காலத்தில் தர்ம சாஸ்திரங்கள் என்கிற வடிவில் சாதீடத்தைப் பார்ப்பனீயம் கட்டமைத்ததை எவ்வளவோ பேர் விளக்கியுள்ளனர். சாதீய உற்பத்தி முறைககுரிய தன்னிலைகளைக் கட்டமைப்பதாக பார்ப்பனீயச் செயல்பாடு விளங்கியது, விளங்குகிறது. சிறு பத்திரிகைகளைப் பார்ப்பனீயத்துடன் இணைத்துப் பார்ப்பது பற்றியும் எழுத்தாளர்களை எல்லாம் அப்படிப் பார்க்க முடியுமா என்பது பறறியும் இங்கே கருத்துக்கள் முன் வைக்கப்பட்டன இங்கே நவீனத்துவம் (Modernity) எவ்வாறு இந்துத்துவ உயிர்ப்பாக அதாவது பார்ப்பனீய உயிர்ப்பாக விளங்கியது என்பதை முன்னுரையிலேயே விவாததிற்கு முன் வைத்தேன் இலக்கியததில் நவீனத்துவத்தை முன்மொழிநத சிறு பத்திரிகைகளுக்கும் இந்நிலைதான் ஏறபட்டது 'தமிழ் நவீனமான கதை' என இது குறிதது ஒரு கட்டுரை வர இருக்கும் நிறப்பிரிகை இலக்கிய இணைப்பில் உள்ளது. நவீனத்துவத்தை முன்மொழிநத தமிழ் எழுத்தாளாகளில் 95 சதத்துக்கும் மேலானோர் பார்ப்பன — வேளாள சாதிகளைச் சேர்ந்தவர்களாகவே உள்ளனர் என்பதற்காக மட்டும் நாம் இதைச் சொல்ல வில்லை Author is Dead என்று சொன்ன பிறகு இப்படிப் பார்ப்பது அர்த்தமில்லை தான். இருந்தாலும் இவர்கள் உருவாக்கிய



படிப்பகம்

www.padippakam.com

பிரதிகளைக் கட்டுடைத்துப் பார்க்கும் போது இந்த உண்மை வெளிப்பட்டுவிடுகிறது. புதுமைப்பித்தன் மற்றும் திலீப்குமார் பற்றி அக்னி சொன்னார். சுந்தர ராமசாமி பற்றி ஞானி சொன்னார். பெரும்பாலான பிரதிகளை இப்படிக் கட்டுடைத்துப் போட்டு விடலாம். நாவல் மற்றும் சிறுகதை வரலாறுகளை எழுதிய சிட்டியும் சிவபாதசுந்தரமும் நவீன தமிழ் இலக்கியம் தோன்றிய முதற் காலகட்டத்தைப் 'பண்பாட்டுக் கவலை'' என்று குறிப்பிடுவார்கள். அதாவது காலனியம் கொண்டுவந்த நவீன அறிவியல் தொழில் நுட்ப மாற்றங்களின் விளைவாக இந்தியச் சமுதாயத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் நமது (இந்துப்) பண்பாட்டை அழித்துவிடுமோ என்ற கவலையோடு எழுந்த முயற்சிகள் என்பது இதன் பொருள். மணிக்கொடி தொடங்கி நமது சிறு பத்திரிகைகள் தொடர்ந்து இதே திசையில்தான் சென்றன. ''சுயமரியாதைக் காலிகள்'' என பெரியாரது இயக்கத்தைச் சேர்ந்தவர்களை மணிக்கொடி திட்டித் தீர்த்ததை நாம் மறந்துவிட முடியாது. தலித்தியம், பெண்ணியக் குரல்களெல்லாம் சிறு பத்திரிகைகளில்தானே வருகின்றது என நண்பர்கள் கேட்டனர். எண்பதின் பிற்பகுதி மற்றும் தொண்ணூறுகளில் ஏற்பட்ட மாற்றத்தின் விளைவாகவே இதை நான் கருதுகிறேன். உலகெங்கிலும் பாசிசம் புத்துயிர்ப்பு கொண்டிருக்கும் காலம் இது. இன்றைய சனநாயக எதிர் நடவடிக்கைகள் என்பன உலகெங்கிலும் பாசிச எதிர்ப்பாகவே அமைகின்றன இந்தியத் துணைக் கண்டத்தில் பாசிசத்தின் வடிவம் இந்துத்துவம். இது அரசியல் களத்தில் இசுலாமிய எதிர்ப்பு (மதத்தூய்மை), மண்டல் எதிர்ப்பு (தரம்) என்பதாகவும் பண்பாட்டுத் தளத்தில் மரபு, வரலாறு, பழைமை போற்றுதல் என்பதாகவும் பெண்ணிய தலித்திய எதிர்ப்புகளாகவும் அறவியலில் ஒழுக்கவாதமாகவும் வெளிப்படுகிறது. பாசிச எதிர்ப்பு என்பது இவைகளுக்கு எதிராக நிற்கின்றது. இந்த வகையில் இன்று தமிழ்ச் சிறு பததிரிகைகளிடையே வேறெப்போதையும் விட ஒரு Polarisation ஏற்பட்டுள்ளது. இந்த இரண்டில் ஏதோ ஒரு நிலைதான் நாம் எடுத்தாக வேண்டியிருக்கிறது.

**அக்னி :** இரண்டுக்குமிடையில் நடுநிலை ஒன்று இருக்க முடியாது.

**அ. மார்க்ஸ் :** நமது இணைந்த செயற்பாடுகள் என்பதற்குக் குறைந்தபட்சமான சில அடிப்படைகள் தேவை. திலீப்குமார் கதை பற்றி அக்னி குறிப்பிட்டார் ஒரு ஆசிரியருடைய நகைச் சுவையுடன் கூடிய Narration இல் வெளிப்படும் அந்தக் கதையை அக்னி வாசித்தது போல வாசிப்பதற்கு இடம் உண்டு என்றுதான் நான் கருதுகிறேன். திலீப்பின் 'தீர்ப்பு' கதை நன்றாக இருந்தது என்பதற்காக இந்தப் பிரதிக்கு நாம் எந்தச் சலுகையையும் அளித்துவிட முடியாது. இந்தப் பிரதி இப்படி இருந்தது என்பதற்காக நாம் 'தீர்ப்பு' கதையைக் குறைத்துச் சொல்வது தவறு என்பது வேண்டுமானால் சரியானதாக இருக்கலாம். இத்தகைய அம்சங்களைக் கட்டுடைத்தல் அவசியம். குறிஞ்சி சொன்னமாதிரி அம்பலப்படுத்துதல் என்பது மாற்றுக் கலாச்சாரத்தின் பணிகளில் ஒன்று. பழைய மரபுகளை எப்படிக் கையாள்வது என்பது பற்றி நாம் சமீப காலமாக விரிவாய்ப் பேசி வருகிறோம் பழைய மரபாக இங்கே கட்டமைக்கப்பட்டுள்ளது, நமக்குக் கையளிக்கப்பட்டிருப்பது, நமது பொதுப் புத்தியில் பதிக்கப்பட்டிருப்பது எது என்கிற கேள்வியை நான் மீண்டும் உங்கள் முன் வைக்கின்றேன். பார்ப்பன மரபுதான் அது புத்தரும் அம்பேத்கரும் பெரியாரும் எதிர்த்த மரபு அது. இந்து மதம் என்றால் ஏன் பார்ப்பன மதம் என்று கொள்கிறீர்கள். சிறு தெய்வ வழிபாடுகள் எல்லாம் இல்லையா?'' —என்பதெல்லாம் அர்த்தமற்ற கேள்விகள். இந்து மதம் என்றால் பார்ப்பன மதம்தான். சிறு தெய்வ வழிபாடுகள் இந்து மதம் இல்லை. சங்கராச்சாரி இந்தக் கோயில் குடமுழுக்குக்கு—அப்படி ஒன்று நடந்தால்—வர மாட்டார். தமிழ்க் கலாச்சாரம் என நான் சொல்லவில்லை எனக் குறிஞ்சி குறிப்பிட்டார். நான் மிக்க பணிவோடு கேட்கிறேன். தமிழர் பண்பாடாக இங்கே கடந்த நூற்றாண்டில் கட்டமைக்கப்பட்டு முன்வைக்கப்பட்டிருக்கும் பண்பாட்டிற்கும் இந்தியப் பண்பாட்டிற்கும் ஆறு வித்தியாசங்களை நீங்கள் சொல்லமுடியுமா? இன்று தமிழ்த் தேசியம் பேசிக் கொண்டிருப்பவர்களெல்லாம் தமிழ்ப் பண்பாடு எனச் சொல்வது நீங்கள் எதைஎதையோ சொல்கிறீர்களே பார்ப்பனீயம் தவிர்த்த/பிற்படுத்தப்பட்ட மக்களின் பண்பாடு என்று அதை அல்ல குறிஞ்சி. அவர்கள் பெரிய கோவிலையும் இராசராச சோழனையும்தான் சொல்கிறார்கள். நீங்கள் அவர்களிடம் போய் என்றாவது மோதி இருக்கிறீர்களா? இல்லையே. ஆனால் இதனை இன்றும் தீவிரமாகப் பேசுகிற எங்களிடம் வந்து இதை மறுபடியும் சொல்வதும் எங்கள் உள் நோக்



படிப்பகம்

www.padippakam.com

கங்களைச் சந்தேகிப்பதும் என்ன நியாயம்? தலித் பண்பாடு பற்றி ஏன் உங்களுக்கு இத்தனை அவசரம்? குறைந்த பட்ச சகிப்புத் தன்மை கூடக் காட்டக்கூடாதா? தாழ்த்தப்பட்டவர்களும் பிற்படுத்தப்பட்டவர்களும் சிறுபான்மையும் இணைவது எனத் தமிழக ஒற்றுமையை நாங்கள் தானே முன் மொழிகிறோம். கடைசியாக இந்தச் சோசலிசக் கட்டுமானம் பற்றி. தமிழ்ச் சூழலில் ஆயாசம் ஏற்படுத்துகிற விசயம் நமது அறிவுஜீவிகளிகன் விவாத முறைதான். சோசலிசக் கட்டுமானம் பற்றி மிக விரிவாக நாங்கள் பேசி வந்துள்ளோம். எனது கட்டுரைத்தொகுப்புகள் சில இந்த உள்ளடக்கங்களில் வந்துள்ளன. நிறப்பிரிகை கூட்டு விவாதம் ஒன்றும் நடத்தியுள்ளது. ஞானி கூட கலந்துள்ளார். பொருளாதார மாற்றங்கள் சரி, கலாச்சார மாற்றங்கள் சரியில்லை என்று நாங்கள் எங்கே சொல்லியிருக்கிறோம்? பொருளாதாரம் கலாச்சாரம் என்று பிரித்து அணுகுவது எங்கள் Method அல்ல. இரண்டிலுமே ஒரே தவறுதான் நடந்தது. உள்ளடக்கம் மட்டும் மாற்றப்பட்டு முதலாளிய வடிவங்கள் அப்படியே காப்பாற்றப்பட்டன. இதுதான் பிரச்சினை என நாங்கள் கருதுகிறோம். இது தவறு என நீங்கள் வாதிடலாம் ஆனால் நாங்கள் சொல்லாத ஒன்றைச் சொல்லி தோள் தட்டுவது எதற்குப் பயன்? ரசியாவின் பொருளாதார மாற்றங்களை மாவோவே விமர்சித்தார் என மாவோவை எங்களுக்கு எதிராக நிறுத்த முயல்கிறார் ஞானி. அவ்வாறு விமர்சித்த சீனத்திலும் இன்று நிலைமைகள் ஏன் இப்படி என நான்காண்டு காலமாக நாங்கள் கேட்கிறோம். தயவு செய்து சொல்லுங்கள். 'நூறு பூக்கள் மலரட்டும்' என்பது அற்புதமான முழக்கம்தான். நாம் சொல்கிற பன்மைத் தன்மை, மாற்றுக் கருத்துக்களுக்கு இடம் என்பதன் அற்புதமான வெளிப்பாடுதான். ஆனால் சீனத்தில் அது நடைமுறைப்படுத்தப்பட்டதா? மாவோ வீர வழிபாடு அங்கே எப்படி வநதது? கலாச்சாரப் புரட்சி நாம் விமர்சனமின்றி ஏற்றுக் கொள்ள முடியுமா? கூடியவரை நாங்கள் எதையும் எளிமைப்படுத்திச் சொல்லிவிடுவதிலலை. சக்திமிக்க எதிர்ப்புக் கூறுகளை எடுக்க வேண்டாம் எனவும் முழுசாக எல்லாத்தையும் புறக்கணிக்கணும்னு நாங்கள் எங்கே சொன்னோம்? அப்படியானால் ஏன் ''எதிர் மரபைத் தேடி...'' என வேண்டிக் கொண்டிருக்கிறோம்? பொருளாதாரம் தேவையில்லை, ஏகாதிபத்தியம் பிரச்சினை இல்லை என்றெல்லாம் எங்கேசொல்லியிருக்கிறோம்? தூய்மை/தரம் என்பதெல்லாம் ஏதோ வெள்ளை வேட்டி கட்டுற, சிதறாமல் இங்க் ஊத்துற, மருத்துவக் கல்லூரி சேர்க்கை பற்றின விவகாரம் மட்டுமில்லை சகல தளங்களிலும் நாம அதை விரிவு செய்து பார்க்க வேண்டும். அறவியல், அழகியல் என... வெள்ளை வேட்டி கட்டுவது எத்தனையோ பேரை அழுக்காக வைத்துத்தான் நடைபெறுகிறது என்கிற மட்டில் இதை நிறுத்திக்கொண்டு அறவியல்/அழகியல் என வரும்போது இதைக் கணக்கில் எடுத்துக் கொள்ளவில்லை என்றால் எப்படிச் சரியாக இருக்க முடியும்? மார்க்சியத்திறகுள் அம்பேத்கரியம், பெண்ணியம், பெரியாரியம் எல்லாத்தையும் அடக்கி விடலாம் என்றார்ஞானி. நாங்கள் அப்படிச் சொல்லவில்லை அப்படிச் சொல்வதென்பது தலித்தியம், பெண்ணியம் ஆகியவற்றுக்குரிய இடங்களை மறுப்பதாகும். மார்க்சியத்தோடு தலித்தியம் பெண்ணியம் போன்றவற்றையும் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்பதே எங்கள் கருத்து கலாச்சார விசயங்களில் இது இன்னும் முக்கியம். லெனினும் மாவோவும் நமக்குப் போதாது பெரியாரும் பக்தினும், பூக்கோவும், தெரிதாவும் நமக்குத் தேவை. நாம் மீண்டும் இது பற்றி எல்லாம் விவாதிப்போம் கருத்துமாறுபாடுகள் இருந்தாலும் கூட பொறுப்போடு வந்து கருத்துக்களை முன் வைத்ததற்கு என் நன்றிகளைச் சொலலிக் கொள்கின்றேன். விவாத ஏற்பாடுகளைச் செய்து தந்த கோவை மற்றும் சூலூர் நண்பர்களுக்கும் எங்கள் நன்றிகள். மாற்றுக் கலாச்சாரச் செயற்பாடுகளைப் பேசினால் மட்டும் போதாது. அத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடுகிறவர்கள் தனிமையாய் உணராவண்ணாம் பக்கத் துணையான கூட்டுச் செயற்பாடுகள் தேவை என்கிற கருத்தை துரையரசன், குறிஞ்சி போன்றோர் முன் வைத்தனர். மிகவும் முக்கியமான விசயம் இது. மாற்றுக் கலாச்சாரச் செயற்பாடுகளில் உள்ளவர்களுக்கான மாற்று வாழ்இடம் பற்றி நண்பர் ராஜன் குறையின் கட்டுரை (நிறப்பிரிகை) யின் மீது உங்கள் கவனத்தை ஈர்க்கிறேன். அய்ரோப்பாவில் மாற்றுக் கலாச்சாரக் குழுக்கள் இவ்வாறு 'ஆட்டோநாம்' (சுயேச்சைகள்) என்கிற பெயரில் வாழ் இடங்களை உருவாக்கி அவற்றைத் தமது அரசியல்/கலாச்சார நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தி வருவது குறிப்பிடத்தக்கது. பழைய புறக்கணிக்கப்பட்ட அரசு கட்டிடங்களை சட்ட விரோதமாய்க் கைப்பற்றி இத்தகைய



படிப்பகம்

www.padippakam.com

வாழிடங்களை அவர்கள் உருவாக்கியுள்ளனர். கேரளாவில் இத்தகைய முயற்சிகள் பற்றி ராஜன்குறை எழுதியிருந்தார். நாமும் இத்தகைய முயற்சிகளில் ஈடுபடுவது அவசியம். இது தொடர்பான உங்கள் கருத்துக்களை நிறப்பிரிகையில் எழுதுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

**விவாதம் மாலை 7 மணிக்கு நிறைவுற்றது. பதிவு நாடாவில் விவாதங்கள் பதிவு செய்யப்பட்டன. நாடாவிலிருந்து இத் தொகுப்பு தயாரிக்கப்பட்டுள்ளது. சில இடங்கள் மட்டும் சுருக்கப்பட்டுள்ளன. சொன்னவரே அதே கருத்தைத் திரும்பிச் சொன்னபோதும், தலைப்பிற்கு ரொம்பவும் அப்பாற்பட்ட விசயங்கள் வரும்போதும் அவை தவிர்க்கப்பட்டுள்ளன. எனினும் சர்ச்சைக்குரிய இடங்கள் கவனமாக சொன்னவர்களின் சொற்களில் முழுமையாகத் தரப்பட்டுள்ளது. மாற்றுக் கருத்துக்கள், விடுபட்ட கருத்துக்கள் இருந்தால் எழுதுமாறு கேட்டுக்கொள்கிறோம்.**

**தொகுப்பு : நிறப்பிரிகை.**

□

---

*ரொனால்ட் இண்டெனின் 'இந்தியாவைக் கனவுறும் போது'*
(Basil Blackwell, Oxford, Imagining India) *1990, புத்தகத்திலிருந்து*

# சாதி ஒரு கருத்தாக
# Caste as Idea

*—ரொனால்ட் இண்டென்*

1828இல் வியன்னாவில் உலக வரலாற்றைப் பற்றிய தொடர் உரைகள் ஆற்றிக் கொண்டிருந்த ஃப்ரெட்ரிக் ஷ்லெகல் இந்திய தத்துவத்தைப்பற்றி பெருமையாக இப்படிச் சொன்னார்:'இத்தத்துவம், அனைத்து உலக விஷயங்களையும் விட்டு விலகி, தலையாய கடவுளுடன் இணைதல் குறித்த பல்வேறு உயர்ந்த சிந்தனைகளை கொண்டுள்ளது, மேலும். இந்த அபௌதிகத் துறையில் இந்துக்களுக்குத் தெரியாத மேலான கருத்தாக்கங்கள் எதுவுமே இல்லை'. பின்னர், மன நலத்திற்கான எச்சரிக்கையொன்றை அவர் விடுக்கிறார்: 'ஆனால், இப்படி அனைத்து எண்ணங்களையும், அனைத்து பிரக்ஞையையும் கடவுளில் கலந்து விடுவதும், மனத்தளவிலும், நிரந்தரமாகவும் கடவுளுடன் இணைவதுமான இந்த தனித்த, தொடர்ச்சியான உணர்வினை அவர்கள் ஒரு விளிம்பின் உச்சிக்குக் கொண்டு சென்று விட்டார்கள். இதனை ஒரு விதத்தில் ஒழுக்க வியல் மற்றும் அறிவு ரீதியான தற்கொலை என்றே சொல்லிவிடலாம். இத் தத்துவம், ஐரோப்பிய அறிவு மற்றும் விஞ்ஞான வரலாற்றில் வேறுவடிவில் (Mysticism) 'மாயாவாதம்' எனப் பெயர் பெறறது.

............

புராதன உலகின் நான்கு நாடுகளின் பண்புகளை ஷ்லெகல் விவரிக்கும்போது நிறுவனங்கள் மீதல்ல, அறிவுத்துறையின் மீதே கவனத்தை குவிக்கிறார். இரண்டிரண்டாக வகைப்படுத்தப்பட்ட நான்கு அறிவுத்துறைகளாவன: புரிந்து கொள்ளுதல் மற்றும் மனோபலம்; தர்க்கம் மற்றும கற்பனை. அந்த நான்கு புராதன நாடுகள் எகிப்து, ஹீப்ரு, சீனா மற்றும் இந்தியா. எகிப்தியர்களிடமும் ஹீப்ருக்களிடமும் முறையே புரிந்து கொள்ளலும், மனோபலமும் முனைப்பான துறைகளாகக் காணப்படுகின்றன. அதேபோல், சீனர்களிடமும், இந்தியர்களிடமும் அது முறையே தர்க்கம் மற்றும் கற்பனையாகக் காணப்படுகிறது. தர்க்கங்களின் நாடாகிய சீனா, அறிவியக்கச் சிந்தனையாளர்களால், கருணையுள்ள கொடுங்கோன்மை நாட்டிற்கொரு உதாரணமாக பார்க்கப்பட்டது. ஆனால், ஷ்லெகல்

நி—13



படிப்பகம்

www.padippakam.com

சீனாவில் தர்க்கமானது தன்னலமாக மாறிப் போனது எனக் கருதுகிறார். மாறாக, இந்தியா கற்பனைத்திறனுள்ள நாடாக இருக்கிறது இந்தியாவைப்பற்றி அவர் கூறுகையில், 'இந்தியர்களிடம் கற்பனையாற்றல் வெளிப்படையாகத் தெரிகிறது. இது அவர்களது விஞ்ஞானத்திலும், இந்தியத் தத்துவம் முழுமையிலும் காணப்படுகின்ற மாயாவாதத்திலும் காணக்கிடைக்கின்றது. படைப்பாற்றல் மிகுந்த, தைரியமான, சவித்துவ கற்பனை, எகிப்திய நினைவுச் சின்னங்களுக்கு ஈடான பிரும்மாண்டமான இந்தியக் கட்டிடங்களில் புலனாகிறது. தனது பல்வகையிற் சிறந்த புத்துருவாக்கத்தில் கிரேக்க கவிதைக்கு எந்த விதத்திலும் குறையாத அதன கவிதை; அதற்கு மேலாக அதன் புராணம், தன் முதன்மையான தோற்றத்திலும் எகிப்திய புராணத்தை ஒத்திருக்கிறது. அதன் செறிவான கவிதையிலும், கவர்ச்சிகரமான பிரதிநிதித்துவமாககலும் கிரேக்க நாகரிகத்துடன் பெருமளவு ஒத்திருக்கிறது,

## சாதி, ஒரு கருத்தாக (Caste as Idea)

ஷ்லெகலையும், மற்ற புனைவியலாளர்களையும் (Romantics) பொறுத்தவரையில், சாதீயம் பற்றிய அவர்களின் கருத்தாக்கத்திற்கு இந்தியாவின் இந்தக் கற்பனைத்திறனே மையமாகும் அவர்களைப் பொறுத்தவரையில் இந்தியா எப்பொழுதும் வெளிநாட்டவரின் ஆளுகைக்கு கீழ்ப்படும் நிலையிலேயே இருந்து வந்திருக்கிறது ஆனால், அதே நேரத்தில் புராதன உலகின் மாறாமல் நிலைத்திருக்கும் ஒரே நினைவுச் சின்னமாக இருக்கும் இந்தியா, வெளிக் கலாச்சாரத்தினால் வெற்றி கொள்ள முடியாதவாறு எதிர்ப்புத்தன்மை கொண்டதாக இருக்கிறது. இதற்கு இந்தியா அரசியல் ரீதியாக ஒற்றுமையில்லாதிருந்ததே காரணமாகும் சாதிதான் இத்தகைய கொடுங்கோன்மைக்கு காரணம் என்பார் மில் ஆனால், இந்தியா கொடுங்கோன்மையுடையதாக இல்லை என ஷ்லெகல் கருதுகிறார். இந்தியாவின் பரம்பரை ரீதியான வர்க்கப் பிரிவுகள், ஒவ்வொருவருக்குமான பரம்பரை உரிமைகள் இந்திய அரசியல் சாசனத்தின் பகுதிகளாக ஆகி மண்ணில் ஆழ வேர்விட்டு நிலைத்திருக்கின்றன. அசைக்க முடியாத ஆதிகால நம்பிக்கையின் அடிப்படையில் அமைந்துள்ள இந்தச் சாதீய உரிமைகள், இம்மக்களின் இரண்டாவது இயல்பாகி விட்டது. இவையனைத்தும் இணைந்து, எந்தவொரு வெளிநாட்டு படையெடுப்பாளனும் வெற்றி கொள்ள முடியாத கோட்டையாக விளங்குகிறது

புராதன சிவில் சமூகத்தின் ஒரு உதாரணமாக சாதி காட்டப்படுகிறது இந்திய மதத்தில் மேலாதிக்கம் செலுத்தும் கற்பனையின் அடிப்படையில் அமைந்துள்ள இவ்வமைப்பு வெளியார் வெற்றி கொள்வதை தடுக்க இயலாவிட்டாலும், கொடுங்கோன்மையை அதனால் தாக்குப் பிடிக்க முடிந்தது. ஷ்லெகலின் காலத்தில் வாழ்ந்த ஹெகல், புனைவியலாளர்களின் Romanticists) இந்த நிலைப்பாட்டினை மேலும் மையமான, பகுத்தறிவார்ந்த நிலைக்கு நகர்த்தினார். அழகியல் பற்றிய தனது படைப்பில், தொன்மைச் சமூகங்களை குறியீடுகளாக ஏற்றுக்கொண்ட ஹெகல் இந்தியாவிற்கு கற்பனைதான் மையம் என்பதை ஒப்புக் கொண்டார் இந்தியச் சமூகம் குறியீட்டுச் சமூகம் என்ற அளவில் ஒப்புயர்வற்றது. ஆனால், ஹெகல் இக்குறியீட்டுத்தன்மையை நவீனத்துவததிற்கு இசைவாகப் பார்க்காமல், தொடர்ந்து வந்த செவ்வியல் கிரேக்க மற்றும் நவீன ரோம நாகரிகங்களின் முன்னோடியாகப் பார்த்தார். உலக வரலாற்றை பகுத்தறிவுமயபபடுத்தலில் ஹெகல், எப்படி இந்தியக் கற்பனையை வகைமைப்படுத்தினாரோ, அவ்வாறே சாதியையும் தனது அமைப்புகளின் படிவரிசையில் வைத்தார். ஹெகலைப் பொறுத்தவரை இந்தியாவின் அடிமைப்படும் தன்மை ஒரு விபத்தல்ல; அது இந்திய நாகரிகத்தின் தவிர்க்க முடியாத பண்பாகும். மொத்தத்தில் பார்ததால் இந்திய நாகரிகத்தின் பரவல் என்பது ஒரு பேச்சற்ற, செயலற்ற வளர்ச்சியாகும். அது எவ்வித அரசியற் செயற்பாட்டையும் முன்மொழிவதில்லை. இந்திய மக்கள் எந்த வெளிநாட்டையும் வெற்றி கொண்டதில்லை. ஆனால், ஒவ்வொரு முறையும், அவர்கள் தங்களை முறியடித்துக் கொண்டனர். இத்தகைய சத்தமற்ற வழியில், உடலியல் பரவலை மட்டும் வளர்க்கும், வெளிநாட்டினர் குடியேறும், மையமாக வடஇந்தியா இருந்தது. பொது வரலாற்றில் இந்தியா, 'ஆசைகளின் நிலமாக' குறிப்பிடப்படுகின்றது.

ஹெகல் குறிப்பிடும் இந்த ஆசை, இந்தியாவின் வளத்தையும், அறிவையும் கைக்கொள்ள நினைத்த வெளிநாட்டவரின் ஆசையாகும் மிகப் பழங்காலந் தொட்டே, இந்த அற்புதங்கள் நிறைந்த நாட்டின்





படிப்பகம்

www.padippakam.com

செல்வங்களை அடைய வேண்டி அனைத்து நாடுகளும் விருப்பமும், ஆசையும் கொண்டிருந்தன. அச்செல்வங்கள், இந்த பூமி அளிக்கக் கூடிய செல்வங்களிலேயே விலைமதிப்பு வாய்ந்தவையாகும். அவைகள், முத்துக்கள், மாணிக்கங்கள், நறுமணங்கள், ரோஜா குல்கந்துகள், யானைகள், சிங்கங்கள் முதலிய இயற்கை வளங்களுடன், அறிவுச் செல்வங்களுமாகும் எப்படி இச்செல்வங்கள் மேற்குலகிற்கு கொண்டு செல்லப்பட்டன என்பது, தேசங்களின் தலைவிதியுடன் பின்னிப் பிணைந்துள்ளதுடன், எல்லாக் காலங்களிலும் உலக வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் இருக்கிறது. அந்த நாடுகளின் விருப்பங்கள் நிறைவேறின. ஆசைகளின் நிலம் கைக்கொள்ளப்பட்டது. இச்செல்வத்தின் ஒரு சிறிய அல்லது பெரிய பகுதியினை அடையாத கிழக்கின் பெரிய தேசமோ, நவீன ஐரோப்பிய மேற்குலக நாடோ ஒன்று கூட இல்லை எனலாம்.'

இந்தியாவை ஒரு செல்வச் சுரங்கமாக வருணிப்பதை ஹெகல் இப்படி முடிக்கிறார்: ''ஆங்கிலேயர்கள், அதற்கும் மேலாக கிழக்கிந்தியக் கம்பெனியே இந்நிலத்தின் அரசர்கள்; ஏனெனில், ஐரோப்பியர்களின் ஆளுகைக்கு கீழ்ப்பட வேண்டும் என்பது ஆசியப் பேரரசுகளின் தவிர்க்க முடியாத விதியாகும் என்றாவது ஒருநாள் சீனாவும் இதேபோன்ற கதிக்குள்ளாகும்.''

இந்தியா ஏன் தொடர்ந்து அடிமைப்படுகிறது என்பதற்கு மில் மற்றும் ஷ்லெகல் கூறும் காரணங்களை ஹெகல் ஏற்கவில்லை. இந்து அரசு பற்றிய அவரது கறாரான கருத்தில் இது வெளிப்படுகிறது.

''அரசு என்பது ஆன்மாவின் செயல் வடிவமாகும் அதனுள் ஆன்மாவின் சுய பிரக்ஞையே அதாவது மனோவலிமையின் சுதந்திரமே சட்டமாக பரிணமிக்கிறது. அத்தகைய நிறுவனம், சுதந்திர மனோபாவத்தை அறுதியிட்ட முன் நிபந்தனையாகக் கோருகிறது. சீன அரசில், அரசரின் ஒழுக்க மனோபாவமே சட்டமாக உள்ளது ஆனால், அதனால் தன்னிலையின் உள்ளார்ந்த சுதந்திரம் அமுக்கப்படுகிறது மேலும், சுதந்திரத்தின் சட்டம், வெளியிலிருந்து தனி நபர்களின் மேல் ஆட்சி செலுத்துகிறது இந்தியாவில், தன்னிலையின் முதன்மையான அம்சமான கற்பனை, இயற்கை மற்றும் ஆன்மீகம் இரண்டின் சேர்க்கையாக இருக்கிறது, இவ்விரண்டில், இயற்கை தன்னை தர்க்கவியல் பொதிந்த உலகமாகத் தோற்றமளித்துக் கொள்வதில்லை. ஆன்மிகமும், தன்னை இயற்கைக்கு முரணான பிரக்ஞையுடையதாக காட்டிக் கொள்வதில்லை. இந்நிலைமையின் எதிர் நிலை என்பது பற்றாக்குறையுடமை ஆகும். அருபமான மனோபலம், உள்ளார்ந்த சுதந்திரம் ஆகிய இரு விதத்திலும் சுதந்திரம் அங்கு இல்லை. அரசின் சரியான அடித்தளமாகிய சுதந்திர நெறி அங்கு சுத்தமாக இல்லை எனவே, அரசு என்பது அதன் அடிப்படை உண்மையான அர்த்தத்தில் இல்லை. முதல் கருத்தாக கவனிக்கப்பட வேண்டியது இதுதான்: சீனாவில் அரசைத்தவிர வேறு எதுவுமில்லை என்றால், இந்து அரசியல் இருத்தலில் மக்கள் இருக்கிறார்கள்; ஆனால் அரசு இல்லை!!

ஹெகலின் இக்கண்ணோட்டம் இந்தியவியலுக்கு மட்டுமல்ல; சீனவியலுக்கும் அடிப்படையானது. மேற்குலக நாகரிகம் என்பது மிகுதியும் பகுத்தறிவு அடிப்படையில் அமைந்தது அது அரசுக்கும், சிவில் சமூகத்திற்கும் இடையில் ஓர் ஆரோக்கியமான இயங்கியலை தக்க வைக்கிறது. இதனை ஹெகல் ஒற்றுமை மற்றும் வேற்றுமை பண்புகளுக்கிடையிலான இயங்கியல் எனக் குறிப்பிடுகிறார்.

இந்த அடிப்படையில், இந்திய மற்றும் சீன நாகரிகங்கள் பகுத்தறிவற்றவையோ, பகுத்தறிவுடையவையோ, பகுத்தறிவிற்கு எதிரானவையோ அல்ல. மாறாக, இரண்டும் பகுத்தறிவிற்கு முந்தைய அமைப்பாக்கங்களாகும். ஆரம்ப நிலையிலுள்ள சிவில் சமூகம் (வேற்றுமை), அரசினை (ஒற்றுமை) மூழ்கடிப்பதால் இந்தியா ஓர் உருக்குலைந்த நாகரிகமாக சித்தரிக்கப்படுகின்றது, சீனாவும் ஓர் உருக்குலைந்த சமூகமாகததான் காட்டப்படுகின்றது ஆனால், இதற்கு நேர்மாறான காரணத்திற்காக அங்கே, அரசு (ஒற்றுமை) சிவில சமூகத்தை (வேற்றுமை) விழுங்கிவிட்டது.

இந்தியாவை மூழ்கடிக்கும், பகுத்தறிவிற்கு முந்தைய சிவில் சமூகவடிவம், இந்தியாவின் 'தனித்த நிறுவனமாகிய' சாதியும், அதனை காப்பாற்றும் அல்லது உள்ளடக்கும் மதமாகிய ஹிந்துத்துவமும் ஆகும். இந்தியாவின் தவறான அமைப்பாகததைப்பற்றிக் கூறுகையில் ஹெகல் இப்படிச் சொல்லுகிறார்: ''கொடுங்கோன்மை அதிகாரத்தின் ஒருமைப்பாட்டிலிருந்து சுதந்திரமான



படிப்பகம்

www.padippakam.com

# கம்யூன்கள்

—ரெய்முட் ரெய்ஹ்

முதல் கம்யூன் 1966இன் இறுதியில் மேற்கு பெர்லினில் உருவெடுத்தது. அதன் அங்கத்தினர்கள் 1967 மேஇல் SDSலிருந்து விலக்கப்பட்டனர். முதலாளியத்திற்குப் பிந்திய சமூகத்தில் வர்க்கப் போராட்டத்தை வழிநடத்தப் போதுமான அரசியல் மற்றும் அமைப்பு வடிவத்தை தான் உருவாக்கியுள்ளதாக அக் கம்யூன் எண்ணியது. புரட்சிக்குப் பிந்திய ரசியாவின் இளைஞர் கம்யூன்களில் அது தனது வரலாற்று முன்னுதாரணத்தை தேடியது. அவ்விளைஞர் கம்யூன்களில் நிலவிய அமைப்பு ரீதியான சில அம்சங்களில் முன்னேற்றம் ஏற்படுத்துவதை தன்னுடைய இலக்காகக் கொண்டது. குறிப்பாக வில்ஹெம் ரெய்ச் (பாலியல் புரட்சி என்ற நூலில்) எவற்றையெல்லாம் இறுக்கமான செயல்முறைகள் மற்றும் அடக்குமுறை பாலியல் ஒழுக்கம் என விமர்சித்தாரோ அவற்றில் தனது கவனத்தை செலுத்த எண்ணியது. அதன் உடனடி தோற்றுவாய்களாக இருந்தவை 1962—63இல் மூனிச், ஸ்டுட்கார்ட் மற்றும் பெர்லின் ஆகிய இடங்களில் நிலவிய 'கவிழ்ப்புச் செயல்' (Subversive Action) மற்றும் 'கடப்பாடற்ற விதகள்' (Non-Ob igatory Princ ples) ஆகியவற்றைச் சேர்ந்த குழுக்களேயாகும். அமைப்பு மற்றும் அரசியல் செயல்பாடு ஆகியவற்றிற்கு இடையில் நிலவும் முரண்பாட்டைத் தீர்க்கும் டழைய பணியில இக்குழுக்கள் ஈடுபட மீண்டும் ஓர் முயற்சியை மேற்கொண்டன. கோட்பாட்டு ரீதியாக அவை உடனடியாக உருவாக்கியது 'குழு' (Cohort) என்ற ஒன்றேயாகும். அடக்குமுறை பாலியல் நடவடிக்கைக்கு (Repressive Desublimation) எதிரான ஒன்றிணைந்த போராட்டமாக இது கருதப்பட்டது. ஆனால் இக்குழுக்களின் முக்கிய தூண்டுனராக இருந்த மார்க்யூஸ் என்பவரால இக்கருத்து அச்சமயத்தில் முழுவதுமாக வடித்தெடுக்கப்படவில்லை என்பது உண்மை. அவற்றை ஒரே மூச்சில் சொல்ல வேண்டும் என்றால் :

> முழுமையும் வளர்த்தெடுக்கப்பட வேண்டும் என்பது எவ்விலையை கொடுத்தாகிலும் முன் கொணரப்படவேண்டும்.

மனிதனின் அனைத்துச் சாத்தியப்பாடுகளும் இங்கேயே இப்போதே மலர்வதற்கு இக்குழு பாதையை செம்மைப்படுத்த வேண்டும். வாழ்க்கை என்பது என்னவென்றும் அதன் இலக்குகள் என்னவென்றும் வரையறுப்பது அறிவியல் எனக் கண்டு, இக்குழுவானது அறிவியல்களுக்கு முககியத்துவமான புதிய அளவுகோலைக் கொண்ட புதிய அறிவியல் கோட்பாட்டை முன் வைக்கின்றது... ஒழுங்கமைந்த அத்துமீறலில் ஈடுபடுகின்ற கலகத் தலைவர்களைக் கொண்டதுதான் 'கவிழ்ப்புச் செயல்' (Subversive Action) ஆகும். தங்களைத் தாங்களே ஒரு கீழ்சாதி மேட்டிமைக்காரர்கள் என்றும் தங்களுடைய நேரடியான நோக்கம் நடவடிக்கை என்றும் தங்களையே பிரகடனப்படுத்திக்கொள்வது விடுதலையடைந்த சமூகத்தை நோக்கிய குழுவின் முதல் அடியாகும். சமூக அடக்குமுறையின் முகத்திரையை ஒரு செயல் எந்தளவுக்கு கிழித்துக் காட்டுகின்றதோ அதைக் கொண்டுதான் எந்த மிகச் சிறிய செயல் கூட மதிப்பிடப்பட வேண்டும். புதிய மரபான கலகத்தில் செயலூக்கத்துடன் கலந்து கொள்ளாத எவனும் கவிழ்ப்பு இடதுகளில் உறுப்பினராக இருக்க இயலாது

அனைத்து நூல்களையும் வாசித்து இருந்தால் மட்டும் போதாது என்று ஒவ்வொருவரும் அறிந்திருக்கிறார்கள் அல்லது அறிந்திருக்க வேண்டும் என்பதை நாம் ஏற்றுக்கொள்வதால் (assume), கவிழ்ப்பு நிலையில் உள்ள நமது இருத்தலை வெளிப்படுத்த ஒரு கவிழ்ப்பு மனோ நிலையை நாம் கோருகின்றாம் அதன் தோற்றுவாய்: முற்றிலும் மறுக்க முடியாத கோட்பாடாகிய இயங்கியல் சம்பந்தமான அறிவு மற்றும் உயிரியல் விதியின் இருமுகத்தன்மை பற்றிய புரிதல் ஆகும்.

முழுமையும் வளர்த்தெடுக்கப்பட வேண்டும் என்றிருப்பதால், மனித இன



படிப்பகம்

www.padippakam.com

சாத்தியப்பாடுகள் மலர்வதற்கு ஏற்ற இடத்திற்காகப் போராடுவது கீழ்சாதி மேட்டிமைக்காரர்களின் கடமையாக இருக்க வேண்டும்.

'கவிழ்ப்பு மனிதன்' (Subversive Man) மனித இன சாத்தியப்பாடுகள் மீது நம்பிக்கை வைத்துள்ளான். புதியதோர் உலகு வருமென அறிந்துள்ளான். தனது கண்களை கூசவைக்க மற்றும் மயங்க வைக்க (hypnotize) கூடிய அடக்குமுறை உலகின் முயற்சிகளை அவன் பார்த்து வந்துள்ளான். மனித இன சாத்தியப்பாடுகள் அனைத்தையும் தனது வாழ்வில் பரிசோதித்து அறிகின்றான் — அவன் ஒரு கவிழ்ப்பு மனிதன் ... முரணான கோட்பாடு உடையவர்களாகவும் (heretics) ஒழுக்கங்கெட்டவர்களாகவும்(seducers) நாங்கள் மேடையேறப் போகின்றோம். நாங்கள் நிலவைப் பறித்து வழங்க வாக்களித்துள்ளோம், அதைப் பறித்து நாங்கள் வைத்துக் கொள்வோம்.

இவ் வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை என்று முதல் கம்யூனை விமர்சிப்பது நமது நோக்கம் அல்ல அத்தகைய வேலையை எண்ணற்ற அரசியல் திட்டங்களும் கம்யூனிஸ்ட் அறிக்கைகளும் செய்துள்ளன. உண்மையாகவே சொல்லப்போனால் முந்தையவர் (predecessors)களின் தோல்வியினால் ஏற்பட்ட ஏமாற்றமே கம்யூனின் தோற்றத்திற்கு காரணமானது. அல்லது 'கூடப்பாடற்ற விதிகள்' - ஐ தோற்றுவித்தவர்கள் தங்களுடைய ஆசான்களாகிய மார்க்ஸ், ஃப்ராய்டு, அடோர்னோ (Adorno) ஆகியோரை சரியாகப் புரிந்து கொள்ளவில்லை என வசை கூறவும் கூடாது. அது ஒரு அரசியல் விமர்சனமாக இருப்பதை விட மொழியியல் விமர்சனமாக இருந்துவிடும். மேலும் உலகெங்கிலும் பல மனிதர்கள் மார்க்ஸ் மற்றும் ஃப்ராய்டு ஆகியோரை சரியாகப் புரிந்துள்ள போதிலும் இந்நூலில் ஏற்கனவே குறிப்பிட்டுள்ள பிரச்சனையாகிய 'அடக்குமுறை பாலியல் நடவடிக்கைக்கு எதிரான பாதுகாப்பு நடவடிக்கை' என்பதற்குப் பதிலளிக்காமல் முற்றிலும் விலகுகின்றனர். அப்படி இருக்கையில் 'கவிழ்ப்புக்காரர்கள்' தங்களுடைய வேலைகளில் பிடிப்பு அற்றுப் போகும் அளவுக்கு அவர்களுடைய முயற்சிகளில் நம்பிக்கை இழப்பதற்கு அவர்களுக்குத் தூலமான பல நிருபணங்கள் உள்ள போது அவர்களை எப்படிக் குறை கூற முடியும். ஒருவர் தன்னுடைய நேரம் முழுவதையும் (உ-ம் ஃபிராங்ஃபர்ட் பற்றி) இயங்கியல் தீர்க்க முடியாத ஒரு முட்டுச் சந்துக்கு வந்துள்ளது என உரைப்பதனால் மற்றும் மிக முக்கியமான ஆசிரியர்களின் படைப்புகளை நுணுக்கமான ஆய்வுக்கு உட்படுத்துவதனால் அவற்றை உயிராற்றல் மிக்க ஒன்றாகக் காட்டாமல் அவற்றை ஏதோ பரிசோதனையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள பிணங்களைப்போல் காட்டுவதால் அவர் நேரடி செயலில் இறங்குவதற்கான அவசியத்திலிருந்து தன்னையே விலக்கிக் கொள்வதற்கு மிகவும் சாதகமான ஒன்றாக அமைகின்றது. பிரபல பத்திரிகைகளுக்கு அல்லது தொலைக்காட்சி நிறுவனங்களுக்கு கம்யூன்களின் வதந்திகளை விற்பனை செய்யும் தொழிலில் இறங்கியதற்கோ மற்றும் தான் எதிர்ப்பதாகச் சொல்கின்ற சக்திகளைக் கொண்டே வாழ்வு தேடிக் கொள்வதற்காகவோ முதல் கம்யூனை குறை கூறுவது நல்லதல்ல. கம்யூனில் குறைந்த பொறுப்பில் உள்ளவர்களுக்கே இத்தகைய விமர்சனங்கள் பொருந்தும் அவ்வாறு ஆய்வு செய்வதோ விமர்சிப்பதோ அரசியல் ரீதியான மேம்பாட்டிற்கோ அல்லது பயன்பாட்டிற்கோ நலம் பயப்பதல்ல.

முதல் கம்யூனின் செயல்கள், அரசியல் மற்றும் தனிப்பட்டவைகள், துணிகரமானதோ அல்லது அவமானகரமானதோ, அனைத்தும் பிரபல்யமானவையே. உளவியல் (emotional) மற்றும் பாலியல் சிக்கல்களுக்கு அவர்கள் வழங்கிய தீர்வுகள் மீதோ அலலது முதலாளிய மற்றும் மரபு சோசலிச முகாம்களிலிருந்து அவைகள் மீது வைக்கப்பட்ட விமர்சனங்களுடனோ மேலும் அதிகப்படுத்துவதற்காக என்னுடைய கருத்தை தெரிவிக்கும் எண்ணம் எனக்கில்லை. இத்தீர்வுகள் எதிர்பார்த்த விளைவுகளை ஏற்படுத்தவில்லை என்பது கம்யூனின் எதிரிகளுக்கு மிகவும் பயன்படக் கூடியது. அவர்கள தங்கள் உளவியல் மற்றும் பாலியல் சிக்கல்களை அவற்றின் மீது திணித்து தங்களுடைய நனவிலி மனத்தின் வன்செயலையும ஏமாற்றத்தையும் தவிர்ப்பதற்கு எளிதான வழியாக அவை அமைந்துவிடும். ஆனால் இதை ஒரு சிறிய அளவிலேனும் நானே செய்ய வேண்டிய தர்மசங்கடமான நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளேன் முதல் கம்யூன் மன்னிக்கப்பட முடியாத பல அரசியல் மற்றும் உளவியல் தவறுகளை புரிந்துள்ளது. அது தனது ஆரம்பகாலத்திய புரட்சிகர நோக்கததை இனம் காட்டக் கூடிய எதையும் சாதிக்கத் தவறியுள்ளது.



படிப்பகம்

www.padippakam.com

மேலும் 'வானத்திலிருந்து நிலவைப் பிரித்து வழங்கப் போவதாக' நெடு நாட்களாக இளைஞர்களுக்கு வாக்களித்துள்ளது. அதன் பிறகு கொடுமையாகஏமாற்றி அது தோற்றுவித்த நம்பிக்கையை சிதைத்துள்ளது. எனவே அத்தகைய ஏமாற்றத்தை எதிர்காலத்தில் நிகழவிடாமல் தடுப்பதற்காகவே அதை விமர்சிப்பது அவசியமாகின்றது. கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டியது என்னவெனில் அத்தகைய விமர்சனம் தனிப்பட்ட ஒன்றாக இருக்க வேண்டும். காரணம் விடுதலையின் பொறுப்பாளர்களாக (agents) தனி நபர்களையே கம்யூன் நியமித்தது.

அடிப்படையில் புதிய மற்றும் தனி முதலான (original) அமைப்பு வடிவத்தைக் கொண்டு இடதுகளின் பலகீனப் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு முதல் கம்யூன் வாக்களித்தது. இதற்கான கொள்கை (Principle) என்னவெனில் 'சமூகத்தின் சோகமான நபர்கள்' அனைவராலும் பெரும்பாலும் உணர்வு பூர்வமாக அனுபவிக்கும் தாங்கவொண்ணாத உளைச்சல் (tension) ஐ துடைத்தெறிய முடியும் எவ்வாறு எனில் 'எதிர்காலத்திற்குத் திட்டமிட வேண்டும்' என்ற கட்டாயத்திற்கு ஒவ்வொருவரும் இணங்க மறுத்து அதனிடத்தில் உடனடியாக திருப்தியடைதல் என்பதை வைக்கும்போது அது நடைபெறும். 'மார்க்சியத்தில் அன்னியமாதல் கோட்பாடு' என்ற இடத்தில் 'கேளிக்கை' என்னும் கருத்தாக்கத்தை முன்வைத்தனர். அதிகாரத்துவத்திற்கு எதிரான மற்றும் முதலாளியத்திற்கு எதிரான இயக்கம் அனைத்தின் மையமான பிரச்சினையாகிய அமைப்பு பலகீனங்களை இவ்விரு கருத்துகளும் தொடுகின்றன இவ்வகையில் கம்யூனானது துன்புறஎண்ணற்ற அராஜக மற்றும் புரட்சிகர முன்னோடிகளிலிருந்து வேறுபட்ட ஒனறு அல்ல. இம்முன்னோடிகள அதிகாரத்துவ கெட்டிதட்டல் மற்றும் சந்தர்ப்பவாத சுயகாயடிப்பு ஆகிய அரசியல் அமைப்புகளிலிருந்து வெளியேறினர். ஆனால் புரட்சியாளர்கள் தங்களுடைய வாழக்கையிலேயே புரட்சியை முழுமையாக நிறை வேற்றுவார்களேயானால அரசியல் பிரச்சனைகள் ஒரே அடியில் தீர்க்கப்படும் என தவறுதலாக தீர்மானிததனர். புரட்சிகர மற்றும் அராஜக குழுககளை அரசியல் சக்திகளோ அல்லது அவவமைப்புகளோ ஒழித்துக்கட்டாத பட்சத்தில் அவற்றின் தோல்விக்கு காரணம் புரட்சியாளர்கள் தங்களுக்குத் தாங்களே விதித்துக்கொண்ட நிபந்தனைகளுக்கு எதிராக ஏற்படுத்திக்கொண்ட உள்ளார்ந்த எதிர்ப்புத் தன்மையேயாகும். சோகமான மற்றும் படிப்பினை அளிக்கக்கூடிய இத்தகைய தோல்விதான் போரிஸ் சவின்கோவ் (Boris savinkou)-க்கு நிகழ்ந்ததாகும். இவர் ரசியாவின் போர்க்குணமிக்க அமைப்பாகிய சோசலிச புரட்சிகர கட்சியின் இறுதித் தலைவர் ஆவார்.

முதல் கம்யூனின் அரசியல் மற்றும் தனிப்பட்ட நடவடிக்கைகளை தனித் தனியாக நோக்கும் போது அவை எதிர்ப்பு இயக்கம் அனைத்திற்கும் எவ்வளவு தீமை விளைவித்துள்ளதோ அவ்வளவு நன்மையும் பயத்துள்ளது தனிப்பட்ட தந்திரோபாய தவறுகளைச் சுட்டிக் காட்டியோ அல்லது முற்போக்கு மாணவர்கள் அனைவரும் தாடி வைத்துள்ளவர், சோம்பேறி மற்றும் சுத்த மற்றவர் (dirty) என பொது மக்களை எண்ண வைத்து விட்டது என்றோ கம்யூன் மீது குற்றம் சாட்டுவது முறையாகாது. கம்யூனின் துணை இல்லாமலேயே அவர்கள் இதைப்பற்றி எண்ணியிருப்பர். இது ஒரு தப்பெண்ணத்தையே உருவாக்கியது. அல்லது இடதுசாரி இயக்கங்களுக்கு கெட்ட பெயர் வாங்கித்தரவோ, அதன்மீது மக்களுக்குத் தப்பெண்ணத்தை ஏற்படுத்தவோ, அதைப் பல அடிகள் பின்னுக்குத் தள்ளவோ கம்யூன் காரணமாகிவிட்டது என்ற குற்றச்சாடடைகம்யூன் ஏற்கத்தேவையில்லை (வழமையான ஆர்ப்பாட்டங்களின் போது) பயன்படுத்திப கருத்தார்ந்த,கவர்ச்சியற்ற, பயனற்ற எண்ணிலா பிரச்சார அட்டைகளை பயன்படுத்தியது அரசியல் ரீதியாக பயனுள்ள நடவடிக்கையா எனவும் மற்றும் இலட்சியம் என்று சொல்லப்படுவதறகு எதிரானது இல்லையா எனவும் கம்யூன் வினவுவது சரியானதே பாராளுமன்றத்திற்குப் புறம்பான அரசியல் எதிர்ப்பு இயக்கங்கள் (A St A- Allgemeine Studenten Amciation) மேற்கு ஜெர்மனி மாணவர்களின் பொது ஒருங்கிணைப்பு) மற்றும் SDS உட்பட அனைத்தையும் திறனற்றது எனச் சுட்டிக் காட்டிவிட்டு,கம்யூன் தனது நிலைப்பாட்டில் உள்ள முரண்பாடுகளை மேல் வாரியாகப் பார்ப்பது சரியல்ல என்ற போதிலும், அது (புறவயமாக) உண்மையாகவே (Objectively) எதிர்ப்புரட்கிகரத் தன்மையுடையது என எப்போது அழைக்கப்பட முடியுமென்றால், மற்ற இயக்கங்களிடமிருநது தன்னை வேறுபடுத்திக்காட்ட எதை முன் வைக்கின்றதோ அதை நடைமுறைபபடுத்த தவறும் போதுதான்:



படிப்பகம்

www.padippakam.com

அதாவது, புரட்சிகர இருத்தலுக்கான பிரச்சினையின் உயிர்நாடியை கண்டுவிட்டோம் மற்றும் அதன் அங்கத்தினர்களுக்கு அதிலிருந்து தீர்வு பெற்றுள்ளோம் என்பதாகும்.

'கட்டுப்பாடற்ற விதிகள்' பிரச்சனையை முறைப் படுத்தும் விதம்: 'தன்னிலை ஆக்கத்திற்கான எந்த ஒரு முயற்சியையும் ரத்து செய்வதற்கு உயிராதாரமான கூறு என்னவெனில் பாலியல் மறுப்பு ஆகும்', ஏற்க முடியாதபடி மொட்டையாக இருப்பினும் இது சரியானதே. ஆனால் அது அளித்த தீர்வு தவறானது; பாலியல் தளத்தில் மறைமுகமான குறுக்கீட்டை (Subliminal encroachment) கடுமையான பாலியல் செயல்பாடு மூலம்தான் தடுத்து நிறுத்த முடியும். குழுக்களின் பணி என்னவெனில் இதை வாழ்க்கையின் அனைத்து தளங்களுக்கும் இப்போராட்டத்தை விரிவாக்குவதாகும்.' இப் பதில் தவறானதாகும் காரணம். அடக்கப்பட்ட பாலியல் நடவடிக்கை (repressive disublimation) (மறைமுக குறுக்கீடு) தனிநபரிடத்தில் பாலியல் மறுப்பு உணர்வையும் அவருடைய பண்பில் ஏற்கனவே 'கட்டமைக்கப்பட்டுள்ள' பாலியல் கூறுகளையும் வளர்த்து விடுகின்றது; போராட்டத்தால் மட்டுமோ அல்லது ஒரே அடியிலோ மறைமுக குறுக்கீட்டை வெற்றி கொள்ள இயலாது. முதல் கம்யூன் பிரச்சினையை இனம் கண்டது ஆனால் அதை தீர்ப்பதற்கான முயற்சியில் தவறிழைத்தது. முதல் கம்யூன், அதைவிட முக்கியமாக மேற்கு பெர்லினில் அதனை அடுத்து வந்த இரண்டாவது கம்யூன் என்று அழைக்கப்பட்ட ஒன்று செயலைப் போல் சிந்தனையும் அவசியமானது என கண்டு கொண்டது. உளப்பகுப்பாய்வுக்குழு சிகிச்சை முறையில் குழு அமர்வுகளை ஒழுங்கு செய்தது. ஆனால், கம்யூனிலிருந்து வெளியேறிய சிலருடைய கூற்றின்படி உளப்பகுப்பாய்வு குழு சிகிச்சையிலேயே தவிர்ப்பதற்கு சிரமமான ஒருவிதமான போக்கு வெளிப்பட்டது: குழுவில் உளவியல் ரீதியாக மிகவும் உறுதியான பிரிவினர் உளவியல் ரீதியாக உறுதியற்ற பிரிவினரைவிட தங்களுடைய ஆரோக்கிய மனநிலையை உயர்வாகக் கருதினர். அத்தோடு அல்லாமல் உறுதியறற பிரிவினர் மீது அடக்குமுறையையும் எதிர்வினைகளையும் பிரயோகித்தனர். இளம் அறிவுஜீவி குழுவில் இப்போக்கு மேலும் வலுவாக இருக்கவும் மிகவும் அபாயகரமான விளைவுகளை ஏற்படுத்தவும் வாய்ப்புண்டு. காரணம், பங்கு பெறுகின்றவர்கள் அனைவருக்கும் உளப்பகுப்பாய்வு கோட்பாடு பற்றி ஓரளவு தெரியும். எனவே 'உளப்பகுப்பாய்வாளர் பாத்திரத்தை' அவர்கள் வகிக்கலாம். ஆனால் வலுவான பிரிவின் அடக்குமுறைகள் மற்றும் எதிர்வினைகள் ஆகியவற்றை தோலுரிக்கவோ உடைத்தெறியவோ உண்மையான ஆய்வாளர் அங்கு யாருமில்லை.

முதல் கம்யூன் தனது அங்கத்தினர்களுக்கு 'கம்யூனிச' ஒழுங்குகளை வழங்க முயன்றது. மேலும் 'முதலாளியத்தை' தனது அங்கத்தினர்களிடமிருந்து துடைத்தெறிய முயன்றது. இத்திட்டம் தோல்வியைத் தழுவியது. எல்லா எதிர்பார்ப்புகளும் இன்றே நிறைவு செய்யப்படும் மற்றும் எல்லா துன்பங்களும் இன்றே துடைத்தெறியப்படும் என்ற நம்பிக்கைக்கு மக்களை இட்டுச் செல்லும் போது அகவயமாக புரட்சிகர போக்கானது புறவயமாக எதிர்புரட்சிகர போக்காகின்றது. இந்த நம்பிக்கைகள் சிதைவுற்றது மேற்கு ஜெர்மனி முழுவதும் கம்யூன் கருத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட குழுக்களின் அங்கத்தினர்களை பல குழப்பமான தனிப்பட்ட சீர்குலைவுக்கு இட்டுச் சென்றது. அல்லது உண்மையான சீர்குலைவு தவிர்க்கப்பட்டிருக்கும் பட்சத்தில் அது மிகவும் அடங்கிப் போன மனப்போக்கிற்கு இட்டுச் சென்றது. கம்யூன் ஒரு கருத்தை முன் வைத்தது. அது புதிய ஒன்று அல்ல. பிறரை விலக்கிய அனைத்து பாலியல் உறவுகளும் அவசியம் அடக்குமுறையானதே. காரணம் அவை பெரிய, கூட்டுறவு அலகுகள் உருவாவதை தடுத்தன. திருமணம் மற்றும் பற்றுமாறா உறுதிப்பாடு என்ற பிரிவில் இக்கூற்றை நாம் விரிவாக விவாதிப்போம். விரிவான, நெகிழ்வான, வரையறை அற்ற பாலுறவு அலகுகளாக தம்பதியரை கலைத்தல், சராசரி தம்பதியரைவிட இவ்வலகுகள் அதிக அடக்குமுறை உடையதாக இருத்தல் மற்றும் தம்பதியினர் எப்போதும் காதலித்துக் கொண்டும் பிரிந்து போய்க்கொண்டிருத்தல் ஆகியவை பற்றிய கம்யூனின் கருத்து தவறானது என்பதற்குப் போதுமான ஆதாரம் இல்லை எனினும் தற்போதைய வரலாற்றுச் சூழலில் அடக்குமுறைமிகு பெரும்பாலான பாலியல் உறவுகளின் பொதுவான கூறாக இருப்பதால பிறரை விலக்கிய உறவுகள் அனைத்தும் (வாழ்நாள் பூராவுமானவை கூட) அடக்குமுறையானது என

நி—14



படிப்பகம்

www.padippakam.com

கம்யூன் முடிவு எடுத்தது மறுக்க முடியாத வகையில் தவறாகும்.

முதல் கம்யூன் அடக்குமுறை பாலியல் ஒழுங்கு முறையை அழித்தொழிக்க விரும்பியது. மாற்றாக அதனிடத்தில் விடுதலைக்கான கருத்துருவ நல்லொழுக்க முறையை அது வைத்தது. ஆனால் தனி நபர்கள் பழைய நல்லொழுக்க முறைகளினால் துன்புற்றது அல்லாமல் அதனால் முற்று முழுதாக நிரம்பி இருந்ததால் 'இங்கே இப்போதே' அவர்கள் மீது திணிக்கப்படவேண்டியதாயிற்று. கம்யூனின் அங்கத்தினர்கள் கூறியதாவது : 'ஒற்றை மண வாழ்க்கை முறையின் அடக்குமுறை, அதன் அனுமதிக்கப்பட்ட பீடிகைகள் மற்றும் மாணவ மாற்றுகள் ஆகியவற்றிற்கு அடிபணிந்து போவதை முடிவுக்கு கொண்டுவர விரும்புகின்றோம்' அதற்கு மாறாக அவர்கள் உளவியல் ரீதியாக தயாரிக்கப்பட்டிராதவரைமுறையற்ற பாலியல்நடைமுறைகளுக்கு தங்களை கையளிக்க வேண்டியிருந்தது. அதன் காரணமாக அவர்கள் துன்புற்றனர். அவர்களுடைய நடத்தை பாலியல் முதிர்ச்சி காலத்திய நோன்புகளுக்கு ஒத்திருந்தது. அதில் அவர்கள் ஒரு கருத்துருவ சட்டகத்திற்கு தங்களை கையளித்தனர். அவர்கள் அதை கடைப்பிடிக்க இயலாதிருந்தனர். காரணம் அது அவர்களுடைய / நனவிலி மனம் (Ego/Id) என்ற கட்டமைப்புக்கு ஒத்து வருவதாக இல்லை. வெளியிலிருந்து திணிக்கப்பட்ட ஒன்றாகவே இருந்தது. அதன் உள்ளார்ந்த விளைவுகள் எதிர் பார்த்தது போல பயங்கரமானதாக இருந்தன அவர்கள் நேர்காணலில் சொல்கின்றவற்றில் பத்தில் ஒரு பங்கை நம்பினாலே சில விசயங்கள் தெளிவாகத் தெரியும். குறைந்தபட்ச அடக்குமுறை மற்றும் கட்டாயப்படுத்துதல் அடிப்படையில் ஓரளவு அவசியம் தேவையென்ற போதிலும், அவர்கள் தங்கள் சமூகத்திலேயே வழக்கமான சில வகை அடக்குமுறைகளை குறைந்தபட்ச அளவுக்கு கொண்டு வரவில்லை. ஆனால் அதற்கு மாறான தங்களுடைய அடக்குமுறையை, ஏன் அதனினும் கூடுதலாக பயங்கரமான வடிவத்தை அதனிடத்தில் வைத்தனர் :

> அது ஒரு குதிரையைப் பழகுவது போன்றது. யாராவது ஒருவர் அதை பழக்க வேண்டும். பிறகு யார் வேண்டுமென்றாலும் அதில் சவாரி செய்யலாம். தொடக்கத்தில் அது காதல் அல்லது அதைப்போன்ற ஒன்று. அதன் பிறகு அது இன்பமாக மட்டுமிருக்கிறது. அதன் ரகசியம் பயங்கரமாக எளிமையானது: ஒரு பெண் உன்னை காதலிக்கச்செய். அவளுடன் படுத்திரு. அதன் பிறகு சில நாட்கள் கழித்து அவளிடத்தில் ஏமாற்றம் அல்லது ஆர்வம் இல்லாதவன்போல் அவளுக்குத் தோன்று. பிறகு மற்றவர்களின் கவனத்திற்கு அவளை விட்டுவிடு. அத்துடன் முடிகின்றது. அவள் ஒரு முழு அங்கத்தினள் (மேற்கு ஜெர்மனியில் வெளிவருகின்ற சுவாரஸ்யமான வார இதழ் 'பார்டன்' (Pardon) என்ற ஒன்றில் 1967 இல் ஒரு கட்டுரையில் வந்தவை.)

லாங்கான்ஸ் (Langhans) அறிவித்ததாவது : 'கம்யூனில் நடத்தப்பட்ட வாழ்க்கையில் பாலியல் பிரச்சினை நீக்கப்பட்டிருந்தது., இதன் பொருள் என்னவெனில் : தம்பதியர் என்ற முறையில் எங்களுடைய பாலியலிலிருந்துவிலகியிருக்க இயலவில்லை எனவே கம்யூன் வாழ்க்கையை கடைப்பிடித்துப் பார்த்தோம்' கம்யூன் அங்கத்தினர்களின் வெளிப்பார்வைக்கு சமரசமற்ற மற்றும் பாலியல் ரீதியாக புரட்சிகரமான வாக்குமூலங்கள் பகட்டான போலி - பாலியல் உறுப்பு உறவை ஒத்ததாக இருக்கின்றது. கட்டாயமாக வரைமுறையற்ற பாலியல் உறவு கொள்வதை காட்சி ஆக்குகின்ற அமெரிக்க தம்பதியரை ஒத்தது. (மேலே குறிப்பிட்டுள்ள 'பார்டன்' என்ற இதழில் குன்சல்மன் என்பவரின் கட்டுரையைப் பார்க்கவும் : 'புணர்ச்சி பரவசநிலை அடைவதில் எனக்கு சிரமங்கள் உள்ளன இதை அச்சில் சொல்வதில் எனக்கு மகிழ்ச்சியே — மற்றவர்களை விலக்கிய உறவில் எல்லா காலத்துமாக ஈடுபடுவது மற்றும் இறுதியாக அது தாங்க முடியாததாக கருதப்படுவது கல்லறையில்தான் என வரையறுப்பது போன்ற முதலாளிய கருத்தியலைப் போல் பொய்யானது எதுவும் இராது.) இத்தகைய ஆரவார செயலை ஓரினப்புணர்ச்சி விருப்பதின் விளைவாக விளக்கிச் சொல்லத் தோன்றுகிறது. இது (நமக்குத் தெரிந்த வரையில்) முதல் கம்யூனில் குறிப்பிடத்தக்க விதத்தில் விலக்கி வைக்கப்பட்டதாகும்.

முதல் கம்யூன் மேலும் சிலவற்றை சாதிக்க விரும்பியது முதலாளிய கலாசாரத்தை முற்று முழுதாக இங்கே மற்றும் இப்போதே அது அழித்தொழிக்க விரும்பியது. விளிம்பிலுள்ள முற்போக்கு இளைஞர் குழுக்களில்



படிப்பகம்

பெரும்பான்மையினருடன் இக்கருத்தைப் பகிர்ந்து கொள்கின்றது. முதலாளிய பண்புகள் மற்றும் இயல்புக் கூறுகளாகிய பற்றுமாறா உறுதிப்பாடு, கட்டுப்பாடு, அறிவுப்பூர்வ - அதிகாரம், ஏன் நேர்மை ஆகியவற்றிற்கு எதிர்ப்பு தெரிவித்தல் மற்றும் உடைத்தெறிய முயலுதல் போன்ற பிரச்சினையின் போதுதான், இக்குழுக்களில், இக்கருத்து ஆற்றலாக பருண்மை அடைகின்றது. ஆனால் இவ்வெதிர்பார்ப்பானது தனிப்பட்ட ஆணாதிக்கப் பண்பு, ஒருவருடைய குடும்பம் மற்றும் அளவீடுகள் ஆகியவற்றிற்கு எதிராக இருந்ததே தவிர அதைக் கடந்ததாகத் தெரியவில்லை இது அதிலுள்ள ஆபத்து மற்றும் அளவீடுகள் தளர்வது ஆகியவற்றிலிருந்து நமது கண்களை மறைத்து விடக்கூடாது. அதாவது அடக்குமுறை பாலியல் நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவிப்பதற்கு இளைஞர்களை திறனற்றவர்களாக்குகின்றது மேற்சொன்ன முதலாளிய பண்புகள் மாற்றுச் செயல் மற்றும் வலுவான தன்னிலை வளர்ச்சி ஆகியவற்றிற்கு தற்போதைக்கு அவசியமான நிபந்தனைகளாக நீடிக்கின்றன. இப்பண்புகளை அழித்தல் என்பதை (அது இடதுகளிடத்தில் குறிப்பாக நிகழ்ந்தாலும் சரி) அதை அடக்குதல் என்பதோடு போட்டுக் குழப்பிக் கொள்ளக் கூடாது. பிந்தியது சோசலிச கடமைகளில் ஒன்று; முந்தியதோ அடக்குமுறை பாலியல் நடவடிக்கைக்கே வழி வகுக்கும்.

எதிர்ப்பு இளைஞர் குழுக்களின் முதலாளிய எதிர்ப்பு மற்றும் நிறுவன எதிர்ப்பு போக்கானது அவர்களது அரசியல் நிலைப்பாட்டின் அமைப்பார்ந்த பகுதியாகும். அது இல்லையென்றால் உடனே உள்வாங்கப்படுவர் அல்லது சிதைந்து போவர். ஆனால் பல தனிப்பட்ட நபர்களிடத்தில் இப்போக்கானது அதை விளைவித்த ஆணாதிக்க குடும்ப அமைப்பில் ஊன்றி நிற்பதால் அது அவர்களிடத்தில் கட்டாயப்படுத்தப்பட்ட ஒன்றாக இருக்கின்றது இவ்வக முரண்பாடு முன்னேற்றத்திற்கான சாத்தியப்பாட்டை தடை செய்கின்றது. உதாரணமாக அதிகாரத்துவ கெட்டிதட்டல் மற்றும் அதிகார அமைப்பில் உள்வாங்குதலுக்கான நிறுவன வழி முறைகள் ஆகியவற்றிற்கு எதிராகப் போராட வேண்டியது மேலும் ஒருவர் தன்னுடைய அமைப்பிலேயே அது நிகழாமல் பார்த்துக் கொள்வது ஆகியவை அவசியம் என்ற போதிலும் தன்னிலும் மற்றவர்களிலும் உள்ள எல்லா வடிவிலான கட்டுப்பாடுகளையும் தனிப்பட்ட விதத்திலும் கூட்டாகவும் ஆசனவாய் வழிமுறைகள், அதிகாரத்துவ போக்குகள் என எதிர்த்தல் மற்றும் அதனிடத்தில் சுத்த தனிப்பட்ட ஆசனவாய் எதிர்ப்பு விதியை (Principle) வைத்தல் மிகவும் தீங்கு விளைவிக்கக் கூடியது. இது நிறுவன எதிர்ப்பு இயக்கம் அனைத்திலும் பாழ்படுத்தும் விளைவுகளை ஏற்படுத்தியது. வேலை செய்வதற்கு டயித்தியக்காரத்தனமான எதிர்ப்பு என்பது கற்பதற்கு கட்டாயப்படுத்துதலுக்கு எதிரான ஒன்று என ஞாயம் கற்பிக்கப்பட்டது; மேலும் சரியாக ஒழுங்கு படுத்தப்படாத ஆர்ப்பாட்டங்கள், (யாரும் எளிதில் கிழித்து விடக்கூடிய) சரியாக ஒட்டப்படாத சுவரொட்டிகள், மிகவும் காலதாமதமாக அறிவிக்கப்பட்டு குறைவாக தயார் செய்யப்பட்ட கூட்டங்கள் ஆகியவை அதிகாரத்துவ எதிர்ப்புக் குழுக்களிடம் திரும்பத் திரும்ப காணக்கூடியவையாக இருக்கின்றன.

முதலாளிய கலாச்சாரம் என்றால் சூழ்ச்சி மற்றும் அடக்குமுறை ஆகியவற்றின் ஆதிக்க வெளிப்பாடு மட்டுமல்ல. மாறாக அது இயற்கையை கட்டுப்படுத்தவும், சிந்தனைக்காகவும், பேசும் ஆற்றலுக்காகவும், மனதையும் உடலையும் ஒரு குறிக்கோளுக்காகப் பயன் படுத்தவும் என சமூகம் சாதித்த திறமைகளின் தொகுதியுமாகும். முதலாளிய சமூகத்தில் இத்திறமைகள் எப்போதும் விலங்கிடப் பட்டிருப்பினும், நமது கலாச்சாரத்தில் உள்ள எல்லா கூறுகளிலும் விலங்குகள் (தளைகள்) உள்ளன எனக் காணக் கூடிய அளவுக்கு விடுதலையை நோக்கி முன்னேறியவைகூட இன்று அக்கலாச்சார பிரதிநிதிகளாலேயே முழுமையாக அழிக்கப்படுகின்றன. பருண்மையான வார்த்தைகளில் கூற வேண்டுமானால் அடக்குமுறை பாலியல் நடவடிக்கை என்றால் வரலாற்றின் கலாச்சார சாதனைகளை மேலும் குறிப்பாக மாற்றுச் செயல்களை மறுப்பதாகும். முதலாளியத்திற்குப் பிந்திய நாடுகளில் அதிகாரத்திற்கு எதிரான குழுக்கள் அனைத்திலும் நிலவிய வெளிசொல்லப்படாத போக்கின் மிகவும்தெளிவான வெளிப்பாடுதான் கம்யூன். இது நாகரிகத்தின் சாதனைகளை அழிப்பதில் மாற்றான் சக்திகளுடன் கூட்டுச் சேர்கின்றது. அமைப்பானது கலாச்சாரத்தை இல்லாமல் அழிக்கின்றது. எதிர்ப்பாளர்களோ அதை தரைமட்டமாக்கி விடுகின்றனர். மிகவும் மோசமானது மிகவும் மோசமானதாக ஆகும் என்றால் கலாச்சாரத்தின் அடக்கு

www.padippakam.com

முறை கூறுகள் மட்டும் எஞ்சி நிற்கும் நிலை ஏற்படும். முதலாளிய ஒழுங்கமைப்புக்கு மாற்றாக இருக்கக்கூடிய சமூகத்தை உண்மையாகவே கட்டி எழுப்பத் தேவையான மற்ற அம்சங்களையும் சேர்த்து அழிப்பதில் முடியும்.

பெரும்பாலும் மாணவர்களைக்கொண்ட இக்கம்யூன்களின் அனுபவம் ஓரிரு முடிவுகளுக்கு இட்டுச்செல்கின்றது.

நரம்புச் சிக்கல்களை ஏற்படுத்தக் கூடிய மாணவ விடுதி சூழல் அல்லது தனி மனிதர்களுக்கான விடுதிவகையானாலும் அல்லது பெற்றோர்களின் வீட்டில் நிலவும் இருக்கமான சூழலாக இருப்பினும் இவற்றில் துன்புறுவதைவிட எண்ணிறந்த இளைஞர்களுக்கு படிப்பதோ, வேலை செய்வதோ அல்லது பள்ளியில் இருப்பதோ அரசியல் ரீதியாக அர்த்தமுள்ளதாகவும், தனிப்பட்ட விதத்திலும் விடுதலை ரீதியாகவும் குழுமம் (Community) அமைப்பது நிறைவு அளிக்கக் கூடியதாக இருக்கின்றது. தனி ஆள் என்ற விதத்தில் குறிப்பாக எளிதில் பாதிப்புக்கு உட்படுத்தக் கூடிய சமூக மற்றும் உளவியல் அழுத்தத்தை தாங்கவும் எதிர்த்துப்போராடவும் தாங்களாகவே நடத்திவருகின்ற குழுமங்கள் உதவியதை சில சூழல்களில் காணலாம்.

அங்கத்தினரின் அனைத்து தனிப்பட்ட மற்றும் உளவியல் பிரச்சினைகளையும் தீர்ப்பது மற்றும் எதிர்ப்பு இயக்கத்தினர் அனுபவிக்கும் அரசியல் பலகீனங்களை சரி செய்வது ஆகியவை 'கம்யூனின்' பணியாக இருக்க இயலாது என்ற அடிப்படையிலேயே ஒரு மக்கள் குழு எந்த ஒரு சிறிய அளவிலான குழு வாழ்க்கை ஒழுங்கைத் தொடங்கி தொடரவேண்டும். அதற்குப் பதிலாக கம்யூனை ஒரு செயல்பாட்டு அலகாக கருத வேண்டும். அங்கத்தினரின் அரசியல் திறமை வளர்ப்பதற்கு மற்றும் அவர்களின் மனோவியல் இருக்கையை எளிதாக்க பணி செய்யும் ஒன்றாகக் கருத வேண்டும்.

மற்றவர்களை விலக்கிய உறவை அழித்தல், நெளிவுசுழிவுள்ள வரைமுறையற்ற பாலுறவு குழுக்களை அல்லது இருவருக்கும் மேற்பட்ட நபர்களைக் கொண்ட ஒப்பீட்டளவில் நிலையான பாலியல் உறவுகளை அமைத்தல், திருமணமான தம்பதியர் அல்லது குடும்பங்களை விரிவான குழுமங்களாக ஒன்றிணைத்தல் போன்ற அனைத்து செயல் பாடுகளையும் இப்போது முறையாக விவாதித்து விட முடியாது. வெறறிசரமாக அவற்றை நடைமுறைப்படுத்தி விடலாம் என்பதைப் பற்றி பேசக்கூட தேவையில்லை. எங்கு அது உருவாகின்றதோ அங்கு அது தன்னியல்பாக எழ வேண்டும். ஒரு ஏற்பாடு (programme) என்ற இயல்பில் எதுவாக இருப்பினும் அது அனைத்து விதத்திலும் தவிர்க்கப்பட வேண்டியதாகும். காரணம் தற்போதைய நிலைமையில் அது ஓரளவு செயற்கையானதாகவும் (Unnatural) அடக்குமுறையானதாகவும் மட்டுமே இருக்கும். அது தனிப்பட்டவர்களின் உளவியல் அமைப்பிற்கு ஒத்து வரக்கூடியதாக இருக்க இயலாது. எனவே அவர்களுடைய தேவைகளை பூர்த்தி செய்ய இயலாது. தற்காலிகமானதோ அல்லது நிரந்தரமானதோ சராசரி மற்றவர்களை விலக்கிய உறவானது கட்டாய வரைமுறையற்ற பாலியல் உறவைவிட ஒருவிதத்தில் நல்லதாகத் தோன்றுகின்றது. பிந்தியது விடுதலையின் போர்வையை மற்றும் பாலியல் புரட்சியை அணிந்திருக்கும் தோற்றம் கொண்டிருக்கின்றது. முந்தியது குறைந்த அளவு அடக்குமுறை கொண்டதாகவும் குறைந்த அளவு நரப்பியல் சோளாறை உற்பத்திச் செய்யக் கூடியதாகவும் இருக்கின்றது.

இன்று சாத்தியப்படக் கூடிய கம்யூன் எதுவும் குடும்பத்தை அழிக்க வேண்டும் என்று மார்தட்டுவது இல்லை. (இன்றைக்கு உண்மையாகவே நிறைவேற்றப்படா விட்டாலும்) முதலாளிய குடும்பத்தின் நேர்மறையான செயல்பாடுகளில் ஒன்றான பகையான சூழலிலிருந்து பாதுகாப்பு வழங்குதல் என்ற ஒன்றை சாதிக்க முடியுமென்றால் அதுவே கம்யூன் வெற்றியடைந்ததற்கு ஈடாகின்றது. தற்போதைய அமைப்பே குடும்பத்தை சிதைத்துக் கொண்டிருப்பதால் குடும்பத்தை சிதைப்பது அர்த்தமற்றது. மேற்கு ஜெர்மனியில் பல சமீபத்திய கம்யூன்களில் வெளிப்பட்டது போல, வழக்கமான விளைவு என்னவெனில் — தற்கால குடும்பங்களில் எதிர்மறை செயலாகிய உள்ளார்ந்த பயங்கரவாதம் மேலும் கூடுதலாகியுள்ளது, மற்றும் அதன் செவ்வியல் நேர்மறை செயல்பாடாகிய பகையான உலகில் இருந்து பாதுகாப்பு என்பது இல்லாமல் போகின்றது.

கம்யூனின் பயன்பாட்டிற்கு ஒரு கால வரம்பும் உண்டு. வளரும் இளமைப் பருவத்திலிருத்து வாலிப பருவத்தில் நுழையும் இடைப்





படிப்பகம்

www.padippakam.com

பட்ட காலத்தில் அது தனது நேர்மறை யான பணியை ஆற்றுகின்றது. நரம்புக் கோளாறு உருவாதல் மற்றும் அடக்குமுறை பாலியல் நடவடிக்கையிலிருந்து பாதுகாக் கும் மிகவும் முக்கியமான பணியை மேற் கொள்கின்றது. இத்தகைய காலவரைப்பு ஏற்றுக்கொள்ள இயலாத வகையில் அடக்கு முறையானதாகத் தோன்றலாம். சுதந்திர மான மக்களின் தனிப்பட்ட அய்க்கியம் என்ற இலட்சிய அளவுகோலைக் கொண்டு நோக்கினால் அது ஓரளவு அடக்குமுறை யானதே. ஆனால் நாம் எதார்த்தங்களைக் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும்: தற்போதைய சூழலில் நரம்புக்கோளாறு உருவாதல் மற்றும் அடக்குமுறை பாலியல் நடவடிக்கைக்கு எதிராக எவ்வாறு போராடு வது என்பதாகும். வர்க்கப் போராட்டத்தில் செயலூக்கமுடன் பங்கெடுக்க விரும்புகின்ற மனிதர்களுக்கு, மற்ற மனிதர்களுக்கும் தேவையானது போல, உளவியல் ரீதியான உள்ளார்ந்த வளர்ச்சி மற்றும் புறவய அழுத்தம் ஆகிய இரண்டின் குறிப்பிட்ட வடிவிலான இணைவு தேவைப்படுகின்றது. இத்தகைய இணைவிற்குத் தேவையை தீர் மானிப்பது, மற்ற அம்சங்களுடன், அவர் களுடைய வயது ஆகும்.

குடும்பத்தின் செவ்வியல் பணிகளில் ஒன்றா கிய, குழந்தைகளை வளர்த்தல் என்பது இங்கு வரையறுத்து கூறப்பட்டுள்ள கம்யூன் வகையில் செயல்படுத்த முடியாதது அல்லது மிகவும் சிரமமானது. சமூகமாக்கல் என்ற நிகழ்வுப் போக்கில் ஆர்வமற்ற மனோ நிலையுடன் சோதனையை அணுக இயலாது என்றபுரூக்நெர் (Bruckner)-ன் கூற்று மிகவும் முக்கியமானது. மிகவும் வளர்ந்த முதலா ளிய தொழில்மயமான நாடுகளில் நிலவு கின்ற குழந்தைகளின் தொடக்ககால சமூக மாக்கலுக்கான மாதிரி திருப்திகரமானதாக் இல்லை. அதைவிட சராசரி அளவில் குடும்ப வளர்ப்பு (திட்டமிட்டோ அல்லது தற் செயலாகவோ) வெற்றிகரமாக நிகழ் கின்றது. அவசியமான நிபந்தனைகள் என்ன வெனில்: சாதாரணமான அன்பான பெற் றோர்கள், உறுதியான பொருளாதார சூழல் போன்ற ஓரளவு சாதகமான ஆதரவு அம்சங்கள், ஓரளவு வாழ்வதற்கேற்ற நில மைகள், பெற்றோர்கள் மத்தியில் திருப்தி கரமான அளவு கடமை (Role) பிரிவுகள், மற்றும் குழந்தைக்கு தனது கவனத்தை செலுத்தக்கூடிய அளவு தாய்க்கு நேரம் கிடைப்பது ஆகியன. முற்போககு இடது சாரிகள் 'சம்மர் ஹில்'-ஐ (A. S. நெயில் எழுதிய நூல் Summer Hill: A Radical Approach to Education. Penguin edu. Harmondsworth, 1968) ஒடுக்குமுறையற்ற குழுமக்கல்விக்கு என ஆர்வமாக மேற்கோள் காட்டுகின்றனர். ஆனால் ஒரு மாதிரி என்ற முறையில் பல பாதக அம்சங்களும் உண்டு. முதலாவதாக, குழந்தைகள் சர்ச்சைக்குரிய விடுதிப் பள்ளிக்கு ஆறுவயதிற்கு முன்னால் வழக்கமாக வருவதில்லை. அவர்கள் பெரும் பாலும் நடுத்தர வர்க்க குடும்பங்களிலிருந்து வருகின்றனர்; அக்குடும்பங்களில் உறவுகள் மற்றும் குழந்தை வளர்ப்பு முறைகள் அறிவு பட்டத்திலும் அடக்குமுறையிலிருந்து விடுதலையிலும் சராசரி நிலைமைகளுக்கு மேலானதாகவே இருக்கின்றது. இரண்டா வதாக வாலிபர்கள் உள்ள கம்யூன்களில் குழந்தைகள் இல்லை ஆனால் விடுதிப் பள்ளிகளில் இருக்கின்றனர். அவர்களை கவனிக்க வாலிபமான ஆட்கள் இருக்கின் றனர். மூன்றாவதாக, 'சம்மர் ஹில்-ஐ விட்டு வெளியேறுகின்ற குழந்தைகளுக்கு பைத்தியம் பிடிக்கக்கூடிய தன்மையின் அளவு அத்தகைய மற்ற இளைஞர்கள் குழுக் களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது குறிப் பிடத்தக்க அளவு கூடுதலாகத் தெரிகின்றது. இதற்குக் காரணம் என்னவாக இருக்க முடியும் என்றால்: சம்மர் ஹில்'-இல் உள்ள இளைஞர்களுக்கு சமூகத்தின் அடக்குமுறை நிறுவனங்களை எதிர்த்துச் சமாளிக்க அவர்கள் கற்றுக்கொள்ளவில்லை. எனவே விரக்தியை எதிர்ப்பதற்கு மிகவும் குறைந்த அளவே ஆற்றல் பெற்றுள்ளனர். நமது சமூகத்திற்கு அது மிகவும் குறைவான தாகும். வெளி உலகிற்கு ஈடுகொடுக்க அவசியமான அடிப்படை திறமைகளை இவ்விளைஞர்கள் கற்றுக்கொள்ளவில்லை. வெளியுலகுடன் ஒரு விமர்சனப்பூர்வமான உறவு கொள்வதா அல்லது அத்துடன் மோதுவதா என்பதே. அவர்கள் கற்ற கல்வி யின் காரணமாக இவ்வெளி உலகு அச் சுறுத்துவதாகவும். பகைமையானதாகவும் அடக்குமுறையானதாகவும் தோற்றமளிக் கின்றது.

மேலே சொல்லப்பட்ட இன்றைய கம்யூனின் அவசியமான முன் நிபந்தனைகள் மற்றும் வரம்புகள் ஆகியவற்றின் பட்டியல் கம்யூன் கட்டி எழுப்பப்படுவதன் கனவு (utopian) அம்சத்தையோ அல்லது வரவிருக் கின்றவைகளின் முன்னோடி என்ற அதன் செயல்பாட்டையோ மறுப்பதாகாது. இவ் வம்சம் பிரக்ஞைபூர்வமானதாகவும் மற்றும் காலத்திற்கு ஒவ்வாத கருத்துருவமாக மாறு தல் அல்லது அமைவடக்கமாகவோ அல்லது வெறுப்பாகவோ மாறாமல் தடுத்து நிறுத்



படிப்பகம்

www.padippakam.com

தப்பட வேண்டும். ஒவ்வொரு தனிப்பட்ட அங்கத்தினரின் அரசியல் செயல்பாடு அவருடைய தேவைகளை பூர்த்தி செய்வதுடன் நேரடியாக எப்போதும் தொடர்புடையதாக இருக்க வேண்டும் என்பதே முதன்மையான கொள்கை என முதல் கம்யூன் பிரகடனம் செய்தது. குன்செல்மான் (Kunzelmann) கூறுவதுபோல் ''புணர்ச்சி பிரவச நிலையில் எனக்குப் பிரச்சனை இருக்கும்போது வியட்நாம் யுத்தத்தைப்பற்றி நான் ஏன் கவலைப்பட வேண்டும்?'' எனினும் நாம் சொல்வது முன்னாள் முதலாளிய நாடுகளில் உள்ள நகரங்களில் வியட்நாம் யுத்தத்திற்கு எதிராக பலமான ஒரு எதிர்ப்பை கட்டி எழுப்புவதும் அந்நகரங்களில் எதிர்க்கட்சியான இடதுசார் பிரிவினரிடையே புணர்ச்சி பிரசவநிலை பிரச்சினைகளை குறைப்பது என்பதும் ஆகிய இரண்டுக்கும் பொதுவான ஒரு முன்நிபந்தனை உண்டு : நரம்புக் கோளாறு உருவாதல் மற்றும் அடக்குமுறை பாலியல் நடவடிக்கை ஆகியவற்றிற்கு எதிராக வெற்றிகரமாகப் போராடுதல். வெறுமனே முயற்சி செய்வதால் மட்டும் புணர்ச்சி பரவசநிலை அடைந்துவிட முடியாது. அதுபோலவே லெனின் மற்றும் லூக்காக்ஸ் - எழுதியவற்றை மேற்கோள் காட்டுவதன் மூலமே பலமான வியட்நாம் எதிர்ப்பு இயக்கத்தை உருவாக்கிவிட முடியாது. ஒருவர் மேற்குறிப்பிட்ட இரண்டு தளங்களிலும் தனிப்பட்ட விதத்தில் திருப்தியளிக்கக்கூடிய வெற்றியை அடைய வேண்டுமானால், மிகவும் கட்டுப்பாடான வேலை முறையும் அவருக்குத் தேவை. அதுபோலவே நீக்குபோக்கான முறையில் தன்னெழுச்சியும் தேவை. அவர் தமது உணர்வுகளை அடக்கியாளவும் வேண்டும் அதே சமயம் அவற்றைக் கட்டவிழ்த்துவிடவும் வேண்டும். அவருக்கு கற்பனாவாதமும் தேவை. கூடவே யதார்த்தவாதமும் தேவை. □

தமிழில் : சூ மா.

**REIMUT REICHE—SEXUALITY AND CLASS STRUGGLE, NLB (LONDON)**
பக்கங்கள் 146 — 156

---

# உலக முதலாளிய அமைப்பும் இந்தியப் பொருளாதாரச் சீர்திருத்தங்களும்

**— அ. மார்க்ஸ்**

இந்திய முதலாளிகள் சங்கத்தின் புதிய தலைவர் **சேகர்தத்தா** என்பவர் தேர்தலை ஒட்டி 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகைக்கு ஒரு பேட்டி அளித்திருந்தார். எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தபோதிலும் பொருளாதாரச் சீர்திருத்தங்கள் தடைபடாமல் தொடர்ந்து நடைபெறும் என்கிற நம்பிக்கையை எல்லாக் கட்சிகளின் தேர்தல் அறிக்கைகளும் வெளிப்படுத்துவதாக அவர் அந்தப் பேட்டியில் குறிப்பிட்டிருந்தார். இந்திய முதலாளிகளுக்கு மட்டுமல்ல உலக முதலாளிகளுக்கும் இந்த விஷயத்தில் ரொம்பத் திருப்திதான். வாஷிங்டனில் நடைபெற்ற அமெரிக்க — இந்திய வணிகக் குழுமத்தின் இருபத்தியோராவது வருடாந்திரக் கூட்டத்தில் (மே 14 1996) அதன் தலைவர் **ஓவார்ட் கிளார்க்** புது டெல்லியில் எந்த ஆட்சி வந்தபோதும் சீர்திருத்தங்கள் தொடரும் என்று கருதுவதாகக் குறிப்பிட்டார் (இந்து, 15-5-96) அமெரிக்க அரசின் புதிய வணிகச் செயலர் **மைக்கி கேன்டர்** அந்தக் கூட்டத்தில் இருந்தது குறிப்பிடத்தக்கது. சனநாயகக் கட்சியின் காங்கிரஸ் உறுப்பினர் **ஷெராத் பிரவுன்** என்பவர் இந்திய அரசியல் கட்சிகளுடன் அமெரிக்க அரசு தொடர்பு கொண்டு புதிய அரசு உருவாக்கத்தில் பங்கு பெறவேண்டும் என்றும் குறிப்பிட்டார்.



படிப்பகம்

www.padippakam.com

''புதிய பொருளாதாரக் கொள்கை'' எனவும் ''கட்டுமானச் சீரமைப்புத் திட்டம்'' (Structural Adjustment Programme) எனவும் பரவலாகக் குறிப்பிடப்படும் பொருளாதாரத் தகவலமைப்புத் திட்டங்கள் கடந்த 1991இல் இருந்து மிகத் தீவிரமாகச் செயல்படுவதை நாம் அறிவோம். பன்னாட்டு நிதியம் மற்றும் உலக வங்கி ஆகியவை வடித்துக் கொடுத்துள்ள வழிகாட்டல்களின் அடிப்படையில் **நரசிம்மராவ் அரசு மன்மோகன் சிங்** பொறுப்பில் இதைத் தடையின்றி நிறைவேற்றி வந்ததை நாம் அறிவோம். உள்நாட்டில் அப்படி ஒன்றும இதற்கு மிகப்பெரிய எதிர்ப்புகள் ஏற்பட்டு விடவில்லை என்பதற்கும் அவ்வபபோது உலக முதலாளிய மையங்களின் பிரதிநிதிகள் இங்கு வந்து நடைபெற்று வந்த மாற்றங்கள் குறித்து மகிழ்ச்சி தெரிவித்துச் சென்றதற்கும் விரிவான ஆதாரங்கள் தேவையில்லை. இந்திய முதலாளிகள், தொழிலாளர் அமைப்புகள், இடதுசாரி மற்றும் வலதுசாரி சுதேசிகள் என எந்தத் தரப்பிலிருந்தும் பெரிய எதிர்ப்புகள் ஏதுமில்லை என்பதை மீண்டும் நாம் நினைவு படுத்திக் கொள்ள வேண்டும். சோவியத் யூனியன் மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் வீழ்ச்சி, மையப்படுத்தப்பட்ட திட்டமிடுதல் மற்றும் அரசுமயமாக்கல் ஆகிய கொள்கைகளின் தாழ்ச்சி, ஒருலகக் கோட்பாடு மற்றும் சந்தைப் பொருளாதாரக் கொள்கைகளின் எழுச்சி, உருகுவே சுற்றுப் பேச்சு வார்த்தைகள் மற்றும் 'காட்' ஒப்பந்த உருவாக்கம் ஆகியவற்றோடு நாம் இந்தக் கட்டுமான மாற்றங்களை இணைத்துப் பார்க்க வேண்டியவர்களாக இநக்கிறோம். எல்லாவற்றையும் இணைத்துப் பார்க்கும் போது நமக்குச் சில கேள்விகள் எழுகின்றன. அவற்றை இப்படித் தொகுத்துக் கொள்ளலாம்.

* (1) இன்று இந்தக் கட்டுமானச் சீரமைப்பை எதிர்த்து முணுமுணுக்கிறவர்கள் 'இந்தியா அடகு வைக்கபபட்டு விட்டது' என்கிறார்கள். சுமார் முப்பதாண்டுகளுக்கு முன்பு நக்சலைட்டுகள் இந்தக் குரலை ஓங்கி ஒலித்தனர். **தரிமேள நாகி ரெட்டி** நீதிமன்றத்தில் பேசிய உரை இதே தலைப்பில் புத்தகமாகவே வந்துள்ளது. 'புதிய பொருளாதாரக் கொள்கை' என்கிற கருத்தாக்கம் கடந்த அய்ந்தாறு ஆண்டு உலக வரலாற்றில் பல்வேறு சந்தர்பபங்களில் ஒலித்து வந்ததையும் நாம் அறிவோம். மிகச் சமீபத்திய இந்திய உதாரணம் : **ராஜீவ் காந்தி**. அப்படியானால் இந்தக் கட்டுமான மாற்றம் என்பது தொடர்ந்த நிகழ்வா இல்லை முற்றிலும் புதிய ஒரு செயற்பாடா?

* (2) மார்க்சியர்கள் முன்மொழிந்து வந்த 'ஏகாதிபத்தியக் கொள்கை' எனபது பொருளாதார ஏகபோகம், நிதி மூலதன ஏற்றுமதி, ஏகாதிபத்தியங்களுக்கிடையே உலகைப் பகிர்ந்து கொளவதற்கான

---

**சேகர் தத்தாவின் பேட்டியிலிருந்து...**

**கேள்வி :** பன்னாட்டு நிறுவனங்களை அணுகும் விதத்தில் அரசியல் கட்சிகள் நெருங்கி வந்து கொண்டிருக்கின்றன. இல்லையா?

**சேகர் :** பொருளாதாரக் கொள்கை விசயத்தில் ஒரு கருத்தொருமிப்பு ஏற்பட்டுள்ளதாகவே நான் கருதுகின்றேன். காங்கிரசோ, பாரதீய ஜனதாவோ, மார்க்சிஸ்ட் கட்சியோ,தேசியமுன்னணி—இடதுசாரி கூட்டணியோ எதுவானாலும் சரி அவை பொது மேடைகளிலென்ன பேசினாலும் தேர்தல் அறிக்கைகளை வைத்துப் பார்த்தால் கருத்தொருமிப்பு இருப்பது விளங்கும்... காங்கிரஸ் அரசு அதன் கொள்கையை மிகவும் வெளிப்படையாக்கி இருந்தது.பாரதீய ஜனதா, தேசிய முன்னணி — இடதுசாரி கூட்டணி, ஏன் மார்க்சிஸ்ட் கட்சி கூட மறைமுகமாக இதை வெளிப்படுத்தியுள்ளன. தேர்தல் அறிக்கைகளை கட்டவிழ்த்துப் பார்த்தீர்களேயானால் பொருளாதாரச் சீர்திருத்த அலை ஒன்று வலிமையாக வீசத் தொடங்கியுள்ளது தெரியும்... பொதுத் துறைகளில் அரசு முதலீடுகளை நீக்குவதறகாக ஒரு தனி ஆணையம் ஒன்றை அமைபபதாக பாரதிய ஜனதா வாக்குறுதிகூட அளித்துள்ளது.

**கேள்வி :** ஒவ்வொரு துறையிலும் நேரடியான வெளிநாட்டு முதலீடுகளை நீங்கள் ஆதரிக்கிறீர்களா?

**சேகர் :** நிச்சயமாக எந்தத் தயக்கமுமின்றி ஆதரிக்கிறோம். அவர்களது செயல்பாடுகள் வெளிப்படையாக இருக்க வேண்டும் என்பது மட்டுமே எங்கள் நிபந்தனை.

**— இந்தியன் எக்ஸ்பிரஸ்**
**(5-5-1996)**



படிப்பகம்

www.padippakam.com

போட்டி, அழுகிப்போன முதலாளியத்தின் உச்சக்கட்டச் செயற்பாடு ஆகிய கருத்தாக்கங்களை உள்ளடக்கியது என்பதை நாம் அறிவோம். ஏகாதிபத்தியத்திற்கெதிரான தேசிய எதிர்ப்பு அழுகிப்போன முதலாளிய முறையின் வீழ்ச்சி, உலகப் பகிவிற்கான ஏகாதிபத்தியப் போட்டி ஆகியவை இதனடியாக நாம் எதிர்பார்த்த விளைவுகள். ஆனால் இந்த விளைவுகள் நாம் எதிர்பார்த்த மாதிரி நடைபெறவில்லை என்பதை விளங்கிக் கொள்கிறோம். பல்வேறு நெருக்கடிகளை முதலாளியம் சந்தித்தபோதும் அவ்வளவு எளிதாக அது வீழ்ந்துவிடவில்லை. தேசியத் தன்மையுடன் கூடிய முதலாளிகள் என யாரையும் பிரித்துப் பார்ப்பது சாத்தியமில்லாமல் போய் விட்டது. உலக முதலாளிய மையங்களுக்கிடையே போட்டிகள் இருந்தபோதிலும் அவை இணைந்து நின்று உலகைக் கவ்விக் கொள்வதும் அதில் விளிம்புலக முதலாளிகள் விருப்பப் பூர்வமாய்ப் பங்கு பெறுவதும் காணக் கூடியதாக இருக்கிறது. இவற்றை நாம் எப்படி விளங்கிக் கொள்வது?

* (3) கடந்த அய்ந்தாறு ஆண்டு கால உலக முதலாளிய வரலாற்றில் எதிர்ப்பு இயக்கங்களின் தன்மைகள் எவ்வெவ்வாறு மாறி வந்துள்ளன? இன்றைய சூழலில் எதிர்ப்பு இயக்கங்களின் தன்மைகளாக எதையேனும் குறிப்பிட்டுச் சொல்ல முடியுமா?

## இரண்டு

### உலக முதலாளிய அமைப்பு என்பதென்ன?

அறியப்பட்ட மார்க்சியம் முன் வைத்து வந்த **ஏகாதிபத்தியம்** என்ற கோட்பாட்டுக்கும **உலக முதலாளிய அமைப்பு** என்கிற கருத்தாக்கத்திற்கும் இடையே சில நுண்மையான வேறுபாடுகள் உள்ளன. அதனை முதலில் விளங்கிக் கொள்வோம். விரிவான மார்க்சிய முன்னறிவோ, பொருளாதாரப் புரிதல்களோ இல்லாமலும் கூட விளங்கிக் கொள்ளும் வகையில் இப்பகுதி எழுத முயற்சிக்கப்பட்டுள்ளது என்கிற அறிவிப்போடு மேலே செல்வோம்

முதலாளியப் பரிணாம வளர்ச்சியின் தனி ஒரு கட்டத்தின் குணாம்சமாக ஏகாதிபத்தியம் என்பது வரையறுக்கப்பட்டது. மார்க்சியர்கள் எழுதியுள்ள அரசியல் பொருளாதாரம் குறித்த எந்த ஒரு நூலிலும் இதைக் காண முடியும். 19ம் நூற்றாண்டின் இறுதி மற்றும் இருபதாம் நூற்றாண்டின் தொடக்க கட்டத்தில் முதலாளியம் இவ்வாறு ஏகாதிபத்தியமாக வடிவெடுத்தது என்பது இதன் பொருள். முதலாளியத்தின் உலகளாவிய தன்மையை அதற்குப் பின்பே காண வேண்டும் என்பது இதன் உட்கிடை. மாறாக முதலாளியம் என்பது தோன்றும் போதே உலகளாவிய தன்மையுடையதாக உள்ளது என்பது உலக முதலாளியக் கருத்தாக்கத்தின் பங்களிப்பு முதலாளியம் அதற்கு முந்தைய உற்பத்தி முறைகளிலிருந்து வேறுபடுகிற மையமான புள்ளிகளில இது ஒன்று. முதலாளியத்தின் இந்த உலகளாவிய செயற்பாடு என்பது ஒவ்வொரு கட்டத்திலும் மூலதனத் திரட்டலில் முக்கிய பங்கு வகிக்கின்றது. கடலாதிக்கத்தின் மூலமான கொள்ளைகள்/வணிகம் என்பதான வடிவங்களில் முதற்கட்ட மூலதனத் திரட்டலின் உலகளாவிய தனமை அமைந்தது. விளிம்புகளிலிருந்து மையங்களை நோக்கி மூலதனத் திரட்சி இப்படித்தான் தொடங்கியது.

முதலாளியத்தின் முதல் முக்கிய பண்பாக அதன் உலகளாவிய தன்மையைக் குறிப்பிட்டால இரண்டாவது முக்கிய பண்பாக தொடர்ந்து அது சந்தித்து வரும் நெருக்கடிகளைச் சொல்லலாம். உலகளாவிய தன்மை

---

"அமெரிகாவின் கண்டுபிடிப்பு மற்றும நன்னமபிக்கை முனை வழியாக இநதியாவுக்குக கடல் வழி கண்டுபிடிபபு ஆகியவை மனித குல வரலாற்றில இரு முககிய புள்ளிகள். இதன் விளைவுகள் பிரும்மாணடமானவை. வணிகப பொருளாதாரத்தை வேறெந்த வழியிலும் அடைய முடியாத ஆடம்பரததுறகும் புகழுக்கும இது இட்டுச் சென்றது... அய்ரோபபியப பொருள்களுககான புதிய தீராத சந்தை ஒன்றைக் கண்டுபிடித்ததன் மூலம் புதிய வேலைப் பிரிவினைக்கும் கலை வளர்ச்சிக்கும் வித்திடப்பட்டது பழம் வணிகத்தின் குறுகிய வட்டத்தின் மூலம் இத்தகைய மாற்றங்களை நினைத்துக்கூடப் பார்க்க இயலாது. உழைப்பின் உற்பத்தித்திறன் பெருகியது... அய்ரோப்பாவின உற்பத்திப் பொருள்கள் அமெரிக்காவுக்குப் புதியவை. அமெரிக்கப் பொருளகள் அய்ரோப்பாவுக்குப் புதியவை. முன்பு சாத்தியமில்லாத பல புதிய பரிவர்த்தனைகள் இப்போது சாத்தியமாயின... எல்லோருக்கும் பயனளித்திருக்க வேண்



படிப்பகம்

www.padippakam.com

யைப் போலவே நெருக்கடியும் முதலாளியத்தின் பிரிக்கமுடியாத அம்சமாகும். மூலதனத் திரட்சி, நெருக்கடி ஆகியவற்றின் விளைவாக முதலாளியத்தின் தன்மை அவ்வப்போது மாறுபடுகிறது தொடக்க முதலாளியம் (கி பி 1500 — 640), வணிக முதலாளியம் (1640 — 1750), தொழில் முதலாளியம் (1750 — 1870), ஏகபோக முதலாளியம் (1870 — 1950), பன்னாட்டு நிறுவன முதலாளியம் (1950 — )எனப் பல கட்டங்களை முதலாளிய வரலாற்றில் நாம் அறிவோம் முதலாளியத்தின் தன்மை இவ்வாறு மாறுவதற்கேற்ப ஒவ்வொரு கட்டத்திலும் உலக முதலாளியத்தில் கட்டுமானச் சீரமைப்புகள் மேற்கொள்ளப்பட வேண்டியதாயிற்று **எனவே கட்டுமானச் சீரமைப்பு என்பது உலக முதலாளிய வரலாற்றில் தொடர்ந்து நடைபெற்று வரும் நிகழ்வுதான். அதன் தன்மைகள மட்டும் அவ்வப்போதைய முதலாளியக் கட்டத்திற்கேற்ப மாறி வந்த போதிலும் நோக்கம் மாறுவதில்லை. என்ன நோக்கம்?**

நெருக்கடியிலிருந்து தப்புவதே அந்த நோக்கம். நெருக்கடி என்பதென்ன? **முதலாளிய அமைப்பின் மறுஉருவாக்கம் தடைப்படுவதையே நெருக்கடி** என்கிறோம் முதலாளியத்தின் அடிப்படையான அம்சமாக மூலதனத்தின் அடிப்படையில் உழைப்பின் உபரியைச் சுரண்டுதல் என்பதைச் சொல்லலாம் இத்தகைய மூலதனத் திரட்சிக்கு ஆபத்து வரும்போது முதலாளியம் நெருக்கடியைச் சந்திக்கிறது. **உழைப்பாளிகளிடமிருந்து முதலாளிகளை நோக்கியும், விளிம்புலகிலிருந்து மையங்களை நோக்கியும் மூலதனம் இயங்கிக் கொண்டிருப்பதே முதலாளிய மறுஉருவாக்கத்தின்** நிபந்தனையாகும் கட்டுமானச் சீரமைப்பு இந்த நிபந்தனையைப் பூர்த்தி செய்யுமாறு நிறைவேற்றப்படுகிறது. எனவே கட்டுமானச் சீரமைப்புகள் என்பன உலக முதலாளிகளும் பயனடையக் கூடியதாகவும் விளிம்புலக மக்களுக்குப் பேரழிவு ஏறபடுத்தக் கூடியதாகவும் இருக்கின்றன. உலக முதலாளிகள் எனச் சொல்லும்போது அதில் மையங்களிலுள்ள முதலாளிகள் மட்டுமின்றி விளிம்புகளின் பெரு முதலாளிகளும் அடங்குவர்.

---

டிய ஒரு நிகழ்வு அய்ரோப்பியர்களின் மனிதத் தன்மையற்ற அநீதியான செயற்பாடுகளின் விளைவாக பல துரதிருஷ்டமிக்க நாடுகளைப் பேரழிவிற்கு இட்டுச் சென்றது.''

**— ஆடம் ஸ்மித்** 'தேசங்களின் சொத்துக்கள்'' 1776

''அமெரிக்காவின் கண்டு பிடிப்பும் நன்னம்பிக்கை முனை வழியும் வளரும் முதலாளிகளுக்கு புதிய சாத்தியங்களைத் திறநதுவிட்டன. கிழக்கிந்திய மற்றும் சீனச் சநதைகள், அமெரிக்கக் குடியேற்றம், குடியேற்ற நாடுகளுடன் வணிகம், பர்வர்த்தனைச் சாதனங்களிலும், பண்டங்களிலும் ஏற்பட்ட அதிகரிப்பு முதலியன கடல் வணிகம், வணிகம், தொழில் ஆகியவற்றில் முன்பு சாத்தியமற்ற பெருவளர்ச்சிக்கு வித்திட்டன.''

**—கார்ல் மார்க்ஸ், பிரடெரிக் ஏங்கல்ஸ்**

—''பொதுவுடைமை அறிக்கை'' (1848)

''உற்பத்திப் பொருள்களுக்கான ஒரு நிரந்தரச் சந்தையை குடியேற்றங்கள் ஏற்படுத்தின. இவ்வாறு உருவான சந்தை ஏகபோக மூலதன திரட்சிக்குக் காரணமாகியது. வெளிடபடையான கொலை, கொள்ளை, அடிமைகளைக் கைப்பற்றுதல் ஆகியவற்றின் மூலமாக கைப்பற்றப்பட்ட செல்வங்கள் அய்ரோப்பாவிற்குக் கொண்டு செல்லப்பட்டு மூலதனமாக மாற்றப்பட்டன. அய்ரோப்பியக் கூலித் தொழிலாளிகளின் மறைமுகமான அடிமைத் தனத்திற்கு அடித்தளமாக குடியேற்ற உலகின் அடிமைத்தனம் பயன்பட்டது... மூலதனம் இவ்வாறு தலைமுதல் பாதம் வரை ஒவ்வொரு துளையிலிருநதும் ரத்தமும் அழுக்கும் சொட்டச் சொட்டத் தான் அரங்கில் நுழைந்தது'.

**—கா. மார்க்ஸ்** ' மூலதனம்'' (1867)

**' சர் பிரான்சிஸ் ட்ரேக்** ஸ்பெயினல் அடித்து வந்த கொள்ளையே பிரிட்டனின் வெளிநாட்டு முதலீட்டின் அடித்தளமாக அமைந்ததாகக் கருதப்படுகிறது. இந்தக் கொள்ளையின் ஒரு பகுதியை தனது வெளிநாட்டுக் கடனைத் தீர்ப்பதற்காகவும், இன்னொரு பகுதியை **லெவன்ட்** கம்பெனியில் முதலீடு செய்வதற்கும அரசி **எலிசபெத்** பயன்படுததிக் கொண்டாள். லெவனட கம்பெனி மூலம் கிடைத்த லாபமே கிழக்கிந்தியக் கம்பெனி உருவாவதற்குக் காரணமாகியது 17, 18ஆம் நூற்றாண்டுகளில் கிழக்கிந்தியக் கம்பெனி மூலம் கிடைத்த லாபமே இங்கிலாநதின் வெளிநாட்டுத் தொடர்புகளுக்கான முக்கிய அடிததளமாக விளங்கியது ''

**—J.M. கீன்ஸ்** ''பணம் குறித்த ஆய்வு'' (1930)



படிப்பகம்

www.padippakam.com

சற்று விளக்கமாக மேலே குறிப்பிட்ட பல்வேறு முதலாளியக் கட்டங்களைப் பகுத்துப் பார்ப்போம்.

| முதலாளியக் கட்டங்கள் | உலகளாவிய செயற்பாடுகள் |
|---|---|
| **கட்டம் 1 : கி. பி. 1500 — 1640** | |
| உலக முதலாளியத்திற்கு அடித்தளம் இடும் முயற்சி. தொடக்க வணிக வடிவங்கள். | கொள்ளைகள், படை எடுப்புகள், ஆரம்பக்கால வெள்ளைக் குடியேற்றங்கள். |
| **கட்டம் 2 : கி. பி. 1640 — 1750** | |
| இதற்குமுன் இருந்திராத ''உலகம்'' என்னும் கருத்தாக்கம் உருப்பெற்று அதனடிப்படையில் வணிக முதலாளிய அமைப்பு உறுதிப்படுதல். | கொள்ளைகள் பரவுதல், குடியேற்றங்கள் உறுதிப்படுதல். விளிம்புகளில் மையங்களின் பாசறைகள் வலுப்படுதல். பொருள் வணிகம். |
| **கட்டம் 3 : கி. பி 1750 — 1870** | |
| செல்வியல் முதலாளியம். உலகெங்கிலிருந்தும் அய்ரோப்பாவை நோக்கி மூலதனம் திரளுதல். மூலதனம் மூலதனத்தை உற்பத்தி செய்தல். எனினும் புராதன மூலதனத் திரட்சி தொடர்தல். | தொடரும் குடியேற்றங்கள், தூரத்து விளிம்புகள் உட்கவரப்படுதல், மையங்களைச் சார்ந்து விளிம்புகள் நிற்றல் வெளிப்படையாகத் தெரிதல் |
| **கட்டம் 4 : கி. பி. 1870 — 1950** | |
| ஏகபோக முதலாளியம். புராதன மூலதனத் திரட்சி என்பது வணிகம் மற்றும் இதர துறைகளில் வெளிப்படையாகத் தெரியும் ஏற்றத்தாழ்வான பரிவர்த்தனையாக மாறுதல். அய்ரோப்பிய நிதி மூலதனம் உலகை முதலாளியமயமாக்குகிறது. ஐரோப்பாவை நோக்கி மூலதனம் குவிதல் தொடர்கிறது. | சார்புநிலை வளர்ந்து உறுதிப் பெறுதல். சில நாடுகள் அரசியல் விடுதலை பெறுகின்றன. உலகப் பொருளாதாரத்தின் விளிம்புகள் கீழ் நிலையில் ஒருங்கிணைக்கப்படுகின்றன. |
| **கட்டம் 5 : கி. பி 1950-க்குப் பின்** | |
| பன்னாட்டு முதலாளிய வடிவம் உருவாதல் மூலதனம் இயல்பில் உலகமயமாயிருந்தாலும் மையங்களில் செறிவடைகிறது. இதன் விளைவாகப் **''புதிய சர்வதேச வேலைப் பிரிவினை''** ஒன்று உருவாகின்றது. | இதர குடியேற்ற நாடுகளும் விடுதலை அடைகின்றன. சார்புநிலை மிகவும் ஆழமாகவும் நுணுக்கமாகவும் வெளிப்படுகிறது. விளிம்புகளிலுள்ள மேலாதிக்க சக்திகள் மையங்களின் பிரதிபலிப்பாக விளிம்புகளைக் கட்டமைக்கும் நோக்குடன் ''புதிய சர்வதேசப் பொருளாதார ஒழுங்கு'' ஒன்றிற்குக் கட்டியம் கூறுகின்றனர். |



படிப்பகம்

www.padippakam.com

மேற்கண்ட அட்டவணையை விளங்கிக் கொள்ளும்போது கீழ்க்கண்ட எச்சரிக்கைகள் அவசியம். முதலில் இது ஒரு முற்று முழுதான சித்திரமல்ல ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் உள்ள பொருளாதாரச் செயற்பாடுகள் விரிவாக விவரிக்கப்படவில்லை. விளிம்புகள் கச்சாப் பொருட்களையும் உழைப்பாளிகளையும் ஏற்றுமதி செய்து கொண்டிருந்த நிலையிலிருந்து நுகர் பொருளுற்பத்தி நிலைக்கு மாறுதல் என்கிற நிலையை வந்தடைந்ததும் மையங்கள் நுகர் பொருளுற்பத்தி நிலையிலிருந்து கருவி உற்பத்தி நிலைக்கு மாறியதும் சுருக்கம் கருதி விரிவாகச் சொல்லப்படவில்லை மையங்கள் பிறகு கருவி உற்பத்தி நிலையிலிருந்து பணித்துறை சார்ந்த — பொருள் சாரா உற்பத்தி நிலைக்கு மாறியதைச் சற்று விரிவாய்ப் பிறகு பார்ப்போம். விளிம்புகளிலுள்ள தொழில்கள் எல்லாம் முதலில் நீக்கப்பட்டு (Deindustrialisation) கச்சாப் பொருளுற்பத்தி மற்றும் அடிமைகள் உற்பத்திக் கேந்திரங்களாக்கப்பட்டன பின்னர் இங்குள்ள மலிவான உழைப்பைப் பயன்படுத்தி இங்கேயே நுகர் பொருட்களை உற்பத்தி நோக்குடன் தொழில் நுட்பம் மற்றும் நிதிக்கு மையங்களைச் சார்ந்திருக்குமாறு விளிம்புகள் re-industrialise செய்யப்பட்டன. இறக்குமதிப் பதிலீடு / ஏற்றுமதிப் பதிலீடு போன்ற கருத்தாக்கங்கள் மூலம் இதனைப் பொருளியலாளர்கள் விளக்குவர். மொத்தத்தில் கவனிக்க வேண்டியவை: சார்புநிலை அதிகரித்தல், மூலதனத் திரட்சி விளிம்புகளிலிருந்து மையங்களை நோக்கி அமைதல், தொழில்நுட்ப இடைவெளி அதிகமாதல்.

இரண்டாவது எச்சரிக்கை: மேற்கண்ட முதலாளிய கட்ட மாற்றங்கள் என்பதை படிப்படியான வளர்ச்சிப்' போக்காக நான் குறிப்பிடவில்லை. கடைசியாக: பொதுப் போக்காக மேற்கண்ட கூறுகள் சுட்டிக் காட்டப்பட்டதே யொழிய உலகெங்கும் இதே மாதிரியான போக்குகளே எல்லா இடங்களிலும் கடைபிடிக்கப்பட்டதாகக் கருத வேண்டியதில்லை தவிரவும் மையங்களுக்கிடையேயான மேலாண்மை என்பது அய்ரோப்பிய நாடுகளுக்குள்ளேயே மாறிக் கொண்டிருந்தன. இரண்டாம் உலகப் போரையொட்டி அமெரிக்காவுக்கு இது மாறியது. 1960க்குப் பின் அமெரிக்க மேலாண்மையும் சற்றே ஆட்டம் காணத் தொடங்கியது.

ஏகாதிபத்தியக் கோட்பாட்டுருவாக்கத்திற்கும் உலக முதலாய அமைப்பு என்கிற கருத்தாக்கத்திற்குமிடையே மேலும் சில வேறுபாடுகளைக் காண்போம் ஏகாதிபத்தியக்கோட்பாட்டாளர்கள் ஏகாதிபத்திய நடவடிக்கைகளுக்காக அய்ரோப்பாவைக் கண்டித்தபோதும் ஏகாதிபத்தியங்களின் பங்கை முதன்மைப்படுத்துவது என்பதன் மூலமும் ஏகாதிபத்திய உருவாக்கத்தில் விளிம்பு நாடுகளின் பங்கை மறுப்பதன் மூலமும் அய்ரோப்பாவை முதன்மைப் படுத்தும் போக்குடையவர்களாக இருந்தனர். இதனை அய்ரோப்பிய மையப் பார்வை என்பர். மாறாக உலக முதலாளிய உருவாக்கத்தில் விளிம்புகள் செயலூக்கமற்ற பங்கை வகிக்கவில்லை மிகவும் செயலூக்கமான பங்கை வகித்தன. இந்தியாவின் பங்கு இல்லாமல் 17ஆம் நூற்றாண்டுக்குப் பிந்திய இங்கிலாந்தின் வரலாறு இல்லை கரீபியத் தீவுகளின்றி இன்றையவலுவான அமெரிக்கா இல்லை லத்தீன் அமெரிக்கா இன்றி ஸ்பெயின் கிடையாது. ருவாண்டா இன்றி பெல்ஜியம் கிடையாது... இப்படி. இது ஏதோ பொருளியல் ரீதியான கட்டமைப்புக்கு மட்டுமல்ல. மையங்களில் உருவான அரசியல், கலாச்சாரக் கட்டமைப்புகளிலும் விளிம்புகளின் தாக்கங்கள் இருந்தன. விளிம்புகளின் 'மற்றது' (Other)களாக மையங்கள் தம்மைக் கட்டமைத்துக் கொண்டன. விளிம்புகளின் மேலாதிக்க சக்திகள், பொருளியல் மற்றும் அதனையொட்டிய நவீனமயமாதல் ஆகிய அம்சங்களில் மையங்களின் பிரதிபலிப்பாகவும் பண்பாட்டு அம்சங்களில் மையங்களின் 'மாற்றுகளாக'வும் தம்மைக் கட்டமைத்துக் கொண்டன இன்றளவும் பாரதீய ஜனதா கட்சி ''உருளைக்கிழங்குசிப்ஸ் வேண்டாம். கம்ப்யூட்டர் சிபஸ் வேண்டாம்'' என்கிற முழக்கத்தை வைப்பது கவனிக்கத்தக்கது. மொத்தத்தில் இந்தக் கட்டமைப்புகள் அனைத்தும் விளிம்புகளைப் பலவீனப் படுத்துவதாகவும் மையங்களைப் பலப் படுத்துவதாகவும் இருந்த போதிலும் விளிம்புகளிலுள்ள மேலாதிக்க சக்திகள் (Elites) இதனைச் செயலூக்கம் நிறைந்த பங்குடன் விருப்பபூர்வமாகவே மேற்கொண்டன.

ஏகாதிபத்தியத்தை உற்பத்தி செய்கிற வினை மூலங்கள் Sources of Imperialism) (எ டு முதலாளிகள்) என்பன ஏகாதிபத்திய மையங்களில் மட்டுமே உள்ளன என்கிற கருத்தாக்கத்திற்கு மாறாக உலக முதலாளியக் கருத்தாக்கத்தை முன்மொழிபவர்கள ஏகாதிபத்திய மூலங்களை (அ) மையங்களுக்கு முன் உள்ளவை எனவும் (ஆ) விளிம்புகளுக்குள் உள்ளவை எனவும் இரண்



படிப்பகம்

www.padippakam.com

டாகப் பிரிக்கின்றனர். ஏகாதிபத்தியத்தை வலுப்படுத்துவதிலும் விளிம்புகளைப் பல வீனப்படுத்துவதிலும் மையங்களிலுள்ள ஏகாதிபத்திய மூலங்களைப் போலவே விளிம்புகளிலுள்ளவர்களும் செயலூக்க முள்ள பங்கை வகிக்கின்றனர். இந்த ஏகாதி பத்திய மூலங்கள் என்பதில் பொருளியல் ஆதிக்க சக்திகளைத் தவிர அரசியல் மற்றும் கலாச்சார ஆதிக்க சக்திகளும் அடங்குவர்.

ஏகாதிபத்திய அமைப்பு என்பதை மூன்று கூறுகளாகப் பிரிக்கலாம் அவை:

1) ஏகாதிபத்தியத்திற்குள் உள்ள உற்பத்தி சக்திகள் / உற்பத்தி உறவுகள்.

2) ஏகாதிபத்தியத்திற்கும் விளிம்பிற்கு முள்ள உறவு.

3) விளிம்புகளிலுள்ள உற்பத்தி சக்தி கள் / உற்பத்தி உறவுகள்.

அறியப்பட்ட மார்க்சியத்தின் ஏகாதி பத்தியக் கோட்பாட்டின்படி இம் மூன்றில் முதலாவது மற்ற இரண்டையும் தீர்மானி கிறது. மாறாக உலக முதலாளியக் கருத் தாக்கத்தின் படி இரண்டாம் கூறே அதாவது மையத்திற்கும் விளிம்பிற்கும் உள்ள உறவே மற்ற இரண்டையும் அதாவது மையத்தின் உற்பத்தி முறையையும் விளிம்பின் உற்பத்தி முறையையும் தீர்மானிக்கிறது. எனவே உலக முதலாளிய அமைப்பில் ஏற்படும் மாற்றங்களை எளிமைப்படுத்திப் (முதல் கூறு மாறுகிறது எனவே இரண்டும் மூன்றும் மாறுகின்றன) பார்க்காமல் அதன் சிக்க லான தன்மையைக் கணக்கில் எடுத்துக் கொண்டு பார்க்க வேண்டும். மையத்திற்கும் விளிம்பிற்குமுள்ள உறவின் தன்மை மாறாத வரை உலக முதலாளிய அமைப்பு தன்னைத் தக்க வைத்துக் கொண்டே இருக்கும். நெருக்கடிகளிலிருந்து தன்னை மீட்டுக் கொள்ளும் இதில் மையத்திலுள்ள சக்தி களைப் போலவே விளிம்பிலுள்ள ஆதிக்க சக்திகளும் தம்மைப் பரிபூரணமாக ஈடு படுத்திக் கொள்ளும்.

எனவே 'உலகப் பொருளாதாரம்' என் கிற கருத்தாக்கத்தையும் பொருளாதாரம் என்கிற கருத்தாக்கத்தையும் நுணுக்கமாக வேறுபடுத்திப் பார்க்க வேண்டும உலகில் பல தேசீயப் பொருளாதாரங்கள இருக்கவே செய்தாலும் இவை எல்லாவற்றையும் உள் ளடக்கிச் செயல்படுகிற உலகப் பொருளா தாரம் ஒன்று முதலாளிய வடிவில் 16ஆம் நூற்றாண்டிலிருந்து இங்கு செயல்பட்டு வருகின்றது. சந்தை மூலமாக ஒருங் கிணைக்கப்பட்ட உற்பத்திச் செயல்பாடு களுக்குப் பொருத்தமான சமூக வேலைப் பிரிவினை எங்கெல்லாம் இருக்கிறதோ அங்கெல்லாம் உலகப் பொருளாதார அமைப்பு மேலாண்மை வகிக்கிறது அரசியல் அலகால் வரையறுக்கப்பட்ட புவியியல் (தேச) எல்லைகளை எல்லாம் தாண்டி இந்த முத லாளிய உலகப் பொருளாதாரம் அல்லது உலக முதலாளிய அமைப்பு செயல்படுகிறது எந்த ஒரு அரசியல் அலகும் அதனுடைய எல்லாப் புலங்களின் மீதும் தனது இறுதி இறையாண் மையைச் செலுத்தக்கூடியதாக இல்லை என் பது உலக முதலாளியக் கருத்தாக்கத்திலிருந்து பெறப்படும் ஒரு முக்கியக் கருத்தாகும். முற்றிலும் சுயேச்சையான, சுதந்திரமான அரசு என ஒன்று சாத்தியமில்லை ஒரு குறிப்பிட்ட காலக்கட்டத்தில் மிக வலுவாக விளங்கும் எந்த ஒரு அரசுக்கும் இது பொருந்தும். வேண்டுமானால் அது ஒப்பீட் டளவில் கூடுதலான சுயேச்சைத் தன்மைப் பெற்றிருக்கலாம். எல்லாப் புலங்களிலும் முழுமையான சுயேச்சைத்தன்மை சாத்திய மில்லை. உலகப் பொருளாதாரம் என்பது ஒரு ''அரசிடை அமைப்பு'' (Interstate System). இதற்குள் நின்று கொண்டு இதன் மூலமாகவே எல்லா அரசியல் அலகுகளும் தங்களை இறை யாண்மையுள்ள அரசுகளாக (Sovereign States) வரையறுத்துக் கொள்கின்றன சுதந் திரத்தன்மையும் இறையாண்மையும் ஒப்பீட் டளவிலானதே. முற்றுண்மையானதல்ல. (Only relative not absolute).

கலாச்சார மட்டத்தில் உலகப் பொரு ளாதாரம் என்பது பலவேறு சிக்கலான கூறு களின் தொகுப்பாக விளங்குகிறது. ஆனால் இதில் ஒரு ஏற்றத்தாழ்வான படிநிலையாக் கம் கட்டமைக்கப்பட்டுள்ளது எனினும் இது ஒரு கேள்வி முறையற்ற கட்டமைப் பாக இல்லை இதற்குள் எதிர்க் கூறுகளும் கலகச் செயற்பாடுகளும் இருக்கவே செய் கின்றன உலகப் பொருளாதார அமைப்பின் கீழ் தன்னைத் ''தேசமாக'' வரையறுத் துக் கொள்ளும் எந்த ஒரு அரசியல் குழும மும் அதற்குரிய வகையில் தனது எல்லைக் குட்பட்ட சமூகத்தை ''தேசிய இனமாக'' உற்பத்தி செய்யும். உலக முதலாளிய அமைப்பு தேச உருவாக்கம் பற்றிய சில வரையறைகளை உருவாக்கியுள்ளது. அதி காரப்பூர்வமான வழமைகள், சட்டங்கள், மொழி, மதம், பணபாடு, வலிமையான அரசு, அதற்குரிய நவீன தொழில் நுட் பங்கள், ஒருங்கிணைக்கப்பட்ட நிர்வாகம்/



படிப்பகம்

www.padippakam.com

கல்வி / தொடர்பு, உலகளாவிய பொருளியல் தொடர்பு என்பன இவற்றில் சில. இவற்றை ஏற்றுக் கொண்டு தேசத்தைக் கட்டமைக்கும் சக்திகள் இதற்குரிய வகையில் கீழ்க்கண்ட செயற்பாடுகளை மேற்கொள்கின்றன.

அ) வலிமையான அரசு / நவீன தொழில் நுட்பங்கள் / கல்வி / தொடர்புச் சாதனங்கள் முதலியன.

ஆ) அய்யத்திற்கிடமற்ற ஒருமைத் தன்மையுடன் கூடிய (Homogenious) இறுக்கமாக வரையறுக்கப்பட்ட சமூகம்.

இ) பண்பாட்டு ரீதியான (மேற்கண்டவாறு வரையறுக்கப்பட்ட) தனித்துவமும் பொருளியல் ரீதியான ஒருங்கிணைவும்.

பாரதீய ஜனதா கட்சியின் ''பாரத'' மற்றும் ''இந்துத்துவ''க் கட்டமைப்பில் இக்கூறுகள் செயல்படுவதை யாரும் எளிதில் விளங்கிக் கொள்ள முடியும்.

---

மார்க்சிய ஏகாதிபத்தியக் கொள்கை லெனினால் தோற்றுவிக்கப்பட்டது என்பதை நாம் அறிவோம். இதன் முக்கிய அம்சங்களாக ஏகபோகம், நிதி மூலதனம் ஆகியவற்றைக் குறிப்பிடுவார்கள் மார்க்ஸ் எங்கல்ஸ் எழுத்துக்களில் ஏகாதிபத்தியம் என்கிற கருத்தாக்கம் கிடையாது மார்க்ஸ் காலத்தில் முதலாளியம் ஏகாதிபத்தியமாக மாறவில்லை எனச் சொல்லி இப்பிரச்சினையிலிருந்து நாம் எளிதில் கழன்று கொள்ள முடியாது. மார்க்ஸ் காலத்திய முதலாளியத்திலிருந்து லெனின் காலத்திய முதலாளியம் வேறுபட்டிருந்தது என்றாலும் முதலாளியத்தின் உலகளாவிய தன்மையை மார்க்ஸ் வலியுறுத்தவே செய்கிறார் ஏகபோகம், நிதி மூலதனம் என்கிற இரு கருத்தாக்கங்களுமே லெனினால் முதன் முதலில் கண்டு பிடிக்கப்பட்டவை அல்ல. இல்ஃபெர்டிஸ், காவுட்ஸ்கி, பெர்ன்ஸ்டெய்ன், என்கிற பாரம்பரியத்தில் லெனினின் காலக்கட்டத்தில் இவை முக்கிய விவாதப் பொருளாக இருந்தன. எடுத்துக்காட்டாக மார்க்ஸின் ''மூலதனம்'' போல இல்பெர்டிஸ் 1910 இல் ''நிதி மூலதனம் — Das Finanz Kapital'' என்கிற நூலை எழுதினார். மேற்குறித்த சனாதன மார்க்சியப் பாரம்பரியத்தில் நின்று அதனால் வரையறுக்கப்பட்ட சட்டகங்களை (Frame Works) மீறாமல் லெனின் நின்று விவாதம் புரியவேண்டியதாயிற்று ஏகபோகம் என்பதை அரசியல் / பொருளியல் துறைகளில் வரவேற்று காவுட்ஸ்கி எழுதியதை லெனின் 'Ultra Imperialism'' எனக் கண்டிக்க வேண்டிய புகாரினுக்கு எதிராக வாதிட வேண்டிய சூழலிலும் நிலையிலும் தான் அவரது ஏகாதிபத்தியம் பற்றிய கருத்தாக்கங்கள் உருவாயின. எனினும் ஏகபோகம் பற்றி அவர் சொன்னபோதும், ''பரிவர்த்தனை, சந்தை, போட்டி, நெருக்கடி ஆகியவற்றோடு இணைத்துத்தான் ஏகபோகம், ஏகாதிபத்தியம் ஆகியவற்றைப் பார்க்க வேண்டும்'' எனவும் ஏகாதிபத்தியத்தின் அடிப்படையாக முதலாளியம் இருக்கிறது என்பதையும் அவர் திரும்பத்திரும்ப வலியுறுத்தினார். ஏகபோகம் என்பதை எளிமைப்படுத்தாமல் அதனுடைய சிக்கலான தன்மைக்கு முக்கியத்துவமளித்து அணுகினார் 'முதலாளியத்தின் சமச்சீரற்ற வளர்ச்சி' என்கிற கருத்திற்கு அவர் கூடுதல் முக்கியத்துவம் அளித்தார். சொல்லப் போனால் இந்த சமச்சீரற்ற வளர்ச்சி என்பதையே லெனினின் முக்கிய பங்களிப்பு எனலாம். ஆனால் இந்தப் பின்னணி எல்லாம் புறந்தள்ளப்பட்டு அறியப்பட்ட மார்க்சியப் பாரம்பரியத்தில் ''ஏகாதிபத்தியம்—முதலாளியத்தின் உச்ச கட்டம்'' என்கிற கருத்தாக்கமே வற்புறுத்தப்பட்டது, ஆய்வுச் சட்டகத்தையே கேள்விக்குள்ளாக்க வேண்டிய சூழலில் அதைச் செய்யாமல் அதே சட்டகத்திற்குள் நின்று கொண்டு பழமைவாதிகளுக்கு எதிராகப் பேச நேர்கிறவர்களுக்கு ஏற்படும் சிக்கலையே லெனினும் சந்திக்க வேண்டியதாயிற்று 'தேசியம்' குறித்து பழைய சட்டகங்களையே மாற்ற வேண்டும் என நாம் சொல்லிவருகிற கருத்துக்களை கடந்த சில ஆண்டுகளில் தமிழ் மார்க்சியர்கள் கவனத்தில் எடுத்துக்கொள்ளாமல் பழைய சட்டகங்களுக்குள்ளேயே நின்று பேசுவது கவனிக்கத்தக்கது.

ஏகாதிபத்தியம் தொடர்பான மார்க்சியக் கருத்தாடல்கள் பற்றி மேலும் அறிய LUCA MELDOLSI யின் BRAUDEL AND LENIN மற்றும் HERB ADDO வின் CRISIS IN MARXIST THEORY OF IMPERIALISM கட்டுரைகளைப் படிக்கலாம்.



படிப்பகம்

www.padippakam.com

இவ்வாறு உருவாக்கப்பட்ட தேச அரசுகளைக் கட்டுப்படுத்தும் உரிமையை மேற்சண்ட வரையறைகளின் அடிப்படையில் இழந்து நிற்பவர்கள் தங்களை மத அடிப்படையிலோ, மொழி அடிப்படையிலோ, இன அடிப்படையிலோ சிறுபான்மையினராக உணர்ந்து அதிகாரத்தை நோக்கிப் போராடுகின்றனர். இவர்கள் இரு சாரருமே உலக முதலாளியக் கட்டமைப்பிற்குட்பட்டே நிற்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. உலக முதலாளியம் தனது சொல்லாடல்கள் / கதையாடல்கள் மூலம் தனது நியாயப்பாட்டிற்கான கருத்தியலைத் தொடர்ந்து பரப்பி வருகிறது. உலகெங்கிலும் பல்வேறு பொருளாதார / சமூக அமைப்புகளுடன் மனிதர்கள் வாழ்ந்து வருகின்றனர். நாட்டிற்கு நாடு உள்ள இடரீதியான வேறுபாடுகளை (Spatial differences) கால வேறுபாடுகளாக (Temporal differences) மாற்றி முதலாளிய "வளர்ச்சி"ப் போக்கில் நீ பின் தங்கிய காலகட்டத்தைச் சேர்ந்தவனாக இருக்கிறாய் என்று பேசி மையங்கள் தனது மேலாண்மையுடன் கூடிய உறவை விளிம்புகளுடன் ஏற்படுத்திக் கொள்கின்றன.

## மூன்று

**உலக முதலாளியத்தின் இன்றைய கட்டம் : ஒரு முக்கிய குறிப்பு.**

1980 களில் உலக முதலாளியத்தில் ஒரு மிகப் பெரிய மாற்றம் நிகழ்ந்தது. இதன் விளைவாக உலக அளவில் ஒரு புதிய வேலைப் பிரிவினை உருவாகியுள்ளது. முதலாளிய உற்பத்தி என்பது இப்போது—

- ஆ) பொருள் சார்ந்த உற்பத்தி (Material production)
- ஆ) பொருள் சாரா உற்பத்தி (Non-Material production)

என இரு துறைகளாகப் பிரிந்து நடைபெறுகிறது பொருள் சார்ந்த உற்பத்தி என்பதில் எலலா நுகர்பொருள் மற்றும் தொழில் உற்பத்தியும் அடங்கும். பொருள் சாரா உற்பத்தி மற்றும் பணித்துறை சார்ந்த உற்பத்தி (Service Sector)யில் உயர் தொழில் நுட்பம், உற்பத்தி வடிவமைப்பு மற்றும் ஆயவு, பணிப் பொருளாதாரம், ரியல் எஸ்டேட், அறிவுச் சொத்துரிமை, வணிக மற்றும் நிதி அகக் கட்டுமானங்கள், தகவல் தொடர்பு ஆகியவை அடங்கும். இதில் குறிப்பிடத்தக்க அம்சம் என்னவெனில் பொருள் சாரா உற்பத்திக்குக் கட்டுப்பட்டதாக பொருள்சார்ந்த உற்பத்தி ஆக்கப்பட்டுள்ளது. எளிதில் அதிகம் லாபம் ஈட்டக்கூடிய துறையாக பொருள் சாரா உற்பத்தி மாறியதன் அடிப்படையிலேயே இன்று ஒரு புதிய உலக வேலைப் பிரிவினை உருவாகியுள்ளது.

இந்தப் புதிய உலக வேலைப் பிரிவினையில் பொருள் சார்ந்த உற்பத்திகள் விளிம்பு நாடுகளுக்கு மாற்றீடு செய்யப்படுகின்றன. மைய நாடுகளில் பொருள்சாரா உற்பத்திக் குவிப்பு நடைபெறுகின்றது எடுத்துக் காட்டாக ஒரு புள்ளி விவரம் 1900த்தில் மொத்த அமெரிக்கத் தொழிலாளிகளில் பத்து சதம் பேர் மட்டுமே தகவல் தொடர்புத் துறையில் பணியாற்றினார் 1980-இல் இது 45 சதமாக உயர்ந்தது. மொத்த ஊதியச் செலவில் 63 சதம் தகவல் தொடர்புத் துறையில் பணியாற்றுபவர்களுக்குப்போகிறது. அமெரிக்கா கனடா மற்றும் அய்ரோப்பிய மைய நாடுகள் தவிர ஜப்பான் போன்றவற்றிலும் இந்நிலை பெரிய அளவில் உருவாகியுள்ளது. விளிம்புகளில் தோற்றுவிக்கப்படும் உபரி அனைத்தும் மையங்களிலுள்ள பொருள் சாரா உற்பத்தித் துறையை நோக்கிக் குவிக்கப்படுகின்றன.

எனவே இன்று இவ்வாறு விவசாயம், கட்டுமானம், பணித்துறை ஆகிய நகராத துறைகள் (immobile sectors) மட்டுமே மையங்களில் குவிந்துள்ளன. நகரும் துறைகளாக (mobile sectors) உள்ள தொழில் மற்றும் நுகர்பொருள் உற்பத்தி என்பது விளிம்புலகிற்குத் தள்ளப்பட்டு விட்டது. பண்டச் சந்தையை தனது ஏகபோகமாகக் கொண்டுள்ள உலக முதலாளிய மூலதனம் இவ்வாறு பொருள் சார்ந்த உற்பத்தியைப் பொருள் சாரா உற்பத்திக்குக் கட்டுப்பட்டதாய் மாற்றுவதில் முழு வெற்றி பெற்று விட்டது. இவ்வாறு ஆனறு உற்பத்தி ரீதியாக உலகம் இருவேறு குவியங்களாகப் பிரிந்து கிடக்கிறது. மையங்களிலும், விளிம்புகளிலுமுள்ள முதலாளிய சக்திகள் இதன் மூலம் பெரும் லாபத்தைக் குவிக்கின்றன

இந்நிலை தோன்றுவதற்கும், தொடர்வதற்குமான அடிப்படை நிபந்தனை உலக அளவிலான ஒரு மலிவு உழைப்புப் பொருளாதாரத்தை (Cheap labour economy) ஒன்றை உருவாக்குவதே. உள்நாட்டு நுகர்வைக் குறைத்து உற்பத்தியாகும் பொருட்கலை மைய நாடுகளின் நுகர்வுக்கு ஏற்றுமதி செய்வதற்கேற்ப விளிமபுலக மக்களின் கூலியைக் குறைப்பது அவசியமாகிறது. விளிம்புலக உழைப்பாளிகளின் கூலியைக் குறைப்பதன்



படிப்பகம்

www.padippakam.com

மூலமே ஏற்றுமதியாகும்பொருட்களின் மூலமாக உபரியை அதிகப்படுத்த முடியும் பொருட்களின் விலையை உலக மயமாக்கி (அதாவது உலகெங்கிலும் ஒரு பொருளின் விலையை ஒரேமாதிரியாக்குவது எ டு. : ஒரு பெரிய பாட்டில் கொகோ கோலாவின் விலை சென்னையில்ரூ 35-அமெரிக்காவில் 1 டாலர்) ஆனால் உழைப்பின் விலையை உலகமயமாக்காமல் இருப்பதன் மூலம் இந்த உபரி ஏற்றுமதிவிளிம்புகளிலிருந்துமையங்களை நோக்கி இயக்கப்படுகிறது இன்று ஒரு விளிம்புலகத் தொழிலாளியின் கூலி ஒரு அமெரிக்க அல்லது மேற்கு அய்ரோப்பியத் தொழிலாளியின் கூலியைக் காட்டிலும் 40 மடங்கு குறைவு. ஆனால் இரண்டு நாடுகளிலுமே ஒரு காரின் விலை ஒன்றுதான். எனவே ஓராண்டுச் சேமிப்பில் ஒரு அய்ரோப்பியத் தொழிலாளி ஒரு கார் வாங்கிவிட முடியும். இந்தியத் தொழிலாளிக்கு கனவில் கூட அது வாழ்நாளில் சாத்தியமில்லை என்பதை விளக்க வேண்டியதில்லை. மையங்களிலுள்ள சுமார் 15 சத மக்களே உலகின் பெரும்பான்மையான உற்பத்தியை இன்று நுகரக் கூடியவர்களாக உள்ளனர். விவசாய உற்பத்திப் பொருட்களின் கொள்முதல் விலையும் மிகவும் குறைக்கப்பட்டுள்ளதோடு சர்வதேசச் சந்தையில் அதிக லாபத்தில் சர்வதேச விலையில் அதனை விற்கும்போது இடைத் தரகர்கள் பெரும் பயனடைகின்றனர். மொத்தத்தில் ''ஏற்றுமதி செய் அல்லது செத்துப்போ'' என்பது இன்று விளிம்புலக மக்களை நோக்கி மையங்கள் வழங்கும் அறிவுரையாக இருக்கின்றது. சொகுசுப் பொருட்களின் நுகர்வு என்பது இன்று மையங்களாலும் விளிம்புலக ஆதிக்க சக்திகளாலும் மட்டுமே பகிர்ந்து கொள்ளப் படுவது கவனிக்கத் தக்கது.

இந்தச் சூழலே இன்றைய முதலாளிய நெருக்கடிக்கு வித்திடுகிறது என்பதையும் நாம் கவனிக்க வேண்டும். சுமார் இரு நூறு ஆண்டுகளுக்கு முன்பு விளிம்புலகில் திணிக்கப்பட்ட தொழில் நீக்கம் de- industrialisation என்பது இன்று தானாகவே மையங்களில் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. பொருள் சார்ந்த உற்பத்தியை விளிம்புலகிற்கு மாற்றீடு செய்ததன் விளைவாக இன்று மையங்களில் மிகப் பெரிய வேலை இல்லாத் திண்டாட்ட நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இதனை வரலாறு காணாத நெருக்கடி என்று சொன்னால் மிகையாகாது. இது குறித்து ஏராளமான விவரங்களை நீங்கள் தினசரி இதழ்களில் காண முடியும். ஒரே ஒரு தகவல். மேற்கு அய்ரோப்பாவில் மட்டும் இன்று 22 மில்லியன் பேர் வேலையில்லாது உள்ளனர். அதாவது மொத்தத் தொழிலாளிகளில் பதினோரு சதம் பேர். ஒவ்வொரு ஒன்பதுபேருக்கும் ஒருவர் வேலையின்றி அரசு உதவித் தொகையில் வாழ்கின்றனர் ('இந்து'—21-3-96) வேலை இல்லாதவர்களின் அதிருப்தியைக் குறைப்பதற்காக ஜெர்மனியில் தொழிற்சங்கங்களே இன்று முன் வந்து தங்கள் கூலியைக் குறைத்துக் கொள்வதாக அறிவிக்கும் வேடிக்கையான நிலையும் ஏற்பட்டுள்ளது வேலை இல்லாத் திண்டாட்டம் தோற்றுவித்துள்ள அரசியல் நெருக்கடிகளின் விளைவாக இங்கெல்லாம் இன்று பாசிசம் உருப்பெறும் நிலை ஒரு புறம். இன்னொரு புறம் இடதுசார்புடைய கட்சிகள் பலநாடுகளில் தேர்தல் மூலம் ஆட்சியைக் கைப்பற்றக்கூடிய நிலையையும் காண்கிறோம்.

மையங்களில் தோன்றுகிற இத்தகைய நிலைகளின் விளைவாக அங்கே வாங்கும் திறன் குறையும் போது விளிம்புலகம் ஏற்றுமதி செய்யும் பொருட்களின் விலை சரிவடைய நேர்கிறது. தவிரவும், விளிம்புகளின் பொருள் சார்ந்த உற்பத்தியில் ஒரு தேக்கமும் ஏற்படுகிறது. இதனால் உலக முதலாளிய அமைப்பில் ஏற்படும் நெருக்கடிகளைச் சரிக்கட்ட விளிம்புலக மக்களை மேலும் மேலும் பொருளியல் ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் பலவீனப் படுத்துவது மையங்களுக்கு அவசியமாகிறது. மொத்தத்தில் இப்படிச் சொல்லலாம் விளிம்புலகில் தோற்றுவிக்கப்பட்டுள்ள ஏழ்மை என்பது உலக முதலாளிய உற்பத்தியின் முதலீடுகளில் ஒன்றாக இருக்கிறது. இந்த ஏழ்மையைத் தொடர்ந்து மறு உற்பத்தி செய்வதும் விளிம்புலக மக்களைச் சகல அம்சங்களிலும் பலவீனப்படுத்துவதும், கடன், தொழில் நுட்பம் ஆகியவற்றின் அடிப்படையில் தொடர்ந்து சார்பு நிலையைப் பேணுவதும் இன்று உலக முதலாளியத்தின் உடனடித் திட்டமாக இருக்கிறது. இதற்குரிய வகையில் இன்றைய கட்டுமானச் சீரமைப்பை உலக வங்கிமற்றும் பன்னாட்டு நிதியங்களின் மூலமாக உலக முதலாளியம் நம் மீது திணிக்கிறது.

## நான்கு

**இந்தியப் பொருளாதாரச் சீரமைப்பின் பிரதான கூறுகள்:**

விளிம்புலகின் சிவில் சமூகங்களைப் பின்னுக்குத் தள்ளி ஒரு இணை அரசாகத் தன்னை நிறுவிக்கொண்டுள்ள உலகவங்கி



படிப்பகம்

www.padippakam.com

மற்றும் பன்னாட்டு நிதியத்தால் முன் மொழியப்பட்டு உலகெங்கிலும் மேற் கொள்ளப்படும் பொருளாதாரச் சீரமைப்பு இரு கட்டங்களாகச் செயற்படுகிறது.

**முதற்கட்டம் : குறுகிய காலப் பேருரு அளவி லான பொருளாதார நிலைப்படுத்தல் (Short-Trem Macro Economic Stabilisation)**

1) நாணைய மதிப்பைக் குறைத்தல்; நாணயப் பரிபாற்றக் கட்டுப்பாடு களை நீக்குதல்.

2) பற்றாக்குறை பட்ஜெட்டை இல்லா மல் செய்வது என்கிற பெயரில் அர சுச் செலவினங்களைக் குறைத்தல். (அரசுத் துறை வேலை நீக்கம், கல்வி/மருத்துவம் போன்ற சமூக நலத் திட்டச் செலவுகளைப் பெரிய அளவில் குறைத்தல்)

3) சந்தைக் கட்டுப்பாடுகளை நீக்குதல் மான்யங்கள்மற்றும் விலைக் கட்டுப் பாடுகளை நீக்குதல் இதில் அடங் கும்.

4) விலைவாசிப்புள்ளிக் கேற்ப கூலி என்கிற நிலையை நீக்குதல்; உழைப்புச் சந்தையின் மீதான கட்டுப்பாடுகளை நீக்கி அதனைத் திறந்து விடுதல்.

**இரண்டாம் கட்டம் : கட்டுமானச் சீரமைப்பு :**

1) சந்தைக் கட்டுப்பாடுகளையும், பாதுகாக்கப்பட்ட வணிகங்களை யும் நீக்கி தாராளமயமாக்கல் உள் நாட்டுச் சந்தையை நோக்கிய தொழிலுற்பத்தியை அழித்தல், 'காட்' ஒப்பந்தம் முதலியவற்றைத் திணித்தல்.

2) வங்கி அமைப்பின் மீதான கட்டுப் பாடுகளை நீக்குதல் விவசாய மற்றும் தொழில் வங்கிகளைத் தனி யார் மயமாக்கல், நிதிக் கொள்கை மீதான ரிசர்வ் வங்கியின் கட்டுப் பாட்டை நீக்குதல்.

3) விவசாய நிலங்களை தனியார் மய மாக்கி வணிக மயமாக்குதல், பெரு மூலதன அமைப்புகள் இதன் மூலம் நிலக் குவிப்புகளைச் செய்து கொள்ள வாய்ப்பளிததல். பணப் பயிர்ச் சாகுபடியை ஊக்குவித்தல்.

4) தேவையற்ற செலவினங்களைக் குறைத்தல் என்ற பெயரில் அரசுத் துறை நிறுவனங்களை 'ஒழுங்கு படுத்துதல்'- அரசுத் துறை ஊழியர் களைப் பெரிய அளவில் வேலை நீக்கம் செய்தல்.

5) அரசுத் துறை நிறுவனங்களைத் தனியார் மயமாக்கல். வணிக/நிதி/ தொழில் துறைகள் சார்ந்த பொதுத்துறை நிறுவனங்களைத் தனியார் மயமாக்கலுடன் கடன் களைத் தீர்ப்பதற்காகஇந்நிறுவனங் களின் சொத்துக்களை விற்கத் தூண்டுதல்.

6) செலவுகளைத் திரும்பப் பெறுதல் என்கிற பெயரில் கல்வி மற்றும் சமூக நலத் துறைகளை வணிக மயமாக்குதல் பெற்றோர்-ஆசிரியர் சங்கங்களின் மூலம் கல்விச் செலவு களையும் நுழைவுக்கட்டணம், மருந்து செலவு போன்றவற்றின் மூலம் மருததுவச் செலவுகளையும் மக்களிடமிருந்து வசூலித்தல்.

7) நடுத்தர வருமானமுடையவர்கள் மற்றும் சிறு விவசாய உற்பத்தி யாளர்கள் மீது வரிச்சுமையை ஏற்றும் வண்ணம் புதிய வரிகளைப் (Value added or saler Tax) போடுதல்.

8) கட்டுமானச் சீரமைப்பின் 'சமூகப் பின் விளைவுகளை' எதிர்கொள் ளும் நோக்கின வறுமை ஒழிப்புத் திட்டங்களைச் செயல்படுத்துதல்.

பொருளாதாரச் சீரமைப்பின் பிரதான கூறுகள் இவை ஒவ்வொன்றையும் விளக்கப் புகுந்தால் மேலும் பல கொடூரமான உட் கிடைகள் வெளிப்படும். கட்டுமானச் சீர் திருத்தங்களின் முன்னோடியாக சந்திரசேகர் அரசு (ஜூலை 1, 1990) புதிய தொழிற் கொள்கையை உருவாக்கியது. உலக முதலாளிய மூலதனங்கள் நுழைவதற்கான சகல கட்டுப்பாடுகளையும் நீக்குதல், சிறு தொழில் துறைகளுக்கான சகல பாதுகாப்பு களையும் நீக்குதல் என்பன இதன் பிரதான அம்சங்களாக இருந்தன. 1989 டிசம்பரில் உலக வங்கி, ''இந்தியா: மாறிக் கொண் டிருக்கும் ஒரு தொழிற் பொருளாதாரம்'' என்றொரு ஆவணத்தை வெளியிட்டது. அந்த அறிக்கை முன்வைத்த ஒவ்வொரு வழி காட்டலும் புதிய தொழிற் கொள்கையாக உள்வாங்கப்பட்டது. சுருக்கம் கருதி அதனை இங்கே தவிர்க்கிறேன். (பார்க்க:





படிப்பகம்

www.padippakam.com

Aspects of Indian Economy, July Supt- 1990 பக்: 31—36) அதுபோலவே பொருளாதாரச் சீரமைப்புடன் சனநாயகப்படுத்துதல் எல்கிற பெயரில் மேற்கொள்ளப்படும் அரசியல் கட்டுமானச் சீர்திருத்தங்களையும், அடக்குமுறைச் சட்டப் பிரகடனங்களையும் அடிப்படை உரிமை பறிப்புகளையும் கூட சுருக்கம் கருதி இங்கே தவிர்க்கிறேன். உலக முதலாளிய மூலதனம் நுழைவதற்கிருந்த தடைகளை நீக்குவது என்பது மட்டுமன்றி சிறப்புச் சலுகைகளும் வழங்கப்படுகின்றன. கிழக்கிந்திய கம்பெனி காலத்தில் ஆங்கிலேய முதலீட்டாளர்களுக்கு வழங்கப்பட்டு வந்த இலாப உத்தரவாதங்களும் (Guaranted Returns) கூட இன்று மின்துறையில் முதலீடு செய்யும் உலக முதலாளிகளுக்கு வழங்கப்படும் கொடுமை இங்கே குறிப்பிடத் தக்கது. இவ்வாறு 16 சதலாப உத்தரவாதம் அளிப்பதன் விளைவான செலவினங்கள் மாநில நிதி ஒதுக்கீட்டில் பிடித்துக் கொள்ளப்படுமாம் தவிர இவ்வாறு உலக முதலாளியத்தின் மூலம் வினியோகிக்கப்படும் மின்சாரத்தின் மதிப்பு யூனிட்டுக்கு ரூ 3/- ஆக இருக்கும்! (பார்க்க: Main Stream, Jan 15, 1994).

மேற்குறித்த கட்டுமான மாற்றங்கள் என்பன அடிப்படையான தேவை— வினியோக உறவுகளைக் குலைக்கின்றன. உலகளவிலான மலிவு உழைப்புப் பொருளாதாரத்தைக் கட்டமைக்கின்றன. கூலியின் அளவைக் குறைக்கின்றன. எந்த "நோக்கங்களை" வாயளவில் சொல்லி (எடு: கடன் சுமை குறைத்தல், வறுமை நீக்குதல், வளர்ச்சி வீதம் அதிகரிப்பு) இந்த கட்டுமான மாற்றங்கள் நிறைவேற்றப்படுகின்றனவோ அந்த நோக்கங்கள் நிறைவேறியதாக இது வரை யாருமே சொன்னதில்லை வேடிக்கை என்னவெனில் இதனை பன்னாட்டு நிதியமே ஒத்துக் கொள்கிறது. அதன் அறிக்கை ஒன்றில்,

"இப்போதுள்ள ஆய்வுகளின்படி கட்டுமான சீரமைப்புத் திட்டங்கள் வெற்றி பெற்றுள்ளன என உறுதியாகச் சொல்ல முடியாது... வளர்ச்சி அதிகரிப்பிற்கும் பணவீக்கக் குறைப்பிற்கும் இவை வழி லகுத்துள்ளன எனவும் சொல்ல முடியாது. உண்மையில் பண வீக்கம் அதிகரிப்பதற்கும் வளர்ச்சி வீதம் குறைவதற்குமே கட்டுமானச் சீரமைப்பு வழி வகுத்துள்ளது"

என வெளிப்படையாக ஏற்றுக் கொள்ளப் பட்டுள்ளது. (IMF Staff papers, vol 37, No 2, 1990, பக். 196—222). பல்வேறு நாட்டு அனுபவங்களை சுட்டிக் காட்டி இந்த உண்மையை நம்மால் நிறுவ முடியும்.

கட்டுமானச் சீரமைப்பு முயற்சிகளை எதிர்த்துப் பல நாடுகளில் கலவரங்கள்

## இந்தியப் பொருளாதாரச் சீர்திருத்தங்கள் தொடர்பான சில தரவுகள்

| ஆண்டு | வெளிநாட்டுக் கடன் | வெளிநாட்டுக் கடன் தவணை | வெளிநாட்டு வர்த்தகப் பற்றாக் குறை |
|---|---|---|---|
| | | (கோடி ரூபாய்களில்) | |
| 1990—91 | 163, 001 | 16, 116 | 10, 645 |
| 91—92 | 252, 910 | 20, 191 | 3810 |
| 92—93 | 280, 746 | 25, 419 | 9687 |
| 93—94 | 290, 418 | 25, 986 | 8350 |
| 94—95 | 311, 792 | 34, 410 | 7297 |
| 95—96 | 350, 000 (சுமாராக) | | 13, 379 |
| | 1986—'87—1990'—91 | — | 1990—91—95—96 |
| 1) வெளிநாட்டு முதலீடு | 55, 951 கோடி ரூ | | 35, 921 கோடி ரூ. |



படிப்பகம்

www.padippakam.com

(SAP—Riots) நடந்துள்ளன. பன்னாட்டு நிதியத்தை எதிர்த்து நடைபெற்ற கலவரத்தில் கர்காஸ் நகரில் 1989ல் ஆயிரம் பேர் கொல்லப்பட்டனர். 1984ல் துனிஸ் நகரில் வேலை இல்லாத இளைஞர்கள் கலவரத்தில் ஈடுபட்டனர். 1989 மேயில் நைஜீரியாவில் கட்டுமானச் சீரமைப்புக்கு எதிராக நடைபெற்ற மாணவர் கலவரத்தின் விளைவாக ஆறு பல்கலைக் கழகங்கள் மூடப்பட்டன. மொராக்கோ அரசின் பொருளாதாரக் கொள்கைகளுக்கு எதிராக 1990 டிசம்பரில் பொது வேலை நிறுத்தம் நடத்தப்பட்டது. (EPW 2—11—91, பக். 2533) ருவாண்டவில் இரண்டு இனக்குழுக்கள் ஒன்றை ஒன்று அழித்துக்கொண்டு ஆயிரக் கணக்கில் மாண்ட 'செய்தி'யை நாம் அறிவோம். இதன் பின்னணியும் கூட கட்டுமானச் சீரமைப்புதான் என ஆய்வாளர்கள் கருதுகின்றனர் (EPW, 13-4-96 பக். 938—940). பெல்ஜியத்தின் குடியேற்ற நாடாக இருந்த ருவாண்டா காப்பி ஏற்றுமதிக்கான சாகுபடிக் களனாக மாற்றப்பட்டது. சுதந்திரத்திற்குப் பின்னும் இந்நிலை தொடர்ந்தது. உலகச் சந்தையில் காப்பி விலை படு மோசமாகக் குறைக்கப்பட்டதை ஒட்டி ருவாண்டாவில் மிகப் பெரிய பஞ்சம் ஏற்பட்டது. இதற்கிடையில் பன்னாட்டு நிதியத்தின் ஆணையின் பேரில் இருமுறை நாணய மதிப்புக் குறைக்கப்பட்டது. 1992ல் கோபமுற்ற விவசாயிகள் மூன்று இலட்சம் காப்பி செடிகளை வெட்டி வீழ்த்தினர். இந்தப் பின்னணியில்தான் அங்கே கலவரம் தோன்றியது. இதை இனக்கலவரம் என்று சொல்வதைக் காட்டிலும் ''பொருளாதாரப் படுகொலை'' (Economic Genocide) என்று சொல்வதே பொருத்தம். இந்தியாவிலும் இதே நிலைதான். கட்டுமானச் சீர்திருத்தம் தொடங்கி இங்கு அய்ந்தாண்டுகள் (1991—1996) ஆகிவிட்டன. கிடைக்கிற தரவுகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் நரசிம் ராவ்- மன்மோகன்சிங் -சிதம்பரம் குப்பலின் கூற்றுக்களைப் பொய் என நிறுவியுள்ளன.

இன்னொன்றையும் இங்கே குறிப்பிடுவதுமுக்கியம். உலகஅளவிலான பண்டச் சந்தை பற்றி முழங்கும் உலக முதலாளியம் உலக அளவிலான உழைப்புச் சந்தை என்பதை ஏற்றுக் கொள்ளவில்லை மையங்களில் இன வெறியை விதைப்பதன் மூலமும்

---

| | | |
|---|---|---|
| 2) மொத்த தேசிய உற்பத்தியில் உள்நாட்டு மூலதன உருவாக்கத்தின் பங்கு | 18.9% | 17.46% |
| 3) சராசரி ஆண்டு வளர்ச்சி வீதம் (கட்டுமானப், மின்சாரம்...முதலியவற்றில்) | 8% | 5% |
| 4) மொத்த உள்நாட்டு உற்பத்தி | 6.1% | 4.5% |

ஆதாரம் : ''இந்தியப் பொருளாதாரம்'' பிரதான் பிரசாத். (மெயின்ஸ்ட்ரீம் 4-5-96)

கடந்த நான்காண்டுகளில் வருடாந்திர விலைவாசி ஏற்றம் 10.5 சதம் முதல் 11.0ஆம் வரை இருந்தது. அத்தியாவசியப் பொருட்களில் இந்த விலை ஏற்றம் (நல்ல விளைச்சல் இருந்தும்கூட) 42 சதம் முதல் 93 சதம்வரை அதிகரித்துள்ளது. உற்பத்தித் தேக்கம், பணவீக்க அதிகரிப்பு ஆகியவற்றை எங்கள் ஆய்வுகள் உறுதிப்படுத்தியுள்ளன.

ஆதாரம் : அஸ்வினி தேஷ்பாண்டே, ''இந்தியாவில் கட்டுமான மாற்றங்கள்'' —EPW—9-5-95

மேலும் தகவல்களுக்கு பார்க்க : பிரசாத் பட்நாயக், சி.பி. சந்திரசேகர். ''கட்டுமான மாற்றங்களின் கீழ் இந்தியப் பொருளாதாரம்''—EPW · 25-5-95.



படிப்பகம்

www.padippakam.com

கடுமையான immigration சட்டங்களின் மூலமும் விளிம்புலக உழைப்பாளிகள் மையங்களுக்குள் நுழைய விடாமல் தடுக்கப்படுகின்றனர். தொழில் நுட்பமும் கருவிகளின் உற்பத்தித் திறனும் அதி வேகமாக வளருகின்றன வேலைகளின் எண்ணிக்கையோ குறைந்துகொண்டே போகிறது. இதனால் உற்பத்தியாகும் பொருட்களை வாங்குவதற்கும் ஆளில்லாமல்போகின்றனர். எனவே அதிக உற்பத்தியும் தேக்கமும் ஏற்படுகின்றது. இதுவே இன்றைய கட்ட உலக முதலாளிய நெருக்கடியின் வடிவம் உலக அளவிலான உற்பத்தி, உலக அளவிலான வேலைப் பிரிவினை, உலக அளவிலான சந்தை, உலக அளவிலான பொருளாதாரக் கொள்கைகள், உலக அளவிலான அரசு வடிவங்கள் என எல்லாவற்றிலும் உலக மயமாக்கலை '(globalisation) முன்மொழியும் உலக முதலாளியம் உலக அளவிலான வேலை இல்லாத் திண்டாட்டத்தை இன்று சந்திக்க வேண்டிய கட்டாயத்திற்குள்ளாகியுள்ளது. விளிம்புலக மக்களில் ஆகக் கீழாய் இருக்கும் மக்கள் திரளில் ஒரு பகுதியை அழிப்பதன் மூலமும், அழிய விடுவதன் மூலமும் நெருக்கடியிலிருந்து தப்ப முடியும் என நம்புகிறது. சோமாலியா, ருவாண்டா, போஸ்னியா போன்ற நாடுகளில் பல ஆயிரக்கணக்கானோர் அழிவதை நாம் இந்தப் பின்னணியில் பார்த்தல் அவசியம்.

## அய்ந்து

**அமைப்பு எதிர்ப்பு (இயக்கங்கள் (Anti-Systemic Movement) சில குறிப்புகள்**

இப்படி எல்லாவற்றிலும் உலக மயமாக்கலை முன் மொழியும் உலக முதலாளியத்திற்கு எதிராகப் பொருளாதார அளவில் சிதறுண்டு நிற்றலை (Regionalisation) **சமீர் அமின்** போன்றோர் முன் மொழிகின்றனர். விளிம்பு நாடுகள் பிராந்திய ரீதியான கூட்டமைப்புகளையும், வணிக ஒப்பந்தங்களையும் உருவாக்கிக் கொள்ள வேண்டும் என்பது இதன் உட்கிடை. ஒரு 'காட்' ஒப்பந்தத்திற்கு மாற்றாக பல இரு நாடுகளுக்கிடையேயான ஒப்பந்தங்கள், விளிம்பு நாடுகளுக்கிடையேயான வங்கிகள், தகவல் பரிமாற்றங்கள் முதலியன இதன் அம்சங்கள். உலக முதலாளிய அமைப்பிலிருந்து துண்டித்துக்கொண்டு வாழவே முடியாது என்பதல்ல. **கியூபா, ஈராக், ஈரான், சீனா** போன்ற பல நாடுகள் பல்வேறு மட்டங்களில் இவ்வாறு விரும்பியும், வேறு வழியில்லாமலும் உலக முதலாளியத்திலிருந்து துண்டித்துக்கொண்டு நிற்கவே செய்கின்றன. ஆனாலும் விளிம்பு நாடுகளின் மேலாதிக்க சக்திகள் இத்தகைய துண்டித்துக் கொள்ளலுக்கு எதிராகவே இருக்கும். தவிரவும் இவ்வாறு பிராந்திய அளவிலான அரசு மற்றவற்றை மேலாதிக்கம் செய்ய முயலும். எடுத்துக் காட்டாக நிச்சயமாக இந்தியா அத்தகைய மேலாண்மையை மேற்கொள்ளும் என நாம் உறுதியாக நம்பலாம்.

இந்நிலையில் உலக முதலாளியத்திற்கு எதிராக உலக அளவில் எதிர்ப்புச் சக்திகள் இணைவது அவசியம். பழைய புரிதலின் அடிப்படையில் இதனை உலக அளவிலான கட்சி உருவாக்கம் என்கிற ரீதியில் புரிந்து கொள்ளக் கூடாது. விளிம்பு நாடுகளுக்குள் உள்ள உலக முதலாளிய ஆதரவு சக்திகளுக்கு எதிராகப் போராடுகிற பல்வேறு அமைப்புகளுக்கிடையேயான, ரொம்பவும் தளர்ந்த, முற்றிலும் சனநாயகமான, தற்காலிகமான, பிரச்சினைகளின் அடிப்படையிலான, தகவல் பரிமாற்றம் மற்றும் செயல்பாடுகளுக்கான ஒருங்கிணைப்பே இது. இறுதியாக **அமைப்பு எதிர்ப்பு இயக்கங்களின்** (Anti-Systemic Movements) தன்மைகள் எவ்வாறு வரலாற்றுப் போக்கில் மாறி வந்துள்ளன என்பதைப் பார்ப்போம்.

—இக்கட்டுரை ஜூலை '96ல் வெளிவரும் நிறப்பிரிகை— இலக்கிய இணைப்பு—3ல் நிறைவுறும். ○

**References :** (கட்டுரையினூடாக குறிப்பிட்டுள்ள ஆதாரங்கள் தவிர கீழ்க்கண்ட கட்டுரைகளிலிருந்து பெருமளவில் தகவல்கள் எடுக்கப்பட்டுள்ளன)

IMMANUEL WALLERSTEIN, Patterns anp Prospectives of the Capitalist world—economy contemporary Marxism—No :9

ANDRE GUNDER FRANK, The unequal and uneven historical development, contemporary Marxism No : 9

LUCA MELDOLS, Brandal and Lenin : Capitalism is a Superlative, contemporary Marxism No : 9

HERB ADDO, On the crisis in the Marxist Theory of Imperialism, Contemporary Marxism - No : 9

SAMIR AMIN, Evro Centrism, Zed Books 1989.

MICHAEL CHOSVDOVSKY, Global poverty and New world Economic order, EPW 2-11-91 □



படிப்பகம்

www.padippakam.com

# வளர்ச்சியும் மானிட உரிமைகளும் தேவை ஒரு அடித்தட்டு நோக்கு

— அ. மார்க்ஸ்

**வரலாற்றுப் பின்னணி**

வளர்ச்சி (Development) குறித்த சமகாலச் சொல்லாடல்கள் எல்லாவற்றையும் கவனமாகப் பரிசீலித்துப் பார்த்தோமேயானால் "வளர்ச்சி" என்னும் கருத்தாக்கத்தை ஆதரிப்பவர்களும் சரி, எதிர்ப்பவர்களும் சரி வளர்ச்சியை மனித உரிமைகளோடு (Human Rights) இணைத்துப் பேசுதலைக் கவனிக்க முடியும். "உலக வளர்ச்சி" என்னும் கருத்தை முன்வைத்து இயங்கும் இரு பெரும் உலக நிறுவனங்களாகிய உலக வங்கியும் (WB) பன்னாட்டு நிதியமும் (IMF) மனித உரிமைகள்குறித்து இப்போதெல்லாம் அதிகம் பேசத் தொடங்கியுள்ளதைக் காணலாம். சமீபத்தில் பன்னாட்டு நிதியத்தின் துணைக் குழு ஒன்றில், "வளர்ச்சி நடைமுறைகளில் மனித உரிமைகள் பிரிக்க முடியாது இணைந்திருக்கிறது என்பதே வளர்ச்சி அரசியலின் உட்பொருளாகும்', எனத் தீர்மானம் (எண். 1987/29) ஒன்று இயற்றப்பட்டுள்ளது. ஐ.நா. அவையின் பொதுக்குழு சென்ற டிசம்பர் 1993இல் "மனித உரிமைகளுக்கான உயர் ஆணையர்" என்கிற பதவியை முதன் முதலாக உருவாக்கியுள்ளது "மனித உரிமைகளை நடைமுறைப் படுத்துவதிலுள்ள எல்லாத் தடைகளை நீக்குவதிலும் உலகெங்கிலும் நடைபெறக்கூடிய மனித உரிமை மீறல்களைத் தடுப்பதிலும் உயர் ஆணையர் செயலூக்கம் கொண்ட பங்கை வகிப்பார்" என அப்பதவி குறித்து கூறப்பட்டுள்ளது தாராளமயமாதல் (Libera-lisation), உலகமயமாதல் (Globa isation), சந்தைப் பொருளாதாரம் (Market Economy) என்கிற சமகால நடைமுறைகளினூடாக புவியின் தென் பாதியிலுள்ள நாடுகளின் இறையாண்மைக்குள் (Sovereignity) அத்துமீறித் தலையீடு செய்யும் தந்திரமான உத்தியாக மனித உரிமைகள் என்னும் ஆயுதத்தை வடபாதியிலுள்ள வல்லாதிக்க அரசுகள் பயன்படுத்துகின்றன. இதன் விளைவாக மனித உரிமை மீறல்களில் மகத்தான "சாதனைகள்" புரிந்து வருகிற தென்பாதி நாடுகள் வேறு வழியின்றி மனித உரிமைக் கண்காணிப்பு அமைப்புகளை தத்தம் நாடுகளில் உருவாக்கி வருகின்றன. இந்திய அரசு "தேசிய மனித உரிமை ஆணையம் (NHRC)" அமைத்ததுகூட இந்தப் பின்னணியில்தான்.

இன்னொரு பக்கம் "வளர்ச்சி" குறித்த அணுகல் முறைகளை கடுமையாக விமர்சிப்பவர்களும் மனித உரிமைகள் பற்றிப் பேசுகின்றனர். வளர்ச்சியையும் மனித உரிமைகளையும் ஒன்றாக இணைப்பது சாத்தியமில்லை என்கின்றனர். "வளர்ச்சி" என்பதே மனித உரிமைகளுக்கு எதிராகத்தான் இருக்க முடியும் என்கின்றனர். "கோவா ஃபவுன்டேஷன்" என்கிற அமைப்பைச் சேர்ந்த கிளாட் அல்வாரஸ், "மூன்றாம் உலக வலைப் பின்னல்" என்கிற அமைப்பைச் சேர்ந்த ராஜமூர்த்தி, "வளர்ச்சிக்கான ஆசிய கலாச்சார அமைப்பு' என்கிற அமைப்பைச் சேர்ந்த சந்திரா முஸாபர் முதலியோர் அவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள். பொருளாதார உரிமைகள், அரசியல் உரிமைகள், சிவில் உரிமைகள், சமூக உரிமைகள், மனித உரிமைகள் என உரிமைகளைப் பிரித்தல் இயலாது எனவும் இவற்றுள் ஒன்று முக்கியம் மற்றது இரண்டாம் பட்சமானதுதான் என்றெல்லாம் வகுப்பது அபத்தம் எனவும்இவர்கள் வாதிடுகின்றனர். இவர்களின் கருத்துக்களைச் சுருக்கமாகக் கீழ்க்கண்டவாறு தொகுக்கலாம்.

வளர்ச்சி என்பது கொள்ளை. புவியின் வட பாதியானது தென்பாதி மீது தனது கொள்கையையும், அதிகாரத்தையும் நியாயப்படுத்துவதற்கான கருத்தியலே 'வளர்ச்சி'. "வளர்ச்சியடைந்த நாடுகள்" எனவும் "குறைவளர்ச்சி நாடுகள்" (under developed) எனவும் உலகைப் பிரிப்பது என்பது எப்போதும் குறைவளர்ச்சி நாடுகள் வளர்ச்சியடைந்த நாடுகளைச் சார்ந்திருக்க வேண்டும் என்ற நோக்கில்தான். அமெரிக்க ஜனாதிபதி ட்ருமன் தான் முதல் முதலில் "குறைவளர்ச்சி" என்கிற கருத்தாக்கத்தை முன்மொழிந்தவர் (1949 ஜனவரி 20). அடுத்த ஐம்பதாண்டுகளுக்குள் வளர்ச்சி என்னும் பெயரில் வடக்கிற்கும், தெற்கிற்கும் இடையிலான பொருளாதார இடைவெளி



படிப்பகம்

www.padippakam.com

அதிகமாயுள்ளது; சுற்றுச் சூழல் கொடுமையாக அழிக்கப்பட்டுள்ளது; வறுமையும் வேலை இல்லாத் திண்டாட்டமும் அச்சமூட்டும் அளவில் அதிகரித்து வருகின்றது. 1960 லிருந்து 1989க்குள் உலக மக்கள் தொகையில் 20 சதமே உள்ள பணக்கார நாடுகள் உலகச் சொத்தில் அவர்களின் பங்காக இருந்த 70.2 சதத்தை 82.7 சதமாக அதிகரித்துக் கொண்டுள்ளன. அதே சமயத்தில் 20 சத சனத்தொகை உள்ள ஏழைநாடுகள் உலகச் சொத்தில் தங்களின் பங்கை 2.3 சதத்திலிருந்து 1.4 சதமாக இழக்க நேர்ந்திருக்கின்றது. உலகிலுற்பத்தியாகும் மொத்த ஆற்றலில் 70 சதத்தையும், உலோகங்களில் 75 சதத்தையும், மரத்தில் 85 சதத்தையும், உணவில் 60 சதத்தையும் வடக்கிலுள்ள நாடுகளே பயன் படுத்துகின்றன. ஆனால் தெற்கிலுள்ள மக்களில் கிட்டத்தட்ட ஒரு மில்லியன் மக்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழ் அவதியுறுகின்றனர். ஒன்றரை மில்லியன் பேருக்கு அடிப்படை மருத்துவ வசதிகள் கிடையாது ஒரு மில்லியன் பேருக்கு எழுதப் படிக்கத் தெரியாது. மூன்றாம் உலக நாடுகளின் மொத்தக் கடன் 1.3 மில்லியன் டாலர்கள். சில ஆப்ரிக்க நாடுகளின் கடன் அவர்களது மொத்த தேசிய உற்பத்தி (GNP) யைப் போல 108 சதம் என அய்.நா அவையின் மனித வளர்ச்சி அறிக்கையே (UNDP Report 1992) ஒத்துக் கொண்டிருக்கின்றது இந்தியாவின் மொத்த வெளிநாட்டுக் கடன் 90.39 மில்லியன் டாலர்கள் (செப்டம்பர் 93). இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) 39.8 சதம் கடன் மற்றும் வட்டிகளைத் திருப்பிச் செலுத்துவதிலேயே கழிந்து விடுகின்றது (Economic Survey Report 92-93). ஓராண்டில் சுமார் 40 மில்லியன் டாலர்கள் மூலதனம் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி இடம் பெயர்கின்றது.

**வளர்ச்சியின் பாதிப்புகள்**

இத்தகைய கடன் அடிப்படையிலான சார்புச் சூழலைப் பயன்படுத்தி சர்வதேச நிதியமைப்புகள் தெற்கு நாடுகளின் மீது பேரூரு பொருளாதார நிலைப்படுத்தல்கள்'' (Macro Economic Stabilisations). அமைப்புச் சீர்திருத்த நடவடிக்கைகள்'' (Structural Adjestment Programmes) முதலியவற்றைத் திணிக்கின்றன. இந்த நடவடிக்கைகளின் முக்கியமான அம்சங்களாவன:

1) ரூபாய் மதிப்பைக் குறைத்தல்,

2) கல்வி, மருத்துவம் போன்ற மக்கள் நல நடவடிக்கைகளின் மீதான அரசுச் செலவினங்களைக் குறைத்தல்,

3) வங்கிகள் மற்றும் சந்தைகள் மீதான கட்டுப்பாடுகளை நீக்குதல்,

4) தொழிலாளிகளின் ஊதியத்தைக் கட்டுப்படுத்துதல்,

5) பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் விவசாய நிலங்களைதனியார் மயமாக்குதலும் சந்தைப்படுத்துதலும்,

6) கல்வி, மருத்துவம் போன்ற சமூக நல நடவடிக்கைகளைத் தனியார் மயமாக்கலும் வணிக மயமாக்கலும்.

இந்த நடவடிக்கைகளின் விளைவாக பல ஆப்ரிக்க நாடுகளில் கல்வி நிறுவனங்கள் மூடப்பட்டுவிட்டன. ஆசிரியர்கள் வேலை இழந்துள்ளனர். மருத்துவ நல நடவடிக்கைகள் பல நிறுத்தப்பட்டுள்ளன. இதற்குப் பதிலாக சுயநிதி நிறுவனங்கள், பாலிகிளினிக்குகள் முதலிய பெருத்துக் கொழுத்துள்ளன. பெற்றோர் ஆசிரியர் அமைப்புகளை ஏற்படுத்தி கல்விச் செலவுகளுக்கு மாணவர்களிடம் பணம் பறிக்கப்படுகின்றது. இந்தியாவிலும் தமிழகத்திலும் இதே நிலை தான் என்பதை விளக்க வேண்டியதில்லை.

பொருளாதாரச் ''சீர்திருத்தங்கள்'' என்பன எப்போதும் அதன் மறுதலையாகிய அரசியல் ''சீர்திருத்தங்களுக்கு'' இட்டுச் செல்லும். கடன்களுடன் விதிக்கப்படக் கூடிய நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்கு மூன்றாம் உலக நாடுகளில் எதேச்சாதிகார அரசுகள் தேவைப்படுகின்றன. எடுத்துக் காட்டாக, விலைவாசிப் புள்ளியையும் கூலியையும் இணைக்கக் கூடாது என்பது ஒரு கடன் நிபந்தனை. அதாவது விலைவாசி ஏறினாலும் கூலியை ஏற்றக் கூடாது. இதனை செயல்படுத்த வேண்டுமானால் தொழிற் சங்க நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதும் வேலை நிறுத்தங்களைத் தடை செய்வதும் அவசியமாகின்றன. மேலும் விவசாய நிலங்களை யார் வேண்டுமானாலும் வாங்கி உரிமையாக்கிக் கொள்ளலாம் என்பது ஏழை எளிய மக்களிடமுள்ள கொஞ்ச நஞ்ச நிலங்களும் பறிபோய் அவர்கள் வறுமையின் பிடிக்குத் தள்ளப்படுவதற்கே வழி வகுக்கும். இது பொருளாதார சீர்திருத்தங்களுக்கு எதிரான மக்கள் எழுச்சிகளுக்கே வித்திடும். இது மீண்டும் கொடூரமான அடக்குமுறைக்கு



படிப்பகம்

www.padippakam.com

சுற்றுச்சூழல் அழிப்பு வாழ்க்கையையும், ஒரு இந்து சாதியையும், தீண்டாமையையும், எல்லாவிதமான ஆணாதிக்கக் கலாச்சாரங்களும் தமது பெண்ணடிமைத் தனத்தையும் நியாயப்படுத்திவிட முடியுமல்லவா!

''(பெருங்) கலாச்சார அடையாளம்'' என்கிற முழக்கத்தின் கீழ், அடித்தட்டு மக்களை வளர்ச்சிக்கு எதிராகத் திரட்டி நிறுத்திவிட முடியாது. மொத்த உலகத்தையும் நாளைக்கு அழிவுக்குள்ளாக்கப் போகிற ஓசோன் துளைக்குக் காரணமான தொழில் நுட்பத்தைஎதிர்ப்பதுஎன்பதைக் காட்டிலும் ஒரு தலித்திற்கு முக்கியமான பிரச்சினையாக இன்று அவனுக்கெதிராக நடைமுறைப்படுத்தப்படும் தீண்டாமையே இருக்க முடியும். ஓசோன் படலத் துளையாலும் முதலில் பாதிக்கப்படப் போவது அடித்தட்டு மக்களாகத்தானே இருக்க முடியும் என நீங்கள் புத்திசாலித்தனமாக கேட்கலாம். அப்போது கூட அவனது வாழ்க்கையை நேரிடையாகவும் உடனடியாகவும் பாதிக்காதவரை அவனது கரிசனம் வறுமை மற்றும் தீண்டாமை எதிர்ப்பாகவும் தான் இருக்க முடியும்.

## பகுதி மூன்று

**எனவே வளர்ச்சி விமர்சனங்களை நாம் இரண்டாகப் பகுக்க முடியும். அவை :**

1) வளர்ச்சி குறித்து மேல்தட்டு விமர்சனம் (Elitist Criticism) எல்லா அறிவியல் தொழில் நுட்பங்களையும் மேலைத் தன்மையவை என மறுத்து உள்நாட்டு மரபுகளுக்குத் திரும்புதலை இவை முன்மொழியும்.

2) வளர்ச்சி விமர்சனம் குறித்த ஒரு அடித்தட்டு நோக்கு (Subaltern approach)

வளர்ச்சி விமர்சனம் குறித்த ஒரு அடித்தட்டு அணுகல் முறையை நாம் இதுவரை வளர்த்தெடுக்கவில்லை. காலனிய ஆட்சிக்கு முந்திய அடிமைத்தனத்துடன் ஒப்பிடும்போது மேலைத்தேய அறிவியல், தொழில் நுட்பம் ஆகியவற்றின் வரவு அடித்தட்டு மக்களின் வாழ்க்கையின் சில துறைகளிலேனும் சில குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களுக்குக் காரணமாகியுள்ள உண்மையை இத்தகைய அணுகல் முறை கவனத்தில் எடுத்துக் கொள்ளும். எடுத்துக்காட்டாக நவீன அறிவியல் மற்றும் தொழில்நுட்பங்களின் விளைவாக அடித்தட்டு மக்களின் சராசரி ஆயுள் அதிகரித்துள்ளது; பஞ்சங்கள் கட்டுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன. குழந்தை மரணங்கள் முதலியனவும் குறைந்துள்ளன. தீண்டாமைக் கொடுமை ஓரளவு குறைந்துள்ளதில் இவற்றிற்கும் பங்குண்டு. தவிரவும் புரட்சிக்குப் பிந்திய சமூகங்களில் மேற்கொள்ளப்பட்ட சோசலிசக் கட்டுமான நடைமுறைகள் அனைத்தையும் நாம் ஒட்டுமொத்தமாகப் புறக்கணித்துவிடவும் முடியாது. அமியா குமார் பக்சி சொல்வது போல சோசலிசக் கட்டுமானம் என்பது வறுமை / வேலை இல்லாத் திண்டாட்டம் ஆகியவற்றை ஒழித்து, கல்வி/மருத்துவம் போன்றவற்றை இலவசமாக்கி **சமூகத்தில் சனநாயகத்தை** நிறுவுவதில் (Democracy in Society) வெற்றிபெற்றது. ஆனால் அடிப்படை சிவில் உரிமைகளை மறுத்ததன் மூலம் **அரசியலில் சனநாயகத்தை** நிறுவுவதில் (Democracy in Politics) தோல்வியுற்றது. இதன் பொருள் எல்லா அறிவியல் தொழில் நுட்பங்களையும் விமர்சனமின்றி வரவேற்பது என்பதல்ல, கணிப்பொறி, தானியங்கி முதலிய நவீனதொழில்நுட்பச் சாதனைகள் அனைத்தும் மேலருந்து கீழான முதலாளிய நிர்வாக முறைக்கு ஏற்ப இயங்குமாறு அமைக்கப்பட்டுள்ளன எனவே இவை

---

## நிறப்பிரிகை இலக்கிய இணைப்பு—3
## ஜுன் 96

| | |
|---|---|
| சிறுகதைகள் : | பாமா, பெருமாள் முருகன், பார்த்திபன், எக்பர்ட் சச்சிதானந்தம், ப்ரதியா ஜெயச்சந்திரன் ஜி. நாகராஜன், குமார செல்வா, குருசு. சாக்ரடீஸ், கோணங்கி, |
| பேட்டிகள் : | எமில் எம். சியோரன், சுசி தாரு |
| மொழிபெயர்ப்புகள் : | ஆனா ப்ளான்டியானா, சுசிதாரு, ழாக்ப்ரிவெர், பிர்ரெவர்தி ஆன்றி மிஷோ, பால் செலான், அக்டேவியா பாஸ் |
| நூல் விமர்சனம் : | எம். கண்ணன், பொ. வேல்சாமி, ராஜ் கவுதமன். |
| கட்டுரைகள் : | அ. மார்க்ஸ், ரவிக்குமார் |
| கவிதைகள் : | வில்வரத்தினம், கரிகாலன் மற்றும் பலர். |



படிப்பகம்

www.padippakam.com

மையப்படுத்தப்பட்ட அதிகாரச் செயல்பாடுகளுக்கே வழிவகுக்கின்றன இந்தத் தொழில் நுட்பங்கள் அனைத்தையும் நாம் கட்டுடைத்து (disorganise) நமது சனநாயக நோக்கங்களுக்கு ஏற்ப மறு உருவாக்கம் (Reorganise) செய்தல் வேண்டும்.

**நிறைவாக**

நான் இங்கே அழுத்திச் சொல்ல விரும்புவதென்னவெனில் அடித்தட்டு மக்கள் நோக்கில் பார்க்கும்போது வளர்ச்சி குறித்த பெரு விமர்சனம் (metacriticism) ஏதும் இருக்க முடியாது எந்த அம்சத்திற்கு முன்னுரிமை கொடுக்கிறோம். என்பது காலத்திற்கு காலம் இடத்திற்கு இடம் வேறுபடும். எல்லாக் காலத்திற்கும் எல்லா இடத்திற்கும் பொருத்தமான பெருவிமர்சனம் சாத்தியமில்லை. வளர்ச்சிப் பிரச்சினைக்கு ஒற்றைத் தீர்வு சாத்தியமில்லை. அதிலும் பழமைக்குத் திரும்புதல் என்பது எப்போதுமே தீர்வாக முடியாது. உற்பத்தி உலகமயமாதலுக்கும் தெற்குலக மக்கள் விளிம்புக்குத் தள்ளப்படுவதற்கும் நாம் நிச்சயமாக எதிராக இருக்கிறோம். ஆனால் ''மக்கள்'' என்பது ஒரு ஒருபடித்தான (homogenous) வகையினமல்ல. வெவ்வேறு நலன்களையும் முன்னுரிமைகளையும் கொண்ட வர்க்கங்களின் தொகுப்பையே மக்கள் என்கிறோம். மனித உரிமைகள் பிரிக்கப்பட முடியாதவை! ஒன்றையொன்று சார்ந்திருப்பவை என்கிறோம் நாம். தீண்டாமையை நடைமுறைப்படுத்துதல் என்பது ஒரு பிரிவு மக்களுக்கு மிகவும் அடிப்படையான வாழ்வுரிமையை மறுப்பதாகும். பழமைக்குத் திரும்புதல் இந்திய அடையாளத்தைப் பேணுதல் முதலிய பேச்சுகள் எல்லாம் வடக்குலகின் ஏகாதிபத்திய சக்திகளுக்கு எதிராக அடித்தட்டு மக்களை ஒன்றிணைப்பதற்கு எதிராகவே முடியும். வேலை இல்லாமைக்கு வழி வகுக்கும் பொருளாதார சீர்திருத்தங்களும் கல்வி/மருத்துவம் முதலியவற்றை வணிக மயமாக்குதலும் முதலில் தங்களைத்தான் பாதிக்கும் என்பது குறித்து அடித்தட்டு மக்களும் கவனமாக இருத்தல் வேண்டும். புதிய உலக ஒழுங்கில் நாம் இட ஒதுக்கீட்டிற்காக மட்டுமே போராடிக் கொண்டிருக்க முடியாது, புதிய உரிமைக் கோரல்களுக்கும் புதிய முரண்களுக்கும், மோதல்களுக்குமான களங்களை நாம் தேடிப்பிடிக்க வேண்டும். வளர்ச்சி விமர்சனம் குறித்த பங்களிப்பை நோக்கி நமது முயற்சிகளை நாம் குவிக்க வேண்டும்.

(26.10.95 நாகர்கோயிலில் நடைபெற்ற அகில இந்திய கத்தோலிக்க குருக்கள் மாநாட்டில் பேசிய உரையின் தமிழாக்கம்). □

## References :


| | |
|---|---|
| Wolfang Sachs, | The Development Dictionary, zed Books, London, 1993. |
| Claude Alvares, | Science, Development and Violence, OVP, Delhi, 1992. |
| Jeremy Rifkin, | The End of Work, Quoted by Martin khor in Third World Resurgence (TWR), No. 44. |
| Chandra Muzaffar, | How Free and Just Wil be the UN High Commissioner? TWR, No. 42/43. |
| Chandra Muzaffar, | Western Global Domination & HR, TWR, No. 33. |
| Damilo Turk, | How WB-IMF Policies Adversely Affect HR? TWR, No 33. |
| T. Rajamurthy, | The World Conferences on HR - A View from the South; TWR, No 36. |
| Michal Chossudorskey | Global Poverty and New World Economic Order, EPW. Vol. 26/44 |
| Saral Sarkar, | Development Critique in Cultural Trap, EPW, 30/29. |


நன்றி : அன்னம், டிச'95. □



படிப்பகம்

www.padippakam.com

## ஈடு செய்ய முடியாத...... இழப்புகள் ......ஈடு செய்தே ஆகவேண்டிய

### சுரேஷ் என்கிற ஆர். சீனிவாசன்

சென்ற இதழில் சீனிவாசனின் மருத்துவச் செலவிற்கு உதவி கோரியிருந்தோம். அதற்குத் தேவை இல்லாமல் செய்துவிட்டார் சீனு வட ஆற்காடு கிராமம் ஒன்றில் எளிய அடித்தட்டுக் குடும்பத்தில் பிறந்து இளமை முதல் சென்னை வாழ்க்கைக்குப் பழக்கமானவர். தந்தை ஒரு சிறிய கட்டிடசப் கான்ட்ராக்டர். இளமை முதல் பரந்து பட்ட படிப்ப, இடது சாரிச் சிந்தனைகள் மற்றும் இயக்கங்களின்பால் ஈடுபாடு. நக்சலைட் கட்சி வீச்சுடன் விளங்கியபோது அதனுடன் இணைந்து நின்றார். சீனிவாசனைப் போன்ற உள்ளங்கள் வேறென்ன முடிவெடுத்திருக்க முடியும்? அவரைக் கடத்திச் சென்று எஸ் கார்னரில் ஒரு லாட்ஜில் வைத்து போலீசார் விசாரணை என்ற பெயரில் நோகடித்ததை எல்லாம் சகித்துக் கொண்டார். பின்னர் அரசு கல்லூரியில் பொருளாதாரப் பேராசிரியப் பணி தனது தந்தையிடம் பணி புரிந்த மிகவும் எளிய குடும்பத்தைச் சேர்ந்த சுந்தரியைத் திருமணம் செய்து கொண்டார். பெற்றோர், தம்பி. தங்கைகள், மனைவி, குழந்தைகள் எனப் பெரிய குடும்பம் எல்லாச் சுமையையும் அவரே தாங்கினார். பெற்றோர், குழந்தைகள் மீது பாசம்... அளவுக்கு மீறிய பாசம்.

குடும்பச் சுமை அவரது எழுதும் கரங்களை முடக்கியபோதும் படிப்பில் சோர்ந்ததில்லை. 'குமுதம்' முதல் 'மன்த்லி ரெவியூ' வரை அவர் விடுவதில்லை. கடைசி வரை படித்துக் கொண்டிருந்தார். மாலைக் கல்லூரியில் சட்டம் பயின்று பட்டமும் பெற்றார். ஒரு புத்தகம் படித்துவிட்டு இரண்டு புத்தகங்கள் எழுதுபவர்கள் தமிழ்ச் சூழலில் அதிகம். நான் உட்பட. சீனு அப்படிச் செய்ததில்லை. எங்களைப் போன்றவர்களிடம் பகிர்ந்து கொண்டது மட்டுமே அவர் செய்தது மன ஓசை இதழில் கடைசிவரை ஆசிரியர் குழுவில் பங்கு வகித்த அவர் அந்தத் தேவையை ஒட்டி எழுதிய சில எழுத்துக்கள்தவிர அவரது விரிந்த அறிவிற்கு சாட்சியம் வேறு இல்லை.

ஒரு அமைப்புக்குள் நின்று செயல்பட்ட போதும் கட்டுத்தளையற்ற சிந்தனை அவரது இயல்பாக இருந்தது. நிறப்பிரிகையின் தொடக்கத்திலிருந்து அதில் ஈடுபாடு காட்டி வந்தார். கடைசிக் கட்டத்தில் அமைப்புடன் சற்றுக் கருத்து மாறுபட்டு நிற்க நேர்ந்தது தவிர்க்க இயலாததாகியது.

நம்மைப் பார்த்தவுடன் அவரது இதழ்கள் புன்னகைக்க முயல்வதற்கு முன்னால் அந்தக் கண்கள் மலர்ந்து சிரிக்கும். இரண்டாண்டுகள் குடியாத்தத்தில் அவருடன் அறைவாசம் இரவெல்லாம் பேச்சுப் பேச்சு... நான் எழுதிய பல நல்ல கட்டுரைகள் அவருடன் சேர்ந்து எழுதியவை. பல புதிய கருத்துக்களை, புத்தகங்களை நான் அவர் மூலமாகவே அறிமுகம் கொண்டேன். ப்ரெக்ட் பற்றிய கட்டுரை முதலியன அவருடன் சேர்ந்து அவருடைய தூண்டுதலில் நான் எழுதியவைதான். அவர்கள் பேனா எடுப்பதில்லை நான் எடுக்கிறேன் அவ்வளவே.

குடும்பத்தை அளவுக்கு மீறி நேசித்த அவர் அதிக நாட்கள் குடும்பத்திலிருந்து பிரிந்தே வாழ நேரிட்டது. தொடர்ந்து வெளியூர்களிலேயே கல்லூரிப் பணி. கடைசியாய்ச் சில ஆண்டுகள் சொந்த முயற்சியில் சென்னை வந்தார். ஆசிரியர் சங்க ஈடுபாட்டின் விளைவாக மீண்டும் செய்யாறுக்கு இடமாற்றம் செய்யப்பட்டார். தினசரி சென்னையிலிருந்து செய்யாறு பயணம் அவருக்கு இறுதியாக அமைந்தது. பழுதுபட்ட இதயத்தோடு கடைசி ஆறு மாதம் மருத்துவமனைகளில் போராடினார். கடைசியாய் நான் அவரை அப்போலோவில் பார்த்தபோது இயந்திரங்கள் மத்தியில் அவர். துரும்பாய் இளைத்த உடம்பு, இருந்தும் கண்களில் அந்தச் சிரிப்பு யாரோ அவர் நெற்றியில் ஒரு துளி விபூதியை இட்டிருந்தனர்.

புலம் பெயர்ந்த தமிழர் நல மாநாட்டுப் பணிகளின் போது அவர் நம்மை விட்டுப்




படிப்பகம்

www.padippakam.com

பிரிந்தார். கடைசியாய் அவர் உடலைக் கூடப் பார்க்க முடியவில்லை. கடைசியாய் அவர் சொன்ன சொற்கள்: ''சுந்தரியைப் பாத்துக்குங்க...''

கல்லூரி ஆசிரிய நண்பர்கள் குறிப்பாக மாவடியான், திருமாவளவன், சிவக்குமார் முதலானோர் அவருக்கு மிகச் சிறந்த மருத்துவ உதவிகளைச் செய்தனர்.

அவர் விட்டுச் சென்றிருப்பது: சுந்தரி, இரண்டு குழந்தைகள், கொஞ்சம் கட்டுரைகள். நண்பர்கள் பெருமாள் முருகன், வசந்த குமார் முதலியோர் அவரது எழுத்துக்களைத் தொகுத்துக் கொண்டு இருக்கிறார்கள். நிச்சயம் அவரது பரந்துபட்ட அறிவிற்கும், மனித நேயத்திற்கும், இயக்க நடவடிக்கைகளுக்கும் அது மட்டுமே சாட்சியாக அமைந்துவிடப் போவதில்லை. ஒரு மகத்தான மனிதனின் அருகாமையை என்றென்றும் இழந்து நிற்கும் சுந்தரிக்கும் குழந்தைகளுக்கும் நாம் என்ன ஆறுதலைச் சொல்ல முடியும்? □

## குன்றக்குடி அடிகளார்

அடிகளாரின் இறுதிச் சடங்கு வீடியோ சுருளை அவரது அன்பிற்குரிய மங்கையற்கரசி அனுப்பியிருந்தார். வரிசை வரிசையாக ஏழை எளியவர்கள், அடித்தட்டு மக்கள், தாழ்த்தப்பட்டவர்கள், கண்களில் நீர் மல்க அஞ்சலி செலுத்தும் காட்சி தொடர்கிறது. நமக்குத் தெரிகின்ற பிரபல முகம் வாழப்பாடி ராமமூர்த்தி மட்டும். கருணாநிதி அடுத்தடுத்த நாட்களில் வந்ததாக அறிந்தோம். ஒரு கணம் காந்தி பீடத்தின் இறுதிச் சடங்குகளில் கலந்து கொண்டவர்களின் பட்டியல் நினைவுக்கு வருவது தவிர்க்க இயலவில்லை பெரும் பத்திரிகைகள் வெளியிட்ட தலைப்புச் செய்திகளும் நினைவுக்கு வந்தன.

மற்ற மடங்களுடன் ஒப்பிடும்போது குன்றக்குடி ரொம்பச் சின்னது. கிராமம் சார்ந்தது. ஏழ்மையானது. மறைந்த நமது அடிகளாரின் பெயராலேயே அது புகழ் பெற்றது. பின் தங்கிய அப் பகுதியை ஓரளவு தொழில் வளர்ச்சியுடையதாக ஆக்குவதற்கும் அப்பகுதியின் அடித்தட்டு மக்களின் நலனுக்காகவும் அவர் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார் அதனால் அம் மக்களின் அழியாத அன்பிற்கு ஆளானார்.

உள்ளூர் அளவில் அவரது செயற்பாடுகள் இப்படி என்றால் தமிழக அளவில் திராவிட மற்றும் இடதுசாரி இயக்கங்களோடு இணைந்து நிற்பவராகவும், மதச்சார்பின்மைக்காகத் தொடர்ந்து குரல் கொடுப்பவராகவும், சாதாரணமாய் பட்டிமன்றங்களில்கூடக் கலந்து கொள்ளும் எளிய மனிதராகவும், தமிழ்ப் பற்றுடையவராகவும், ஈழப் போராளிகளுக்கு ஆதரவுக் கரம் நீட்டுபவராகவும்...... மீண்டும் காஞ்சி பீடம் நமது நினைவுக்கு வந்தது.

அடிப்படையில் அவர் ஒரு கிராமத்து மனிதர். மங்கையின் அம்மாதான் அவருக்கு முதன் முதலில் கார் வாங்கித் தந்திருக்கிறார். உடம்புக்கு முணுக்கென்றால் அமெரிக்கா, அப்போலோ எனப் பறக்கும் சூழலில் ''எல்லா இடத்திலும் டாக்டர் தானே இருக்காங்க...'' என்று சென்னை அரசு மருத்துவமனையில் சேர்ந்திருக்கிறார். அங்கும்கூட டாக்டர்கள் அறிவுரையை மீறி தனது வளர்ச்சிப் பணி ஆலோசனைக் கூட்டமொன்றிற்கு வந்த போதுதான் அவருக்கு மீண்டும் உடல் நலமில்லாமல் போய், கடைசியாய் மீனாட்சி மிஷன் மருத்துவமனையில் உயிர் பிரிந்திருக்கிறது. மீண்டும் நமது பீடங்கள் நினைவுக்கு வருகின்றனர்.

அவரது சொந்த வாழ்க்கை ஒரு அற்புதமான காவியம். அதை மட்டும் மங்கை எழுதினாரானால் — கடுமையான எதிர்ப்புகள் வரும். அதையும் மீறித்தான் — அது தமிழின் முக்கிய நூல்களில் ஒன்றாக இருக்கும்.

வீங்கிச் சிவந்த கண்களோடு மங்கை, அடிகளார் அனுப்பிய துண்டுச் சீட்டுகளை எல்லாம் அள்ளிக் கொட்டுகிறார்.

''மங்கை, ஒரு 500/ ரூ பணம் இருக்குமா?

''மங்கை ஒரு நல்ல 'டீ' கொடுத்தனுப்ப முடியுமா?''

காவி உடைகளுக்குள் மனித இதயங்களும் துடித்ததுண்டு. □



படிப்பகம்

www.padippakam.com

## கோமல் சுவாமிநாதன்

முற்போக்கு எழுத்தாளர் சங்கத்திலிருந்தே பழக்கம். 'சுபமங்களா' வுக்கு அவர் ஆசிரியரானபோது எங்களுக்குப் பெரிய அர்த்தமில்லை. "ஒரு சரியான சி.பி.எம். ஆள்'' என்பதுதான் எங்கள் நிலைபாடு. அதனாலேயே அவர் பல முறை வற்புறுத்தி வந்தபோதும் நாங்கள் எழுதவில்லை. புத்தகங்கள் அனுப்பிய போதும் மதிப்புரைகள் அனுப்பியதில்லை.

அப்புறம் ஒரு முறை வேல்சாமியைத் திருச்சியில் சந்தித்து 'காவி உடையும் காக்கிச் சட்டைகளும்...'' நூலுக்கு மதிப்புரை எழுதச் சொன்னார். சி. பி. எம். கட்சியையே விமர்சனம் செய்கிற அந்நூலைப் பாராட்டி எழுதினால் போட மாட்டீர்களே எனச் சொன்ன போது 'நீங்கள் எழுதுவது தலைப்புடன் தொடர்புடையதாக இருக்கும் வரை அப்படியே போடுவேன்' என்று உத்தரவாதமளித்தார். எங்கள் விசயத்தில் அவர் அதைக் கடைசி வரை மாற்றிக் கொள்ளவில்லை 'சிகரங்களைத் தொட்ட சிறுபத்திரிகைகள்' தலைப்பில் ரவிக்குமார் நிறப்பிரிகை குறித்து எழுதியவற்றை முழுமையாகவெளியிட்டார் அதனாலேயே பல இலக்கிய பீடங்களுக்கு அவர் மீது எரிச்சல்.

'இந்தியா டுடே' யைக் கிழித்து மலம் துடைப்பது என முடிவெடுத்ததை மட்டும் அவர் போட மறுத்தார். அது மட்டுமில்லை அந்த மலருக்காக பல தரப்புகளிலிருந்து வாசந்தி கடுமையாய்த் தாக்கப்பட்ட போது அவரது படத்தை அட்டையில் வெளியிட்டு பேட்டி எல்லாம் போட்டு Boost பண்ணினார் ஒரு பக்கம் இடதுசாரித் தோற்றம் காட்டிக் கொண்டே இன்னொரு பக்கம் ஜெயமோகன் போன்றோரின் சனாதனக் கருத்துக்களுக்குத் தொடர்ந்து இடமளித்து வந்தார்.

மாற்றுக் கருத்துக்களை அதற்குரிய இடத்தையே அளிக்காமல் அழித்தொழிப்பது. திரித்துத் தாக்குவது என்று குறைந்தபட்சம் சகிப்புத் தன்மையுமில்லாத மேற்சாதி ஆதிக்கம் நிறைந்த தமிழ் எழுத்துச் சூழலில் அத்தகைய குறைந்தபட்ச சகிப்புத் தன்மை காட்டக் கூடியவராக இருந்தது அவரது சிறப்பு. தலித் இலக்கிய முயற்சியைத் தொடர்ந்து வரவேற்று வந்த அவர் 'தமிழின் நவீனத்துவம் தலித்தியத்திலிருந்துதான் தொடங்க முடியும்' என்றார்.

நான் என்கிற அகங்காரம் மலிந்து கிடக்கும் தமிழ்ச் சூழலில் அவருக்கிருந்த 'சுப மங்களா' வாய்ப்பைப் பயன்படுத்தி தனது 'image'-ஐ பிம்பத்தை பெரிய அளவில் கட்ட முயலாதது அவருடைய அடுத்த சிறப்பு. சுப மங்களாவில் மிகச் சில பக்கங்களையே அவர் ஆக்ரமித்திருந்தார். 'பறந்து போன பக்கங்களின் மூலம் தன்னை ஒரு பெரிய சிந்தனையாளராக, அறிஞராக, கலை வல்லுனராகவெல்லாம் காட்டிக் கொள்ளாமல் ஒரு சாதாரண மனிதனாகவே காட்டிக் கொண்டது குறிப்பிடத்தக்கது. தான் மூன்று நான்கு படங்களை எடுத்து 'அவார்ட்' எல்லாம் வாங்கிய பின்புதான் நல்ல சினிமா என்றால் என்னவென்று தெரிந்து கொண்டேன் என்கிற ரீதியில் அவர் ஒருமுறை எழுதியிருந்ததாக ஞாபகம்.

புற்று நோய்க்குப் பிறகு ஓமியோபதி மீது அவருக்குக் கவனம் திரும்பியிருக்கிறது. ஓமியோபதி குறித்த அத்தனை ஆங்கில நூல்களையும் வாங்கி தனது நூலகத்தில் வைத்தார் நிறப்பிரிகையில் வெளிவந்திருந்த ஓமியோபதி கட்டுரை அவரை ரொம்பவும் வசீகரித்தது. அதை சுபமங்களாவில் மறுவெளியீடு செய்ததோடன்றி சாவதற்கு இரண்டு மாதங்களுக்கு முன்பு போன் செய்து வரவழைத்து அத்தனை ஓமியோபதி நூல்களையும் அள்ளித் தந்தார்.

கடைசிக் கட்டத்தில் அவருக்கு எங்களைப் பற்றி மொட்டைக் கடுதாசிகளும் போன் கால்களும் போயிருக்கின்றன. பெருந்துறையில் மார்க்ஸ் உங்களை பார்ப்பான் என்று திட்டினார். அங்கே திட்டினார். இங்கே திட்டினார்... இப்படி இது அவரைக் கொஞ்சம் அதிர்ச்சியடைய வைத்தது. வேல்சாமிக்கு போன் செய்து கேட்டார் தவறான செய்தி என்பதோடு நிறுத்திக் கொண்டோம். நேரில் வாருங்கள் பேச வேண்டும் எனப் பலமுறை கூப்பிட்டார்.

அந்த வாய்ப்புக் கிடைக்கவில்லை.

## பெருஞ்சித்திரனார்

பாவலரேறு எனத் தனித் தமிழ் அன்பர்களால் மதிப்புடன் அழைக்கப்படும் பெருஞ்சித்திரனார் தனித் தமிழ் இயக்கத்தை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் சென்றவர். தமிழ்நாட்டு விடுதலை என்கிற கருத்தாக்கத்துடன் அதனை இணைத்தவர். இதனை



படிப்பகம்

www.padippakam.com

இவருக்கு முன் இத்துணை வெளிப்படையாக தனித் தமிழ் இயக்கத்தவர் யாரும் வைத்ததில்லை.

வெளிப்படையாக வைத்ததோடன்றி தொடர்ந்து பிரச்சாரம் செய்து வந்தார். கடும் நெருக்கடிக் கட்டங்களில் கூட அதனை விட்டுக் கொடுக்காததும் சமரசமாகாததும் அவருடைய சிறப்பம்சங்கள், 'தடா' போன்ற அடக்கு முறைக்கு ஆளானபோதும் அவர் தமிழ்நாட்டு விடுதலையையும் ஈழ விடுதலையையும் தொடர்ந்து ஆதரித்து வந்தது குறிப்பிடத்தக்கது.

தான் பேசி, இயங்கியது மட்டுமின்றி தனது மனைவி மக்களையும் இயக்கத்தில் ஈடுபடுத்தி சிறைக்கு அஞ்சாதவர்களாக ஆக்கியது அவரது இன்னொரு சிறப்பு.

அவரது இறுதி ஊர்வலத்திலும் நினைவஞ்சலிக் கூட்டங்களிலும் பெருந்திரளாகத் தமிழ் மக்கள் கலந்துகொண்டது குறிப்பிடத்தக்கது.

தமிழ்நாடு இளைஞர் பேரவை அவரது நினைவு மலர் ஒன்றை வெளியிடும் முயற்சியில் உள்ளனர். தகவல்கள், கட்டுரைகள், ஆய்வுகள் அனுப்ப விரும்புவோர் கோ. சுகுமாரன், தமிழ்நாடு இளைஞர் பேரவை, 33, முத்துமாரியம்மன் கோயில் தெரு, புதுவை — 605001 என்கிற முகவரியுடன் தொடர்பு கொள்ளலாம்.

— அ. மார்க்ஸ்

## கோவை ஞானி : ஒரு குறிப்பு

கோவை ஞானி தனது நிகழ் பத்திரிகை மூலமாக நிறப்பிரிகை மீது குறிப்பாக அ மார்க்சின் மீது தொடர்ச்சியான தாக்குதலைச் செய்து வருவதை அறிவீர்கள். ஆரோக்கியமான விவாதங்கள் எனில் பதில் எழுதலாம். இவை முற்றிலும் அவதூறுகளாக இருப்பதனால் பதில் எழுதி இடத்தையும் நேரத்தையும் வீணடிக்கவிரும்பவில்லை [எனினும் ஞானி ஏதேனும் அர்த்தமுள்ள கேள்விகள் எழுப்பியிருப்பதாக நீங்கள் கருதினால் எழுதி அனுப்புங்கள் வெளியிட்டு எங்கள் கருத்துக்களை எழுதுகின்றோம்] ஒரே ஒரு எச்சரிக்கையை மட்டும் வாசகர்களுக்குச் சொல்ல விரும்புகிறோம். ஞானி, எஸ். என். நாகராசன் முதலியோரை நாங்கள் மறுப்பது கருத்துக்களின் அடிப்படையில். எந்தக் கட்டுரையில் என்ன எழுதியிருக்கிறார்கள் என ஆதாரபூர்வமாக நாங்கள் மறுக்கிறோம். ஆனால் ஞானி எழுதும்போது பெரும்பாலும் ஆதாரங்களைச் சுட்டுவதில்லை. இப்படி எழுதும்போது நிறைய கருத்துத் திரிபுகளை மிகவும் நேர்மையற்ற முறையில் அவர் மேற்கொள்கிறார் என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறோம். ஞானி எதையும் செய்யக்கூடியவர் என்பதை ஞானியை அறிந்தவர்கள் அறிவார்கள். இரு எடுத்துக்காட்டுகள் : கோவை பாரதியார் பல்கலைக் கழகத்தில் தலித் இலக்கியம் பற்றி நான் பேசியதாக ஞானி நிகழில் எழுதியதையும், கோடாங்கி 2-ல் வெளிவந்துள்ள எனது உரையையும் ஒப்பிட்டுப் பாருங்கள். அடுத்து : கோவையில் திரு வே. ஆனைமுத்து பங்குபெற்ற ஒரு விழாவில் ஞானி தேவையில்லாமல் நிறப்பிரிகை மீது அவதூறு பொழிந்துள்ளார். பெரியாருக்கு தத்துவம் இல்லை என மதுரை கூட்டு விவாதத்தில் நாம் பேசியதாய்ச் சொல்லியிருக்கிறார். "பெரியாருக்கு ஆத்திரம் இருந்த அளவு அறிவு இல்லை" என எழுதிய ஞானி பெரியார் மேடையில் கைதட்டலுக்காகபெரியாரைப் புகழும் சாக்கில் முற்றிலும் அவதூறான கருத்தைப்பேசியுள்ளது கவனிக்கத்தக்கது. நிகழில்வெளியிட்டவை தவிர பத்துரூபாய்பணம் அனுப்பினால் அனுப்புவதாக அவர் விளம்பரம் செய்திருந்த செராக்ஸ் கட்டுரையை வாங்கி வாசித்தவர்களுக்குத் தெரியும் ஞானியின் கண்ணியத் தோற்றத்தின் பின்னே உள்ள அழுகல் முகம் [நிறப்பிரிகை பேசும் பெண்ணியம் அக்காள் தங்கைகளுடன் படுத்துக்கொள்வதுதானாம்!] சந்தடிசாக்கில் ரவிசீனிவாஸ் போன்ற சனாதனிகளும் புனைபெயர்களில் ஒளிந்து கொண்டு (கிராமி) அவதூறுகள் செய்வதும் கவனத்திற்குரியது. எனவே வாசகர்களுக்கு நாங்கள் விடுக்கும் வேண்டுகோள் இதுதான். எங்கள் கருத்தாக ஞானி எதையாவது சொன்னால் அது உண்மைதானா என எங்களின் எழுத்துக்களோடு ஒப்பிட்டுப் பார்த்து முடிவுக்கு வர வேண்டுகிறோம்



படிப்பகம்

www.padippakam.com



## புலம் பெயர்ந்த தமிழர் நல மாநாடு

ஜெயலலிதா அரசால் நடத்தப்பட்ட எட்டாம் உலகத் தமிழ் மாநாட்டு ஆரவாரங்களுக்கு மத்தியில் ஒரு எதிர்ப்புக் குரலாய் சென்ற டிசம்பர் 18, 1994இல் திருச்சியில் புலம் பெயர்ந்த தமிழர் நல மாநாடு நடத்தப்பட்டது. ஈழத் தமிழர்களின் இன்னல்களின்பாலும் உலகெங்கும் அகதிகளாய்த் தமிழர்கள் படும் துன்பத்தின் பாலும் உலகத் தமிழர்களின் கவனத்தை ஈர்ப்பதில் இம் மாநாடு வெற்றி பெற்றது. நிறப்பிரிகை முன்கை எடுத்துச் செய்த இம் மாநாட்டில் இன்குலாப், எஸ் வி. ஆர், பா கல்யாணி, ச.சீ. கண்ணன், அரண முறுவல், டி..என். கோபாலன், தேவதாஸ், உஞ்சைராசன், கோ. சுகுமாரன், குறிஞ்சி, கவிதாசரண், ஜெயந்தன், டாக்டர் சிவக்குமார். பேராசிரியர் திருமாவளவன், வ கீதா. மங்கை, வீ அரசு, அ இராமசாமி. இர. கரிகாலன், கு பழனிசசாமி, வெற்றிச்செல்வன், விடியல் சிவா, மா. அரங்கநாதன், இந்திரன் ஆகியோர் பல்வேறு குழுக்களிலும இடம் பெற்று மாநாட்டைச் சிறப்புற நடத்தினா. மாநாட்டில் வெளியிடப்பட்ட சிறப்பு மலர் உலகெங்கிலும் வாழும் தமிழர்களின் கலை இலக்கிய ஆவணமாகவும் பிரச்சினைகளின் தொகுப்பாகவும் விளங்குகிறது மாநாட்டில இங்கிலாந்து, ஜெர்மன் போன்ற நாடுகளிலிருந்தும் பார்வையாளர்கள் கலந்து கொண்டனர். ஜெர்மனியிலிருந்து வந்திருந்த சிங்கம் மலரைப் பெற்றுக் கொண்டு பேசினார். மாநாட்டுக் குழுவில் இடம் பெற்றவர்கள் தவிர கே. ஜி கண்ணபிரான், பெ மணியரசன், சுப வீ, கோவை இராமகிருஷ்ணன், வழக்கறிஞர் இராமதாஸ், ஓவியர் விஸ்வம், ம தி.முக இராசு, தலித் தலைவர் சந்திரபோஸ், ஞானி ஆகியோரும் மாநாட்டில் உரையாற்றினர். மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத் தொகுப்பு தமிழ் அகதிகள் பிரச்சினை குறித்த ஒரு முககிய ஆவணமாகத் திகழ்கிறது. சுமார் எழுநூறு பேர் கலந்து கொண்ட இம்மாநாடு பற்றிய செய்திகள் விரிவாய் பத்திரிகைகளில் இடம் பெற்றன. பாதிரியார் சேவியர் அருள் ராசுவின் விசமத்தனம் : 1991இல் நிறபபிரிகை முன்னின்று நடததிய 'எண்பதுகளில் அரசியலும் பொருளாதாரமும்' கருத்தரங்கில் மற்ற சிறு பத்திரிகைகள், அரசியல் இயக்கம் ஆகியோருடன் தங்களையும் இணைத்துக் கொள்ள வேண்டும் என பாதிரியார் சேவியர் அருள் ராசு கோரிக்கை வைத்தபோது தன்னார்வ குழுக்களுடன் தொடர்புடையவர் என்கிற அடிப்படையில் அவரது கோரிக்கை நிராகரிக்கப்பட்டது. புலம் பெயர்ந்த தமிழர் மாநாட்டில் அவரை அழைப்பது என்கிற பேச்சுக்கே இடமில்லாமற் போனது. சென்ற ஆண்டு வெளிநாட்டுச் சுற்றுப் பயணம் மேற்கொண்ட பாதிரியார் சேவியர் ''ஈழ முரசு'' (பாரிஸ்) இதழுக்கு அளித்த பேட்டியில் தலித் இயக்கங்களைக் காய்ந்துள்ளதோடு புலம் பெயர்ந்த தமிழர் நல மாநாடு குறித்து அப்பட்டமான பொய்களையும் கூறியுள்ளார். ஈழப் போராட்டத்தை எதிர்த்து வரும் சுப்பிரமணிய சாமியின் நண்பரான சந்திரகாசன் அம்மாநாட்டிற்கு அழைக்கப்பட்டதால்தான் அவர் அந்த மாநாட்டைப் 'புறக்கணித்து விட்டதாக' (!)க் கூறியுள்ளார். சுப்பிரமணிய சாமியைக் கணடித்து அம்மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது, இதனால சந்திரகாசன் அம் மாநாட்டில் கலந்து கொள்ளாமல் போனது, விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான மாநாடு எனச் சொல்லி சுப்பிரமணிய சாமி நமது மாநாட்டைக் கண்டித்து அறிக்கைவிட்டது, ('இந்து'—20-12-49) போன்ற உண்மைகளை முற்றாக மறைத்து அவதூறு பேசியுள்ள பாதிரியார் சேவியர் அருள்ராசுவைக் கண்டித்து கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

## புதுமைப்பித்தன் ஆய்வரங்கு

நவீன தமிழுக்குக் குறிப்பிடத்தக்க பங்களிப்புச் செய்தவர்களில் ஒருவரான புதுமைப்பித்தன் எழுத்துக்கள் மீது ஒரு விரிவான ஆய்வரங்கை நிறப்பிரிகை, குடந்தையிலுள்ள திரைப்பட விமர்சனக் குழு என்கிற அமைப்புடன் இணைந்து சென்ற மார்ச் 11, '95 அன்று குடந்தையில் நடத்தியது. விரிவாகப பலரும் அழைக்கப்பட்டிருந்த இவ்வாய்வரங்கில் சுந்தரராமசாமி மட்டும் (குறிப்பிட்ட தேதியில அவருக்கு வேறு வேலை இருந்ததால்) கலந்து கொள்ள இயலவில்லை. பிரமீள் கலந்து கொளள



படிப்பகம்

www.padippakam.com

வில்லை. மற்றபடி ராஜ்மார்த்தாண்டன், கோ. கேசவன், அ இராமசாமி, எம் கண்ணன், ரவிக்குமார். அ மார்க்ஸ், பொ. வேல்சாமி, தேவகாந்தன், இர கரிகாலன், உ. செ துளசி, மோக. இராகவன், கிராமியன், ராஜ்கவுதமன், அருணன் ஆகியோர் கலந்து கொண்டு கட்டுரை வாசித்தனர். விரிவான விவாதம் ஒரு நாள் முழுவதும் நடைபெற்றது. புதுமைப்பித்தனின் சிறப்புக் கூறுகளை வெளிப்படுத்தக்கூடிய கட்டுரைகளே அதிகம் இடம் பெற்ற இவ் ஆய்வரங்கில் புதுமைப்பித்தன் எழுத்துக்களில் வெளிப்படும் மேலசாதி ஆணாதிக்க குரலை அடையாளம் காட்டிய கிராமியன், கரிகாலன், துளசி ஆகியோரின் கருத்துக்களும் பிறகு கவிதாசரணில் வெளியான அ.மார்க்சின் கட்டுரையும் (இது ஆய்வரங்கில வாசிக்கப் பட்டதல்ல) தமிழச் சூழலில் கடும் எரிச்சல் களுக்கு ஆளாகியிருப்பது குறிப்பிடத் தக்கது. நமது வாழ்நிலைதான நமது கருத்துக் களுக்குக் காரணமாகிறது. ஆணாதிக்க, சாதி ஆதிக்கச் சூழலில் வாழும் நமமிடையே அததகைய கூறுகள படிநது கிடப்பதும் அவை நமது எழுத்துக்களில வெளிபபடு வதும் தவிாக்க இயலாதது. பெண்ணியம், தலித்தியம பேசும நம்மிடம் கூட அத்தகைய கூறுகள் இருக்கலாம். தொடர்சசியான விமர்சனங்கள மூலமே நாம இவற்றைக் களைநது கொளள முடியும. நவீனமான எழுததுக்குச் சொந்தககாரரான காம்யூவின் பிரதிகளில வெளிப்படும் இனவெறிக் குரலை எட்வர்ட் சேத் போன்றோா தோலுரித்துக காட்டியுளளனர். அவ்வளவு ஏன ஷேகஸ்பியா, காரல் மாாக்ஸ், லெனின் ஆகியவாகளின பிரதிகளகூட கட்டவிழ்க்கப் பட்டு அவறறில வெளிபபடும அய்ரோப்பிய மைய, இனவாத ஆணாதிக்கக கூறுகள சுட்டிககாட்டபபடும் சூழலில நாம் வாழந்து கொணடிருக்கிறாம. உயர்சாதிக்காரா களால் மட்டுமே ஆக்ரமிக்கப்பட்டிருநத தமிழ் எழுததுச் சூழலில இத்தகைய கட்டுடைபபை முதன முதலில் மேற கொளளத தொடங்கியுளள சூழலில் குறைநத பட்ச சகிப்புத் தனமை கூட இனறி அம முயறசிகள் எதிாகொளளப்படுவது வருந்தத் தக்கது. குறிபபாக உயர் சாதி எழுததாளர்களிடமிருநது இநத எதிர்ப்பு கூடுதலாக வெளிபபடுவது கவனிக்கத்தக்கது. இதன பொருள, இநதக்கட்டுரைகளை விமர் சிக்ககூட கூடாது எனபதல்ல. இததகைய கட்டுரைகளில் சில தவறுகளும் கூட இருகக லாம். அவறறைச் சுட்டிக் காட்டி விவாதிப்பது எனபது வேறு. 'புதுமைப்பித்தனை இப்படிப் பார்ப்பதா?' என ஆத்திரப் படுவது வேறு. கடவுளர்களும் தேவர்களும் கண்ணை இமைக்க மாட்டார்கள், மலம் பெய்ய மாட்டார்கள், வியர்வை சிந்த மாட் டார்கள் என நம்பும் மரபில் வந்தவர்கள் அல்லவா நாம். சாகித்ய அகாதமி பரிசுக்குப் பிறகு தனது கர்நாடக சங்கீத ரசனை பற்றியும் இதுநாள்வரை வில்லவக் குடலை சுமக்காமல் விணுக்குடலம உழைத்ததற் காகவும் வருத்தப்பட்டு தத்துபித்து எனப பேசிவரும் பிரபஞ்சனும் இவாகளோடு சேர்ந்து கொண்டு காழ்ப்படித்திருப்பது குறிப்பிடத்தக்கது. மன்னிப்புக் கோருகிறோம்: இநத ஆய்வரங்கக் கட்டுரைகளைத் தொகுத்து வெளியிடுவதாக அறிவித்திருந்த படி (சில குறிப்பிட்ட பிரச்சினைகளினால்) வெளியிட இயலாமற் போனமைக்காக நிறப்பிரிகை சார்பாக வருததத்தைத் தெரிவித்துக் கொளகிறோம். எனினும் இவ் ஆய்வரங்கில் வாசிக்கப்பட்ட கட்டுரைகளில் ரவிக்குமார், எம் கண்ணன், அ. இராமசாமி ஆகியோரின் கட்டுரைகள் ஊடகம் இதழிலும அ. மார்கஸ், கிராமியன, கரிகாலன் ஆகியோரின் கட்டுரைகள களம் புதிது இதழிலும் ராஜ்கவுதமனின் கட்டுரை அவரது ''பொய+அபததம→உண்மை'' தொகுப பிலும் வெளிவநதுளளது என்பதைத தெரி வித்துக் கொள்கிறாம.

## மேலும் இரண்டு நிறப்பிரிகை தொகுபபுகள்

''தேசியம ஒரு கறபிதம'', ''அரசு-குடும்பம-பெண்ணியம'' தொகுப்புகளை அடுத்து மேலும இரு நிறப்பிரிகை தொகுப புகள வெளிவநதுளளன. ஒரு எதிர் கலாச சாரவாதியாகப் பெரியாரின செயற்பாடுகள் பற்றியும கலவி, மருத்துவம், நீதி, கலாச சாரம போனற துறைகளில மாறறுச செயற பாடுகள் பறறியும இதுவரை நிறபபிரிகை இதழகளில வெளிவநத கட்டுரைகள விவாதஙகள் முதலியன ''பெரியாரியம'', ''மாற்றுகளைத் தேடி...'' என இரு தொகுதி களாக தொகுககபபட்டு வெளிவநதுளளன. இவற்றையும விடியல் பதிப்பகமே வெளியிட் டுளளது. முனனிரணடு தொகுதிகளையும போலவே இதற்கும நலல வரவேறபு உளளது. இதனை அடுத்து சாதிபபிரச சினைகள் குறித்தும ஏகாதிபத்தியச் செயற பாடுகள குறித்தும் வநத கருததுக்கள தொகுககப்பட உள்ளன, சென்ற ஜனவரி முதல நிறபபிரிகை வெளியீடாக வந்த 'தலித்





படிப்பகம்

www.padippakam.com

அரசியல்' ஆவணம் விடியல் வெளியீடாக இரண்டாம் பதிப்பு வெளிவந்துள்ளது. இவ் ஆவணம் குறித்த குறிஞ்சி, ஏகலைவன், அதியமான், ஞானி, கருணா மனோகரன் ஆகியோரது கருத்துக்கள் மற்றும் அக் கருத்துக்களின் மீதான அ.மார்க்சின் எதிர்வினை எல்லாம் சேர்த்து ஒரு தொகுப்பாக வெளிவந்துள்ளது. தமிழ்ச் சூழலில் எந்த விவாதமுமின்றி இந்த ஆவணம்—சகல தரப்பாலும்—முடக்கப்பட்ட போதிலும் இரண்டாம் பதிப்பும் கூட பெரும்பாலும் விற்றுத் தீர்ந்துவிட்டது குறிப்பிடத்தக்கது.

## விளிம்பு டிரஸ்ட்

எள்ளளவும் சகிப்புத் தன்மையற்ற முறையில் இங்கே தலித்திய முயற்சிகள் எதிர்கொள்ளப்பட்ட போதிலும் தலித் இளைஞர்கள் பலர் தங்களின் எழுத்துக்களை வெளியிட வாய்ப்பின்றி நிற்பதை களத்தில் நின்று செயல்படுபவர்கள் உணர முடியும். எழுத்துலகம், பதிப்புலகம் முதலியன மேற்சாதி ஆதிக்கத்தில் முடக்கப்பட்டிருப்பது இதற்கொரு காரணம். அம்பேத்கர், டானியல் முதலானோர் எழுத்துக்கள் கூட இதுவரை அரசியல் ரீதியில் Committed ஆக உள்ள சிறு வெளியீட்டகங்களாலேயே வெளியிடப்பட்டுள்ளன. இந்நிலையில் தலித்கள் மற்றும் விளிம்பு நிலையில் உள்ள இதரர்களின் எழுத்துக்கள், ஆய்வுகள் முதலியவற்றை வெளியிடும் நோக்குடன் முற்றிலும் லாப நோக்கின்றி, ஈடுபாடு உடையவர்கள் அளித்துள்ள நன்கொடையின் உதவியோடு 'விளிம்பு டிரஸ்ட்' தொடங்கப்பட்டுள்ளது. நிறப்பிரிகையும் விடியல் பதிப்பகமும் கருத்தொற்றுமையுடைய இதர நண்பர்களுடன் இணைந்து இம் முயற்சியை உருவாக்கியுள்ளனர். முறைப்படி பதிவு செய்யப்பட்ட இவ்வமைப்பில் முதல் மூன்றாண்டுகளுக்கு தலித் எழுத்தாளர்களின் எழுத்துக்களை மட்டுமே வெளியிடுவது என முடிவெடுக்கப்பட்டு முதல் நான்கு புத்தகங்கள் இந்த ஆண்டு தொடக்கத்தில் வெளியிடப்பட்டுள்ளன. ''டானியலின் சிறுகதைகள்'' பாப்லோ அறிவுக்குயிலின் ''கிளுக்கி'', ரவிக்குமாரின் ''கண்காணிப்பின் அரசியல்'', ராஜ் கவுதமனின் ''பொய் + அபத்தம் → உண்மை'' ஆகியன இந் நான்கு நூல்கள். பழக்கமான எழுத்தாளர்களைக் காட்டிலும் வாய்ப்பு குறைந்த புதிய எழுத்தாளர்களை அறிமுகப்படுத்துவதே விளிம்பின் நோக்கம். தலித் இளைஞர்கள் இதைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். புனைவுகள், ஆய்வுகள் தவிர தலித் மக்களிடையே காணக் கிடைக்கும் கதைகள், கானாப் பாடல்கள், ஒப்பாரிகள், பஞ்சாயத்துக்கள், தாக்குதல்கள் பற்றிய கள ஆய்வுகள் முதலியவற்றையும் தொகுத்துத் தரலாம். கள ஆய்வுகளுக்கு சிறு நிதி உதவியும் அளிக்கப்படும். ஆர்வமுள்ளவர்கள் விடியல் முகவரிக்கு நிதி அனுப்பலாம். வெளியீட்டு ஆர்வமுள்ளவர்கள் அ. மார்க்ஸ் முகவரியில் தொடர்பு கொள்ளலாம்.

## நிறப்பிரிகை நடத்திய கவிதைப் போட்டி

எழுத்தாளர் இமயம் அவர்களுடன் இணைந்து பாண்டிச்சேரி அருகிலுள்ள ஒரு கிராமத்துப் பள்ளி மாணவர்களுக்காக நடத்திய கவிதைப் போட்டியில் பிள்ளைகள் எழுதிய கவிதைகள் இலக்கிய இணைப்பு -3ல் வெளிவரும். □

# செய்திகள் சிந்தனைகள் சிதறல்கள்

## தேர்தல்- 96

முதலாளிய அரசமைப்பு தன்னைத் தக்க வைத்துக் கொள்ள கண்டு பிடித்துள்ள அட்டகாசமான உத்திகளில் தலையாயது இந்தத் தேர்தல். அடிப்படையான பிரச்சினைகளிலிருந்து கவனத்தைத் திருப்பி மேலோட்டமான ஆட்சி மாற்றமே போதும் என எண்ண வைக்கும் யுக்தி. ஜெயலலிதாவுக்குப் பதில் கருணாநிதி வந்தால் போதும் என்கிற பிம்பம் இம்முறை பத்திரிகைகள் மற்றும் நவீன தொழில் நுட்பங்களின் உதவியோடு கட்டமைக்கப்பட்டது. புதிய பொருளாதாரக் கொள்கை, கல்வி மருத்துவம் முதலியன வணிக மயமாதல், தமிழ் வழிக் கல்வி, ஈழத் தமிழர் பிரச்சினை, அடக்குமுறை சட்டங்கள்... இவை எதுவும் issue ஆக இல்லை. இவை பற்றி கடந்த அய்ந்தாண்டுகளாகக் கடுமையாக உழைத்து கருத்துக்களை உருவாக்கியிருந்த சின்னச் சின்ன



படிப்பகம்

www.padippakam.com

இயக்கங்களின் முயற்சிகளெல்லாம் பொக்கென ஓர் கணத்தே போய் மறையும் வேடிக்கை, வேதனை. தேர்தலைப் புறக்கணிக்கச் சொல்லி நம் தோழர்கள் பலவீனமாக எழுப்பும் குரல் இந்தத் திருவிழா ஆர்ப்பாட்டத்தில் கிளம்பும் தூசியில் மறைந்து போகும் அவலம்...

ஜெயலலிதாவின் அய்ந்தாண்டு கால அருவருப்பான ஆடம்பரங்கள், வெளிப்படையான ஊழல்களின்பால் மக்களுக்கு ஏற்பட்ட அதிருப்தி அலையைச் சாதகமாக்கி கருணாநிதி—மூப்பனார்—ரஜினி என்றொரு மாயையைப் (Illusion என்கிற சொல்லைப் பயன்படுத்தியது 'சோ'. வெற்றி பெறக்கூடிய சாத்தியமுள்ள illusion ஒன்று தேவையாம். அந்தத் தேவையை கரு—மூப்—ரஜி கூட்டணி ஏற்படுத்தியதாம். இந்தக் கூட்டணியில் ஜெ.து கப்யூ. கட்சியும் உண்டு. ஆனால் அதை யாரும் சொல்வதில்லை என்பது குறிப்பிடத் தக்கது) பூதாகாரமாக்கிக் காட்டி இந்த வெற்றியைச் சாதித்தன பத்திரிக்கைகள். அனைத்து பார்ப்பனர்களும் ஜெயலலிதாவுக்கு எதிராகத் திரண்டு நின்றது கவனிக்கத் தக்கது பார்ப்பனராக இருந்தும் நெருக்கமான வட்டத்தில் பார்ப்பனர்களை அணுகவிடாமல் ஒரு பிற்படுத்தப்பட்ட சாதியைச் சேர்ந்த சசிகலா கும்பல் ஆக்ரமித்திருந்ததொன்றே இவர்களின் எரிச்சல். மற்றபடி இன்று இவர்கள் குறிப்பிடும் ஆடம்பரம், லஞ்சம் இந்த விசயங்களில் கருணாநிதி ஆட்சிகள் எந்த வகையிலும் குறைந்ததில்லை என்பதை இவர்கள் அறியாதவர்களல்ல. கருணாநிதியை அப்பழுக்கற்ற தேவனாய் சித்தரித்து இந்தப் பத்திரிகைகள் செய்யும் அசிங்கங்கள் ஜெயலலிதா காலில் அமைச்சர்கள் விழுவதைக் காட்டிலும் அருவருப்பாக இருக்கிறது.

ஜெயலலிதா, சிவபார்வதி ஆகியோர் மீதான தாக்குதலில் இழையோடும் தந்தை வழிச் சமூக மதிப்பீடுகளும் கவனிக்கத் தக்கன. கருணாநிதி பதவி ஏற்ற ஒரு வாரத்திற்குள் தூர்தர்ஷனில் வசந்த சேனாவின் கதை ('மனோகரா'—சினிமா) திரையிடப்பட்டது குறிப்பிடத்தக்கது. வாரிசு முறை ஆட்சி கொடூரமானது என்பதில் அய்யமில்லை. ஆனால் மகன் வரலாம், மகள் வரலாம், மருமகன் வரலாம், மனைவி வரலாம். ஆனால் முறையற்ற மனைவி—வசந்த சேனைகள்— மட்டும் வரக்கூடாது என்கிற மதிப்பீடு கவனிக்கத் தக்கது. ஜெயலலிதா முற்றிலும் ஒரு பெண்ணைச் சார்ந்திருந்ததும் கூட இவர்களுக்கு எரிச்சல் தான்.

கடைசியாய் ஒன்று: பா.ம.க. எந்தக் கூட்டணியிலும் சேர இயலாமல் திண்டாடித் தவித்தது பரிதாபமாய் இருந்தது. இது பற்றி எல்லோரும் சொன்னது. "பாவம் ராமதாஸ் கிராமத்து ஆள். ஏமாற்றி விட்டார்கள்." இதுவும் ஒரு தவறான கணிப்பே தவறான கணிப்பு என்பதைக் காட்டிலும் திட்டமிட்ட பிரச்சாரம் எனலாம். டாக்டரின் கருத்துகள் இன்றைய மைய நீரோட்ட அரசியலிலிருந்து பல அம்சங்களில் வேறுபட்டு நிற்கின்றன. உதாரணமாய் பார்ப்பன எதிர்ப்பு, தாழ்த்தப்பட்டோர் — பிற்படுத்தப்பட்டோர் இணைவு, தாழ்த்தப்பட்டவரை முதல்வராக்குவோம் என்கிற அறிவிப்பு, விடுதலைப் புலிகளுக்கு வெளிப்படையான ஆதரவு, இந்தி மட்டுமல்ல ஆங்கிலமும் வேண்டாம் தமிழே போதுமென்பது, உறுதியான இட ஒதுக்கீட்டுக் கொள்கை... இப்படி. இவற்றை எப்படி மைய நீரோட்ட அரசியல் ஏற்றுக் கொள்ளும்? டாக்டர் புறக்கணிக்கப்பட்டது இயல்பே. அவ்வாறு புறக்கணிக்கப்படுவதற்கு எல்லா அரசியல் கட்சித் தலைவர்களுக்கும் அகில இந்திய அளவிலிருந்து ஏன் அதற்கு அப்பாலிருந்தும் கூட அழுத்தங்கள் வந்திருக்க வாய்ப்புண்டு. இதன் பொருள் பா ம க தான் சரியான கட்சி என்பதல்ல. தனது வன்னிய சார்புத் தன்மையிலிருந்து அது விடுபடவில்லை என்பதோடு மேலும் மேலும் அத்தகைய தன்மை கூடுதலாகி வருவதைப்பற்றி இன்னொரு சந்தர்ப்பத்தில் விரிவாய்ப் பார்ப்போம்.

ஜெயலலிதாவின் வீழ்ச்சிக்கு சாதிக் கலவரங்களில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு எதிராக அவரது அரசு மேற்கொண்ட அணுகல் முறை ஒரு முக்கிய பங்கு வகிக்கிறது. ஒடுக்கப்பட்ட மக்களின் எதிர்ப்புணர்வு என்பது எதிர்வாக்கு இருப்பதற்குத்தான் வழி வகுக்கிறதேயொழிய அவர்களது வலிமையை இந்த அதிகார அமைப்பின் மீது செலுத்துவதற்கு இந்தத் தேர்தல் முறையில் சாத்தியமில்லாமலிருக்கிறது. அதாவது ஜெயலலிதாவை வீழ்த்தி கருணாநிதியைக் கொண்டு வரலாம் என்பது தானேயொழிய தங்கள் வலிமையை அவர்கள் வேறு வழிகளில் உணர்த்த முடியாது. இந்த நிலையை மாற்றுவதற்கு விகிதாச்சாரப் பிரதிநிதித்துவ முறை ஓரளவு வழி வகுக்கலாம். தாழ்த்தப்பட்டவர்களும் வன்னியர்



படிப்பகம்

www.padippakam.com

களும் மட்டுமே தமிழகத்தில் சுமார் 32 சதப்பேர் இருக்கலாம். ஆனால் அய்ந்து இடங்களில் மட்டுமே அவர்களால் வெற்றி பெற முடிந்திருக்கிறது என்பது சிந்திக்கத் தக்கது. சுமார் பத்தாண்டுகளுக்கு முன்னர் தினமணி போன்ற இதழ்களில் ஏ என் சிவராமன் போன்றோர் தொடர்ந்து விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையை ஆதரித்து எழுதி வந்தனர். இன்று அவர்கள் யாரும் இதனை வற்புறுத்துவதில்லை ஏனெனில் ஒடுக்கப்பட்ட சாதியினர் தங்களது இருப்பையும் அடையாளத்தையும் வற்புறுத்தி வரும் சூழலில் விகிதாச்சாரப் பிரதிநிதித்துவம் என்பது ஆதிக்க சாதிகளுக்கு ஆபத்தாய்முடியும் என்பதேகாரணம். எனவே ஒடுக்கப்பட்ட சாதிகளின் உரிமைகளை முன் வைத்துப் போராடும் இயக்கங்கள் இந்தக் கோரிக்கையைப் பரிசீலிக்க வேண்டும். 'நிலையான ஆட்சி வராமல் போகும்' என்கிற பினாமி காரணத்தைச் சொல்லி விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையை மேலாதிக்க சக்திகள் எதிர்க்க முயலும். அவர்களை நோக்கி நாம் கேட்க வேண்டியது: இப்போது என்ன கிழிக்கிறது? ஜெயலலிதா — நரசிம்மராவ் பாணியிலான நிலையான ஆட்சிகளைக் காட்டிலும் கூட்டமைப்பு அரசுகள் சனநாயகப்பூர்வமாக இருப்பதற்கு வாய்ப்புண்டு. இனி எத்தனை முறை தேர்தல் வந்தாலும் இந்த நிலைமைதான் என்கிற நிலை உள்ள போது கூட்டமைப்புகள் நிலையான ஆட்சியைத் தருவதற்கும் வாய்ப்பிருக்கிறது.

இந்தவகையில் திரு. கருணா மனோகரன் எழுதி வெளிவந்துள்ள 'இந்திய சனநாயகமும் அரசியல் சட்டமும்' எனும் குறுநூல் (சமூக நீதி பதிப்பகம், திருப்பூர்.2) வரவேற்கத் தக்கது.

— அ. மார்க்ஸ்

## பசு— நதி —சுற்றுச் சூழல் தூய்மை— பாசிசம்

ஏதோ ஒரு வகையில் தூய்மை என்கிற கருத்தாக்கம் பாசிசத்துடன் தொடர்புடையதாகவே இருக்கும். அந்தவகையில் இங்குள்ள சாதீயம், தீண்டாமை முதலியவற்றைக் கண்டுகொள்ளாமல் 'சுற்றுச் சூழல் தூய்மை' எனப் பேசுவதெல்லாம் ஓர் உயர்சாதி மனப்பான்மையே எனவும் இந்துத்துவத்திற்கு இது இயல்புடையதே எனவும் நாம் சொல்லி வருவதற்கு இங்கே கடும் எதிர்ப்புகள் இருப்பதை அறிவீர்கள்.

சமீபத்தில் இரு செய்திகள் : பிரிட்டனிலிருந்து ஏற்றுமதியாகும் மாட்டு மாமிசம் இன்று உலகெங்கிலும் தடை செய்யப்பட்டுள்ளது. ''பைத்தியப் பசு நோய்'' (Bovine spongiform Encephalopathy) என்கிற கொள்ளை நோயால் பிரிட்டிஷ் மாடுகள் பாதிக்கப்பட்டிருப்பதன் விளைவு இது. இதனையொட்டி இங்கே சுற்றுச் சூழல் தூய்மை இயக்க முக்கியஸ்தர்களில் ஒருவரான **டாக்டர் வந்தனா சிவா** ஒரு அறிக்கை வெளியிட்டுள்ளார் பைத்தியப் பசு நோய் பிரச்சினையை கணக்கில் எடுத்துக்கொண்டு மாட்டுக் கறி ஏற்றுமதிக் கொள்கையை மறுபரிசீலனை செய்ய வேண்டுமாம். உயர் தொழில் நுட்பம், நவீனத்துவம் என்கிற பெயரில் பெங்களூரில் இத்தகைய மாடு வெட்டும் தொழிற்சாலைகளை அமைப்பைத் தடை செய்ய வேண்டும் என்கிறார் வந்தனா. பங்களூரிலுள்ள இசுலாமியர்களது மாட்டுக்கறித் தொழிற்சாலைகளை மூட வேண்டுமென பாரதீய ஜனதா கட்சி போராடி வருவதும் மகாராஷ்டிராவில் அமைக்கப்பட்டுள்ள பாரதீய ஜனதா—சிவசேனா அரசு ''பசு வதை''த் தடை என்கிற பெயரில் இதை நடைமுறைப்படுத்தியிருப்பதும் இத்துடன் இணைத்துப் பார்க்கத் தக்கன. வந்தனா சொல்கிறார்:

''வாழ்வின் அகிம்சைப் பொருளாதாரத்தின் குறியீடாகப் புனிதப் பசுக்கள் விளங்குகின்றன. சாவின் வன்முறைப் பொருளாதாரத்தின் குறியீடாக பைத்தியப் பசுக்கள் விளங்குகின்றன'' (இந்து 27.3.96, பக் 14).

புனிதம் × பைத்தியம்
அகிம்சை × வன்முறை
மரபு × நவீனத்துவம்
தூய்மையான
இயற்கை வாழ்வு × உயர் தொழில்
நுட்பம்
கிழக்கு × மேற்கு

என்கிற இருமைகள் வந்தனாவின் சொல்லாடல் முழுவதும் விரவிக் கிடப்பது குறிப்பிடத் தக்கது

இன்னொருவர் பெரியவர் சுந்தர்லால் பகுகுணா நர்மதா அணைக்கட்டை எதிர்த்து பெரிய இயக்கமொன்றை நடத்தி வருபவர். நமக்கு அதில் கருத்து மாறுபாடு இல்லை. சமீபத்தில் அவர் இந்தப் பிரச்சினையைப்



படிப்பகம்

www.padippakam.com

பற்றிப் பேச வரும்போது நதிகளின் புனிதத் தன்மை பற்றி எல்லாம் பேசியிருக்கிறார். "மக்களைத் திரட்ட கடைசியாக (இந்து) மதச் சொல்லாடலுக்குள் பகுகுணா தஞ்சம் புக வேண்டியிருக்கிறது" என இந்து நாளிதழே குறிப்பிட்டுள்ளது.

இந்துத்துவப் பாசிசச் சொல்லாடல்களுடன் இணைந்து நிற்கும் இத்தகைய சுற்றுச் சூழல் தூய்மைப் பேச்சுக்கள் நம்மை அச்சம் கொள்ள வைக்கின்றன.

சாதியம், பார்ப்பனீயம் இவற்றை எல்லாம் கணக்கிலெடுத்துக் கொள்ளாத எந்த இயக்கமும் கடைசியாக இந்துத்துவப் பாசிசத்துடன் இணைந்து நிற்பதில்தான் முடியும் என்பதற்கு இன்னொரு எடுத்துக்காட்டு நமது மதிப்பிற்குரிய தோழர் ஜார்ஜ் ஃபெர்னான்டஸ். பன்னாட்டு நிறுவனங்களையும் நெருக்கடி நிலையையும் எதிர்த்துப் போராடிய இந்த முன்னாள் சோசலிஸ்ட் கடைசியில் தனது சமதா கட்சியை பாரதீய ஜனதா அரசுக்கு ஆதரவாக்கியிருப்பது கவனிக்கத்தக்கது. பார்ப்பனீயத்தை மறந்துவிட்டு கொக்கோ கோலாவை மட்டும் எதிர்த்துக் கொண்டிருப்பவர்களின் கடைசிப் புகலிடம் என்னவாக இருக்கும் என்பதற்கு ஜார்ஜ் சாட்சி.

— பொ. வேல்சாமி

## அரா:பத் — மண்டேலா — அரசு கட்டில்

இரண்டாண்டுகளுக்கு முன்பு ஒரு நாள். முட்டை வியாபாரத்திற்கு மத்தியில் பக்கத்துக் கடை நண்பர் கேட்டார்: என்னண்ணே, நெல்சன் மண்டேலா, ஆப்ரிக்க தேசியகாங்கிரஸ் பற்றி எல்லாம் பிரமாதமா பேசுவீங்க. கடைசியா அவர் இந்தியாவுக்கு வந்து, இந்திய அரசின் பரிசையும் வாங்கிக் கொண்டு. நரசிம்மராவையும் புகழ்ந்துவிட்டு போயிருக்கிறாரே!" நான் அவரை இப்படிச் சமாளித்தேன். அது ஒண்ணுமில்லிங்க. சாப்பாட்டு மேசையில் உணவைப் பார்க்கும் போது நமக்கு ஆசையா இருக்கு. பாராட்டவும் செய்கிறோம். உடம்புக்குள் போய் விட்டு வெளியே வந்த பிறகு அதை ரசிக்க முடியுமா? பதவி, அரசமைப்பு என்கிற உடம்புக்குள்போய் வந்தபிறகு யாராக இருந்தாலும் மலம்தான். நேற்று பாராட்டினேனே என்பதற்காக இன்று அள்ளிப் பூசிக்கொள்ள முடியாது" (சு. கண்ணன் இந்த எடுத்துக்காட்டிற்காக என்னை மன்னிக்க வேண்டும். சமீபத்தில் கமில் சுவலபில் கட்டுரை ஒன்றை படித்தேன். அவரும் மலத்தை உதாரணம் காட்டி விட்டு பின்பு மன்னிப்புக் கோருகிறார் சில விசயங்களை சுருக்கமாய்விளக்க மலம்தான் பயன்படுகிறது. நாசூக்கானவர்கள் சற்றே ஒதுங்கிக் கொள்க)

இன்றைய நவீன சிந்தனையாளர்களில் முதன்மையானவரும் பாலஸ்தீன விடுதலைப் போராட்டத்தைத் தொடர்ந்து ஆதரித்து வருபவருமான எட்வர்ட் சேத்தின் பேட்டி 'இந்து' இதழில் வந்துள்ளது (5.5 '96). சில பகுதிகள் :

**கேள்வி :** பாலஸ்தீனத்திற்குள் என்ன நடக்கிறது என்று சரியாக வெளியே தெரிவதில்லை கொஞ்சம் சொல்லுங்களேன.

**சேத் :** கிட்டத்தட்ட முழுமையான செய்தி இருட்டடிப்பு இங்கே (அமெரிக்காவில்) நிலவுகிறது. அமைதிப் பேச்சு வார்த்தை என்கிற பெயரில் வெள்ளை மாளிகையில் இரண்டு நபர்கள் கைகுலுக்கிக் கொண்டால் போதும் யாரும் ஒப்பந்தத்தின் உட்கூறுகளைப்பற்றிக் கவலைப்படுவதில்லை இந்த ஒப்பந்தத்தில் எல்லாமே பாலஸ்தீனியர்களுக்கு எதிரானது தான். இஸ்ரேலியர்களுக்குத்தான் இது ஒரு அற்புதமான ஒப்பந்தம்.

**கேள்வி :** அராபத்திடமிருந்து நீங்கள் இப்போது விலகியிருக்கிறீர்களா?

**சேத் :** ஆம். முழுமையாக. நான் ரொம்பவும் வெளிப்படையான எதிரி. சமீபத்தில் நான் பாலஸ்தீனத்திற்குப் போயிருந்தபோது அவருக்காக வாதிடும் ஒருவரைக்கூட என்னால் சந்திக்க முடியவில்லை. ஆரம்ப காலத்திலிருந்து அவருடன் இருக்கக்கூடிய அவரது அமைச்சர் ஒருவர் என்னிடம் பொருமினார். அராபத்தை ஒரு ஊழல் பேர்வழி எனவும் எல்லாவற்றையும் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொள்ள விரும்பும் கொடுங்கோல் சர்வாதிகாரி என்றும் அவர் குறிப்பிட்டார்... முப்பதாண்டு காலமாக பாலஸ்தீனப் போராட்டத்தில் பங்கு பெற்று வரும் என்னைப் போன்ற ஒருவருக்கு இது நாள்வரை ஆதரித்து வந்த ஒரு நபர் எல்லாருக்கும் நம்பிக்கைத் துரோகம் செய்துவிட்டார் என்பதை அறியும்போது கஷ்டமாகத்தான் இருக்கிறது. அமெரிக்காவில் என்னை அராபத்தின் ஆள் என்றுதான் சொல்வார்கள். ஆனால் இன்று அவர் இசுரேலியர்களுக்குச் சார்பான ஒரு ஒப்பந்தத்தை மக்கள் மீது திணிப்பவர். அன்று நான் ரமல்லாவுக்குங்



படிப்பகம்

www.padippakam.com

போன போது அங்கே மாணவர்கள், பாலஸ்தீனிய அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்திக் கொண்டிருந்தார்கள், அய்ம்பது மாணவர்களைக் கைது செய்ததைக் கண்டித்து. இதுநாள்வரை இசுரேலிய அரசுக்கு எதிராகச் செய்து வந்ததை இன்று பாலஸ்தீன அரசுக்கு எதிராகச் செய்ய வேண்டி இருக்கிறது.

**கேள்வி :** இதிலிருந்து விடுபடுவதற்கு என்ன வழி?

**சேத் :** இரண்டு விசயங்கள் நடந்தாக வேண்டும். முதலில் அராபத்தைத் தூக்கி எறிய வேண்டும். அவர் திருத்தப்பட முடியாதவர் தந்திரசாலி. ஆனால் ஒரு தேசத்தைக் கட்டும் தெளிவான பார்வையற்றவர். அதிகாரத்தைக் கட்டமைப்பதே இன்று அவரது கரிசனம். அப்புறம் இந்த ஆஸ்லோ உடன்பாடு வேறு அவரை அழுத்துகிறது. எங்களுக்கு தேச எல்லையின் மீது இறையாண்மையும் கிடையாது. தேச எல்லையில் தொடர்ச்சியும் கிடையாது. காசா விலிருந்து மேலைக் கரை 65 கிலோ மீட்டர்தான். ஆனால் நடுவில் இசுரேல் எல்லை வந்துவிடுகிறது. அவர்களின் அனுமதி பெற்றுத்தான் கடக்க வேண்டும். இரண்டாவதாக, ஒரு புதிய அமைதி இயக்கம் ஒன்று தொடங்கப்பட வேண்டும். இசுரேலியர்களுடன் சமத்துவ அடிப்படையில் பேச்சு வார்த்தை நடக்க வேண்டும். அது ஒரு நெடிய போராட்டம் தான். நாங்கள் ரொம்பவும் பலவீனமாகத் தான் இருக்கிறோம். தவிரவும் இசுரேலுக்கு அமெரிக்கா இருப்பதுபோல எங்களுக்கு யாருமில்லை. இடிந்துபோன வீடுகள், குண்டும் குழியுமான சாலைகள், ஏழ்மை, எழுபது சத வேலை இல்லாத் திண்டாட்டம் இதுதான் பாலஸ்தீனம் எங்கள் பொருளாதாரம், எல்லைகள், பாதுகாப்பு, இன்னும் எல்லாவற்றையும் இசுரேலியர்கள்தான் கட்டுப்படுத்துகின்றனர்.

பேட்டி மேலும் தொடர்கிறது. அன்று அராபத் விடுதலைப்போராளி இன்று உலக முதலாளியத்தின் கீழ் ஒப்பந்தத்தை நிறைவேற்றும் எடுபிடி, பாவம் அராபத்.

—பொ. வேல்சாமி

## சோம்ஸ்கியும் நிறப்பிரிகையும்

கிராம்ஸி குறிப்பிடும் உயிர்ப்புமிக்க அறிவுஜீவிகள் என்கிற கருத்தாக்கத்திற்கு எடுத்துக்காட்டாய் திகழ்பவரும் உலகெங்கிலுமுள்ள கட்டவிழ்ப்புச் சிந்தனையாளர்களின் (anarchists) நாயகராக விளங்குபவருமான நோம் சோம்ஸ்கி சமீபத்தில் இந்தியா வந்திருந்தார் இந்து பத்திரிகையில் வெளிவந்த அவரது பேட்டியின் ஒரு சில பகுதிகளை இந்த இதழில் வேறொரு பக்கத்தில் அருணன் மொழிபெயர்த்துத் தந்துள்ளார். சோம்ஸ்கியின் கருத்துக்கள் நிறப்பிரிகையின் கருத்துக்களுடன் பல வகைகளில் இயைபுடையவை. சில ஆண்டுகளாக நாம் தொடர்ந்து வற்புறுத்தி வருகிற விசயங்களை அவர் பல இடங்களில் வலியுறுத்தியுள்ளார் EPW இதழில் வந்துள்ள (30-3-96) அவரது விரிவான பேட்டியிலிருந்த சுருக்கமாகச் சில பகுதிகள்.

**கேள்வி :** முதலாளியம் வெற்றியடைந்து விட்டதாக சொல்லப்படுகிறதே, சரிதானா?

**சோம்ஸ்கி :** தவறு. அப்படிச் சொல்வது அசட்டுத்தனம். அரசு தலையீடு இல்லாமல் முதலாளியம் ஜீவிக்க முடியாது. கார்ல் பொலான்ஸி இதைப் பல ஆண்டுகள் முன்பே சொல்லிவிட்டார்... சோவியத்துகள் தங்களை சனநாயகம் (மக்கள் சனநாயகம்) என்று சொன்னதில் எத்தனை பொருளிருந்ததோ அது போலத்தான் சோசலிசம் என்று சொன்னதும். மேலை நாடுகள் சோவியத்துகள் தம்மைச் சனநாயகம் என்று சொல்லிக் கொண்டதை சரியாகவே கேலி செய்தன ஆனால் 'சோசலிசம்' என்று சொன்னதை ஏற்றுக் கொண்டன! சரியான சோசலிசத்தைத் தாக்குவதற்கு இதை ஒரு ஆயுதமாகப் பயன்படுத்திக் கொண்டன. போல்செவிக்குகள் அரசைக் கைப்பற்றுவதற்கு முன்பிருந்த குழப்பமான காலகட்டத்தில் பல சோசலிசப் போக்குகள் உருவாகி இருந்தன. சோவியத் அமைப்பு தொழிற்சாலை கவுன்சில் இயக்கம் முதலியன அவற்றில் சில. லெனினும் ட்ராட்ஸ்கியும் அதிகாரத்திற்கு வந்தவுடன் முதலில் செய்தது இந்த சோசலிசப் போக்குகளைத் தகர்த்தது தான். பெருந்தலைவர்களால் ஆளப்பட்ட தொழிலாளர் பட்டாளமாக நாட்டை ஆக்கினார்கள். கோட்பாட்டு ரீதியில் லெனின் ஒரு சனாதன மார்க்சியவாதி. பின் தங்கிய சமூகத்தில் சோசலிசம் சாத்தியமில்லை என நம்பினார். 'வரலாற்று விதிகளின் படி' ஜெர்மனியில் புரட்சி வரும்வரை



படிப்பகம்

www.padippakam.com

'பிடித்து வைத்திருக்கும்' ஒரு முயற்சியாகவே ரசியப் புரட்சியை அவர் கருதினார். அந்த புரட்சி ரத்தத்தில் மூழ்கடிக்கப்பட்ட பின்பு ''புதிய பொருளாதாரக் கொள்கை'' என்னும் அரசு முதலாளியத்திற்கு அவர் தாவினார் லெனினால் தோற்றுவிக்கப்பட்ட எதேச்சாதிகார அரசு ஸ்டாலின் காலத்தில் முற்றிலும் கொடூரமானதாக மாறியது.

**கேள்வி :** சோசலிசத்தின் எதிர்காலம் எப்படி இருக்கும்?

**சோம்ஸ்கி :** பாசிசத்தின் வீழ்ச்சி போலவே சோவியத் கொடுங்கோன்மையின் வீழ்ச்சியும் சோசலிசத்திற்கு ஒரு சிறிய வெற்றிதான். சோசலிசத்திற்கான ஒரு தடைக்கல் நீங்கியிருக்கிறது என்பதே என் கருத்து.

**கேள்வி :** பொதுவுடைமை நாடுகளது சோசலிசத் திட்டத்தில் என்ன தவறு நிகழ்ந்தது?

**சோம்ஸ்கி :** சோசலிசத் திட்டம் அங்கே எப்போதுமே நடைமுறையிலிருந்ததில்லை. பிறகென்ன தவறுகள் பற்றிப் பேசுவதற்கிருக்கிறது? முதலில் கிழக்கு அய்ரோப்பிய நாடுகளை மேலை நாடுகளுடன் ஒப்பிடுவதே தவறு. நர்சரிப் பள்ளியை பல்கலைக் கழகத்துடன் ஒப்பிடுவது போல அது. ரசியாவை பிரேசிலுடனும் பல்கேரியாவை கௌதமாலாவுடனும் ஒப்பிடுவதே பொருத்தமாக இருக்க முடியும். போல்செவிச அமைப்பு கொடூரமானதுதான். ஆனால் அமெரிக்காவின் கட்டுப் பாட்டிற்குள் இருந்த பகுதிகள் இதை விடக் கொடூரமாக இருந்தது. அய்ம்பதாண்டுகால அமெரிக்கக் கட்டுப்பாட்டில் பிரேசிலும் கௌதமாலாவும் எப்படிச் சீரழிக்கப்பட்டுள்ளன!

**கேள்வி :** தாராளவாத சோசலிசம் (Libertarian Socialism) மூன்றாம் உலக மக்கள் இயக்கங்களுக்கு எந்த வகையிலாவது பொருத்தமாய் இருக்குமா?

**சோம்ஸ்கி :** சுதந்திரம் இல்லாத சோசலிசம் தேவையில்லை என்கிறது தாராளவாத சோசலிசம். தொடர்ச்சியாக அது அதிகாரத்தைக் கேள்விக்குள்ளாக்கிக் கொண்டே இருக்கிறது. மனித உரிமைகள், சுதந்திரம், நீதி ஆகியவற்றை வற்புறுத்தும் எந்த ஒரு மக்கள் இயக்கத்திற்கும் தாராளவாத சோசலிசம் பொருத்தமானதுதான்....... தாராளவாத சோசலிலும் அல்லது அராஜகவாதம் (anarchism). அரசு அதிகாரம், தனி நபர் அதிகாரம் என எல்லா அதிகாரங்களையும் கேள்விக்குள்ளாக்குகிறது.

**கேள்வி :** உங்களை அராஜகவாதி (anarchist), தாராளவாத சோசலிஸ்ட் என்றெல்லாம் சொல்கிறார்களே அதை நீங்கள் ஏற்றுக் கொள்கிறீர்களா?

**சோம்ஸ்கி :** எனக்கு அதில் மகிழ்ச்சியே. அரசியல் சொல்லாடல்களில் பயன்படுத்தப்படும் எல்லாச் சொற்களையும் போலவே இவையும் ரொம்பவும் அகன்ற நோக்கிலும் வெவ்வேறு அர்த்தங்களிலும் பயன்படுத்தப்படுகின்றன. என்ன சொல்லாக்கங்கள் பயன்படுத்தப்படுகின்றது என்பதைப் பற்றி நான் அதிகம் கவலைப்படுவதில்லை. எல்லாரும் பயன்படுத்தும் சொல்லாக்கங்களைக் கூடியவரை பயன்படுத்துவதுமில்லை. ஏனெனில் அவை அனைத்தும் ரொம்பவும் கொச்சைப் படுத்தப்பட்டுவிட்டன. எதையும் எளிமைப்படுத்திப் புரிந்து கொள்ள இயலாது. எல்லாமே மிகவும் சிக்கலாக உள்ளன. ஒரு அராஜகவாதி என்கிற முறையில் அரசின் இருப்பில் எந்த நியாயமும் இல்லை என்பது என் கருத்து. எனவே அதைத் தகர்க்க வேண்டும் என நினைக்கிறேன். ஆனால் இந்தக் கணத்தில் அமெரிக்க ஃபெடரல் அரசாங்கம் வலுப்பட வேண்டும் எனவும் கருதுகின்றேன். பென்டாகன் போன்ற பணக்காரர்களின் நலன்களுக்கான துறைகளை வலுப்படுத்த வேண்டும் எனச் சொல்லவில்லை. தனியார்துறைக் கொடுங்கோன்மைக்குத் தடையாக உள்ளதும் வெகுசன விருப்பைக் கவனத்தில் எடுத்துக் கொள்ளக் கூடியதுமான துறைகளைத்தான் வலுப்பட வேண்டும் என்கிறேன். எனது பேச்சு முரண்பாடாக உள்ளது போலத் தோன்றலாம். மாறாக எதார்த்த உலகின் சிக்கல்களைப் பிரதிபலிப்பதாலேயே அப்படித் தோன்றுகிறது.




படிப்பகம்

www.padippakam.com

**கேள்வி :** தாரர்ளவாத சோசலிசத்திற்கு வரலாற்றில் எடுத்துக்காட்டுகள் உண்டா?

**சோம்ஸ்கி :** ஸ்பெயினில் 1936ல் அனார்க்கிசப் புரட்சி நடந்தேறியது. கம்யூனிஸ்டுகள், பாசிஸ்டுகள், மேலைச் சனநாயகவாதிகள் எல்லோரும் சேர்ந்து அதை நசுக்கினார்கள் எல்லா சிவில் போராட்டங்களைப் போலவும் இதுவும் அரசு தரப்பில் சொல்வது போல இரு பிரிவுகளுக்கிடையே (பாசிஸ்டுகளுக்கும் குடியரசுவாதிகளுக்கும்) யான யுத்தமல்ல. மிகவும் வெகுசனத் தன்மையுடன் கூடிய மூன்றாம் தரப்பு ஒன்று இருந்தது. இந்த மூன்றாம் தரப்பு ரொம்பவும் முக்கியமானது. உண்மையான சாதனைகளை தொழில் வளர்ச்சி மிக்க காடலோனிய பகுதியிலும் அரேகன் போன்ற நாட்டுப்புறங்களிலும் இது சாதித்தது. பாஸ்க் பகுதியில் உலகத்தின் மிகப்பெரிய, தொழிலாளர்களை உரிமையாளர்களாக உள்ள —மோன்ட்ரேகன் காம்ப்ளக்ஸ் உருவாக்கப் பட்டது. தொழிற்சாலை, வங்கி, சமூக நலத்துறைகள் எல்லாம் இணைந்தது அது. அதன் உடனடித் தோற்றுவாய் இடதுசாரி சனரஞ்சக சர்ச் ஆகத் தோன்றினாலும் அது மிகவும் ஆழமான அனார்க்கிச வேர்களைக் கொண்டிருந்தது. 17ம் நூற்றாண்டு ஆங்கிலப் புரட்சியிலும் இத்தகைய கூறுகளைக் காண முடியும். ஹன்னா ஆரென் ஒரு முறை சொன்னது போல எல்லா நவீன புரட்சிகளிலுமே அனார்கிசக் கூறுகளுடன் கூடிய கம்யூனிசக் கவுன்சில்கள் தன்னெழுச்சியாய்த் தோன்றுகின்றன. 1956 அங்கேரியப் புரட்சியில் இவ்வாறு உருவானவை சோவியத் டாங்கிகளால் நசுக்கப்பட்டன.

**கேள்வி :** மகத்தான தாராளவாத சோசலிஸ்ட்கள் என நீங்கள் யாரை எல்லாம் கருதுகிறீர்கள்?

**சோம்ஸ்கி :** இந்த 'மகத்தான மனிதர்களால்' நான் கலவரப்படுவதில்லை. **வில்லியம் வான் ஹம்போல்ட்** போன்ற அறிவொளிக்காலச் சிந்தனையாளர்களிடம் இந்தக் கூறுகளைக் காண முடியும். **புருதோன், பகுனின், குரோபோட்கின்,** இன்னும் பலர் பங்களிப்புச் செய்திருக்கிறார்கள். **லக்சம்பர்க், பேனொகோக்** போன்ற இடது மார்க்சிஸ்டுகளும் இருபதாம் நூற்றாண்டு தத்துவவாதிகளான **பெர்ட்ரண்ட் ரஸ்ஸல்** போன்றோரும் பங்களித்திருக்கிறார்கள். இன்னும் முக்கியமான பல பங்களிப்புகள் வரலாற்றில் மறைந்து போனவர்களால் செய்யப்பட்டுள்ளன. நீதியற்ற எல்லா அதிகாரங்களும் தகர்க்கப்பட வேண்டியவையே என்பதே இவர்களின் முதல் முக்கிய செய்தி. இன்னும் சிலர் ரொம்பவும் விரிவான தாராளச் சமூகம் குறித்த வரைவை உருவாக்கியுள்ளனர். ஆனால் இப்படித் தொலை நோக்கான வரைவுகளை உருவாக்குவதில் எனக்கு நம்பிக்கையில்லை.

சோம்ஸ்கியின் விரிவான பேட்டியின் மிகச் சில பகுதிகளை மட்டுமே பெயர்த்துள்ளோம். இருபதாம் நூற்றாண்டுச் சிந்தனையாளர்கள் பற்றி சோம்ஸ்கி எதுவும் சொல்லாதது கவனிக்கத் தக்கது. பழைய சட்டகங்களை சோம்ஸ்கி முழுமையாகத் தாண்டவில்லை என்பதையே இது காட்டுகிறது. LIBERTARIAN SOCIALISM என்பதற்குத் 'தாராளவாத சோசலிசம்' என்கிற மொழி பெயர்ப்பில் எங்களுக்குத் திருப்தி யில்லை. எல்லாவிதமான கட்டுத் தளைகளையும் தகர்த்தெறிந்த சோசலிசம் என்பதே அதன் பொருள்.

— அ. மார்க்ஸ்

□

---

அச்சிட்டோர் : அலைகள் அச்சகம், 36, தெற்குச் சிவன் கோயில் தெரு, கோடம்பாக்கம், சென்னை - 600 024.



படிப்பகம்

www.padippakam.com

# கூட்டு விவாதம்

## மனித உரிமைகள்

**நாள் :** 28-7-96 ஞாயிறு காலை 10 மணி

**இடம்:** வணிக அவை, பாண்டிச்சேரி — 605001

வழக்கம்போல் தயாரிப்போடு வருமாறு அழைக்கிறோம்.

### விவாதத்துக்கான புள்ளிகளில் சில :

- அரசியல் கட்சிகள் பெரும்பான்மையும் மக்கள் நலனைப் புறக்கணித்துவிட்ட நிலையில் மனித உரிமைகளுக்கான இயக்கங்கள் அவசியமாகின்றனவா?
- சிவில் உரிமைகள், மனித உரிமைகள் இவற்றுள் எந்தத் தளத்தைத் தேர்வு செய்வது முக்கியம்?
- ஏகாதிபத்தியங்களின் செயல்பாடுகளில் / வரையறைகளில் ஏற்பட்டுவரும் மாற்றங்கள் மனித உரிமைகள் என்ற களனில் எவ்வாறு வெளிப்பாடு கொள்கின்றன.
- இன்று நீதிமன்றங்கள் மேற்கொண்டுவரும் முனைப்பான பாத்திரத்தை (JUDICIAL ACTIVISM) நாம் எவ்வாறு புரிந்து கொள்வது.
- மனித உரிமைகளுக்கான அமைப்புகள் பெரிய அரசியல் கட்சிகளின் / அரசியல் இயக்கங்களின் பகுதிகளாகத்தான் இருக்க வேண்டுமா? அல்லது அவற்றின் தத்துவம் காக்கப்பட வேண்டுமா?
- மனிதத்துவம் (HUMANISM) என்பதே தத்துவ தளத்தில் கேள்விக்குள்ளாகியிருக்கும் சூழலில் மனித உரிமைகள் குறித்துப் பேசுவது சாத்தியமா?
- சட்டரீதியான உரிமைகளைக் காக்கவும் / பெறவுமே மனித உரிமை அமைப்புகள் போராடுகின்ற நிலையில் இருக்கின்ற நீதி அமைப்பை நியாயப்படுத்துவதாக அது அமைந்து விடுமா?
- பாதிக்கப்பட்டவர்களுக்கே நீதி வழங்கும் அதிகாரம் என்கிற கருத்துக்கள் பரவலாகி வரும் வேளையில் ''மக்கள் நீதிமன்றம்'' போன்ற அமைப்புகளின் பணியை எவ்வாறு மதிப்பிடுவது?

இவை மட்டுமின்றி இன்னும் பல கேள்விகள் உங்களுக்குள் எழலாம். அவற்றை தொகுத்து வாருங்கள். மனித உரிமைகள் பற்றி இந்த இதழில் சில கட்டுரைகள் வெளியாகியுள்ளன. இவை தவிர ஏற்கெனவே நிறப்பிரிகையில் வந்துள்ள அஜித்சிங் பெய்ன்ஸின் நேர்காணல், வெகுசனநீதி பற்றி ஃபூக்கோ நடத்திய உரையாடல் முதலியனவும் இத்துடன் சேர்த்து கவனிக்கத் தக்கன. வாய்ப்புள்ளவர்கள் SUBALTERN STUDIES தொகுப்புகளில் வந்துள்ள ரணஜித் குஹா, டேவிட் அர்னால்ட், உபேந்திர பக்ஷி முதலியோரின் கட்டுரைகளையும் படித்து வரலாம்.

படிப்பகம்

# சமீபத்திய வெளியீடுகள்

## விளிம்பு டிரஸ்ட் வெளியீடுகள்

| | | |
|---|---|---|
| டானியல் சிறு கதைகள் | கே. டானியல் | ரூ : 45 |
| கிளுக்கி | பாப்லோ அறிவுக்குயில் | ரூ : 30 |
| பொய் + அபத்தம் → உண்மை | ராஜ் கௌதமன் | ரூ : 32 |
| கண்காணிப்பின் அரசியல் | ரவிக்குமார் | ரூ : 48 |

முகவரி : **விளிம்பு டிரஸ்ட் 11, தேவேந்திரகுல வீதி, கோவை - 641 015**

## விடியல் வெளியீடுகள்

| | | |
|---|---|---|
| பெரியாரியம் | நிறப்பிரிகை தொகுப்பு—4 | ரூ : 35 |
| மாற்றுகளைத் தேடி | நிறப்பிரிகை தொகுப்பு—4 | ரூ : 35 |
| உரையாடல் தொடர்கிறது | எட்வர்ட் செய்த், அம்பர்த்தோ எக்கோ, அகஸ்தோபோவால் மிஷேல் ஃபூக்கோ, காப்ரியல் கார்ஷியா மார்க்யெஸ் (மொழி பெயர்ப்பு) ரவிக்குமார் | ரூ : 30 |
| எட்டு கதைகள் | ராஜேந்திர சோழன் | ரூ : 20 |
| தலித் அரசியல் அறிக்கையும் விவாதமும் | அ. மா, ஏகலைவன், குறிஞ்சி, அதியமான், ஞானி, கருணா மனோகரன் | ரூ : 15 |
| செட்டை கழற்றிய நாங்கள் | ரவி | ரூ : 20 |
| பனியில் மொழி எழுதி | சோலைக்கிளி | ரூ : 30 |

முகவரி : **விடியல் பதிப்பகம் 3, மாரியம்மன் கோவில் வீதி, கோவை-641 015.**

---

## இந்தியா டுடேயும் நிறப்பிரிகையும்

இந்தியா டுடே இலக்கிய மலரில் நிறப்பிரிகை 'பங்கு பெற்றதாக' கடுமையான கண்டனங்கள் எழுந்துள்ளன. 'இந்தியாடுடே' இலக்கிய மலரைக் (93—94) கிழித்து மலம் துடைப்பது என்று எடுத்த முடிவில் எங்களுக்கு இன்று வரை கருத்துமாறுபாடில்லை. 95—96 மலரில் நி.பி. பங்கேற்பது என எந்த முடிவும் எடுக்கப்படவில்லை. தஞ்சையில் வேல்சாமியை வாசந்தி சந்தித்துக் கேட்டபோது அவர் மறுத்துவிட்டார். பின். மார்க்சுக்கு இரண்டு கடிதங்கள் ஒரு தந்தி ஆகியவை மூலம் வாசந்தி தொடர்பு கொண்ட போதும் அவர் மறுத்து விட்டார். தலித் இலக்கியத்திற்காக ஒரு தனிப்பகுதி தொடங்குவதாக வாக்களித்து வாசந்தி அவர்களுடன் தொடர்பு கொண்டபோது தலித் எழுத்தாளர்கள் அதில் பங்கு பெறுவதே சரியாக இருக்க முடியும் என்றே நாங்கள் முடிவு செய்தோம். காலங்காலமாக மறுக்கப்பட்ட இடங்களுக்காகப் போராடுவதும், போராட்டத்தின் விளைவாகப் பெற்ற இடத்தில் யாருக்கும் சளைத்தவர்களல்ல என நிறுவுவதுமே தலித் அரசியலாக இருந்து வந்திருக்கிறது. நிறப்பிரிகை உட்பட பலரும் கொடுத்த அழுத்தத்தின் விளைவாகவே இன்று தலித் இலக்கியச் சிறப்புப் பகுதிகள் மைய நீரோட்டத்தில் இடம் பெறுகின்றன. அவ்வாறு போராடிப் பெற்ற இடத்தில் பங்கு பெறாமல் முறுக்கிக்கொண்டு போவது இன்றைய சூழலில் பொருத்தமாக இராது என்பதே எங்கள் முடிவு. அந்த வகையில் தலித் இலக்கியப் பகுதியில் ரவிக்குமார் பங்கேற்பது என்று நாங்கள் மேற்கொண்ட முடிவு சரியானது என்றே கருதுகின்றோம். இதுகுறித்த ரவிக்குமாரின் விரிவான கட்டுரை நி.பி. இலக்கிய இணைப்பு-3ல் இடம் பெறுகிறது.

www.padippakam.com

ஆட்டம் கண்டுபோன சில மூத்த இடதுசாரி நண்பர்களும் கூட தங்களை அறியாமலேயே சனாதனிகள் பக்கம் சாய்கின்றனர். புதிய சிந்தனைகளின் மீதும் படிப்பின் மீதும் நியாய மற்ற காழ்ப்பைக் கக்குகின்றனர்.

இந்தச் சூழலில் பழைய சட்டகங்களைக் கேள்விக்குள்ளாக்க வேண்டும் எனச் சொல்கிறவர்கள் இணைந்து ஒரு அகன்ற மேடையை உருவாக்க வேண்டும் என்கிற அழைப்பை விடுக்கின்றோம். இதன் பொருள் நம்மிடையேயான நுண்மையான வேறுபாடு களை எல்லாம் தேய்த்துக் கொண்டு மொண்ணையாக 'ஒருமித்த' (Consensus) கருத்துகள் இணைவதல்ல மாறாக நமது கருத்துமாறுபாடுகளை நாம் பரஸ்பரம் அங்கீகரித்து இணைந்து நிற்பதே. கருத்து மாறுபாடுகளுக்கிடையேயான விவாதங்களை ஆரோக்கிய மாக மேற்கொள்வதே.

எங்களைப் பொறுத்த மட்டில் Elitist மனோபாவத்திற்கெதிரான அடித்தட்டுப் (Subaltern) பிரக்ஞை ஒன்றை உருவாக்குவது என்பதற்கு முக்கியத்துவம் அளிக்கிறோம். இங்கே Elitism என்பது பார்ப்பனீயத்தை உள்ளடக்கி இருப்பதால் பார்ப்பனீய நீக்கம் என்கிற கருத்தாக்கத்தையும் மொழிகிறோம். இது குறித்து நாங்கள் விவாதத்திற்குத் தயா ராக இல்லை என்பதல்ல. இறுதியான கோட்பாட்டுருவாக்கம் செய்துவிட்டோம் என்பது மல்ல. எதையும் தைரியமாகக் கோட்பாட்டுருவாக்கம் செய்துவிடும் காலகட்டத்தில் நாமில்லை. எல்லாவற்றையும் ரொம்பவும் தற்காலிகமான, விவாதத்திற்குட்பட்ட, உரை யாடலுக்கான கருத்துருக்களாகவே (Drafts) முன் வைக்கிறோம்

மாற்றுச் சிந்தனைகளின் மீதான சகிப்பின்மையே இன்றைய தமிழ்ச் சூழலின் மிகப் பெரிய அவலம். இதனை இணைந்து எதிர்கொள்ள அன்புடன் அனைத்து நண்பர் களையும் இளைஞர்களையும் அழைக்கின்றோம்

சென்ற இதழில் அறிவித்திருந்தவற்றில் அய்ரோப்பிய அனார்கிஸ்டுகள் மற்றும் கம்யூனிஸ்டுகளின் பேட்டிகளை வெளியிட இயலவில்லை. அடுத்தஇதழில் முயற்சிக்கிறோம் உலக முதலாளியம் குறித்து ஒரு கட்டுரை மட்டுமே வெளியிட முடிந்துள்ளது. மார்க்சிய தத்துவத்தை அல்துஸ்ஸர் போன்றோர் மறு வாசிப்புகளுக்குள்ளாக்குவது போல மார்க்சியப் பொருளாதாரத்தை சமீர் அமின், மர்லின டிக்சன், இம்மானுவல் வாலர்ஸ்டெய்ன் ஆன்ரே குந்தர் பிராங்க் முதலானோர் மறு வாசிப்புச் செய்கின்றனர். அந்த அடிப்படையில் இவர்கள் முன் மொழிவதே "உலக முதலாளிய அமைப்பு" என்கிற கருத்தாக்கம். இது குறித்த மேலோட்ட மான அறிமுகமாக இக்கட்டுரை அமைகிறது. இந்தக் கருத்தாக்கம் எல்லாப் பொருளா தாரப் பிரச்சினைகளுக்குமான தீர்வை வழங்குவதாக நாங்கள் சொல்லவில்லை 'ஏகாதி பத்தியம்' என்கிற கோட்பாட்டுருவாக்கத்தைக் காட்டிலும் இது மேலும் சிலவற்றை விளங்கிக் கொள்ள ஏதுவாகிறது என்பது மட்டுமே.

பின் நவீனத்துவம் குறித்த ஒரு விரிவான கட்டுரை இந்த இதழில் உள்ளது. இந்தத் தலைப்பில் எழுதப்பட்டுள்ள நான்கு கட்டுரைகளில் இது ஒன்று. பின நவீனத் துவத்தின் பல்வேறு கூறுகளில் 'பகுத்தறிவின் வன்முறை' பற்றி இது பேசுகிறது. நவீனத் துவம், பின் நவீனத்துவம் ஆகியவற்றுக்கிடையேயான வேறுபாடுகளையும் இது தொட்டுக் காட்ட முயல்கிறது

சிவில் உரிமை இயக்கம் பற்றிய இரண்டு கட்டுரைகள் உள்ளன சிவில் உரிமைப் போரில் நீண்ட அனுபவமுள்ள எஸ் வி.ஆரின் கட்டுரை குறிப்பிடத்தக்கது. அடுத்த கூட்டு விவாதமும் சிவில உரிமைகள் தொடர்பானதே என்பதால் இககட்டுரைகள கூடுதல் முக்கியததுவம் பெறுகின்றன.

சாதி வெறியுள்ள ஒரு சூழலில் அதனை மறுக்கும் ஒரு மேற்சாதியானின் பங்கு என்னவாக இருக்க முடியும்! இநதக் கேள்விக்கான பதிலைப் பெறுவதற்கு நோயல் இக்னேஷியசுடனான நேர்காணல் பெரிதும் உதவக் கூடும். எள்ளளவும் சகிப்புத் தன்மையற்ற நமது மேற்சாதி எழுத்தாளர்கள் கவனிக்க வேண்டிய கட்டுரை இது. புகழ் பெற்ற

www.padippakam.com

அனார்கிசச் சிந்தனையாளரான நோம் சோம்ஸ்கியின் பேட்டிப் பகுதிகள் சிலவும் இந்த இதழில் இடம் பெறுகின்றன. இந்தியப் பொருளாதாரம் தாராளமயமாவது பற்றிய அவரது கருத்துக்கள் உலக முதலாளியக் கட்டுரையுடன் இணைத்துப் பார்க்கத் தக்கன.

இரண்டு நூல் விமர்சனங்கள் உள்ளன. எழுத்தனுபவமிக்க முனைவர் சேசவனும் மற்றதை பரந்த படிப்புடைய இளைஞர் வளர்மதியும் எழுதியுள்ளனர். இரண்டும் ஓராண்டுக்கு முன்பு எழுதப்பட்டவை

இரண்டு மொழிபெயர்ப்புகள். 1966ல் மேற்கு பெர்லினில் கட்டப்பட்ட முதல் கம்யூன் பற்றிய ரெஹ்மட் ரீச்சன் விமர்சனக் கட்டுரையை சூ.மா. பெயர்த்துள்ளார். ரொனால்ட் இன்டெனின் சாதி பற்றிய கருத்தாக்கங்கள் கவனிக்கத் தக்கவை. அழுகிப்போன மேற்குலகின் தன்முனைப்பான சாராம்சங்களை வாங்கிக் கொள்ளக்கூடியதாக சாதி இந்தியாவை மாற்றிவிட்டது என்கிறார் இன்டென். மேற்குலகின் அனுபவவாதிகள் சாதியை முன்னேற்றத்திற்கான தடை எனவும் கருத்துமுதல்வாதிகள் சாதியை மனித குலத்தின் முழுமை வாய்ந்த உயிரியக்கமுள்ள தீர்க்கதரிசனம் எனவும் கூறுவதைப் பிரித்து இனம் காட்டுவது கவனிக்கத் தக்கது.

பல விசயங்கள் குறித்து விரிவாக எழுதப்பட வேண்டும் என்கிற ஆசையால் கடைசிவரை எழுத முடியாமலே போய்விடுகிறது. இதைத் தவிர்ப்பதற்காக செய்திகள், சிந்தனைகள், சிதறல்கள் என்கிற பகுதி தொடங்கப்பட்டுள்ளது. இது ஆசிரியர் குழுவுக்கு ஒதுக்கப்பட்ட பகுதி அல்ல. யாரும் எழுதலாம் பெயருடன் வெளியிடப்படும்.

வழக்கம் போல கூட்டு விவாதம் எல்லோரையும் ஈர்க்கும் என நம்புகின்றோம். முத்துப்பேட்டை, நாகூர் பகுதிகளில் இசுலாமியர் மீதான தாக்குதல் பற்றிய கள ஆய்வைத்தான் காலதாமதமானதால் வெளியிடவில்லை.

தமிழக கிராமமொன்றில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் அடிப்படையில் சாதி பற்றிய சமூக மானுடவியலாளர் சிலரின் கருத்துக்களை ஆய்வுமாணவர் பிலவேந்திரன் தொகுத்துத் தருவது மிகவும் பயனுடையதாய் இருக்கும் என நம்புகிறோம். பிரெஞ்சுக்காரர்கள் தமிழகத் தீண்டாமை குறித்து எழுதிய நூல்களை 'உலகின் முதல் தலித் இலக்கியம்' என்றெல்லாம் கொண்டாடுவதைக் கேள்விக்குள்ளாக்கும் எம் கண்ணனின் கட்டுரை முக்கியமான ஒன்று. அடுத்த கூட்டு விவாதம் மனித உரிமைகள் பற்றியது என்பதால் அ. மார்க்சின் 'வளர்ச்சியும் மனித உரிமைகளும்' கட்டுரை மீள் பிரசுரம் செய்யப் படுகிறது

வழக்கப் போல விவாதங்களை வரவேற்கிறோம.

---

தனிச்சுற்றுக்கு நன்கொடை ரூ. 40

# நிறப்பிரிகை

ஆசிரியர் குழு

ரவிக்குமார் — வேல்சாமி — அ. மார்க்ஸ்

வெளியீடு:

விடியல் பதிப்பகம்
கோவை-641015

கன்கொடைகள், கட்டுரைகள், கடிதங்களுக்கு

அஞ்சல்பெட்டி எண் :192
பாண்டிச்சேரி-605001

படிப்பகம்